

விகடன் பிரசுரம்

ANNA - THE LIFE AND TIMES OF C.N.ANNADURAI

அண்ணா

ஒரு சாதாரண மனிதரின்

அசாதாரண வாழ்க்கை...

இரா.கண்ணன்

தமிழில்: சாருகேசி

அண்ணா

அண்ணா

ANNA - THE LIFE AND TIMES OF C.N.ANNADURAI

ஒரு சாதாரண மனிதரின்

அசாதாரண வாழ்க்கை...



இரா.கண்ணன்

தமிழில்: சாருகேசி

விகடன்
பிரசுரம்

Title : ANNA
© R.KANNAN 2010
First published in Viking by
Penguin Books India 2010

ISBN : 978-81-8476-319-5

விகடன் பிரசுரம்: **555**

நூல் தலைப்பு:
அண்ணா

நூல் ஆசிரியர்:
© இரா.கண்ணன்

தமிழில்:
சாருகேசி

முதற்பதிப்பு : **அக்டோபர், 2010**

மூன்றாம் பதிப்பு : **ஆகஸ்ட், 2011**

விலை : **₹ 175**

பதிப்பாளர்:
பா.சீனிவாசன்

ஆசிரியர்:
கே.அசோகன்

முதன்மை பொறுப்பாசிரியர்:
பொன்ஸீ

தலைமை உதவி ஆசிரியர்கள்:
எஸ்.கோபால், எம்.நாகமணி, கே.பாசுமணி

உதவி ஆசிரியர்:
சிவராஜ்

முதன்மை வடிவமைப்பு:
மு.ராம்குமார்

தலைமை வடிவமைப்பு:
அ.அன்பழகன்

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமரிசனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

விகடன் பிரசுரம்
757, அண்ணா சாலை, சென்னை-600 002.

எடிட்டோரியல் பிரிவு போன்: 044-28524074 / 84
விற்பனை பிரிவு போன்: 044-42634283 / 84
e-mail: publications@vikatan.com



அரசியல் ஆலமரம்

'தமிழகத்தின் பெர்னார்ட்ஷா' என்று போற்றப்படும் அறிஞர்; குறுகிய காலத்திலேயே தன் கட்சியை ஆட்சிக் கட்டிலில் அமரவைத்து அழகுபார்த்த தலைவர்; 'தமிழ்நாடு' என்ற பெயரை மெட்ராஸ் மாகாணத்துக்குச் சூட்டி தமிழுக்குப் பெருமை சேர்த்த தமிழ்ப் போராளி; சுயமரியாதை திருமணத்தை சட்டரீதியாக அங்கீகரித்து, தனது அரசியல் தந்தைக்கு முடிசூட்டிய திராவிடத் தொண்டன்.

இவர் வீதியில் இறங்கினால் ஊர்வலம்; மேடை ஏறினால் மாநாடு. தமிழ்நாட்டு மக்களுக்கு இவர் பேரறிஞர்; தன் கட்சித் தோழர்களுக்கு அண்ணா.

ஆம், இத்தனை சிறப்புகளுக்கும் உரிய ஒரே அரசியல் தலைவர் சி.என்.அண்ணாதுரை.

திராவிடக் கட்சிகளுக்கெல்லாம் அடித்தளம் அமைத்தவரும் அண்ணாதான். நீதிக் கட்சியை திராவிடர் கழகமாக மாற்றுவதற்கு அவர்தான் பெரியாருக்குப் பக்கபலமாக இருந்தார். அண்ணா இல்லை என்றால், தமிழ்நாட்டில் இன்று இத்தனைக் கட்சிகள் இல்லை என்று சொல்லும் அளவுக்கு தமிழக அரசியல் களத்தில், அவர் ஆலமரமாகத் திகழ்ந்திருக்கிறார்.

அப்படிப்பட்ட மாபெரும் தலைவரின் வாழ்க்கைச் சுவடை ஒட்டிய தமிழக அரசியல் வரலாறுதான் இந்த நூல். 'ANNA - The life and times of C.N.ANNADURAI' என்ற ஆங்கில நூலை ஆதாரங்களுடன் எழுதியவர் இரா.கண்ணன். அதை தமிழில் அழகாக மொழிபெயர்த்து எழுதியிருக்கிறார் சாருகேசி.

இந்த நூலைப் படித்து முடிக்கும்போது தமிழக-இந்திய அரசியல், கலை, இலக்கியம், நாடகம், சினிமா... என்று ஒரு வரலாற்றுக் களஞ்சியத்தையே அள்ளிப் பருகியது போன்ற பிரமிப்பும் திருப்தியும் ஏற்படும்.

–ஆசிரியர்

முன்னுரை

இது துதிபாடும் சரிதை அல்ல. என்றாலும் 'அண்ணா' என்கிற சி.என்.அண்ணாதுரையின் அசாதாரணமான மனிதப் பண்புகளையும், திறமையையும், தொலைநோக்குப் பார்வையையும் பாராட்டாமல் ஒதுக்கிவிட முடியாது.

ஒருவரது மரணத்துக்குக் கூடும் கூட்டத்தையும், கூறப்படும் இரங்கல் மொழிகளையும் வைத்தே தமிழர்கள் ஒருவரை எடைபோடுகிறார்கள். அப்படிப் பார்த்தால், அண்ணாவை மிகச் சரியாகவே எடை போட்டிருக்கிறார்கள். உலகெங்குமுள்ள தமிழர்கள் அவருடைய மரணத்தை தங்கள் சொந்த இழப்பாகவே கருதினார்கள். உயிரோடு இருக்கும்போது நேருவுக்கு அடுத்தபடியாகக் கூட்டத்தை ஈர்த்தவர், மரணமடைந்ததும் வரலாறு காணாத அளவுக்கு மக்கள் கூட்டத்தை ஈர்த்தார். அந்த எண்ணிக்கை இன்னும் முறியடிக்கப்படவில்லை.

செல்வந்தர் குடும்பத்து நேருவைப் போல் அல்லாமல், அண்ணாவின் குடும்பப் பின்னணி சாதாரணமானது. அதனாலேயே அவர், தன்னை 'சாமானியன்' என்று கூறிக்கொண்டார். இருந்தாலும், ஆரம்ப நாட்களிலிருந்தே அவருக்கு முன்போ, பின்போ நேசிக்கப்படாத அளவுக்கு அவர் மக்களால் நேசிக்கப்பட்டார். இந்த நூல், அந்த சாதாரண மனிதரின் அசாதாரணப் பயணத்தை விவரிக்கும் முயற்சியே.

திராவிட இயக்கத்தில் ஈடுபாடுகொண்ட குடும்பத்தில் பிறந்த நான், அண்ணாவின் தி.மு.க. கோட்டையான சென்னையின் வட பகுதியில் வளர்ந்தவன். அதனால் அண்ணாவின் மரணம் என் மனதில் இன்னும் அப்படியே பதிந்து போயிருக்கிறது. அன்று சென்னையே ஸ்தம்பித்து நின்றுவிட்டது. எனக்கு அப்போது ஏழு வயது. அதற்குமுன் எப்போதும் இல்லாதவாறு சென்னையின் இயக்கமே ஏன் நின்றுபோயிற்று என்று எனக்குப் புரியவில்லை. என் தந்தை எஸ்.கே.ராஜரத்தினம், மறைந்த தலைவரைப் பற்றி எனக்கு எடுத்துச்சொன்னதும், நான் பார்க்கக் கொடுத்துவைக்காத அண்ணா எனக்கு ஒரு 'ஹீரோ' ஆகிப்போனார்.

தமிழர்களிடையே மாபெரும் மனிதராக வாழ்ந்த அறிஞர் அண்ணாவைப் பற்றி நான் மேலும் அறிந்தபோது அவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுதுவது குறித்து சிந்தித்தேன். தமிழ்நாட்டு அரசியலில் அவர் ஆழமாகத் தடம் பதித்திருந்தாலும், அண்ணாவின் சரிதம் தமிழில்கூட அதிகம் இல்லாமல்போனது ஏன் என்பது விளங்கவில்லை.

அண்ணாவின் பெயர் வீதிகளுக்கும், பூங்காக்களுக்கும், பல்கலைக்கழகத்துக்கும், சென்னை சர்வதேச விமான நிலையத்துக்கும், பிற அரசு நலத்திட்டங்களுக்கும் சூட்டப்பட்டிருக்கிறது. அவருடைய முழு உருவச் சிலைகளும், மார்பளவுச் சிலைகளும் தமிழ்நாட்டில் நிறைய இருக்கின்றன. அவருடைய உருவம்கூட ஒரு பெரிய திராவிடக் கட்சியின் கொடியில் இடம் பெற்றிருக்கிறது. இந்துக்கள் எதை ஆரம்பிப்பதற்கும் முன்னால் பிள்ளையார் பெயரைச் சொல்வது போல, திராவிடக் கட்சித் தலைவர்கள் அண்ணாவின் பெயரை முதலில் உச்சரிக்காமல் இருக்க மாட்டார்கள். இருந்தாலும் பொது வாழ்வில் அவர் எட்டிய உன்னத நிலைக்கும், அவருடைய தன்னலமற்ற பண்புக்கும், எளிமைக்கும், நேர்மைக்கும், அரசியல் கலாசாரத்துக்கும், தாராள மனதுக்கும், இவரைப் பின்பற்றுவதாகச் சொல்லிக்கொள்வோரின் இயலாமைக்கும் இடையே மிகப்பெரிய இடைவெளி இருக்கிறது.

இந்த நூலை எழுதுவதற்கு முதன்மையான ஆதாரமாக இருந்தவை அண்ணாவே எழுதிய படைப்புகளும், தமிழில் அவரைப் பற்றி வெளியான கட்டுரைகளும்தான். அடுத்தபடியாக அருணனின் 'அண்ணா ஆட்சியைப் பிடித்த வரலாறு' மிகவும் உதவியது. கவிஞர் கண்ணதாசனின் 'மனவாசம்', 'வனவாசம்' மற்றும் 'நான் பார்த்த அரசியல்' ஆகிய மூன்று நூல்களிலிருந்தும் மேற்கோள்களை எடுத்தாள அனுமதி தந்த அவர் மகன் காந்தி கண்ணதாசனுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி.

***

இந்த நூலை உருவாக்க எனக்கு உற்சாகமூட்டி, அன்புகாட்டி உதவியும் அளித்த பலருக்கும் நான் நன்றி கூற வேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் மறைந்த என் தந்தை, பொருளாதார நிபுணர் எஸ்.குஹன், கவிஞர் பொன்னிவளவன், குடும்ப நண்பர் என்.சங்கர், என் உறவினர் பி.சேது, திருமதி சாவித்திரி ராகவேந்திரா ஆகியோரை நான் நினைத்துப் பார்க்கிறேன். அவர்கள் இந்த நூல் குறித்து மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள்.

காலம் சென்ற டாக்டர் சி.என்.ஏ.பரிமளம், பி.சி.கணேசன், க.ராசாராம் ஆகியோருக்கும், ஆய்வுப் பணியில் எனக்கு உற்ற துணையாக இருந்ததற்காக, இனியன் சம்பத், அருணன், டி.கே.எஸ்.வில்லாளன், அண்ணா பேரவையைச் சேர்ந்த ஆர்.செம்பியன், டாக்டர் அருள் நடராஜன், வைகை ராமமூர்த்தி, டி.வி.என்.போஸ், எஸ்.பரமேஷ், எஸ்.என்.ராஜேந்திரன், பி.மலர்வண்ணன், இரா.செழியன், டாக்டர் எம்.நாகநாதன் மற்றும் பொன்.மாணிக்கம் ஆகியோருக்கு என் நன்றி.

சில பிரச்னைகள் குறித்து விளக்கங்கள் அளித்த எஸ்.எஸ்.ராஜேந்திரன், எஸ்.மாதவன் மற்றும் கி.வீரமணி ஆகியோருக்கு என் நன்றி.

தேவையான உதவிகள் அளித்த தமிழ்மகன் (தினமணி), வி.ஆர்.எஸ்.சம்பத், கே.ராமலிங்க ஜோதி, ஜி.லட்சுமண சுவாமி, வி.ஜெயப்பிரகாஷ், கதிரேசன் பிள்ளை, எஸ்.கண்ணதாசன், கே.ஷம்சுதீன், எஸ்.சேதுராமச்சந்திரன், எம்.ஏ.அன்புக்கரசு, டி.சிற்றரசு, எஸ்.அசோக்குமார், டி.மகாலட்சுமி, என்.அருண்மெய் அழகன், மைக் பான்ஃபீல்ட் மற்றும் ஜோலியன் நெகேலே ஆகியோருக்கும் என் மனமார்ந்த பாராட்டுகள்.

நூல் எழுத என்னைத் தொடர்ந்து தூண்டிய என் அன்பு மனைவி உஷாவுக்கும், உற்சாகமும் ஊக்கமும் தந்த என் மைத்துனி டாக்டர் விஜயராணி நிறைமதி அழகனுக்கும் என் தனிப்பட்ட நன்றி.

அண்ணாவின் நூற்றாண்டு நெருங்கியபோது, 'தி ஹிந்து' நாளிதழில் அண்ணாவைப் பற்றி ஆங்கிலத்தில் கட்டுரைகள் எழுத வாய்ப்பளித்த அதன் முதன்மை ஆசிரியர் திரு. என்.ராம் அவர்களுக்கு என் நன்றி.

வேறு யார் பெயரையாவது இங்கே குறிப்பிடாமல் விட்டிருந்தால் அதற்காக அவர்களிடம் என்னை மன்னிக்கக் கோருகிறேன்.

இந்த நூலை விகடன் பிரசுரம் தமிழில் கொண்டு வருவதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. தரமான நூல்களை அழகுறக் கொண்டு வருவதில் விகடன் பிரசுரத்தாருக்கு ஒரு தனியிடம் உண்டு. மொழிபெயர்த்த திரு.சாருகேசி, ஆங்கிலத்திலும் தமிழிலும் வல்லவர். நேரம் தவறாமையும் கடமையுணர்வும் நிறைந்தவர். அவர் இந்த நூலை மொழிபெயர்த்தது, என்னோடு காட்டிய ஒத்துழைப்பு ஆகியவை எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றன. அவருக்கு நன்றிகள் பல. தொடக்கத்திலிருந்தே ஊக்கமும் உற்சாகமும் ஆதரவும் தந்து இந்தப் பணி சிறக்க உதவிய மூத்த பத்திரிகையாளர், விகடன் பிரசுரத்தின் ஆசிரியர் வீயெஸ்விக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

–இரா.கண்ணன்

இந்த நூல்...

உஷா, தேன்பாவை மற்றும் இனியன் ஆகியோருக்கு

உள்ளே...

வசந்த காலம்

தந்தையும் தனயனும் இணைந்திருந்த காலம்

1. இளம் பருவம் 15

2. பிராமணர் அல்லாதார் இயக்கம் 33

3. அண்ணா, நீதிக் கட்சி, பெரியார் 53

4. முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டமும், திராவிட நாடும் 73

5. ராமாயணத்தையும் பெரியபுராணத்தையும் கொளுத்துங்கள்! 91

6. 'திராவிட நாடு' வார ஏடும், 'சந்திரோதயம்' நாடகமும் 105

7. மகன் தந்தைக்கு ஆற்றிய நன்றி 125

8. ஆரம்பமாகிறது மன வேறுபாடு! 143

9. கைக்கு வசப்படாத பதவி! 167

10. அண்ணா ஏமாந்தார்! 189

கோடை காலம்

சோதனை மிகு வளர்ச்சிப் பயணம்

11. பிறந்தது தி.மு.க. 213

12. கட்சி வளர்ச்சிக்கான உத்திகள் 227

13. 'ஆரிய மாயை'யும் காங்கிரஸ் ஏமாற்றமும் 249

14. 'பராசக்தி'யின் கலைஞர், எம்.ஜி.ஆர்., தி.மு.க. 267

15. 1956 - விலகுகிறது... தேர்தல் முக்காடு! 289

16. தேர்தல் 'சரி' - இந்தி 'கூடாது'! 307

17. 'தோழர் அண்ணாதுரை'யை விட்டு விலகினார் சம்பத் 331

18. திராவிட நாடு கைவிடப்பட்டது! 359

19. இந்தி எதிர்ப்புப் போராட்டம்: தீக்குளித்த சின்னசாமி 381

இலையுதிர் காலம்

ஆட்சியில் - நோய்

20. 'இந்தி'யனா? இந்தியனா? 401

21. ஆட்சியை நோக்கி! 415

22. முதலமைச்சர் அண்ணா 431

23. 'தமிழ்நாடு' ஆகிறது மெட்ராஸ் ஸ்டேட் 453

24. புகழுடன் நிறைவு 471

வசந்த காலம்

தந்தையும் தனயனும்
இணைந்திருந்த காலம்

1

இளம் பருவம்



அன்று

தமிழ்நாட்டில் அன்று எல்லா வாகனங்களும் சென்னையை நோக்கியே வந்துகொண்டிருந்தன. மக்கள் பெரும் வெள்ளம்போல், அலை அலையாக சென்னைக்கு வந்துகொண்டிருந்தனர். அனைவர் மனதிலும் ஒரே எண்ணம்தான்:

'எப்படியாவது அந்த இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டுவிட வேண்டும்!'

அது வரலாறு காணாத ஊர்வலம் என, பின்னர் கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பெறும் என்று அவர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. பத்திரிகைச் செய்திகளின்படி, சுமார் ஒன்றரைக்கோடி மக்கள் அந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டார்கள்.

கிராமம், நகரம் என்ற பாகுபாடு இல்லாமல் அனைத்துப் பகுதி மக்களும் நெருக்கியடித்து ஏறியதால், மதுரையிலிருந்து சென்னை வரும் ஜனதா எக்ஸ்பிரஸ் ரயில் நிரம்பி வழிந்தது.

'ரயில் பெட்டிகளின் கூரையிலும் மக்கள் உட்கார்ந்திருந்தனர். ''தயவுசெய்து கூரையில் இருப்பவர்கள் கவிழ்ந்து படுத்துக்கொள்ளுங்கள். கொள்ளிடம் பாலத்தை ரயில் கடக்கும் வரை தலையைத் தூக்கிவிடாதீர்கள்!'' என்று ரயில் ஓட்டுனர் எச்சரித்திருந்தார். பாலத்தில் ரயில் பாதி தூரம் கடந்திருக்கும். கூரை மேலே இருந்தவர்களில் ஒருவர் சட்டென தலையைத் தூக்கிவிட்டார். ''அம்மா..!'' என்ற அலறல் சத்தம் கேட்டது. கடகடவென்று அவருக்குப் பின்னால் இருந்தவர்கள் தன்னிச்சையாக தலையைத் தூக்க, அந்த இடத்திலேயே சுமார் முப்பது பேர் மாண்டனர். நாற்பத்தைந்து பேருக்கு மேல் படுகாயமடைந்தனர்!'

என, நேரில் பார்த்த துயர சம்பவத்தை, அன்று மாணவராக அந்த ரயிலில் பயணம் செய்த, இன்றைய 'தினமணி' ஆசிரியர் கே.வைத்தியநாதன் தினமணி ஏட்டின் 'அண்ணா நூற்றாண்டு மலர் (2009)' -ல் எழுதியிருக்கிறார்.

தமிழகக் குடும்பங்களில் மட்டுமின்றி, உலகெங்கும் உள்ள தமிழர் வீடுகளிலும் அன்று துக்கம் அனுசரிக்கப்பட்டது. ஏழை - பணக்காரர், இளையோர் - முதியோர், ஆண்கள் - பெண்கள், படித்தவர் - பாமரர், நகரவாசி - கிராமவாசி என்று ஒருவர் மீதி இல்லாமல், சென்னை - ராஜாஜி அரங்கில் இறுதி மரியாதைக்கு வைக்கப்பட்டிருந்த 'அண்ணா'வின் உடலுக்கு அஞ்சலி செலுத்த வரிசையில் மணிக்கணக்காக நின்றார்கள்.

தமிழகமே தன் தலைமகனை இழந்த சோகத்தில் மூழ்கியது. தமிழ்நாட்டின் புகழ்மைந்தன் அண்ணா, 1969, பிப்ரவரி 3 அன்று காலமானார். புகழின் உச்சியில் இருந்த அண்ணாவுக்கு அப்போது வயது 60.

காஞ்சிபுரம் நடராஜன் அண்ணாதுரை என்கிற சி.என்.அண்ணாதுரையை எல்லோரும் உரிமையாக 'அண்ணா' *என்றுதான் அழைத்தார்கள்.*

தமிழகத்தில் அண்ணாவின் ஆளுமை தடம் பதிக்காத இடமே கிடையாது. தன் 'அரசியல் தந்தை' பெரியார் ஈ.வெ.ராமசாமியுடன் 1949 வரை கை கோத்து, தமிழ் சமூகத்துக்குத் தனி மரியாதையையும், உரிய இடத்தையும் பெறப் போராடினார். இந்தியாவிலிருந்து தென் பகுதியை மட்டும் பிரித்து, திராவிடர்களுக்கென 'திராவிட நாடு' அமைக்க இருவரும் கோரினர்.

பிரிட்டிஷாருடன் இணக்கமாக இயங்கிவந்த பிராமணர் அல்லாதவருக்கான நீதிக் கட்சியை, 1944-ல் 'திராவிடர் கழகம்' என பெயர் சூட்டி, தமிழர்களின் மொழி, கலாசார, அரசியல் உரிமைகளுக்கு இருவரும் புது வடிவம் தந்தனர். 'அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றினால்தான் சமூக மாற்றங்களைச் செய்து சாதிக்கமுடியும்' என்ற கொள்கையுடன் அண்ணா பெரியாரிடமிருந்து விலகி, 'திராவிட முன்னேற்றக் கழகம்' (தி.மு.க.) என்ற அரசியல் கட்சியை 1949-ம் ஆண்டு தொடங்கினார்.

பத்தாண்டுகளில் தி.மு.க. பிரதான எதிர்க்கட்சியாக வளர்ச்சி அடைந்திருந்தது. 1962-ல் தமிழ்நாட்டிலிருந்து, ராஜ்ய சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார் அண்ணா. தேசிய அரசியல் வட்டாரத்தில் 'அண்ணா' என்ற பெயர் மந்திரச் சொல்லாக ஒலிக்கத் தொடங்கியது.

மாநிலங்களவையில், தன் கன்னிப் பேச்சில் அண்ணா என்ற 'திராவிடன்', இந்தியாவில் இருந்து திராவிட நாட்டைப் பிரித்துத் தரும்படி கோர, அன்றைக்கு பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு, அண்ணாவின் கோரிக்கையை நிராகரித்தார். அந்த வருடம், மாநில பிரிவினைக் கோரிக்கைகளைத் தடை செய்யும் இந்திய அரசியல் சாசனத்தின் 16-வது சட்டத் திருத்தம், அண்ணாவை 'தனி திராவிட நாடு' எண்ணத்தைக் கைவிடச் செய்தது. ஆனால், தன் முடிவுக்கு அப்போது இந்தியா மீது சீனா படையெடுத்ததைக் காரணமாகச் சொன்னார் அண்ணா. அந்த பதிலைக் கேட்டு வியப்புத் தெரிவித்தவர்களிடம் 'நாம், திராவிட நாட்டை நேருவிடமிருந்து பெறவேண்டும், சீனர்களிடமிருந்து அல்ல!' என்று பதிலளித்தார்.

தமிழகத்தில் ஆட்சி பீடத்திலிருந்த காங்கிரஸ் கட்சியை அகற்றி, 1967-ல் தி.மு.க. அரியணை ஏறியது. மத்திய அரசுடன் சுமுகமான உறவு கொண்டிருந்தபோதும், மாநில சுயாட்சிக் கொள்கையை விட்டுக்கொடுக்காதவராகச் செயல்பட்டார் அண்ணா.

தி.மு.க.வின் முதல் முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்றுக்கொண்ட அண்ணா, மீண்டும் பதவிக்குத் திரும்ப இயலாதவராக நோய்வாய்ப்பட்டு, இரண்டு வருடங்கள் மட்டுமே முதலமைச்சராக இருந்தார்.

அண்ணாவின் ஆளுமையும், அரசியல் வெற்றிகளும் அவருக்குப் புகழைத் தந்து உயரவைத்தாலும், எல்லோரும் அவரைப் பாசமுள்ள அண்ணனாகவே கருதினார்கள். அதற்குக் காரணம், அவர் பிறரிடம் காண்பித்த நேசம். அதனாலேயே அவருக்கு எதிர்ப்பாக இருந்தவர்களும், அவர் மீது அன்பு செலுத்தினார்கள்.

குடும்பம்

கோயில்களுக்கும், பட்டுச்சேலைகளுக்கும், நேர்த்தி மிகு நெசவுக்கும் புகழ்பெற்ற காஞ்சிபுரத்தைச் சேர்ந்தது அண்ணாவின் குடும்பம். அண்ணா குடும்பமும் நெசவாளர் குடும்பம்தான். ஆனால், அவர் தந்தை நடராஜன், சொத்துப் பத்திரங்களை எழுதும் எழுத்தராக இருந்தார். நடராஜன்-பங்காரு தம்பதி, முதலியார் சமூகத்தில் ஒரு பிரிவான நெசவுத் தொழிலை மேற்கொண்ட செங்குந்த முதலியார் வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

அண்ணாவின் தாயார் பங்காரு அம்மாளுக்கு இரண்டு சகோதரிகள். மூத்தவர் பட்டம்மாள்; இளையவர் ராஜாமணி. பட்டம்மாளுக்கு நாகரத்தினம் என்று ஒரு மகள்; ராஜகோபால், ராஜதுரை என்று இரு மகன்கள். இந்த இரண்டு சகோதரர்களும் சிறு வயதிலேயே இறந்துவிட்டனர். ராஜாமணிக்குப் பிறந்த இரட்டை மகள்களும் சிறு வயதிலேயே இறந்துவிட்டனர். 1909, செப்டம்பர் 15-ம் தேதி பிறந்த அண்ணாதான் அந்தக் குடும்பத்தில் மிஞ்சிய ஒரே ஆண் குழந்தை. அதனால், அவரும் அவருடைய பெரியம்மா மகள் நாகரத்தினமும் அந்தக் குடும்பங்களுக்கு விலை மதிப்பற்ற பொக்கிஷமாகவே இருந்தார்கள்.

ராஜாமணியும், நாட்டு மருத்துவரான அவர் கணவர் மாணிக்கமும், அண்ணாவை தம் சொந்த மகன் போலவே வளர்த்தனர். ராஜாமணி அம்மாளை அண்ணா 'தொத்தா' என்றுதான் அழைத்தார். (பல்லவரின் சென்னையை ஒட்டிய தொண்டைமண்டலப் பகுதிகளில் சித்தியை 'தொத்தா' என்றே அழைப்பார்கள்.)

தனக்கென குழந்தைகள் இல்லாத அண்ணா, பின்னர் நாகரத்தினம் அம்மையாரின் பேரக் குழந்தைகளான பரிமளம், இளங்கோவன், கௌதமன், பாபு ஆகியோரைத் தன் பிள்ளைகளாக்கிக் கொண்டார்.

காஞ்சிபுரத்தில் வரதராஜப் பெருமாள் கோயிலருகே, வரகுவாசல் தெருவில் ஒரு சிறிய வீட்டில்தான் அண்ணாவின் குடும்பம் வசித்தது. நெசவுத் தொழில் வருமானமும், பக்கத்து கிராமத்திலிருந்த குடும்ப நிலத்தின் விளைச்சலும், அண்ணாவின் குடும்பம் தங்கள் தேவைகளைச் சமாளித்துக்கொள்ள உதவின. நிரந்தர வருமானம் இல்லாதபோதும், 'விதிப்படிதான் எல்லாம் நடக்கும்' என்ற நம்பிக்கை கொண்ட, கடவுளுக்கு அஞ்சிய அண்ணாவின் குடும்பத்தினர், பெரிய ஆசைகளும் கனவுகளும் இல்லாமல் மகிழ்ச்சியாகவே வாழ்ந்தார்கள். திருத்தணி முருகன்தான்



அண்ணாவுடன் ராணி அம்மையார்

அண்ணாவின் குலதெய்வம். அங்கேதான், குழந்தையாக இருந்தபோது அண்ணாவுக்கு மொட்டை போட்டார்கள். சின்னக் குடுமியும், காதில் கடுக்கனுமாக, அரை நிஜாரோடு சிறுவனான அண்ணா காட்சியளித்தார்.

'அண்ணாதுரை' என்ற பெயர் எப்படி வந்தது?

பேரனுக்குத் தாத்தாவின் பெயரையும், பேத்திக்குப் பாட்டியின் பெயரையும் சூட்டுவது தமிழ்நாட்டு வழக்கம். அண்ணாதுரை என்ற பெயர் அப்போது அதிகமாக சூட்டப்படாத பெயரே. பெரியம்மா மகன் ராஜதுரையின் பெயரோடு இசைந்து இருந்தது அண்ணாதுரை. தவிர, அந்தப் பெயர், தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த வைணவரான விஷ்ணுவைக் குறித்தது. ஆனால், பிற்காலத்தில் அந்தப் பெயர் மூன்றெழுத்து மந்திரச் சொல்லாகத் தமிழகத்தில் நிலைத்துவிட்டது.

ராஜாமணி தொத்தாதான் அண்ணாவைச் செல்லமாக வளர்த்தார். குழந்தைப் பருவத்தில் மண்ணில் கால் பட்டால் ஆயுள் குறைந்துவிடும் என்று பயந்து, அண்ணாவைத் தெருவில் விளையாடக்கூட அனுமதிக்கமாட்டார். அத்தனை பாசம். குழந்தையின் முடியை அழகாக வாரிப் பின்னலிட்டு, நகைகளை அணிவித்து, திண்ணையில் செப்புச் சிலை மாதிரி உட்கார வைத்துவிடுவார். பாவம் அண்ணா, அங்கேயே அமர்ந்தபடி, மற்ற குழந்தைகள் விளையாடுவதை வேடிக்கை பார்த்துக்கொண்டு இருப்பார்! ஆனால், அவருக்குக் குழந்தைப் பருவத்தில் விளையாட்டுகளில் பெரிய ஆர்வம் இருக்கவில்லை.

இளம் வயதிலிருந்தே புத்தகங்கள் என்றால், கொள்ளை ஆசை அண்ணாவுக்கு. பள்ளியிலும் சரி, கல்லூரியிலும் சரி, அண்ணாவை நூலகங்களில்தான் காணமுடியும். இல்லையென்றால் பழைய புத்தகக் கடைகள் பக்கம் போய்த் தேடிக்கொண்டிருப்பார். அந்த அறிவுத் தேடலே பின்னர் அவரை அற்புதமான எழுத்தாளராகவும், பேச்சாளராகவும் ஆக்கியது. 'அறிஞர்' என்ற அடைமொழியையும் அவருடைய பெயருக்கு முன் சேர்த்தது.

விளையாட்டுகளில் ஆர்வம் இல்லாவிட்டாலும், நாடகங்களில் நடிப்பதில் அண்ணாவுக்கு அதிக நாட்டம் இருந்தது. ஒருமுறை தன் நண்பர்களோடு, மாட்டுத் தொழுவத்தில் ஹரிச்சந்திரன் நாடகம் போட்டார். சத்தியத்தை மட்டுமே பேசியதில் ஆட்சி, மனைவி, மரியாதை எல்லாவற்றையும் இழந்த ஹரிச்சந்திரனாக அண்ணா நடித்தார். ஆனால், அவருடைய எதிர்கால கீர்த்தியை அறிய வாய்ப்பில்லாத பாட்டி, பேரனை வீட்டுக்குள் இழுத்து வந்து முதுகில் நாலு சாத்து சாத்தினார்! பின்னாளில் அண்ணாவே நாடகங்கள் எழுதியும் நடித்தும், இப்ஸென் என்றும், பெர்னார்ட்ஷா என்றும் ஒப்பிடப்படுவார் என்பது பாவம் பாட்டிக்குத் தெரிந்திருக்காதுதான்!



பச்சையப்பன் பள்ளி

அண்ணாவின் ஐந்தாவது வயதில், பச்சையப்பன் ஆரம்பப் பள்ளியில் அவரைச் சேர்த்தார்கள். கொடைவள்ளல் பச்சையப்ப முதலியார் (1754-94) நினைவாக நடத்தப்படும் பள்ளி அது.

அண்ணாவின் குடும்பம் அப்படியொன்றும் வசதிகள் நிறைந்த குடும்பம் அல்ல என்றாலும், நெற்றியில் குங்குமமிட்டு, ஒரு குதிரை வண்டியில் முதல் நாள் பள்ளிக்கூடத்துக்கு அண்ணாவை அழைத்துக்கொண்டு போனார்கள். அவருடைய ஆசிரியரும் கூடவே சென்றார். பள்ளியின் நிலையோ பரிதாபமாக இருந்தது. "வகுப்பில் புத்தகங்களையும், ஆசிரியை நடத்தும் பாடங்களையும் கவனிப்பதை விட்டுவிட்டு, அந்தப் பழைய கட்டடத்தின் கூரை எப்போது இடிந்து என் மேல் விழும் என்றுதான் நாள் முழுக்க மேற்கூரையையே கவனித்துக் கொண்டிருந்தேன்" என்று, அண்ணா கூறியிருக்கிறார்.

வீட்டிலிருந்து பள்ளி நான்கு கிலோ மீட்டர் தூரத்தில் இருந்ததால், அருகிலேயே வசித்த ஒரு நண்பரின் வீட்டில் அண்ணாவுக்கு மதிய உணவுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால், அந்த நண்பரின் குடும்பம் ஒன்றும் வசதியானதல்ல. மதிய உணவின்போது நண்பரின் வீட்டில் கடைப்பிடிக்கப்படும் ஒரு பழக்கத்தைச் சிறுவனாக இருந்தபோதும் அண்ணா கவனித்து வைத்திருந்தார்: உணவு பரிமாறுகிறபோது வீட்டின் மருமகள்,

மாமியாரிடமிருந்து அலமாரியின் சாவியை வாங்கித் திறந்து, அதிலிருந்து காய், கூட்டு முதலிய பதார்த்தங்களை எடுப்பார். அண்ணாவுக்கு அவற்றைப் பரிமாறிய பிறகு, மீண்டும் அவை அலமாரிக்குள் பத்திரமாகப் போய்விடும்!

'அண்ணாவுக்கு அபார நினைவாற்றல். பள்ளியில் படிக்கும்போதே நல்ல மதிப்பெண்கள் எடுப்பார். ஒழுக்கமான மாணவர். படிப்பில் அலட்சியம் போன்ற எந்தக் காரணங்களுக்காகவும் அவரைக் கடிந்துகொள்ளவோ கண்டிக்கவோ வேண்டியதில்லை' என்கிறார் அவருடைய வளர்ப்புத்தாய் தொத்தா. என்றாலும், அவர் ஒழுங்காகப் படிக்கிறாரா என்று கவனிப்பதை தன் வாழ்க்கைக் கடமைகளுள் ஒன்றாக வைத்திருந்தார்.

அண்ணா படிப்பதற்கு ஒரு மேசையும், மண்ணெண்ணெய் விளக்கும் உண்டு. மாலை ஆறு மணிக்கு விளக்கின் திரியைத் தூண்டிவிட்டு, அண்ணாவின் அருகில் அமர்ந்துகொண்டு அவர் படிப்பதைக் கண்காணிப்பார் தொத்தா! தான் ஆங்கிலம் சரியாகப் படிக்கிறோமா என்பதைக் கவனிக்கத்தான், அருகிலேயே உட்கார்ந்து இருக்கிறாரோ என்று அண்ணா நினைத்தார். ஒருநாள் குறும்புத்தனமாக அண்ணா வேண்டுமென்றே ஆங்கில வாக்கியங்களைத் தவறாக வாசித்தார். தொத்தாவோ அப்போதும் அசையாமல் அப்படியே அமர்ந்திருந்தார். அத்தனை வருடங்களாக, படிக்கும்போது தனக்குத் தனிமை தெரியக்கூடாது என்பதற்காகவே தொத்தா தன்னருகில் அமர்ந்திருந்தார் என்று உணர்ந்தபோது, அவர் தன் மீது வைத்திருந்த அளவற்ற பாசத்தில் நெகிழ்ந்து போய்விட்டார் அண்ணா.

மற்ற குழந்தைகளின் சிகை அலங்காரத்தைக் கவனித்த அண்ணா, அவர்களைப் போலவே, தானும் கிராப் வைத்துக்கொள்ள விரும்பினார். ஆனால், தொத்தாவிடம் கேட்க பயம். ஒரு தடவை ஆங்கிலத்தில் 100-க்கு 90 மதிப்பெண்கள் பெற்ற அண்ணா மகிழ்ச்சியில் பூரித்திருந்த தொத்தாவிடம் சமயம் பார்த்து, 'கிராப் வைத்துக்கொள்ள வேண்டும்' என்ற தன் ஆசையை வெளியிட்டார். உடனே சம்மதம் கொடுத்துவிட்டார் தொத்தா!

எட்டு வயதில், ஒரு ரயில் பயணத்தின்போது அண்ணா அழுதுகொண்டிருந்தார். எதற்கு அழுகிறார் என்று புரியாமல் தவித்த பெற்றோர், நீண்டநேரம் சமாதானம் செய்தபிறகுதான் தனது இடது கை விரல்களில் ஒன்று சன்னலைச் சாத்தும்போது நசுங்கிவிட்டதைத் தெரியப்படுத்தினார். பெற்றோர் சன்னலைச் சாத்தியபோதுதான் விரல் நசுங்கியது என்பதை எப்படிச் சொல்வது

என்று தயங்கித்தான் இளம் அண்ணா வலியைப் பொறுத்துக் கொண்டு இருந்திருக்கிறார். எதையும் தாங்கும் இதயம் அண்ணாவுக்கு இளமையிலேயே இருந்தது.



தாய் பங்காரு அம்மாள்

ஏழை நெசவாளர் குடும்பத்தில் பிறந்த அண்ணாவுக்கு, இயற்கையாகவே பொறுமையான குணம் அமைந்திருந்தது. ''நான் நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் சொல்லிக்கொள்வேன். நெசவாளியாகப் பிறந்தவர் யாரும் பொறுமையாக இருப்பதைத் தவிர வேறு வழியில்லை. எத்தனை தடவை அறுந்த நூலை இணைத்துப் பார்க்கிறோம். எத்தனை சிக்கல்களைப் பிரித்திருக்கிறோம். ஆகவே நெசவாளர் குடும்பத்தில் பிறந்தவர்கள், நெசவாளியாக இல்லாவிட்டாலும், நெசவாளர் குடும்பத்துக்கு இயல்பான 'பொறுமை' குணத்தைப் பெற்றிருப்பார்கள்! எனக்கு நினைவு தெரிந்து கற்றுக்கொண்ட முதல் தொழில் நெசவுத் தொழில்தான். அந்தச் சின்னஞ்சிறு வயதில் 'சீடா' பிள்ளையாக நான் வேலை செய்திருக்கிறேன். ஒரு நாளைக்குக் காலணா கிடைக்கும். அதை வாங்கிக்கொண்டு, அடுத்த சனி, ஞாயிறு எப்போது வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டே பள்ளிக்குச் செல்வேன். ஆக, நானும் உங்களைப் போல நெசவு வேலை செய்தவன்தான். ஒரு நெசவாளிதான்!'' என்று அண்ணா கூறியிருக்கிறார்.

பொறுமை மட்டுமல்ல, அண்ணா ஓர் அமைதி விரும்பி. புகழ்பெற்ற காஞ்சி வரதராஜப் பெருமாள் கோயில் தனது வீட்டருகே இருந்தபோதும், அங்கே போவதை அண்ணா தவிர்த்தார். பிரபலமேயில்லாத, ஆனால் கூட்டமற்று அமைதி நிரம்பிய புண்ணியகோட்டீஸ்வரர் ஆலயத்துக்குச் செல்வார்! வைணவர்கள் புனிதமாகக் கருதும் மார்கழி மாதத்தில், வரதராஜர் கோயிலைச் சுற்றி ஆண்டாளின் திருப்பாவைப் பாடல்களைப் பாடியபடி பக்தர்கள் வலம் வருவார்கள். ஒருமுறை, அப்படி வந்த

இரண்டு குழுக்களில், கூட்டம் குறைவான குழுவில் அண்ணா சேர்ந்துகொண்டார். பாடகரும், தாளமிடுபவருமாக இரண்டே பேர்தான் அந்தக் குழுவில். அப்போது அவருக்கு எட்டு வயது இருக்கலாம். பெரிய குழுவில் சென்ற சமவயதுப் பையன் ஒருவன் அண்ணாவைப் பார்த்துக் கேட்டான்: "என்னப்பா, நீ பெரிய குழுவில் சேராமல் சின்னக் குழுவில் போகிறாய்?"

"கூட்டம் அதிகம் இருக்கும் இடத்தில் ஆண்டவன் இருக்க மாட்டான். நான் ஆண்டவனை அல்லவா பார்க்கப் போகிறேன்!" என்று அண்ணா பதில் அளித்தார்.

அண்ணா, தன் பன்னிரண்டாவது வயதில் திருத்தணி கோயிலுக்குச் சென்றபோது, அங்கே அலைமோதிய கூட்டத்தைக் கண்டு உள்ளே நுழையவே மறுத்துவிட்டார். இயற்கையின் முரணை என்ன சொல்வது? இப்படி, கூட்டத்தைக் கண்டே ஒதுங்கிய அண்ணா தனது பேச்சுக்காகக் கூடப்போகும் பிரமாண்டமான கூட்டங்களை அறிந்திருக்க நியாயமில்லைதான்.

பத்து - பன்னிரண்டு வயதில் அண்ணா பிள்ளையாருக்குப் பூஜைகள் செய்துகொண்டு இருந்தார். தான் தலைவராக ஏற்றுக்கொண்ட பெரியார், பின்னாளில் பிள்ளையார் சிலைகளை உடைக்க உத்தரவிட்டபோது, "நான் பிள்ளையாரையும் உடைக்க மாட்டேன். அவருக்குத் தேங்காயும் உடைக்கமாட்டேன்!" என்று தன் நிலையை மிக அழகாக விளக்கியவர் அண்ணா. 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற திருமூலரின் மந்திரமே, தி.மு.க.வின் தலைவராக அவர் இருந்தபோது எடுத்த கொள்கை. "நான் குல்லா அணியாத முஸ்லிம்; சிலுவைக்குறி இடாத கிறிஸ்துவன்; நெற்றியில் திருநீறு இடாத இந்து!" என்று தன்னை வர்ணித்துக் கொண்டார் அண்ணா.

கிட்டத்தட்ட ஐம்பதாண்டுகள் கடந்து, தன் இளமைக் காலத்தைப் பற்றி நினைவுகூர்ந்து, அதில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி ஏதுமில்லை என்றார் அண்ணா. "பரபரப்புடன் விவரிக்கும் அளவுக்கு அப்படி ஏதும் முக்கியமானவை அப்போது நடந்துவிடவில்லை. மிகவும் சராசரியான சூழலில் அப்போது நான் வளர்ந்தேன்" என்றார் அடக்கமாக.

பள்ளி இறுதி ஆண்டுத் தேர்வில் கணிதத்தில் இரு முறை அண்ணா தவறினார். மூன்றாவது முயற்சியில் அதிக மதிப்பெண் பெற்றுத் தேறினார். ஆனால், மேலே படிப்பைத் தொடர முடியவில்லை. நகராட்சியில் எழுத்தராக வேலைக்குச் சேர்ந்தாக வேண்டிய சூழ்நிலை. ஆனால், ஆறே மாதங்களுக்குப் பிறகு 1928-ல் மீண்டும் படிப்பைத் தொடரும் நிலை உண்டாயிற்று. பச்சையப்பன்

கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் இன்டர் மீடியட் படித்தார். நல்லவேளையாக பட்டப்படிப்புக்கென மேலும் மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்து படிக்கவும் முடிந்தது.

அண்ணாவின் மேற்படிப்புக்காகவே அவரோடு சென்னைக்கு வந்துசேர்ந்தார் தொத்தா. சென்னையில் ஒண்டுக் குடித்தனம். ஆனால், அந்தச் சூழலுக்கு தன்னை வெகு விரைவில் மாற்றிக்கொண்டார் அண்ணா. அனைத்து குடும்பச் சந்தடிகள் ஓய்ந்துபோன இரவுகளில் மனதைச் செலுத்தி தன் பணிகளை முடித்துக் கொண்டார். இறுதிக் காலம் வரை இந்தப் பழக்கம் அவரை விட்டுப் போகவில்லை.

"அண்ணா 'மாஜிஸ்ட்ரேட்டா வரணும். கலெக்டரா வரணும்'னு சொல்லிக்கிட்டே இருக்கும்! இது போயி அரசியல்லே நுழையுமின்னு யாரு கண்டா?" என்று, பின்னர் அண்ணா முதலமைச்சரானபோது தொத்தா கூறினார்.

பச்சையப்பன் கல்லூரி

அரசியலின் வாசனையை அண்ணா பச்சையப்பன் கல்லூரியில்தான் உணர்ந்தார். வியாபார நிறுவனங்களும் பெட்டிக் கடைகளுமாக இருந்த சைனா பஜார் பகுதியில்தான் அப்போது பச்சையப்பன் கல்லூரி இருந்தது. "அங்கே கிரேக்க நாட்டு வரலாற்றுச் சிறப்பும் கேட்கும்... சைனா பஜார் பண்டங்களின் விலையும் கேட்கும்!'' என்பார் அண்ணா. கல்லூரிக்குள் ஆசிரியருக்கும் மாணவருக்கும் நட்பான உறவு பற்றி நினைத்துக்கூடப் பார்க்கமுடியாத அந்த நாளில், பேராசிரியர் வரதராஜன் தனித்துத் தெரிந்தார். மாணவரைத் தோழராக ஏற்கும் அற்புதமான குணம் அவரிடம் இருந்தது. சென்னை- சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்றபடியே பச்சையப்பன் கல்லூரி மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பித்தார் வரதராஜன். பிராமணர் அல்லாத சென்னை இளைஞர் அமைப்புக்கு தலைவராகவும் இருந்தார். சர். ஏ.ராமசாமி முதலியாரின் நீதிக் கட்சியின் அரசியல் பிரிவுக்கு பொறுப்பாளராகவும் இருந்தார்.

> 'பிரம்பும் கையுமாக இருந்த ஆசிரியர்களையே கண்டு பழகிய என் கண்களுக்கு, ஆசிரியர் வரதராஜனின் கரம் என் முதுகைத் தட்டிக் கொடுத்தபடி, பச்சையப்பன் கல்லூரி மாடித் தாழ்வாரத்தில் அன்றொரு நாள் உலவிய காட்சி புதுமையாக இருந்தது. கல்லூரியில் நான் நுழைந்த நாட்கள், ஆசிரியரின் தோழமை மாணவர்களுக்குக் கிடைக்கக் கூடும் என்ற எண்ணமே எழமுடியாத நாட்கள்.

வகுப்பில் அமர்ந்திருக்கும்போதே, யார் யார் இயக்கத்துக்குப் பயன்படக்கூடியவர்கள் என்று கண்டறிந்து வலை வீசுவார்ர். பத்து, இருபது நாட்களில் அந்த மாணவன் வரதராஜனின் கோஷ்டியில் சேர்ந்துவிடுவான்.

விரும்பத்தகாத சூழ்நிலை மிகுந்த ஒரு தெரு. அங்கு ஒரு குதிரைக் கொட்டில். அதன் மேல் மாடியிலுள்ள அறையில் சிதறிய புத்தகங்கள். சில செல்லரித்துக் கிடக்கும். குப்பையில் தூக்கி எறியத் தோன்றும் படுக்கை. தினசரிகளின் குவியல். ஈ மொய்த்துக் கிடக்கும் தின்பண்ட மிச்சம். இவற்றுக்கிடையே அந்தக் கறுப்பு வீரர்! அவரைச் சூழ்ந்தபடி மாணவர்கள். அவர்களில் நான் முன்னணியில். திட்டங்களோ மகா பிரமாதமாக இருக்கும். அடிக்கொரு தடவை தேநீர், சிகரெட். அதன் புகை அந்த அறையின் வாடையையே அதிகப்படுத்தும்!

நகரைப் பொறுத்த பல முக்கியமான அரசியல் காரியங்கள் இந்தச் சிறிய அறையில்தான் முடிவு செய்யப்படும். பிறகு, அவை கார்ப்பரேஷனிலும் சட்டசபையிலும் நடமாடியது உண்டு! என் பொது வாழ்க்கைக்கு போதகாசிரியர்களாக அமைந்த இரட்டையரில் வரதராஜனார் ஒருவர். மற்றவர் வேங்கடசாமி. இன்று இருவருமே இல்லை. இருவரும் எய்தவேண்டிய நிலையை எய்தும் முன்னரே இறந்துவிட்டனர்!'

- இவ்வாறு எழுதுகிறார் அண்ணா.

பிராமணர் அல்லாதார் சமூக முன்னேற்றத்துக்காக அண்ணா பொதுவாழ்வில் ஈடுபட, அவருடைய சிந்தனைகளை ஒருமுகப் படுத்தினர், பேராசிரியர்கள் வரதராஜனும் வேங்கடசாமியும். தமிழ்ப் பேராசிரியர்கள் மோசூர் கந்தசாமி முதலியார், மணி திருநாவுக்கரசு முதலியார் அவருக்குத் தமிழ் இலக்கியங்கள் மீது ஆர்வத்தை உண்டாக்கினர். வாழ்நாள் முழுவதும் தாய்மொழி மீது அண்ணா பற்றுக்கொண்டிருக்க அவர்களே காரணம். தமிழின் விரிவும் வீச்சும் இளைஞரான அண்ணாவின் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. பின்னாளில், அண்ணாவின் பேச்சிலும் எழுத்திலும், தமிழ் மொழியும் கலாசாரமும் முக்கிய இடம்பெறக் காரணமாகவும் இருந்தன.

ஆரம்ப நாட்களில் காஞ்சிபுரத்திலிருந்து வந்திருந்த இளைஞரான



பட்டம் பெற்ற அண்ணா

அண்ணாவுக்கு ஆர்வம் ஒன்றே மனம் முழுக்க நிறைந்திருந்தது. தேர்வுகளில் எல்லாம் முதல் வகுப்பில் தேர்ச்சி அடைந்திருந்தாலும் குடும்பத்தில் நிலவிய வறுமையால் படிப்பை மேலும் தொடரமுடியாத நிலை. அப்போது உதவிக்கரம் நீட்டியவர், தலைமை ஆசிரியர் சின்னத்தம்பி பிள்ளை.

" 'நான் ஹானர்ஸ் எடுக்கமாட்டேன். பி.ஏ.க்கே போகிறேன்' என்று சொன்னபோது, சின்னத்தம்பி பிள்ளை, 'எத்தனையோ ஸ்காலர்ஷிப்கள் இருக்கின்றன. அதிலே ஒரு ஸ்காலர்ஷிப் கொடுக்கிறேன்!' என்று என்னை வற்புறுத்திச் சேர்த்தார்கள்."

ஆர்வமும் வேகமும் உந்த, மூன்று வருட பி.ஏ., ஹானர்ஸ்

படிப்பை முடிக்க வேண்டும் என்ற சின்னத்தம்பி பிள்ளையின் அறிவுரையை ஏற்றார் அண்ணா. கூடவே, ஒரு நிபந்தனையை விதித்தார். 'படிப்புக்கான புத்தகங்களையும் இலவசமாகவே வழங்க வேண்டும்' என்பதுதான் அந்த நிபந்தனை! மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் தன்னோடு பணிபுரிந்த ஆசிரியர் ஒருவரிடம் சின்னத்தம்பி பிள்ளை அண்ணாவைப் பற்றி... "இந்த இளைஞருக்கு ஒளிமயமான எதிர்காலம் இருக்கிறது. லட்சக்கணக்கான மக்களின் மகிழ்ச்சி ஆரவார ஒலியில் திளைக்கும் தலைவராகப் போகிறார்; தாய்நாட்டை, புன்னகை நிலவும் பூமியாக மாற்றப் போகிறார்" என்று அப்போதே கூறினார்.

அண்ணா பி.ஏ., ஹானர்ஸில் சேர்ந்தபோது, சென்னை மாகாணத்தை, முனுசாமி நாயுடு தலைமையில் அமைந்திருந்த நீதிக் கட்சி ஆண்டு வந்தது. அப்போது இந்தியாவிலிருந்த மூன்று மாகாணங்களில் ஒன்றான சென்னை மாகாணம், ஏறக்குறைய தென்னிந்தியா முழுவதையும் கொண்டிருந்தது. கேரளத்தின் மலபார், லட்சத் தீவு, ஆந்திரத்தின் கடற்கரையோர ராயலசீமா பகுதி, ஒரிசாவின் கஞ்சம் மாவட்டம், கர்நாடகத்தின் பெல்லாரி, உடுப்பி மற்றும் தட்சிண கன்னடப் பகுதி ஆகியவை அப்போதைய சென்னை மாகாணத்தில் இருந்தன. ஆனால், பிரிட்டிஷ் நிர்வாகம் வெகு தொலைவில் - டெல்லியில் இருந்துகொண்டு ஆட்சி செய்ததால் சென்னை மாகாணம் தேசிய நீரோட்டத்திலிருந்து மிகவும் தள்ளியே இருந்தது.

1909-ல், பிராமணர் அல்லாதார் இணைந்து, 'பிராமணர் அல்லாதார் நலச் சங்கம்' என்ற அமைப்பைத் துவக்கினர். பிராமணர் அல்லாதவர்களின் உயர்வே அந்த அமைப்பின் உறுப்பினர்களை இணைத்தது. 'உயர் கல்வி வாய்ப்புகளை எல்லாம் தட்டிப் பறித்ததோடு அரசு நிர்வாகத்தின் அத்தனை பொறுப்புகளிலும் தங்களை (பிராமணர்கள்) நிலைநிறுத்திக் கொண்டுவிட்டனர்' என்பதுதான், பிராமணர்களுக்கு எதிரான அந்த அணுகுமுறைக்குக் காரணம். காங்கிரஸின் விடுதலைப் போராட்டம் தீவிரமாகி வந்த சமயத்தில் நீதிக் கட்சியினர் மட்டும், 'பிரிட்டிஷாரே ஆட்சியில் நீடிக்கட்டும்' என்று கருதினார்கள். பிராமணருக்கு எதிரான தங்கள் போராட்டத்தை, பிரிட்டிஷாருடன் இணைந்து முன்னெடுத்துச் செல்லலாம் என்று நீதிக் கட்சியினர் எண்ணியதால் 1939 வரை, இந்திய விடுதலைப் போரில் அவர்கள் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், 1919-ல் நடைபெற்ற ஜாலியன்வாலாபாக் படுகொலைக்குப் பிறகும், நீதிக் கட்சியினர் காண்பித்த பிரிட்டிஷ் ஆதரவு, அந்தக் கட்சியினருக்கு அவப்பெயரையே சம்பாதித்துத் தந்தது.

சில அதிகாரங்களை மட்டுமே கொண்ட ஆட்சி முறைக்கு சிபாரிசு செய்த 1909-ம் வருட மார்லி-மின்டோ சீர்திருத்தங்களும், 1919-ல் நிகழ்ந்த இரட்டை ஆட்சி முறைச் சூழலும், 1921-ல் நீதிக் கட்சியை சென்னை மாகாண ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தின. காங்கிரஸ் கட்சி அந்தத் தேர்தலைப் புறக்கணித்ததால்தான் அது சாத்தியமாயிற்று. மாகாணத்தின் நிர்வாகப் பொறுப்புகளிலும் அரசுத் துறைகளிலும் பிராமணர் அல்லாதவருக்குப் பணிகள் ஒதுக்க நடவடிக்கை மேற்கொண்டது நீதிக் கட்சியின் தனிப்பெரும் சாதனையாக அமைந்தது. அரசாங்க வேலைகளைக் கைப்பற்று வதற்காகத்தான் போராடுகிறார்கள் என்பதே அன்றைக்கு நீதிக் கட்சியினர் மீது வைக்கப்பட்ட விமரிசனமாக இருந்தது. ஆனால், சிதறுண்டு பிரிந்திருந்த பிராமணர் அல்லாத சமூகத்தினரை, 'பிராமணர் அல்லாதார்' என்று அரசியல் ரீதியாக ஓரளவுக்கு ஒன்றாக இணைக்க நீதிக் கட்சியினரால் முடிந்தது என்பது என்னவோ உண்மை! அந்தச் சூழலில்தான், தன் இருபத்தியோராவது வயதில் ராணி என்ற பெண்ணை மணந்து, ஒரு வருடத்துக்குப் பின்னர் கல்லூரியில் ஹானர்ஸ் படிக்கச் சேர்ந்தார் அண்ணா. பெற்றோர் பார்த்த பெண்ணை, எந்த மறுப்பும் கூறாமல் இந்து முறைப்படி திருமணம் செய்துகொண்டார். திருமண நாளன்றுதான் முதன்முறையாக மணப்பெண் ராணியைப் பார்த்தார்.

ராணி அம்மையார் கூறுகிறார்: ''எங்களுடைய மண வாழ்க்கையில் மகிழ்ச்சியாகவே அன்று முதல் இன்றுவரை இருந்து வருகிறோம். எந்தவிதமான மனக்குறையும் ஏற்படுவதில்லை. இதுவரையில் ஒருநாளும் என்னை அவர் கடிந்து பேசியது கிடையாது. அவருடைய இயல்பே, கோபம் வந்தால்கூட, யாரிடமும் கடிந்து பேசாததுதான். அவர் யாரிடமும் கோபம் கொண்டு சண்டையிட்டதை நான் ஒருநாளும் கண்டதில்லை. அவருடைய இந்த இயல்பு எங்கள் அனைவருக்கும் மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. அவருடைய நண்பர்களும் இதைப் பற்றி மகிழ்ச்சி அடைகிறார்கள்."

ஆனால், அண்ணா கோபதாபங்களுக்கு அப்பாற்பட்டவரல்ல. அவருக்குக் கோபம் வரும். ஆனால், வெளிக்காட்டிக்கொள்ள மாட்டார். ராணியே இதைப் பற்றி 1984-ல் இப்படிக் குறிப்பிடுகிறார்: "யார் மேலே கோபம் வந்தாலும் என் மேலேதான் காட்டுவார். கோபம் வந்தால் முகம் கொடுத்துப் பேசமாட்டார். சரி, என்னமோ கோபமா இருக்கார்னு புரிஞ்சுக்குவோம். கோபம் யார் மேலே இருந்தாலும் அவங்க எதிரிலேயே இருக்கமாட்டார். அந்தக் கோபம்கூட பத்து நிமிஷத்துக்கு மேலே இருக்காது. பழைய நிலைக்கு வந்திடுவார்."

திருமணம் முடிந்து, 'கணவன்' என்ற பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகும், கல்லூரி வகுப்புகளை மட்டும் அண்ணா தவறவிட்டதே இல்லை. வகுப்புகளில் இல்லை என்றால் அவரை நூலகத்தில் பார்க்கலாம்! உலகின் அத்தனை புத்தகங்களையும் படித்து முடித்துவிட வேண்டும் என்ற வேகத்துடன் செயல்பட்ட அண்ணாவின் தாகம் அவர் எழுத்திலும் பேச்சிலும் பிரதிபலித்தது. கல்லூரியில் மேடைப் பேச்சுக்காகவும் எழுத்துக்காகவும் பல பரிசுகள் பெற்றார்.

"அந்த மாணவப் பருவத்தில் பத்திரிகையாளனாக வேண்டும் என்பதுதான் என் கனவு. அதேசமயம் மேடையில் ஒலிக்கும் என் குரலைக் கேட்டுக்கொண்டே இருக்கவேண்டும் என்றும் ஆசைப்படுவேன். கல்லூரி நாட்களில் தமிழ், ஆங்கிலம் ஆகியவை எப்போதும் மேடைகளில் முழங்கிக்கொண்டே இருக்க வேண்டும் போல இருந்தது!" என்று, அண்ணா கூறியிருக்கிறார்.

இறுதி ஆண்டில்தான் லயோலா கல்லூரியில் தன் முதல் ஆங்கில பேச்சுப் போட்டியில் பங்கு கொண்டார். 'தமிழ் அரசு' அவருடைய முதல் தமிழ்க் கட்டுரையை வெளியிட்டது. 1932-ல் அண்ணா எழுதிய ஆங்கிலக் கட்டுரை 'மாஸ்கோ மக்கள் அணிவகுப்பு', சேஷையா சாஸ்திரி அறக்கட்டளை நடத்திய போட்டியில் முதல் பரிசை அவருக்குப் பெற்றுத் தந்தது. 1934-ல் அண்ணாவின் முதல் சிறுகதை 'கொக்கரக்கோ'வை வெளியிட்டு, சன்மானமாக இருபது ரூபாயை வழங்கியது 'ஆனந்த விகடன்'. அந்த இளம் வயதில் இத்தனை திறமைகளுடன் இருக்கும் எந்த இளைஞருக்கும் கல்லூரியில் மாணவரிடையே ஒரு ரசிகர் வட்டம் இருக்கும்; அண்ணாவுக்கும் அது இருந்தது.

அண்ணாவுக்கு வகுப்பு எடுத்த பேராசிரியர் ஆர்.கிருஷ்ணமூர்த்தி சொல்கிறார்: "அவருக்கென ஒரு நிரந்தர ரசிகர் கூட்டமும் தீவிர ஆதரவாளர்களும் இருந்தார்கள். அவர்கள் மத்தியில் அடிக்கடி தன் சமூகக் கருத்துகளை உணர்ச்சி மிகுந்த உரையாக எடுத்து வைப்பார் அண்ணா. அது அந்தக் காலத்தில் மாணவர்களின் ஒழுங்கு நடவடிக்கைக்கு முரணானது! ஒருமுறை, கல்லூரி ஆண்டு விழாவில் பரிசு பெற்றவர்களின் பட்டியலிலிருந்து அண்ணாவின் பெயரை அறிவித்தேன். நான் பெயரை அறிவித்ததும் அமைதியாக முன்னால் வந்து மேடையேறி, அந்தப் பரிசைப் பெற கைகளை அண்ணா உயர்த்தியபோது, அரங்கமே இடிந்து விழுமளவுக்கு ஆரவாரமான கைதட்டல் வெடித்தது. கல்லூரியின் ஒவ்வொரு மாணவருக்கு மட்டுமல்ல, பார்வையாளராக வந்திருந்த அத்தனை இளைஞர்களுக்குமே ஆதர்சமாகத் தோன்றினார் அண்ணா!"

1931-ல் அண்ணா, கல்லூரி மாணவர் பேரவையின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இரண்டு வருடங்கள் கழித்து கல்லூரியின் பொருளாதாரப் பேரவையின் தலைவரானார். "1932-ல் கல்லூரியில் ஹானர்ஸ் வகுப்பை எடுக்கச் சென்றபோது அங்கு ஆசிரியராக இருந்த ஓர் உயர் சாதிக்காரர், 'இந்தப் பொருளாதாரப் பாடம் உனக்கு வருமா? உனக்கு ஏன் இதெல்லாம்? வேறு ஏதாவது எடுத்துக்கொள்' என்று கூறி என்னை திசை திருப்பப் பார்த்தார்" என்று அண்ணா எழுதியிருக்கிறார்.

அண்ணாவுக்குப் படிப்பில் நிறையவே ஆர்வம் இருந்தாலும் கல்லூரிப் படிப்பைக் குறிப்பிட்ட காலத்துக்குள் அவர் முடிக்கவில்லை. தன் வகுப்புத் தோழன் சம்பந்தத்துக்குத் துணை நிற்க வேண்டும் என்று மூன்று தேர்வுகளை எழுதிய பிறகு ஐந்து ஹானர்ஸ் தேர்வுகளை முழுவதுமாகப் புறக்கணித்தார். நண்பர் சம்பந்தத்துக்கு பயம் காரணமாகத் தேர்வுகளை எதிர்கொள்ள முடியவில்லை என்பதற்காக அவருக்கு ஆறுதலாக இருக்க வேண்டும் என்றே மீதித் தேர்வுகளை அண்ணா எழுதாமல் விட்டுவிட்டார்! பிறருக்கென எதையும் செய்யவும், அதனால் தனக்கு ஏற்படும் இழப்புகளை ஏற்கும் மனப் பக்குவமும் அண்ணாவின் அரசியல் வாழ்க்கையில் அவரை நிகரற்ற தலைவராக உயர்த்தியது.

படிப்பு முடிந்ததும் ஏதாவது ஒரு வேலையில் சேர அவருடைய குடும்பச் சூழல் நிர்ப்பந்தித்தது. சென்னை ஜார்ஜ் டவுன் கோவிந்தப்ப நாயக்கன் இடைநிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராக சுமார் ஆறு மாதங்கள் பணியாற்றினார். முன்னர், காஞ்சிபுரம் நகராட்சியிலும் ஆறு மாதங்களே வேலை பார்த்து வெளியே வந்துவிட்டார். வறுமையாலும் வகுப்பு வேற்றுமையாலும் சமுதாயத்தின் விளிம்பில் உழல்வோரைப் பார்க்கும்போதெல்லாம் அண்ணாவின் உள்ளம் இரக்கத்தால் உருகும்.

'நீயும் நானும் சாமானியர்கள். ஆனால், இந்தச் சாமானியனின் தோள்கள் அசாதாரண பொறுப்புகளைச் சுமந்துகொண்டு இருக்கின்றன' என்று தன் தம்பிகளுக்கு ஒருமுறை எழுதிய கடிதத்தில் அண்ணா குறிப்பிட்டிருக்கும் வரிகள், அவருடைய உன்னத லட்சியங்களைச் சுட்டிக்காட்டுகின்றன.

தமிழ்நாடு, மறுமலர்ச்சி, கல்வி, சுயமரியாதை - சுருக்கமாகப் பொதுவாழ்க்கை - இவற்றைச் சுற்றியே தன் கணவர் எப்போதும் சிந்தித்து வந்ததாக அவர் மனைவி ராணி கூறியிருக்கிறார். ஒருதடவைகூட நல்ல வேலை, குடும்ப வாழ்க்கை பற்றியெல்லாம் தன்னுடன் விவாதித்ததே இல்லை என்கிறார். ஆனால் தொத்தா

மட்டும் தன் மகன் மற்றவர்களைப் போல ஒரு பொறுப்பான நல்ல சம்பளம் கிடைக்கும் வேலையில் அமரவேண்டும் என்று அண்ணாவை வற்புறுத்திக்கொண்டே இருந்தார். தொத்தாவின் பேச்சுக்கு இணங்கி, முத்தையா செட்டியாரைச் சந்தித்து அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் வேலை தருமாறு கேட்டுக் கொண்டார்.

செட்டிநாட்டு இளவரசர் முத்தையா செட்டியாரின் தந்தை அண்ணாமலை செட்டியார் அளித்த பெரும் நிதிமூலம்தான் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது. வேலை தேடி வந்த அண்ணாவைக் குறித்து வேறு திட்டம் வைத்திருந்தார் முத்தையா செட்டியார். அண்ணாவும் முத்தையா செட்டியாரும் நீதிக் கட்சி உறுப்பினர்கள்தாம். அண்ணாவுக்கு ஆசிரியர் பணியைக் கொடுத்தால் நீதிக் கட்சிக்குத் திறமையான பேச்சாளர் ஒருவர் கிடைக்காமல் இழப்பு ஏற்படும் என்பதுதான் செட்டியாரின் கவலை. ஆசிரியர் வேலைக்கு பதிலாக தனக்கு உதவியாளராக அண்ணா இருக்க வேண்டும் என்றும் ஆசிரியர் பணிக்குக் கிடைக்கும் சம்பளத்தைவிடக் கூடுதல் சம்பளமாக மாதம் ரூபாய் 120 தருவதாகவும் கூறினார். வீட்டுக்குத் திரும்பியவுடன், தான் அந்த உதவியாளர் பணியை ஏற்க இயலாத நிலையில் இருப்பதாக முத்தையா செட்டியாருக்கு ஒரு கடிதம் எழுதினார். ஆசிரியப் பணியில் சம்பளம் குறைவாக இருந்தாலும் கட்டுப்பாடு ஏதுமற்ற சுதந்திரமான அந்தப் பணிதான் அண்ணாவுக்குப் பிடித்திருந்தது.

மற்றொரு சந்தர்ப்பத்தில், வேலைக்காக உதவி நீதிபதி ஒருவரை சந்திக்கச் சென்றார். பேச்சாளராக நீதிக் கட்சி வட்டாரத்தில் ஏற்கெனவே அறியப்பட்டிருந்தார். தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, தான் வந்த காரணத்தை அண்ணா கூறுவதற்கு முன்னால் அந்த நீதிபதி, "நீங்கள்தான் சி.என்.அண்ணாதுரையா..? நீங்கள் மிகவும் இளைஞராக இருக்கிறீர்களே! அண்ணா என்றவுடன் நான் ஏதோ ஐம்பது வயது இருக்கும் என்று எண்ணிக் கொண்டிருந்தேன்..!" என்று தன் வியப்பைத் தெரிவித்தார். அண்ணாவை மேலே பேசவிடாமல், "எனக்கு ஓர் உதவி செய்ய முடியுமா?" என்று கேட்டார், அந்த உதவி நீதிபதி! நீதிக் கட்சித் தலைவர் ஏ.ராமசாமி முதலியாரிடம் சொல்லி தனக்கு 'உதவி நீதிபதி' பதவியிலிருந்து 'துணை நீதிபதி'யாகப் பதவி உயர்வு தர உதவ முடியுமா என்பதே அவர் வைத்த வேண்டுகோள். தான் வந்த நோக்கத்தையே அவரிடம் வெளியிடாமல் அப்படியே வீடு திரும்பினார் அண்ணா!

2

பிராமணர் அல்லாதார் இயக்கம்



1930-களில் நீதிக் கட்சியில் அண்ணா சேர்ந்தபோது, அந்த பிராமணர் அல்லாதார் கட்சியின் அரசியல் செல்வாக்கு முடிவை நெருங்கிக்கொண்டு இருந்தது. தேசிய கட்சியான காங்கிரஸ் அவரை ஈர்க்கவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. பெரியார் ராமசாமியின் புரட்சிகரமான தலைமையில், தன் பொது வாழ்க்கையை முழுவதுமாகச் செலவிட அவர் முடிவெடுத்தது, எதிர்நீச்சல் போட்டு சாதனை புரியும் அவருடைய வித்தியாசமான குணத்தை வெளிப்படுத்தியது. முடிவை நெருங்கிவிட்டபோதும், நீதிக் கட்சி சென்னை மாகாணத்தின் அரசியல் - சமூக வட்டத்தில் பிராமணர் அல்லாதாரின் பிரச்னைகளைக் கையில் எடுத்துக்கொண்டிருந்தது. சாதி இந்துக்கள், சூத்திரர்கள், ஆதி திராவிடர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள் என பிராமணர் அல்லாத எல்லோருக்கும் அதில் இடம் இருந்தது. ஆட்சி, கல்வி என்று எல்லாவற்றிலும் பிராமணர்களின்

ஏகபோக உரிமைக்கு எதிர்நிலையை எடுத்ததால், துவக்கத்தில் நீதிக் கட்சிக்கு ஆதி திராவிடர்கள், முஸ்லிம்கள் ஆகியோரிடமிருந்து ஆதரவு வெகுவாக இருந்தது. ஆனால், அதன் தலைமையும் கொள்கைகளும், இடைப்பட்ட சாதி இந்துக்களின் அரசியல் வாகனமாக அந்தக் கட்சியைக் காட்டின. பின்னர் பிராமணர் அல்லாதவருக்குச் சட்டசபையில் இடம் ஒதுக்க, கட்சி முனைந்து வெற்றி கண்டு, கல்வித்துறையிலும், அரசுப்பணிகளிலும் பிராமணர் அல்லாதவர் நிலையாக அதிகமாக இடம்பெறும் அளவுக்குச் செயல்பட்டது. ஆனால், இந்தக் காரணத்தாலேயே வகுப்புவாதக் கட்சி - இன்றைய அரசியல் பார்வையில் சாதிக் கட்சி - என்ற விமரிசனத்துக்கும் அந்தக் கட்சி உள்ளாயிற்று. வெட்கமில்லாமல் ஆங்கிலேயர்களின் அடிவருடிகளாக இருக்கிறவர்கள் என்ற பெயரும் பெற்றது. பின்னாளில் அண்ணாவின் வார்த்தைகளில், 'பிரிட்டிஷாரின் அடிமைகள்' என்று விமரிசிக்கப்பட்டது.

கட்சியில் பிராமணர் அல்லாத நிலச்சுவான்தார்களும், செல்வந்தர்களும், பிரிட்டிஷார் அளித்த பட்டங்களைப் பெற்ற பிரமுகர்களும்தான் இருந்தனர். மொத்தமாக தேசத்தை பாதிக்கும் பிரச்னைகளை அடையாளம் கண்டு வாதாடவேண்டிய அவசியம் அவர்கள் யாருக்கும் இருக்கவில்லை. அப்படியானால் அவர்கள் எப்படி பிராமணர் அல்லாதவரின் பிரச்னைகளுக்காகப் போராடினார்கள்? நீதிக் கட்சியின் தோற்றத்தை விளக்குகையில் பிராமணர் அல்லாதவர் தம் நிலையை மனதார உணர்ந்ததுதான் அவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், தமிழர் சைவ-கலாசார மறுமலர்ச்சிக்கும் காரணம் என்கிறார் இர்ஷ்சிக். மாறாக, தென் சென்னையின் ஒரு பகுதியான மயிலாப்பூரில் வசிக்கும் பிராமண பிரமுகர்களுக்கு எதிராக உருவானவர்கள்தாம் நீதிக் கட்சி பிரமுகர்கள் என்கிறார் வாஷ்ப்ரூக். இந்த மயிலாப்பூர் பிராமணப் பிரமுகர்கள், தனியார் மற்றும் அரசுத் துறைகளில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார்கள்.

பெரும்பாலான பணக்கார நீதிக் கட்சித் தலைவர்களுக்கு, தங்கள் தாய்மொழியைவிட ஆங்கிலம்தான் சரளமாக வந்தது. அதோடு, அவர்கள் இந்து மதத்தின் பிராமணீய வழிமுறைகளையும் கடைப்பிடித்து வந்தார்கள். ஆனால், இந்த 'மயிலாப்பூர் குழு'வுக்கு எதிரான மோதலில், நீதிக் கட்சியினர் சாதியை ஒரு வலுவான கருவியாகக் கையாண்டனர். ஏனென்றால், 'அதுதான் அரசியலில் செல்லுபடியாகும்' என்று குறிப்பிடுகிறார் வாஷ்ப்ரூக். பிரிட்டிஷாரும் எல்லாவற்றுக்கும் மயிலாப்பூரைச் சார்ந்திருப்பதை, அசௌகரியமாகத்தான் கருதினார்கள். இப்படி பிராமணர் அல்லாத பிரமுகர்களுக்கும் பிரிட்டிஷாருக்கும்

பொதுவாக இருந்த விஷயங்கள், கட்சியின் வளர்ச்சிக்கு உதவின. கூடவே, 'ஆரிய' பிராமணர் என்ற ஒட்டுமொத்த சமூகத்தின் மீது அதுவரை அமுக்கமாக இருந்து வந்த பரவலான வெறுப்பும் இதற்குத் துணையாக இருந்தது. அவர்கள் அக்ரஹாரத்தில் தனியாகக் குடியிருப்பது, உயர் மனப்பான்மை, பிறர் தரும் உணவை ஏற்காமல் தவிர்த்தல், மற்றவர்களோடு சேர்ந்து உறவாடுவதில் காட்டும் தயக்கம், அவர்கள் சாதிச் சின்னமான பூணூல் அணிவது, அவர்களின் அக்ரஹார மொழி, கல்வியிலும் பதவிகளிலும் அவர்கள் வகித்த முக்கியத்துவம், அவர்களின் சமஸ்கிருதப் பற்று, தமிழைப் பற்றி மாறுபட்ட கருத்தைக் கொண்டிருப்பது - இவை எல்லாம், பிராமணர் அல்லாதவரிடையே அவர்கள் மீது பொறாமையையும் பிரமிப்பையும் கொள்ளச் செய்தன.

"பிராமணர்கள் வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்றே ஒப்புக்கொண்டாலும், அடிப்படையிலேயே வேறுபாடுகள் உள்ள இரண்டு வகை கலாசாரங்கள் ஆரியர் - திராவிடர் இடையே நிலவியதால், இவர்களுடைய தினசரி வாழ்க்கையையும் பழக்கவழக்கங்களையும், இலக்கியங்களையும் நெருங்கியிருந்து பார்ப்பவர்களுக்குத்தான் இரு பிரிவினரிடையே உள்ள வேறுபாடு தெரியும்" என்றார் பெரியார்.

யார் சூத்திரன்?

பரம்பரையாக தமிழ்ச் சமூகத்தில் பிராமணர்களை 'பார்ப்பார்' அல்லது 'வருவது உணர்வோர்' என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் பெயருக்குப் பின்னே ஐயர் அல்லது ஐயங்கார் என்ற விகுதியைச் சேர்த்துக்கொண்டார்கள். இவை 'ஆர்ய' என்ற சொல்லில் இருந்து உருவானவை; ஆர்ய என்றால் உயர்வான என்று பொருள். பிறப்பால் உயர்ந்தவன், தாழ்ந்தவன், அசுத்தமானவன் போன்ற பிராமணீய பிரிவுக் கொள்கைகளை பெரியாரும் அவர் சீடர் அண்ணாவும் சாடினர்.

ஆனால், பிரிவுகளும், உயர்சாதி மனப்பான்மையும் தமிழர்களுக்குப் புதியவை அல்ல என்ற செய்தி வியப்பாக இருக்கலாம். முதலாம் நூற்றாண்டு முதல் மூன்றாம் நூற்றாண்டு வரை தொகுக்கப்பட்ட சங்க இலக்கியமான புறநானூறு, ஆரியருக்கு முன்பிருந்த தமிழ் சமுதாயத்தில் பிறப்பை அடிப்படையாகக் கொண்ட பிரிவுகள் இருந்ததாகக் கூறுகிறது. தோல் பணியாளர்கள், பாணர்கள் போன்றோர் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் வசிக்குமாறு கட்டுப்படுத்தப்பட்டதோடு, உயர் குடியிருப்புகளோடோ, உயர்மட்டத்தினரோடோ உண்ணவும் அனுமதிக்கப் படவில்லை. ஆனால், தமிழர் வேதமான திருக்குறள்,

பிறப்பினால் அனைவரும் சமம் என்று சொன்னது; தமிழரின் பிரிவுகளுக்கிடையேயும் சமத்துவ காற்று வீசியதையும் உணர்த்தியது.

தெற்கின் ஆயிரம் வருட காலத்திய ஆரியமயமாக்கலில், நான்காம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை ஆண்ட பல்லவர்களின் ஆதரவு பெரும் பங்கு வகித்தது. அந்தச் சமயத்தில் இஸ்லாம் உலகின் வேறு பகுதிகளில் காலூன்றிக் கொண்டிருந்தது. வடக்கே ஜைன-புத்த மதங்களின் வலுவான தாக்கத்தை எதிர்கொள்ள, பிராமணீய இந்து மதம் போராடவேண்டியிருந்தது. ஏழாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரையிலான சைவ - வைணவ பக்தி இயக்கங்கள் வேறு மதங்களைப் பின்தள்ளி இந்து மதத்துக்குப் புத்துயிர் அளித்தபோது, பிறப்பில் உயர்வு - தாழ்வு என்ற பிரிவினையும் தீண்டாமையும் மறைந்துபோய்விடும் என்ற நம்பிக்கையையும் கூடவே துடைத்தெறிந்துவிட்டது. பக்தி இயக்கத்தில் ராமானுஜரும் பிறரும் சாதி குறித்த சமத்துவத்தைப் பிரசாரம் செய்து வந்தபோதும், பக்தி இயக்கத்தின் தாக்கம், தெற்கே இந்து மதக் கொள்கைகள் வலுப்பெற உதவியது. இது எந்த அளவுக்கு தமிழர்களின் மனதை ஆக்கிரமித்தது என்றால், இந்தியாவின் சாதி அடுக்கு அமைப்பைப் பற்றி மேலை நாட்டார் அறிந்துகொண்டதுடன், 'பறையர்' அல்லது 'தீண்டத்தகாதவன்' என்ற சொல் ஆங்கில அகராதியில் (1605-1615) இடம்பிடிக்கும் அளவுக்குப் போயிற்று!

பக்தி இயக்கத்தின் பின்விளைவாக, வேதகாலத்து மதமும் அதன் சமூகப் பிரிவுகளும் தமிழகத்தில் அசைக்கமுடியாத இடத்தைப் பிடித்துக்கொண்டன. சமூகத்தின் உயர்மட்டங்களில், பிராமணீய இந்து மதத்தின் கை ஓங்கியது. கோயில்களிலும், சடங்குகளிலும், வைதீக நிகழ்ச்சிகளிலும் அவர்கள் வர்ணாசிரம தர்ம வரிசையில் உயர்ந்த இடம் வகித்தார்கள் என்றாலும், மிருக பலி கொடுப்பது, முன்னோரை நினைவுகூர்வது, உள்ளூர் கடவுள்களை வழிபடுவது எல்லாம் இங்கே ஊறிப் போயிருந்ததால், அவையும் தொடர்ந்தன.

இதில் வேடிக்கை என்னவென்றால், பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிராமணருக்கு எதிரான இயக்கம், பிராமணர் அல்லாதவரிடையே சாதிப் பிரிவுகளைப் பற்றிய விழிப்பு உணர்ச்சியை ஊட்டி, அவர்களை ஒன்றுதிரட்டி சாதி அமைப்பை வைத்தே அதில் முன்னேற விரும்பியதுதான். உண்மையில், ஸ்காட்டிஷ் பாதிரியாரான 'லண்டன் மிஷனரி சொசைட்டி'யைச் சேர்ந்த பிஷப் கால்டுவெல், ஆரியனல்லாத



கால்டுவெல்

அடையாளம் கொடுத்தபோது, பிராமணர் அல்லாதவர் சிலர் அதை விரும்பவில்லை. 'க்ஷத்ரிய குல', 'ஆர்ய வைசிய' போன்ற சாதி அடைமொழிகளை இந்தக் கண்ணோட்டத்தில்தான் பார்க்கவேண்டும்.

ஆனால், சூத்திரர் என்ற பொது பதத்தை இந்தச் சாதியேற்றத்தால் வெல்ல முடியவில்லை. இந்தப் பிரிவு பின்னால்தான் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால், ஆரம்ப வேதகால குறிப்புகளில் சூத்திரர் பற்றி காணப்படவில்லை. பிராமணர், க்ஷத்ரியர், வைசியர் பிரிவினருக்குப் பணி செய்யவே இந்த சூத்திர நான்காம் வர்ணம் சேர்க்கப்பட்டது. முதல் மூன்று பிரிவினரும் பூணூல் அணியலாம். வேதம் பயிலலாம். சூத்திரர்களும், ஆதி திராவிடர்களும் தீண்டத்தகாதவர்கள்; எனவே, அவர்கள்

இவற்றைச் செய்யமுடியாது. ஆனால், அப்போது இது முக்கியமானதாகப் படவில்லை. அன்றைக்கு அரசர்களும் வணிகர்களும் தமிழ்நாட்டில் இதைக் கண்டுகொள்ளவில்லை. மேலும், விவசாயம் ஓர் உயர் தொழிலாக, திராவிடம் எனப்படும் தென்னிந்தியாவில் மதிக்கப்பட்டது.

ஆனால் விவசாயிகள், வர்ணாசிரம தர்மப்படி சூத்திரர்களே. இதை ஆரம்பத்திலேயே கால்டுவெல் சுட்டிக்காட்டினார். தென்னகத்தில் மத்திய - உயர் வகுப்பினரைக் குறிக்கும் சொல்லாக 'சூத்திரர்' இருந்ததை அவர் எடுத்துக்காட்டினார். தெற்கே தீண்டத்தகாதவர் எனக் கருதப்படுபவர்தான் வட இந்தியாவில் சூத்திரர்கள் என்றும், உண்மையில் தென்னிந்தியாவில் க்ஷத்ரியரோ வைசியரோ கிடையாது என்றும் கால்டுவெல் கூறினார்.

சூத்திரர் நிலைமை குறித்து பிராமணர் அல்லாத சமுதாயம் தாமதமாகத்தான் விழித்துக்கொண்டது. நீதிக் கட்சித் தலைவர்களும், சுயமரியாதை இயக்கத் தலைவரான ஈ.வெ.ராவும் அந்தச் சொல் இழிவானது என்றும், வகுப்பு பேதம் பிராமணர் அல்லாதவர்களை அடக்கியாள பிராமணர் வகுத்த திட்டம் என்றும் கருதினர். சுயமரியாதை இயக்கம் 1925-ல் துவக்கப்பட்டபோது, பிறப்பு, பால் பாகுபாடு, சாதி, மதம் என்ற எந்த வேறுபாடும் இன்றி, சுயமரியாதை என்பது ஒருவரின் பிறப்புரிமை என்று விளக்கப்பட்டது.

செங்கல்பட்டில் 1929-ல் நடைபெற்ற முதல் சுயமரியாதை மாநாட்டில் பேசிய எம்.கே.ரெட்டி, 'சுயமரியாதை என்பது சாதாரணமாகப் பார்க்கையில் எளிமையான, தெளிவான சொல்லாகத் தெரிந்தாலும், விளக்கம் சொல்லி மாளமுடியாத அளவுக்கு ஆழ்ந்த பொருள் பொதிந்த வார்த்தை' என்று கூறினார். ஈ.வெ.ரா.வின் இயக்கம், பிராமணர் அல்லாத சமூகத்தில் அவர்களுக்கென்ற அடையாளத்தையும், தனித்தன்மையையும் உணர்வுபூர்வமாக அளிப்பதில் வெற்றி கண்டது. அந்தச் சமூகத்தில் இருந்து வந்த பிராமண சடங்கு முறைகள் நிறுத்தப்பட்டு, திருமணம் போன்ற சடங்குகளில் பிராமண வைதீக முறைகள் தவிர்க்கப்பட்டு அதற்குப் பதிலாக சுயமரியாதைத் திருமணங்கள் நடைமுறைக்கு வந்தன.

இருந்தாலும், பெரும்பாலான சூத்திரர்கள் பிராமணீய நிலைப்பாட்டையே தொடர்ந்து பின்பற்றினர். அவர்களுக்குள்ளேயே உயர்ந்தவன் - தாழ்ந்தவன் என்று பிரிக்கப்பட்டு, கீழான நிலையிலிருந்த சூத்திரர், மேலே உயரவே அக்கறைக் காட்டினர். தங்களுக்கும், தீண்டத்தகாதவர் அல்லது ஆதி திராவிடருக்கும் இடையே நீண்ட இடைவெளி உண்டாக்க நினைத்தனர். இந்த

உள்ளார்ந்த வேறுபாடு, பிராமணர் அல்லாதார் இயக்கத்துக்கு ஊறு விளைவித்து, ஆதி திராவிடர் தங்கள் அரசியல் குரலை வெளிப்படுத்த தாங்களே ஒரு வழி காண உந்தியது.

'திராவிடர்' என்ற உருவாக்கம்

கிறிஸ்துவ மிஷனரிகளின் மதமாற்றக் கொள்கை முயற்சிகள், இந்து சமுதாயத்தில் இருந்த சாதி ஏற்றத் தாழ்வுகளைக் குறிவைத்து, சம அந்தஸ்து பெறும் வாய்ப்புகள் வேற்று மதத்தில் இருப்பதாகக் கூறின. காலனி ஆதிக்கமும் தொழில்மயமாக்கலும் உள்ளூர் சமூகங்களை மாகாண நீரோட்டத்தில் கொண்டுவந்து சேர்த்தன. மதம், பிராந்திய மொழிகள், கலாசாரம் ஆகியவற்றில் ஆட்சியாளர் கர்ண்பித்த அக்கறை, பிராமணர் அல்லாத பிரமுகர்களின் பார்வையை விரிவாக்கியது.

அச்சுத்தொழில், தகவல்களையும் எண்ணங்களையும் பிராமணர் அல்லாத மேட்டுக்குடிகளுக்கு மத்தியில் கொண்டு செல்ல உதவியாக இருந்தது. 1498-ல் வாஸ்கோடாகாமா கள்ளிக்கோட்டையில் காலடி எடுத்துவைத்த ஐம்பத்தாறு ஆண்டுகளுக்குப் பிறகு, லிஸ்பன் நகரில் முதல் தமிழ்ப் புத்தகம் அச்சாயிற்று. கிட்டத்தட்ட அதே காலகட்டத்தில், போர்ச்சுக்கீசிய யூதப் பாதிரியார் ஹென்றிக்ஸ் (1520 - 1600) தமிழை ஆர்வத்தோடு பயின்றார். அகராதி தொகுப்பாளரும் இலக்கண நிபுணருமான ஹென்றிக்ஸ் பாதிரியார், 'தம்பிரான் வணக்கம்' போன்ற கிறிஸ்துவ இலக்கியங்களை அச்சிட தமிழ் அச்சுக்கூடத்தை முதன் முதலில் நிறுவினார் (1578). அவருடைய முயற்சியின் காரணமாக, ஐரோப்பிய மொழி அல்லாத ஒரு மொழி அதாவது, தமிழ் மொழியே முதலில் அச்சேறியது.

பிரான்ஸிஸ் வைட் எல்லிஸ் என்ற ஆங்கில அதிகாரி, 1816-ல் 'மொழிக்குடும்பம்' என ஒன்று இருப்பதை அறிந்துகொண்டார். இதில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, குடகு மற்றும் மால்ட்டோ மொழிகள் அடங்கும். பெஸ்கி பாதிரியார் என்ற வீரமாமுனிவர் (1680 - 1747), தமிழ் எழுத்து வடிவத்தை எளிமைப்படுத்தி, தமிழ் எழுத்து எளிதாகப் பரவ வழி செய்தார். பைபிள் 'புதிய ஏற்பாடு' தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, அன்றைய டச்சு ஆதிக்கத்திலிருந்த தரங்கம்பாடியிலிருந்து ஜெர்மானிய பிராடஸ்டன்ட் பாதிரியார் பர்த்தலோமியஸ் ஸீகன்பால்க் (1689 - 1719) என்பவரால் அச்சிடப்பட்டது.

கால்டுவெல்லின் ஆராய்ச்சிப் பணி, திராவிட மொழிகளுக்கு அறிவுபூர்வமான அடித்தளம் அமைத்துக் கொடுத்து, அதன் விளைவாக, ஓர் இனத்தையே அடையாளம் காண உதவியது.

A Comparative Study of the Dravidian or South Indian Family of Languages என்ற, 1856-ம் ஆண்டு பதிப்பிக்கப்பட்ட அவரது நூல், முக்கியமான ஐந்து தவிர, பிற ஏழு திராவிட மொழிகள் தத்தமக்கே உரிய இடத்தை வகிக்கின்றன என்றும் இந்த மொழிக் குடும்பத்தில், தமிழ்தான் பலவிதங்களில் அதன் பிரதிநிதியாக முதன் முதலில் உருவாகி வளர்ந்ததாக இருக்கக்கூடும் என்றும் கூறியது. இதற்குக் கிடைத்த வரவேற்பு, திராவிடர்களும் வட-மேற்கேயிருந்து வந்தவர்களே என்னும் கால்டுவெல்லின் அனுமானத்துக்கு கிடைக்கவில்லை. என்றாலும்கூட, திராவிட மொழிகளும் சமஸ்கிருதத்தில் இருந்து பிரிந்து வந்தவை என்ற கருத்துக்கு அவர் தெரிவித்த எதிர்ப்பு பரவலாகியது. திராவிட மொழிகளில், சமஸ்கிருதத்தின் தேவை இல்லாமலே தமிழ் தனித்து இருக்கமுடியும் என்பதில் அவர் திடமாக இருந்தார். சமஸ்கிருதத்தில் இருந்து பெறப்படும் சில வார்த்தைகள்கூட தத்துவம், அறிவியல், மதம் சார்ந்த சில கருத்துகளை வெளிப்படுத்த மட்டுமே உதவும் என்றார். 'உருவம்' என்பதற்கு தமிழில் இயற்கையான பதம் இல்லை என்றும், இது ஒன்றே உருவ வழிபாடு என்பது ஆரியர்கள் புகுத்திய கருத்து என்று தெளிவுபடுத்துகிறது என்றார்.

கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் ஆறு அல்லது ஏழு நூற்றாண்டுகளுக்கு முன்பு தமிழ் நாகரிகம் தோன்றியிருக்க வேண்டும் என்பது கால்டுவெல்லின் கணிப்பு. அவர் பார்வையில் தமிழர் இலக்கியங்கள் இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. "பாதுகாத்து வைத்துக்கொள்ளும் அளவுக்கு மிகச்சில பிராமணர்களே எழுதியிருக்கிறார்கள்" என்று அவர் குறிப்பிட்டது, பின்னர் வந்த பிராமணர் அல்லாத தலைவர்களுக்கு இனிப்பான செய்தியாக இருந்தது. இரண்டு கலாசாரங்கள், இருவேறு மொழிகள் எதிரெதிரே நின்றன. ஒன்று ஆரிய - பிராமணருடையது. இன்னொன்று திராவிட - பிராமணர் அல்லாதவருடையது (சூத்திரர்).

தமிழுக்கும் சமஸ்கிருதத்துக்கும் இடையே நிலவிய போட்டி குறித்து மற்றொரு கிறிஸ்துவ பாதிரியார் ஜி.யு.போப் (1820 - 1907), "சமஸ்கிருதத்துக்குப் போட்டியாக இருக்கிற தகுதி தொன்மையான தமிழ் மொழிக்கு மட்டுமே உள்ளது" என்றும், "இந்து மதத்தின் சைவ சித்தாந்தம்தான் விரிவானது, தாக்கம் ஏற்படுத்தக்கூடிய மிகுந்த மதிப்புள்ளது" என்றும் கூறுகிறார்.

இந்த நிலையில் ஆரியர்கள் தமிழர்களின் ஆதி மதத்தைக் கறைப்படுத்திவிட்டவர்கள் என்று சில ஆர்வலர்கள் குறை கூறினர். பிராமணீயத்தின் தலையீடு இல்லாமலே முக்தி பெறலாம் என்பதை சைவ சித்தாந்த பாரம்பரியம் முன்பே வலியுறுத்தியிருந்தது. சிவபெருமான் வெறும் அழிக்கும் கடவுள்

மட்டுமல்ல, ஒரு முழுமையான சக்தி படைத்தவர். பிராமணீய இந்து மதத்துக்கு, சைவ சித்தாந்த ஆதரவாளர்கள் சரியான எதிர்ச் சக்தியாக இயற்கையாகவே அமைந்தது நீதிக் கட்சியில் அவர்களை கொண்டுசேர்த்தது. அவர்கள் ஈ.வெ.ரா.வின் சுயமரியாதை இயக்கத்துக்கும், தேர்ந்தெடுத்த விஷயங்களில் ஆதரவு தந்து ஒத்துழைத்தார்கள்.

பழைய இலக்கியங்களின் கண்டுபிடிப்பு தமிழர் உயர்வு பற்றி மேன்மையையும், அறிவின் வீச்சையும் எடுத்துக்காட்ட உதவியது. உ.வே.சாமிநாத ஐயர் (1855 - 1942) தனியாரிடமிருந்த பழைய ஓலைச்சுவடிகளைத் தேடிக் கண்டுபிடித்துச் சேகரித்து, 19-ம் நூற்றாண்டின் இறுதியில் பதிப்பித்து, தமிழுக்கு மறுமலர்ச்சி ஊட்டினார். எட்டு சங்கப் படைப்புகளின் தொகுப்பையும், சிலப்பதிகாரத்தையும் 1905-ம் ஆண்டுக்குள் வெளிக் கொண்டுவந்து விட்டார்.

இவை கொடை, அறிவு, வீரம், கற்பு, போன்ற ஆரியருக்கு முந்தைய நாகரிகத்தை எடுத்துக் காட்டின. பண்டைய தமிழர்கள் ரோம், கிரேக்கம் மற்றும் சீனத்துடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். அரசியல் நிர்வாகம் கட்டுக்கோப்புடன் இருந்தது. கற்றோர் முக்கிய பதவிகளை வகிக்க, மன்னர்கள் அறிவுச் செல்வத்தைக் காப்பவர்களாகவும், அவர்களே கவிஞர்களாகவும் இருந்தனர். தமிழ் மன்னர்கள் மாண்பையும் வீரத்தையும் மதித்தனர்; வடக்கை வென்றனர். குறைகள் இருந்தாலும், சங்க காலம் - அக்கால பொருளாதார, அறிவு பண்பாட்டு செழுமையை வெளிச்சமிட்டுக் காண்பித்தது. சிலப்பதிகாரமும், அகநானூறும் புறநானூறும் அந்தக் காலத்தைப் படம்பிடித்துக் காண்பித்தன. போரில் வீர மரணம் அடைவது பெருமைக்குரியதாயிற்று. கற்புள்ள மகளிர் கடவுளாகப் போற்றப்பட்டனர். சிலப்பதிகாரம் இந்த அம்சங்களை எல்லாம் எடுத்துக்காட்டவே, அண்ணாவும் அவருடைய தம்பிகளும் சேரன் செங்குட்டுவனின் பண்பையும், வடக்குக்கு எதிரான வெற்றிகரமான் வடநாட்டுப் படையெடுப்புகளையும் தங்கள் பிரசாரத்துக்குப் பயன்படுத்திக் கொண்டனர்.

சென்னை பல்கலைக்கழகம் 1919-ல், பேராசிரியர் எஸ்.கிருஷ்ணசுவாமி ஐயங்கார் தலைமையில் தென்னிந்திய சரித்திரத்தைத் தொடராகப் பதிப்பித்தது. அவர் இந்திய சரித்திரம், தொல்பொருள் ஆய்வு ஆகிய துறைகளில் தேர்ந்தவராக இருந்ததால், கல்வெட்டுகளின் ஆதாரத்தோடு புதிய தகவல்களை வெளிப்படுத்தினார். சிந்து சமவெளி நாகரிகம் உண்மையில் திராவிடருடையது என்று 1924-ல் ஜான் மார்ஷல் கூறியபோது, திராவிடர் பெருமை மேலும் உயர்ந்தது. ரிக் வேதகாலத்து

மொழியில் சுமார் இருபது வார்த்தைகள் தமிழ் மூலம் உடையவை என்ற கண்டுபிடிப்பு இந்தக் கருத்துக்கு வலு சேர்த்தது. ஆனால், சிந்து சமவெளி நாகரிகம் திராவிட நாகரிகமே என்பதற்கு இறுதியான சான்று இல்லை. எண்பது ஆண்டுகளுக்குப் பிறகும் ரிக் வேதகால எழுத்துகள் இன்னும் படிக்கப்படவில்லை. மேலும், ஆரியர்கள் இங்கேயே இருந்தவர்களா அல்லது வெளியிலிருந்து வந்தவர்களா என்பது, இப்போது இருக்கிற ஆதாரங்களின்படி இன்னும் நிரூபணம் ஆகவில்லை.

ஆனாலும், அகழ்வும் அதையொட்டிய கருத்துகளும் தமிழ் அறிஞர்களுக்கு புது உத்வேகம் தந்தன. பேராசிரியர் பி.சுந்தரம் பிள்ளை (1855 -1897) திராவிட மொழிகளுக்கு தமிழ்தான் ஊற்று என்று அழுத்தமாகக் கூறினார். 'நீராருங் கடல் உடுத்த நில மடந்தை எழிலொழுகும், சீராரும் வதனமென திகழ் பரதக் கண்டமிதில், தெக்கணமும் அதில் சிறந்த திராவிட நல் திருநாடும், தக்கசிறு பிறைநுதலும் தரித்த நறும் திலகமுமே' எனப் பாடினார். சமஸ்கிருதம் வழக்கொழிந்து போய்விட்டாலும், தமிழ் அதன் மணத்தோடு எங்கும் உள்ளது என்றார்.

ஐம்பது ஆண்டுகளுக்குப் பின் 1971-ல் எழுத்தாளர் ஜெயகாந்தன், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை போன்றவர்களை 'முட்டாள்' என்றும், சமஸ்கிருதத்தின் மீது வெறுப்புக் காண்பிப்பது மட்டுமே ஒருவருக்குத் தமிழ்ப்பற்று இருப்பதை நிரூபித்துவிடாது என்றும், இது 'அடிமைப் புத்தி'யைக் காண்பிக்கும் என்றும், இன்னமும் சிலர் சமஸ்கிருதம் பிராமணரின் மொழி என்று புராதனக் கொள்கை கொண்டிருக்கிறார்கள் என்றும் விமரிசித்தார். (வட மொழியுடன் தமிழ் பிராமணர்கள் தங்களை அடையாளம் காட்டிக் கொண்டது; சமஸ்கிருதத்தைப் பற்றி பிராமணர் அல்லாத அறிஞர்கள் கொண்டிருந்த மாற்றுக் கருத்து - இரண்டையுமே ஜெயகாந்தன் கருத்து வெளிப்படுத்தியது.)

பிராமணர் அல்லாதவர்களின் அரசியல் விழிப்பு உணர்வு

தமிழ்ப் பெருமையும், திராவிடன் என்கிற அடையாளமும் பிராமணர் அல்லாதவரிடையே ஆங்கிலத்தின் பயன்களை அறியாமல் செய்துவிடவில்லை. தங்களின் அணுகுமுறையை மாற்றிக்கொண்டும், ஆங்கிலம் கற்றுத் தேறியும் பிராமணர்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு மிகவும் வேண்டியவர்களாகி இருந்தார்கள். அவர்கள் தொடர்ந்து கல்வியிலும், அரசுப் பதவிகளிலும் கண்ட முன்னேற்றம் பிறருக்கு வெறுப்பைத் தோற்றுவித்தது. 1895-லேயே வெளியிடப்பட்ட இரண்டு துண்டுப் பிரசுரங்கள் பிராமணரின் ஆக்கிரமிப்பைக் குறை கூறி, எல்லா சாதியினருக்கும்

வாய்ப்பு கிடைக்கவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டியது. இந்தப் பிரசுரங்களின் தலைப்பே இதைத் தெளிவாகச் சொன்னது. ஒன்று, 'இந்திய அரசுப் பணி சேவையும், பிராமணர் அல்லாதவர்களும்; இன்னொன்று, 'பிராமணர் அல்லாதாரின் குறைகளைத் தீர்க்கும் வழி வகைகள்'.

பிராமணர் அல்லாத இரண்டு வழக்கறிஞர்கள், பி.சுப்ரமணியமும், எம்.புருஷோத்தம் நாயுடுவும் 1909-ல் பிராமணர் அல்லாதாரிடையே கல்வியறிவு பெருக மதராஸ் பிராமணர் அல்லாதவர் சங்கத்தை துவக்கினர். இவ்வளவு விரைவாகத் துவக்கியும் அல்லது அதன் காரணமாகவோ என்னவோ, செல்வாக்குள்ள பிராமணர் அல்லாதாரின் ஆதரவு கிடைக்காமல், சங்கம் வளர்ச்சி பெறாமல் போயிற்று. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, மெட்ராஸ் யுனைடெட் லீக் தொடங்கப்பட்டது. பின்னர், மெட்ராஸ் திராவிடர் சங்கம் பிராமணர் அல்லாத அரசு ஊழியர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கும் முன்னால் 1892-ல், திராவிடர் என்ற சொல்லை, தங்கள் ஆதி திராவிடர் ஜன சபை என்ற அமைப்புக்கு ஆதி திராவிடர் பயன்படுத்தினர். அப்போது இளம் மருத்துவக் கல்லூரி மாணவராக இருந்த சி.நடேச முதலியார் (பின்னர் டாக்டர் சி.நடேசன்) நீதிக் கட்சி தோன்றக் காரணமாக இருந்தார். பிறகு, மெட்ராஸ் திராவிடியன் அசோசியேஷனுக்குச் செயலராக ஆனார். இதன் உறுப்பினர்கள் பிராமணர் அல்லாத மாணவர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தினர். புதிய பட்டதாரிகளைப் பாராட்டி கௌரவித்தனர். பிராமணர் அல்லாத மாணவர்களுக்கு என முதன்முதலாக 'திராவிடியன் ஹோம்' என்ற விடுதி நடத்தினர். சாதித் தடைகளால் இந்த மாணவர்கள் தங்க இடம் கிடைக்காமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்தனர்.

பிராமணர் அல்லாதவருக்கு கற்பனையாக எழுதப்பட்ட 21 கடிதங்கள் 1915-ல் ஒரு புத்தகமாக வெளிவந்தது. பிராமணர் அல்லாதார் தங்கள் நிலையை சிந்தித்துப் பார்க்க உதவியது. அதோடு, இதைத் தொகுத்தவர் 'திராவிட மகாசபை' என்ற அமைப்பை ஓர் அரசியல் அமைப்பாக, கிராமங்களிலும் நகரங்களிலும் நிறுவ வேண்டும் என்றார். அதே வருடம் சி.சங்கரன் நாயர் தாம் எழுதிய 'திராவிடர் சிறப்புகள்' (திராவிடியன் வொர்த்தீஸ்) என்ற நூலை வெளியிட்டார். இதற்கெல்லாம் நல்ல வரவேற்புக் கிடைத்தது.

ஆனால், இந்த உணர்வுகள் தெளிவான அரசியல் விழிப்பு உணர்ச்சியாக உருப்பெற நாளானது. இந்தியாவின் பிற பகுதிகளில் இருந்தது போலவே, சென்னை மாகாணத்தில்

பிராமணருக்கும், பிராமணர் அல்லாதாருக்கும் தங்கள் அரசியல் எண்ணங்களுக்கு வடிகாலாக காங்கிரஸ் கட்சி ஒன்றே இருந்தது. ஆனால், அதன் தலைவர்களில் எஸ்.சீனிவாச ஐயங்கார், ஏ.ரங்கசாமி ஐயங்கார், ராஜாஜி மற்றும் எஸ்.சத்தியமூர்த்தி போன்ற பிராமணர்களே முக்கியமானவர்களாக இருந்தார்கள். அதற்கென்று, பிராமணர் அல்லாத தலைவர்களும் காங்கிரஸில் இல்லாமல் போய்விடவில்லை. உண்மையில், ஈ.வெ.ரா. 1924-ல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்தார். பின்னர், அதன் பொருளாளராகவும் செயலராகவும் இருந்தார். பின்னர் தலையெடுத்த பிராமணர் அல்லாத தலைவர்கள், அரசியலில் ஆதிக்கம் செலுத்த இயலாதவர்களாக இருந்ததால், காங்கிரஸிலிருந்து வெளியேறினர்.

இந்தியச் சட்டசபைக்கு 1916-ல் நடைபெற்ற தேர்தல்களில் இரண்டு பிராமணர் அல்லாத தலைவர்களுமே - பனகல் ராஜாவும், டாக்டர் டி.எம்.நாயரும் - காங்கிரஸில் இருந்த பிராமணத் தலைவர்களிடம் தோற்றனர். ஜவுளித் தொழில் பிரமுகரான தியாகராஜ செட்டியாரும் ஒரு பிராமணரிடம் தோற்றார். மூத்த திராவிட இயக்கத் தலைவர் நாவலர் நெடுஞ்செழியன், "பார்ப்பனர் தலைவர்களில் ஒருவரான டி.பிரகாசம் அவர்களே, 'பார்ப்பனர்களின் சுயநலப் போக்கும், அவர்கள் அரசு அதிகாரத்தில் கொண்டிருந்த ஆதிக்கமும் சேர்ந்துதான், பார்ப்பனரல்லாத பெருந்தலைவர்களின் தோல்விக்குக் காரணமாக அமைந்தன' என்று வெளிப்படையாகவே ஒப்புக்கொண்டார்" என சொன்னதாகக் கூறியிருக்கிறார். அவர்கள் கட்சியைவிட்டு விரைவிலேயே வெளியேறினர். திரு.வி.க. மற்றும் வரதராஜுலு நாயுடு ஆகிய பிராமணர் அல்லாத காங்கிரஸ் தலைவர்களும் காங்கிரஸிலேயே நீடித்தாலும், மகிழ்ச்சியோடு இருக்கவில்லை. வரதராஜுலு நாயுடு பின்னர் இந்து மகா சபையில் இணைந்தார். தேசியவாதியான திரு.வி.க. தனி திராவிடநாடு எண்ணத்துக்குக் கிட்டத்தட்ட மறைமுக ஆதரவே அளித்தார் எனலாம்.

திருவண்ணாமலை காங்கிரஸ் மாநாட்டில், தம் தலைமை உரையில், 1924-ல், ஈ.வெ.ரா. பிராமணர் அல்லாதவர்கள் காங்கிரஸில் அவதிப்படுவதை, "தென் இந்திய, பிராமணர் அல்லாத காங்கிரஸ் தலைவர்களின் சங்கடங்கள் பொது மக்களுக்குத் தெரியாது. மகாத்மா காந்திக்கும் தெரியாது. மகாத்மா காந்திக்கு மட்டும் இந்த உண்மை தெரிந்துபோனால், அவர் மனம் வருந்தி, எத்தனை நாளைக்கு உண்ணாவிரதம் இருந்து அந்தப் பாவத்துக்கு பரிகாரம் செய்வாரோ, தெரியாது!" என்று ஈ.வெ.ரா. தெளிவாக எடுத்துக் கூறினார்.

காங்கிரஸில் இருந்த பிராமணர் அல்லாதாருக்கு இன்னுமொரு வடிவிலும் சிக்கல் எழுந்தது. தியாசஃபிகல் சொஸைட்டியின் தலைமையகம் சென்னைக்கு (1882) மாற்றலானபோது, அன்னிபெசன்ட் சென்னையைத் தம் இருப்பிடமாகத் தேர்ந்தெடுத்தார் (1907). அவருடைய காங்கிரஸ் தொடர்பு, ஹோம்ரூல் இயக்க ஆதரவு, ஆரிய மதிப்பீடுகள், சாதிப் பாகுபாடுகளைச் சாடாமல் இருத்தல் ஆகியவை டாக்டர் டி.எம்.நாயர் போன்ற பிராமணர் அல்லாத தலைவர்கள் அன்னிபெசன்ட்டை விமரிசிக்கவும் காங்கிரஸைவிட்டு விலகவும் செய்தன. "பெசன்ட் அம்மையார் ஸ்மார்த்த வைதீக இந்து தர்மத்தையும், பிராமண அரசியல்வாதிகளிடையே தெய்வீக தேசியவாதத்தையும் மதராஸில் பரப்பக் காரணமாக இருந்தார்" என்கிறார் பேராசிரியர் நம்பி ஆரூரான். பிராமண காங்கிரஸ் தலைவர்களுடன் சேர்ந்துகொண்டு பெசன்ட் அம்மையார் 'மெட்ராஸ் பிரசிடென்சி அசோசியேஷயன்' அமைக்கக் காரணமாக இருந்தார். மதராஸ் மாகாண காங்கிரஸுக்குள் ஈ.வெ.ரா., திரு.வி.க. போன்ற பிராமணர் அல்லாத தலைவர்களை உறுப்பினராகக் கொண்டதுதான் இந்த உள் அமைப்பு. நீதிக் கட்சி பிராமணர் அல்லாதார் மீது கொண்டிருந்த ஏகபோக செல்வாக்கைக் குலைக்கவே இந்த 'கறுங்காலி' அமைப்பு என்று நாவலர் நெடுஞ்செழியன் பின்னர் குற்றம் சாட்டினார். (ஈ.வெ.ரா.தான் மெட்ராஸ் பிரசிடென்சி அசோசியேஷன் துணைத் தலைவராக இருந்தார்.)

தங்கள் தேர்தல் தோல்வி சோகத்தில் மூழ்கியிருந்த இரண்டு பிராமணர் அல்லாத பிரமுகர்களான டாக்டர் நாயரையும் தியாகராஜ செட்டியாரையும் டாக்டர் சி.நடேசன் ஒன்று சேர்க்க முயன்றார். ஆனால், இருவருக்குமே பிராமணர் அல்லாதவர் சமூகத்தில் குறிப்பிடத்தக்க அக்கறை எதுவும் இருந்திருக்கவில்லை. உண்மையில், தியாகராஜ செட்டியார் பிராமணீய இந்து மதத்தைப் பெரிதும் மதித்தார் என்றால், டாக்டர் நாயரோ 1912-ல் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் முன்பு சாட்சியம் அளித்தபோது, பிராமணர் அல்லாதவர் பற்றிய பிரச்னையையே குறிப்பிடவில்லை.

வணிகத்துறையில் பரந்த அனுபவம் பெற்றிருந்த தியாகராஜ செட்டியாரிடம் 2000 நெசவாளர்கள் வேலை பார்த்தனர். செட்டியார் ஒரு கொடையாளி. ஒரு கூட்டத்தில் டாக்டர் நாயர் பேசும்போது, (1917) செட்டியார் பொதுநல சேவையில் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவிட்டிருப்பதாகக் கூறினார். பிரிட்டிஷ் கல்வி கற்றிருந்த டாக்டரான நாயர் துடிப்புமிக்கவர். ஆவேசமாகப் பேசுபவர். நிறையப் படித்தவர். இயக்கத்தின்

முன்னணி வீரராக இருந்தவர். 1919-ல் மரணமடையும் வரை, இயக்கத்துக்கு வழிகாட்டியாகவும், கொள்கை வகுப்பவராகவும் இருந்திருக்கிறார். ஒருமுறை, நகரில் உள்ள கோயில் ஒன்றுக்கு இலவசமாகத் தண்ணீர் கொடுக்கவேண்டியிருந்த பிரச்னையில் டாக்டர் நாயர் அதை எதிர்க்க, ஆத்திக செட்டியாரோ அதை ஆதரித்தார். மெட்ராஸ் திராவிட சங்கத்தில் அவர்களுக்குப் பொதுவாக இருந்த மரியாதையும், பொது வாழ்க்கை அவா காரணமாகவே, டாக்டர் நடேசனின் வேண்டுகோளின்படி, தங்கள் வேற்றுமைகளை ஒதுக்கி ஒன்றுபட்டார்கள்.

புகழ்பெற்ற சென்னை வழக்கறிஞர் எத்திராஜ் முதலியாரின் வீட்டில் தியாகராஜ செட்டியாரும், டாக்டர் நாயரும், டாக்டர் நடேசனும் பிற பிராமணர் அல்லாத பிரமுகர்களும் சந்தித்தார்கள். இந்தக் குழு, 'சௌத் இண்டியன் லிபரல் ஃபெடரேஷன்' என்ற அமைப்பை உருவாக்கி, ஜஸ்டிஸ் என்ற ஆங்கில நாளிதழையும் 'திராவிடன்' என்ற தமிழ் தினப் பத்திரிகையையும், 'ஆந்திர பிரகாச' என்ற தெலுங்கு தினசரியையும் வெளியிடத் தீர்மானித்தது. 'ஜஸ்டிஸ்' ஆங்கில நாளிதழின் வெற்றியும், கட்சியின் மேட்டுக்குடி நிலையும், 'சௌத் இண்டியன் லிபரல் ஃபெடரேஷன்' அமைப்பு ஜஸ்டிஸ் பார்ட்டி என்ற நீதிக் கட்சியாகப் பரவலாக அறியப்பட உதவியது.

டிசம்பர் 1916-ல், இப்போது மிகவும் பிரபலமாகிவிட்ட பிராமணர் அல்லாதவர் அறிக்கையை, தியாகராஜ செட்டியார் வெளியிட்டார். "நான்கு கோடியே பதினைந்து லட்சம் மக்கள் உள்ள இந்த மாகாணத்தில், நான்கு கோடிப் பேருக்குக் குறையாமல், பிராமணர் அல்லாதவரே இருக்கின்றனர். அதிகபட்ச வரி செலுத்துவோரும் இவர்கள்தான். ஆனால், மதராஸ் அரசியலில் அவர்களுக்கு உரிய பங்கை அவர்கள் எடுத்துக்கொள்ளவில்லை." பிராமணர்கள் அரசுப் பணிகளை அப்படியே ஆக்கிரமித்துகொண்டு விடுவதோடு, அதைச் சார்ந்த அமைப்புகளிலும் இடம் பிடித்துவிடுவார்கள் என்றது அந்த அறிக்கை. அவர்களின் கல்வியறிவுதான் அவர்கள் அப்படி அதிக இடம்பிடிக்கக் காரணம் என்றும் சரியாகக் கணித்தது. அவர்களின் உயர்ந்த சாதி என்ற அந்தஸ்தே இதற்கு வழிவகுத்தது என்பதுடன், கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையேயான இடத்தையும் அவர்களுக்கு அளித்தது என்றது.

செட்டி, கோமுட்டி, முதலியார், நாயுடு மற்றும் நாயர் போன்ற பிராமணர் அல்லாதவர்கள் முன்னேறி வருகிறார்கள் என்றாலும், இந்தப் போட்டியில் தாமதமாக வந்து சேர்ந்தவர்களே அவர்கள் என்றது இந்த அறிக்கை.

அரசியல் அதிகாரமும் செல்வாக்கும் அடிக்கடி பிராமணர் கைகளிலேயே இருந்ததால், மாகாணத்தின் அற வளர்ச்சிக்கும் பொருளாதார முன்னேற்றத்துக்கும் பங்களிப்புச் செய்த பிராமணர் அல்லாதவர்கள், தத்தளித்துக் கொண்டு பின்னணியில் இருப்பதை அறிக்கை சுட்டிக்காட்டியது.

தேர்வுகளில் வெற்றிபெறுவது முக்கியமானதுதான் என்பதை ஏற்றுக்கொண்ட அறிக்கை, கிட்டத்தட்ட எல்லா அரசுப் பதவிகளிலும் பிராமணர்கள் அமர்வதைக் கேள்வி கேட்டது. கூடவே பிரிட்டிஷ் ஆட்சிக்குத் தங்கள் பணிவையும், விசுவாசத்தையும் அறிக்கை தெரிவித்துக்கொண்டது. சரித்திரம் முழுக்க, இந்த நிலை நீதிக் கட்சியைக் குடைந்துகொண்டே இருக்கும். சாதி - இனப் பிரிவுகள், சுயாட்சி அதிகாரம் பெறுமுன் மறைய வேண்டும் என்பது அறிக்கையின் எதிர்பார்ப்பாக இருந்தது. இதுவே, பின்னர் ஈ.வெ.ரா-வும் அண்ணாவும் மேற்கொண்ட பிரசாரத்திலும் இடம்பெற்றது.

முஸ்லிம்களையும், ஆதி திராவிடர்களையும் ஈர்ப்பதில் கட்சிக்குக் கலவையான முடிவே கிடைத்தது. மேலும், பிராமணர் ஆதிக்கத்தை மையமாக வைத்து, வெவ்வேறு நிலைகளிலும் இருந்த பிராமணர் அல்லாதவரை ஒன்றாக இணைப்பது முடியாததாகவே இருந்தது. கட்சியின் முக்கியக் குறிக்கோள், அரசமைப்புகளில் பிராமணர் அல்லாதவருக்கு விகிதாசார இடம் கிடைக்க வேண்டும் என்பதுதான். பிராமணர் அல்லாதவர்கள், அப்படிப்பட்டோரை ஒதுக்கிவிட்டு, பிராமணருக்கு வாக்களிப்பதைக் கட்சி விரும்பவில்லை. அதனால், பிராமணர் அல்லாதவர் தேர்தலில் நிற்கும்போது, பிராமணர் அல்லாதார் அத்தனைபேரும் அவர்களுக்கு வாக்களிக்க ஏதுவாக பிராமணர் அல்லாதாருக்கான தனியிடங்களை வேண்டியது.

மதம் சார்ந்த விஷயங்களில் பிராமணர்களுக்கு இருந்த உயர்ந்த இடமே, அவர்கள் லௌகீக விஷயங்களில் வகித்த இடத்துக்கும் எதிர்ப்பை உருவாக்கி இருந்தது. இது பின்னர் அரசியலிலும் எதிரொலித்தது. அறிக்கை வெளியிடப்பட்ட அடுத்த ஆண்டிலேயே, அதுவரை வைதீகமாக இருந்த தியாகராஜ செட்டியார்கூட, மதராஸில் நடைபெற்ற முதல் பிராமணர் அல்லாதார் கூட்டமைப்பில் பேசும்போது, "பிறப்பில் மனிதருக்கிடையே வேறுபாடு கிடையாது என்பதை திராவிட நாகரிகம் உணர்ந்திருக்கிறது" என்று அறிவித்தார். மதம் சம்பந்தமான விஷயங்களில் அதிக ஆர்வம் இல்லாத டாக்டர் நாயர்கூட, தன் உரையில் புதிய கருத்தோட்டத்தை வெளியிட்டார். தன் பேச்சால் கூட்டத்தினரை உணர்ச்சியின் உச்சகட்டத்துக்குக் கொண்டு

செல்லும் டாக்டர், ஆதி திராவிடத் தலைவர் இரட்டைமலை சீனிவாசனும் தியாகராஜ செட்டியாரும் பங்கு கொண்ட கூட்டத்தில் இப்படிப் பேசினார்:

> இந்த நாட்டில் இரு இனங்கள் உண்டு. ஒன்று, இந்த நாட்டின் சொந்தக்காரர்கள் இனமான நம் திராவிடர் இனம். மற்றொன்று, நாம் அசட்டையாகத் தூங்கிக்கொண்டு இருக்கும்போது, வீட்டுக்குள் நுழைந்துவிடும் திருடன் போன்ற ஆரியர் இனம்.
>
> வட இந்திய மலைப் பகுதிகளை இமயமலை, இந்துகுஷ் மலை ஆகியவற்றின் இடை இடையே உள்ள கைபர் கணவாய், போலன் கணவாய் போன்ற கணவாய்களின் வழியாகத் தங்கள் ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு சாரை சாரையாக உள்நுழைந்து வழிநெடுக மேய்த்துக்கொண்டே வந்து ஆங்காங்கு பரவி முகாம் அடித்துக் கொண்டவர்கள்தாம் இந்த ஆரியப் பரதேசிகள்!

தியாகராஜ செட்டியாரும் டாக்டர் நாயரும், தங்களை அறியாமலேயே, வருங்கால திராவிட இயக்கம் ஒன்றுக்கு உறுதியான அடித்தளம் இட்டிருந்தனர். தமிழரின் அரசியல் சமூக வாழ்க்கையில் நிதர்சனமாகப் பின்பற்றப்படப் போகிற புதிய கொள்கை ஒன்றை வெளிப்படுத்திய வகையில் இரண்டு சொற்பொழிவுகளும் குறிப்பிடத் தகுந்தவை. இதுவரை கையாளப்படாத வேறுபட்ட அரசியல் உத்தியை நீதிக் கட்சியினரே முதன் முதலாகக் கையாண்டிருந்தனர். அவர்களின் கௌரவம் அவதூறுக்குள்ளாகும் என அறிந்தே அவர்கள் அதைச் செய்தார்கள். அவர்களை சாதி வெறி பிடித்தவர்கள் என்றனர் சிலர். நீதிக் கட்சியினர் பலர் உயர்ந்த அந்தஸ்துடன், வசதியான வாழ்க்கை வாழ்பவர்கள். குறுகிய மனம் கொண்டவர்கள், சாதிப் பித்து பிடித்தவர்கள், சந்தர்ப்பவாதிகள் என்ற விமரிசனத்தை எல்லாம் அவர்கள் ஏற்க வேண்டிய கட்டாயம் ஏதும் அவர்களுக்கு இருக்கவில்லை. புகழும் பதவியும் காரணமாகவே பொது வாழ்வை, பிற தலைவர்கள் போல் ஏற்றுக்கொண்டவர்கள். எனினும், தங்கள் சமூகம் என்று எண்ணம் கொண்டு அவர்கள் தொண்டாற்ற வந்தனர் என்பதும் உண்மை. அவர்களின் அரசியல் வாதம், அப்போது நிகழ்ந்துகொண்டிருந்த சமுதாய மாற்றத்தை பிரதிபலித்தது.

அதேபோல, பிரிட்டிஷாருடனான அவர்கள் தோழமைக்குப் பதவிகளோ, பட்டங்களோ மட்டுமே காரணமல்ல. போராட்ட அரசியலையும் அதன் விளைவுகளையும் அனுபவிப்பதைவிட,

ஆதரவு தேடிக்கொள்ளும் அணுகுமுறையே நல்ல உத்தியாக இந்தத் தலைவர்களுக்குத் தோன்றியது. இந்த நாற்காலி அரசியல் தலைவர்கள், தங்கள் நிலைக்கு ஏற்ற உத்தியை வகுத்தார்கள். உள்ளுக்குள் இத்தனை முரண்பாடுகள் இருந்தாலும், கட்சி சமூக நீதிப் போராட்டத்தை முன்நடத்திச் சென்றது. கல்வி, சமூக, பொருளாதார, அரசியல், நுண்கலை, கலாசாரப் பிரிவுகளில் பிராமணர் அல்லாதவர்கள் உயர்வு பெறவும், பிராமணர் அல்லாதவர் ஒற்றுமைக்கும், பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் சுயாட்சி பெறவும், செயல்படவும், சாதியை ஒழிக்கவும், கட்சியின் திட்டம் செயல்பட்டது.

பிரிட்டிஷாரே, இந்தியர்களிடம் சிறிது சிறிதாக அதிகாரத்தை வழங்கி வந்தனர். சுதந்திரக் கோரிக்கை வலுவடைந்திருந்த சமயத்தில், சுதேசிய வழிமுறைகள் தவிர்க்க முடியாதவையாகவும், விரைந்து செயல்படுத்தப்பட வேண்டியவையாகவும் இருந்தன. மான்டெகு - செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தங்கள் காரணமாக, பதவிகளில் பாதியை இந்தியருக்குக் கொடுக்கவேண்டியிருந்த சூழ்நிலையில், நீதிக் கட்சிக்கு ஒரு பெரும் வாய்ப்பு வந்தது. ஆனால், கட்சியின் கோரிக்கையான சாதிவாரி இடங்களை பிரிட்டிஷாரிடமிருந்து பெறுவது பெரிய போராட்டமாகவே இருந்தது.

நீதிக் கட்சியின் வகுப்புவாரி பிரதிநிதித்துவ கோரிக்கையை, இந்திய விவகாரச் செயலர் மான்டெகு முதலில் நிராகரித்தார். ஆனால், உடல்நலம் குன்றியிருந்த நிலையிலும் டாக்டர் நாயர் பிரிட்டனுக்கே சென்று போராட்டத்தை நடத்தினார். முஸ்லிம்களுக்கு, 1909-ல் செய்த சீர்திருத்தப்படி இடம் ஒதுக்கியதுபோல, பிராமணர் அல்லாதவருக்கும் தனித்தொகுதிகளை ஒதுக்கக் கோரினார். அந்தத் தொகுதிகளில், பிராமணர் அல்லாதவர்கள், பிராமணர் அல்லாத வேட்பாளருக்கே வாக்களிப்பர். 1919 ஜூலை 17 அன்று டாக்டர் நாயர் மறைந்தார். சேலத்தில் நடந்த அஞ்சலி நிகழ்ச்சியில், "பிராமணர் அல்லாதார் இயக்க நோக்கங்கள் பலவற்றில் எனக்கு அனுதாபமுண்டு. சமூக அமைப்பில் பல அநீதிகள் இருந்தன. அவற்றை ஒழிக்க அரசியல் தலைவர்கள் முயலவில்லை. குறைப்பட்டோரை அலட்சியம் செய்தனர். அரசியல் மூலமின்றி, சமூகக் குறைபாடுகளை ஒழிக்க முடியாதெனக் கண்ட டாக்டர் நாயர், பிராமணர் அல்லாதார் இயக்கத்தைத் தோற்றுவித்தார். ஆகவே, இந்த இயக்கத்தினால், அநேக நன்மைகள் உண்டாகி இருப்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்" என்று ராஜாஜி பேசினார். இறுதியில் நீதிக் கட்சிக்கு இருபத்தெட்டு இடங்கள் ஒதுக்கப் பட்டன. கட்சி எதிர்பார்த்ததைவிட இது குறைவே. ஆனால்,

1920-ல் நடைபெற்ற தேர்தலை காங்கிரஸ் புறக்கணித்ததால் நீதிக் கட்சிக்குத் தேர்தலில் கூடுதலாகவே இடங்கள் கிடைத்தன. அன்று வாக்காளர்களின் எண்ணிக்கை வெறும் மூன்றே சதவிகிதம். பிராமணர் அல்லாத நில உடைமையாளர்களும், படித்த மத்திய தர வகுப்பினருமே வாக்காளர்களாக இருந்தனர்.

ஆட்சியில் நீதிக் கட்சி

மதராஸ் மாகாணம் என்பது தெலுங்கு, தமிழ், மலையாள, கன்னட மொழிகள் பேசப்படும் பகுதியாக இருந்தும், முதல் நீதிக் கட்சி மந்திரி சபையில் தமிழர் யாரும் இருக்கவில்லை. எனவே, நீதிக் கட்சியிலிருந்த தமிழரிடையே இது மனக்கசப்பை உண்டாக்கிற்று.

பல மாதங்களுக்குப் பிறகு, நீதிக் கட்சியின் முதல் பிரதமரான அ.சுப்பராயலு ரெட்டியார் உடல் நிலை காரணமாக ராஜினாமா செய்தபோது, ராமராயனிங்கர் அந்தப் பதவியை ஏற்றார். அந்த ஆட்சியில் பெண்களுக்கு வாக்குரிமைக்கு வழி கிடைத்தது. கோயில்களும் மடாலயங்களும் நிர்வாக சீரமைப்புப் பெற்றன. பிராமணர்கள் என்னவோ இந்தச் சீரமைப்பில் அவநம்பிக்கையே கொண்டிருந்தனர். அரசுப் பதவிகளில் பிராமணர் அல்லாதவருக்காக வகுப்புவாரி பிரதிநிதித்துவமும் அறிமுகப்படுத்தப்பட்டது. வேண்டியவருக்குச் சலுகை காட்டுவதைத் தவிர்க்க, பிரிட்டிஷார் கொண்டுவந்ததுதான் இது. 1800-ம் வருட மத்தியில் வெளியிடப்பட்ட வருவாய் வாரியத்தின் நிலையான உத்தரவு 128(2), வருவாய்த் துறையில் பணி செய்யும் பிராமணர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த முயன்றது. அப்படியிருந்தும், தெலுங்கு நியோகி பிராமணர் ஒருவரின் 49 உறவினர்களும், அவரோடு தொடர்பு உடையவர்களும் நெல்லூர் வருவாய்த்துறையில் பணியாற்றிக்கொண்டு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. நிர்வாகத்தால் நிலை ஆணையைச் சரியாகச் செயல்படுத்த முடியவில்லை என்பதை இது காண்பித்தது.

நீதிக் கட்சி 1921-ல் ஓர் அரசாணை மூலம் இத்தகைய நிலை ஆணைக் கொள்கையை எல்லாத் துறைகளுக்கும் அமல்படுத்தியது. இர்ஷிக் விவரிப்பதுபோல, 'இதுதான் கட்சியின் முதல் வெற்றி'. அடுத்த வருடம், பிராமணர் அல்லாதவருக்கும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கும், பணிக்கு சேர்ப்பதிலும், உத்தியோக உயர்விலும் வகுப்புவாரி பிரதிநிதித்துவ அடிப்படையில் இடம் கொடுத்துச் செயல்பட்டது இரண்டாவது வெற்றி.

ராமராயனிங்கரின் அமைச்சரவையில் பிரச்னைகள் இல்லாமல் இல்லை; ஒரு தொழிலாளர் தகராறில், சாதி இந்துக்கள் -

ஆதிதிராவிடர் உறவு நலிந்தது. வேடிக்கை என்னவென்றால், அவருடைய ஆட்சியில்தான், 'ஆதி திராவிடர்' என்ற பதம் அங்கீகரிக்கப்பட்டு, 'பஞ்சமர்' போன்ற பதங்கள் விலக்கப்பட்டன. தமிழர் - தெலுங்கர் என்ற பிளவு கட்சியை பதம்பார்த்தது. அதை வெகு நாட்களுக்கு மறைத்து வைக்கவும் முடியவில்லை. தியாகராஜ செட்டியார் 1925-ல் காலமானார். கட்சிக்கும் ராமராயனிங்கரே தலைமை ஏற்றுக்கொண்டார். பின்னர், 1926-ல் நடைபெற்ற தேர்தலில் நீதிக் கட்சி ஆரம்பத்தில் இருந்த எண்ணிக்கையில் மூன்றில் இரு பங்கு இடங்களை இழந்தது.

முந்தைய தேர்தல்கள் போலன்றி, காங்கிரஸுக்குள் ஒரு பிரிவான சுயராஜ்ய கட்சி எப்படியாவது பிரிட்டிஷ் ஆட்சியைத் தகர்க்க வேண்டும் என்ற நோக்குடன் போட்டியிட்டு, சட்டசபையில் தனிப்பெரும் கட்சியாக ஆயிற்று. ஆனால், காங்கிரஸின் கொள்கைப்படி சுயராஜ்யக் கட்சியினர் ஆட்சி அமைக்க முன்வரவில்லை. நீதிக் கட்சியாலும், ஆட்சி அமைக்க இயலவில்லை. நீதிக் கட்சியிலிருந்து டாக்டர் சுப்பராயன் விலகி, சுயராஜ்யக் கட்சி ஆதரவுடன், தனி அமைச்சரவையை உருவாக்கினார். சுப்பராயன் வெளியேறியதை சகித்துக்கொண்டு ராமராயனிங்கர், சுப்பராயனின் தனி அமைச்சரவைக்கு ஆதரவு தெரிவித்தார். இது நீதிக் கட்சியின் குறிக்கோளை அடைய உதவும் வழி என்று கருதினார்.

முத்தையா முதலியாரும், எம்.ஆர்.சேதுரத்தின ஐயரும் சுயராஜ்யக் கட்சியின் மீது அவநம்பிக்கையுற்று, அதிலிருந்து விலகி, அமைச்சரவையில் சேர்ந்தனர். முத்தையா முதலியார் சேர்ந்தது, பிராமணர் அல்லாதவருக்கு மிகுந்த பயனளித்தது. ஜமீன்தாரும் வழக்கறிஞருமான, முத்தையா முதலியார் வகுப்புவாரி ஆணைகளைச் செயல்படுத்த, புதிய இட ஒதுக்கீட்டுக் கொள்கையைக் கண்டுபிடித்தார். இதன்படி, பிராமணர் அல்லாதவருக்கு 44 சதவிகிதமும், முஸ்லிம்கள், பிராமணர், கிறிஸ்துவர் மற்றும் ஆங்கிலோ - இந்தியருக்குத் தலா 16 சதவிகிதமும், ஆதி திராவிடர்களுக்கு 8 சதவிகிதமும் இடங்கள் ஒதுக்கப்பட்டன. ஆக, பன்னிரண்டு இடங்களில், பிராமணர் அல்லாதவருக்கு 5 இடங்களும் பிராமணர், ஆங்கிலோ - இந்தியர், முஸ்லிம்களுக்கு தலா 2 இடங்களும், ஆதி திராவிடர் மற்றும் பிறருக்கு 1 இடமும் கொடுக்கப்பட்டது. இதுவே இன்றைய இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு அடித்தளம். 'தி இந்து', 'சுதேசமித்திரன்' இரண்டுமே பிராமணர்கள் நடத்திய நாளிதழ்கள். இவை இரண்டும் இதை எதிர்த்துத் தலையங்கம் எழுதின.

ஈ.வெ.ரா., 'முத்தையாவின் ஆணை ஒரு சமரச முயற்சி' (compromise) என்றாலும் ஏற்றுக்கொண்டார். தன் 'குடியரசு' நாளிதழில் 1928 நவம்பர் 11, அன்று எழுதிய தலையங்கத்தில், 'அமைச்சர் முத்தையா முதலி வாழ்க' என்று தலைப்பிட்டு எழுதினார். குழந்தைகள் பலருக்கு முத்தையா என்றும் பெயர் சூட்டி மகிழ்ந்தார்.

எதார்த்தமாக செயல்பட்ட ராமராயனிங்கர் 1928-ல் காலமாகவே, சர். ராமகிருஷ்ண ரங்கராவ் என்ற பொப்பிலி ராஜா, கட்சியின் தலைவரானார். காங்கிரஸ் 1930-ல் தேர்தலைப் புறக்கணிக்கவே, முனுசாமி நாயுடு நீதிக் கட்சி ஆட்சிக்குத் தலைமை வகித்தார். பின்னர் பொப்பிலி ராஜா அந்தப் பதவிக்கு வந்தார். இவர் தலைமையில்தான் 1934 தேர்தலில், கட்சி படுதோல்வி அடைந்தது. தேசியப் பார்வை இல்லாததுதான் தோல்விக்குக் காரணம் என கூறப்பட்டது.

கட்சித் தலைவர்களில் ஒருவரான ஏ.பி.பாத்ரோ, ஈ.வெ.ரா-வின் சுயமரியாதைக்காரர்களுடன் சேர்ந்துகொண்டு, அகலக்கால் வைத்ததுதான் காரணம் என்று நம்பினார். அவர்களை 'சாகசம் புரிவோர்' என்றார். குறைந்து வரும் செல்வாக்கைச் சரிசெய்ய, கட்சி அவர்களைத்தான் உதவிக்கு நாடியிருந்தது. ஆனால், கட்சியின் ஆரம்பக்கட்ட உறுப்பினர்களாக துடிதுடிப்பும் கவர்ச்சியும் போய்விட்டிருந்தது. கருத்து மோதல்கள் உச்சக்கட்டத்தை எட்டியிருந்தன. எத்தைத் தின்றால் பித்தம் தெளியும் என்ற நிலையில் இருந்தது நீதிக் கட்சி. அதனால், 1934-ல் ஒரு பல்டி அடித்து, பிராமணர்களை ஏற்றுக்கொண்டு, தன் அடையாளத்தையே மாற்றிக்கொள்ள முனைந்தது. ஈ.வெ.ரா-வின் ஈரோடு திட்டத்தையும் அங்கீகரித்தது; அத்தியாவசிய சேவைகளை தேசியமயமாக்குவது, எல்லோருக்கும் ஆயுள்காப்பீடு, மதுவிலக்கு, கட்டாய ஆரம்பக் கல்வி, தீண்டாமை ஒழிப்பு, எல்லா வகுப்பினருக்குமான பிரதிநிதித்துவம் மற்றும் அதிகாரப் பகிர்ந்தளிப்பு ஆகியவையே 'ஈரோடு திட்ட'த்தின் அம்சங்கள்.

சுயமரியாதை இயக்கத்தின் அரசியல் பிரிவே சமத்துவ நீதிக் கட்சி. இதற்காக ஈ.வெ.ரா உருவாக்கியதே ஈரோடு திட்டம். இதில் புரட்சிகரமான சோஷலிஸ அம்சங்கள் இருந்தன. எனினும் நீதிக் கட்சியினர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக, ஈ.வெ.ரா. இதை வெகுவாகச் சுருக்கினார். பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, 1944-ல் நீதிக் கட்சியின் தலைவராக அப்போது மாறியிருந்த ஈ.வெ.ரா., தன் நிலையில் உறுதியாக இருந்து, யாருக்கும் விட்டுக்கொடுக்காமல் கட்சியை திராவிடர் கழகம் என மாற்றி, நீதிக் கட்சியின் பழைமைவாதிகள் வெளியேறுமாறு செய்தார்.

3

அண்ணா, நீதிக் கட்சி, பெரியார்



அண்ணாவுக்கு நீதிக் கட்சியுடனான நெருக்கம் 1930-ன் மத்தியில் உண்டாயிற்று. நீதிக் கட்சியின் செல்வாக்கு சரிந்துகொண்டிருந்த சமயம் அது. தொழிலாளர் தலைவராக இருந்த சென்னை மேயர் சி.பாசுதேவின் ஆங்கிலச் சொற்பொழிவுகளை தமிழில் மொழிபெயர்க்கத் தொடங்கியிருந்தார் அண்ணா. பொதுக் கூட்டங்களில் நீதிக் கட்சித் தலைவர்கள் பலர் ஆங்கிலத்திலேயே பேசிவந்தனர். அவர்களுக்கு அண்ணா மொழிபெயர்ப்பாளரானார். பாசுதேவ் நடத்திய வாரப் பத்திரிகை 'பாலபாரதி'யில் தொழிலாளர் நலன் தொடர்பான கட்டுரைகளை எழுதிவந்தார் அண்ணா. காஞ்சி மணிமொழியாரின் 'நவயுகம்' இதழின் ஆசிரியராகவும் பணியாற்றினார். அண்ணாவின் எழுத்துத் திறன் மேம்பட இந்த அனுபவங்கள் உதவின. பேராசிரியர் வரதராஜனின் சிபாரிசு காரணமாக, அப்போது நீதிக் கட்சியின் மதராஸ் மாகாண பிரதமராக இருந்த பொப்பிலி அரசரின் தினசரியிலும்,

அண்ணா துணை ஆசிரியராகப் பணியாற்றியதாக, பச்சையப்பன் கல்லூரி பேராசிரியர் சி.டி.ராஜேஸ்வரன் பதிவு செய்திருக்கிறார். பின்னர் 'சண்டே அப்சர்வர்' இதழில் பி.பாலசுப்பிரமணியம், 'ஜஸ்டிஸ்' இதழின் டி.வி.நாதன் ஆகியோருடன் அண்ணாவுக்கு நட்பு ஏற்பட்டது. இந்தத் தலைவர்களின் பழக்கமே அண்ணாவை, பிராமணர் அல்லாதார் கட்சியில் கொண்டுபோய்ச் சேர்த்தது.

"என்னை நீதிக் கட்சிக்கு 'இழுத்த' பெருமை பி.பாலசுப்பிரமணியத்தையே சேரும்" என்று அண்ணாவே கூறியிருக்கிறார். 'உங்கள் வளர்ப்பு மகன், பொதுவாழ்வுக்கென பிறந்தவன் என தொத்தாவுக்கு, பி.பாலசுப்பிரமணியம் நம்பிக்கை தந்தார்' என்று க.திருநாவுக்கரசு குறிப்பிட்டிருக்கிறார்.

தாம் நீதிக் கட்சிக்கு அறிமுகப்படுத்திய அந்த இளைஞர், இத்தனை விரைவாகக் கட்சியையே முடிவுக்குக் கொண்டுவந்து, ஈ.வெ.ரா.வுடன் இணைந்து, பத்தே வருடங்களில் திராவிடர் கழகமாக அதை மாற்றுவார் என பி.பாலசுப்பிரமணியம் எண்ணியிருக்கமாட்டார். சரிந்துகொண்டிருந்த சமயத்திலும் நீதிக் கட்சி மேட்டுக்குடியினரின் தனிக் கட்சியாக இயங்கிவந்ததை உணர்ந்திருந்த அண்ணா, இந்தக் குறைபாடுகளை அறிந்தே இருந்தார். முப்பது வயதைக்கூட எட்டாத அண்ணா என்ற சாமானியன் அந்தக் கட்சியில் இடம்பிடிக்க, அவருடைய அசாத்திய திறமை காரணமாக இருந்தது. நீதிக் கட்சியின் சரிவைச் சரிக்கட்ட, பின்னர் அதை பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தோடு இணைத்தது வரலாற்றுச் சாதனையாக மாறியது.

அப்போது மாகாண அரசியலில் பெரும் பங்கு வகித்த காங்கிரஸ், அண்ணாவை ஈர்க்கத் தவறியது என்பது குறிப்பிடத்தக்கது. பிரிட்டிஷாருக்கு எதிரான 'வெள்ளையனே வெளியேறு' போராட்டம் 1942-ல் நடந்தபோது, தான் அதில் பங்கு கொள்ளாமல் போனது குறித்து அண்ணா பின்னர் வருந்தியிருக்கிறார். தன் தலைவர்போல் தன்னுடைய இடைப்பட்ட சாதி அந்தஸ்து காரணமாக, அண்ணா சாதிப் பாகுபாடு, பாரபட்சம் எதையும் அனுபவிக்கவில்லை. எனவே, அவரது அரசியல் சார்பை, தமிழகத்தில் அப்போது நிலவிய பிராமணர் அல்லாதார் உள்ளுணர்வின் ஆரம்ப நிலைக்கே தொடர்புப்படுத்த வேண்டும். அப்போதைய பிற்படுத்தப்பட்ட வகுப்பு கல்வி உதவித் தொகை (ஸ்காலர்ஷிப்) பெற்றிருந்த அண்ணாவுக்கு அன்றைய அரசியல் - சமூக சூழல் ஒரே கட்சியைத்தான் அடையாளம் காட்டியது. சரிவைச் சந்தித்துக் கொண்டிருந்தாலும், நீதிக் கட்சி ஒன்றே பிராமணர் அல்லாதாரின் அரசியல் முகமாக அப்போது நாட்டில்

இருந்தது. அதை அழிவிலிருந்து எப்படியும் காப்பாற்றிவிடலாம் என அண்ணா கனவு கண்டார். நீதிக் கட்சி, திராவிடர் கழகமாக மாறுவதற்கு ஓர் ஆண்டுக்கு முன்னால், 1943-ல், நாவலர் நெடுஞ்செழியனிடமும், பேராசிரியர் அன்பழகனிடமும் பாதி வேடிக்கையாக அண்ணா இப்படிச் சொன்னார்: "அந்தக் கட்சியில் நான் ஏன் இருக்கிறேன் என்றால், அந்தப் பணக்காரக் கட்சியை, ஜனநாயக, சமதர்மக் கட்சியாக மாற்ற வேண்டும் என்பதற்காகத்தான்!"

அதிகாரத்தைப் பற்றியும், வேலை வாய்ப்புகளைப் பற்றியும் நீதிக் கட்சி கவலை செலுத்தியது. ஆனால், சமுதாய மாற்ற சிந்தனை அற்றிருந்த நீதிக் கட்சி ஏற்கெனவே அண்ணாவுக்கு ஏமாற்றம் அளித்திருந்தது. "அதிகாரம் என்ற (மாரீச) மானைப் பிடிப்பதிலேயே அவர்கள் சக்தியை எல்லாம் செலவழித்தார்கள். எனவே, வெவ்வேறு ஊர்களில் அவர்கள் முக்கியமானவர்களைச் சந்தித்தபோது, தேர்தலைப் பற்றிப் பேசி, அரசாங்கப் பணிகளில் பிராமணரின் ஆதிக்கத்தை ஒழிப்பதை வலியுறுத்தினார்களே தவிர, அவர்கள் சமூகத்தில் புரையோடியிருந்த ஆரியத்தை அகற்றி திராவிட உணர்வைப் புகுத்தாமல் போனார்கள். பிராமணர்களின் அரசியல் ஆதிக்கம் அபாயகரமானது; ஆனால், பிராமண சமுதாய ஆதிக்கம் அப்படியல்ல என்று தலைவர்கள் வெளிப்படையாகப் பேசினார்கள். அரசியலும்கூட அவர்களில் சிலருக்கு பொழுதுபோக்காக இருந்தது" என்று பின்னர் அண்ணா எழுதினார்.

கடப்பை மாநாட்டில் நடந்ததை அண்ணா சொல்கிறார்:

> நான் மாநாட்டில் பேசினேன், திலகர் நிதி மோசடி குறித்து நான்தான் சொன்னேனே, 'அரும்பு மீசை' என்று அதற்கேற்ற வகையில், ஆங்கிலத்தில்! பெருந்தலைவர்கள் வழக்கப்படி கைக்கடிகாரத்தை அடிக்கடி பார்த்துக்கொண்டனர் - முகம் சுளித்தபடி அல்ல; ஆங்கிலத்துக்கு மதிப்பளிக்க வேண்டுமல்லவா, அதனால் கேட்டுக் கொண்டிருந்தனர்.
>
> ஒரு மணி நேரம் - ஆத்திரம் தீரப் பேசி முடித்தேன். அங்கே கூடியிருந்தவர்கள் அத்தனைபேரும் என் எதிரிகள் போலவும், அவர்கள் யாவரும் திலகர் நிதி மோசடியே நடைபெறவில்லை என்று என்னிடம் வாதாட கச்சை கட்டிக்கொண்டு நிற்பது போலவும் எண்ணிக்கொண்டு பேசுகிறேன் - பழுப்பேறாத மிளகாய்: அப்போது நான்.

தேனீர் விருந்துக்காகக் கலைந்து சென்றோம். நான் கற்பனைக் காற்றில் மிதக்கிறேன். இனி பரவாயில்லை. திலகர் நிதி மோசடி பற்றி நாடே சீறி எழும் என்று எண்ணியபடி... ஒரு தலைவர் - என் நன்மதிப்பைப் பெற்றவர் - முதுகில் என்னைத் தட்டிக் கொடுத்தபடி தனியே அழைத்துச் சென்று, 'அண்ணாதுரை, இதென்ன ஏதேதோ பேசிவிட்டாயே! ஆங்கில நடை அழகை நான் ஒப்புக்கொள்ள முடியும். ஆனால், நீ பேசிய அண்டப்புளுகை எப்படி ஏற்றுக்கொள்வேன்? இப்படி எதற்காகப் பேசினாய்?' என்று கேட்டார்.

'அதென்ன பெரியவரே! இதெல்லாம் தெரியாது என்கிறீரே! இது குறித்து, நம் 'ஜஸ்டிஸ்' பத்திரிகையில் பத்துக் கட்டுரைகள் வெளிவந்தனவே' என்றேன். அமைதியாக அந்த அருந்தலைவர் சொன்னார்: 'நான் 'ஜஸ்டிஸ்' படிப்பதில்லை.' எதற்குக் கூறுகிறேன் என்றால், ஒரு கட்சியின் முக்கியஸ்தராக அதன் நிர்வாகக் குழுவிலே இடம் பெற்றவருக்கு இந்த அளவுக்குத்தான் 'அக்கறை' இருந்தது.

பொழுதுபோக்கவும், சமூக அந்தஸ்துக்குமே நீதிக் கட்சியினர் இருந்ததால் அந்தக் கட்சியின் ஓர் அம்சக் குறிக்கோளான தேர்தலில் வெற்றி என்பதும் மாரீச மானாக ஆயிற்று. நீதிக் கட்சியில் அண்ணாவின் முதல் தேர்தல் அனுபவமே அப்படியொன்றும் எளிதாக இருக்கவில்லை. முதலில், மேட்டுக்குடித் தலைவர்கள் அவரை வேட்பாளராக ஆக்கக்கூட தயாராக இருக்கவில்லை. ஆனால், அண்ணா மீது ஒரு பிடிப்புக் கொண்டிருந்த குமாரராஜா முத்தையா செட்டியாரின் தலையீட்டால், மாநகராட்சி தேர்தலில் பெத்துநாயக்கன் பேட்டையில் நிற்க சீட்டு கொடுக்கப்பட்டது. இதற்கிடையே, முக்கிய காங்கிரஸ் தலைவர்களான காமராஜரின் குரு எஸ்.சத்தியமூர்த்தி, திரு.வி.க., வி.சி.கோபாலரத்னம் மற்றும் சீனிவாசராவ் ஆகியோர் அண்ணாவை எதிர்த்த காங்கிரஸ் வேட்பாளருக்கு ஆதரவு தேடினர். பிரசாரத்தின்போது ஓர் ஆதிதிராவிடரின் வீட்டில் அண்ணா உணவு உட்கொண்டு, காங்கிரஸ் தலைவர் எவரும் அப்படி சாப்பிடுவார்களா என்று சவால் விடுத்தார். சில நாட்களுக்குப் பிறகு, சைவ உணவு மட்டுமே சாப்பிடும் சீனிவாசராவ் அந்தச் சவாலை ஏற்றபோது வகையாக மாட்டிக்கொண்டார். அவருக்கு மீன் குழம்பு பரிமாறப்பட, தர்மசங்கடத்தில் சிக்கிக்கொண்ட சீனிவாசராவ் நிலைமையை விளக்கிச் சொல்லி, பின்னர் சைவ உணவு பரிமாறப்பட்டது. பிரசாரத்தின்போது, இருபத்தாறு வயதே

ஆன அண்ணா, மாநகராட்சி கோயில்களில் அலங்கார விளக்குகள் ஒளிர, குடிசைப்பகுதிகளில் விளக்கே இல்லாத அவல நிலையைக் குறைகூறினார். காங்கிரஸ் வேட்பாளர் எம்.பாலசுப்பிரமணியம், அண்ணா வெற்றி பெற்றால் கோயில் விளக்குகளை எல்லாம் அகற்றிவிடுவார் என்று துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டு விநியோகித்தார். அண்ணா அந்தத் தேர்தலில் தோற்றுப் போனார்!

தோல்வி ஒரு பக்கம் இருந்தாலும், தான் பெத்துநாயக்கன் பேட்டையில் வசிக்க நேர்ந்ததை அண்ணா ரசித்தார். பொடிக்கடை சின்னக்கண்ணு, நாட்டு மருந்து கடை கணேசன், இயக்கத் தொண்டர் ரங்கநாதன் ஆகியோர் அவர் சிநேகிதர்கள். இவர்களைவிட எளிய நண்பர்களை அண்ணா பெற்றிருக்க முடியாது. பார்க்கப்போனால், பெரியாருடன் 1947-ல் தனக்கிருந்த சிக்கலான உறவை விளக்க அண்ணா கூறிய உருவகக் கதை ஒன்றுக்கு, சின்னக்கண்ணுதான் தூண்டுதலாக இருந்திருப்பார் எனத் தெரிகிறது.

பெத்துநாயக்கன் பேட்டை அரசியலில் மரியாதையையும், பெருந்தன்மையையும் கற்றுக்கொடுத்தது. அண்ணா, பிறகு இதை நினைவுகூர்ந்திருக்கிறார். மத்திய சட்டசபைக்கு 1938-ல் ஏ.ராமசாமி முதலியார் போட்டியிட்டபோது, அண்ணா அவருக்கு ஆதரவாக பிரசாரம் செய்தார். முதலியாரை எதிர்த்தவர், பேச்சாற்றல் மிக்க சத்தியமூர்த்தி. இருவருமே சிறந்த பேச்சாளர்கள் என்பதால் போட்டி அவர்கள் இருவருக்கும் இடையேதான். ராமசாமி முதலியாருடன் வீடுவீடாகச் சென்று வோட்டுச் சேகரிக்க அண்ணாவும் போனார். அப்போது சத்தியமூர்த்தியும் ராமசாமி முதலியாரும் நேருக்கு நேர் சந்திக்க நேர்ந்தது. 'எப்படி இருக்கிறது உங்கள் தொகுதி' என்று சத்தியமூர்த்தி உற்சாகமாகக் கேட்க, 'அப்படி ஒன்றும் பிரகாசமாக இல்லை!' என்று ராமசாமி முதலியார் பதில் கூற, உடனே சத்தியமூர்த்தி, 'இல்லை, அப்படி இல்லை. உங்கள் வாய்ப்பு பிரகாசமாகவே இருக்கிறது!' என்றார். இந்த நிகழ்ச்சி அண்ணாவின் மனதில் ஆழமாகப் பதிந்துபோயிற்று. எதிர்க்கட்சியினரிடத்திலும், மரியாதையையும் பெருந்தன்மையையும் நட்புக் கலாசாரத்தையும் கடைப்பிடிக்க இந்த நிகழ்ச்சி காரணமாக இருந்தது.

நீதிக் கட்சி, அண்ணாவை ராஜாக்களுடனும், ஜமீன்தார்களுடனும் நெருங்கிப் பழக வாய்ப்பளித்தது. ஆனாலும் அவர் எந்த வெளிப்பூச்சுமில்லாத, தீரமிக்க ஈ.வெ.ரா. ஒருவரையே தன் தலைவராக ஏற்றார். ஈ.வெ.ரா.வே அண்ணாவைக் கண்டறிந்து,

உலகுக்கு வெளிக்காட்டியவர். அரசியலில் தந்தை - மகன் உறவை எடுத்துக்காட்டிய இருவரின் வரலாற்றுச் சிறப்புமிக்க சந்திப்பு, 1935-ம் ஆண்டு மே 20 - 21 தேதிகளில் திருப்பூரில் நடைபெற்ற செங்குந்தர் சாதி மாநாட்டில் நிகழ்ந்தது. சென்னை மண்ணடியில் உள்ள சுயமரியாதை இளைஞர் சங்கத்தில் பேச்சாளராக அண்ணா இருந்தபோதே, ஈ.வெ.ரா.வின் கொள்கைகளை அறிந்திருந்தார். ஆனால், ஈ.வெ.ரா.வின் 'பச்சை'யான பேச்சு அண்ணாவை சிரமப்படுத்தியிருந்தது. இருந்தும், ஈ.வெ.ரா.வைப் பற்றிய தனது தயக்கம் அவருடைய செய்தியில் பொதிந்திருந்த உண்மை காரணமாக மறைந்துபோய்விட்டதாக அண்ணா ஒப்புக் கொண்டிருக்கிறார். 'பெரியாரின் ஈர்ப்பு, இளைஞர்களுக்கு அபின் போன்றது' என்று அண்ணா கண்டுகொண்டார். "பெரியாரின் குடையும் பார்வையில், அவருடைய கரடுமுரடான மொழியில் அவருடைய வெளிப்படையான பேச்சில், அந்த அபின் பொதிந்திருந்தது. வாழ்க்கையின் வசந்தத்தில் இருந்த எண்ணற்ற இளைய தலைமுறையினரைப் போராட்டக்களத்துக்கு இழுத்துவந்தது ஈ.வெ.ரா.வின் இந்த சக்தி." அவர்களில் அண்ணாவே பெரியாரின் தலை மாணாக்கரானார்.

திருப்பூரில் அண்ணா இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்தாலும், மாநாட்டு முடிவில்தான் அண்ணாவை ஈ.வெ.ரா. சந்தித்தார். பதினான்கு வருடங்களுக்குப் பிறகு தி.மு.க.வைத் தோற்றுவித்த கூட்டத்தில் அண்ணா நினைவுகூரும் அளவுக்கு அந்தச் சந்திப்பு அவர் மனத்தில் வெகு ஆழமாகப் பதிந்து போயிருந்தது. பெரியார், அண்ணாவை நோக்கி, 'என்ன செய்து கொண்டிருக்கிறாய்?' என்று கேட்க, 'படித்துக் கொண்டிருக்கிறேன். தேர்வு எழுத வேண்டும்!' என்றார் அண்ணா. 'வேலையில் சேருவீர்களா?' என்று பெரியார் கேட்க, 'மாட்டேன்!' என்று சொல்லிவிட்டார் அண்ணா. 'பொதுவாழ்வில் ஈடுபட எண்ணியிருக்கிறேன்!' என்றார். பின்னர், பெரியார் தனக்குத் தலைவராகவும் தாம் அவருடைய சுவீகார புத்திரனாகவும் ஆகிவிட்டதாக அண்ணா கூறியிருக்கிறார்.

1931 முதலே நீதிக் கட்சி அரசியலுக்கு அறிமுகமாகியிருந்த அண்ணா, அதன் மேட்டுக்குடித் தலைவர்கள் யாரையும் தலைவராகக் கொள்ளவில்லை. பொறுமை மிக்க நுண்ணறிவாளரான அவர், ஈ.வெ.ரா.-வுக்கு மட்டுமே தன்னை தொண்டராக்கிக் கொண்டார். இத்தனைக்கும் ஈ.வெ.ரா.-வுக்கு ஆட்சி அரசியலில் அவ்வளவாக அக்கறை இருக்கவில்லை. தமது சீர்த்திருத்த சுயமரியாதை இயக்கமே அவரது மூச்சாக இருந்தது. இளைஞரான அண்ணாவின் மனதில் சமூக சீர்திருத்தம் முக்கிய இடத்தைப்

பிடித்திருந்ததால் தன்னுடைய எதிர்காலத்தையும், தமிழர்களின் எதிர்காலத்தையும் உருவாக்கப்போகிற தலைவர் என தான் கணித்திருந்த பெரியாருடனே சேர்ந்து பணியாற்றுவது என தீர்மானித்தார்.

ஈரோடு வெங்கடப்ப ராமசாமி

யார் இந்த ஈ.வெ.ரா.? ஈரோடு வெங்கடப்ப ராமசாமி, மக்களின் கைகளில் பூட்டப்பட்ட விலங்குகளை அகற்றி, அவர்களின் சுய மதிப்பின் மீதும், தன் மீதும் நம்பிக்கை எழச் செய்தவர். உண்மையில் அவர் பணியே கடவுள் நம்பிக்கைக்கு நேரெதிராக இருந்தது. 'கடவுளை மற, மனிதனை நினை' என பிரசாரம் செய்தார். கடவுள், மத நம்பிக்கை, பிறப்பு காரணமான பிரிவுகள் மனிதர்களிடையே சமத்துவம் இல்லாமல் செய்துவிட்டால், பகுத்தறிவு, அறிவியல் மற்றும் கண்டுபிடிப்புகளே அவர்களுக்கு மீட்சியைத் தரும் என்றார். மனிதகுல விடுதலைக்காக ஈ.வெ.ரா.-வை என்றென்றும் வருங்கால சமுதாயம் நினைவில் வைத்திருக்கும்.

திராவிட அமைப்புகளை சாடிவரும் தீவிர விமரிசகரான 'சோ' எஸ்.ராமசாமிகூட, 'ஈ.வெ.ரா.வைத் தமிழர்கள் தம்மவராக ஏற்றுக்கொண்டுள்ளனர்' என்றும், 'பொதுவாழ்வில் இப்படி ஒரு நிஜ மனிதரைக் காணமுடியாது' என்றும் கூறியிருக்கிறார். 'அவரிடம் போலித்தனம் கிடையாது. தன்னுடைய அரசியல் கொள்கைகளை அப்பட்டமாக வெளியிட்டார். ஆகா, எப்படிப்பட்ட கொள்கைகள் அவை!' என்கிறார் சோ.

சும்மா நாற்காலியில் அமர்ந்தபடி தத்துவங்களை உதிர்த்துக் கொண்டிராமல், புரட்சியாளரான ஈ.வெ.ரா. தன் போராட்டத்தை வீதிகளுக்கு எடுத்துச் சென்றார். ஆண்டொன்றுக்கு சுமார் 250 பொதுக்கூட்டங்களில் பங்குகொண்டு தம் எதிர்ப்பை வெளிப்படுத்தினார். இறுதிவரை ஓய்வின்றி, அவர் பேனா எழுதிக்கொண்டே இருந்தது. அவருடைய எதிர்ப்பை எதுவும் தடுத்து நிறுத்தமுடியவில்லை. உடல்நிலை மோசமாகி, முடிவை நெருங்கிக்கொண்டு இருந்தபோதும், தம் சக்கர நாற்காலியில் அமர்ந்துகொண்டு சுயமரியாதை ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறது என்றும், அந்தஸ்து என்பது பிறப்பால் வருவதல்ல என்றும் பிரசாரம் செய்தார் ஈ.வெ.ரா.

சமத்துவத்தை நாடிய ஈ.வெ.ரா., சம்பிரதாயங்களுக்கும் சடங்குகளுக்கும் சவால் விடுத்தார். பிறப்பால் அந்தஸ்து அளிக்கப் படுவதற்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையில், மனுஸ்மிருதியையும், பெரியபுராணத்தையும் தீயிட்டுக் கொளுத்தினார். தமிழ்க் காப்பியமான 'சிலப்பதிகாரம்' மூடநம்பிக்கைகளைப் பரப்புகிறது,

பெண்களின் அடிமைத்தனத்தை உயர்வாகப் பேசுகிறது என்றார். விக்கிரகங்களுக்கு எந்த சான்னியத்தியமும் (கடவுள் தன்மையும்) கிடையாது என்று உணர்த்த, பிள்ளையாரை போட்டு உடைத்தார். 1928-ல் காந்தியை 'மகாத்மா' என்று இனி அழைக்கமாட்டேன் என்றார். தீண்டாமையை நிரந்தரமாக்கும் வகையில் காந்தியின் இந்து மத விளக்கங்கள் அமைந்திருப்பதை அதற்குக் காரணமாகச் சொன்னார். ஆதிதிராவிடர்களுக்குத் தனியே கோயில் என்ற காந்தியின் யோசனையை நிராகரித்தார். கலப்புத் திருமணம், உணவுப் பழக்கங்கள் ஒருவரது அந்தரங்கத்தைச் சார்ந்தவை. அவை சமூக சீர்த்திருத்தத்தின் கீழ் வராது என்ற காந்தியின் கருத்தையும் அவர் ஏற்கவில்லை. மதங்களை எதிர்த்தபோதும் தீண்டத்தகாதவர்கள் கோயிலுக்குள் நுழைய இயக்கம் நடத்தினார். 'இது அவர்களுடைய உரிமையை நிலைநாட்டத்தானே தவிர, உள்ளே இருக்கிற 'கல்லை' வணங்கவோ, பிற 'முட்டாள்கள்' போல பணத்தை வீணடிக்கவோ அல்ல' என்றார். அதேசமயம், கருவறைக்குள் யாரும் செல்லவும், எந்தச் சாதியினரும் பூசாரியாகலாம் என்றும் அவர் வாதாடினார்.

தீண்டாமையிலிருந்து விடுபட; மதமாற்றம் ஒருவழி என்றாலும், ஒரு பகுத்தறிவின்மையிலிருந்து மீண்டு இன்னொன்றில் சிக்கிக்கொள்வதும் ஒரு 'சாமி'க்குப் பதில் இன்னொரு 'சாமியை' ஏற்றுக்கொள்வதுமாக ஆகிவிடும் என்று ஆழமாக நம்பினார் பெரியார். அதனாலேயே, புத்த மதத்துக்கு மாறும்படி அம்பேத்கர் கேட்டுக் கொண்டும்கூட மறுத்துவிட்டார். இந்து மதத்துக்குள்ளேயே இருந்துகொண்டு அதை சீர்திருத்தக் கோரும் உரிமையை நான் இழந்துவிட விரும்பவில்லை என்றார். பிற மதங்கள் மீது அவரது தாக்குதல் குறைவாக அமைந்ததற்கும் இதுவே காரணம்.

மனிதகுல வேறுபாடுகளை களைவதே அவரது வாழ்க்கைத் தொண்டாக இருந்தது. கற்பு என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானது என ஈ.வெ.ரா. தன் பேச்சிலும் எழுத்திலும் வலியுறுத்தினார். பெண்கள் சுதந்திரமாக இருக்க வேண்டும்; அவர்கள் குழந்தைகள் பெற்றுக்கொள்ளக் கூடாது என்றார். அவர்களுக்கு பணியிடங்களில் 50 சதவிகிதம் இடஒதுக்கீடு செய்தல் வேண்டும் என்றார். 1926-ல் சுயமரியாதைத் திருமணங்களை அவர் தொடங்கியபோது பூஜாரிகளுக்கும், சடங்குகளுக்கும் விடுதலை கொடுத்தார். சுயமரியாதைத் திருமணங்கள் விவாகரத்து செய்யவும், சொத்துரிமையையும் அங்கீகரித்தன. இளமையிலேயே விதவையான தம் உறவுக்காரப் பெண்ணுக்கு 1909-ல் பல எதிர்ப்புகளையும் மீறி, மறுமணம் செய்துவைத்தார். திருமணம் என்பதே தாற்காலிகமானது என்றும், உண்மையான பெண்

விடுதலைக்கு திருமணம் என்ற அமைப்பு எதிராக இருப்பதால், அதற்கு முடிவுகட்ட வேண்டும் என்றார்.

சாதியை எதிர்த்து ஆரம்பத்திலேயே போராடிய ஈ.வெ.ரா., 1929-ல் தம் சாதிப் பட்டத்தை விட்டொழித்து, தங்கள் சாதியைக் குறிப்பதைக் கைவிட வேண்டும் என்று மக்களிடம் கேட்டுக்கொண்டார். தம்முடைய மாநாடுகளில் 'தீண்டத்தகாதவர்' சமைத்த உணவைப் பரிமாறச் செய்தார். தகுதி, திறமை என்று வாதாடி உயர் பதவிகளைப் பிடிப்பதை, படித்தவர்களின் 'சதி' என்று சாடினார். 1930-களில் எம்.சிங்காரவேலரின் தாக்கம் காரணமாக ஈ.வெ.ரா. மேற்கத்திய நாடுகளுக்கும், சோவியத் யூனியனுக்கும் நீண்ட பயணம் மேற்கொண்டார். அப்போது கிடைத்த அனுபவம் அவரை சோஷலிஸத்தின்பால் ஈர்த்தது. ஆனால், வெகு விரைவிலேயே தம் பழைய கொள்கைகளுக்குத் திரும்பி, சமூக அவமதிப்பை எதிர்த்துப் போராடுவதுதான் பொருளாதார சமத்துவமின்மையை எதிர்ப்பதைக் காட்டிலும் முக்கியம் என்று தீர்மானித்தார். ஏனெனில் நம் நாட்டின் நிலைமை அப்படி என்றார். மற்ற நாடுகளில் வர்க்கம் முக்கிய பிரச்னையாக இருந்தது. இந்தியாவில் சாதி ஒரு தகர்க்கமுடியாத எஃகு கோட்டையாக இருந்தது.

ஈ.வெ.ரா.வின் கம்யூனிஸ்ட்டு சார்பு கொள்கை பிரிட்டிஷாருடன் அவரை மோதலில் தள்ளியது. ஆனால், ஈ.வெ.ரா. கெட்டிக்காரத்தனமாக சுதாரித்துக்கொண்டார். சுயமரியாதை இயக்கத்தைக் காப்பாற்றியாக வேண்டுமே! 'சுயமரியாதை இயக்கத்தை உடைத்தெறிந்துவிட்டு நான் வீரன் போல சிறைக்குச் செல்வதா? இந்த தேசத்தில் சாதிகளை வேரோடு பிடுங்கி எறிய சுயமரியாதை இயக்கத்தைவிட வேறு எந்த இயக்கம் இருக்கிறது என்பதை எண்ணிப் பாருங்கள்!' என்று தமது நிலையை விளக்கி எழுதினார். இப்படி ஈ.வெ.ரா. சாமர்த்தியமாகப் பின்வாங்கியது, அவரிடமிருந்து ப.ஜீவானந்தம் பிரிய காரணமாயிற்று. சிங்காரவேலர் அவரைக் குறை கூறினார். என்றாலும், ஈ.வெ.ரா. அயர்ந்து போகவில்லை. தம் ஆளுமையைப் பயன்படுத்தி, சமூகநீதி என்கிற தன் குறிக்கோளை அடைய முதலில் கம்யூனிஸ்ட்டுகளையும், பின்னர் காமராஜரையும் ஆதரித்தார். ஆனால், ஆட்சி அதிகாரத்தை முற்றிலுமாகத் தவிர்த்தார். 1940 மற்றும் 1942-ம் ஆண்டுகளில் நீதிக் கட்சி ஆட்சியமைக்க வாய்ப்பு வந்தபோதும் அதை நிராகரித்தார். சமூக அநீதியையும், சமத்துவம் இன்மையையும், அவமானத்தையும் நம்மால் சரிசெய்ய இயலுமா? என்று தம் செயலுக்கு நியாயம் கற்பித்தார். சமுதாய சுயமரியாதையை அடைந்துவிட்டால், அரசியல் சுயமரியாதை தானாகக் கிடைக்கும்

என்று பதில் அளித்தார். இப்படி ஆட்சி அதிகாரத்தின் மீது அவருக்கு இருந்த நம்பிக்கையின்மை, 1949-ல் அண்ணாவும் மற்றவர்களும், இதன் காரணமாக, அவரைக் கைகழுவிவிடக் காரணமாக அமைந்தது.

ஆனால், ஈ.வெ.ரா. தன் மனதில் உள்ளதை பயம் இன்றி வெளியிட்டார். தமிழர்களை 'பிற்போக்கானவர்கள்' என்றார். நேரத்தைக் கணக்கிடத் தெரியாமல் ஆங்கிலத்தில் இருந்தும் சமஸ்கிருதத்தில் இருந்துமே நேரம் என்ற ஒன்றை அறிந்தனர் என்று வாதாடினார். தமிழை 'காட்டுமிராண்டி பாஷை' என்று இழித்துக் கூறி, அவரவர் தம் இல்லங்களில் மட்டும் தமிழைப் பயன்படுத்தும்படி கேட்டுக்கொண்டார். ஆங்கிலத்தில் மட்டுமே அறிவியல் முன்னேற்றம் காண வழி இருக்கிறது, வேறு எந்த இந்திய மொழிகளிலும் அதற்கு வாய்ப்பு கிடையாது என்ற தன் கருத்தில் உறுதியாக இருந்தார். அதேபோல, பிரிட்டிஷார் இருப்பது சமத்துவத்தை நிலைநிறுத்த உதவும் என்று கூறி, அவர்கள் இந்தியாவைவிட்டு அகன்ற தினம் 'துக்க நாள்' என வர்ணித்தார்.

மதத்தின் அடிப்படையை நிராகரித்த பெரியார், வழக்கில் இருக்கும் முறைகளில், நம்பிக்கைகளில் சமத்துவத்தை வேண்டினார். இந்த உத்தி உண்மையில் லட்சக்கணக்கானோரின் வேட்கையை முழுவதுமாக நிறைவு செய்கிற வகையில் அமைந்தது; தொன்றுதொட்டு இருந்துவந்த முறையில் அநீதி இருந்தபோதும், ஒரு சமத்துவ உணர்வுக்கான தாகத்தை அவர்களிடையே உண்டாக்கிற்று. ஆனால், அவருடைய நெடிய கனவான சமத்துவ சமுதாயத்தை அவரால் நனவாக்க இயலவில்லை. இதன் காரணமாக, 1950-ல், வேறு வழியின்றி வெறுத்துப்போன ஈ.வெ.ரா. தம்முடைய குறிக்கோளை அடைய பிராமணர்களை வெளியேற்ற வேண்டும் என வாதிட்டார். பிராமணர்களின் எதிரி என்று விமரிசகர்கள் அவரைத் தாக்கியதில் வியப்பேதும் இல்லை; வன்முறையைத் தூண்டும் வகையில் பேசினார் என ஒரு நீதிமன்றம் அவரை தண்டிக்கவும் செய்தது!

அவர் பிறந்து 130 வருடங்களுக்குப் பிறகும், அவருடைய கருத்துகள் புரட்சிகரமானவையாகவும், அவருடைய தீர்வுகள் அதீதமாகவும் காணப்படுகின்றன. இதற்கான வழிநடத்தலில் ஈ.வெ.ரா.வின் நேர்மையும், சமூக நீதி மற்றும் சீர்திருத்தத்துக்கு அவர் பட்ட பாடும் இணையற்றது.

கடவுள் மறுப்புக் கொள்கை கொண்ட பெரியார், பிறந்தது மத நம்பிக்கை உள்ள ஒரு சாதாரண குடும்பத்தில். பின்னர், பெரியாரின்

பெற்றோர் செல்வச் செழிப்பு அடைந்தனர். பலிஜா நாயுடு வகுப்பைச் சேர்ந்த அவர் குடும்பம், பெரும்பான்மை விவசாய சாதிகளைச் சேர்ந்த கம்மா, ரெட்டிக்கு இணையாகவும், பிராமணர்களுக்குக் கீழாகவும் சமூக அடுக்கில் தங்களைக் கருதியது. மத அவநம்பிக்கை ஈ.வெ.ரா.வுக்கு இளமையிலேயே வந்தது. அவருக்குப் பத்து வயதாக இருக்கும்போதே பள்ளிக்கூட படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. பெற்றோர் சொன்ன காரணம் அவர் 'லோலனாக' அலைந்து திரிகிறார் என்று! கீழ்ப்படியாத குணத்துக்காக, கால்நடைகளின் கால்களுக்கு இடையில் பூட்டப்படும் கட்டையால் அவர் கால்கள் கட்டப் பட்டன. தீண்டத்தகாத சமூகத்துச் சிறுவர்களுடன் சிநேகமாக இருந்ததற்காகவும், ஒதுக்கிவைக்கப்பட்ட குடும்பத்தாரிடமிருந்து உணவும் தண்ணீரும் உண்டார் என்பதற்காகவும் பெற்றோர் அவருக்கு இட்ட தண்டனை இது.

இளைஞர் ஈ.வெ.ரா.வை ஒத்துழையாமை இயக்கம் ஈர்த்தது. ஈரோடு நகராட்சித் தலைவர் பதவி உட்பட, தான் வகித்த பதவிகளை எல்லாம் உதறி எறிந்துவிட்டு, கதர் துணியைச் சுமந்து விற்றார். தம் தோட்டத்திலிருந்த தென்னை மரங்களை எல்லாம் வெட்டிச் சாய்த்து, கள்ளுக் கடைகள் முன் மறியல் செய்தார். 1924-ல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஆனார். அதே ஆண்டு அவருடைய தலைமையில் நடந்த வைக்கம் சத்தியாக்கிரகத்தின்போது, சாலைகளில் ஆதிதிராவிடர்கள் குவிந்தனர்.

1925-ல், சேரன்மாதேவியில் காங்கிரஸ் நிதி உதவியுடன் நடத்தப்பட்டு வந்த பள்ளிக்கூடம் ஒன்றில் மாணவர்களைப் பிரித்துவைத்து உணவு பரிமாறப்பட்டதை எதிர்த்தார். அந்தப் பள்ளியே மூடப்பட்டது. அப்படியும் அவர் நினைத்த அளவுக்கு சமூக நீதியை காங்கிரஸுக்குள் அவரால் சாதிக்க முடியவில்லை. ஆறு முறை, வகுப்புவாரி பிரதிநிதித்துவம் குறித்த தீர்மானத்தை அவர் கொண்டுவந்தும் தோல்வியே கண்டார். அதேவருடம் காங்கிரஸிலிருந்து விலகி, "பிராமணர் அல்லாதவரை காங்கிரஸ் பலம் பெறச் செய்ய இயலாது. இப்போதிலிருந்து காங்கிரஸை அழிப்பதே என் கடமை" என்று அறிவித்தார். அப்போது தொடங்கிய நீதிக் கட்சியுடனான தொடர்பு 1935-ல் நெருக்கமானது. வகுப்புவாரி பிரதிநிதித்துவச் சட்டம், கோயில் நுழைவு, இழிவான தேவதாசி முறை ஒழிப்பு ஆகியவை அவரை அந்தக் கட்சியில் கவர்ந்த அம்சங்களாக அமைந்தன. எனினும், கம்யூனிஸ்ட்டு தலைவர் பி.ராமமூர்த்தி, "நீதிக் கட்சியின் வகுப்புவாரி பிரதிநித்துவம் என்பது பிராமணர் அல்லாதாரின் வோட்டுகளைப் பெற உதித்த

பின்யோசனை" என்று சாடினார். தவிர, நீதிக் கட்சியின் மற்ற குறைகளையும் அவர் தனது நூலில் பட்டியலிட்டிருக்கிறார்.

பஞ்சகாலத்தில் விவசாயிகள் செலுத்த வேண்டிய தொகையைத் தாமதமாகக் கொடுக்கலாம் என்ற வேண்டுகோளை நீதிக் கட்சி ஏற்கத் தயங்கியதாகவும், இத்தனைக்கும் பெரும்பாலான விவசாயிகள் பிராமணர் அல்லாதாரே என்றும்; மேலும், நிலச் சொந்தக்காரர்களாக இருந்த நீதிக் கட்சி பிரமுகர்கள் கடன் நிவாரணச் சட்டத்தை எதிர்த்ததாகவும் ராமமூர்த்தி விமரிசித்து இருக்கிறார். நீதிக் கட்சியினர் Criminal Tribes Act என்று கள்ளர் மரபினரையும் பிறரையும் குற்றவாளி வகுப்பு என்றதை விலக்கிக்கொள்ள மறுத்ததை குறை கூறுகிறார். எனினும், கல்விக்கு முக்கியத்துவம் அளித்து, பல ஊர்களில் இலவச, கட்டாயக் கல்விக்கு நீதிக் கட்சி வசதி செய்ததை மறுப்பதற்கில்லை. சென்னை மாநகராட்சிப் பள்ளிகள் சிலவற்றில் மதிய உணவுத் திட்டத்தை தம் காலத்தில் அறிமுகப்படுத்தினார் தியாகராஜ செட்டியார். எனவே, மதிய உணவுத் திட்டத் தந்தை என்றே அவரை அழைக்கலாம்.

1935-ல், குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப மறுக்கும் பெற்றோருக்கு தண்டனை அளிப்பது என்ற சட்டத்தை, கட்சி நிறைவேற்றியது. 1922-ல் 7651 ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இருந்த நிலை மாறி, 1927-ல் 10,035-ஆக பள்ளிகளின் எண்ணிக்கை உயர்ந்தது. பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் தேர்வுக் கட்டணம் எதுவும் கட்டவேண்டாம் என்றும், வகுப்புக் கட்டணத்திலும் பாதி செலுத்தினால் போதும் என்றும் நீதிக் கட்சி சட்டம் கொண்டுவந்தது. 4,40,000 ஆதிதிராவிடர்களுக்கு 7,36,000 ஏக்கர் நிலம் நீதிக் கட்சி ஆட்சியில் பகிர்ந்து அளிக்கப்பட்டது. ஆதிதிராவிடர் என்ற பதத்தையும் சட்டமாக்கியது நீதிக் கட்சியே!

1938-ல், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் காரணமாக ஈ.வெ.ரா. சிறையில் இருந்தார். அப்போது அவரைத் தலைவராக நீதிக் கட்சி அறிவித்தது. இந்தி - எதிர்ப்பு தந்த அனுபவத்தில், 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று ஈ.வெ.ரா. அறைகூவல் விடுத்தார். வடக்கின் ஆரிய கலாசார, பொருளாதார, அரசியல் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்ட திராவிட நாடாக அது இருக்கும் என்றார். அவர் எண்ணிய ஒருங்கிணைந்த திராவிட தேசம் தமிழர்களை முன்னிறுத்தியதால் வடிவம் பெறாமலேயே போயிற்று. எனினும் அண்ணாவின் துணையுடன் ஈ.வெ.ரா. சாகப்பிழைக்க இருந்த நீதிக் கட்சியை துடிப்புமிக்க திராவிடர் கழகமாக 1944-ல் மாற்றினார்.

ஈ.வெ.ரா. என்ற தலைவர்

வேலை ஏதும் தேடாமல், ஈ.வெ.ரா.விடம் அண்ணா போய்ச் சேர்ந்தது குடும்பத்தினரைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. மூன்று அல்லது ஆறு மாதத்துக்கு ஒருமுறை அண்ணா காஞ்சிபுரம் செல்கையில், அவருடைய பாட்டி, ஈரோட்டிலிருக்கும் பிள்ளை பிடிக்கிற ஒருவர், தன் பேரப்பிள்ளையை எடுத்துக்கொண்டு போய்விட்டதாக தன் சிநேகிதிகளிடம் கூறி வருந்துவார். அண்ணாவைப் பொறுத்தவரை, ஈ.வெ.ரா.வின் ஒரே ஒரு பேச்சே பாட்டியை தனது பேரன் புத்திசாலித்தனமாகத்தான் தலைவரைத் தேர்வு செய்திருக்கிறார் என்று நம்பிக்கை கொள்ளச் செய்ததாம். காஞ்சிபுரத்தருகே ஹாஜ்சன் பேட்டையில் ஈ.வெ.ரா.வின் பேச்சைக் கேட்ட பாட்டி, அண்ணாவிடம், 'நீ ஈரோட்டிலேயே இரு!' என்று கூறினார்!

ஈ.வெ.ரா.வைத் தலைவராக ஏற்றுக்கொண்டாலும், 1937-ல்தான் முழுநேரமாக ஈரோட்டில் பெரியாரின் 'குடியரசு' இதழின் துணை ஆசிரியராகவும், நீதிக் கட்சியின் 'விடுதலை' நாளிதழின் துணை ஆசிரியராகவும் அண்ணா அறுபது ரூபாய் மாதச் சம்பளத்தில் சேர்ந்தார். சிக்கனக்காரரான பெரியார் அந்த 60 ரூபாயில் வீட்டு வாடகையைப் பிடித்துக்கொண்டுவிடுவார்! அந்தச் சமயத்தில், விஞ்ஞானி ஜி.டி.நாயுடு அண்ணாவுக்கு மாதம் ரூ.250 சம்பளமும், மற்ற வசதிகளும் அளிக்க முன்வந்தார். ஆனால் ஈ.வெ.ரா.வைத் தலைவராக்கிக் கொண்டுவிட்ட அண்ணா, அந்த வாய்ப்பை மறுத்துவிட்டார். விலை மதிப்பில்லா தலைமையல்லவா பெரியாரின் தலைமை.

அண்ணாவை வெகு விரைவிலேயே ஈ.வெ.ரா.வுக்குப் பிடித்துப் போய்விட்டது. எனவே, 1937-ல் இருபத்தெட்டு வயதே ஆகியிருந்த அண்ணாவிடம், நம்பிக்கை வைத்து துறையூரில் நடந்த சுயமரியாதை மாநாட்டுக்குத் தலைமை தாங்குமாறு ஈ.வெ.ரா. பணித்தார். ஐந்து நாட்களுக்கு முன்பாக இதை அறியவந்த அண்ணா, தன் உரையை எழுதித் தயாரிக்கத் தொடங்கினார். நாவலர் நெடுஞ்செழியன் அண்ணாவின் உரையின் தாக்கத்தை இப்படி விவரிக்கிறார்: "சென்னையிலிருந்து வந்த தோழர் அண்ணாதுரை என்ற இளைஞர் ஆற்றிய உரைதான் தலைசிறந்ததாக இருந்தது. குள்ளமான உருவம். எளிமையான தோற்றம். தோற்றத்தில் கவர்ச்சி இல்லை. ஆனால், அவர் பேசத் தொடங்கியவுடன் அவரிடம் காணப்பட்ட அவரது எடுப்பான குரல், அடுக்குச் சொற்கள், அழகிய தமிழ், எதுகையும் மோனையும், உவமையும் உருவகமும், அணி அழகும் பொருளழகும் கொண்ட சொல்லோட்டம்; ஓசை நயம்; அழுத்தமான கருத்துகள்;

ஆணித்தரமான வாதங்கள்; உறுதியான கொள்கைகள்; உயர்ந்த எண்ணங்கள்; கேலியும், கிண்டலும் கலந்த கூற்றுகள்; நகைச்சுவை ததும்பும் எடுத்துக்காட்டுகள்; பெரியாரின் தலைமையின் கீழ் ஒன்றுதிரள வேண்டிய பெரும்படையின் இன்றியமையாமை; பெறவேண்டிய வெற்றிகளின் தன்மைகள் ஆகியவை எங்களை இப்படி - அப்படி நகரவொட்டாதபடியும் அங்கும் - இங்கும் பார்க்க முடியாதபடியும் கண் - காது - கருத்து ஒன்றி, மெய்மறந்து, மனமகிழ்ந்து, மகிழ்ச்சி ஆரவாரக் கடலில் மூழ்கிவிட்டோம்!"

அண்ணாவின் பேச்சு, கேட்பவரைக் கிறங்கவைத்தது. புதிய சிந்தனைகள், எளிய எடுத்துக்காட்டுகளுடன் பாய, குட்டிக் கதைகள் அவர் சொல்லவந்த செய்தியை அழகாக விளக்கின. அவருடைய பேச்சைக் கேட்க, டிக்கெட் வாங்கிக்கொண்டு போகும் நிலை இந்தியாவிலேயே முதன்முறையாக நடந்தது! அவருடைய உரைகள் சிறு புத்தகமாக வெளியிடப்படுவதும் அப்போதுதான் தொடங்கியது. அவர் எழுத்து, பேசுவது போலவே அமைந்திருந்ததால், எந்தக் கூடுதல் சிரமமும் இன்றி பதிப்பாளர்கள் அவற்றை வெளியிட்டனர். அண்ணாவின் சொற்பொழிவுகளுக்கான தலைப்பும் ஈர்க்கும் வகையில் இருந்தது. 'நிலையும் நினைப்பும்', 'புதிய உலகமும் பழையதும்', 'பொறி' என்ற தலைப்புகள் கேட்போரின் ஆர்வத்தைத் தூண்டின.

அண்ணாவின் சொற்பொழிவுகள் அவரின் விரிவான படிப்பறிவைக் காட்டின. அண்ணாவுக்கு இருந்த புத்தகப் பசியில், பக்கோடா சுற்றி வந்த பழைய தினசரித்தாள் உட்பட அவர் எதையும் படிக்கத் தவறுவதில்லை. தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆழமாகப் படித்தார். தமிழில் இலக்கியங்களையும், பக்தி இலக்கியங்களையும் படித்தார் என்றால், ஆங்கிலத்தில் அவர் சைமன் பொலிவர், கரிபால்டி, மாமன்னன் அலெக்ஸாண்டர் மற்றும் பல வீரர்களைப் பற்றிப் படித்தார். சித்தார்த்தன் துறவறம் பூண்டு புத்தர் ஆனதையும், சாக்ரடீஸ் விசாரணையின்போது ஆற்றிய உரையையும், இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டதையும், அதுபோன்ற நிகழ்ச்சிகளையும் அவர் படித்தார். அவருக்கு பெர்னார்ட்ஷாவின் சமூகக் கிண்டலும், ஷேக்ஸ்பியரின் நாடக உத்திகளும் மிகவும் பிடித்திருந்தன. அவருடைய அறிவுத்தாகம் பழைய - புதிய இலக்கியங்களை நாடி படிக்கத் தூண்டியது. ஜான் எஸ்.சி.அப்பாட்டின் 'நெப்போலியன் அட் செயின்ட் ஹெலினா', 'ப்ளூடார்க்ஸ் லைவ்ஸ்', எட்வர்ட் கிப்பனின் 'த டிக்ளைன் அன்ட் ஃபால் ஆஃப் த ரோமன் எம்பயர்', தாமஸ் கார்லைலின் 'த ஃப்ரெஞ்ச் ரெவல்யூஷன்' போன்றவை அண்ணா படித்த சில நூல்கள். வால்டேரின், எமிலி ஜோலாவின்

சரிதைகளையும் தகவல்களையும் 'முக்கியமானவை' என்று அண்ணா கருதினார். அதேபோல அமெரிக்க சுய சிந்தனையாளர், பகுத்தறிவுவாதி கர்னல் ராபர்ட் இங்கர்சாலை ஓர் உந்து சக்தியாக அண்ணா கருதினார். அவருடைய மேடைப் பேச்சுப் பாணி ஆரம்பக்காலத்திலேயே மற்றவர்களுடைய பேச்சுப் பாணியிலிருந்து முற்றிலும் மாறுபட்ட புதுமையான தன்மையைக் கொண்டதாக விளங்கியது... "எண்ணங்களை ஆங்கிலத்தில் சிந்தித்து, பின்னர் அவற்றைத் தமிழில் வெளியிட்டபோது அவரது தமிழ் வாக்கிய அமைப்புகள் அதுவரையில் மேடைத் தமிழ் கண்டறியாத வாக்கிய அமைப்பாக இருந்து, கேட்போரைக் கிறுகிறுக்க வைத்தன" என்று அண்ணாவின் வரலாற்றை எழுதிய பி.சி.கணேசன் குறிப்பிட்டு இருக்கிறார்.

அண்ணா ஒருங்கே டிஸ்ரேலியாகவும், சர்ச்சிலாகவும், பர்க் ஆகவும், நேருவாகவும் தோன்றினார். பேசுமுன் தனியே அமர்ந்தபடி கண்களை மூடிக்கொண்டு தன் கருத்துகளைச் சிந்தித்து, சிலசமயம் குறித்தும் வைத்துக்கொள்வது அண்ணாவின் பழக்கம். பின்னர், ஒரு தலைமுறையே அவரைப் போலவே பேசி, கட்சியின் கொள்கைகளை நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் எடுத்துச்செல்லப் போனதை அவர் அறிந்திருக்க நியாயமில்லை. ஆனால், அது அண்ணாவின் பேச்சாற்றலால் மட்டும் நிகழ்ந்தது அல்ல. அந்த நிலை உருவாக அண்ணாவின் குண நலன்களும் காரணமாயின. நீதிக் கட்சியின் முக்கியத் தலைவர்களில் ஒருவரான சர் ஏ.டி.பன்னீர்செல்வம் ஓமானில் 1940-ல் நடந்த விமான விபத்தில் மரணம் அடைந்தபோது, திருத்துறைப்பூண்டியில் ஓர் இரங்கல் கூட்டம் நடந்தது. அங்கே கட்டியிருந்த துணி விளம்பரங்கள், 'அடுக்குச் சொல் அண்ணாவே, வருக!' என்று அண்ணாவை வரவேற்றன. அண்ணாவின் படமும் அவர் பேசுவதை சொல்லியது. கூட்டம் குறைவுதான். 200 பேரே கூடியிருந்தனர். "அந்தச் செல்வத்தின் மறைவுக்கு இரங்கல் கூட்டம் என்பதால், என்ன பேசுகிறார்கள், கேட்போம் என்று போனேன். 200, 300 பேர் இருப்பார்கள். குள்ள உருவம் நல்ல தமிழ். கணீரென்ற குரல். சொற்கள் என்னை வாய்பிளக்க வைத்தன. கேட்டேன் முதன்முதலில் அந்த இலக்கிய நாவலரின் குரல்!" என்று இராம.அரங்கண்ணல் எழுதினார்.

தம்பிகள் மகிழ, தாம் கற்றுக்கொண்ட ஆங்கிலத்திலும் அண்ணா சிறப்பாகவே உரையாற்றினார். "நான் குறைவாகவே ஆங்கிலத்தில் பேசுபவன். ஆனால், எனது ஆங்கிலம் குறைப்பட்டது அல்ல!" என ஒருமுறை தன் ஆங்கிலப் பேச்சை அண்ணா தொடங்கினார். 1962 முதல் 1966 வரையிலான அவருடைய மாநிலங்களவை

உரைகள், கருத்துகளுக்கு மட்டுமல்லாமல், அவருடைய பேச்சுத்திறனுக்கும் குறிப்பிடத்தக்கவை. அவருடைய கம்பீரமான பேச்சுக்குப் பின்னால் வெட்கமும், பணிவும், கனிவும் நிறைந்த தலைவர் தெரிந்தார். காங்கிரஸ் கூட்டங்கள் முடிந்ததும், வந்தவர்கள் காரில் ஏறிக்கொண்டு வேகமாகப் பறந்துவிடுவார்கள். அண்ணாவின் சுபாவம் வேறு. திருவாரூரில் ஒரு கூட்டம் முடிந்தபிறகு, மேடையிலிருந்து இறங்கி கலைஞர் கருணாநிதி, அரங்கண்ணல் மற்றும் சிலர் அமர்ந்திருந்த வரிசைக்கு வந்தார்! அண்ணாவின் எளிமை, அவர் கூட்டத்தோடு கலந்துகொண்ட விதம், கலைஞர் கருணாநிதிக்கு அவர் அளித்த ஆலோசனை எல்லாம், தங்களுக்கும் அண்ணாவுக்கும் இடையே ஒரு நெருக்கத்தை உண்டாக்கின என்கிறார் அரங்கண்ணல்: "எங்களோடு அவர் உட்கார்ந்ததும், எளிமையான தோற்றத்துடன் அளவளாவியதும், கருணாநிதியைப் பார்த்து 'நன்றாகப் படி' என்று சொன்னதும், ஏதோ ஒரு நெருக்கத்தைக் காட்டியது. அண்ணாவை அருகே பார்க்கப் பார்க்க, ஏதோ ஒரு மாவீரனைப் பார்க்கிற மன எழுச்சி உருவாயிற்று" எனக் குறிப்பிடுகிறார் அரங்கண்ணல்.

'மாவீரர்' ஈ.வெ.ரா-வின் படைத்தளபதியானார். இதில் வேடிக்கை, இவர்களைப் போல முற்றிலும் மாறுபட்ட இருவரைப் பார்க்கமுடியாது. ஈ.வெ.ரா. கடுமையாக ஒழுங்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பார். மிகவும் சிக்கனப் பேர்வழி. கசப்பான உண்மைகளை அப்பட்டமாக பேசிவிடுவார். தனது கருத்துகளில் வெகு தீவிரமாக இருப்பார். சுருங்கச் சொன்னால், அவர் ஒரு பட்டை தீட்டப்படாத வைரம். அண்ணாவோ இதற்கு நேர்மாறான, கனிவான சீடர். ஆரியப் பண்பு, சாதி, மதம், மடாதிபதிகள், நிலப்பிரபுக்கள், இரக்கமற்ற செல்வந்தர்கள் என எல்லோரையும் ஒருபிடி பிடித்தார் அண்ணா. ஆனால், அவர்களே ஏற்கும் அளவுக்கு அவரது பேச்சு அமைந்திருந்தது. இதுவரை இயக்கத்துக்கு மூடியிருந்த கதவுகளும் இதனால் திறந்தன. ஈ.வெ.ரா-வும் அண்ணாவும் தமிழர் அடையாளத்தையும், சுயமரியாதையையும் ஒருங்கே மீட்டனர்.

தொடக்க காலத்தில் இயக்கத்தை நடத்திச்செல்வது பெரும் சோதனையாகவே இருந்தது. ஈ.வெ.ரா-வின் ஃபோர்டு மோட்டார் காரை ஓடவைப்பதும் அதைப்போலவே சுலபமாக இருக்கவில்லை. ஓடுகிற நிலையில் இல்லாததால், ஈ.வெ.ரா-வுக்கு அது இலவசமாகக் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த நாட்களில் ஈ.வெ.ரா-வும் அண்ணாவும் அந்தக் காரைத்தான் வைத்துக்கொள்ள முடிந்தது. கார் அடிக்கடி அடம்பிடித்து நின்றுவிடும். அதை 'தாஜா' செய்து தள்ளிவிட்டால்தான் ஓட ஆரம்பிக்கும்!

கார் பழையது என்றாலும், சுயமரியாதை இயக்கம் புத்தம் புதியது. அதன் கருத்துகள் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்வதோ, அதில் பேசுவதோ கடினமாக இருந்தன. கூட்டங்கள் பெரும்பாலும் கலைக்கப்பட்டன அல்லது வன்முறை ஏவிவிடப்பட்டது. ஆனாலும் ஈ.வெ.ரா. அயர்ந்துவிடவில்லை. ஈ.வெ.ரா. அண்ணாவையும் அழைத்துச் செல்வார். ஆனால், கூட வருகிறாயா என்று அவருக்குக் கேட்கத் தோன்றாது. பெரியாருக்கு, தன்னுடன் அண்ணா வருவாரா என்று துளியும் சந்தேகம் கிடையாது. இரண்டுபேரும் அச்சமின்றி தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் தங்கள் இயக்கக் கருத்துகளை பரப்பப் பயணம் செய்தார்கள்.

ஈ.வெ.ரா. ஒரு புதிராக இருந்தார். எப்போது, எப்படி இவர் நடந்துகொள்வார் என்று கூறமுடியாது என்பதற்கு ஒரு சான்று: 1941-ல் பம்பாயில் இருந்த ஈ.வெ.ரா-விடமிருந்து அண்ணாவுக்கு ஒரு தந்தி வந்தது, 'உடனே புறப்பட்டு ஹரித்துவாருக்கு வந்து சேர்' என்று. அண்ணா அதைப் பற்றி இப்படி எழுதுகிறார்:

> என் சுபாவம் உனக்குத் தெரியும். ஏன், ஏறக்குறைய கழகத் தோழர்கள் அனைவருக்கும் தெரிந்ததுதானே? பக்கத்திலே உள்ள ஆற்காடு போவதானாலும் நாலு நண்பர்கள்கூட வேண்டுமே எனக்கு. அப்படிப் பழகிப்போன என்னை ஹரித்துவார் வரச் சொல்கிறார். என்ன செய்வது? கிளம்பினேன். தோழர் குருசாமி ரயிலடி வந்ததாக நினைவு. பத்து நாட்கள் ஹரித்துவாரில், ஒருவர் வீட்டில் இருந்தோம். அவர் காலம்சென்ற பேரறிஞர் எம்.என்.ராய் அவர்களின் இயக்கத்தவர். எனவே, எங்களை அன்புடன் தமது இல்லத்தில் வைத்து உபசரித்தார்.
>
> உங்களில் பலருக்குத் தெரிந்திராது தம்பி! பெரியார் அங்குதான் வால்மீகி ராமாயணம் பற்றிய குறிப்புகளைத் தயாரித்தார். அவர் சொல்லச் சொல்ல நான் எழுதின கவனம் இருக்கிறது.
>
> அந்த ஹரித்துவார் 'சாதுக்களின்' கோட்டை. எந்தத் தெருவுக்குச் சென்றாலும் சந்நியாசிகள்! எவ்வளவு 'கம்பீரமாக' நடந்து செல்கிறார்கள் தெரியுமா? அவர்களும் சரி, கொழுத்துக் கிடக்கும் பெரிய பெரிய பசுக்களும் சரி, ஹரித்துவார் வீதிகளிலே நடமாடும் உரிமை தமக்கே என்ற தீர்மானத்துடன் இருப்பது போலத்தான் தோன்றும்.
>
> மாலை வேளைகளிலே பெரியார் உலாவச் செல்வார்.

சாலையில் உடன் நான் செல்வேன். வெண்ணிறத் தாடி; பொன்னிற மேனி. ஆரஞ்சு நிற சால்வை. நான், கொட்டும் குளிருக்குப் பயந்து முரட்டுத்துணிச்சட்டை போட்டுக்கொண்டு, அதற்குள் கரங்களை விட்டுக்கொண்டு, கை கட்டிய வண்ணம் அவர் பின்னால் செல்வேன். சாது சந்நியாசிகளைக் காண்பதையே வேலையாகக் கொண்ட அந்த மக்கள், ஹரித்துவார் இதுவரை காணாத மகிமை பொருந்திய குருமகான், தன் பிரதம சீடருடன் செல்கிறார் என்று எண்ணிக்கொண்டு, பக்தியுடன் கைக்கூப்பித் தொழுவர். இப்போதும் மனக் கண்முன்னால் அந்தக் காட்சியைக் காணமுடிகிறது.

இவ்வளவு மடங்கள், கவாத்துக்கொடுத்து, காக்கி உடை அணிவித்து, கையில் துப்பாக்கியைக் கொடுத்துவிட்டால், பட்டாளத்திலே 'சர்தார்'களாகக் கூடிய உடல் கட்டமைந்த சந்நியாசிகள் கூட்டம் கூட்டமாக! அவர்களின் பராமரிப்புக்காக லட்சக்கணக்கில் பொருட்செலவு. அவர்களோ இக லோகத்தின் இழிதன்மையைப் பற்றியும், பரலோகத்தின் பெருமையைப் பற்றியும் உபதேசம் செய்த இந்த விசித்திரக் காட்சி என் உள்ளத்தில் ஓராயிரம் எண்ணங்களைக் கிளறும். இப்படியும் ஒரு நாடா! ஊரார் உழைப்பைத் தின்று கொழுத்துக்கொண்டு, முக்திக்கு வழிகாட்டுவதாகக் கூறிக்கொண்டு, ஒரு பட்டாளமே இருக்கிறதே! எந்த நாட்டிலாவது இப்படி ஒரு பயனுமற்ற கூட்டத்தை அனுமதிப்பார்களா? இங்கு அடிதொழுது கொண்டிருப்பதைப் பெறற்கரிய பேறு என்றல்லவா கருதுகிறார்கள்! வேதனை நிரம்பிய விசித்திரமாக இருக்கிறதே, என்றெல்லாம் எண்ணிக்கொள்வேன்.

சம்சாரி உழைத்து
சந்நியாசி கொழுக்க
தருமம் புரி எனல் ஆஸ்திகமா?
அது சரியில்லை என்பது நாஸ்திகமா?

- என்று உடுமலை நாராயண கவி தனது 'சொர்க்க வாசல்' படத்துக்குப் பாடல் தீட்டியதையும், அதை தணிக்கைக் குழுவினர் அனுமதிக்காததையும் அண்ணா சுட்டிக்காட்டியிருந்தார்.

ஈ.வெ.ரா-வை ஒரு சந்நியாசி என்று தவறாகப் புரிந்து சிரத்தானந்தா கல்லூரியினர் அவரை மாணவர்களிடையே சொற்பொழிவாற்ற அழைத்தனர். ஆரிய சம்பிரதாயப்படி செயல்பட்டுக் கொண்டிருந்தது அந்தக் கல்லூரி. பெரியாரின் பேச்சுத் திறமையை அறிந்திருந்தாலும், அண்ணாவுக்கு இது கவலை அளித்தது. நிகழ்ச்சி நாளன்று நுழைவாயிலில் மாணவர்கள் சந்தனத் திலகமிட்டு வரவேற்பு தந்தனர். அண்ணா நெளிய, 'பேசாமல் வேடிக்கை பார்த்து மகிழ்' என்பதுபோல் ஈ.வெ.ரா - அவரைக் கிள்ளினார். பின்னர், பேச்சின்போது ஈ.வெ.ரா. தன் கருத்துகளை ஒன்வொன்றாக எடுத்துக் கூறினார். அவரது ராமாயணக் கருத்துகளுக்கு மாணவர்கள் உற்சாக ஆரவாரம் செய்ததும்தான் அண்ணா நிம்மதிப் பெருமூச்சு விட்டார். இறுதியில், 'ராவணன் வாழ்க!' என்று மாணவர்கள் கோஷம் போடும் அளவுக்குப் பெரியாரின் பேச்சு வெற்றிகரமாக அமைந்தது!

எல்லா நிகழ்ச்சிகளுமே இப்படி மகிழ்ச்சியாகவும், வியப்பூட்டுவதாகவும் இருக்கவில்லை. லக்னோ பல்கலைக் கழகத்திலும் பெரியார் பேச அழைக்கப்பட்டார். அங்கு அண்ணாவையும் பேசச் சொன்னார்கள். அண்ணா, பெரியாரைப் பார்க்க, அண்ணாவுக்கு மறுப்புத் தெரிவித்தார். கடைசியில், தாம் மொழிபெயர்க்கத்தான் வந்திருப்பதாகவும், சொற்பொழிவாற்ற அல்ல என்றும் மாணவர்களிடம் தெரிவிக்கச் சொன்னார் ஈ.வெ.ரா. என்னதான் அண்ணா மீது அன்பைப் பொழிந்தாலும், அண்ணா பற்றிப் பெருமை கொண்டாலும், பெரியார் தம் கட்டுப்பாட்டை நிலைநிறுத்துவதில் உறுதியாக இருந்தார். அண்ணாவின் பேச்சு தமக்குப் பிடிக்கவில்லை என்றால் அதை நிறுத்திவிட ஈ.வெ.ரா. தயங்கமாட்டார். பெரியாரின் பேச்சுகள் கனகச்சிதமாக நேரடித் தாக்குதல் மாதிரி இருக்கும். மாறாக, அண்ணாவின் உரைகள் அலங்காரமாக, கூட்டத்தினரை மயங்கச் செய்யும். அண்ணாவின் பேச்சு உணர்ச்சியைக் கிளப்பும் என்று எண்ணினால், ஈ.வெ.ரா. தன் கைத்தடி கொண்டு தரையைத் தட்டி பேச்சை நிறுத்தச் செய்துவிடுவார். அண்ணா ஒருபோதும் அவர் பேச்சை மீறியதில்லை.

தனது நடத்தையில் நேர்மையைப் போலவே, சிக்கனத்திலும், தேர்ந்தவர் ஈ.வெ.ரா. ஒருமுறை ஈரோடு ரயில் நிலையத்தில் ஹிட்லர் பற்றிய புத்தகம் ஒன்றை புத்தகக் கடையில் பார்த்தார் அண்ணா. அதன் விலையைப் பார்த்ததும், பெரியார் நிச்சயம் அதைத் தமக்கு வாங்கித் தரமாட்டார் என்று அண்ணாவுக்குத் தோன்றியது. எனவே, நாலைந்து முறைகள் அந்தப் புத்தகக்

கடைக்குச் சென்று முடிந்தவரை வேக வேகமாகப் படித்துவிட்டார். பின்னர் அதன் மேன்மையைப் பற்றிப் பெரியாரிடம் கூறிவிட்டு வாங்கலாமா என்று கேட்டபோது, 'நீதான் அதை படித்துவிட்டாயே. எதற்கு வாங்க வேண்டும்?' என்று அமைதியாகப் பதில் அளித்தார் பெரியார். ஆனாலும், பெரியாரின் தன்னலமற்ற தன்மை, துணிவு, சொல்லித்தரும் பாங்கு, பாசம் எல்லாம் அவருடைய இத்தகைய குணாதிசயங்களை மறக்கடித்தன. முதல் முறையாக ஈரோட்டில் இருந்து காஞ்சிபுரம் வந்துவிட்டுச் செல்லும்போது ஈ.வெ.ரா. பத்து வீடுகள் வரை நடந்தே சென்று அண்ணாவை வழியனுப்பி வைத்தார். அண்ணாவை இந்தச் சம்பவம் உருகச் செய்துவிட்டது. இதேபோன்ற இன்னொரு நிகழ்ச்சியைப் பின்னர் தி.மு.க. தொடக்க விழாவின்போது நினைவுகூர்ந்தார் அண்ணா:

> இன்றும்கூட என் மனக்கண் முன்னே ஒரு காட்சி ஓடிவந்து நிற்கிறது. ஈரோட்டில் 'விடுதலை' காரியாலயத்தில் நான் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது 'விடுதலை'யில் சென்னை கார்ப்பரேஷனைப் பற்றித் தலையங்கம் தீட்டினேன். 'ரிப்பன் கட்டடத்துச் சீமான்கள்' என்பதுதான் அதன் தலைப்பு. அன்று மாலை நான் ஈரோட்டில் பெரியாரின் மூன்றடுக்கு மாளிகையில், உச்சியில் உலவிக்கொண்டிருந்த நேரத்தில், பெரியார் மூன்று மாடிகளையும் கஷ்டத்துடன் படியேறிக் கடந்து வந்து என் முதுகைத் தட்டி, 'அண்ணாதுரை, உன் தலையங்கம் ரொம்ப நன்றாக இருந்தது. எனக்கு மிகவும் சந்தோஷம்' என்று வெகுவாகப் பாராட்டினார்.
>
> இதைக் கேட்ட நான், 'இதற்காக ஏன் இவ்வளவு கஷ்டப்பட்டு மாடி ஏறி வரவேண்டும்? சாப்பிடக் கீழே வரும்போது சிரமமின்றிக் கூறியிருக்கலாமே?' என்று தெரிவித்தேன். அதற்குப் பெரியார், 'என் மனதில் நல்லதென்று தோன்றியது. அதை உடனே கூறிவிட வேண்டுமென்று நினைத்தேன். ஏனென்றால், நான் பிறரைப் புகழ்ந்து பேசிப் பழக்கப்பட்டவனல்ல. ஆகவே, உடனே சொல்லிவிட வேண்டுமென்று வந்து சொல்லிவிட்டேன்' என்று சொன்னார். இந்த ஒரு சம்பவம் போதுமே எனக்கு. ஆயுள் பூராவும் அவரிடம் திட்டு வாங்கினாலும் பரவாயில்லையே. புகழ்ந்தபிறகுதானே திட்டுகிறார்! எனவேதான் அவர் திட்டுவதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

4

முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டமும் திராவிட நாடும்



ஈ.வெ.ரா. - அண்ணா என்ற இரட்டையரின் பலம் 1937-ல் முதன்முதலாக வெளிப்பட்டது. இந்திய அரசுச் சட்டம் 1935, இரட்டை ஆட்சி முறையை முடிவுக்குக் கொண்டுவந்திருந்தது. வாக்காளர்கள், பிரதிநிதிகளை நேரடியாக மாகாண சட்டசபைகளுக்குத் தேர்ந்தெடுக்க வழி பிறந்திருந்தது. 1935 சட்டப்படி 1936-ல் நடந்த சென்னை மாகாண தேர்தலில் வென்ற ராஜாஜி, 1937 ஜூலையில் தனது காங்கிரஸ் அமைச்சரவையை அமைத்தார். ராஜாஜி வெகுவிரைவிலேயே 125 பள்ளிகளில், 6-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை இந்தியை இரண்டாவது கட்டாய மொழி ஆக்கினார். தேசிய அளவில், வேலை வாய்ப்புகளில் போட்டியிட தமிழர்களுக்கு இந்தி உதவும் என ராஜாஜி நம்பினார். 'இந்திதான் இந்தியாவின் பொது மொழி' என்ற காந்திஜியின் எண்ணத்தை ராஜாஜி நிறைவேற்றினார். இருபது வருடங்களுக்குப் பின்னர், இந்தி பொது மொழியாவதை ராஜாஜி தீவிரமாக எதிர்த்தது,

ஆங்கிலத்துக்குப் பதிலாக இந்தி ஆட்சிமொழி என்பதை ஏற்காத திராவிட இயக்கத்தின் மறுப்புக்கு வலுவும், நம்பகத்தன்மையும் சேர்த்தது! ஆனால், 1937-38-களில் மாகாணத்தின் பிரதமராக, இந்தி எதிர்ப்பாளர்களின் எதிர்ப்பை ராஜாஜி சந்திக்க நேர்ந்தது.

1918-ல் தென்னாட்டில் இந்தியைப் பரப்பவேண்டும் என்று 'துணிச்சலும், வேட்கையும் கொண்டு, சென்னையில் தட்சிண பாரத இந்தி பிரசார சபையை காந்தி தோற்றுவித்தார். இந்தியாவின் மக்கள் தொகையையும், பொருளாதாரத்தையும் மனதில் கொண்டு, எண்ணிக்கையில் குறைவான திராவிட மக்களை இந்தி கற்கும்படி காந்தி வலியுறுத்தினார். 'இந்தி ஒன்றே பெருவாரியான மக்களால் பேசப்படுகிறது' என்ற வாதத்துக்கு, 'அப்படியானால், மயிலுக்குப் பதில் காக்கைதான் இந்தியாவின் தேசியப் பறவையாக இருக்க வேண்டும்' என்றார் அண்ணா.

பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தின் ஓர் அம்சமாகவே காங்கிரஸ் ஆங்கிலத்தைக் கருதியது. கட்சியின் பிரிட்டிஷ் மற்றும் அந்நிய நாட்டுப் பொருட்கள் எதிர்ப்புக்கு ஆங்கிலம் பலியாகியது! 'ஆங்கிலம் அந்நிய மொழி' என்ற வாதத்துக்கு, தமிழ் தேசியவாதிகள், 'இந்தியும் எங்களுக்கு அந்நிய மொழியே' என்றனர். ராஜாஜியேகூட, தமிழ்நாட்டில் இந்தி அந்நிய மொழியே என்பதை ஒப்புக்கொண்டு இருந்தார். ஆனாலும், 'இட்லி - தோசையுடன் இலையில் பரிமாறப்படும் சட்னிதான் இந்தி' என்றும், 'தமிழர்கள் அதை ருசித்துப் பார்க்கவோ, ஒதுக்கிடவோ செய்யலாம்' என்றும் சொன்னார். 'முதலில் அதை இலையில் பரிமாறியிருக்கவே கூடாது' என்று தமிழ் ஆர்வலர்கள் வாதம் செய்தார்கள். தமிழ்ப் பெரியோர்களும், ஆசிரியர்களும், பலதரப்பட்ட மகளிர் மற்றும் முஸ்லிம் தலைவர்களும் ராஜாஜியின் கட்டாய இந்திக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். நீதிக் கட்சி, சட்டசபையில் ராஜாஜியின் முடிவை குறை கூறியது; ஆனால், இந்தியை விருப்பப் பாடமாக வைக்கலாம் என யோசனை தெரிவித்தது. ராஜாஜி அந்த யோசனையை ஏற்றிருந்தால் தமிழகத்தின் அரசியல் தலையெழுத்து வேறுமாதிரி ஆகியிருக்கும்.

ஒருகாலத்தில் காங்கிரஸின் நண்பராக இருந்த ஈ.வெ.ரா., இந்தி எதிர்ப்புக்குத் தலைமையேற்றார். சூறாவளி சுற்றுப் பயணம் கிளம்பினார். காங்கிரஸில் இருந்தபோதும், இந்தி பொது மொழி என்பதற்கு ஈ.வெ.ரா. எதிர்ப்பாகவே இருந்தார். மொழியைச் செயல்பாட்டுக்கான ஒரு கருவி என்றே அவர் கருதினார். மேலும், 1926-ல் தன் 'குடியரசு' பத்திரிகையில், 'இந்தியைக் கற்றுக்கொண்டவர்களில் 97 சதவிகிதம் பேர் பிராமணர்கள்

என்றும், அவர்களால் தமிழர்களுக்கு ஆபத்து என்றும் கூறியவர், இந்தியை வளர்க்கப் பணத்தைச் செலவிடுவது முட்டாள்தனமானது என்றும், பைத்தியக்காரத்தனமானது என்றும் கூறினார். தமிழர்களை எதிர்நோக்கும் பல அபாயங்களில் இந்தியும் ஒன்று என பெரியார் அஞ்சினார். 1931-ல், 'குடியரசு' பத்திரிகை தலையங்கத்தில் இந்தியை, 'ஓர் ஒடிந்துபோன குண்டூசிக்கும் பயன்படாத மொழி' எனவும், தங்கள் 'ஆதிக்கத்தை நிலைநாட்ட' ஆரியர்கள் உருவாக்கிய 'சூழ்ச்சி' எனவும் விவரித்தார். 1937, ஆகஸ்ட் மாதம் வெளிவந்த 'குடியரசு' தலையங்கத்தில், இந்தி கட்டாய பாடமாக்கப்பட்டால், 90 சதவிகித பிராமணர் அல்லாதவர்கள் தேர்வுபெற மாட்டார்கள் எனவும், ஆனால் பிராமணர்கள் 100 சதவிகிதம் தேர்ச்சி பெற்றுவிடுவார்கள் எனவும் எழுதினார்.

இந்தி மொழியை ஆதரித்த எஸ்.சத்தியமூர்த்தி போன்றவர்கள் பிராமணர்கள். இந்தியைக் கட்டாயப் பாடமாக அறிமுகப் படுத்துவதற்கான ஆதரவு பிராமணர்களிடமிருந்து வரத் துவங்கியதும், எதிரணியில் திரண்டவர்களுக்கு வேலை சுலபமானது. ராஜாஜி போன்ற சிலர் இந்த எதிர்ப்பை 'ஆரிய எதிர்ப்பு' அல்லது 'காங்கிரஸ் மீதான வெறுப்பு' என்று கருதினாலும், வட இந்திய மொழி வந்து தமிழின் நிலையைக் குழி தோண்டிப் புதைத்துவிடும் என்பதோடு தங்கள் இனத்தையே அழித்துவிடும் என்று தமிழர்கள் கருதினார்கள்.

1937 டிசம்பர் மாதம் திருச்சியில் நடந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டில், தமிழ் பேசப்படும் பகுதிகளைத் தனி மாநிலமாக அறிவிக்கக் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1938 பிப்ரவரி மாதம் காஞ்சிபுரத்தில் இரண்டாவது மாநாடு நடைபெற்றது. ஜார்ஜ் டவுனில் உள்ள இந்து தியாலஜிகல் உயர்நிலைப் பள்ளி, கோடையில், மறியல் செய்யத் தகுந்த இடமாகத் தேர்வு செய்யப்பட்டது. ஈ.வெ.ரா.வின் முக்கிய சீடர் அஞ்சாநெஞ்சர் பட்டுக்கோட்டை அழகிரி திருச்சியிலிருந்து தொண்டர்களைத் திரட்டிக்கொண்டு பேரணியாகப் புறப்பட்டு வழியெங்கும் ஆதரவு தேடிக்கொண்டு வந்தார். அவர்களுக்கு மெரினா கடற்கரையில் வரவேற்பளித்த பெரியார், 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று முதல் முறையாக முழங்கினார். சிலர், மாநில பிரதமரின் இல்லத்தின் முன் உண்ணாவிரதம் இருக்க, சினமடைந்த பிரதமர், அவர்கள் எல்லோரும் சத்தியாகிரகத்தை நையாண்டி செய்கிறார்கள் என்று எண்ணினார். இயக்கத்தில் ஒரே ஒரு 'கறுப்பு ஆடு' இருந்தது: ஸ்டாலின் ஜெகதீசன் - ரகசியமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். எனினும் சில எதிரிகள், சதிகாரர்களின் காரணமாகவே தாம் உண்ணாவிரதத்தைக் கைவிட்டதாக ஜெகதீசன் சொன்னார்

என்று, பெரியாரின் வரலாறு எழுதிய சாமி சிதம்பரனார் கூறுகிறார். அண்ணா முதலில் அவரை உதாரணமாகக் காண்பித்து இருந்தார்: 'ஜெகதீசன் இறந்தால், அவருடைய இடத்தை எடுத்துக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன். பத்துப்பேருடன் மடியவும் தயாராக இருக்கிறேன். ஜெகதீசன் இறந்துபோனால், நீங்களும் மடியத் தயாராக இருக்கவேண்டும்' என்று அண்ணா பேசியிருந்தார்.

இந்தி எதிர்ப்பு உணர்வையும், எதிர்க்கட்சியினர் அந்த உணர்வைப் பயன்படுத்திக்கொள்ளும் திறமையையும் மாகாணப் பிரதமர் ராஜாஜி குறைவாக மதிப்பிட்டார். எது எப்படி இருப்பினும் தொண்டர்களும், தேவையான நிதியும் கிடைப்பது கஷ்டமாகவே இருந்தது. "ஒரு சுவரொட்டி ஒட்ட ஒரு ரூபாய் தரவேண்டும். அதற்குக் கையில் பணமில்லாததால், நானும் நமது என்.வி.நடராஜனும், இன்னும் மற்ற நண்பர்களும் விடிய விடிய சுவரொட்டிகளை ஒட்டிவிட்டு வீட்டுக்குச் செல்லும்போது, இங்கே இருக்கிற பிராட்வே ஹோட்டலில் ஒரு டீ குடித்துவிட்டு வீட்டுக்குச் செல்வோம்" என்று அண்ணா கூறியிருக்கிறார்.

இந்தி எதிர்ப்பாளர்களின் எல்லாச் செயல்களுமே அப்படி ஒன்றும் குறிப்பிடும்படி இல்லை. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சிலர், சாதியைக் குறிப்பிட்டும், அணிந்திருக்கும் பூணூலையும், வைத்திருக்கும் குடுமியையும் சுட்டிக்காட்டிப் பேசுவதாகவும் ராஜாஜி குறை கூறினார். ஆனாலும், போராட்டம் அமைதியாகவே நடந்தது. ஜாமீனில் வெளிவர இயலாத கிரிமினல் குற்றமாக அதை மாற்றும் வரை, போராட்டத்தை எப்படிக் கையாளுவது எனத் தெரியாமல் பிரதமர் திணறித்தான் போனார். சிநேகிதர்கள் யோசனைகள் அளித்தபோதும், அதை ஏற்காமல், தன்னை அறியாமலே போராட்டக்காரர்களின் கரங்களில் சிக்கிக்கொண்டார். மொத்தம் கைது செய்யப்பட்ட 1269 பேரில், 73 பெண்களும் 32 குழந்தைகளும் இருந்தனர். 1939 ஜனவரியில், 36 பெண்கள் உட்பட மொத்தம் 683 பேர் ஒரு வாரம் முதல் ஒரு வருடம் வரை சிறைத் தண்டனை பெற்றனர். இந்தியை விருப்பப் பாடமாக அறிவிக்கலாம் என முன்பு யோசனை கூறிய நீதிக் கட்சியினர் போலவே காங்கிரஸ் தலைவர்கள் எஸ்.சத்தியமூர்த்தியும், எஸ்.ராதாகிருஷ்ணனும் யோசனை கூறியபோதும், ராஜாஜி அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

1938, நவம்பர் முதல் அவருடைய இந்தி எதிர்ப்பு தலைமைக்காக 'பெரியார்' என்றழைக்கப்பட்ட ஈ.வெ.ரா.வை நவம்பரில் கைது செய்தார்கள். ஒரு வருடச் சிறைத் தண்டனையும் கிடைத்தது. முதலில் சென்னையிலும், பின்னர் பெல்லாரியிலும் சிறைவாசம்



நெடுஞ்செழியன், கருணாநிதி, என்.வி.நடராஜன், அண்ணா, மதியழகன், சாதிக்பாட்ஷா, எஸ். மாதவன் உள்ளிட்டோர்

அனுபவித்த பெரியார் தண்டனைக் காலத்துக்கு முன்பே விடுதலை செய்யப்பட்டார். ஜூன் மாதம், தான் பேசிய பேச்சில், ஆட்சிக்கு எதிராக மக்களைத் தூண்டிவிட்டதாக 1938, செப்டம்பர் 21 அன்று அண்ணாவுக்கு 4 மாத சிறைவாசம் விதிக்கப்பட்டது. கணவருடன் இருக்கத் தமக்குக் கிடைக்கும் நேரம் மிகக் குறைவாகவே இருக்கும் என அப்போதுதான் அவர் மனைவி ராணி உணர்ந்தார். ஆனால், தம்முடைய போராட்டத்துக்குக் கிடைத்த அங்கீகாரமே இந்த 4 மாதச் சிறை வாசம் என 29 வயதே நிரம்பிய அண்ணா கருதினார். நான்கு மாதம் கருவுற்றிருப்பதாக அறிந்த பெண் அடையும் மகிழ்ச்சிக்கு இணையானதாக இந்தத் தண்டனையை அண்ணா குறிப்பிட்டார். கட்சிக்காகத் தாம் பாடுபடுவதைக் கூர்ந்து கவனித்துவரும் பொதுமக்களின் தேர்வில், தாம் தேறிவிட்டதை அவர்கள் அறிந்துகொள்வார்கள் எனவும் கருதினார். இதுவே அண்ணாவுக்கு முதல் சிறைத் தண்டனை. இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் இதை விவரமாக வர்ணித்தார் அண்ணா.

முதன்முறையாக சிறைவாசம்

அண்ணா கைதானது ஒரு மாலை நேரத்தில், அவரைக் கைது செய்து, சிறை அதிகாரியிடம் காவலர் ஒருவர் அழைத்துச் சென்றார். உலகில் என்ன நடக்கிறது என்பதையே அறியாதவராகவும், அவற்றைப் பற்றி தெரிந்துகொள்வதில் அக்கறையே இல்லாதவராகவும் இருந்தார் அந்த சிறை அதிகாரி. அண்ணாவை

தலை முதல் கால் வரை பார்த்தார். ஒருவேளை, இப்படித்தான் கைதிகளை எடைபோடுவார்கள் போலிருக்கிறது என்று அண்ணா மனதுக்குள் நினைத்துக்கொண்டார். அஞ்சி அமைதி காத்தார்:

அதிகாரியின் முகத்தில் புன்னகை எதுவும் இல்லாவிட்டாலும், அவர் முகபாவம் சிநேகமாகவே இருந்தது. "மணி ஆறுக்கு மேலாகிவிட்டது! இந்த நேரத்தில் வந்தால் சோறு ஏது?" என்றார் சிறைக் காவலர். நான் சோறு கேட்டுத் தொல்லை தருவேன் என்று எண்ணிக்கொண்டார் போலும்.

நானோ சோர்ந்து கிடந்தேன். ஓயாத பயணம். இதோ வருகிறார்கள், அதோ வாரன்ட் என்று பலர் கூறக் கேட்டு மனக்குடைச்சல் ஏற்பட்டிருந்தது. அந்தத் தொல்லை தீர்ந்து, சிறை என்ற செய்தி செந்தேனாயிற்று. எனவே சோறு கிடைக்காவிட்டால் என்ன செய்வது என்று எண்ணும் நிலையோ, ஏங்கும் நிலையோ இல்லை!

அடக்க ஒடுக்கத்துடன் அவர் எதிரே நின்றவர்களைக் கண்டதும், அவருக்கே ஒரு பரிவு ஏற்பட்டிருக்கும் என்று எண்ணுகிறேன். எனவேதான் 'சோறு இல்லை' என்று கூறியதுடன், "ஒரு வாழைப்பழம் தருகிறேன், பொட்டலம் தின்பண்டம் தருகிறேன்" என்றார். அவர் பரிவுக்கு என் மகிழ்ச்சியைத் தெரிவிக்க வேண்டும் அல்லவா? பற்கள் வெளியே தெரியச் சிரித்தேன்! காவி படிந்திருப்பது கண்டார். சிறிதளவு கண்டிப்புடன், "வெற்றிலை கிற்றிலை எதுவும் போடக்கூடாது; கிடைக்காது" என்றார்.

மேற்கொண்டு உத்தரவுகள் மளமளவென்று புறப்பட்டன.

"கிட்டே வா. துணியை உதறு! சொக்காயைக் கழற்று. அரைஞாணை அறுத்தெறி!"

ஒழுங்காக பரிசோதனைக்கு உட்பட்டேன்.

மெல்லிய குரலில் கேட்டார்: "ஏதாவது அபின்-கிபின், கஞ்சா-கிஞ்சா, பீடி-கீடி இருக்கா?"

"அதெல்லாம் கிடையாதய்யா! அப்படிப்பட்ட பழக்கமெல்லாம் கிடையாது!"

"ஆமாம்! இங்கே வருகிற எந்தப் பயதான் அந்தப் பழக்கமெல்லாம் இருப்பதாக ஒப்புக்கொள்கிறான்?"

"நான் அப்படிப்பட்டவனல்லன்."

"நீ பெரிய யோக்கியன்தான். சரி, அதோ பார், மூலையில்... சட்டிகள் - இரண்டு எடுத்துக்கொள். ஒன்று குடிக்கத் தண்ணீர் வைத்துக்கொள்ள... மற்றொன்று இரவிலே சிறுநீர் கழிக்க... நிற்காதே! எடுத்துக்கொண்டு போய் அறையிலே வைத்துக்கொள். கம்பளி இருக்கும், விரித்துக்கொள். தொந்தரவு கொடுக்காமல் படுத்துக்கொள்!"

மற்ற சிறைக் கைதிகள் சத்தம் போட்டார்கள். சிறைக் காவலாளியைக் கிண்டலடித்தார்கள். பாட்டுப் பாடிக் கைத்தட்டினார்கள். எல்லாமே அவரை வெறுப்பேற்றத்தான். அவர்களில் அண்ணா மட்டும் அடக்கமானவராகத் தெரிந்தார். சிறைக் காவலாளி அவரிடம் வந்து, கம்பிகளைப் பிடித்துக்கொண்டு, "நீங்கள் எதற்காக இங்கே வந்தீர்கள்?" என்று கேட்டார். அண்ணா பெருமையுடன், "இந்தி எதிர்ப்புக்காக!" என்றார். "அப்படி என்றால் என்ன?" என்று சிறைக் காவலாளி கேட்க, அண்ணா சோர்ந்து, அயர்ந்து, வெறுப்புற்று, கர்வம் அடங்கி, கோபம் அவருள் மெல்ல எழுந்தது. தன் இந்தி எதிர்ப்புப் பேச்சுகள் எல்லாம் வெறுமையாகிப் போய்விட்டதாக உணர்ந்தவுடன் அவருடைய கர்வமே பலமிழந்து நொறுங்கிவிட்ட மாதிரி இருந்தது. சென்னையில் இங்கே இருக்கிற சைதாப்பேட்டையில், இந்தி எதிர்ப்புப் போராட்டம் பற்றி எதுவும் அறியாதவனும் ஒருவன் இருக்கிறான். பின்னர், அண்ணா தன்னுடைய தினசரிப் பேச்சுகளில் இருந்த 'செய்தி' ஒரு சிறைக் காவலாளியைக்கூட எட்டாமல் போனது குறித்து வெட்கப்பட்டார். அண்ணா அந்தச் செய்தியின் சாரத்தை அவரிடம் வெளியிட்டார். "எங்களைக் கைது செய்தது அரசாங்கத்துக்கு விரோதமான செயல்களுக்காக." இதைக் கேட்டதும் அவர், புரிந்துகொண்ட மாதிரி தலையை அசைத்தார். அண்ணா தொடர்கிறார்:

சென்னைச் சிறையில், பெரியாருடன் ஒரே வரிசைக் கட்டடத்திலே தங்கியிருக்க நேரிட்டதை ஒரு வாய்ப்பாகவே கொண்டேன்.

மகிழ்ச்சியைத் தொடர்ந்து அனுபவிக்க முடியவில்லை. காரணம், வீட்டை விட்டு இந்தக் காட்டுக்குள்ளே வந்துவிட்டோமே என்ற கவலையல்ல. போட்டுக்கொள்ளப் பொடியில்லை! என்ன செய்வேன்? உனக்கே தெரியுமே, தம்பி. நான் அந்தக் கெட்ட பழக்கத்துக்கு ஆட்பட்டு அல்லற்படுவது?

கடைவீதியா - 'சண்முகம் கொண்டுவா', 'அம்பாள் வாங்கி வா' என்று சொல்ல? சிறை!

என் சங்கடத்தை அறிந்துகொண்ட அடிகள், 'இதுதானே வேண்டியது? இதோ!' என்று கூறி ஒரு சிறு காகிதப் பொட்டலம் கொடுத்தார். பொடி! நெடி குறைந்துபோன நிலை! பக்குவமாகத்தான் மடித்து வைத்திருந்தார். ஆனால், காகிதத்தில் இருந்ததால் பொடி பதம் கெட்டுக் கிடந்தது... இந்தப் பொடிப் பொட்டலத்தை நான் என்றுமே மறப்பதற்கில்லை. முதல் சிறை அனுபவம்... மூக்குப் பொடிக்கே அலைய நேரிட்டது முதல் அனுபவமல்ல!

நாலு மாதமும் நாங்கள் அங்கு தமிழ், தமிழ், தமிழ் என்று உணர்ச்சிமயமாகி இருந்து வந்தோம். பெரியாருடன் பன்னிரண்டு மணி நேரம் ஒன்றாக இருந்து பேச, கேட்க, பழக அருமையான வாய்ப்பு ரசமான விருந்து. சுவையுள்ள காலமாக அந்த நாலு மாதங்கள் இருந்தன.

சிறை செல்கிறேன் என்பதறிந்து என் கெழுதகை நண்பர் புலவர் அருணகிரிநாதர், அங்கு நிரம்ப நேரம் கிடைக்கும், பல்வேறு விஷயங்களைப் படிக்க இது தூண்டுகோலாக இருக்கும் என்று கூறி, என்னிடம் 'அபிதான சிந்தாமணி' என்ற புத்தகம் கொடுத்திருந்தார். அவரே ஓர் அபிதான சிந்தாமணி. மணிக்கணக்கில், பல விஷயங்களைப் பற்றியும் பேசிக்கொண்டே இருப்போம். இந்த 'அபிதான சிந்தாமணி'யை நான் மறப்பதற்கில்லை. இப்போதும் 'அபிதான சிந்தாமணி'யைக் காணும்போதெல்லாம், எனக்கு அந்த நாலு மாதக் கடுங்காவல் நினைவுக்கு வரும். நினைவிலே அந்தச் சம்பவம் தோன்றியதும், எனக்குள்ளாகவே ஒரு மகிழ்ச்சி!

தாளமுத்து, நடராசன் என்ற இரண்டு சிறைக் கைதிகளின் மரணம், போராட்டத்தை முடுக்கிவிட்டது. ஒருவர் பிற்படுத்தப்பட்ட நாடார் வகுப்பைச் சேர்ந்தவர். இன்னொருவர் ஆதிதிராவிடர். இருவருமே உடல் நலம் குன்றி இறந்துபோனாலும், தண்டனைக் காலத்தில் ஏற்பட்ட அவர்களின் மரணம், திராவிட இயக்கத்தின் வரலாற்றில் அவர்களுக்கு அழியாத இடத்தைப் பெற்றுத்தந்தது. இரண்டாம் உலகப்போரில் இந்தியாவை ஈடுபடுத்தியதால் காங்கிரஸ் ஒத்துழையாமையில் இறங்க ராஜாஜியின் காங்கிரஸ்

ஆட்சி முடிவுக்கு வந்தது. கட்டாய இந்தியை விலக்கிக்கொள்வதாக 1940-ல் ஆளுநர் முடிவெடுத்தார். சிறைக் கைதிகள் விடுவிக்கப் பட்டனர். முதல் இந்தி எதிர்ப்புப் போர் முடிவுக்கு வந்தது.

நீதிக் கட்சியினர் போராட்டத்துக்கு அவ்வப்போது ஆதரவு தந்திருந்தனர். போராட்டம் தொடங்கவும் அந்தக் கட்சியின் தலைவர் பொப்பிலி ராஜாவின் தலைமை முடிவுக்கு வரவும், சரியாக இருந்தது. பொப்பிலி அரசரின் இடத்துக்கு சிறையில் இருந்த ஈ.வெ.ரா. தேர்ந்தெடுக்கப்பட்டார். "சர். செல்வம், என்னை அவருக்கு உற்ற கூட்டுத் தொண்டராக்கிக் கொண்டார். சிட்டுக்குருவி தலையில் பனங்காயைக் கட்டியது மாதிரி, எனக்கு ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் பதவியைக் கட்டிவிட்டார்கள். எனக்கு இது வேண்டாம்; என்னால் முடியாது என்று சொன்னபோது, 'உனக்குத் தெரியாது உன் பலம். நீதான் தகுதி. நீ இல்லாவிட்டால்...' என்றெல்லாம் சொல்லி என்னை உற்சாகப்படுத்தினார். அடிக்கடி தைரியம் கொடுத்து வந்தார்" என்று சர். பி.டி.பன்னீர் செல்வத்தின் பங்களிப்பை பெரியார் பதிவு செய்திருக்கிறார்.

இந்தி எதிர்ப்பிலிருந்து 'திராவிட நாடு'

ஈ.வெ.ரா.வுக்கு அரசியல் ரீதியாக எப்படி கட்சியை முன்னெடுத்துச் செல்வது என்று சற்றுக் குழப்பம் இருந்தது. இந்தி எதிர்ப்புப் போராட்டம் அவரை 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற தனித் தமிழ்நாடு கோரிக்கையை வலியுறுத்தும் போராளியாக 1938-ம் ஆண்டு இறுதியில் மாற்றியிருந்தது. சேலத்தில் ஈ.வெ.ரா. பேசும்போது, "பிராமணர்களும் வட இந்தியர்களும் இந்தித் திணிப்பின் மூலம் தமிழர்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதைத் தடுத்து நிறுத்த, எல்லைகளை வரையறுத்து, பிரித்துக் கொடுப்பதுதான் தீர்வு' என்றார். 'பிராமணர்களும், வட இந்தியர்களும் தமிழர்களைச் சுரண்டுவதை காங்கிரஸ் அனுமதிக்குமானால், தமிழர்களின் சுதந்திரத்தைப் பாதுகாக்க இந்திய கூட்டமைப்பிலிருந்து பிரிந்துபோய் தனி நாடு கேட்பதுதான் ஒரே வழி. சிலோனும் பர்மாவும் இந்தியாவிலிருந்து தனித்து இருப்பது போலத்தான் இதுவும்" என்றார்.

'தமிழ்நாடு தமிழருக்கே' போராட்டத்தை இறுதிவரை எடுத்துச்செல்ல பெரியார் தூண்டினார். "தமிழ்நாடு தமிழருக்கே என்று கோஷமிடுங்கள்! உங்கள் கைகளில் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று பச்சை குத்திக்கொள்ளுங்கள்" என்று எழுதினார். எனினும் இந்தக் கோரிக்கைக்குப் பின்பு நான்கு திராவிட மொழிகள் பேசும் திராவிடப் பகுதிகளை இணைத்து, திராவிடக் குடியரசாக மட்டுமல்லாமல், தனி சுதந்திர நாடாக அறிவிக்க பெரியார்

கோரினார். இந்த 'திராவிட இனத்தவர்'களில் தங்களை ஆரியர்கள் என்று கூறிக்கொள்ளும் பிராமணர்கள் தவிர முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற இந்துக்களும் அடங்குவர். 1939, டிசம்பர் 10 தேதியிட்ட 'குடியரசு' இதழின் தலையங்கத்தில் 'இனி எவரொருவர் தன்னைச் சுத்தத் தமிழனாக - திராவிடனாக, திராவிட நாடு, திராவிடக் கலை, நாகரிகம் தனக்கே சொந்தம் என்றும், வேறு எந்தக் கலையும், நாகரிகமும் தனக்குப் புறம்பானதென்றும் கருதுகிறாரோ அவர் கண்டிப்பாக நாட்டில் நடைபெறும் திராவிட நாடு திராவிடருக்கே என்ற கிளர்ச்சியில் பங்கு கொண்டு உறுதி செய்துகொள்ள வேண்டும் என்று கோருகிறோம். அப்படிச் செய்துகொண்டால்தான் நாம் அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடையமுடியும். வெள்ளையரானாலும் சரி, வடநாட்டாரானாலும் சரி, எவரும் நமக்கு அந்நியரே.'

இதில் முக்கியமாகக் குறிப்பிடவேண்டிய அம்சம்: ஈ.வெ.ரா.வின் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற கோஷம் - 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற கோரிக்கைக்குப் பதிலாக உருவானதல்ல. ஏனெனில், ஒரு வாரத்துக்குப் பிறகு, 17.12.1939 தேதியிட்ட தனது 'குடியரசு' தலையங்கத்தில், 'தமிழ்நாடு தமிழருக்கே' கோரிக்கையைக் கிண்டல் செய்பவர்களைத் தாக்கி இப்படி எழுதினார்: "தமிழ்நாடு தமிழருக்கே என்றால் சரித்திர அறிவோ, அரசியல் அறிவோ அற்ற ஒரு சிறு கூட்டம் பரிகாசம் பண்ணுகிறது. தமிழ்நாடு தமிழருக்கே என்று ஆகிவிட்டால், கன்னடர், ஆந்திரர், கேரளர் நிலை என்னாவது என்று கேட்கின்றன அம்முண்டங்கள். தமிழ் தாய்மொழி என்றும் அதிலிருந்துதான் கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகள் பிறந்தன எனவும் மொழி ஆராய்ச்சி வல்லுனர்கள் புகலுகின்றனரே? அப்படி இருக்க தமிழ்நாடு தமிழருக்கே என்றால் அவர்களைச் சேர்ந்த குழுவினர்களாகிய கன்னடர், தெலுங்கர், மலையாளிகள் தனித்துப் பிரிந்து போய்விடுவார்களா? இந்த அற்ப விஷயம் எப்படி அந்த மரமண்டைகளில் ஏறப்போகிறது? அது ஒருநாளும் ஏறப்போவதில்லை என்பதையும் நாம் அறிவோம்."

பாகிஸ்தான் போல திராவிட நாடு பற்றிய சிந்தனை வலிமையும், உத்வேகமும் பெறும் என நம்பினர் சிலர். ஜின்னாவின் முஸ்லிம் லீக், சிறுபான்மை இனத்தவரின் உண்மையும், கற்பனையும் நிரம்பிய அச்சங்களை திறமையாகக் கையாண்டிருந்தது. ஆனால், 'திராவிட' என்ற அடையாளம் துளியும் உருவாகாத நிலையில் தனது திராவிட நாடு எண்ணத்தை, ஜின்னாவின் பாகிஸ்தான் கோரிக்கையுடன் இணைத்துவிட ஈ.வெ.ரா. முயன்று தோற்றுப்



ஜின்னா, பெரியார், அம்பேத்கர்

போனார். அண்ணாவோ, பெரியாரின் முயற்சிகள் அத்தனை வலுவாக அமையவில்லை என்று கருதினார். டி.ஏ.வி.நாதன், திருவாசகமணி கே.எம்.பாலசுப்பிரமணியம், டி.பி.எஸ். பொன்னப்பா, சி.பஞ்சாட்சரம் மற்றும் அண்ணாவுடன், பம்பாயிலுள்ள பிராமணர் அல்லாதாரின் அழைப்பை ஏற்று, பெரியார் பம்பாய் சென்றார். அங்கு, பி.ஆர்.அம்பேத்கரையும், ஜின்னாவையும் பெரியார் சந்திக்க இருந்தார்.

> தோழர் ஜின்னாவை ஒரு திட்டமான முடிவை வைத்துக்கொண்டு பாருங்கள். வெறும் உபசாரத்துக்காகப் பார்ப்பதில் பலனேதும் இல்லை என்று சொன்னேன். தலைவருடைய சந்திப்பு வெறும் உபசார சந்திப்பே என்று நான் அறிந்துகொண்ட காரணத்தால்தான் உடன் போக மறுத்தேன். தலைவரோடு 'சண்டே அப்சர்வர்' ஆசிரியர் தோழர் பி.பாலசுப்பிரமணியம், இப்போது சைவசீலராக விளங்கும் தோழர் கே.எம்.பாலசுப்பிரமணியம் ஆகியோர் உடன் சென்றார்கள். மூவரும் திரும்பி வரும்போது மனக்கசப்புடன்தான் வந்தார்கள். சந்தர்ப்பம் அப்போதெல்லாம் தவறவிடப்பட்டது. தோழர் அம்பேத்கரை சந்தித்த வாய்ப்பும் பயனற்றே போயிற்று.

- என்று எழுதுகிறார் அண்ணா.

9.1.1940 அன்று ஜனாப் எம்.ஏ.ஜின்னாவைச் சந்தித்து காங்கிரஸுக்கு எதிராக உள்ள எல்லா கட்சிகளும் ஒன்று சேர்ந்து வேலை செய்வது குறித்து நீண்டநேரம் பேசினார் பெரியார். அப்போது அம்பேத்கர் அவர்களும் உடன் இருந்தார். ஜின்னாவிடம் பெரியார் விவாதிக்கச் சொன்ன திராவிட நாடு கோரிக்கையைப் பற்றிப் பேசவில்லை.

சென்னை திரும்பியதும், தமது சந்திப்பு வெற்றிகரமாக இருந்தது என்றும், ஜின்னாவும் தானும் ஏதோ கூட்டணி வைத்துக்கொண்டு விட்டதாக எவரும் அஞ்சிவிட வேண்டாம் என்றும் பெரியார் கூறினார். உண்மையில் திராவிட நாடு கோரிக்கையை வலியுறுத்த அது நேரம் அல்ல என்று பெரியார் கணித்திருந்தார். எனவே, ஜின்னாவிடம் மிக கவனமாகவே பேசினார். ஆனாலும், 1940, ஜனவரி 7 அன்று, தாராவியில் நடந்த பொதுக்கூட்டத்தில், மக்கள் தொகையில் தமிழ்நாடு இங்கிலாந்துக்குச் சமமானது என்றும், ஜெர்மனி அளவுக்குப் பெரியது என்றும், ஜின்னா மற்றும் அம்பேத்கரின் துணையுடன் அதன் சுதந்திரத்தைப் பெற்றுவிட முடியும் என்றும் பெரியார் நம்பிக்கை தெரிவித்தார்.

மேலும், பம்பாய்க்குப் போய்த் திரும்பிய ஐந்து மாதங்களுக்குப் பின்னர், 1940, ஜூன் 6 அன்று, திராவிட நாடு பிரிவினை மாநாட்டை காஞ்சிபுரத்தில் நடத்தினார் பெரியார். அங்கு அவர் திராவிட நாடு வரைபடத்தைத் திறந்துவைத்தார். தென்னிந்தியா, ஆந்திரதேசம், ஹைதராபாத் தவிர்த்த தக்காணம், இந்தியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதிகள், வங்காளத்தின் ஒரு பகுதி உட்பட அதில் காணப்பட்டது. எல்லைகளைப் பொறுத்தவரை பிரமாண்டமாகவும், மக்களைப் பொறுத்தவரை குழப்பமானதாகவும் இருந்தது பெரியாரின் திராவிட நாடு. மக்கள் அதை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். 'திராவிட நாடு' என்பது மதராஸ் மாகாணம் மட்டுமே என்பதை, அதைக் கூறியவர்களும் மக்களும் புரிந்துகொண்டனர்.

தமிழரல்லாதவர்களின் கருத்து பற்றி ஈ.வெ.ரா. சந்தேகம் கொண்டிருந்தார். கோயம்புத்தூரில் பின்னர் அவர் பேசுகிறபோது, தமிழரல்லாத பகுதிகளில் வசிக்கும் திராவிட மொழி பேசுவோரின் ஆதரவு இல்லை என்றாலும்கூட, தான் கோரும் தனி நாட்டில் இரண்டு கோடி தமிழர்கள் தனித்து வாழமுடியும் என்றார்.

மாநாட்டில் பேசிய பேச்சாளர்கள், "திராவிட நாடும், திராவிட மக்களும் ஆரிய நாட்டுடனும் ஆரிய மக்களுடனும் வெகு காலமாகப் பிணைக்கப்பட்டு, அரசியல் முதலிய காரியங்களில் அவர்களோடே கலந்து இருந்து வந்ததில் இதுவரையில் திராவிடருக்கு எந்தவித முன்னேற்றமும் இல்லாமல், ஆரியர்களே



அண்ணா, ராஜாஜி

முன்னேறிக்கொண்டு வந்திருப்பதோடு, பெரும்பான்மையான திராவிட மக்களுடைய உழைப்பை ஆரியர்கள் அனுபவித்துக் கொண்டு, சமுதாயத்தில் கீழ் சாதியாகவும், கல்வியில் தற்குறிகளாகவும், பொருளாதாரத்தில் கூலிகளாகவும் ஆகிக்கொண்டு வருவதெல்லாம், பொது அரசியலின் பேராலும், இந்திய தேசியம் என்பதன் பேராலும், மேலும் மேலும் கீழான நிலைமையும் இழிவான தன்மையுமே ஏற்படும்படி ஆரியர்கள் செய்து வருவதால், இந்தியா, இந்திய தேசியம், இந்தியர் என்னும் பிணைப்பிலிருந்து திராவிட நாடு (அதாவது, தற்காலத்து சென்னை மாகாணம்) தனியாகப் பிரிந்து, அதற்குத் தனி அரசாட்சி ஏற்படுத்தி, சற்றேறக் குறைய பர்மா, சிலோன் ஆகிய நாடுகளைப் போல தனி ஸ்டேட் ஆக ஆக்கிக்கொடுக்க வேண்டும்" என்று பிரிட்டிஷ் சர்க்காரைக் கேட்டுக்கொண்டார்கள். இந்த வலியுறுத்தல், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு உள்ளேயோ வெளியேயோ இந்தியாவின் வட, வட மேற்குப் பகுதிகள் இணைந்திருக்க வேண்டும் என்ற கவிஞர் இக்பாலின் வேண்டுகோளை நினைவூட்டியது.

1940, ஆகஸ்ட் 24-25 தேதிகளில், திருவாரூரில் நடைபெற்ற நீதிக் கட்சியின் பதினைந்தாவது மாநாடு, 'திராவிடரின் தாயகமான மதராஸ் மாகாணம், பிரிட்டிஷாரின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் சுதந்திரமாக இயங்கவேண்டும்' என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

(வேடிக்கை என்னவெனில், தி.மு.க.வின் அதிகாரபூர்வ வரலாற்று ஆசிரியர்கள் இந்தத் தீர்மானத்தை, மாநாட்டின் மற்ற தீர்மானங்களைப் போல, பதிவு செய்யவில்லை என்பதுதான்.)

மேலும், எதற்கும் துணிந்த மாகாண திராவிட விடுதலைப் படை, திராவிட நாட்டுக்காகப் போராடும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இந்த வீரத் தீர்மானம், போடப்பட்டதோடுசரி! மேலும், 1941, ஆகஸ்ட் 10 அன்று, போர் காரணமாக திராவிட நாடு போராட்டத்தை நிறுத்திவைப்பதாக பெரியார் அறிவித்தார். உண்மையில், தனிநாடு கோரிக்கை வாய்ப்பேச்சை நம்பியே இருந்தது. பிரசாரமும் தமிழ்பேசும் பகுதிகளிலேயே நடந்தது. பல வருடங்கள் ஆகியும் திராவிட நாட்டின் எல்லை வரையறுக்கப்படாமல் இருந்ததோடு, அவ்வப்போது மாறிக்கொண்டும் வந்தது. (நாடு விடுதலை அடையும் வரை கொச்சி, திருவாங்கூர், ஹைதராபாத் ஆகிய சமஸ்தானங்களையும் பிற திராவிட மொழி பேசுவோரையும் தவிர்த்த, 'பிரிட்டிஷ் மதராஸ் மாகாண'மாகவும், விடுதலைக்குப் பிறகு, சமஸ்தானங்களை உள்ளடக்கிய திராவிடத் தென்பகுதியாகவும், 1956-ல் மாநில சீரமைப்புக்குப் பின் நான்கு தென் மாநிலங்களாகவும் திராவிட நாடு இருந்தது.)

திராவிடர்கள் வசிக்கும் சமஸ்தானங்கள் குறிப்பிடப்படவில்லை. மேலும், பல வருடங்களுக்குப் பின்னரும், மதராஸ் மாகாணம் மட்டுமே தங்களுக்குப் போதும் என்றும் அண்ணா குறிப்பிட்டார். இது போதாது என்று, 'திராவிடரல்லாத பிராமணர்களும் வட இந்தியர்களுமான அந்நியர்கள், திராவிட நாட்டைச் சுரண்டுவதைத் தடுக்க, வடக்கிலுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும், தீண்டத்தகாதவர்களும் தங்களை திராவிடர்களாகக் கருதவேண்டும்' என்ற ஈ.வெ.ரா.வின் அறிக்கை, மேலும் குழப்பத்தை விளைவித்தது. உண்மையில், எவ்வாறாவது இந்தியாவிலிருந்து பிரிந்துசெல்வது ஒன்றே தம் சமுதாய சீர்திருத்தத்துக்கு வழி என ஈ.வெ.ரா. கருதினார்; பதவி - அதிகாரத்தை அவர் நாடவில்லை.

'திராவிட நாடு' என்பது, மொத்தத்தில் பிராமணர்களுக்கும் வடக்கத்திய 'பனியா'க்களுக்கும் தவிர, எல்லோருக்கும் ஏதாவது தருவதாக இருந்தது. எனினும் எல்லைகள் சரியாக வரையறுக்கப்படாத, வடிவமற்ற ஒரு தற்காலிக ஏற்பாடு மாதிரியான கொள்கையாக - விவாதங்களின் ஒட்டுமொத்தக் கலவையாகவே திராவிட நாடு அமைந்திருந்தது. இருப்பினும், அண்ணாவும் பிறரும், பாகிஸ்தான் நனவாயிற்று என்றால், திராவிட நாடும் அதைத் தொடரக்கூடும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தனர்.

''கனமான சுவரைப் பெயர்த்தெறிவது கடினம். ஆனால், ஒரு கல்லைப் பெயர்த்துவிட்டால் மற்றவற்றைப் பிரித்தெடுப்பது சுலபம்!'' என்றார் அண்ணா.

1941-ம் ஆண்டு ஏப்ரல் மாதம், சென்னையில் நடைபெற்ற அகில இந்திய முஸ்லிம் லீக்கின் 28-வது மாநாடு, திராவிட நாடு கோரிக்கைக்கு ஒரு தற்காலிக உந்துசக்தியைத் தந்தது. அந்த மாநாட்டில் ஜின்னா, ''இந்திய துணைக்கண்டத்தில் இரண்டு சமூகங்கள் இருக்கின்றன. ஒன்று முஸ்லிம் சமூகம்; இன்னொன்று இந்து சமூகம். குறிப்பாக இந்த நாட்டில் இன்னொரு இனமும் இருக்கிறது. அது திராவிடஸ்தான். என் முழு அனுதாபமும் ஆதரவும் பிராமணர் அல்லாதாருக்கு உண்டு. நான் அவர்களிடம் சொல்லிக்கொள்வதெல்லாம், நீங்கள் நீங்களாகவே இருக்கவேண்டும் என்றால், உங்கள் கலாசாரத்தைப் பின்பற்றி, உங்கள் மொழியைப் பேசி, உங்கள் வாழ்க்கையை வாழுங்கள்!'' என்றார்.

மேலும் கம்பீரமாக, ''என் அனுதாபம் உங்களுக்கு நிச்சயம் உண்டு. நான் உங்களுக்கு உதவுவேன். திராவிடஸ்தானை நிறுவுங்கள். ஏழு சதவிகித முஸ்லிம் மக்கள் இங்கே உங்களுக்கு நட்புக்கரம் நீட்டி, பாதுகாப்பு, நீதி, நேர்மை ஆகியவற்றின் அடிப்படையில் உங்களோடு இணைந்து வாழ்வார்கள்!'' என்றார். மதராஸ் ஆளுநரிடம், இந்தியாவை திராவிடஸ்தான், இந்துஸ்தான், பெங்காலிஸ்தான், பாகிஸ்தான் என நான்காகப் பிரிக்க யோசனை கூறினார். திராவிடஸ்தான் கிட்டத்தட்ட அப்போதைய மதராஸ் மாகாணத்தைப்போல் இருந்தது.

அண்ணா தன் பங்குக்கு ஈ.வெ.ரா.வின் கொள்கையை வலியுறுத்தும் வகையில், 'முஸ்லிம்களும் இஸ்லாமிய பாதையில் செல்லும் திராவிடர்களே' என்று தன் 'ஆரிய மாயை'யில் குறிப்பிட்டார்.

> அவர்கள் (பிராமணர்களும் வட இந்தியர்களும்) ஆரியர். நாம் திராவிடர்! அதே ஆராய்ச்சியே முஸ்லிம்கள் திராவிட இனம், இஸ்லாமிய மார்க்கம் என்ற உண்மையை உரைத்தது. ஆகவே, திராவிட - இஸ்லாமிய கூட்டுப்படை கிளம்பிற்று!
>
> ஆங்கிலேயரும் ஆரியரும் ஒரே இனம். இனத்தோடு இனம் சேருகிறது! திராவிடரும் இஸ்லாமியரும் ஒரே இனம்! இனத்தோடு இனம் சேருகிறது!'
>
> பெரியார் ராமசாமி நாயக்கர், 'பாகிஸ்தானத்துக்கு உட்பட்டு வாழ்ந்தாலும் வாழலாமே ஒழிய,

> ஆரியருடன் வாழக்கூடாது' என கோவை மாநாட்டில் உரைத்தார். பெரியார் அங்ஙனம்தான் உரைத்தார். இனம் இனத்தோடு சேரும் என்ற நியதியை எடுத்துரைத்தார்.

பிராமணர் அல்லாதாரும் முஸ்லிம்களும் ஒன்றே என்ற இந்த வலிந்த முரண்பாட்டு வாதம்கூட ஜின்னாவை திராவிட நாடு பக்கம் கொண்டுவரவில்லை. 1944-ன் இறுதியில், திராவிட நாடு கோரிக்கையை ஈ.வெ.ரா. தனது சொந்த முயற்சிகளின் மூலமே பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ஜின்னா கடிதம் எழுதினார்.

மேலும், ஏமாற்றம் காத்திருந்தது. 1942-ல் க்ரிப்ஸ் தூதுக்குழு சில திட்டங்களுடன் இந்தியாவுக்கு வந்தது. சர் ஸ்டாஃபோர்ட் க்ரிப்ஸ் திராவி நாடு கோரிக்கையை ஏற்க மறுத்தார். ஈ.வெ.ரா. தலைமையில், டபிள்யூ.பி.சவுந்தரபாண்டியன், என்.ஆர்.சாமியப்ப முதலியார் மற்றும் எம்.ஏ.முத்தையா செட்டியார் கொண்ட தூதுக்குழுவிடம், 'மாகாண சட்டசபை ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்; அல்லது இது சம்பந்தமாக ஒரு கருத்துக் கணிப்பு எடுக்கவேண்டும். ஆனால், போர் காரணமாக அது சாத்தியமில்லை' என்று கூறிவிட்டார் க்ரிப்ஸ். ஜின்னாவும் கை கழுவி விட, திராவிட நாடு கோரிக்கை, அதற்காக வாதிட்டவர்களின் தோள்களில் பெரும் சுமையாக விழுந்தது. ஈ.வெ.ரா.வின் அண்ணன் கிருஷ்ணசாமியின் மகனும், அண்ணாவின் நெருங்கிய தோழராக இருந்து பின்னர் அவரை விமரிசிக்கத் தொடங்கிய ஈ.வெ.கி.சம்பத், 1969-ல் அண்ணா மறைந்த சில வாரங்களில் எழுதிய கட்டுரையில், 'க்ரிப்ஸ் தூதுக் குழுவிடம் அடைந்த தோல்வி, அண்ணாவை திராவிட நாட்டில் நம்பிக்கை இழக்கச் செய்துவிட்டது' என்றார். 1948-ல், கும்பகோணத்தில் நடந்த திராவிடர் கழக நிர்வாகக் குழுக் கூட்டத்தில் தன்னிடம் அண்ணா விவாதித்ததைச் சுட்டிக் காட்டினார் சம்பத்:

> திராவிட நாடு பிரிவினை இனியும் கேட்பது சரியா என்று அண்ணா சலிப்போடு பேசினார். க்ரிப்ஸ் கமிஷன் வந்தபோது அவர்கள் ஜின்னாவின் பாகிஸ்தான் பிரச்னையில் காட்டிய அக்கறையை, திராவிடஸ்தானில் காட்டவில்லை. ரயில் தப்பிவிட்டது. இனியும் அதைத் தொடர்ந்து கோருவது அர்த்தமில்லாதது என அவர் வாதங்களை அடுக்கினார். எந்த ஒரு லட்சியத்தையும் நம்மால் முடியுமா முடியாதா என்ற எண்ணத்தில் பார்ப்பதைவிட, நியாயமா நியாயமில்லையா என்ற எண்ணத்தில்தான் பார்க்க வேண்டும். திராவிட நாடு

பிரிவினை வேண்டும் என்பதில் அவசியமும், நியாயமும் இருந்தால், க்ரிப்ஸ் கொடுக்காமல் போய்விட்டார் என்பதற்காக, கோரிக்கையை விட்டுவிடுவதா?' என ஆத்திரமாகக் கேட்டேன்.

அன்றே அவருக்குப் பிரிவினை மிகவும் அநியாயமான கோரிக்கை என்று நன்கு தெரிந்திருக்க வேண்டும். அப்போது அது மிதமாக இன அடிப்படையில் கிளப்பப்பட்ட நேரம். 'பிரிவினை முடியாது என்பதைவிட, 'கூடாது' என்று அவருக்கு அன்றே புலப்பட்டிருக்க வேண்டும் என்றுதான் நினைக்கிறேன். ஆனால், அதை முடிவாக்கி, நிலையெடுக்க அவர் பெரிதும் தயங்கி, மீண்டும் திராவிட நாட்டுப் பிரிவினைக்குப் புதுப்புது 'நியாயங்களை' சோடித்துத் தரும் பிரதம தளபதியாகப் பெரியாருக்கு விளங்கிவந்தார்.

பிரிவினை கோரிக்கைக்குப் பின் உள்ள 'பயங்கர அநீதி' அண்ணாவுக்குத் தெரிந்திருக்க வேண்டும் என சம்பத் கணிக்கிறார். க்ரிப்ஸுக்கு முன் தனது வார ஏட்டுக்கு 'திராவிட நாடு' என்று பெயர் சூட்டியவர் அண்ணா. க்ரிப்ஸ் போனபிறகும் 1945-ல், அண்ணா தன் நண்பர் ஒருவரிடம், 'நேரு உயிரோடு இருக்கிற வரை திராவிட நாடு கிடைக்காது; நேருவுக்குப் பிறகு இந்தியா என்ன ஆகும் என்று தெரியாது. அதனால், இந்தப் பிரச்னையை அப்படியே வைத்திருக்க வேண்டும்' என்றார்.

1945, செப்டம்பர் 29, 30 தேதிகளில் திருச்சியில் நடைபெற்ற திராவிடர் கழக மாகாண மாநாட்டில், அண்ணாவின் பிரிவினைவாதப் பேச்சு, இயக்கத்தின் வரலாற்றில், மிகச்சிறந்த வாதமாகக் கருதப்படுகிறது:

இந்தியா என்பது ஒரு கண்டம். எனவே, அது பல நாடுகளாகப் பிரிக்கப்பட வேண்டும். ஐரோப்பா கண்டத்தில் 32 தனித்தனி நாடுகள் உள்ளன. ஐரோப்பா முழுமையும் ஒரு குடையின் கீழ் இருக்க வேண்டுமென யாரும் கூறவில்லை. இந்தியாவும் ஒரே குடையின் கீழ் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

மதம், மொழி, கலை, மனோநிலை, ஒரு குடிமக்கள் என்ற உணர்ச்சி, வரலாற்று பந்தத்துவம் - ஆகியவைதான் இன இயல்புகள். இந்த முறையில் பார்த்தால், இந்தியாவில் தனித்தனி இனங்கள் பல

உண்டு. இவற்றை மூன்று பெரும் பிரிவுகளாகக் கொள்ளலாம்: திராவிடர், முஸ்லிம், ஆரியர் என்று. இந்த மூன்று இனங்களில் திராவிடர், முஸ்லிம் இனத்தினர் இயல்புகளில் அதிகமாக வித்தியாசம் இல்லாதவர்கள். ஆரிய இன இயல்புகளுக்கும், மற்ற இரு இன இயல்புகளுக்கும் துளியும் பொருத்தம் கிடையாது. பகைமை பெரிதும் உண்டு. இந்தத் தனித்தனி இன இயல்புகள் இருப்பதால் இனவாரியாக இந்தியா பிரிக்கப்பட்டால்தான் அந்தந்த இனத்துக்கென இடமும், ஆட்சியும் கிடைக்கும். இல்லையேல், எந்த இனம் தந்திரத்தாலும் சூழ்ச்சியாலும், தன்னலத்துக்காகப் பிறரை நசுக்கும் சுபாவத்திலும் கைதேர்ந்து இருக்கிறதோ, அந்த இனத்துக்கு மற்ற இனங்கள் அடிமைப்பட்டு வாழவேண்டி நேரிடும்.

ஓட்டமான் சாம்ராஜ்யத்தின் பிணைப்பிலிருந்து விடுபட்ட துருக்கி, வல்லரசுகளில் தலைசிறந்ததாக ஆனதுபோல, இன வாரியாக இந்தியா பிரிக்கப்பட்டால், ஒவ்வொரு வட்டாரமும் தனிக் கீர்த்தியுடன் விளங்கும்.

அசோகர், கனிஷ்கர், ஹர்ஷர், சமுத்திர குப்தர், அக்பர் முதலிய மன்னாதி மன்னர்கள் காலத்திலும் இந்தியா ஒரே நாடாக இருந்ததில்லை. அப்போதும் திராவிட நாடு எனத் தகும் தனிநாடு இருந்தது.

ஓர் இனத்தின் குரல்வளையை மற்றோர் இனம் அழுத்தி நெரித்துக் கொல்லாது போனதற்குக் காரணம், எல்லா இனத்தையும் பிரிட்டிஷ் துப்பாக்கி எந்தக் காலத்திலும் அடக்கி வைத்திருந்ததால்தான். எனவே, பிரிட்டிஷ் பிடி போய்விட்டால் இந்தியா ரணகளமாகும்.

அவருக்குத் தற்காலிக அவநம்பிக்கை இருந்திருந்தாலும்கூட தன்னுடைய திராவிட நாடு கொள்கையை அண்ணா, 1962 வரை வலியுறுத்திக்கொண்டுதான் இருந்தார்.

5

ராமாயணத்தையும் பெரியபுராணத்தையும் கொளுத்துங்கள்!



ஈ.வெ.ரா. மற்றும் அண்ணாவின் சீர்திருத்த வேகம், அவர்களின் போராட்டக் களத்தில் புதிய வியூகங்களை உருவாக்கியது. அவர்களுடைய எதிர்ப்பலை இப்போது வைணவ 'கம்ப ராமாயண'த்தின் மீதும், சைவர்களின் 'பெரியபுராண'த்தின் மீதும் பாய்ந்தது. இதன் விளைவாக, சுயமரியாதைக்காரர்களுக்கும், பிராமணர் அல்லாத சைவர்களுக்கும் இடையே, இந்தி திணிப்பு காரணமாக நிலவிவந்த தற்காலிக ஒற்றுமை விரைவிலேயே மறைந்தது. ஏற்கெனவே பிராமணர் அல்லாத சைவர்கள் சமூக சீர்திருத்தத்தில் ஆர்வம் இல்லாதவர்களாக இருப்பதைக் கண்டு சுயமரியாதைக்காரர்கள் எரிச்சல் அடைந்திருந்தனர். சைவர்களின் பெரியபுராணம் சுயமரியாதைக்காரர்களுக்கு பிற்போக்குத்தனத்தின் அம்சமாகவே தெரிந்தது. சைவர்களோ தமிழைப் புனிதமாகவும், சைவத்தை தமிழர் மதமாகவுமே மதித்தனர். பகுத்தறிவுக்காரரான பெரியாரோ 'பரமசிவனுக்கு

உகந்த மொழி தமிழ் என்றால், வைணவர்களும், முஸ்லிம்களும் அதைப் படிப்பதே பாவமல்லவா?' என்று கேட்டார்.

1942 - 44-ம் ஆண்டுகளில், இந்தப் படைப்புகளுக்கு பெரியார் காண்பித்த எதிர்ப்பு உச்சத்தை எட்டியிருந்தது. தன்னைப் பற்றி ஈ.வெ.ரா. "முதலாவதாக, நான் கடவுள் தத்துவத்தையே எதிர்த்துப் பேசுகிறேன். இரண்டாவதாக, நான் உலகிலுள்ள மதங்களைச் சிறுமைப்படுத்துகிறேன். மூன்றாவதாக, நான் சாத்திரங்களையும், புராணங்களையும், கடவுள்களையும் கண்டனம் செய்கிறேன். அவற்றைக் கொளுத்தி அழியுங்கள் என்கிறேன்" என்றார். எனினும் தாம் நாத்திகர் அல்ல என்று ஈ.வெ.ரா. மறுத்தார். தம்முடைய வழிமுறைகள் எல்லாம் பகுத்தறிவுச் சிந்தனையைத் தூண்டுவதற்கும், முறையாகப் பிரச்னைகளை அணுகுவதற்கும் மட்டுமே என்றார்.

எனவே, ஈ.வெ.ரா.வும் அண்ணாவும் இந்த இரு சமய இலக்கியங்களையும் தீ வைத்துக் கொளுத்தும் அளவுக்கு எதிர்ப்பு காண்பித்ததில் வியப்பு ஏதுமில்லை. தமிழறிஞர்கள் ரா.பி.சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதி போன்றவர்களின் நிலைமை, 'அவை பாதுகாக்கத் தகுந்தவை' என்று வாதிடும்படி ஆயிற்று. இந்த இருவருடனும் அண்ணா தனித்தனியே நடத்திய வாதங்கள், தம்பிகளுக்கு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவையாக இருந்தன. (முதல் விவாதம் 'தீ பரவட்டும்' என்ற தலைப்பில் சிறு நூலாக வெளியிடப்பட்டது.) அண்ணாவைப் பொறுத்தவரை, கம்பனாட்டாழ்வார் ஓர் இலக்கிய படைப்பாளி என்றே கருதினார். அண்ணாவின் எதிர்ப்பு தன் தலைவரை மகிழ்விக்கவே அன்றி, இவற்றால் தமிழ்ச் சமுதாயத்துக்கு ஆபத்து ஏதும் விளையும் என்று அவர் உள்ளர்த்தமாக எண்ணியதாகத் தோன்றவில்லை. எனினும், இந்த இரு நூல்களையும் எரியூட்ட வேண்டி அவர் ஆற்றிய உரை, இளைஞர்கள் நாவலர் நெடுஞ்செழியன் போன்றவர்களின் மனதை தீயாகப் பற்றிக்கொண்டது.

1943, பிப்ரவரி 19 அன்று, சென்னை சட்டக் கல்லூரியில், சேதுப்பிள்ளையுடன் அண்ணா விவாதம் செய்தார்:

> கம்ப ராமாயணம், பெரியபுராணம் ஆகியவற்றைக் கொளுத்தவேண்டும் என்று எனது தலைவர் ஈ.வெ. ராமசாமி கூறியது கண்டு மக்களுக்குக் கோபம் வருவது இயற்கை என்று தலைவர் உரைத்தார்; உண்மை. மக்கள் கோபிப்பர் என்பதை நாங்களறிவோம். நாங்கள் துவக்கிய எந்தக் காரியத்துக்கும், நாங்கள் புகுத்திய எந்தக் கருத்துக்கும் எதிர்ப்பு ஏற்பட்டு மக்கள் கோபித்து, பின்னர்

எம்முடன் சேர்ந்து எமது பாசறைகளுக்கு வந்து விட்டனர் என்பதை அவர் அறிய வேண்டுகிறேன்.

ஆனால், யாரையும் புண்படச் செய்ய வேண்டும் என்பதற்காக இந்தக் காரியத்தைத் துவக்கினோமில்லை.

'கலையை அழிக்கின்றனர். கம்பன் புகழை மறைக்கின்றனர்' என்று கூறப்படும் பழிச்சொல்லை நாங்கள் அறிவோம். கலையில் தேர்ந்து, அதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு, கம்பனின் ராமாயணமும் சேக்கிழாரின் பெரியபுராணமும் கலை என்று கருதும் அன்பர்கள், ஒரு பெரியாரின் பேரால், ஓர் அண்ணாதுரையின் அனலால் அந்தக் கலை அழிந்துவிடும் என்று கருதினால், அவ்வளவு சாமான்யமானது கலை ஆகாது. அத்தகைய கலை இருக்கவும் முடியாது என்றுரைக்க ஆசைப்படுகிறேன். எமது செயல், கலையைக் குலைப்பது அல்ல. சரியான காரணங்களோடு கலையில் புரட்சி உண்டாக்குவதே!

ஆராய்ச்சியாளர்களின் முடிவு, ராமாயணம் ஆரியக் கதை என்பதும், ஆரிய - திராவிடப் போராட்ட விவரம் என்பதாகும். கம்பர், அதை எழுதியுள்ள முறை, தமிழர் ஆரியத்தை ஏற்றுக்கொள்ளும் தூண்டுகோலாகவும், தமிழ் இனம் ஆரியத் தலைவரிடம் தோற்றுவிட்டது என்பதை ஒப்புக்கொள்ளச் செய்வதாகவும் இருப்பதால், அந்த நூலைப் படிக்கும் தமிழ் இனம் தன்னம்பிக்கை, தன்மானம் இழந்து கெடுகின்றது என்று கூறுகிறோம். தமிழ் இனம் புத்துயிர் பெற, இத்தகைய ஆரியக் கலையை அழிப்போம் என்று உரைக்கிறோம். இது இன எழுச்சியின் விளைவு.

நாங்கள், கம்பனின் கவித்திறமை குறித்து விவாதிக்கும் நோக்கம் உடையவர்கள் அல்ல. திறமை வேறு, தன்மை வேறு, விளைவு வேறு. கம்பனின் கவித்திறமையைக் கண்டு நாங்கள் வியக்கிறோம். அந்தத் திறமை ஆரியத்தை ஆதரிக்கும் தன்மையாயிற்றே என்பது கண்டு திகைக்கிறோம். தமது கவித்திறமையால் ஆரிய ராமனைக் குற்றங் குறையற்ற சற்புத்திரனாகக் காட்டி, வழிபாட்டுக்குரிய

தெய்வமாக்கிவிட்டார் கம்பர். ராவணன் மிக்க பலசாலி, திறமை உடையவன், வேதம் பயின்றவன், சிவ பக்தன், இலங்கை சகல சுகமும் நிரம்பிய இடம் என்று வர்ணித்துவிட்டு, இவ்வளவு குணாளனும் திறமைசாலியுமான ராவணன், ஓர் ஆரிய மங்கையைக் கண்டு காமுற்றுக் கருத்தழிந்து, அறம்விட்டு அழிந்தான் என்று முடிப்பது திராவிட இனப் பெருமைக்கே ஊறு தேடுவதாகும். ஓர் அரசன் ஆரிய மங்கையைக் கண்டு காமுற்றுக் கருத்தழிந்தான் என்ற கதையைப் படிப்பது திராவிடருக்கும் ஆபத்து, ஆரியருக்கும் ஆபத்து.

நட்பின் சிறப்புச் சாற்ற ராமனும் குகனுமாவது கண்டதும் நட்புக்கொண்டனர். கம்ப சித்திரத்தின் மாண்பு அது என்றால், கோப்பெருஞ்சோழன் எனும் அரசனும், பிசிராந்தையாரும் ஒருவரை ஒருவர் காணாமலே - ஒருவர் பற்றி ஒருவர் கேட்டே மாறா நட்பினராக இருந்ததை விளக்கும் சங்கக் கவி நம்மிடம் இருக்கும் மாண்பு பற்றி பண்டிதர்களுக்கும் கவனமூட்டி, நட்பின் பெருமையைக் கம்பராமாயணம் ஒழிந்தால் நாடு மறந்திடாது. முன்னாள் இலக்கியமுண்டு என்று கூறுகிறேன்.

ராமனாவது தந்தை சொல் கேட்டு, சிற்றன்னையின் கொடுமையால் அரசு துறந்தான். இளங்கோ அடிகளோ, தாமாகவே மனமுவந்து அரசு துறந்தார். வறியனாகித் திரும்பிடும் கோவலனை கண்ணகி கண்டபோது, தனக்குற்ற இடரெல்லாம் மறந்து, கோவலனிடம் கனிமொழி பேசிய அந்த மாண்புடன், காட்டுக்கு வராதே என்றதும் ராமனை நோக்கி சீதை பேசும் மொழியுடன் ஒப்பிட்டுப் பார்த்து, கற்பின் மாண்புக்கு சிலப்பதிகாரமிருக்க, கம்பனின் ஆரியக்கதை வேண்டுமா என்று யோசிக்கும்படி வேண்டுகிறேன்.

கம்ப ராமாயணத்தில், வீரம் செறிந்துள்ளது என்பர் புலவர். தமிழ்நாட்டவருக்கு வீரத்தை உணர்த்த ஆரிய ராம காதை அன்றி வேறு வழி இல்லையா என்று கேட்கிறேன்.

சேரன் செங்குட்டுவன், கங்கைக் கரைவரை சென்று வெற்றிக்கொடி நாட்டியதை வீரம் என்று கூறுங்கள்; பொருத்தமாக இருக்கும்; தமிழினத்தின் புகழை



அண்ணா, பெரியார் உள்ளிட்டோர்

உலகம் அறியும். அலைகடலை அடக்கும் மரக்கலம் செலுத்தி, ராஜேந்திரன் பர்மாவை வென்றதைக் கூறுங்கள்; அது வீரச் செயல்.

பொதுமக்கள் ராமாயணம் என்றதும், மண்ணுக்கும் விண்ணுக்குமாக ஓங்கி வளர்ந்த அனுமனின் அடிவிழுவும் ஆரியரை வணங்கவும் அறிவரேயன்றி, ராமகாதை கற்பனை, அதிலே உள்ள கவித்திறனைக் கண்டுகளிப்பதே முறை என்றா எண்ணுகின்றனர்?

ராவணன் சீதையை எடுத்துச் சென்றது காமச் செயல் என்றல்லவா இன்றும் கூறுகின்றனர்? அந்தக்காலப் போர் முறையிலே ஆநிரை கவர்தல், மாதரை எடுத்தல், கோட்டை தாக்குதல் என்பன முறைகள். ஆகையால் ராமனைப் போருக்கு இழுக்க, அந்தச் சமயத்திலே ராமனிடம் எஞ்சியிருந்த விலைமதிக்கக் கூடிய பொருள் சீதை மட்டுமே! ஆகையால், சீதையை எடுத்துச் சென்றான் என்ற உண்மையை உரைக்கலாகாதா?

-என்று ஒரு தர்க்கரீதியான காரணத்தைச் சொன்னார் அண்ணா.

இனத்தைத் தாழ்த்தும் கருத்துகளை கண்டிக்கவே பெரியபுராணத்தையும் நாங்கள் கண்டிக்கிறோம். அந்தப் புராணத்தில் வரும் அடியவர்களின் கதையால் ஏற்படும் கடவுள் கருத்துகள் எவ்வளவு அறிவீனமாக இருக்கின்றன என்பதைப் பாருங்கள். பக்திக்காக அடியவன் எதுவும் செய்வான் என்று, அவன் பெருமையைக் கூறப் பெரியபுராணம் எழுதப்பட்டது என்றால், ஆண்டவன் இத்தனை கடுமையும் கொடுமையும் நிரம்பிய சோதனைகளைச் செய்தார் என்று கூறுவது, கடவுள் இலக்கணத்துக்கே இழிவைத் தராதா?

ஆரியக் கலை வேறு. ஆரியக் கலை, நம்பமுடியாத கருத்துகளும் ஆபாசமும் நிரம்பியது; திராவிட இனத்தை அடக்கவும், பண்பை அழிக்கவும் பயன்பட்டு, பாமரரின் மனதைப் பாழாக்குகிறது என்ற குற்றச்சாட்டுகளைக் கூறி, கம்ப ராமாயணத்தையும் பெரியபுராணத்தையும் கண்டிக்கிறோம். அவற்றைக் கொளுத்தவேண்டும் என்று கூறுகிறோம்.

பாவம், சேதுப்பிள்ளையின் பதில் பத்து நிமிடங்களில் முடிந்து அவர் கிளம்பிப் போனார்:

ராவணன் திராவிடன் - தமிழன் என்பதை நான் மறுக்கிறேன். ராவணன் திறமைசாலி, கல்விமான், சிவபக்தன், ஆற்றல் மிக்கவன் என்று அவர்கள் சொன்னார்கள். அவர்கள் கூறிய அவ்வளவு குணங்களும் ராவணனிடம் இருந்தன. ஆனால், ஒன்று இல்லை. அவன் அழிவுக்கு அதுவே காரணம். இரக்கமென்ற ஒரு பொருளிலா அரக்கன் என்றுரைத்தார் கம்பர். ராவணனிடம் எல்லாம் இருந்தது. இரக்கம் ஒன்றுதான் இல்லை. இரக்கமற்ற நெஞ்சுடையவனான ராவணனை, தன் மரபு என்று கூறுகின்றாரே இவர்! தமிழர் இரக்கமற்ற நெஞ்சினரா என்று கேட்கிறேன்!

ராவணன் ஆரியன் என்று பிள்ளை சொன்னதை, அண்ணா மறுத்தார். "அது வாதமும் அல்ல, ஆதாரமும் கிடையாது" என்றார்.

இது நடந்து ஐந்து வாரங்களுக்குப் பின்னர், 1943 - மார்ச் 14 அன்று சேலத்தில் அண்ணா சோமசுந்தர பாரதியாரை

எதிர்கொண்டார். அண்ணா கலையை 'இனம்' என்ற பின்னணியில் வைத்துப் பார்த்தார். தங்களின் திராவிட நாடு என்ற கொள்கையையும் இந்தக் கோணத்தில் விளக்கி, "இஸ்லாமியர்கள் இரண்டு ஆண்டுகளில் இவ்வளவு வலிமை பெற்று வாழ்வதற்குக் காரணம், இந்துக்களின் நெறியும், கலையும் தமதல்ல என்பதைத் தெரிந்து வாழ்ந்து வருவதால்தான். தமிழரோ ஆரிய மார்க்கத்தையும், கலைகளையும் தமதெனக் கருதிக்கொண்டு, ஆரியக் கற்பனைகளைத் தமிழ்க் கலையிலே கலக்கிக் கொண்டதாலேயே, இன்று தமிழர் என்ற தனி உரிமைக்கோ, தன்மானத்துக்கோ, தன்னரசுக்கோ போரிட முடியாத நிலையை அடைந்தனர்" என்றார் அண்ணா.

"தமிழர் இந்துக்கள் அல்லர். தமிழருக்குத் தனி நெறி உண்டு என்றாலும், சைவ - வைணவ மார்க்கங்களைத் தழுவிக்கொண்டு, தமிழர் தம்மை இந்துக்கள் என்று கருதிவருகின்றனர். தமிழ் நெறியை விட்டு, ஆரிய நெறியாகிய இந்து மார்க்கத்தைக் கொண்டு தம்மை இந்துக்கள் என்று கருதுவதால், தமிழர் தாங்கள் தனி இனம் என்பதை மறந்து, இந்துக்களில் ஒரு பகுதி என்று எண்ணித் தன்மானத்தையும், தன்னரசையும் இழந்தனர்" என்றார்.

ராமாயணம் பிராமணர்களின் உயர்வை எடுத்துக் காண்பிக்கிறது என்றார் அண்ணா. விஷ்ணுவின் அவதாரமான ராமன் காட்டுக்குச் செல்லும் முன், பிராமணர்களுக்கு தானம் கொடுப்பதை அதற்கு உதாரணம் காட்டினார். அதனால் மக்களும் ராமனைப் பின்பற்ற வேண்டும் என்பதற்காக, பிராமணர்களுக்கு தானம் கொடுப்பதும், இறந்துபோனவர்களின் நினைவு தினத்தன்று 'திதி' போன்ற நிகழ்ச்சிகளை நடத்துவதும் வழக்கமாகிவிட்டது என்பதை சுட்டிக்காட்டினார். சிவனார் மண்ணுலகுக்கு மனிதனாக அவதரித்து வரும்போதெல்லாம் அந்தணர் வடிவில்தான் வருவார் எனப்படுகிறது. இதன்மூலம் பிராமணர்கள் மட்டுமே கடவுளின் நேரடி அவதாரங்கள் என்று சொல்லாமலே சொல்வது கடுமையாக விமரிசிக்கப்பட வேண்டியது. இதைக் கடைசியாக விமரிசித்தது சுயமரியாதை இயக்கம். அதற்கே வெகுண்டெழுந்தார்கள் சைவத் தமிழர்கள். எனினும் அண்ணா துணிவோடு சொன்னார்:

> பெரியபுராணம் படித்தவர், சாதிகள் பல இருப்பின் இருக்கட்டும். குலத்துக்கோர் தொழில் இருப்பின் அந்தக் குலத்தொழிலே செய்வோம். ஆனால், பக்தி செய்தால் எந்தக் குலமாக இருப்பினும் மேன்மை அடையலாம் என்று நினைக்க முடியுமே தவிர, சாதிபேதம் ஒழியவேண்டும், வர்ணாசிரமம் மறைய வேண்டும் என்ற பாடத்தை, உணர்ச்சியை,

பெரியபுராணத்தைப் படித்துப் பெறமுடியாது. இன்று நமக்கு வேண்டியது சமத்துவ உணர்ச்சி. ஆரியத்தால் கெடும் நிலையை மாற்றும் துணிவு. இதற்குப் பெரியபுராணம் பயன்படாததுடன், சாதி இழிவுகளையும், ஆரிய முறைகளையும் பக்தியின் பேரால் நிலைத்திருக்கச் செய்கிறது.

நந்தனார் உழுது அடிமை வேலை செய்து வாழ்ந்தார். தீயிலிடப்பட்டு பிராமண வடிவு பெற்று சிவசோதியில் கலந்தார் என்றுதான் சைவர்கள் கூறுவர். நந்தன் ஆதிதிராவிடனாகப் பிறந்ததால் அடிமை வேலையே செய்தான்; அதுவே முறை; அதை ஆண்டவன் மாற்றவில்லை என்பதே அத்தகைய வரலாறுகள் புகட்டும் பாடம். இது தமிழனின் தன்மானத்துக்குப் பயன்தருவது ஆகாது.

அண்ணாவின் பேச்சாற்றலின் முன்னால் சேதுப்பிள்ளையும் சோமசுந்தர பாரதியாரும் தடுமாறிப்போனார்கள். "தோழர் அண்ணாதுரையின் பொருளாழமும் சொற்சுவையும் பொருந்திய நீண்ட பிரசங்கத்தைக் கேட்டு இன்புற்றீர்கள்" என்று எதிராளியைப் புகழ்ந்து தனது பேச்சை ஆரம்பித்த சேதுப்பிள்ளை பத்து நிமிடங்கள் மட்டுமே பேசினார். அதற்கு அண்ணா பதில் சொல்வதற்குள், தனக்கு உடல்நலம் சரியில்லை என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார். "உபந்யாசகர் (அண்ணா) 'டிபேட்' (தர்க்கவாத) முறையில் பேசவில்லை. உணர்ச்சி ததும்பும் ஓர் ஆபரேஷன் (சொற்பொழிவு) செய்து, உங்கள் மனதைக் கவர்ந்திருக்கிறார். நான் இப்போது பேசி, உங்கள் மனதை மாற்ற முடியுமென்று கருதவில்லை," என்று சோர்ந்த மனப்பான்மையோடு தனது எதிர்வாதத்தை முன்வைத்தார் பாரதி. இதற்கான அண்ணாவின் பதிலைக் கேளாமல் ரயிலுக்கு நேரமாகிவிட்டதென்று இவரும் போய்விட்டார். களத்தில் தங்களவர் வெற்றி பெற்றுவிட்டதாகவே சுயமரியாதைக் காரர்களுக்கு உணர்ச்சி ஏற்பட்டது.

அண்ணாவின் வாதம் வழிவழியாக இருந்துவந்த நம்பிக்கைகளைக் கேள்விக்கு உள்ளாக்கியது. தொடக்கத்தில் ஈ.வெ.ரா., 'ராமாயணம்: ஒரு புதிய பார்வை' என்று ராமாயணத்தைக் குறைகூறித் தன் வாதத்தை எளிமையான முறையில் ஆரம்பித்து வைத்தார். வாதத்தின் உயிர்நாடியாக கதாநாயகனை எதிரியாகவும், எதிரியைக் கதாநாயகனாகவும் பாத்திரங்களையே இடம் மாற்றியிருந்தார். ஆக, பத்துத்தலை ராவணன் என்ற அசுர அரசன், நேர்மையானவனாகவும், முறையாகச் சிந்திப்பவனாகவும்;

ராமனும் மனைவி சீதையும் நேர்மையற்ற பொய்யர்களாகவும் சித்திரிக்கப்பட்டனர். (பௌலா ரிச்மேன் ஈ.வெ.ரா.வின் கருத்தை கூர்மையான விமரிசனக் கண்ணோட்டத்துடன் ஆய்வு செய்திருக்கிறார்.)

ராமாயணம் வடக்கத்திய ஆரியர்களுக்கும், தெற்கத்திய திராவிடர்களுக்கும் நடந்த போர் என்று ஈ.வெ.ரா. விவரித்தார். இதை நேரு உட்பட, பல ஆராய்ச்சியாளர்கள் ஏற்கெனவே எடுத்துக் கூறியிருந்தனர். ஆனால், ஈ.வெ.ரா.தான் பாத்திரங்களை மாற்றியமைத்து அதை ஒரு நிலைப்பாடான முடிவுக்குக் கொண்டுவந்தார்; தன் வித்தியாசமான பார்வை மூலம் நிகழ்வுகளையும், பாத்திரங்களையும் மாற்றிக் காட்டினார். "தொடர்ந்து இனியும் இந்தப் புராணத்தை மதித்து மரியாதை செய்வது தமிழர்களின் சுயமரியாதைக்கு இழுக்கு" என்றார். ஈ.வெ.ரா.வின் புதிய கோணம் அவரது தொண்டர்களுக்கு மிகவும் பிடித்துப்போயிற்று. இயக்கக் கவிஞர் புலவர் குழந்தை, ராவணனைக் கதாநாயகனாக வைத்து, 'ராவண காவியம்' படைத்தார் என்றாலும், ஈ.வெ.ரா. வட்டத்தைச் சேர்ந்த தீவிர தொண்டர்களைத் தவிர, அவரின் பார்வை பெரிய அளவில் ராமாயணத்துக்கு ஊறு எதையும் ஏற்படுத்தவில்லை. ஈ.வெ.ரா.வின் பிரசாரமும் அண்ணாவின் பேச்சுத்திறனும், ராமாயணம் பற்றியோ, ராமன் பற்றியோ மக்களின் மனதை மாற்றிவிட முடியவில்லை. ஆனால், ராவணனை வில்லன் என்று கூறிவந்ததை இவர்களின் வாதம் மறுபரிசீலனைக்கு உட்படுத்தியது.

கம்பனின் நியாய உணர்வைக் கேள்விக்கு உள்ளாக்கும் அண்ணாவின் 'நீதி தேவன் மயக்கம்' என்ற நாடகத்தில், கதைப்படி தீயவனான ராவணன், நியாயம் கேட்கிறான். இறுதியில் ராவணனின் வாதத்தில் இருக்கும் நியாயத்தைக் கேட்டு, நீதி தேவன் மயங்கி விழுந்துவிடுகிறான்!

கம்பனின் கவிதையை மிக உயர்வாக அண்ணா கருதினாலும், அதன் மயக்கும் தன்மை அவரை எச்சரிக்கை கொள்ளச் செய்தது. அதற்காகவே 'கம்பரசம்' என்ற தலைப்பில் அவர் எழுதிய எட்டுக் கட்டுரைகளிலும் கம்பராமாயணத்தை, தேவையற்ற காம வர்ணனைகள் நிறைந்த ஆபாச இலக்கியம் என்று அண்ணா வர்ணித்தார். தன் தலைவர் பெரியார், ராமாயணம் - தெற்கை வடக்கு வெற்றி கொண்டதாக சொல்லும் கதை என்று தாக்கியதைத் தொடர்ந்து, கம்பனின் படைப்பில் ஆபாசம்தான் தூக்கி நிற்பதாகக் கூறி, கம்பனை இன்னொரு முனையிலிருந்து அண்ணா தாக்கினார். ஆனாலும், பி.சி.கணேசனிடத்தில் தனது குற்றச்சாட்டு இலக்கிய

விமரிசனமல்ல என்றும் பிரசாரத்துக்காக மட்டுமே எழுதப்பட்டது என்றும் அண்ணா ஒப்புக்கொண்டார். மக்களின் கவனத்தை, ராமாயணத்திலிருந்து திருப்பும் தன் செயலை நியாயப்படுத்தி, தவறான பாதையில் செல்லும் தமிழர்களைத் தடுக்கவே தாம் இப்படிச் செய்ததாகக் கூறினார்.

மேலைநாட்டு இலக்கியங்களில் வெளிப்படையாக ஆபாச வர்ணனைகள் இருக்கும்போது, கம்பனை மட்டும் ஏன் வேறுபடுத்தி பார்க்கவேண்டும் என்று பி.சி.கணேசன் கேட்க, ஒரு வழக்கறிஞர் தன் எதிரணியின் வாதத்தில் இருக்கும் நியாயத்தை ஏற்றாலும்கூட, அவற்றை எடுத்துச் சொல்ல மாட்டார் என்று பதிலளித்தார் அண்ணா. "தமிழ் மொழியில் நல்ல சொல்லாட்சித் திறம் உனக்குக் கிடைக்க வேண்டுமானால் கம்ப ராமாயணத்தையும், திருவாசகத்தையும் நீ ஊன்றிப் படிக்கவேண்டும்!" என்றார் அண்ணா.

எதிரியின் எண்ணத்தையும் பலத்தையும் பாராட்டுவதில் அண்ணா தனித்துத் தெரிந்தார். 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு' என்ற அவருடைய அரசியல் வாசகம் இன்றைக்கும் அதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. பேச்சுத் திறனில் வல்லவர் என்றாலும், மிகுந்த அடக்க உணர்வோடும், எளிமையாகவும் அண்ணா திகழ்ந்தது அவருக்கு மேலும் பெருமை சேர்த்தது.

அண்ணாவின் ஆரம்பகாலத் தோழர் டி.கே.சீனிவாசன், ஒருமுறை திருச்சி டவுன் ஹாலில் அண்ணாவின் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்திருந்தார். முதல்நாள் தமிழிலும், அடுத்தநாள் ஆங்கிலத்திலும் அண்ணா பேசுவதாக ஏற்பாடாகியிருந்தது. நிறைய விளம்பரம் செய்யப்பட்டு, நிறைய பாடுபட்டு அந்தக் கூட்டங்களை ஏற்பாடு செய்திருந்தார் சீனிவாசன். ஆனால், திடீரென நாவலர் சோமசுந்தர பாரதி பேசுவதாக அறிவிப்பு வெளியாகியது. துரதிர்ஷ்டவசமாக பாரதியின் சொற்பொழிவும் அண்ணாவின் ஆங்கிலப் பேச்சும் ஒரே நாளில் அமைந்தது. ஆர்வம் உள்ள திருச்சி மக்கள் அவ்வளவு அதிகம் இல்லாவிட்டாலும், இருக்கும் சிலர் அண்ணாவின் பேச்சுக்கே வருவர் என டி.கே.சீனிவாசன் அறிந்திருந்தார்:

இரண்டு கூட்டங்களும் நல்ல முறையில் விளம்பரப்படுத்தப்பட்டன. முதன் முதலாக அப்போதுதான் அண்ணா திருச்சியில் ஆங்கிலத்தில் பேச இருந்ததால், ஆங்கிலம் தெரியாதவர்கூட அது எப்படி இருக்கும் என்பதைக் கேட்கும் ஆர்வத்தோடு இருந்தனர். அந்த வாய்ப்புக்காக எங்களுக்கு வாழ்த்துகள்கூட கிடைத்தன. நாங்கள்,

கூட்டங்களை விளம்பரப்படுத்திய பிறகு, கட்சிக்கு எதிர்ப்பாக இருந்த சிலர், அண்ணா ஆங்கிலத்தில் பேச இருந்த அன்று திருச்சி முனிசிபல் பப்ளிக் ஹாலில் நாவலர் சோமசுந்தர பாரதியார் கூட்டமொன்றை ஏற்பாடு செய்து விளம்பரப்படுத்தினர்.

அந்தக் காலத்தில், திருச்சியில் இரண்டு கூட்டங்களில் பிரிந்து கேட்கும் அளவுக்குச் சொற்பொழிவைக் கேட்பவர்கள் வளரவில்லை. உறுதியாக, பாரதியார் பேச்சைக் கேட்க எவரும் போகமாட்டார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். எங்களிடமிருந்த பழிவாங்கும் உணர்வால், சரியான பாடம் கற்றுக்கொள்ளப் போகிறார்கள் அந்த நண்பர்கள் என்று எண்ணி இறுமாந்திருந்தோம்.

முதல் நாள் கூட்டத்துக்கு வரும்போதே மறுநாள் நடக்க இருக்கும் இரண்டு கூட்டங்களுக்கான சுவரொட்டிகளையும் பார்த்துவிட்டு வந்திருந்தார் அண்ணா. வந்ததும் என்னைக் கூப்பிட்டு, "நாளைய கூட்டம் இல்லை என்று அறிவித்துவிடு!" என்றார்.

அது ஒரு தாக்குதலைப் போலத்தான் இருந்தது எனக்கு.

"விளம்பரம் செய்தாகிவிட்டது. எல்லோரும் உங்களுடைய தமிழ்ப் பேச்சைவிட ஆங்கிலப் பேச்சைதான் அதிகமாக எதிர்பார்க்கிறார்கள். அதை எப்படி நிறுத்த முடியும்?" என்று என்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்தேன்.

"பாரதியார் கூட்டம் நடக்கும்போது, நாம் கூட்டம் போடுவது முறையல்ல, நிறுத்திவிடு" என்றார்.

அந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்களைத் தவிக்கச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் தகர்க்கப்பட்டது. நான் என்னையே மறந்துவிட்டேன்.

"நாம் விளம்பரம் செய்தபிறகுதான் அவர்கள் அந்தக் கூட்டத்தையே ஏற்பாடு செய்தார்கள். அந்தக் கூட்டத்துக்கு யாருமே போகமாட்டார்கள். நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்?" என்று உணர்ச்சிவசப்பட்ட நிலையில் உரத்துக் கூவினேன்.

"நானும் அதனால்தான் இந்தக் கூட்டத்தை நிறுத்தச் சொல்லுகிறேன். பாரதியார் கூட்டத்துக்கு யாரும் போகாமல் இருப்பது அவருக்கு ஏற்படுத்தும் அவமானமல்லவா? கட்சியைப் பரப்புவதைவிட, பெரியவர்களை மதிப்பதுதான் முக்கியம். நீ சொல்லாவிட்டால், நானே நாளைக்குக் கூட்டம் இல்லை என்று பேசும்போது தெரிவித்துவிடுவேன்" என்று கண்டிப்பாகச் சொன்னார் அண்ணா. "நான் மூத்தவர்களுக்கு மரியாதை

கொடுப்பதை என் வாழ்வில் முதன் முதலாகக் கொண்டு நடந்ததால்தான் என்னைவிட வயதில் பெரியவர்கள்கூட என்னை 'அண்ணா' என்று வாயார அல்ல - நெஞ்சார அழைத்தார்கள்; மதித்தார்கள்!"

- என்று அண்ணா கூறியதாக சீனிவாசன் நினைவுகூர்ந்தார்.

இந்த மாதிரி குணநலன்களே அண்ணாவின் திறமையைப் பெருக்கி, அவர் பின்னால், அரசியலில் புதிய நபர்களைக் கொண்டுவர உதவின. அண்ணாவுக்கு மாணவரிடையே செல்வாக்கு பெரிதும் ஓங்கியது. 1940-களில் காங்கிரஸும் கம்யூனிஸ்ட்டு கட்சியுமே மாணவர்களிடையே மிகுந்த செல்வாக்குள்ள கட்சிகளாக இருந்தன; மாணவ சமுதாயம் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் பங்கு பெறாத நேரம். தமிழ் தேசியத்தின் விளைநிலமாக விளங்கிய அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மாணவரிடம் திராவிட இயக்கத்தைக் கொண்டு செல்வதில் முதன்மையாக இருந்தது. இங்கேதான் அண்ணா, தனக்குப் பின்னர் புகழ்பெற்ற தோழர்களையும், தொண்டர்களையும் அடையாளம் கண்டார்: நாவலர் நெடுஞ்செழியன் (அப்போது நாராயணசாமி), பேராசிரியர் க.அன்பழகன் (ராமையா), க.அ.மதியழகன் (சோமசுந்தரம்), இரா. இளம்வழுதி (ஆர்.தண்டபாணி) அவர்களில் சிலர்.

1942-ல் இந்த மாணவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேச அண்ணாவை அழைக்க விரும்பினர். பிராமண ஆசிரியர்களின் உணர்வுகள் குறித்து கவலையுற்ற துணைவேந்தர் கே.வி.ரெட்டி, அனுமதி மறுத்துவிட்டார். மாணவர்கள் உடனே தமிழ்த்துறைப் பேராசிரியர் கே.எஸ்.பிள்ளையின் உதவியை நாடினர். அண்ணாவின் கம்பராமாயண எதிர்ப்புப் பிரசாரத்தை ஏற்காத பண்டித கதிரேசன் செட்டியார், பிள்ளையை செயல்படவிடாமல் தடுத்துவிட்டார். இவற்றை அறியாத அண்ணா சிதம்பரத்துக்கு வந்து சேர்ந்துவிட்டார்! மாணவர்கள் சோர்ந்துவிடாமல் அருகேயிருந்த பள்ளிக்கூடம் ஒன்றில், தமிழாசிரியர் என்.எம். மாணிக்கத்தின் உதவியுடன் கூட்டத்தை ஏற்பாடு செய்துவிட்டனர்.

அண்ணாவுக்குக் கொடுக்கப்பட்ட தலைப்பு: 'இளம் நெஞ்சம்!' அண்ணாவின் பேச்சில் கிறங்கிப்போய்விட்ட 'இளம் நெஞ்சங்கள்', எப்படியாவது அனுமதியுடன் அண்ணாவைப் பல்கலைக் கழகத்துக்குள் அழைத்துவரத் துடித்தார்கள். 1943-ல் தமிழ்ச் சங்கச் செயலராக இருந்த க.அன்பழகனின் முயற்சியின் காரணமாக, துணைவேந்தராக இருந்த எம்.ரத்தினசாமி பல்கலைக்கழகத்தில் வந்து பேச அண்ணாவுக்கு அழைப்பு அனுப்பினார். பேராசிரியர்

கே.எஸ்.பிள்ளை தலைமை வகிக்க, அண்ணா 'ஆற்றோரம்' என்ற புகழ்மிக்க சொற்பொழிவாற்றினார். நதிக்கரைகளில் வளர்ந்த நாகரிகங்களில் தொடங்கி சிந்து சமவெளி நாகரிகம் வரை அமைந்திருந்தது அவர் பேச்சு. பின்னர், மாணவர்களின் வேண்டுகோளை ஏற்று, துணைவேந்தரே தலைமை வகிக்க, ஆங்கிலத்திலும் பேசினார் அண்ணா. 'உலகம் பழையதும் புதியதும்' என்ற தலைப்பில் பேசிய அண்ணாவின் பேச்சில் கட்டுண்டுபோன மாணவர்கள் அவரை சில நாட்கள் தங்களுடன் தங்கியிருக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர். அண்ணா மூன்று நாட்கள் விடுதியில் தங்கினார். அப்போது அங்கு மாணவராக இருந்த, தமிழ் தேசியத் தலைவர் பழ.நெடுமாறன், '1945-க்குப் பிறகு அண்ணாவை பல்கலைக்கழகத்துக்குள்ளேயே அழைக்கக்கூடாது' என்ற தடை உத்தரவு இருந்ததாகப் பதிவு செய்திருக்கிறார். அண்ணாவின் கவர்ச்சி அவ்வளவு பெரிய அச்சுறுத்தலாக இருந்தது!

அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள் அண்ணாவைச் சந்திப்பதற்கு ஒரு வருடத்துக்கு முன்பு, கலைஞர் கருணாநிதி, தமிழ்நாடு - தமிழ் மாணவர் மன்றம் நிறுவி, 'முரசொலி' கையெழுத்துப் பத்திரிகையைத் தன் ஊரான திருவாரூரில் தொடங்கியிருந்தார். 1943, டிசம்பர் 1 அன்று கும்பகோணத்தில் திராவிடர் கழக மாணவர் முதல் மாநாடு நடைபெற்றது. 'திராவிட நாடு' இதழில், 'திராவிடர் கழகம்' என்ற தலைப்பில் அண்ணா தலையங்கம் எழுதியிருந்தார். தவமணி ராஜன், கருணானந்தம் இருவரும் மாநாட்டைக் கூட்டியிருந்தனர். நாவலர் நெடுஞ் செழியன், பேராசிரியர் அன்பழகன், கே.ஏ.மதியழகன், இளம்வழுதி, ஏ.பி.ஜனார்த்தனம் ஆகியோர் பங்குகொண்டனர். ஈரோட்டில், அண்ணா தலைமையில் மாணவர்களுக்குப் பயிலரங்கம் நடந்தது. 1946-ல், தன் சித்தப்பா ஈ.வெ.ரா.வின் விருப்பப்படி, ஈ.வெ.கி.சம்பத் நீடாமங்கலத்தில் மாணவர் அணிக்குத் தலைமை ஏற்றார். சென்னையில் திராவிடக் கருத்துகளைப் பரப்ப ஏ.எஸ்.வேணு ஓர் அமைப்பை உண்டாக்கினார்.

எனினும் பணியே முழுநேரம் என்று அண்ணாவோ, மற்றவர்களோ இருந்துவிடவில்லை. நினைத்தால் காஞ்சிபுரம் போவதில் மகிழ்ச்சி அடைவார் அண்ணா. சென்னையில் இருந்தால் அவரைப் பார்க்க வருகிறவர்களிடம் வேடிக்கையாக பேசி மகிழ்வார். அண்ணா, அப்போது சென்னையில் கருப்பண்ண முதலி தெருவில் வசித்துவந்தார். மாலை ஆறு மணி ஆகிவிட்டால், நண்பர்கள் அங்கே கூடிவிடுவார்கள். பின்னர், ஒரே கலகலப்புதான்!

நாவலர் நெடுஞ்செழியனின் சகோதரர் இரா.செழியன், என்.வி.நடராஜன் மற்றும் டி.வி.நாராயணசாமி ஆகிய திராவிட இயக்கப் புள்ளிகள் தவறாமல் வருகைதருவார்கள். மாலை நேரத்தில் கூட்டத்துக்கோ, நாடகத்துக்கோ சென்றுவிட்டு அண்ணா திரும்பியதும் அங்கு 'கச்சேரி' ஆரம்பமாகும். அங்கு ஒரு பழைய கிராமஃபோன் பெட்டியும் சில குறிப்பிட்ட இசைத்தட்டுகளும் இருக்கும். முதலில் அந்த இசைத்தட்டுகளைப் போட்டுப் பாட்டுக் கேட்பார்கள். பாட்டு முடிந்ததும், பேச்சு ஆரம்பமாகும். பல இரவுகளில், இரவு முடிந்து பொழுது விடிகிற வரை அனைவரும் பேசிக்கொண்டு இருப்பார்கள். கம்ப ராமாயணம் முதல் கார்ல்மார்க்ஸ் வரை அலசித்தள்ளுவார்கள்.

அப்படிப்பட்ட பேச்சுகள் பயனற்றவையாக இருந்ததில்லை. அந்தக் காலத்தில்தான் 'சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்' (பிறகு 'சந்திரமோகன்') 'நீதி தேவன் மயக்கம்', 'கல் சுமந்த கசடர்' ஆகிய நாடகங்களை ஆர்வத்தோடு அண்ணா எழுதினார்.

சில சமயங்களில் அந்த நண்பர்கள் முகாம் காஞ்சிபுரத்துக்கு மாறும். திடீரென இரவு எட்டு அல்லது ஒன்பது மணிக்கு நினைத்தமாத்திரத்தில் பக்கத்தில் இருப்பவரை அழைத்துக்கொண்டு காஞ்சிபுரம் கிளம்பிவிடுவார் அண்ணா.

அப்போதெல்லாம் இப்போது இருப்பது போல் நேரத்துக்கு ரயில், பஸ் வசதி காஞ்சிக்குக் கிடையாது. அண்ணாவிடத்தில் காரும் இருக்கவில்லை. அருகிலிருந்த இரா.செழியன் ஒருமுறை அவ்வாறு அழைக்கப்பட்டார். "இந்த நேரத்தில் எப்படி அண்ணா காஞ்சிக்குப் போவது?" என்று செழியன் கேட்க, "உனக்கு விவரம் தெரியாது. வா... சொல்கிறேன்" என்று கூறிவிட்டு கொத்தவால்சாவடிப் பக்கம் போனார். அங்கு காஞ்சிபுரம் போகிற லாரிகள் இருந்தன. அதில் ஒன்றில் அண்ணா ஏறிக்கொள்ள, மற்றவர்களும் தொத்திக்கொண்டார்கள்.

"சில சமயங்களில் லாரியின் பின்னால் வைக்கோல் பரப்பிய பகுதியில் உட்கார்ந்து சென்றிருக்கிறோம்" என்று அந்தப் பயணம் பற்றி செழியன் எழுதியிருக்கிறார்.

அப்படி லாரியும் இல்லை என்றால், எழும்பூர் ரயில் நிலையத்தில், கடைசியாக இரவு பத்தரை மணிக்குக் கிளம்பும் ரயிலில் ஏறி செங்கற்பட்டு செல்வார்கள். அங்கு ரயில் நிலையத்திலேயே ஒரு துண்டை விரித்துப் படுத்திருந்துவிட்டு, காலையில் எழுந்து முதல் ரயிலில் காஞ்சிபுரம் புறப்பட்டுப் போயிருக்கிறார்கள்.

6

'திராவிட நாடு' வார ஏடும் 'சந்திரோதயம்' நாடகமும்



1942

ஈ.வெ.ரா. - அண்ணா நட்பு ஏழு ஆண்டுகளை எட்டியிருந்தது. அரசியலில் 'தந்தை'யும் தனயனும் மிகுந்த வித்தியாசமானவர்களாக இருந்தபோதும், அவ்வப்போது உறவு சிக்கலானபோதும், இருவரின் கூட்டுறவு சமுதாயத்துக்கு மிகப் பயனுள்ளதாக இருந்தது. இந்த உறவு இத்தனை ஆண்டுகள் தொடர, இளைய அண்ணாவின் வளைந்து கொடுக்கும் பண்பும், தன் தலைவரிடம் அவர் காண்பித்த மரியாதையையும் போலவே அண்ணாவிடம் ஈ.வெ.ரா. காட்டிய பாசமும் காரணமாக இருந்தது. ஒருமுறை ஈ.வெ.ரா.வுடன் கோபித்துக்கொண்டு காஞ்சிபுரத்துக்கு அண்ணா கிளம்பிப் போனபோது, ஈ.வெ.ரா.வும் அவர் அண்ணனும் தங்கள் அன்பை வெளிப்படுத்த தனித்தனி கடிதங்கள் எழுதி அண்ணாவை மீண்டும் ஈரோடு திரும்பச் செய்தார்கள். ஈ.வெ.ரா. கடுமையான உழைப்பாளி என்றாலும், கண்டிப்பானவர்; உறுதியானவர். ஆனாலும்

எப்போது, எப்படி நடந்துகொள்வார் என்று சொல்லமுடியாது. தன்னலமற்றவர். எனினும், மிகுந்த சிக்கனப் பேர்வழி.

'குடியரசு', 'விடுதலை' ஏடுகளில் பெரியாரின் கீழ் துணை ஆசிரியர் என்ற இடத்தை அலங்கரித்தபோதும் எல்லா எழுத்தாளர்களுக்கும் இருந்தது போலவே, அண்ணாவுக்கும் சொந்தத்தில் ஒரு பத்திரிகை நடத்தும் ஆசை ஏற்பட்டது. 'திராவிட நாடு' என்று தனது வார இதழுக்கு அவர் பெயரிட்டது அவருடைய அரசியல் இலக்கை பிரதிபலித்தது. 1942, மார்ச் 8 அன்று, காஞ்சி புரத்திலிருந்து 'திராவிட நாடு' இதழைத் தொடங்கிய அண்ணா, 'குடியரசு' ஏட்டின் கொள்கைகளை தனது இதழ் காஞ்சிபுரம் பகுதியில் பரப்பும் என்றார். எனினும், அவரால் ஒரு பத்திரிகையை நடத்த முடியுமா? என்று பலரும் ஐயம் கொண்டனர். எனவே, அண்ணா ஒரு பத்திரிகையை ஆரம்பித்து அதற்கு ஆசிரியராக இருந்தது தனது சாதனைகளில் ஒன்றென பின்னர் குறிப்பிட்டதில் வியப்பில்லை. 'திராவிட நாடு' ஏடு, பெரியாருடன் அண்ணா இருந்த நேரத்தை பங்கு கேட்டதுமில்லாமல் பொருளாதாரத்திலும் போக்குவரத்திலும் அண்ணாவுக்கு சிரமம் சேர்த்தது. ஆனால், 'திராவிட நாடு', அண்ணாவின் எழுத்து வேட்கையைத் தணித்தது.

எத்தனை ஆர்வம் இருந்தாலும், வேலைகளைத் தொடங்க அண்ணா நேரம் எடுத்துக்கொள்வார். எழுதவேண்டிய விஷயங்களும் அதற்கான செய்திகளும், கையில் இருந்தாலும் சோம்பல் முறிப்பார்; தாமதம் செய்வார்; தள்ளிப்போடுவார்! எழுதத் தொடங்கும்போது எந்தக் குறுக்கீடும் இருக்கக் கூடாது என்று இரவு நேரத்தைதான் அண்ணா நாடுவார். காஞ்சிபுரத்தில் காலை பத்து மணி அளவில் மொட்டை மாடிக்குப் போனால் அங்கே சிநேகிதர்கள் சி.வி.ராஜகோபாலும், புட்டசாமியும் சேர மூன்று பேருமாகக் கொஞ்சநேரம் சீட்டாடுவார்கள். நண்பர்கள் சீட்டாட்டத்தைத் தொடர, அண்ணா பேனாவையும் காகிதத்தையும் பத்திரிகைகளையும் எடுத்து வைத்துக்கொண்டு, படிப்பார்; குறிப்புகள் எடுப்பார். பேனாவைக் கையில் எடுத்துவிட்டால் எழுதவேண்டியதை முடிக்காமல் கீழே வைக்கமாட்டார் அண்ணா. எந்த அடித்தல் திருத்தலும் இல்லாமல் அவரது எழுத்து பக்கம் பக்கமாகத் தொடரும். காலையில் பார்த்தால், உறங்கிக் கொண்டிருக்கும் அண்ணாவைச் சுற்றி அவர் எடுத்த குறிப்புகளும், எழுதிய தாள்களும் பக்க எண் குறிக்கப்பட்டு சிதறிக் கிடக்கும்.

பார்வைக்கு எடுப்பாக இல்லாவிட்டாலும், 'திராவிட நாடு' இதழை அண்ணாவின் விறுவிறுப்பான எழுத்து ஈடுகட்டியது. 'சௌமியன்' (அண்ணா பிறந்த தமிழ் வருடம்), பரதன், ஒற்றன்,

சம்மட்டி, நக்கீரன், சமதர்மன், வீனஸ், வீரன் என்ற பெயர்களில் கட்டுரைகளும், சிறுகதைகளும், விளக்கவுரைகளும், ஓரங்க நாடகங்களுமாக அண்ணா 'திராவிட நாடு' இதழில் எழுதிக் குவித்தார். சில கட்டுரைகளில் பெயரே இருக்காது. வாசகர்கள் கண்டுபிடிக்காதவாறு, விஷயத்தைப் பொறுத்து தன்னுடைய நடையையே மாற்றிக்கொண்டுவிடுவார் அண்ணா! 1949 வரை இப்படித்தான் 'திராவிட நாடு' வெளிவந்தது. மொத்தத்தில் 35 வருடங்களில் வாரத்துக்கு ஒரு கட்டுரை என்றாலும்கூட, மொத்தம் 1680 கட்டுரைகள் அண்ணாவின் கணக்கில் சேர்கின்றன! 1949-ல் இராம.அரங்கண்ணல் 'திராவிட நாடு' துணை ஆசிரியர் ஆனார். தில்லை வில்லாளன் அடுத்த ஆண்டில் வந்து சேர்ந்தார்.

அண்ணாவின் வழக்கத்துக்கு மாறான, புதுமையான நடை இளைஞர்களை வசப்படுத்தி, வாசகர்களையும் வசியப்படுத்தியது. புதிய எழுத்தாளர்களையும் ஈர்த்தது. அப்படி ஈர்க்கப்பட்டவர்தான் கட்சியிலும் ஆட்சியிலும் அவரது அடுத்த இடத்தைப் பிடித்த கலைஞர் மு.கருணாநிதி. கலைஞர் பட்டம் பெறுமுன்பே, இளைஞர் கருணாநிதி எழுதிய 'இளமை பலி' என்ற கட்டுரை, 'திராவிட நாடு' வெளிவந்த சில வாரங்களிலேயே வெளியாயிற்று. அதன் வெற்றியைக் கண்டு மகிழ்ந்துபோய் தனது இரண்டாவது கட்டுரையை அனுப்பிவைத்தார் கருணாநிதி. ஆனால், அது பிரசுரம் ஆகவில்லை.

ஒரு வாரத்துக்குப் பிறகு, கருணாநிதியின் பிறந்த ஊர் திருவாரூருக்கு, நபிகள் நாயகம் விழாவில் கலந்துகொள்ளச் சென்ற அண்ணா கருணாநிதியைச் சந்திக்க விருப்பம் தெரிவித்தார். தன் முன் நின்ற பள்ளி மாணவன் அண்ணாவை வியக்க வைத்தான். எனினும், "இனிமேல் கட்டுரைகள் அனுப்பாதே!" என்று அறிவுரை சொன்னார் அண்ணா. கருணாநிதிக்கு அதிர்ச்சியைத் தந்தாலும், தன் எதிர்காலத்தின் மீது அக்கறை கொண்டே அப்படிச் சொன்னார் அண்ணா என கருணாநிதி உணர்ந்துகொண்டார். "நன்றாகப் படி. படிப்பை முடித்தபிறகு கட்சிப் பணிகளில் நீ தீவிரமாக ஈடுபடலாம்!" என்றார் அண்ணா. அவர் விரும்பியபடி நடக்கவில்லை. அசாத்திய திறமைவாய்ந்த கருணாநிதி, பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சிபெறாமல் போனார். ஆனால், அவர் எழுதிய சீர்திருத்த நாடகங்கள் அவரது ஆற்றலை பறைச்சாற்றின. பத்து ஆண்டுகளில் தமிழ் திரைப்பட வரலாற்றில் ஒரு திருப்பத்தை உண்டாக்கி சாதனை படைத்தது கலைஞரின் 'பராசக்தி'. கலைஞரின் அமைப்புச் செயலாற்றலையும், பன்முகத் திறனையும், அரசியல் கூர்மையையும் அண்ணா சார்ந்திருந்ததில் ஆச்சரியமில்லை.

'திராவிட நாடு' இதழின் விற்பனை எண்ணிக்கை சில ஆயிரங்களே இருந்தாலும், அதன் வாசகர்கள் ஆற்றல் வாய்ந்தவர்களாக இருந்தார்கள். 'விடுதலை', 'குடியரசு' போன்ற இதழ்களின் வாசகர்களைவிட அரசியலில் நாட்டம் உள்ளவர்களாகவும்; நிதானத்தோடு விஷயத்தைப் பார்க்கிறவர்களாகவும் இருந்தனர். அதோடு காஞ்சிபுரத்தைத் தாண்டியும் 'திராவிட நாடு'க்கு என வாசகர்கள் இருந்தார்கள். பச்சையப்பன் கல்லூரியில் அண்ணா படித்துக்கொண்டு இருந்தபோது, அங்கே படித்த ஏ.பி.ஜனார்த்தனம் (பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்) அண்ணாவின் தாக்கத்தை இப்படிச் சொன்னார்:

> இரவு நீண்டநேரம், பக்கம் பக்கமாக, தன் உருண்டையான எழுத்துகளில், அடித்தல் திருத்தல் இல்லாமல் அண்ணா எழுதுவதைப் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு பக்கமாகச் சேர்த்துப் படித்து ரசித்தும் இருக்கிறேன்... (பத்திரிகையில்) அவரது புரட்சிகரமான பேச்சுகளைப் படித்து மயங்கிப் போயிருக்கிறேன். எங்கள் ஊரில் 10-12 'திராவிட நாடு' பிரதிகளை வாங்கி, மாணவர்களுக்குக் கொடுத்துப் படிக்கச் சொல்லி, அவர்களை இயக்கத்துக்கு இழுக்கப் பார்த்ததுண்டு.
>
> கல்லூரி மாணவர்கள் தொடர்ந்து 'திராவிட நாடு' இதழின் தீவிர வாசகர்கள் ஆனார்கள். எதிரணியினர்கூட அவருடைய 'ரோமாபுரி ராணி'களைத் திருட்டுத் தனமாகப் படித்து வந்தார்கள். அண்ணா விஷயங்களை சுவாரசியமாகக் கொடுத்தார். அவர் வள்ளுவரையும், வள்ளலாரையும், வேமனாவையும் மேற்கோள் காட்டி எழுதியது நல்ல பயனளித்தது. அவர் தந்த தலைப்புகள் எல்லாம் அசரவைத்தன...
>
> கேலிக் கட்டுரைகள், பரபரப்பான தலையங்கங்கள், எமிலி ஜோலா, வால்ட் விட்மன், ஆப்ரஹாம் லிங்கன், எங்கல்ஸ், லெனின் மற்றும் ஸ்டாலின் ஆகியோர் பற்றிய குறிப்புகளோடு, மிக பிரபலமானதாக, பலராலும் பேசப்பட்டதாக, திராவிட இயக்கத்தினரின் பெருமை மிகு பொக்கிஷமாக 'திராவிட நாடு' பத்திரிகை இருந்தது.

பொருள் பொதிந்த கட்டுரைகளுக்கும், நடைக்கும்



கருணாநிதி, அண்ணா

'திராவிட நாடு' இதழ் வாசகர்களை ஒவ்வொரு வாரமும் ஆவலோடு காத்திருக்க வைத்தது. 'திராவிட நாடு'ம் இயக்க ஏடுகளும் கழக படிப்பகங்களை உற்பத்தி செய்தன. மாலை நேரங்களில் கழகத் தொண்டர்கள் அங்கே கூடி, ஒருவர் 'திராவிட நாடு' ஏட்டைப் படிக்கக் கேட்டனர். அண்ணாவின் ஆளுமையும், அவருடைய வலிமை மிகுந்த பேனாவும், கவர்ச்சியான பேச்சும் கழகத்தின் மூலதனம் ஆயிற்று. இந்த எழுத்துகள் எல்லாம் அவருடைய தலைவரின் சீர்திருத்தக் கருத்துகளுக்கு மேலும், அறிவுபூர்வமாகவும் கவர்ச்சிகரமாகவும் பலம் சேர்க்கும் வகையில் முதிர்ச்சியானவையாக இருந்தன. எனினும் பதிமூன்று வருடங்களுக்குப் பிறகே, அண்ணாவின் புகழ்பெற்ற 'தம்பிக்குக் கடிதங்கள்', 'திராவிட நாடு' இதழை அலங்கரிக்கத் தொடங்கின. காலப்போக்கில் 'திராவிட நாடு' பல பரிமாணங்களுடன் வளம் மிகுந்த வார இதழாயிற்று. சில தீவிர வாசகர்களின் வீடுகளில் இவற்றை பைண்டு செய்து அடுக்கிவைக்கும் நிலையும் உண்டாயிற்று!

பெரியாருக்கு சீடரின் சுதந்திரப் போக்கு பிடித்ததா என்று தெரியவில்லை. பிடிக்கவில்லை எனில் அதை அவர்

வெளிக்காட்டவில்லை. ஒரு வருடத்துக்குப் பிறகு, 1943, ஏப்ரல் 1 அன்று, பெரியாரே 'திராவிட நாடு' இதழுக்கு நன்கொடை கேட்டு வேண்டுகோள் விடுத்தார். 'விடுதலை' நாளேடு 1943, ஏப்ரல் 28 தேதியிட்ட இதழில் 'உண்மையாகவும் உறுதியாகவும் தமிழரின் விடுதலைக்காகப் பாடுபடும் பத்திரிகை' என்று பெரியார் கைப்பட எழுதிப் பாராட்டியிருந்தார். மேலும் 'திராவிட நாடு' இதழுக்கு அச்சு எந்திரம் வாங்க, நூறு ரூபாய் நன்கொடையும் அளித்தார்.

எனினும் 'திராவிட நாடு' இதழ் இயங்க தொடக்கக் காலத்தில் தேவைப்பட்ட 500 ரூபாய்க்காக, தூரத்து உறவினரான ஏ.கே.தங்கவேல் கொஞ்சம் நிலத்தை உள்ளூர் வங்கியில் அடகு வைக்க வேண்டியிருந்தது. 1938-ம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது அண்ணாவை அறிந்திருந்த ஈழத்து அடிகள் மேலாளராக ஆனார். ஹாட்ஜ்சன்பேட்டை யுனைடெட் அச்சகத்தில் 'திராவிட நாடு' அச்சாயிற்று. விலை ஓரணா (ஆறு பைசா). அண்ணாவின் இன்னோர் உறவினர் டி.பி.எஸ்.பொன்னப்பா, அச்சிட்ட பிரதிகளை எடுத்துக்கொண்டு வந்து ரயில்வே ஸ்டேஷனிலிருந்து பல ஊர்களுக்கும் அனுப்பிவைப்பார். சிறிது காலத்துக்கு பொன்னப்பாவின் கட்டடமே பத்திரிகை அலுவலகமாகவும் இருந்தது.

நாடக ஆசிரியர் அண்ணா

'திராவிட நாடு' இதழின் நிதித் தேவையைச் சமாளிக்க, அண்ணாவை நாடகம் எழுதச் சொன்னார் பொன்னப்பா. விளைவு? 'சந்திரோதயம்' அண்ணாவின் முதல் நாடகமாக உதயமாகியது.

சந்திரோதயம் மடாதிபதிகளுக்கு இலக்கணம் வகுக்கும் சமூக சீர்திருத்த நாடகம். நாடகத்தில், துரைராஜ் என்ற பகுத்தறிவுவாதி திருட்டுக் குற்றத்துக்காக குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படுகிறான். மோசடி மடாதிபதி ஒருவரை உருவத்தில் ஒத்து இருந்த துரைராஜ் மடாதிபதியை ஒழித்துக்கட்டிவிட்டு அந்த இடத்தை தானே பிடிக்கிறான். முற்போக்கு எண்ணம் கொண்ட துரைராஜ் மடத்தின் செல்வத்தை சமூக நலனுக்குப் பயன்படுத்துகிறான். பிறகு, துரைராஜ் உண்மையான திருடனைக் கண்டுபிடித்துக் கொன்றபிறகு, தானும் தற்கொலை செய்துகொண்டு விடுகிறான். தன்னுடைய சொத்துகளில் வரும் வருமானத்தை பகுத்தறிவுப் பிரசாரத்துக்குப் பயன்படுத்திக்கொள்ளச் சொல்லி எழுதிவைத்து விடுகிறான். சமூக உணர்வற்ற வசதிபடைத்த, மதத்தின் போர்வையில் மோசடி செய்யும் மடாதிபதிகள் மீது அண்ணாவுக்கு இருந்த வெறுப்புக்கு இந்த நாடகம் ஓர் எடுத்துக்காட்டு.

'திராவிட நாடகக் கழகம்' நிறுவி, சந்திரோதயம் நாடகத்தில் மூன்று பாத்திரங்களை தானே ஏற்று நடித்தார் அண்ணா. ஆணவம் நிறைந்த சுகபோக வாழ்க்கை வாழும், இழித்துப் பேசும் இதயமற்ற ஜமீன்தார் வேடம் அதில் ஒன்று. அப்படிப்பட்டோரின் சுகபோக வாழ்வைப் படம்பிடித்துக் காட்டும் வகையில் சந்திரோதய ஜமீன்தார் ஓய்வு எடுக்கும்போது, தன் காலைத் தூக்கி நாற்காலியில் வைக்க தன் வேலைக்காரனைப் பணிப்பார்! காஞ்சிபுரத்தில் அண்ணா இந்த நாடகத்தை ஓர் ஒத்திகை போலத்தான் நடத்தினார். தன் முதல் நாடக முயற்சியை தன் தலைவரின் முன்னால் நடத்த விரும்பினார். எனவே, 1943 நவம்பர் 10 அன்று, ஈரோட்டில் நாடகம் சம்பிரதாயமாக அரங்கேறியது.

டி.கே.சண்முகம் சகோதரர்கள் தினமும் தங்களின் 'சம்பூர்ண ராமாயணம்' நாடகம் நடத்திய மன்றத்திலேதான் அண்ணாவின் நாடகமும் நடைபெற்றது. அன்றும் வழக்கம் போல ராமாயண நாடகம் காலை ஆறு மணி வரை நடந்து, பின்னர் நடிகர்கள் 'எண்ணெய்க் குளியல்' குளித்து காலைச் சிற்றுண்டிக்குப் பிறகு உறங்கச் சென்றுவிட்டார்கள். ஆனால், அன்றைக்கு சண்முகம் சகோதரர்கள் மட்டும் அண்ணாவின் 'சந்திரோதயம்' நாடகத்துக்கு முன்னேற்பாடு செய்துகொண்டு இருந்தார்கள். ஒப்பனைக் கலைஞர்கள் அண்ணாவுக்கும், சி.வி.ராஜகோபாலுக்கும், சி.வி.எம்.அண்ணாமலைக்கும், ஈழத்து அடிகளுக்கும், பிற நடிகர்களுக்கும் மாலையில் ஒப்பனை செய்யத் தொடங்கினர். இந்தமுறை அண்ணாவே துரைராஜின் பாத்திரமேற்று நடித்தார். ஒருமுறை, துரைராஜாக அவர் விஷம் குடிக்கிற காட்சியில், அவரது நடிப்பில் லயித்துப்போயிருந்த தொண்டர் திருவொற்றியூர் சண்முகம், 'வேண்டாம், அப்படிச் செய்யாதீர்கள்' என்று எழுந்து கெஞ்சினார்!

'சந்திரோதயம்' புராண - இதிகாசங்களிலிருந்து நாடகத்தை விடுவித்திருந்தது. அதுவரை, சமூக பிரச்னைகளை நாடகத்தில் கையாள முடியும் என்பது நினைத்துக்கூடப் பார்க்கமுடியாததாக இருந்தது. அண்ணா புதுமையான சமூக, பிரசார நாடகங்களுக்கு வித்திட்டிருந்தார். எளிமையாக எளிதில் மேடை ஏற்றக்கூடியதாக, பெரிதாக மேடை அலங்காரங்கள் ஏதும் தேவையற்றதாக, ஒரு செய்தியைச் சொல்கிறமாதிரி இருந்தன அவரது நாடகங்கள். 'சந்திரோதய'த்தைத் தொடர்ந்து, மூத்தவரான டி.கே.சண்முகம் பொதுவான சீர்திருத்தக் கருத்து கொண்ட நாடகம் ஒன்றைத் தங்களுக்கு எழுதிக்கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

'சந்திரோதயம்' முழுக்க முழுக்க பிரசார நாடகமாக, தங்கள் நாடகத்தில் சேர்க்கமுடியாத, குறிப்பாக பிராமணீயத்துக்கு

எதிரான - கருத்துகள் கொண்டதாக இருந்ததாக சண்முகம் கருதினார். சண்முகத்தின் விருப்பத்துக்கு ஏற்றபடி நாடகம் எழுதித்தர அண்ணா ஒப்புக்கொண்டார். ஆனால், அதிர்ஷ்டம் (முன்பு, டி.கே.எஸ். நாடகக் குழுவில் நடித்துக்கொண்டிருந்த) கே.ஆர்.ராமசாமிக்குத்தான் (கே.ஆர்.ஆர்.) அடித்தது! அண்ணாவின் 'ஓர் இரவு', ஒரே இரவில் நடந்து முடிந்துவிடும் சம்பவங்களைக் கொண்டது. புதிய திரைச்சீலைகூட வாங்க அத்தனை வசதி இல்லாத கே.ஆர்.ஆரின் நாடகக் குழுவை மனதில் வைத்துக்கொண்டு அண்ணா எழுதி முடித்திருந்தார். நாகப்பட்டினத்திலிருந்தும், திருவாரூரிலிருந்தும் 'ஓர் இரவு' நாடகத்தைப் பார்க்க தஞ்சாவூருக்கு மக்கள் செல்லும் அளவுக்கு அதன் புகழ் பரவியது.

தமிழ் நாடக வரலாற்றிலேயே முதல் முறையாக, 'ஓர் இரவு' பாடல்கள் அச்சிடப்பட்டு விற்கப்பட்டன! பாடல்கள் எழுதிய உடுமலை நாராயண கவியின் படம் முன் அட்டையிலும், அண்ணாவின் படம் பின் அட்டையிலும், 'வேலைக்காரி' படத்துக்கு ஒரு விளம்பரத்தையும் தாங்கி வந்தது அந்தப் பாடல் புத்தகம்.

புகழ்பெற்ற எழுத்தாளரும் பத்திரிகையாளருமான 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி 'ஓர் இரவு' நாடகத்தைப் பார்த்துவிட்டு, அண்ணாவை இப்ஸனுடனும் பெர்னார்ட்ஷாவுடனும் ஒப்பிட்டு எழுதினார்: 'இரண்டு வாரங்களுக்கு முன்னால், திருச்சியில் 'ஓர் இரவு' என்னும் நாடகத்தைப் பார்க்க நேர்ந்தது. பார்த்ததின் பயனாக இதோ ஒரு பெர்னார்ட்ஷா தமிழ்நாட்டில் இருக்கிறார், ஒரு கார்ல்ஸ்வொர்திகூட இருக்கிறார் என்று தெரிந்துகொண்டேன்!' என்று எழுதினார். 'ஓர் இரவு' ஆறு மாதங்கள் ஓடியது. அதையடுத்து கே.ஆர்.ராமசாமி அண்ணாவிடம் கேட்ட அடுத்த நாடகம்தான் 'வேலைக்காரி'.

'ஓர் இரவு' நாடகத்தின் இருபத்தைந்தாவது காட்சிக்குத் தலைமை வகித்துப் பேசிய கவிஞர் பாரதிதாசன், அண்ணாவை 'அறிஞர்' என்றார். எனினும் ஜெயகாந்தன், 1970-களில் இப்படி எழுதினார்: 'அவரை அறிஞர் என்று மூடர்களே அழைக்கலாயினர். அவரைப் பேரறிஞர் என்று பெருமூடர்களே அழைக்கலாயினர். நகைச்சுவை எழுத்தாளர் என்று பெயரெடுத்திருந்த கல்கி, பத்திரிகையில் எழுதிய ஒரு நாடக விமரிசனத்தில் அண்ணாதுரையை பெர்னார்ட்ஷா என்று வஞ்சப் புகழ்ச்சி செய்திருக்கிறார். தமிழர்களே! உங்களுடைய தற்காலத் தகுதிக்கு இவர்தான் பெர்னார்ட்ஷா என்பதாகவே அதை நான் புரிந்துகொண்டேன்...' ஆனால், நாற்பதாண்டுகளுக்குப் பின் கால ஓட்டத்தின் காரணமாக



'சந்திரோதயம்' நாடகத்தில் ஜமீன்தாராக அண்ணா

முதிர்ச்சி அடைந்துவிட்ட ஜெயகாந்தன், அண்ணாவை அறிஞர் என்று குறிப்பிடுகிறார்.

அண்ணாவின் நாடகங்கள் பெரும் வெற்றி பெற்றாலும் கண்ணதாசன் போன்றோர் அவற்றைக் கடுமையாகவே தாக்கினர். "கருணாநிதியின் 'தூக்குமேடை'யும் பிற நாடகங்களும் மேடைப் பேச்சை காட்சி பிரித்த கதைகள்தானே? அண்ணாவின் 'சந்திரமோக'னும், 'நீதி தேவன் மயக்க'மும் தவிர, மற்ற நாடகங்களில் குறைந்தபட்சம் கதை அமைப்புகூட இருந்ததில்லையே!" என அப்பட்டமாக இரக்கம் ஏதுமின்றி விமரிசித்திருக்கிறார் கவிஞர் கண்ணதாசன்.

அண்ணாவும் விமரிசனங்களை தாராளமாக ஏற்றுக்கொண்டார். 'ஓர் இரவு' திரைப்படமாக வெளிவந்தபோது வெற்றியடையவில்லை.

நாடகம் அளித்த உற்சாகத்தில் நாலிலே ஒரு பங்குகூட அளிக்கத் தவறியிருந்தது 'ஓர் இரவு' திரைப்படம் என்றும் அது ஒரு தோல்வி என்றும், 'ஞாயிறு' இதழில் டி.கே.சீனிவாசன் விமரிசனம் எழுதியிருந்தார். 'ஓர் இரவு' திரைப்படத் தயாரிப்பு பொறுப்பில் இருந்த ஒருவர் அந்த விமரிசனத்தை எடுத்துக்கொண்டு, அண்ணாவைப் பார்க்கச் சென்றார். "பாருங்களண்ணா! சீனிவாசன் நம் கட்சியைச் சேர்ந்தவர். என்னோடும் நெருங்கிப் பழகியவர். அவர் இப்படி எழுதியிருக்கிறார்!" அதற்கு அண்ணா ஒரே வரியில் பதில் சொன்னார்: "பின் எப்படி எழுதுவார்?" அதேபோல, "சிறுகதை ஆசிரியராக அண்ணா தோல்வியே கண்டார்" என்று பி.சி.கணேசன் விமரிசனம் செய்தபோது, தன் தோழர்களிடம், "கணேசன் சரியாகத்தான் தம் படைப்புகளை ஆராய்ந்திருக்கிறார்" என்று பெருந்தன்மையுடன் ஏற்றுக்கொண்டார் அண்ணா.

அண்ணாவின் படைப்புகள் அவரது மறைவின் போதும் கடுமையாக விமரிசிக்கப்பட்டு வந்தன. "அவர் எழுதிய குப்பைப் புத்தகங்கள் எல்லாம் அவரது மரணத்தை எருவாகக் கொண்டு குருக்கத்திப் பூக்களாக மலர்ந்துவிடப் போவதில்லை. அவர் சம்பந்தப்பட்ட எல்லாமே இரவல். இரவலே ஆயினும் அதை அவர் ஒப்புக்கொள்ளாததால், அது இலக்கியத் திருட்டு. அதற்கும் மேல் அவரது இரவல் சரக்குகள் எத்தகையது என்பதை அறிகிறபோது, அவரது தரம் மிகவும் தாழ்ந்தது என்ற உண்மையையும் இந்த மரணம் வந்து மறைத்துவிடப் போவதில்லை" என்றார் ஜெயகாந்தன்.

'ராஜாஜியின் படைப்புகளைப் புதுமைப்பித்தன் நிராகரித்தார். க.நா.சுப்பிரமணியம் கல்கியின் எழுத்துகளை ஏற்க மறுத்தார். ஜெயகாந்தன் சி.என்.அண்ணாதுரையின் படைப்புகளை விமரிசனம் செய்தார்' என்ற ஜெயமோகன், இதன் மறுபக்கமாக, "பிரபல, ஜனரஞ்சக எழுத்துத் தரப்பு, தீவிர இலக்கியவாதிகளை ஏற்றுக்கொண்டது இல்லை என்பதைக் குறிப்பிடலாம்" என்று எழுதியிருக்கிறார் ஜெயமோகன். இருதரப்பு எழுத்துக்களிடையே உள்ள மறுதலிப்பு தொடர்கதைகளாக இருக்கும்.

அண்ணா ஒரு 'பிரசார எழுத்தாளர்'. அவருக்கு அப்படி எழுத ஒரு நோக்கம் இருந்தது என்பது தெளிவு. ஷாவைப் போலவே, அவரது படைப்புகள் ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காக பாமர மக்களைத் தட்டி எழச்செய்வதற்காக எழுதப்பட்டவை. நாடகம் என்ற ஊடகத்தை அவர் பிரசாரத்துக்காகவே தேர்ந்தெடுத்தார். திரைப்படங்களுக்கு முன் நாடகங்கள்தாம் பெரும்பாலான மக்களைச் சென்றடைய பயன்படும் ஊடகமாக இருந்தன. அண்ணாவின் நாடகங்களில் நிறைய பொழுதுபோக்கு அம்சங்கள்

இருந்தன என்றாலும், பாத்திரங்களும், கதையம்சமும் பின்னணியும் பிரசாரத்துக்காகவே உருவானவை.

'சந்திரமோக'னில் மடாதிபதிகளைக் கடுமையாகச் சாடிய அண்ணா 'வேலைக்காரி'யில் இரக்கமற்ற எஜமானர்களை வெளிச்சமிட்டுக் காட்டி, பண்புள்ள வேலைக்காரியைப் புகழ்ந்தும், கலப்பு மணத்தை ஆதரித்தும் நாடகம் அமைத்தார். 'காதல் ஜோதி'யில் விதவை திருமணத்தையும், கலப்புத் திருமணத்தையும் சொன்னார். 'சொர்க்க வாச'லில் நாத்திகர்களை நல்லவர்களாகவும், இறைநம்பிக்கை உள்ளோரை ஏமாற்றுக்காரர்களாகவும் சித்திரித்தார். அண்ணாவின் 'பாவையின் பயணம்' ஓர் இளம் பெண், தன்னைவிட வயது மிகுந்த ஒருவரைத் திருமணம் செய்துகொள்வதைக் காண்பித்தது. (இது பெரியாரின் திருமணத்தைச் சுட்டிக்காட்டுவது போல் இருந்தது.)

அண்ணாவின் நாடகங்கள் இலக்கிய விமரிசகர்களை ஓரளவுக்கு மேல் திருப்திப்படுத்தவில்லை என்றாலும், கலைகளைக் கடுமையாகத் தாக்கும் ஈ.வெ.ரா.வுக்கு மகிழ்ச்சியை அளித்ததாக தெரிகிறது. கலைகள் தமிழர்களின் பின்னடைவுக்குக் காரணம் என ஈ.வெ.ரா. கருதினார். "கலைகளை உதறித்தள்ளுங்கள். உங்களை உணர்ந்துகொள்ளுங்கள். உயர்ந்து நில்லுங்கள்" என்பார் அவர். 'சந்திரோதயம்' மேடை ஏறி ஒன்பது மாதங்களுக்குப் பிறகு, 1944, ஜூலை 31 அன்று தாம் நாடகங்களையும் திரைப்படங்களையும் பற்றி என்ன நினைக்கிறார் என்பதை பெரியார் தெள்ளத் தெளிவாக்கினார். 31.7.1944 அன்று சென்னையில் அவர் தலைமையில் 'சந்திரோதயம்' நாடகம் நடைபெற்றது. நாடகத்துக்கு சுமார் 4 ஆயிரம் பேர் வந்திருந்தார்கள். எனினும், பெரியார் பேசும்போது, "அப்பப்பா! இந்த சினிமாக்களையும், புராண நாடகங்களையும், பஜனைப் பாட்டுக் கச்சேரிகளையும், பாட்டு பிளேட்டுகளையும் எடுத்துக்கொண்டால், நம்ம கள்ளுச் சாராயக் கடைகளையும், தாசி, வேசி, குச்சுக்காரிகள் வீடும், மார்வாடி, செட்டி கொள்ளைகளும் ஆயிரம் பங்கு மேல் என்று சொல்வேன். இந்த இசைவாணர்களும், இந்த நடிப்பு மணிகளும் ஒழிக்கப்பட்ட பிறகே அவை ஒழிக்கப்பட வேண்டியவை" என்றார். அந்த நாடகத்துக்கு, பெரியாருக்கு மிகவும் பிடித்த என்.எஸ்.கிருஷ்ணன், தியாகராஜ பாகவதர், எம்.எம்.தண்டபாணி தேசிகர் ஆகியோரும் வந்திருந்தனர். எனினும் பெரியார், தான் எண்ணியதைச் சொல்லத் தயங்கவில்லை.

'புராணங்களையும் மூடநம்பிக்கையையும் புகுத்தி, திராவிடர்களை அடிமையாக வைத்திருக்கவே பிராமணர்கள் செயல்படுகிறார்கள்' என்று நம்பினார் பெரியார். அதனால்,

பாரம்பரிய கலைகளில் பிராமணர் அல்லாதாரின் முன்னேற்றம் ஈ.வெ.ரா.வுக்கு உகந்ததாகத் தோன்றவில்லை. பிராமணீயத்தோடு, கலைகள் அனைத்தையும் தூர எறிந்தார் பெரியார். அண்ணாவோ தங்களின் சமூக சீர்திருத்தத்துக்கு பெரியாரைப் போலல்லாது மிக சாதுர்யமாக ஊடகங்களைப் பயன்படுத்திக்கொள்ளவே விரும்பினார். ஆனால், 1943 நவம்பரில் 'சந்திரோதயம்' முதன்முதலாக மேடையேறியபோது, ஈ.வெ.ரா. நாடகத்தைப் புகழ்ந்து பாராட்டி விட்டு, டி.கே.சண்முகத்தைப் பாராட்டிப் பேச அழைத்தார்:

"இப்படியே தொடர்ந்து சில நாடகங்களில் அண்ணா நடித்து விட்டால், பரம்பரை நடிகர்களான எங்களை எல்லாம் மிஞ்சிவிடுவார் போல் தோன்றுகிறது" என்று புகழாரம் சூட்டினார் சண்முகம்.

மறுநாள் இரண்டு நாடகக் குழுக்களுக்கும் தேநீர் விருந்து ஒன்றை கட்சியின் கோவைக் கிளை அளித்தபோது, பெரியார் இரு குழுக்களையும் பாராட்டினார். ஆனால், டி.கே.எஸ். சகோதரர்களுக்கும் பெரியாருக்கும் இடையே இருந்த சிநேகத்துக்குச் சோதனை வந்தது. 1944 பிப்ரவரியில் டி.கே.சண்முகம் முதல் நாடகக் கலை மாநாடு ஒன்றைக் கூட்டி, அதில் நாடகத்துறையிலிருந்த பிரபலங்கள் எல்லோரையும் அழைத்திருந்தார். அதற்கு அண்ணாவும் அழைக்கப்பட்டு இருந்தார்.

> நாடகக் கலை மாநாட்டை நாங்கள் ஏதோ உள்நோக்கத்தோடு நடத்துவதாகப் பெரியாரிடம் யாரோ சொல்லியிருக்க வேண்டுமென நினைக்கிறேன். அதனால், அவர் மாநாட்டை அழுத்தமாகக் கண்டித்து எழுதினார். மாநாட்டுக்குத் தலைமைதாங்க வரும் ஆர்.கே.சண்முகம் செட்டியாருக்குக் கறுப்புக்கொடி பிடிக்க வேண்டுமென்று முத்தமிழ் நுகர்வோர் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியிருப்பதாக ஈரோட்டிலுள்ள எங்கள் நண்பர்களில் சிலர் பேசிக்கொண்டனர். இந்தச் செய்தி எனக்குக் கவலையைத் தந்தது.

-என்று டி.கே.சண்முகம் குறிப்பிடுகிறார்.

அண்ணா தலையீட்டால் நாடகக் கொட்டகை முன்பாக போராட்டம் நடக்காமல் போனது.

> மாநாடு முடிந்தபின் அடுத்தவாரம் வெளிவந்த 'குடியரசு' இதழில் நாடகக் கலை மாநாடு பெரும் தோல்வி அடைந்ததாகச் செய்தி வந்தது. அதே வாரத்தில் காஞ்சிபுரத்திலிருந்து வெளிவந்த அறிஞர் அண்ணாவின் 'திராவிட நாடு' இதழில் நாடகக் கலை



'சந்திரமோகன்' நாடகத்தில் காகபட்டராக அண்ணா

மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றதாகச் செய்தி வந்திருந்தது.

- என்றார் சண்முகம்.

பிரச்னைக்குரிய மாநாடு டி.கே.சண்முகம் சகோதரர்களின் குழுவில் இளம் நடிகராக இருந்துவந்த டி.வி.நாராயணசாமி (டி.வி.என்), அண்ணாவின் குழுவில் வந்து சேர உதவியது. ''கலைத்தாய் எனக்களித்த முதல் புதல்வன் நடிகமணி டி.வி.நாராயணசாமி, புராண நாடகங்களில் நடிக்க மறுத்து, சமுதாய சீர்திருத்த நாடகங்களிலே என்னுடன் நடிக்கவந்த டி.வி.நாராயணசாமி மாசுமறுவற்ற மாணிக்கம்!" என்று அண்ணா புகழ்ந்தார். சண்முகம் சகோதரர்களைப் பிரிந்த டி.வி.என். பின்னர் கே.ஆர்.ராமசாமி முதல் எம்.ஜி.ஆர். வரை கட்சிக்குள் வர காரணியானார்.

ஈரோட்டில் இருந்தபோதே டி.கே.எஸ். சகோதரர்களுக்கு அண்ணாவைத் தெரியும். அவர்களுடைய 'குமாஸ்தாவின் பெண்'

நாடகத்துக்கு, 'குடியரசு' இதழில் அண்ணா அருமையான விமரிசனம் ஒன்றை எழுதியிருந்தார். அதில் இயக்கத்தின் தலைமை நடிகரான கே.ஆர்.ராமசாமியைத் தனித்துக் குறிப்பிட்டிருந்தார். நாடகப் பிரியரான அண்ணா பலமுறை 'குமாஸ்தாவின் பெண்'ணை பார்த்திருந்தார். அதன் முடிவு அவருக்குப் பிடிக்கவில்லை; என்றாலும், அதை அப்படியே டி.கே.சண்முகத்திடம் தெரிவிக்கவும் செய்தார். ''அதை எப்படி முடித்திருக்க வேண்டும் என நினைக்கிறீர்கள்?" என்றார் டி.கே.எஸ். "நான் நினைத்துக்கொண்டு இருக்கும் முடிவை வைத்து ஒரு கதை எழுதுகிறேன்!" என்றார் அண்ணா. அப்படி எழுதப்பட்ட அண்ணாவின் 'கொலைகாரியின் குறிப்புகள்' டி.கே.எஸ்.ஸுக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது.

புத்தகமாக நாடகம் வெளிவந்தபோது, இப்படி முன்னுரை எழுதினார்: "தோழர் சி.என்.அண்ணாதுரை வருங்காலத் தமிழர் தலைவர்... இவரது ஆராய்ச்சி நிறைந்த ஆணித்தரமான சொற்பொழிவைக் கேட்க, கொள்கையில் வேறுபட்ட கூட்டத்தினரும் குழுமி நிற்பர்... எந்த இலக்கியமும் மனித சமூகத்துக்குப் பயனளிக்கும் பான்மையதாக இருக்க வேண்டும் என்பதை தோழர் சி.என்.ஏ. நன்றாக அறிந்தவர். அதன்படியே தொண்டாற்றியும் வருபவர்."

அண்ணா மீண்டும் ஒருமுறை டி.கே.எஸ். சகோதரர்களுக்கு உதவும்படி ஆயிற்று. ஈரோட்டில் டி.கே.எஸ். சகோதரர்கள் 'ராமாயணம்' நாடகம் நடத்தியபோது, தனது கழகத் தொண்டர்களை அனுப்பி நாடகத்துக்கு எதிராக மறியல் செய்யச் சொன்னார் சகோதரர்களின் நண்பரான பெரியார். அண்ணாவும் நாவலர் நெடுஞ்செழியனும் பெரியாரின் கருத்தை ஆதரிக்கவில்லை. "நாம் டி.கே.எஸ். சகோதரர்களோடு நெருக்கமாகிவிட்டோம்" என்று அண்ணா வாதாடினார். "அவர்களும் சமுதாய சீர்திருத்தக் கொள்கைகள் உள்ள நாடகங்கள் போடுகிறார்கள். அதனால், அவர்களுக்கு எதிராக மறியல் செய்வது சரியல்ல என்று நான் நினைத்தேன்" என்றார். இதற்கிடையே, பெரியாரின் எண்ணத்தை அறிந்த சகோதரர்கள் காவல் துறையின் உதவியை நாடினார்கள். அது போதாதென்று, எதிர்ப்பை சமாளிக்க, அடியாட்கள் வேறு நாடகக் கொட்டகைக்குள் நிறுத்தி வைக்கப்பட்டனர். நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன் மற்றும் சிலருடன் ஈ.வெ.ரா.விடம் சென்று கேட்டுக்கொண்டதும் ஈ.வெ.ரா. பணிந்தார். இது அண்ணாவுக்கு மிகுந்த மனநிம்மதியைக் கொடுத்திருக்க வேண்டும். ஏனெனில் டி.கே.எஸ்.ஸின் துணைவியார் மறைவுக்கு 'திராவிட நாடு' இதழில் 'இருண்ட வீடு' என்ற

தலைப்பில் அஞ்சலிக் கட்டுரை எழுதுமளவுக்கு சண்முகத்துடன் அண்ணா நெருக்கமாக இருந்தார்.

'சந்திரோதயம்' நாடக வசூலில் கிடைத்த ஐந்து ஆயிரம் ரூபாயைக் கொண்டு, 1943-ல் பக்கத்திலிருந்த வாடகைக் கட்டடத்துக்கு 'திராவிட நாடு' அச்சகம் இடம்பெயர்ந்தது. நான்கு ஆண்டுகள் கழித்து, 'திராவிட நாடு'க்கென ஒரு சொந்தக் கட்டடத்தை வாங்கமுடிந்தது; ஆனால், நாடக வசூலில் இருந்து அல்ல. 'நிமந்தக்காரத் தெருவிலிருந்த 'திராவிட நாடு', பிறகு அச்சகத்துக்கு அருகாமையில் ஹாட்ஜசன் பேட்டைக்குக் குடியேறலாயிற்று. அண்ணாவின் 'வேலைக்காரி' சினிமாவுக்கு ஊதியமாகக் கிடைத்த 12 ஆயிரம் ரூபாயிலிருந்து 6 ஆயிரம் ரூபாய் கொண்டு 'திராவிட நாடு' கட்டடம் தொத்தாவின் முயற்சியால் வாங்கப்பட்டது. அதை வாங்க உதவிய தங்கவேலர், ரிப்பேர் என்று சொல்லி மேலும் 4 ஆயிரம் ரூபாய் செலவு வைத்துவிட்டார் என்று சொல்வார்கள்' என இராம.அரங்கண்ணல் குறிப்பிடுகிறார். இதழுக்கு கே.ஆர்.ராமசாமியும் பண உதவி செய்து ஆதரித்தார்.

எம்.ஜி.ஆருடன் சந்திப்பு

'சந்திரோதயம்' நாடகம், 'திராவிட நாடு'க்கு மட்டும் உதவவில்லை. எம்.ஜி.ஆரை அண்ணாவிடம் சேர்க்கவும் காரணமானது. அப்போதைய 'மூர்மார்க்கெட்' அருகிலுள்ள விக்டோரியா பப்ளிக் ஹாலில் அண்ணாவும் டி.வி.என்.னும் சந்திரோதயத்தில் நடிக்க அதற்கு கலைவாணர் தலைமை தாங்கினார். எம்.ஜி.ஆருக்கு சந்திரோதயத்தில் டி.வி.என்.னின் துடிப்பும், வசன உச்சரிப்பும் பிடித்துப்போய் அவரைப் பழகிக்கொண்டார்.

''டி.வி.என்., என்றும் அணையாத, எல்லா உயிர்களையும் வாழ்விக்கும், ஒளி தந்து உயிர் ஊட்டும் சூரியனிடமே அல்லவா என்னை அழைத்துச் சென்றார்! அப்படிப்பட்ட சூரியனான பேரறிஞர் அண்ணாவை எனக்கு அண்ணனாக, ஆசானாக, வழிகாட்டியாகப் பெறும் பாக்கியத்தை, கிடைத்தற்கரியதொரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தவர்தான் நடிகமணி டி.வி.நாராயணசாமி'' என எம்.ஜி.ஆர். எழுதினார். அண்ணாவுக்கு டி.வி.என். அறிமுகமானது சுவையான கதை.

ஈரோடு, 'குடியரசு' இதழில் அண்ணா பணிபுரிந்தபோது, ஓர் இளைஞர் அவரிடம் வந்து, 'நீங்கள்தானே அண்ணாதுரை?' என்று கேட்டார். அண்ணா தலையசைத்ததும், இளைஞர் முகம் பிரகாசமாகிவிட்டது. இளைஞரின் தலைமுடியைக் கண்டு அவர் ஒரு நடிகராக இருக்கவேண்டும் என அண்ணா நினைத்தது

சரியாகப்போயிற்று. அவர்தான் டி.வி.நாராயணசாமி. அப்போது டி.கே.எஸ். பாய்ஸ் கம்பெனியில் இருந்தார். சுமார் ஒரு மணி நேரத்துக்கு அவர்கள் இருவரும் கலை முதல் அரசியல் வரை பல விஷயங்கள் குறித்துப் பேசினார்கள். பின்னர், டி.வி.என்., அண்ணா தம்மிடம் காட்டிய மரியாதையையும் அக்கறையையும் நினைவுகூர்ந்து மகிழ்ந்தார். டி.கே.எஸ். சகோதரர்களின் நாடகக் குழுவில் இருந்தபோதே டி.வி.என். 'விடுதலை' மற்றும் 'குடியரசு' இதழ்களைச் சத்தம் போட்டுப் படிப்பார், தோழர்களுக்காக. லட்சிய நடிகர் எஸ்.எஸ்.ராஜேந்திரன், வளையாபதி முத்துகிருஷ்ணன் மற்றும் கே.ஆர்.ராமசாமி ஆகியோர் டி.வி.என். இந்தப் பத்திரிகைகளைப் படிக்கக் கேட்டுத்தான் இயக்கத்துக்கு வந்தனர்.

ஆனால், டி.கே.சண்முகம், டி.வி.என்.-னின் பிரசார உணர்வையும் அண்ணாவின் சீடர் என்ற தொடர்பையும் ஏற்கவில்லை. ஈரோடு சுயமரியாதைக் கழகத் தலைவர் பி.சண்முக வேலாயுதம் புராண நாடகங்களுக்கு ஒரு முடிவுகட்ட வேண்டுமென வரைவுத் தீர்மானம் ஒன்றை மாகாண நாடக மாநாட்டுக்கு அனுப்பியிருந்தார். சீர்திருத்தக் கருத்துள்ள நாடகங்கள், நடிகர்களுக்கு நல்ல சம்பளம் லாபத்தில் ஒரு பங்கு என்றும் தீர்மானத்தில் கூறியிருந்தார். டி.வி.என். அந்தத் தீர்மானம் அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தை அண்ணாவிடமும், கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனிடமும் கொடுத்தார்.

டி.வி.என். கொணர்ந்த யோசனையை ஆதரித்து மாநில நாடக மாநாட்டில் இருவரும் பேசினார்கள். டி.கே.எஸ். நிர்வாகம் டி.வி.என்.னைத் தொந்தரவாகக் கருதி, அவர் கணக்கைத் தீர்த்து உடனே வெளியேறச் சொல்லியது. அண்ணாவுக்கு இது வியப்பளிக்கவில்லை; தாம் இதை எதிர்பார்த்ததாகக் கூறினார். "என்னுடனே இருந்துவிடு" என்று அண்ணா சொன்னது, டி.வி.என். செவிகளில் இன்பத் தேனாகப் பாய்ந்தது.

1944, பிப்ரவரி 19 அன்று கும்பகோணத்தில் நடந்த முதல் திராவிட மாணவர் மாநாட்டில் டி.வி.என். உடனே பங்கு கொண்டார். நாவலர் நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். "டி.வி.என். எங்களில் ஒருவராகிவிட்டார்" என்று அந்த சந்தர்ப்பத்தில் அண்ணா கூறினார்.

இதற்குப் பிறகு டி.வி.என்., எம்.ஜி.ஆரை அண்ணாவுக்கு அறிமுகப்படுத்தினார்:

> பல ஆண்டுகளுக்கு முன், ஒருநாள், கூரையில்லாத மாடியில் உட்கார்ந்து காலஞ்சென்ற லிங்கத்துடன் பேசிக்கொண்டிருந்தார் அண்ணா. அப்போதுதான்

அவர் எழுதிவைத்த காகிதம், பேனா, புத்தகங்கள் முதலியவை சூழ்ந்திருக்க, நான்கு முழ வேட்டி, மேலே ஒரு துண்டு - இவற்றோடு மிக எளிமையான ஒருவராக அவர் காட்சியளித்ததை எனக்கு என் மனம் நினைவூட்டியது. எவ்வளவு அடக்கமான பேச்சு! டி.வி.நாராயணசாமி என்னை அவருக்கு அறிமுகப்படுத்திய போது, அண்ணாவைவிட எவ்வளவோ படிகள் அறிவிலும், ஆற்றலிலும், அனுபவத்திலும், திறமையிலும் மிகவும் கீழ்நிலையிலே இருந்த என்னை, 'இவர்தான் எம்.ஜி.ராமச்சந்திரன். நான் சொன்னேனே, சிவாஜியாக நடிப்பதற்கு ஒருவரை ஏற்பாடு செய்திருக்கிறேன் என்று, அவர் இவர்தான்...' என்று சிபாரிசு செய்தபோது, முன்பின் அறியாத ஒருவன் என்ற எண்ணமே இன்றி, பல ஆண்டுகள் ஒன்றாக அவரோடு சேர்ந்து, வளர்ந்து, வாழ்ந்து வரும் தம்பியிடம் கொள்ளும் பாச உணர்வோடும், அதேநேரத்தில் பண்போடும் கண்ணியத்தோடும், 'வாங்க, உட்காருங்க' என்று கூறி அண்ணா என்னை வரவேற்று இனிய மொழிகள் சொன்னாரே, அப்போது அவருடைய முகத்தில் அரும்பிய அதே புன்முறுவலைத்தான் இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னும், வேதனை நிறைந்த இந்த நேரத்திலும் கண்டேன்.

- என்று எம்.ஜி.ஆர். நினைவுகூர்ந்தார்.

எம்.ஜி.ஆரின் அண்ணன் எம்.ஜி.சக்ரபாணி, "ஏழு ஆண்டுகளுக்கு மேலாயிற்று எனக்கு, திராவிட இயக்கத்தின் மீது பற்றுதல் ஏற்பட்டு... எனக்கு திராவிட இயக்கத்தின் மீதும், அதன் கொள்கைகளின் பேரிலும் இருந்த மாறாத பிரியம், அப்போது மாடர்ன் தியேட்டரில் பணியாற்றி வந்த நண்பர்கள், கண்ணதாசன், ஆசைத்தம்பி ஆகியோரின் நெருங்கிய தொடர்பினால் மேலும் மேலும் வளர்ந்தது. தம்பி ராமச்சந்திரனுக்கு திராவிட இயக்கத்திலே அறவே பற்றுதலில்லை!" என்று எழுதியிருக்கிறார்.

இதற்கு முன்பெல்லாம் எம்.ஜி.ஆர். கதர் உடுத்தி, திருப்பதியில் தருவிக்கப்பட்ட கறுப்பு மணியை கழுத்தில் அணிந்திருப்பார். நெற்றி நிறைய திருநீறும், இரு புருவங்களுக்கு இடையே சுண்டுவிரல் அளவுக்கு குங்குமப் பொட்டும் இட்டிருப்பார். எம்.ஜி.ஆரின் தந்தை கோபால மேனன் இன்றைய கேரளாவில் அன்று மாஜிஸ்ட்ரேட் ஆக இருந்தார். பின்னர், இலங்கையில் ஒரு கல்லூரி

முதல்வராகப் பணியாற்றினார். கோபால மேனனுக்கும் அவர் மனைவி சத்யபாமாவுக்கும் - எம்.ஜி.சக்ரபாணி, எம்.ஜி.ராமச்சந்திரன் என்ற இரண்டே மகன்கள். மூன்று குழந்தைகள் இறந்துவிட்டனர். மேலும், எம்.ஜி.ஆருக்கு மூன்று வயதாகும்போதே கோபாலமேனன் காலமாகிவிட மருமக்கத்தாயம் என்ற கேரள நாயர்கள் வழக்கத்தின் கீழ், கோபால மேனனின் சகோதரிகளுக்கே சொத்தெல்லாம் போயிற்று. குடும்ப நண்பர் நாராயண நாயர் உதவியால், மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி என்ற நாடகக் குழுவில் சகோதரர்கள் சேர்ந்தபோது, ஆரம்பத்தில் அவர்களுக்கு சம்பளம் எதுவும் கிடையாது. பின்னர்தான் ராமச்சந்திரனுக்கு, மாதம் ஐந்து ரூபாய் சம்பளம் என்று முடிவானது. சிறுசிறு பாத்திரங்களில் நடித்த பின்னரே, 'பாதுகா பட்டாபிஷேகம்' நாடகத்தில் பி.யு.சின்னப்பா எதிர்பாராத விதமாக வராமல் போக பரதனாக நடிக்கும் வாய்ப்பு எம்.ஜி.ஆருக்கு கிட்டியது. ஆனால், இளம் பிராயத்தில் குரல் உடைந்ததில், கதாநாயகன் பாத்திரம் என்பது கைக்கெட்டாமல் போனது. அந்தக் கால கதாநாயகர்களுக்குப் பாடவும் தெரிந்திருக்க வேண்டும்.

வாய்ப்பில்லாத காலத்தில் எம்.ஜி.ஆர். குத்துச்சண்டை, குதிரையேற்றம் முதலியவற்றைக் கற்றுக்கொண்டு, தன்னைத் தயார் செய்துகொண்டார். விரைவிலேயே எம்.ஜி.ஆர். ஒரு துணை நடிகராக, பாய்ஸ் கம்பெனியின் நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். பாய்ஸ் கம்பெனி உரிமையாளர் சச்சிதானந்தம் பிள்ளை அவருடைய 'பதிபக்தி' திரைப்படத்தில் நடிக்க எம்.ஜி.ஆருக்கு வாய்ப்புத் தரவில்லை. ஏமாற்றமடைந்த எம்.ஜி.ஆர். எம்.கே.ராதாவின் தந்தை எம்.கந்தசாமி முதலியாரைச் சென்று பார்த்தார். எம்.கே.ராதாதான் எம்.ஜி.ஆரின் நாடக உலக ஆசான்.

முதலியாரின் பரிந்துரை காரணமாக, எம்.ஜி.ஆர். சகோதரர்கள் இருவருக்கும் பாத்திரங்கள் கொடுக்கப்பட்டன. பத்தொன்பது வயதே ஆன எம்.ஜி.ஆரை 'சதிலீலாவதி' அறிமுகப்படுத்தியது. எம்.ஜி.ஆர். போலீஸ் இன்ஸ்பெக்டர் ரெங்கய்ய நாயுடுவாகத் திரைப்படத்தில் நடித்தார். ('ஆனந்த விகடன்' மற்றும் ஜெமினி ஸ்டூடியோ அதிபரான எஸ்.எஸ்.வாசன் எழுதியதுதான் சதிலீலாவதி - 1936). என்.எஸ்.கே.வுக்கு சதிலீலாவதி இரண்டாவது படம். திரைப்படத்தில் நடித்தவர்கள் எல்லாம் ஓர் இடத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தார்கள். அப்போது என்.எஸ்.கே.யின் நம்பிக்கையை தான் பெற்றதாக எம்.ஜி.ஆர். எழுதியிருக்கிறார்: "ஏதாவது நல்ல பத்திரிகையை நீ படிக்க வேண்டும். அதில் சொல்லப்படும் கருத்துகளை அப்படியே ஏற்றுக்கொண்டுவிடக் கூடாது. அதற்கு மறுப்புச் சொல்லும் பத்திரிகையையும் படிக்க



கருணாநிதி, அண்ணா

வேண்டும். பல பத்திரிகைகளைப் படித்து குழம்பவும் கூடாது. ஒன்றுக்கொன்று எதிர்முகமான இரு பத்திரிகைகளைத் தேர்ந்தெடுத்துப் படி. நீ வாழ்க்கையில் சந்திக்கிறவர்களை, சந்திக்கிற நிகழ்ச்சிகளை பத்திரிகையின் விளக்கங்களோடு ஒப்பிட்டுப் பார். எது நியாயம் என்று தெரிகிறதோ, அதை விடாப்பிடியாகப் பற்றிக் கொள்!" என்றார். கலைவாணர் அப்போது எனக்கு சிபாரிசு செய்த பத்திரிகை, 'ஐயா'வின் (பெரியாரின்) 'குடியரசு' பத்திரிகைதான்."

'சதிலீலாவதி' 'எம்.ஜி.ராமச்செந்திரன்' என்றுதான் எம்.ஜி.ஆரை அறிமுகம் செய்தது. பிறகு அவர், 'இரு சகோதரர்கள்' (1936), 'தட்சயக்ஞம்' (1938), 'மாயா மச்சீந்திரா' (1939), 'அசோக்குமார்' (1941), 'வேதவதி' (1941), 'தாசிப்பெண்' (!943), 'தமிழறியும் பெருமாள்' (1942), 'ஹரிச்சந்திரா' (1944), 'மீரா' (1945), 'சாலிவாஹனன்' (1945), 'ஸ்ரீமுருகன்' (1946) ஆகிய திரைப்படங்களில் சிறுசிறு பாத்திரங்களில் நடித்தார். ஜூபிடர் பிக்சர்ஸ் ஏ.எஸ்.ஏ.சாமி, எம்.ஜி.ஆரையும் கலைஞர் கருணாநிதியையும் 'ராஜகுமாரி'யில் இணைத்தார். முன்பே கண்டது போல் டி.வி.என். எம்.ஜி.ஆரை அண்ணாவிடம் கொண்டு சேர்த்தார்.

'சதிலீலாவதி'க்குப் பிறகு மூன்று வருடங்கள் கழித்து வெளியான 'மாயா மச்சீந்திரா'வில் எம்.ஜி.ஆரின் வாள் வீச்சையும் சண்டைக் காட்சிகளையும் பார்த்து ரசித்திருந்தார் டி.வி.என்., 'சந்திரமோகன்' அல்லது 'சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்' என்ற அண்ணாவின் நாடகத்தில் சிவாஜியாக நடிக்க எம்.ஜி.ஆர். பெயரை அண்ணாவிடம் டி.வி.என். கூறினார். நாடகமே டி.வி.என்.னுக்காகத்தான் எழுதப்பட்டது. "சிவாஜி கண்ட இந்து ராஜ்யத்தை, நண்பர் நாராயணசாமிக்காகவே நான் எழுதினேன். அதில் தளபதி சந்திரமோகன் வேடத்தில் டி.வி.என்.னும் காசிவாசி காகபட்டராக நானும் நடித்தோம்" என அண்ணாவே குறிப்பிட்டிருக்கிறார்.

'சமுதாய சீர்திருத்தம் புயல் வேகத்தில் வந்தால்தான் இன்றைய தமிழ்ச் சமுதாயத்துக்கு ஏதாவது பலன் கிடைக்கும்' என்று அழுத்தமாகப் பேசுவார் டி.வி.என். எம்.ஜி.ஆரை தனது ஒத்த கருத்துள்ளவராக எண்ணி, 'எங்கள் கட்சியின் நாடகத்தில் நீங்கள் நடிக்கிறீர்களா?' என்று கேட்டார். 'நல்ல வேடம். நடிப்பதற்கு நிறைய வாய்ப்பு உண்டு. உங்களின் சமுதாய சீர்திருத்தக் கருத்துகளை வெளியிடலாம். அதுவும் அண்ணா எழுதிய நாடகம்!'

- இதை அவர் சொல்லி முடித்தாரோ இல்லையோ, அந்த ஒரு விநாடிக்குள் 'சந்திரோதயம்' நாடகமும், அதில் சொல்லப்பட்ட சிறந்த கருத்துகளும் எம்.ஜி.ஆர் மனதில் தோன்றி மறைந்தன. தலையை ஆட்டி தனது இசைவைத் தெரிவித்தார். இப்படி அண்ணாவையும் அவரது இதயக்கனியையும் ஒன்று சேர்க்க டி.வி.என். ஒரு கருவியாக இருந்தார். ஆனால், விழுப்புரம் சின்னய்யா கணேசன் என்கிற 'சிவாஜி' கணேசன், எம்.ஜி.ஆருக்காக உருவாக்கப்பட்ட சிவாஜி பாத்திரத்தில் நடிக்க வேண்டிவந்தது விதி போலும்!

7

மகன் தந்தைக்கு ஆற்றிய நன்றி



சேலம், 1944

நீதிக் கட்சியின் பதினான்காவது திருச்சி மாவட்ட மாநாடு 1943 ஏப்ரல் 25 அன்று நடந்தது. மாநாட்டு உரையில் ஈ.வெ.ரா., தம் சீடரைக் குறித்த உணர்வுகளை வெளிப்படுத்தினார்:

"நான்தான் அண்ணாதுரையைத் தலைவராகப் போடச் சொன்னேன். காரணம், ஒப்புக்கொண்டு வராமல் இருக்கவேண்டிய அவசியம் அவருக்கு இல்லை என்பது ஒன்று. அவரைக் கூப்பிடும்போது கெஞ்சவேண்டியது இல்லை என்பது இரண்டு. சண்டை (போர்) காலமாக இருப்பதால் பெரிய தலைவர்கள் சுலபத்தில் கிடைக்க மாட்டார்கள் என்பது மூன்று. அதனால் சொன்னேன். அவர் தலைமை வகிப்பதில் அவர் மீது இரண்டு குற்றங்கள் கூறுவார்கள். ஒன்று - வயது சிறியது. இரண்டு - பட்டம், பதவி, பணம் உள்ள கூட்டத்தில் சேர்ந்தவரல்ல. அவருக்கு வயது 34, 35 ஆகிறது. பண்டித ஜவஹர்லால் நேரு, சுபாஷ் பாபு

போன்றவர்கள் இந்த ஸ்தானங்களுக்கு வரும்போது இவ்வளவு வயதுகூட இல்லை. நமது தலைவர்கள் சர் ஆர்.கே.எஸ்., சர் ஏ.ராமசாமி, சர் குமாரராஜா, சர் பி.டி.ராஜன், டாக்டர் சுப்பராயன், மினராம்பள்ளி ஜமீன் முதலியவர்களும் தலைமைப் பதவிக்கு வரும்போது இவ்வளவு வயதுக்குள்தான் இருந்தார்கள். பணம், பதவி கிடைப்பது கஷ்டமான காரியமில்லை. எம்.ஏ., படித்தவர், ஜெயிலுக்குப் போனவர், சேர்ந்த காலம் முதற்கொண்டு இதுவரை கொள்கையை மாற்றிக்கொள்ளாதவர். இப்படிப்பட்டவர்கள் கிடைப்பதுதான் கஷ்டமான காரியம். இது மட்டுமில்லாமல், நம் இயக்கத்தில் இப்போது இவர் போன்ற இளைஞர்களும், ஏழை மக்களும்தான் அதிகமாக இருக்கிறார்கள். ஆனதாலும் நடக்கவும் சவுகரியமாக இருக்கிறபடியாலும், இவர் போதும் என்று நினைத்தேன்."

தனது நன்றிக்கடனைச் செலுத்த அண்ணாவுக்கு அடுத்த ஆண்டு சேலம் வழி செய்தது. ஈ.வெ.ரா. சுயமரியாதை இயக்கத்துக்குத் தலைவராக இருந்தாலும், உளுத்துப்போன நீதிக் கட்சியின் மீதான அவர் பிடி அவ்வளவாக இறுகியிருக்கவில்லை. 1940-ல் அண்ணா கட்சியின் பொதுச்செயலராக ஆகியிருந்தார். அவருக்கு முந்தைய பொதுச்செயலர் கி.ஆ.பெ.விசுவநாதம், பெரியார் மீது பதினான்கு குறைகளைப் பட்டியலிட்டு, பதவி விலகியிருந்தார். பெரியாரைப் பொறுத்தமட்டில் இப்படி அவருடன் கருத்து வேறுபட்டோர் பலர். எனவே, கருத்து வேற்றுமைகள் இருந்தாலும், பதினான்கு ஆண்டுகள் அவரோடு தொடர்பு நீடித்தது அண்ணாவின் சாதனை. இதில் முக்கியகட்டம்தான், சேலத்தில் 1944-ம் ஆண்டு 'நீதிக் கட்சி'யை 'திராவிடர் கழகம்' என பெரியார் மாற்றியபோது, நீதிக் கட்சி பழம்பெருச்சாளிகள் சிலரிடமிருந்து பெரியாருக்கு வந்த எதிர்ப்பைச் சமாளிக்க அண்ணா உதவியது.

1944-ன் துவக்கத்தில், சேலம் மாநாட்டில், 'நீதிக் கட்சி'யை 'திராவிடர் கழகம்' என மாற்றுவது என்கிற தீர்மானம் நிறைவேறியிருந்தது. இதற்கு அ.மறைமலையான் ஒரு சுவையான காரணம் கூறுகிறார்:

> திராவிடர் கழகம் என கட்சியின் பெயரை மாற்றிவிடுவதால், 'தமிழருக்குத் தலைவராகும் தகுதி ஏது?' என்ற பொல்லாக் காரணம் கூறி, திராவிட இனத்தாருள் ஒருவரான பெரியாரை விரட்டியடிக்க முடியாது.' இதில் உண்மை இல்லாமல் இல்லை. பெரியார் ஜனவரி 4-ல் இப்படிப் பேசினார்: 'இங்கே பாருங்கள்! கண்ணப்பர் தெலுங்கர். நான் கன்னடியன்.

தோழர் அண்ணாதுரை தமிழர். இப்படி எங்களுக்குள் ஆயிரம் சாதிப் பிரிவுகள். என்னைப் பொறுத்தவரையில் நான் தமிழன் எனச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால், எல்லாக் கன்னடியர்களும் விரும்பமாட்டார்கள். தெலுங்கரும் அப்படியே. எனவே,திராவிட நாடு என்று வரையறுத்துக்கொள்வதில் இவர்களுக்கு ஆட்சேபணை இருக்காது. அது நன்மை பயக்கும். எனவே, இத்தகைய கேவல நிலை ஒழிய, ஜஸ்டிஸ் கட்சி, திராவிடர் கட்சியாக மாறவேண்டும். சேலத்திலே நடைபெறவிருக்கும் மாகாண மாநாட்டிலே இதையே முதல் தீர்மானமாகக் கொண்டுவர வேண்டும்!

தமிழரல்லாத திராவிட மக்கள் ஆர்வம் காட்டாத காரணமே 'திராவிட நாடு' கருத்துக்கு முக்கியச் சிக்கலாக இருப்பதை பெரியார் உணர்ந்திருந்தார். இந்தப் பெயர் மாற்றம் அந்தச் சிக்கலை சிறிது அவிழ்க்க உதவும் என்று கருதினார். ஆனால், திராவிட நாடு என்ற உயர்ந்த லட்சியம், தமிழ் பேசாத மக்களின் நம்பிக்கையைப் பெறுவதில் எந்த முயற்சியும் இல்லாமல், வெறும் பேச்சோடு நின்றது. (நான்காம் அத்தியாயத்தில் இது விளக்கப்பட்டுள்ளது.)

தமிழ் அல்லாத திராவிட மொழி பேசுவோர் சிலரைக் கட்சிக்குள் கொண்டு வந்திருந்தது உண்மை என்றாலும், அவர்கள் பெரும்பாலும் தமிழ் மொழி பேசும் பகுதிகளில் இருந்தே வந்தனர். மீதியுள்ளவர்கள் திராவிட நாடு என்பதில் ஆர்வம் காண்பிக்கவில்லை. திராவிட நாடு இலக்கைக் கூறியவர்கள் தமிழர்கள் என்பதோடு, தலைமைப் பொறுப்பில் இருந்த அத்தனை பேருமே தமிழுக்குத்தான் ஆதரவாக இருந்தார்கள். தமிழரல்லாத திராவிட மக்களுக்கு இது வடநாட்டாரின் 'பிடி'யிலிருந்து, தமிழர்களின் 'பிடி'க்கு மாறுவது போலத்தான் இருந்தது. "திமுக திராவிட நாடு என்று கோருவது, தமிழ்நாட்டு முதலாளிகள், ஆந்திரப் பகுதியையும், மலபார், கன்னடப் பகுதிகளையும் சுரண்டுவதற்காகத்தான் என்ற எண்ணம், அந்தப் பகுதி மக்களிடையே ஏற்படாமலிருக்க முடியுமா? எனவே, அந்த மக்களிடம் திராவிட நாடு கோரிக்கைக்கு அறவே ஆதரவு கிடையாது' என்றார் பி.ராமமூர்த்தி. இது போதாதென்று, பிற திராவிடர்கள், பிராமணர் அல்லாத தமிழர்கள் சுயமாகவோ, கற்றோ அறிந்த பிராமணர் எதிர்ப்பு நிலையை ஏற்றுக்கொள்ளவில்லை. இப்படி வரலாறு இயைந்த உணர்வும் தமிழ் பேசா திராவிட மக்களிடையே இல்லாததால், தோன்றிய வேகத்திலேயே திராவிட நாடு ஆர்வமும் இறந்துபட்டது.

'திராவிட நாடு' கருத்துக்கு சேலம் மாநாட்டில் வெகு எளிதாக ஆதரவு கிடைத்தது. பிரிட்டிஷாரின் தொடர்பைத் துண்டித்துக்கொள்வதும், அவர்கள் அளித்த பதவிகளை துறப்பதுமே மிகவும் சிக்கலாயின. 1934-ல் ஒரு சமதர்ம கட்சியைத் தொடங்க எண்ணம் கொண்டிருந்தபோதும் ஈ.வெ.ரா. பதவியை அல்லது ஆட்சியை, சமூக மாற்றத்துக்கு ஒரு கருவியாகப் பயன்படுத்த விரும்பவில்லை முன்பு ஒரு காங்கிரஸ்காரராக இருந்த அவர், நீதிக் கட்சிக்கு, பிராமண ஆதிக்கத்தை வீழ்த்த பிரிட்டிஷாருடன் வைத்திருந்த கூட்டுறவுக்கான பலன் கிடைத்துவிட்டது என நம்பினார். சுதந்திரம் கிடைக்கிற நேரத்தில், பிரிட்டிஷாருடனான நட்பு ஒரு பாரமாகவே தெரிந்தது. எனவே, நீதிக் கட்சியின் தொடர் அவப்பெயருக்கு அவர் பிராமணர்களைக் குற்றம் சாட்டினார். அவர்கள் நீதிக் கட்சியினரைப் பதவி - அதிகாரத்துக்கு அலைபவர்கள் என்றும், பிரிட்டிஷாரின் வால் பிடிப்பவர்கள் என்றும் பழித்தனர். அதிகாரத்தால் சமூக சீர்திருத்தத்தைச் சாதித்துவிட முடியாது என்றார் பெரியார்.

சோதனைக் காலம்

ஒரு சீர்திருத்தவாதி என்ற முறையில் தன் முயற்சிகளுக்கும் நீதிக் கட்சிக்கும் இடையே இருந்த வேறுபாட்டை, தன்னுடைய சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தபோது பெரியார் விளக்கினார்:

> நீதிக் கட்சி இருக்கையில் இது ஏன் என்று வியந்து போய்க் கேட்பவர்களிடம், கடந்த பத்தாண்டுகளாக நீதிக் கட்சி உருவாக்கிய உணர்வுகளையும், சுயமரியாதை இயக்கம் இரண்டு ஆண்டுகளாகச் செய்துவரும் பணியையும் எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன். சமீபகாலமாக, மிதவாதிகளின் கொள்கைகளைப் பின்பற்றி, நீதிக் கட்சியினர் பிராமணர்களிடமிருந்து எப்படியோ வேலை வாய்ப்புகளைப் பறித்து, எல்லோருக்கும் கொடுத்து வருகிறார்கள் என்றாலும், மற்ற வழிகளில் முன்னேறுவதைத் தடுத்து வருகிறார்கள்.

எனவே, நீதிக் கட்சியினரையும் சுயமரியாதை இயக்கத்தினரையும் சமூக நீதி இணைத்தாலும், நீதிக் கட்சித் தலைவர்கள் பெரியாருக்கும், அண்ணாவுக்கும் பிற்போக்கானவர்களாகவே தெரிந்தார்கள். மேலும், ஈ.வெ.ரா.வும் அண்ணாவும் கட்சியின் 'உயர்குடித் தன்மை' அடையாளத்தை முடிவுக்குக் கொண்டுவர விரும்பினர்.



ஈரோடு திராவிட மாணவர் மாநாட்டில் கலந்துகொண்டவர்களுடன் அண்ணா

சேலத்தின் வெற்றிக் களிப்பில், ஈ.வெ.ரா. கூறினார்: "இதுநாள் வரை நீதிக் கட்சி பணக்காரர்களின் கட்சியாக இருந்து வந்தது. இனி, திராவிடர் கழகம் என்ற பெயரில், தொழிலாளர்களுக்காகவும், ஏழை பாழைகளுக்காகவும் உழைக்கும் கட்சியாக இருக்கும்." இவ்வாறு பழைய தலைவர்களுக்கும் புரட்சியாளர் ஈ.வெ.ரா.வுக்கும் ஒரு போராட்டக் களமாக சேலம் அமைந்தது. அண்ணா அன்று பெரியாரைக் காப்பாற்றினாலும், அண்ணாவை பெரியார் சந்தேகிக்கும்படியான சூழலே சேலத்துக்கு உருவாகியிருந்தது. "அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர்கள் என்னைத் தோல்வி அடையச் செய்வதற்குச் செய்த ஏற்பாடு பலன் தரவில்லை. இந்தத் தந்திரத்துக்கு அவர்கள், அண்ணாதுரை தங்கள் பக்கம் இருப்பார் என்று நம்பி இருந்தார்கள். ஆனால் நிலைமையைப் பார்த்து அண்ணாதுரை, அவர்களை விட்டுவிட்டு நம்மிடம் வந்து

நம்மை வரும்படிக் கட்டாயப்படுத்தினார். எனக்கு அது சமயம் அண்ணாதுரை மீதும் சந்தேகம் ஏற்பட்டிருந்தது. ஆனால் அந்த சந்தேகத்தை நிவர்த்தி செய்ய எண்ணிய அண்ணாதுரை, அங்கு தலைவராக பிரேரேபிக்கப்பட இருந்த தலைவர், அண்ணாதுரைக்கு எழுதியிருந்த ஒரு ரகசியக் கடிதத்தை எனக்குக் காட்டி, தன்னை நம்பும்படி சொன்னார். பிறகு நான் அவரை நம்பியதோடு, அதற்குச் சான்றாக அவரையே சில தீர்மானங்களைப் பிரேரேபிக்கும்படி கூறினேன். அவரும் பிரேரேபிக்க ஒப்புக்கொண்டார்" என்கிறார் ஈ.வெ.ரா.

தொடர்ந்து, "அதன் மீது சில தீர்மானங்களை எழுதி அண்ணாதுரையிடம் கையெழுத்து வாங்கி, அந்தத் தீர்மானங்களை அச்சடித்து, அதற்கு 'அண்ணாதுரை தீர்மானம்' என்று பெயர் வைத்து, அதை ஈரோடு 'குடியரசு' ஆபீஸ் அச்சகத்தில் அச்சடித்தாலும், காஞ்சிபுரம் 'திராவிட நாடு' அச்சகத்தில் அச்சடித்ததாக அச்சாபீஸ் பெயரைப் போட்டு, உடனடியாக காஞ்சிபுரத்துக்கு சண்முகவேலாயுதம் வசம் அனுப்பி, அங்கிருந்து சேலம் வந்ததாகக் காட்டி, சேலம் மாநாட்டில் அண்ணாதுரையையே பிரேரேபிக்கச் செய்து, எதிர்ப்பே இல்லாமல் ஒரு சிறு திருத்தத்தோடு நிறைவேற்றிக் கொண்டேன்" என்று பெரியார் விளக்கியிருக்கிறார்.

இதைப் பெரியார் எழுதியபோது, அண்ணா அதைப் பார்த்ததாகவோ, அதற்குப் பதில் அளித்ததாகவோ தெரியவில்லை. இருந்தாலும், 'நிலைமையைப் புரிந்துகொண்டு அவர்களை விட்டுவிட்டு அண்ணா என்னிடம் வந்தார்' என்பது, பெரியார் ஓர் அவசர முடிவுக்கு வரக்கூடியவர் என்பதையே காண்பிக்கிறது. அத்தோடு அண்ணாதுரையை சந்தர்ப்பவாதியாகவும், தெளிவற்றவராகவும் காட்டுகிறது.

அண்ணா சந்தர்ப்பவாதியுமல்ல; தெளிவற்றவரும் அல்ல. கூர்மையான மதி படைத்தவர். அவருக்குத் தன் தலைவர் மீது அப்போதோ, பின்னரோ எந்தச் சந்தேகமும் எழுந்ததில்லை. 'இந்தப் பதினான்கு ஆண்டுகளுக்கும் இடையே சங்கடங்களும், சஞ்சலங்களும் ஏற்படாமல் இல்லை. ஆனால், அவை என் முதல் முடிவை மாற்றவேண்டிய அளவும் அல்ல, அந்த வகையும் அல்ல. எனவே சங்கடம் ஏற்பட்டபோதும், சஞ்சலம் உண்டானபோதும், 'எதையும் தாங்கும் இதயம் உண்டு' என்ற கவிதை வாக்கியத்தின்படி இருந்து வந்தேன். இயக்கத்திலேயும், பெரியாரிடமும் எனக்கு இருந்து வந்த தொடர்பு சாதாரணமாக இருந்திருந்தால், சஞ்சலம் சிறிதளவு ஏற்பட்டபோதே மிரண்டோடிவிட்டிருப்பேன். ஆனால்,

பதினான்கு ஆண்டுத் தொடர்பு, ஏற்படுத்திவிட்ட பற்றும் பாசமும் லேசானதன்று. என் மனம் சுலபத்திலே சலனமடையக்கூடியதாக இருந்திருந்தால் கட்சிவிட்டுக் கட்சி தாண்டும் காரியத்தில் தள்ளப்பட்டிருப்பேன். சபலமோ, பதவியின் மீது மோகமோ இல்லாதவனாக இருந்ததால்தான், எவ்வளவு இடிபட்டாலும் இடர்பட்டாலும் இதே கட்சியிலேயே, முடியும்போது முன்னணியிலும், முடியாத சமயங்களில் வேலி ஓரத்திலும் இருந்துகொண்டு வந்திருக்கிறேன்' என்று எழுதியிருக்கிறார் அண்ணா. மேலும், 1949-ல் பெரியாரை விட்டு அண்ணா பிரிந்தபோது, பெரியார் தம் சீடர் மீது குற்றச்சாட்டுகளை வாரி வீசினாலும், தாம் அண்ணாவைத் தவறாக எடைபோட்ட சேலம் நிகழ்ச்சியை மட்டும் குறிப்பிடவே இல்லை. இந்த நம்பிக்கையின்மைதான் அன்றைய பெரியார். உணர்ச்சி வசப்படுவார்; எளிதில் காயப்பட்டு விடுவார். யாரையும் நம்பிவிடுவார். வேகமாக முடிவெடுக்கும் அவருடைய பண்பும், யாரையும் நம்பிவிடும் குணமுமே அவரை விட்டுப் பல தோழர்கள் விலகக் காரணமானது.

இந்த நம்பிக்கையின்மை எழக் காரணம் என்ன என்று அண்ணா கூறுகிறார்:

> சேலம் மாநாடு நடைபெறுவதற்குச் சில தினங்களுக்கு முன்னால், சென்னையிலே பல நண்பர்கள், 'சண்டே அப்சர்வர்' ஆசிரியர் பி.பாலசுப்பிரமணியம் முயற்சியால், சேலத்திலே பெரியாரைத் தலைமைப் பதவியிலிருந்து நீக்கும் ஏற்பாட்டை நடத்துவதாகக் கூறினார்கள். நான் சிரித்தேன்! நண்பர்கள் கோபித்துக் கொண்டனர். 'பெரியார், இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கேனும் இந்தக் கட்சியின் தலைமைப் பதவியை வகித்திருக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறேன் நான். அவரை, நீக்க இங்கே முயற்சி நடக்கிறதா? வேடிக்கைதான்!' என்று கூறிவிட்டு, 'இந்த மாநாடு கட்சியின் போக்கை மாற்றியமைக்கவே நடைபெறுகிறது. சண்டே அப்சர்வரின் ராஜதந்திரத்துக்கு அல்ல' என்று நான் கூறினேன்.'
>
> 'சேலம் மாநாட்டுத் தேதி நெருங்க நெருங்க, விதவிதமான வதந்திகள் உலவின. இந்த நிலையிலே, நான் தலைவர் பாண்டியனாருக்கு (டபிள்யு. பி.சௌந்தரபாண்டியன்) நிலைமையை விளக்கியும்,

சேலம் மாநாட்டிலே யாது செய்தல் முறை என்பதை எனக்குத் தெரிவிக்கும்படியும் கடிதம் எழுதினேன். காரணம், இந்தச் சம்பவங்களுக்குப் பல மாதங்களுக்கு முன்பு, கட்சியின் எதிர்காலம் எப்படி இருக்கவேண்டும் என்பது பற்றி பெரியாருடன் பாண்டியனாரும் நானும் பேசி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். அந்த முடிவின் முக்கிய அம்சம்; 1.திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றுவது. 2.சுயமரியாதைக் கோட்பாடுகளை அதில் புகுத்துவது. 3.அமைப்பைப் பலப்படுத்துவது. இது விஷயமாகவே தலைவர் பாண்டியனாருடன் நான் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொண்டேன். வதந்திகளைக் கருவிலேயே புதைக்க, இந்தக் கடிதப் போக்குவரத்து உதவியது.

தலைவர் பாண்டியன் அவர்கள் ஈரோட்டிலே பேசியதை சேலத்திலே நிறைவேற்ற வேண்டும் என்று எனக்குத் தெரிவித்து, அதற்கான வேலைத் திட்டத்தைத் தீட்டி அனுப்புமாறு பணித்தார்கள், செய்தேன். இடையே, சேலம் மாநாட்டு வரவேற்புக் கழகச் செயலாளர் தோழர் நெட்டோ அவர்கள் பெரியார் எதிரிலேயே தாக்கிப் பேசியதாகவும், மாநாட்டிலே பாண்டியன் அவர்களைத் தலைவராக பிரேரேபிக்க ஏற்பாடு செய்வதாகவும் கேள்விப்பட்டு, அந்தத் தகவலையும் தலைவர் பாண்டியனுக்குக் கடிதம் மூலம் அறிவித்தேன். பிறகு பெரியாரைக் கண்டேன். 'எனக்கேன் இந்தச் சனியன்! நான் மாநாட்டிலே பேசப் போவதில்லை. கட்சியை யாரேனும் நடத்தட்டும்!' என்றார் பெரியார். நான் வாதாடினேன். 'பட்டம் பதவி கோருவோர் கட்சியை விட்டு வெளியேறச் செய்யவேண்டும். தன்மானக் கொள்கைகளைத் தழைக்கவிடும் கழகமாக வேண்டும். இதுவேதான் பாண்டியனாரின் கருத்தும்' என்பதைக் கூறினேன். பெரியார் சம்மதித்தார். பாண்டியன் அவர்கள் என் தீர்மானத்தை ஆதரித்தும், அதை அமலுக்குக் கொண்டுவரத் தக்க முறையிலே அமைப்பு வேண்டுமென்றும் எழுதிய கடிதம் கிடைத்தது; களித்தேன்.

சௌந்தரபாண்டியனும், பி.டி.ராஜன் போன்ற பிற தலைவர்களும் பின்னர் பெரியாரை விட்டு விலகினர்.



அண்ணாவுடன் கி.ஆ.பெ.விசுவநாதம்

பிறகு நடந்தது பற்றி அண்ணா எழுதுகிறார்:

மாநாட்டுக்கு முன்னாள் மாலை சேலம் சென்றேன். ஏற்கெனவே அங்கு தோழர் பாண்டியன், வி.வி.ராமசாமி, 'சண்டே அப்சர்வர்' பாலசுப்பிரமணியம், கி.ஆ.பெ.விசுவநாதம் ஆகியோர் வந்திருந்தனர். இடையில், பெரியாருக்குத் தந்தி கொடுத்திருப்பதாகவும், விடுதிக்கு வந்தால் மாநாட்டிலே என்ன செய்வது என்பதைப் பற்றிப் பேசலாம் என்றும் யோசனை கூறினார் பாண்டியனார். சரி என்றேன். பெரியார் வரவில்லை. நானும் படுத்துக்கொண்டேன். 10.30 மணிக்கு மேல், நண்பர் ஒருவர் என்னைப் பாண்டியனார் அழைப்பதாகக் கூறினார். நானும் ஏ.கே.தங்கவேலரும் சென்றிருந்தோம். மாநாட்டு வரவேற்புக் கழகத் தலைவரும், காரியதரிசிகளும் வந்தபிறகு எல்லோருமாகப் பேசினோம். இடையிடையே காரம்! கடைசியாகப் பாண்டியனாரின் அறிக்கையின்படி, தீர்மானத்தை

அமலுக்குக் கொண்டுவரும் தேதியை வைத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது. பிறகு பெயர் மாற்றுவது பற்றிய பேச்சு நடந்தது. அதுசமயம் நண்பர் பாலசுப்பிரமணியம் சொன்னது ஒன்றுதான். அதாவது ஆந்திரர், கேரளர் ஆகியோரின் கருத்துத் தெரியாமல் எப்படி பெயரை மாற்றுவது என்பதுதான். பிறகு, அரசியலிலே மதப் பிரச்னை கலக்கக்கூடாது என்று தலைவர் கே.வி.ஆர். அவர்கள் பேசிய பிரச்னை விவாதிக்கப்பட்டது. இந்த விஷயத்திலே நாங்கள் ஒரு துளியும் விட்டுக் கொடுக்க முடியாது. சுயமரியாதைக் கோட்பாடுகளைப் பரப்பாமல் இருக்க மாட்டோம். எங்கள் குறிக்கோள் சமுதாய சீர்திருத்தமே என்று நான் வாதாடினேன். பாண்டியனார் இடையிடையே என்னை ஆதரித்துப் பேசினார். பிறகு இவை பற்றிக் காலையிலே மாநாடு கூடுமுன் பெரியாரும் - பாண்டியனாரும் பேசுவது என்ற முடிவுடன் எங்கள் உரையாடல் முடிந்தது.

நண்பர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள் கலந்துகொள்ளவில்லை. முழுப் பொறுப்பையும் பாண்டியனாரிடம் ஒப்படைத்துவிட்டேன் என்று படுத்துக்கொண்டிருந்தார். வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் ரத்தினசாமி அவர்கள் 10.30-லிருந்து காலை 4 மணி வரை நடைபெற்ற பேச்சிலே ஒரே ஒரு வாசகம் கூறினார்: 'முடிந்ததா அண்ணா? போய்ப் பந்தலிலே வாழைமரம் கட்டவேண்டும்!' என்பதுதான் அவர் பேசிய வாசகம்! இதைத்தான் 'சண்டே அப்சர்வரி'ல் 'ஒப்பந்தம்' என்று எழுதியிருக்கிறார்கள். இது உரையாடல்!

'சிறப்புச் செய்தியாளர்' என்று பின்னர் கட்டுரை எழுதிய அண்ணா, மாநாட்டில் பெரியாரின் வெற்றியைக் குறிப்பிட்டிருந்தார். பெரியாருக்கு சேலம் ரயில் நிலையத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பு வாழ்த்தொலிகள் - விண்ணை முட்டின என்றும், பெரியாருக்குப் பின்னால் சென்ற ஊர்வலம் ஒரு மைல் தூரம் வரை இருந்தது என்றும் 'சிறப்புச் செய்தியாளர்' கூறியிருந்தார். சுமார் 3,500 பிரதிநிதிகளும், அதைப்போல் இருமடங்கு பார்வையாளர்களும் மாநாட்டுப் பந்தலில் கூடியிருந்தார்கள்.

மாநாட்டில் பேசும்போது, பெரியார் எதிர்ப்பணியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் பெரியாரின் தலைமை மீது தமக்கு இருந்த

நம்பிக்கையை மீண்டும் உறுதி செய்தார். பெரியாரை கார்ல் மார்க்ஸோடு ஒப்பிட்டு, தாம் என்றென்றும் பெரியாரின் தலைமையின் கீழ் பணியாற்றப் போவதாக உறுதி கூறினார். ஈ.வெ.ரா. தன் தலைமை உரையில், "நான் மற்றதை எல்லாம் மறந்து, அவரை (பி.பாலசுப்பிரமணியத்தை) வரவேற்கிறேன்!" என்றார். அதிருப்தியாளர்களின் தலைவர் என்று கருதப்பட்ட சி.ஜி.நெட்டோ, ஈ.வெ.ரா.வைத் தலைமை ஏற்குமாறு கேட்டுக்கொண்டபோது, பெரியாரின் தலைமைக்கு ஏற்பட்டிருந்த எஞ்சியிருந்த எதிர்ப்பும் விலகிவிட்டது.

தமது கட்டுரையின் கடைசியில், 'சிறப்புச் செய்தியாளர்', ஐந்து மணிக்கு அண்ணா, திராவிடர் கழகம் என்ற புதிய பெயரை பிரேரேபித்தபோது நெட்டோவும் வேறு சிலரும் அதை எதிர்த்தனர் என்றார். முன்னதாக கட்சி நிர்வாகக் குழுவில் முப்பத்தைந்து மணி நேரம் இந்தத் தீர்மானம் விவாதிக்கப்பட்டது.

அண்ணாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் இவ்வாறு அமைந்திருந்தது:

1. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வழங்கிய சர், ராவ்பகதூர், திவான் பகதூர், ராவ் சாகிப் போன்ற கௌரவ பட்டங்களைத் துறக்கவேண்டும். மீண்டும் அந்தப் பட்டங்களையோ, விருதுகளையோ பெறக்கூடாது.

2. உள்ளாட்சி மன்றத் தலைவர், கௌரவ மாஜிஸ்ட்ரேட் முதலிய நியமனப் பதவிகளை வகிப்பவர்கள் அந்தப் பதவிகளிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும்.

3. பெயருக்குப் பின்னால் உள்ள சாதிப் பெயரை விட்டொழிக்க வேண்டும். எதிர்காலத்தில் எவரும் சாதிப் பெயர்களைப் பயன்படுத்தக் கூடாது.

4. தென்னிந்திய நல உரிமைச் சங்கம் (ஜஸ்டிஸ் கட்சி) என்ற பெயரை மாற்றி திராவிடர் கழகம் என்று பெயரிடப்பட வேண்டும்.

தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேறின. ஆனால் பட்டங்கள், விருதுகள் பற்றிய தீர்மானம் மட்டும் ஆறு மாதங்களுக்குத் தள்ளிவைக்கப்பட்டது. தீர்மானங்களை முன்மொழிந்து பேசுகையில் பெரியாரைப் பற்றி உணர்ச்சிகரமாக வாதாடினார் அண்ணா. பெரியாருக்கு ஆதாரக் கல்வி கிடைக்காது போனதையும் அவரது கன்னடப் பின்னணியையும் குறிப்பிட்டு, கல்வி கற்றவர்களின் அறிவைவிட பெரியாரின் அறிவு மேலானது என்று வாதிட்டார். பெரியாரின் பின்னணி எப்படி இருந்தாலும், அவர் தமிழர்

நிலையை உயர்த்தத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர் என்று குறிப்பிட்டார் அண்ணா.

சேலம் மாநாடு அண்ணாவுக்குப் புகழ் சேர்த்தது. ஈ.வெ.ரா.வின் சுயமரியாதை இயக்கத்தையும், உளுத்துப்போன நீதிக் கட்சியையும் சமூக - அரசியல் சக்தியாக மாற்ற அவரே கருவியாக இருந்தார். அதுபற்றி டி.கே.சீனிவாசன் கூறுகிறார்:

தந்தை பெரியார்தான் என் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவர் என்று என்னுடைய முடிவை மாற்றி அமைத்தது ஒரு நிகழ்ச்சி. இந்து மகாசபைத் தலைவர் சியாமபிரசாத் முகர்ஜி, தந்தை பெரியாரைச் சந்திக்க திருச்சிக்கு வந்திருந்தார். (அவர் துணைத் தலைவர் டாக்டர் பி.எஸ்.மூஞ்சே, முகர்ஜி அல்ல) இந்து மகாசபையின் தமிழ்நாட்டுத் தலைவர் டாக்டர் வரதராஜுலு நாயுடு, அங்கிருந்த அனைவரையும் முகர்ஜிக்கு அறிமுகம் செய்து வைத்தார். அண்ணாவை அறிமுகப்படுத்தியபோது, 'இவர்தான் அண்ணாதுரை, கட்சியின் மூளை' என்றார். அவர் அதைக் கூறி முடித்தபோது என் உடலில் குருதி குதிரைபோல் ஓடுவதை உணர்ந்தேன்.

தலைவரை எதிரில் வைத்துக்கொண்டே, அவருடைய தளபதியைக் கட்சியின் மூளை என்பது - அதுவும் அவருடைய நெருங்கிய நண்பரே கூறுவது... பெரியாரிடம் சினத்தை எதிர்பார்த்தேன். அவர் சிரித்துக்கொண்டிருந்தார்!

அண்ணாவின் 'சந்திரமோகன்' தந்த 'சிவாஜி' கணேசன்

பிராமணீய எதிர்ப்பே அண்ணாவின் நாடகங்களில் அடையாளக் குறியாக இருந்தது. 1945-ம் ஆண்டு அவர் மராட்டிய மன்னன் சிவாஜி பற்றி எழுதிய சக்தி மிக்க பிரசார நாடகமான 'சந்திரமோகன்' அல்லது 'சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்' சென்னையில் நடந்த ஏழாவது சுயமரியாதை மாநாட்டின்போது மேடையேறியது. வைதீக பிராமண அர்ச்சகர் குலத்தின் அகம்பாவத்தையும், உயர்வு மனப்பான்மையையும், சமூகத்தில் அவர்கள் வகித்த உயர் இடத்தையும் வைத்துக் கொண்டு, மராட்டிய மன்னன் சிவாஜியை அவர்கள் படுத்திய பாட்டைப் படம் பிடித்துக் காட்டும் நாடகம் அது. "சிவாஜி கண்ட இந்து ராஜ்யத்தை நண்பர் நாராயணசாமிக்காகவே எழுதினேன். அதில் தளபதி சந்திரமோகன்

வேடத்தில் டி.வி.என். அவர்களும் காசிவாசி காகபட்டராக நானும் நடித்தோம்", என அண்ணா குறிப்பிட்டிருக்கிறார். சம்பத்தோ, எம்.ஜி.ஆரோ சிவாஜி வேடத்தில் நடிக்கலாமே என அண்ணா எண்ணினார். முன்பே குறிப்பிட்டது போல, அண்ணாவிடம் அழைத்துச் செல்வதாக எம்.ஜி.ஆரிடம் நாராயணசாமி உறுதியளித்திருந்தார். அப்படியே அழைத்துக்கொண்டு போய் எம்.ஜி.ஆரே சிவாஜியாக நடிக்க வேண்டும் என்ற யோசனையையும் கூறியிருந்தார். அண்ணா அந்த முதல் சந்திப்பைப் பின்னர் நினைவுகூர்ந்தார்:

> தோழர் எம்.ஜி.ராமச்சந்திரனை சுமார் எட்டு ஆண்டுகளுக்கு முன்பு சந்தித்தேன், நாடகம் சம்பந்தமாக நடிகர் நாராயணசாமி மூலம் முதன் முதலில் நான் அவரைச் சந்திக்கும்போது, சந்தேகம் கொண்டேன், அவர் ஓர் ஆரியன் என்று. பிறகு அவர் ஒரு திராவிடன் என்று தெரிந்து ஆனந்தமடைந்தேன். அவருடைய தோற்றம், அழகு, உடல் அமைப்பு, பளபளப்பு, பார்ப்பனர்களுக்குப் பொறாமையை உண்டாக்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை. அவருடைய பேச்சு பெருமைக்குரியது. அவருடைய ஒத்துழைப்பு நமது 'எதிர்காலத் திட்டத்துக்கு வெற்றியைத் தேடித் தருமென்று நம்புகிறேன்.

எம்.ஜி.ஆரிடம் எதிர்பார்த்த ஒத்துழைப்பு நாடகத்துக்கு கிட்டாமலேயே போய்விட்டது. வசனங்களை மனப்பாடம் செய்யவே மூன்று - நான்கு நாட்கள் ஆகிவிடும் என்று எம்.ஜி.ஆர். அஞ்சினார். முக்கியமாக, எம்.ஜி.ஆர் அந்த நாடகத்தில் நடித்தால் 'தி.மு.க-காரர்' என்ற முத்திரை குத்திவிடுவார்கள், பின்னர் அது திரைப்பட வாய்ப்புகளை கெடுத்துவிடும் என்று எம்.ஜி.சக்கரபாணி யோசனை கூறியதாக திரை வசனகர்த்தா ஆரூர்தாஸ் குறிப்பிட்டிருக்கிறார். ஒரு காட்சியை மாற்றி எழுதக் கோரி, அண்ணாவின் மனதை தான் புண்படுத்திவிட்டதாகத் தன் அண்ணன் கருதியதாகவும், நாடகத்தில் பங்கேற்காததே நலம் என்று எண்ணியதாகவும் எம்.ஜி.ஆர். பதிவு செய்திருக்கிறார்.

அண்ணாவை எம்.ஜி.ஆர். சந்தித்த சில நாட்களுக்கு முன்பு, டி.வி.என். நாடகப் பிரதியை எம்.ஜி.ஆரிடம் கொண்டுவந்தார். எம்.ஜி.ஆர். சிவாஜியின் பாத்திரத்தைப் படித்துவிட்டு அசந்துபோனார். ஒருகட்டத்தில், தளபதி சந்திரமோகன் முன்னிலையில் தான் பிடித்த கோட்டைகளின் வடிவங்களை சிவாஜி வெறுப்பும் சினமும் கொண்டு தகர்த்துவிடுகிறான்.

மூடநம்பிக்கையும் பிற்போக்குத்தனமும் உள்ள மக்கள், பிராமணக் கோட்பாடுகளின்படி க்ஷத்ரியன்தான் அரசாள முடியும் என்று நம்பியதே சிவாஜியின் உணர்ச்சிக் கொந்தளிப்புக்கும், வெறுப்புக்கும் காரணம். சிவாஜி, சந்திரமோகனிடம் முறையிடாமல் நேரடியாக ரசிகர்களிடமே பேசினால் அது அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற யோசனையை எம்.ஜி.ஆர். டி.வி.என்.-னிடம் கூறி, நாடகத்தை மாற்றி எழுதலாம் என்றார். தாம் அண்ணாவிடம் இதைத் தெரிவிப்பதாக டி.வி.என். கூறினார்.

இரண்டு நாட்கள் கழித்து, இரவு சுமார் 10 மணிக்கு டி.வி.என். அண்ணாவிடம் எம்.ஜி.ஆரை அழைத்துச் சென்றார். அண்ணா அப்போது ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். 'என்ன மாற்றம் செய்ய வேண்டும் என விரும்புகிறாய்? என்று எம்.ஜி.ஆரிடம் அண்ணா கேட்டார். எம்.ஜி.ஆர். தம் எண்ணத்தை விளக்கிச் சொன்னவுடன், அண்ணா டி.வி.என்.-னைப் பார்த்து, 'செய்துவிடலாம்' என்று கூறிவிட்டு, 'நாராயணசாமி! பிறகு எனக்கு ஞாபகப்படுத்து. நான் எழுதி விடுகிறேன்!' என்றார். எம்.ஜி.ஆர். பக்கம் திரும்பி, புகழ்பெற்ற மராத்தி எழுத்தாளர் வி.ச.காண்டேகர் (1898-1976) படைப்புகளை படித்திருக்கிறாயா?' என்று கேட்டார். பின்னர் காண்டேகரின் 'கருகிய மொட்டு' நாவலைக் கொடுத்து, 'இதைப் படித்துப்பார். இதில் நிறைய நல்ல கருத்துகள் காண்பாய்!' என்றார்.

எம்.ஜி.ஆருக்குப் புதிய நாடக வசனத்துக்காகக் காத்திருப்பதா அல்லது தன்னிடமிருந்த வசனத்தையே மனப்பாடம் செய்வதா என்று தெரியவில்லை. அப்போது அவர் கோவையில் கலைஞர் கருணாநிதியின் 'ராஜகுமாரி' படப்பிடிப்பில் இருந்தார். எம்.ஜி.ஆரின் தவிப்பைக் கண்ட இயக்குநர் ஏ.எஸ்.ஏ.சாமி, டி.வி.நாராயணசாமியோடு தொடர்புகொண்டு, அவர் மூலம் அண்ணாவின் அனுமதி பெற்று தேவையான மாற்றங்கள் செய்தார். எம்.ஜி.சக்ரபாணி இதை அறிந்தபோது ஆத்திரமடைந்தார். அண்ணாவை அவமதித்ததற்காக சகோதரரை மிகவும் கோபித்துக் கொண்டார். இயக்கத்தில் எந்தப் பங்கும் வகிக்காதபோதே அவரை அழைத்து கதாநாயகன் பாத்திரத்தை அவருக்குக் கொடுத்த அண்ணாவின் பெருந்தன்மையை எண்ணிப் பார்க்காததைக் கண்டித்தார். 'யாராவது உனக்கு நல்லது செய்வார்களா இனி?' என்று கேட்டார். யோசிக்காமல் தாம் நடந்துகொண்டுவிட்டதில் பலரையும் புண்படுத்திவிட்டதை எம்.ஜி.ஆர். உணர்ந்துகொண்டார். இப்போதைக்கு அந்த நாடகத்தில் நடிக்காமல் இருப்பதே நல்லது என்று சக்ரபாணி கூறினார். 'நீ ஏற்படுத்திய காயம் ஆறட்டும்' என்று அறிவுரை சொன்னார். இதற்கிடையே எம்.ஜி.ஆரின்

உடைகள் தயாராகிவிட்டன. 1945 ஏப்ரல் 1, 'திராவிட நாடு' இதழில் அவர் ஏற்கவிருந்த கதாநாயகன் பாத்திரமும் விளம்பரப் படுத்தப்பட்டது.

எம்.ஜி.ஆர். நிராகரித்ததால், வி.சின்னய்யா கணேசன் என்ற 'சிவாஜி'யின் திறமை வெளிச்சத்துக்கு வந்தது. கே.பி.காமாட்சி, மற்றும் எஸ்.வி.சுப்பையாவின் பெயர்கள் யோசிக்கப்பட்டு சிவாஜியின் பெயரை டி.வி.என். தெரிவித்தவுடன் அந்த யோசனை ஏற்கப்பட்டது. ''கணேசன் பெண் வேடம் அணிந்து பார்த்திருக்கிறேன்' என்று அண்ணா டி.வி.என்.-னிடம் கூற, 'கணேசனை நாம் தயார் பண்ணிவிடலாம், அண்ணா!" என்றார் டி.வி.என்.

கிருஷ்ண கான சபாவிலிருந்து விலகி, காஞ்சியில் அண்ணாவிடம் வந்திருந்த கணேசன் விரைவிலேயே அண்ணாவிடம் நெருக்கமாகிவிட்டார். தஞ்சாவூரில் என்.எஸ்.கே. பெயரில் கிருஷ்ணன் நாடக சபாவைத் தொடங்கியிருந்த கே.ஆர்.ராமசாமி, (என்.எஸ்.கே. அப்போது கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுச் சிறையில் இருந்தார்.) 'மனோகரா' நாடகத்தை நடத்திக்கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் அண்ணா கே.ஆர். ஆருக்காக 'ஓர் இரவு' எழுதி முடித்திருந்தார். கணேசன் அதில் நடிப்பதாக இருந்தது. ஆனால் சக நடிகர் ஒருவருடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமை காரணமாக, காஞ்சிபுரம் போய்விட்டார் கணேசன். காஞ்சிபுரத்துக்கு வந்தபின்னர், அண்ணாவின் கூட்டங்களுக்கு கணேசன் அவருடன் செல்லத் தொடங்கினார். சில கூட்டங்களில் பேசவும் செய்தார். அண்ணா தமக்குப் பேசப் பயிற்சி அளித்தார் என்றார் கணேசன்.

கணேசன் 'சிவாஜி'யாக மாறியதைப் பதிந்திருக்கிறார்:

> நாடகம் நடப்பதற்கு ஒரு வாரம்தான் இருந்தது. டி.வி.நாராயணசாமி நாடகப் பொறுப்பேற்றிருந்ததன் காரணமாக மிகவும் கவலைப்பட்டார். அண்ணாவிடம் 'எம்.ஜி.ஆர். நடிக்க முடியாது' என்று கூறிவிட்டதாகச் சொன்னார். உடனே இருவரும் யோசனை செய்தார்கள். அப்போது எங்களில் மூக்கும் முழியுமாக ஒருவரைத் தேடினார்கள். அவர்கள் பார்வைக்கு நான்தான் தென்பட்டேன். எனக்குத்தான் கொக்குப் போல் மூக்கு பெரியதாக இருக்குமே! எனக்குத் தாடி வைத்தால் நன்றாக இருக்குமென்று அண்ணா நினைத்தார் போலிருக்கிறது. உடனே என்னைப் பார்த்து, 'கணேசா, நீ சிவாஜியாக நடிக்கிறாயா?'

என்றார். அண்ணா இப்படிக் கேட்டதும் எனக்கு உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை வியர்த்துக் கொட்டிவிட்டது. உடனே நான், 'சிவாஜி எங்கே? நான் எங்கே? என்னால் முடியுமா?' என்றேன்.

'நீ முயற்சி செய்துபார் கணேசா, உன்னால் முடியும்!' என்று அண்ணா கூறினார். மேலும், அவர் எழுதிய தொண்ணூறு பக்க நாடகத்தின் வசனங்களை என்னிடம் கொடுத்து 'நான் வீட்டுக்குச் சென்று வருகிறேன். இதை நீ படித்து வைத்திரு. எப்படிப் பேசுகிறாய் என்று பார்ப்போம்' என்று கூறிவிட்டு வீட்டுக்குச் சென்றுவிட்டார். அவர் என்னிடம் வசனம் எழுதிய தாள்களைக் கொடுக்கும்போது, பகல் பதினோரு மணி இருக்கும். அண்ணா வீட்டுக்குச் சென்று, மாலை 6 மணியளவில் திரும்பி, அலுவலகத்துக்கு வந்தார். அண்ணாவுடன் தங்கவேலு, புட்டாசாமி மற்றும் காஞ்சிபுரம் எம்.எல்.ஏ.வாக இருந்த ராஜகோபாலன் ஆகிய மூவரும் வந்தார்கள். அண்ணா என்னிடம், 'கணேசா, பாடம் படித்தாயா?' என்றார். நான் அவரிடம், 'அண்ணா, நீங்கள் இப்படி உட்காருங்கள்' என்று கூறி, அவர் எழுதிக் கொடுத்த வசனங்களைப் பேசி, அதற்குத் தகுந்தாற்போல் நடித்துக் காண்பித்தேன். அண்ணா அவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? அதை எப்படி வார்த்தைகளால் கூறுவது! இப்போது நடந்ததுபோல் இருக்கிறது. ஓடிவந்து என்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டார். கண்களில் கண்ணீரே வந்துவிட்டது. அழாத குறையாக, 'நீ இதை ஏழே மணி நேரத்தில் மனப்பாடம் செய்துவிட்டாயே! நீதான் சிவாஜி!' என்றார். அவர் எழுதிக் கொடுத்த தொண்ணூறு பக்க வசனங்களை, அவ்வளவு குறுகிய நேரத்தில் மனப்பாடம் செய்தேன் என்றால், அதற்குக் காரணம் எனக்கிருந்த கலையார்வம்தான். நாடகத்துக்கு நான்கு நாட்கள்தான் இருந்தன. எம்.ஜி.ஆருக்கு அளவு பார்த்துத் தைத்த உடைகளை எல்லாம் மறுபடியும் என்னுடைய அளவுக்கு மாற்றித் தைத்தார்கள். போதாத இடத்துக்குப் பஞ்சை வைத்துத் திணித்துச் சரி செய்தார்கள். ஏனென்றால் நான் சின்னப் பையன். கொஞ்சம் ஒல்லியாகவும் இருந்தேன்.

சிவாஜி நாடக அரங்கேற்றம், 1945 ஏப்ரல் 29 அன்று நடந்தது. சிவாஜி முடிசூடல் பின்னணியையே நாடகமாக்கியிருந்தார் அண்ணா. ஜூன் 1674-ல் மராட்டிய மாவீரன் சிவாஜி அரசனாக முடிசூடினான். சிவாஜி, பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அவதரித்த சூத்திர யாதவ குலத்தைச் சேர்ந்தவன். பிராமண தர்மப்படி, க்ஷத்ரியர்கள்தாம் நாட்டை ஆளத் தகுந்தவர்கள். உள்ளூர் பிராமண புரோகிதர்கள் அவரை க்ஷத்ரியராக ஏற்றுக்கொள்ள மறுக்கவே, காசி பிராமணரான காகபட்டரை அழைத்து வந்து, அவருடைய ஆசியை வேண்டுகிறார் சிவாஜி. அதற்குப் பின்னர், உள்ளூர் மராத்திய பிராமணர்களும் காகபட்டரும் கை கோத்து, சிவாஜியின் முடிசூட்டு விழாவை நடத்தி, அதன் வாயிலாக பிராமணர்களின் பிடியைத் தக்கவைத்துக் கொண்டார்கள் என்பதுதான் அண்ணா சுட்டிக்காட்ட விரும்பிய அம்சம். பிராமணர்களின் எண்ணத்தை சிவாஜி அறிந்திருந்தாலும், தன்னுடைய வீரத்தைவிட பிராமண புரோகிதர்களின் அங்கீகரிப்பைத்தான் சிவாஜி நம்ப வேண்டியிருந்தது என்ற வேதனைக்குரிய செய்தியை வெளிப்படுத்த அண்ணா எண்ணினார்.

சிவாஜியின் தளபதி, புரட்சிக்கார சந்திரமோகன்தான் நாடகத்தில் நிஜமான கதாநாயகன். சந்திரமோகன் மறுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்டோரின் போர்க்குரல்; தலைவர் ஈ.வெ.ரா.வின் கொள்கைகளைக் கிட்டத்தட்ட பிரதிபலிக்கும் பாத்திரம். சிவாஜியை பிராமணர்களின் அங்கீகாரத்தை நாடாமல் ஒதுக்கித் தள்ளுமாறு வேண்டுகிறான் சந்திரமோகன். இரக்க மனம் படைத்த சிவாஜியோ அண்ணாவைப் போல எதார்த்தவாதி. சிவாஜிக்கும் சந்திரமோகனுக்கும் இடையே நடைபெறும் உணர்ச்சிமிகு உரையாடலில், பல போர்க்களங்களைக் கண்ட மாவீரனான சிவாஜி, பிராமணர்களிடம் தோற்றுப்போனார்... என்பதை அண்ணா விவரித்திருந்தார். இருவருக்கும் இடையேயான உரையாடலில், கொள்கைப்பிடிப்புள்ள, வீரமிக்க சந்திரமோகன் போரில் வெல்வது உயர்வாக இருந்தாலும் எப்படி எளிதில்லையோ, அதுபோலவே சம்பிரதாயத்தை மறுப்பதும் உயர்வானதே என்று சந்திரமோகன் கருதுவதை வெகு அழகாக எழுதியிருந்தார் அண்ணா.

தன் தளபதியின் வாதத்திலிருக்கும் உண்மைக்கும், சம்பிரதாயத்தை மீறமுடியாது தவிக்கும் தன் பரிதாப நிலைக்கும் இடையே சிக்கித் தவிக்கிறார் சிவாஜி. பிராமணர்களை எதிர்த்தால் தம்மை வேதத்துக்கும், சம்பிரதாயத்துக்கும், மதக் கோட்பாடுகளுக்கும்

எதிரி என்று முத்திரை குத்தி, தன்னுடைய சாம்ராஜ்யத்தைப் பாவங்களின் உறைவிடம் என்று வர்ணிப்பார்கள் என்று சிவாஜி அஞ்சினார். ஏற்கெனவே எதிரிகளால் சூழப்பட்டிருந்த சிவாஜி, தன்னால் சக்திமிக்க பிராமணர்களையும் எதிர்க்க முடியாது என்பதை உணர்ந்திருந்தார். எனவே, காகபட்டரின் துணையை நாடிய சிவாஜியை அவர் ராஜபுதனத்து சிசோடிய குலத்தைச் சேர்ந்தவரே; ஆகவே, அவர் ஒரு க்ஷத்ரியரே என்று காகபட்டர். 'கண்டுபிடித்துக்' கூற சிவாஜியின் முடிசூடல் இனிதே முடிந்தது. எனினும் சிவாஜி அதற்குத் தந்த விலையோ கொடுமை. பஞ்சம் காரணமாகவும், போர் காரணமாகவும் கஜானா காலியாகிவிட்டதாகப் பின்னர் சந்திரமோகனிடம் சிவாஜி புலம்பினாலும் 11,000 பிராமண குடும்பங்களுக்கு ஏராளமான வெகுமதிகளும்,' நன்கொடைகளும் முடிசூடலுக்காக கொடுக்கவேண்டியிருந்தது. நாடக முடிவில், சந்திரமோகனைப் பணியிலிருந்து விலக்கிவைக்கிறார்: பிராமணர்களிடம் தோற்றுப்போய்விட்ட தன்னிடம் அத்தகைய வீரன் பணியாற்றுவது அழகில்லை என்று சிவாஜி காரணம் சொன்னார்.

தந்தை பெரியாருக்கு, கலைமீது அவ்வளவாக ஆர்வம் கிடையாது. கலைகளே தமிழ்ச் சமுதாயத்தைச் சீரழிக்கின்றன என்று அவர் நம்பினார்: "இந்தக் கலைகளை எல்லாம் தூக்கி எறியுங்கள். நீங்கள் யாரென்று உணர்ந்துகொள்ளுங்கள். எழுந்து நில்லுங்கள்", என்று கூறுவார் என்கிறார் கணேசன். சிவாஜி நாடகத்தைப் பார்த்த பெரியார், கணேசனைப் பாராட்டினார். சிவாஜி கணேசன் அன்று நடந்ததைச் சொல்கிறார்:

'நான் பத்து மாநாட்டில் சொல்லவேண்டிய கருத்துகளை அண்ணா ஒரே நாடகத்தில் கூறிவிட்டார்' என்று அண்ணாவை பெரியார் பாராட்டிப் பேசினார். 'யாரோ ஒரு சின்னப் பையன் சிவாஜி வேஷத்தில் குறுக்க நெடுக்க ஓடிக்கொண்டு இருந்தானே, அவன் யார்?' என்று கேட்டார். அதற்கு, 'அவன் கணேசன் என்றொரு பையன்' என்று என்னை அவர்முன் நிறுத்தினார்கள். அப்போது பெரியார், 'நீதான் கணேசனா? இன்று முதல் நீ சிவாஜி' என்றார். என்னுடைய வாழ்க்கை மேலே செல்வதற்கு எவ்வளவு உறுதுணையாக இருந்தது அந்தப் பெயர்! சாதாரண கணேசன் 'சிவாஜி கணேசன்' ஆனேன். 'சிவாஜி' என்ற பெயர், தந்தை பெரியார் அவர்கள் எனக்குப் போட்ட பிச்சை!

8

ஆரம்பமாகிறது மன வேறுபாடு



சேலம் மாநாடு ஈ.வெ.ரா - அண்ணா இருவருக்கும் கிடைத்த அபார வெற்றி. ஆனால் அதையடுத்து, கழகத்துக்குள்ளே இருந்த சிலரே அண்ணாவையும் அவர் தலைவரையும் பிரிக்க முனைந்தார்கள். தன் அரசியல் 'பிள்ளை' நன்றாகக் காலூன்றி மக்களிடையே செல்வாக்குப் பெற்றுவருவதைக் கண்டு ஈ.வெ.ரா. கொண்ட அச்சத்தை அவர்கள் பெரிதுபடுத்தினர். இளைஞரான அண்ணாவும், அனுபவம் மிக்க பெரியாரும் இந்தச் சதி வலையில் வீழ்ந்ததுதான் வருத்தத்துக்கு உரியது. எப்படியும் இந்தியாவின் விடுதலை இரண்டு பேரையும் பிரித்திருக்கும். அரசியல் சீர்திருத்தத்தைவிட சமுதாய சீர்திருத்தமே முதலிடம் பெறவேண்டும் என்றார் தந்தை பெரியார். அண்ணாவின் நோக்கில், பிரிட்டிஷார் இந்திய மண்ணில் இருக்கும் வரைதான் அந்த அணுகுமுறை சரி; பிரிட்டிஷார் போனபிறகு, தாங்கள் இதுகாறும் ஒதுக்கித்தள்ளிய அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற முனைவதில்

தவறில்லை என எண்ணினார். தந்தைக்கும் - தனயனுக்கும் இருந்த வேறுபாட்டை, 1945 செப்டம்பர் 29, 30 தேதிகளில் நடந்த திருச்சி மாவட்ட திராவிடர் கழக மாநாடு வெளிச்சம் போட்டுக் காட்டியது. மாநாட்டில் தொண்டர் படை கறுப்புச் சட்டை அணிய வேண்டும்; பிராமணர் உணவு விடுதிகளைப் புறக்கணிக்க வேண்டும் என்று இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட இருந்தன. பிராமணர் உணவு விடுதிகளைத் தவிர்ப்பது சாத்தியமானதல்ல என்றார் அண்ணா. அதன் விளைவாக, அந்தத் தீர்மானம் கைவிடப்பட்டது. ஆனால், கறுப்புச் சட்டை அணிவது என்ற தீர்மானம் அண்ணாவுக்கும் அவர் தலைவருக்கும் இடையேயான உறவில் முள்ளாக உறுத்தத் தொடங்கியிருந்தது. எல்லோரும் கறுஞ்சட்டை அணிய வேண்டும் என வற்புறுத்தினார் பெரியார். அண்ணாவோ அது தொண்டர்களுக்கு மட்டும்தான் இருக்க வேண்டும் என்றார். அதுபற்றி கவிஞர் கருணானந்தம் கூறுகிறார்:

> தஞ்சை மாவட்டம் நீடாமங்கலத்தில் திராவிட மாணவர் கழகத்தின் இரண்டாவது மாகாண மாநாடு 1946 பிப்ரவரி 23, 24 தேதிகளில் நடைபெற்றது. மாநாடு துவங்குவதற்கு முன்பு அண்ணாவை அழைத்துவரப் போனேன். "இதோ வந்துவிட்டேன்" என்று அண்ணா புறப்பட்டார்.
>
> ''என்னண்ணா இது. வெள்ளை ஜிப்பாவோட வர்றீங்க? கறுப்புச் சட்டை எங்கே?" என்றேன். "இங்க ஏன்யா கறுப்புச் சட்டை? இது மாணவர் மாநாடுதானே?'' என்றார் கள்ளங்கபடமற்ற அண்ணா.
>
> ''சரியாப் போச்சி. வம்புதான் போங்க. அய்யா மேடையில இருக்கிறப்போ கறுப்புச் சட்டை இல்லாதவங்க அங்க ஏறமுடியாதே!" என்றேன்.
>
> ''இதான் எனக்குப் பிடிக்காத சங்கதி! திருச்சி மாநாட்டில் என்ன தீர்மானம் போட்டோம்? கறுப்புச் சட்டைப் படைன்னு ஒரு வாலண்டியர் படை அமைக்கிறதாத்தானே! உன்னைத்தானே அதுக்கு அமைப்பாளராகப் போட்டார் அய்யா. மேடைப் பேச்சாளரும் கறுப்புச் சட்டை போடணும்னு தீர்மானம் போட்டோமா?'' - அண்ணாவின் கேள்வியில் சிறிது வெறுப்பும் உணர்ந்தேன்.

கிட்டத்தட்ட பத்தாண்டுகளுக்குப் பின்னர், 1956-ல், இருவருக்குமிடையே ஏற்பட்ட தீவிர வேறுபாடு குறித்துப் பேசும்போது, ''அண்ணா அவர்களைச் சுற்றிப் பெருமையும் புகழும் பெருமளவுக்கு வட்டமிடத் தொடங்கவே, அந்த நிலை பெரியாருக்கு உள்ளூர மனப்புழுக்கத்தைத் தந்தது'' என்று எழுதினார் நாவலர் நெடுஞ்செழியன். ஈ.வெ.ரா.வின் தொண்டர்கள் இப்படி எண்ணுமறுப்பினும், 1947-ல் அண்ணாவின் உவமைக் கட்டுரைகளும் கதைகளும் அது உண்மையாக இருக்கலாம் என்பதையே காட்டுகின்றன. அண்ணாவின் புகழ் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துகொண்டிருந்தது. அண்ணாவின் தாக்கத்தைப் பற்றி கண்ணதாசன்:

அது 1946-ம் வருடம்.

எழும்பூர் புகைவண்டி நிலையத்தில் அவன் (கண்ணதாசன்) இறங்கியதும்... முல்லைப் பதிப்பகத்தில் பணிபுரிந்த ஓர் ஊழியரை அவன் கண்டான். ''சாயங்காலம் கோகலே மண்டபத்துக்கு வாருங்களேன்'' என்றார் அவர். ''ஏன்?'' என்று அவன் கேட்டான். ''தளபதி அண்ணா பேசுகிறார்'' என்று அவர் சொன்னார். அண்ணாவை 'தளபதி' என்று அழைப்பதுதான் அந்த நாளைய வழக்கம். ''சரி'' என்று சொல்லிவிட்டு அவன் சென்றான். அன்றைய மாலைப்பொழுது அவன் வாழ்வில் முக்கியமான பொழுதாகும். குறிப்பிட்ட நேரத்துக்கு வெகுநேரம் கழித்து, கூடியிருந்தவர்கள் கைதட்டினார்கள். 'தளபதி வாழ்க!' என்ற முழக்கம் எழுந்தது. அவர் வந்துகொண்டிருந்தார். சரியாக எட்டு மணிக்கு அவர் பேசத் தொடங்கினார்.

நீரோட்டம் போல் தாவி வரும் வார்த்தைகள். வரிக்கு வரி அழகான உவமைகள். புதிய புதிய சொல்லாட்சி. தமிழ் இலக்கணத்துக்கே அப்பாற்பட்ட புதிய 'பாணி'கள்... அவன் மெய்மறந்திருந்தான். அன்றைய அண்ணாதுரை அவன் நெஞ்சில் அழிக்க முடியாதவரானார். அவரது பேச்சு, காலமறிந்து ஒரு பேரறிஞர் அவதரித்திருக்கிறார் என்றே அவனை எண்ண வைத்தது. நகர விடுதிக்கு அவன் திரும்பியபோது இனம்புரியாத ஓர் உணர்ச்சியில் அவன் உள்ளம் ஆழ்ந்திருந்தது. அந்த எளிய பக்தன், தன் வடிவம் மாறுவது கண்டான். தெய்வம் பொய்யா?

புராணங்கள் பொய்யா? ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அசைக்கமுடியாமல் இருந்து வருகிற இதிகாசங்கள் பொய்யா? அண்ணாதுரையின் பேச்சு அவன் இதயத்தைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டது. அதிலும் குறிப்பாக பார்ப்பன சமூகத்தின் மீது அவர் தொடுத்த தாக்குதல்களை அவனால் மறக்கமுடியவில்லை. 'பாம்புக்குப் பல்லிலே விஷம். பார்ப்பானுக்கு உடம்பெல்லாம் விஷம். வேதமோதிகள், மாடோட்டிகள்' என்றெல்லாம் அவர் பார்ப்பன சமூகத்தை வர்ணித்திருந்தார்.

'உலகத்தில் சொந்த நாடே இல்லாத இனங்கள் இரண்டு. ஒன்று யூத இனம். மற்றொன்று ஆரிய இனம். மத்திய ஆசியாவிலிருந்து புறப்பட்டுவந்த ஆரியர்கள் தமிழ்நாட்டில் வேரூன்றி, தமிழகத்தின் பூர்வ குடிமக்களைத் தாழ்த்தி வளர்ந்துவிட்டார்கள்.' இப்படியெல்லாம் அவர் சொன்னது அவனுக்கு மிகவும் புதுமையாக இருந்தது. எது சரி, எது தவறு என்று ஆராய்வதைவிட, அண்ணாதுரை சொன்னதை அப்படியே ஏற்றுக்கொள்வதில் நாட்டுக்கு நன்மை இருக்கிறதென்று அவன் நம்பினான். பதினேழு ஆண்டு வைதிக உணர்ச்சி, மூன்று மணி நேரத்தில் தலைசாய்க்கத் தொடங்கியது. கண்ணனை நினைக்கும் பக்தர்களுக்கு, பார்க்குமிடமெல்லாம் கண்ணனே தோன்றுவது போல், அண்ணாதுரையைப் பார்த்த அவன் கண்கள் எங்கும் அவரையே கண்டன.

அதே ஆண்டு டிசம்பர் 14, 15 தேதிகளில் கண்ணதாசன் அண்ணாவின் பேச்சில் மீண்டும் மயங்கிப் போனார். சென்னையில் நடந்த தமிழ் எழுத்தாளர் சங்க இரண்டாம் மாநாட்டில் பேச 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி அண்ணாவைக் கேட்டுக்கொண்டு இருந்தார். இதற்காக எழுத்தாளர் நவீனன் தன் நண்பர் கே.ஆர்.ராமசாமி மூலம் அண்ணாவைத் தொடர்புகொண்டு சம்மதம் பெற்றிருந்தார். ஆனால் கம்யூனிஸ்ட்டு தலைவர் ஜீவாவுக்கு முன்பு தான் மாநாட்டில் பேச விரும்புவதாக நவீனனிடம் அண்ணா சொன்னார். ஜீவாவின் பேச்சுக்குப் பிறகு தன் பேச்சு எடுபடாமல் போய்விடும் என்றும், "ஜீவா நன்றாக ஆராய்ந்து, மேற்கோள்களைச் சொல்லி உண்மையாகவே மிக நன்றாகப் பேசுவார்" என்று காரணமும் சொன்னார். அண்ணாவின் சொற்பொழிவு வழக்கம் போல அவையோரைக் கட்டிப்போட்டது. ஜீவாவின் அற்புத பேச்சைக் கேட்டுவிட்டே போகவேண்டும்

என்று தன் பேச்சில் கூட்டத்தினரைக் கேட்டுக்கொண்டார் அண்ணா.

"அந்தக் காலத்தில் சுயமரியாதைக்காரர்களின் பேச்சை எந்தப் பத்திரிகைகளும் பிரசுரிப்பதில்லை. எழுத்தாளர் மாநாட்டு விவரங்களை 'அவன்', 'தாய்நாடு' இதழில் எழுதினான். ஏதாவது ஒரு மூலையில் தங்களைப் பற்றிய செய்தி வந்துவிட்டால், சுயமரியாதைக்காரர்கள் எல்லோருமே அதை வாங்கிப் படிப்பார்கள். அண்ணாதுரையின் பேச்சைப் பற்றி 'அவன்' எழுதியிருந்த இதழ், அதன் சக்திக்கு மேல் விற்பனை ஆயிற்று" என்றார் கவிஞர் கண்ணதாசன். அண்ணாவின் வெற்றிக்கான காரணத்தை கவிஞர் இவ்வாறு அலசி எழுதியிருந்தார்:

> அவன் மட்டுமென்ன, அண்ணாதுரையைத் தவிர மற்ற அனைவருமே கடுஞ்சொற்களைத்தான் பிரயோகித்தார்கள். பேச்சுக்கலை தனித்தன்மை வாய்ந்தது. நயமான வார்த்தைகளின் மூலம் பயமுறுத்துவது அதில் ஒரு வகை. அது எல்லோருக்கும் பிடிபடுவதில்லை. அந்த வகையில் அண்ணாதுரையின் பயிற்சி ஈடு இணை இல்லாதது. அவர் பின்னாளில் பெற்ற பெருமைக்கெல்லாம் அதுவே காரணம். அன்று அண்ணாதுரை ஒருவர்தான் தாக்குதல்களைத் தாங்கக்கூடிய சக்தியையும், நாவடக்கிப் பேசுகின்ற வன்மையையும் பெற்றிருந்தார். அதனால், எந்த சுயமரியாதைக்காரனும் ஏறமுடியாத சபையிலேகூட அவருக்கு இடம் கிடைத்தது. கல்லூரி மாணவர்கள் அவரை விரும்பி அழைத்தனர்.

அண்ணாவைப் பற்றி நிறையபேருக்குத் தெரிந்திருந்தது. ஆனால், பலபேருக்கு அவர் எப்படி இருப்பார் எனத் தெரியாமலே இருந்தது. டி.கே.சீனிவாசன் ஒரு சுவையான நிகழ்ச்சியை சொல்கிறார்:

> போடிநாயக்கனூர் அருகே ஒரு ஊரில் அண்ணா பேசும் பொதுக்கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். கொடைக்கானல் ரோடு புகைவண்டி நிலையத்தில், நானும் அண்ணாவும் இறங்கினோம். அங்கிருந்துதான் அந்த ஊருக்குப் பேருந்தில் போகவேண்டும். நீண்டநேரம் காத்திருந்தோம். பேருந்து எதுவும் வரவில்லை. ஒரு பேருந்து வந்தது; அதில் இடமில்லை.

அப்போது அந்த வழியில் ஒரு லாரி வந்தது. அதை நிறுத்தி எங்கள் நிலைமையை விளக்கினோம். "எப்படியாவது எங்களை அழைத்துச் செல்லுங்கள். நாங்கள் போகாவிட்டால் கூட்டம் நடக்காமல் போய்விடும்'' என்று வேண்டினார் அண்ணா. உடனே அந்த லாரி ஓட்டுநர் கூறிய பதில் என்னைச் சிரிக்கவும் செய்தது. ''போய்யா, நீ பெரிய அண்ணாதுரை! நீ போகாவிட்டால் கூட்டம் கெட்டுப்போய்விடுமோ?'' அவருடைய காதுகள் அண்ணாவைச் சந்தித்திருக்கின்றன. கண்கள் அதுவரை சந்திக்கவில்லை. "நான்தானய்யா அந்த அண்ணாதுரை!" என்று அண்ணாவே சொன்னார். சிறிது நேரம் அண்ணாவையே கூர்ந்து பார்த்தார் அந்த லாரி ஓட்டுநர். பிறகு சிந்தித்தார். எங்களை ஏற்றிக்கொண்டார். எந்த இடத்திலும் நிறுத்தாமல் கூட்டத்தின் அருகே கொண்டுபோய் எங்களை இறக்கிவிட்டார். பேச்சையும் கேட்டுவிட்டு, விடைபெற்றுச் சென்றார்.

அண்ணாவின் அதிர்ஷ்டம் பெரியாரிடம் செல்லுபடியாகவில்லை. கறுஞ்சட்டை பற்றி பெரியார் தீவிரமாக இருந்தார். பெரியாரின் போக்கு புரட்சிகரமான தடாலடிப் போக்கு; அண்ணாவின் போக்கோ எதார்த்தம் கலந்த உணர்வுபூர்வமானது. கறுஞ்சட்டை விஷயத்தில் அண்ணாவின் கீழ்ப்படியாமையும், கருத்துச் சுதந்திரமும் பெரியாரை பாதித்தன.

கறுஞ்சட்டைகள்

கட்சிக் கூட்டங்களிலும் மாநாடுகளிலும் பணியாற்ற திராவிடரின் இழி நிலையைக் குறிக்கும் கறுஞ்சட்டை அணிந்த தொண்டர் படை ஒன்றை உருவாக்கக் கட்சி விரும்பியது. இதுகுறித்து பெரியார் எழுதினார்:

தொண்டாற்ற விரும்பும் தோழர்களை, 'உங்களால் கழகத்துக்கு முழு நேரம் தொண்டாற்ற முடியுமா? அல்லது தேவைப்பட்ட நேரத்தில்தான் தொண்டாற்ற முடியுமா?' என்று கேட்டோம். 'முழுநேரத் தொண்டர்களாக இருப்பதாயிருந்தால் உங்களுக்கு ஏதாவது ஊதியம் வேண்டுமா? அல்லது உங்கள் வீட்டிலேயே சாப்பிட்டுக்கொண்டு தொண்டாற்றுவீர்களா?' என்று பல தகவல்கள்

> கேட்டோம். அந்தத் தகவல் சரிவர வந்து சேருவதற்குள் அந்த முயற்சியைக் கைவிட்டுவிட்டு, கறுப்புச் சட்டையை நம் இயக்கத்தின் சின்னமாக்கி சிலருக்கு அதை சில சமயங்களுக்கு அவசிய உடையாக்கிவிட்டு, 'திராவிடர்கள் யாவருக்கும் பிறவி இழிவுக்காக அவமானப்படும், துக்கப்படும் அறிகுறியாக, திராவிடர் கழகத் தோழர்கள், தாய்மார்கள், இளைஞர்கள் அனைவரும் கறுஞ்சட்டை அணிந்துகொள்ள வேண்டும்' என்று வேண்டுகோள் விடுத்தேன்.

பின்னர், கறுஞ்சட்டைப் படையின் தற்காலிக அமைப்பாளர்களாக ஈ.வெ.கி.சம்பத்தும், எஸ்.கருணானந்தமும் நியமிக்கப்பட்டனர். அண்ணா கறுஞ்சட்டை பற்றிய தனது மனக்குமுறலை இப்படி எழுதினார்:

> ஏற்கெனவே உள்ள ஏளன மொழிகளுடன் நமது எதிரிகள் இனி கறுப்புச் சட்டைக்காரன், கள்ளன் போன்ற உடை அணிந்தோன் என்று புது வசவுகளைச் சேர்த்துக்கொள்வர். அவர்கள் ஆசையும் தீர்ந்துபோகட்டும். கறுப்புச் சட்டை பாசிச அடையாளம் என்று பேசுவர், ஏட்டிலே சமதர்மம் காண்போர், பேசட்டும். நமது உடை, நமது துக்கத்தை நாட்டுக்குத் தெரிவிக்கட்டும்!

கழகத்தின் நிலை ஏற்கெனவே மிகுந்த சங்கடத்தில் இருந்தது. குறுகிய நோக்கம் கொண்டவர்கள், தீவிரவாதிகள் என்று கழகத்தவரை மக்கள் ஏற்கெனவே ஒருமாதிரி ஒதுக்கியே வைத்திருந்தனர். பெரியாரின் எண்ணத்தைப் புரிந்துகொண்டிருந்தும் கறுஞ்சட்டை என்பது கழகத்தாரை பாசிசவாதிகள் என மேலும் தனிமைப்படுத்தும் என்று பயந்தார் அண்ணா. தொண்டர்கள் தவிர, மற்றவர்கள் கறுஞ்சட்டை அணிவதில் அர்த்தமில்லை என்று அண்ணா நம்பினார். ஈ.வெ.ரா.வோ உறுதியாக இருந்தார். "அண்ணாதுரை எப்படி என் விருப்பத்துக்கு மாறாக நடக்கலாம்? அது கூடாது!" என்றார்.

விளைவு, 1946 மே மாதம் இரண்டு நாள், மதுரையில் நடைபெற்ற கறுஞ்சட்டை மாநாட்டில் கலந்துகொள்வதாகச் சொன்ன அண்ணா, வரவேயில்லை. அரங்கண்ணல் எழுதுகிறார்:

> பயங்கரமான மதுரை மாநாட்டுக்கு அண்ணா வருவார் என்று நாங்கள் எல்லாம் எதிர்பார்த்தோம். திருச்சி வரையில் வந்து திரும்பி, அப்போது தஞ்சையில் நடந்துகொண்டிருந்த நடிப்பிசைப் புலவர்

கே.ஆர்.ராமசாமி அவர்களின் நாடகக் கொட்டகையில் போய்த் தங்கிவிட்டதாகச் சொன்னார்கள். இயக்க வெறி கொண்ட பலருக்கு, அண்ணாவின் மேல் கோபம் கோபமாக வந்த நேரம் அது! 'ஊருக்கு ஊர் முழு நேரமும் சேவை செய்யும் தொண்டர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தொண்டர்கள் என்றால் அவர்கள் வசிக்கும் தெருவில் ஒரு நல்லது கெட்டது என்றால் ஓடிப்போய் உதவவேண்டும், 'ரெட் கிராஸ்' போல! அப்படி மக்கள் அடையாளம் கண்டுகொள்ளத்தான் கறுப்புச் சட்டைப் படை. இது முழுக்க முழுக்க இப்படி இயங்கும் என்று சொன்ன அய்யா அவர்கள், இப்போது எல்லோரும் போட்டுக்கணும்னு சொன்னா என்ன அர்த்தம்?' என்று அண்ணா சொல்லிக்கொண்டு இருப்பதாக எல்லோரும் பேசிக்கொண்டு இருந்தார்கள். ஆரம்பத்திலிருந்தே மதுரை மாநாடு பற்றிப் புதிராகவே இருந்தது. யாரோ சிலர் மாநாட்டுப் பந்தலுக்குத் தீ வைக்க, மாநாட்டைவிட அதுவே பெரிய செய்தியாயிற்று.

ஒரு வாரத்துக்குப் பிறகு, வெள்ளைச் சட்டை அணிந்து அண்ணா கும்பகோணம் மாநாட்டுக்கு வந்தது பெரியாருக்கு மேலும் ஆத்திரமூட்டியது. அரங்கண்ணல் சொன்னார்:

மதுரை கறுப்புச் சட்டை மாநாடு கொளுத்தப்பட்ட மறுவாரத்துக்கெல்லாம், குடந்தையில் மாநாடு. நான் அப்போது பள்ளியிறுதித் தேர்வு எழுதிவிட்டு, 'குடியரசு' அலுவலகத்தில் இருக்கிறேன். மாநாட்டுக்குப் போய்விட்டு பெரியார் வந்தார். வந்ததும் போய் விசாரித்தேன், எப்படியிருந்தது மாநாடு என்று. பெரியார் சொன்ன முதல் வார்த்தையே, "நல்லா திட்டிப்போட்டேனுங்க! குள்ளநரிப்பசங்க...ன்னு சொல்லிப்போட்டேன். பின்னே என்னாங்க! ஏன் கறுப்புச் சட்டை போடாமே இந்த அண்ணாதுரை, சின்னத்தம்பி (சம்பத்) எல்லாம் மேடைக்கு வரணும்?" என்றதுதான் எனக்கு சுரீர் என்றது!

"எவன் மேடையிலே பேசினாலும் கட்டாயம் கறுப்புச் சட்டை போட்டுக்கணும்னு நான் சொன்னா, கேட்காம வெள்ளை வெளேர்னு சட்டை போட்டுக்கிட்டு வந்து நின்னா? அவனுக்குத்தான்



புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கு பொற்கிழி வழங்குதல்

டிராமா, சினிமான்னு ஆப்புட்டுக்கிட்டது. இந்தச் சின்னத்தம்பிக்கு என்னங்க கேடு? நல்லாத் திட்டிப் போட்டேனுங்க!" என்று பெரியார் தொடர்ந்தார்.

இந்தச் சமயத்தில் கவிஞர் பாரதிதாசனுக்குப் பணமுடிப்பு கொடுப்பது என்ற யோசனை, பெரியார் - அண்ணா உறவில் மேலும் சிக்கலை உண்டாக்கிற்று. கவிதை, நாடகம், கலை இவற்றையெல்லாம் சமூக சீர்திருத்தத்துக்குப் பயன்பட்டால் மட்டுமே பெரியார் ஏற்றுக்கொள்வார், அப்போதும் வேண்டாவெறுப்பாக. ஆனால் திறமைவாய்ந்த அண்ணாவோ, இந்தவகை ஊடகங்களை எல்லாம் தமிழ்க் கலாசார, தேசிய அடையாளங்களாகக் கொண்டார். அவரது பிரசார முறைகள், பின்னர் சினிமாவையும் கட்டி ஆண்டது.

தொடக்கத்தில் தன் குரு பாரதி போலவே தேசியவாதியாக இருந்த பாரதிதாசன், பின்னர் திராவிட இயக்கத்தின் தலைமைக் கவிஞரானார். ஆசிரியர் தொழிலை விட்டுவிட்டு பொதுநல சேவையில் முழுக்க முழுக்க அவர் தம்மை ஈடுபடுத்திக் கொண்டபோது, நாமக்கல்லைச் சேர்ந்த செல்லப்ப ரெட்டியார் எனும் தமிழ்த் தொண்டருக்கு, புரட்சிக் கவிஞருக்கு நிதி சேர்த்துக்

கொடுக்கும் எண்ணம் பிறந்தது. 'நல்ல காரியம்' எனப் பாராட்டிய பெரியார், தம்மாலான எல்லா உதவிகளையும் செய்வதாக இசைவளித்தார். அதற்காக நிதிக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் சார்பில் வேண்டுகோள் அறிக்கை ஒன்று 21.4.1945 'குடியரசு' இதழில் வெளியிடப்பட்டது.

ஈ.வெ.ரா., சர் ஆர்.கே.சண்முகம், டாக்டர் ஏ.கிருஷ்ணசாமி, முன்னாள் அமைச்சர்கள் எஸ்.ராமநாதன் மற்றும் எஸ்.முத்தையா முதலியார், அண்ணா ஆகியோர் குழுவில் உறுப்பினர்களாக இருந்தார்கள். பெரியார் தம்முடைய நன்கொடையாக 150 ரூபாய் போட்டு, மொத்தம் 352 ரூபாய்க்கான காசோலையை அனுப்பி வைத்தார். மேலும், கவி பாரதிதாசன் நிதி எனத் தலைப்பிட்டு, 'புரட்சிக் கவிஞருக்கென திரட்டப்படும் நிதிக்குத் தாங்கள் நன்கொடை அனுப்பிவிட்டீர்களா? இன்றே அனுப்புக' என்ற அறிவிப்பு 'குடியரசி'ன் ஒவ்வோர் இதழிலும் பெரியாரால் வெளியிடப்பட்டு வந்தது. திருச்சியில் 1945-ம் ஆண்டு, செப்டம்பரில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில், நன்கொடை கேட்டு ஈ.வெ.ரா. தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றினார். தொடக்கத்தில் ஆர்வமும் ஆதரவும் அளித்தபோதும், ஈ.வெ.ரா. பின்னர் சுணக்கம் காண்பித்ததோடு, கடுமையாக விமரிசிக்கவும் செய்தார்.

"அண்ணா அவர்கள் தன்னைக் கலந்தாலோசித்துச் செய்யவில்லை என்கிற ஆதங்கம் அய்யாவுக்கு ஏற்பட்டிருந்தது" என்கிறார் அரங்கண்ணல். நிதி குவியக் குவிய, "பாரதிதாசனுக்கு என்ன வந்தது? இரண்டு பாட்டுப் பாடிவிட்டால் ஒரு புலவர். அவருக்கெல்லாம் பணமுடிப்பு. இதற்கெல்லாம் அண்ணாதுரையின் முயற்சி! எதற்கும் கேட்டுச் செய்ய வேண்டாமோ?'', என்று கண்டித்தார் பெரியார்' என்கிறார் மறைமலையான். கவிதை எப்படி அவருக்குப் பெயர் சேர்த்ததோ அதுபோல, புரட்சிக் கவிஞருக்கு 'மது அருந்துபவர்' என்ற பெயரும் இருந்தது. இதுவே பெரியாரை 'மது அருந்துபவருக்குப் பணமுடிப்பு அளிப்பது தவறானது' என எண்ண வைத்தது. "அறிஞர் அண்ணா அவர்கள், புரட்சிக் கவிஞருக்கு நிதி சேர்த்திடும் பணியில் இறங்கியிருப்பது பெரியார் ராமசாமி அவர்களுக்கு விருப்பமில்லை. அந்த முயற்சியையே வெறுத்தார். அதனால் அண்ணா அவர்களையும் வெறுக்கத் தலைப்பட்டார். பெரியார் அவர்களுக்கும் அண்ணா அவர்களுக்கும் மாறுபாடு ஏற்படக் காரணமாக இருந்தவற்றில் புரட்சிக் கவிஞருக்கு நிதி சேர்த்த முயற்சியும் முக்கியமான ஒன்று" என்கிறார் நாவலர் நெடுஞ்செழியன்.

1946 ஜூலை 28 அன்று பச்சையப்பன் கல்லூரி வளாகத்தில் கவிஞருக்கு ரூ.24,399 பணமுடிப்பு அளிக்கப்பட்ட நிகழ்ச்சியை

ஈ.வெ.ரா. புறக்கணித்தார். கழகத்துக்கு நிதி வசதி இல்லை என்றும், ஆளுக்கு ஒரு ரூபாய் கொடுத்து அதை உருவாக்க வேண்டும் என்றும், அதுவரை ஆங்காங்கு மாநாடுகள் நடத்திப் பணத்தைச் செலவழிக்க வேண்டாமென்றும் பெரியார் அறிவுறுத்திக்கொண்டிருந்த நேரமிது. 1946 ஜூலையில், 'விடுதலை'யில் அவர் எழுதிய தலையங்கம் இதற்கோர் உதாரணம்.

வழக்கத்துக்கு மாறாக பொற்கிழி நிகழ்ச்சிக்கு அண்ணா பட்டுச்சட்டை அணிந்திருந்தார். "நான் மாறிவிட்டேன் என மக்கள் நினைப்பார்கள். என் வாழ்க்கையில் முன்பு ஒரே ஒரு முறைதான் பட்டுச்சட்டை அணிந்திருக்கிறேன் - என் திருமணத்தன்று. அந்த அளவுக்கு இந்த நிகழ்ச்சியும் எனக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கிறது!" என்றார் அண்ணா.

முன்னதாக, 1945-ல் அண்ணாமலை பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா மன்றத்தில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் படத்தைத் திறந்துவைத்து அண்ணா, சங்கப் பாடல்களையும், சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகளையும் புகழ்ந்து பேசி, புராணங்களையும் மூடநம்பிக்கைகளையும் இகழ்ந்தார். தமிழரின் வீரத்தையும், காதலையும் போற்றினார். பண்டைய மன்னர்களின் வெற்றிகளை எடுத்துக்கூறி, அதற்கு அவர்களின் வீரமே காரணம்; ஆரியம் திணித்த மூடநம்பிக்கைகள் அல்ல என்றார். சாதிப் பிரிவுகளைச் சாடினார். தமிழருக்கு அதனால் ஏற்பட்ட கேடுகளை விவரித்தார். இந்தச் சொற்பொழிவு 'ஏ தாழ்ந்த தமிழகமே!' என்ற தலைப்பில் சிறு நூலாக வெளியிடப்பட்டது.

பொற்கிழி நிகழ்ச்சிக்குப் பிறகு, நடந்ததை அண்ணா சொல்கிறார்:

> அந்தப் பணமுடிப்பை எடுத்துக்கொண்டு அவரோடு நான், ஒரு குதிரை வண்டியில் ஏறிக்கொண்டு, திருவல்லிக்கேணியில் அவர் தங்கியிருந்த இடத்துக்குப் போய்க்கொண்டு இருந்தோம். அந்த வண்டியிலே போய்க்கொண்டிருந்த நேரத்தில் பாரதிதாசன் என்னிடம் சொன்னார்கள்: 'நீ கொடுத்திருக்கின்ற இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு நாம் தமிழர்களுக்கென்று ஓர் அரசியல் கட்சி தொடங்கலாம். நீயும் நானும் இருந்து நடத்தலாம்.' நான் அவர்களிடத்திலே சொன்னேன்: 'ஐயா, நீங்கள் அரசியலுக்கு வரவேண்டாம். நீங்கள் கவிதை

உலகத்திலே நடமாடுங்கள். கவிதை உலகத்திலே நீங்கள் நடமாடுகின்ற உயரத்துக்கு எந்த அரசியல்வாதியும் வரமுடியாது. அரசியல்வாதிகளின் மத்தியில் வந்து இருந்துகொண்டு கவிதை எழுதுவது என்றால், அது அரசியல் கவிதையாகத்தான் இருக்கும். அதற்கு வயது ஆறு மாதமாகத்தான் இருக்கும். நாங்கள் கொடுத்திருக்கின்ற இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு, இந்தியாவிலே உள்ள பெரிய மலைகளுக்கெல்லாம் சென்று வாருங்கள்; நதிகளுக்கெல்லாம் சென்று வாருங்கள்; பொழிலெல்லாம் கண்டு வாருங்கள்; மக்களையெல்லாம் பார்த்துவாருங்கள். அவற்றையெல்லாம் பார்த்துப் பார்த்து நீங்கள் பெறுகின்ற நல்ல கருத்துகளைக் கவிதை வடிவிலே கொடுங்கள். அதற்குத்தான் இந்த விழா நடந்தது' என்று நான் சொன்னேன்.

அண்ணாவுக்கும் பெரியாருக்கும் இருந்த உறவு இப்படி கருத்து வேறுபாடுகளால் மட்டுமே விரிசல் அடையவில்லை. மொத்தச் சூழலே கசப்பாக இருந்தது; அண்ணாவின் நகைச்சுவைப் பேச்சும் அவரைச் சிக்கலில் சிக்கவைத்தது. 15.9.1946 அன்று திருப்பத்தூரில் நீதிக் கட்சி அமைச்சர் எஸ்.முத்தையா முதலியார் தலைமையில் ஈ.வெ.கி. சம்பத் - சுலோச்சனா திருமணம் நடைபெற்றது. தந்தை பெரியார் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார். பெண்கள் அலங்கார பொம்மைகளா? என்று வினா தொடுத்து, ஆண்கள் நகைகளையும் அணிகலன்களையும் அணிந்துகொள்வதைக் கண்டித்தார். பெண்கள் நகை மாட்டும் ஸ்டாண்டா? என்றும் கேள்வி எழுப்பினார். அப்போது, "மணமகள் சுலோச்சனா, பெரியார் அணிந்திருந்த பச்சைக்கல் மோதிரத்தைப் பார்த்து நகைத்தார்" என்று 'திராவிட நாடு' ஏட்டில் அண்ணா எழுதியது, 'அண்ணாவுக்குப் பெருமை சேர்ப்பதாக அமையவில்லை' என்றார் கி.வீரமணி. உண்மையில், பெரியாரின் தொண்டர்களால் அண்ணாவின் நகைச்சுவையைக்கூடத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவரது பேச்சை 'விஷமத்தனமானது' என்றார்கள்.

உருவகக் கதைகளும் அவை சொன்ன சேதிகளும்

புரட்சிக் கவிஞரிடம் தன் உண்மையான உணர்வுகளை மறைத்துக்கொண்டு பேசினாலும், தந்தையும் மகனும் மனதளவில் வேறுபட்டு, அவர்கள் உறவும் தாழ்ந்து அடிமட்டத்தை எட்டியிருந்தது. 'திராவிட நாடு' இதழில் 'லேபிள் வேண்டாம்',



அண்ணா, ஈ.வெ.கி.சம்பத்

'ராஜபார்ட் ரங்கதுரை', 'மரத்துண்டு', 'இரும்பாரம்' ஆகிய அண்ணாவின் உருவகக் கதைகள் அண்ணாவின் நன்றியுணர்வோடு தன்னைப் பற்றிய அவரது சுய மதிப்பீட்டையும், மன வருத்தத்தையும், இயலாமையையும், வேதனையையும் மிக நாசூக்காகவும், இங்கிதத்துடனும் வெளிப்படுத்தின. நன்றியுணர்வு என்னவோ சீர்கெட்ட உறவைச் சீராக்க உதவவில்லை.

எனினும் சரித்திரத்தை நிகழ்கால நிகழ்ச்சிகளோடு ஒப்பிட்டும், இணைத்தும் கெட்டிக்காரத்தனமாக எழுதப்பட்ட உருவகக் கதைகள் அரசியல் இலக்கியம் படைத்தன. அண்ணாவின் புலமையையும், கற்பனை வளத்தையும், ஆழ்ந்த விரிவான படிப்பறிவையும் இவை பறைசாற்றின. நுட்பம் நிறைந்த, 'லேபிள் வேண்டாம்' 1947, மார்ச் 30 அன்று வெளியாயிற்று. பலரும் அறிந்திருக்கும் உவமான - உவமேயங்கள் மற்றும் உருவகங்களில் கைதேர்ந்த அண்ணா, தர்மலிங்கம் என்ற பொடி வியாபாரியின்

மூலைக் கடை வியாபாரத்தில் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் தொடக்கக்கால கதையைச் சொன்னார்:

தட்டுக்கடை தர்மலிங்கம் நித்தம் எட்டணா கொடுத்து ஏழுமலை என்ற எடுபிடியை வேலைக்கு அமர்த்திக்கொண்டு வியாபாரம் செய்கிறார் - நாட்டுப் புகையிலையை நல்ல முறையிலே பதப்படுத்திப் பொடியாக்கி அதை விற்கிறார். எடுபிடி ஏழுமலை, மூலைக்கடை பொடியை மூவர்ணப் பொடி என பெயர் மாற்ற, கடைக்கு வாடிக்கையாளர்கள் அதிகமாகிறார்கள். பொடியும் பெயரெடுக்கிறது.

'இப்போது நம்ம மூலைக்கடைப் பொடி ரொம்ப ஜோராக இருக்கிறது. அழகான லேபிள்கூடப் போட்டுவிட்டார்கள். அதற்கு மூவர்ணப் பொடி என்று பெயர் இப்போது' என்று மக்கள் பேசிக்கொண்டார்கள்.

யார் கண் பட்டதோ எடுபிடிக்கும் கடை முதலாளிக்கும் மனபேதம் ஏற்பட்டது. பிரியவும் நேரிட்டது. பொடிக்கடை புதிதாக வைத்தான் ஏழுமலை - எடுபிடி. 'எனக்கும் அவருக்கும் ஆயிரம் தகராறு இருக்கலாம். ஆனால், உண்மையை நான் ஒளிக்க முடியாது; பொடியில் சிறந்தது மூவர்ணப் பொடியேதான் விற்கிறேன்' என்று சொல்லிவந்தான். லேபிளும் பழைய கடையில் போட்டது போன்றே மூவர்ணம் என்றுதான் இருந்தது. கடை முதலாளி வழக்குத் தொடுத்தார். மூவர்ணப் பொடி என்ற லேபிளை ஏழுமலை உபயோகிக்கக் கூடாது என்று உத்தரவாயிற்று. ஏழுமலை கொஞ்சம் குறும்பன். புதிய லேபிள் தயாரித்தான். 'மூவர்ணப் பொடி கடையில் முன்பு இருந்த ஏழுமலை தயாரிக்கும் பொடி' - இப்படி இருந்தது லேபிள். முதலாளிக்குக் கோபம்... தர்மலிங்கம் புதிய நோட்டீஸ் போட்டு ஊரெங்கும் வழங்கினார்.

'மூவர்ணப் பொடிக் கடையில் இருந்த ஏழுமலை வேலையிலிருந்து தள்ளப்பட்டான். அவருக்கும் மூவர்ணப் பொடிக் கடைக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. மூவர்ணப் பொடி செய்யும் முறையே வேறு.'

இந்த நோட்டீஸை ஏழுமலை வரவேற்றான். அச்சாபீஸுக்குச் சொல்லி இதே நோட்டீஸை ஆயிரம் தயாரிக்கச் செய்து, தன் கடைக்கு வருகிறவர், வீதியில் செல்பவர்கள் அனைவருக்கும் தந்தான், ஒரு குட்டி பிரசங்கத்தோடு!

'என்ன இருந்தாலும் தர்மலிங்கம், பெரிய மனுஷர் பெரிய மனுஷர்தான். அவர் ஒன்றும் சிலதுகள் சொல்வது போல, அவனுக்கும் எனக்கும் சம்பந்தமே இல்லை என்று சொல்லவில்லை. அவர் நோட்டீஸிலேயே சொல்லியிருக்கிறார். ஏழுமலை என் கடையில் முன்பு இருந்தவன் என்று' - இந்த விதமாக பேசினான் ஏழுமலை.

அந்தச் சமயத்தில், காங்கிரஸுக்குள்ளே ஜெயப்பிரகாஷ் நாராயணின் சோஷலிஸ காங்கிரஸுக்கும், சர்தார் பட்டேல் தலைமையில் இயங்கிய காங்கிரஸ் கட்சிக்கும் சில கருத்து வேறுபாடுகளை எடுத்துச் சொல்ல இந்த உருவகக் கதை உதவியிருந்தாலும், நீதிக் கட்சி என்ற மூலைக்கடையை திராவிடர் கழகமான மூவர்ணப் பொடிக்கடையாக மாற்றிய தன் பங்கையே அண்ணா கதையாக்கியிருந்தார்.

கருத்துதான் முக்கியம் லேபிள் அல்ல என்றார் அண்ணா. காங்கிரஸ் என்ற லேபிள் மட்டும் இல்லை என்றால், சோஷலிஸ்ட்டுகளை யாரும் லட்சியம் செய்யப் போவதில்லை என்று காங்கிரஸ் கூறலாம். ஆனால், தங்கள் பணி சிறப்பாக இருக்கும் வரை அது வெற்றி அடைந்தே தீரும் என்று சோஷலிஸ்ட்டுகள் சொல்லலாம் என்றார். அண்ணாவுக்குத் தனியாகப் பிரியும் எண்ணம் அப்போதே முளைத்திருந்ததோ என்னவோ? அந்தச் சமயத்தில் கழகத்தின் பணிகளிலிருந்து விலகி, திரைப்பட வசனத்தில் கவனம் செலுத்தி வந்தார் அண்ணா. ஆனால், அதிலும் இயக்கக்கொள்கைகளை அவர் சொன்னார். கழகத்துக்குள்ளேயே சிலர் இப்படி அண்ணா ஒதுங்கியிருப்பது குறித்து மகிழ்ந்தனர்.

"யார் யாரைக் கொண்டு, எந்தெந்தச் சமயத்தில் என்னென்ன விதமான காரியங்களைச் செய்துகொள்வது என்பது பெரியதோர் காரியம் என்று மேல்நாட்டினர் கருதுகின்றனர். அவர்கள் அடைந்துள்ள பல வெற்றிகளுக்கும் காரணம் இதுதான். அதனால்தான் அங்கு அரசியலில் ஆகட்டும், வேறுபல துறைகளில் ஆகட்டும், அருமையான கட்டுக்கோப்பு காணமுடிகிறது. இங்கு அந்த சுபாவமே காண்பது அரிது" என பெரியார் எல்லா

அதிகாரங்களையும் அவரிடமே குவித்து வைத்திருப்பதைச் சொல்லாமல் சொன்னார் அண்ணா.

தலைவரின் மேல் உள்ள 'பூஜா உணர்ச்சி' போகவேண்டும் என்ற அண்ணா, பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றார். ஆனால் கட்சியின் கட்டுக்கோப்பு நிற்பது, ஒருவரின் திறமையின் மீதல்ல, சில அடிப்படைக் கொள்கையின் மீது! இதைத் தெளிவாக்கிக் கொண்டால், கட்சி முக்கியமா, கொள்கை முக்கியமா என்பது புரிந்துவிடும்... என்று தன்னுடைய திறமையைக் குறைத்தே பேசினார். கட்சியை விட்டுவிட்டாவது கொள்கையைக் கைப்பிடிக்க வேண்டும். கொள்கை முக்கியமே ஒழியக் கட்சியல்ல என்று கூறும் நெஞ்சுரம் ஏற்பட்டாக வேண்டும் என்றார். கட்சியை ஒதுக்கிய பேச்சாளர்களும், எழுத்தாளர்களும் ஒதுக்கப்பட்டுவிடுவர் என்பதை நினைவூட்டினார். அதுபோலவே கொள்கைப் பிடிப்புள்ளவர்களும் சில காலம் தனிமைப்படுத்தப்படுவர், ஒதுக்கி வைக்கப்படுவர். கொள்கை காரணமாக வெளியேறியிருந்தாலும், அதுவரை அவரது கல்வி, திறமை, புகழ், செல்வம், பதவியை வேறிடத்தில் இருந்திருந்தால் பெற்றிருப்பார் என்று சொல்வோரும் தூற்றத்தான் செய்வர் என்றார். தான் அப்படி முடிவெடுத்தால் என்ன எதிர் வினை என எண்ணினாரோ அண்ணா? புகழுரையும், விமரிசனமும் அர்த்தமற்றவை என்ற அண்ணா, 'அடுக்குமொழி வீரன் அண்ணா வாழ்க!', 'அஞ்சாநெஞ்சன் அழகிரி வாழ்க!' என சிலர் வாழ்த்தும்போதே வேறு சிலர் 'முட்டாள்' எனவும் கூறுவர் என்று எழுதினார்.

அண்ணா வெகு நேர்த்தியாக ஜெயப்பிரகாஷ் நாராயணனின் உதாரணத்தைத் தன் நியாயத்தை எடுத்துக்கூறப் பயன்படுத்திக் கொண்டார். பொடி வியாபாரியும் அவர் உதவியாளரும், வேறு யாருமல்ல, பெரியாரும் அண்ணாவும்தான். உதவியாளர் போலவே அவர் நீதிக் கட்சியையும் சுயமரியாதை இயக்கத்தையும் இணைத்தார். இவற்றுக்குப் புத்துயிர் அளித்தார். 'திராவிட கழக'மென்று பெயர் சூட்டி, பெரியாரோடு வேறுபாடு இருந்தபோதும் அதே லட்சியங்களுக்காகவே உழைத்தார். ஜெயப்பிரகாஷ் நாராயணன் போல, அவருக்கும் தன் பலமும் மதிப்பும் தெரிந்திருந்தன. அமைப்பு முக்கியமானதல்ல என்று புரிந்து வைத்திருந்தார். புகழைப் பற்றிக் கவலைப்படாததால் தோற்றாலும் பரவாயில்லை என நினைத்தார். கட்சிக்காக கடுமையாக உழைத்தார். பாமரர் - படித்தவர் இரு சாராரையும் கவரும் திறமை அவரிடம் இருந்தது. ஆனால், எல்லா அதிகாரங்களையும் தன் கையில் தலைவர் வைத்திருந்ததுதான் அவருக்கு கசப்பைத் தந்தது. அமெரிக்க நிர்வாக முறையில் இருந்த

அதிகாரப் பங்கீட்டை அவர் குறிப்பிட்டார். பொது வாழ்க்கையில் இருப்பவர்கள் போற்றுதலுக்கும் தூற்றுதலுக்கும் தயாராக இருக்கவேண்டும் என்பது அவருக்கும் தலைவருக்கும் சேர்த்துத்தான். பெரியாரால் எந்த ஒரு விமரிசனத்தையும் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அண்ணாவைப் பொறுத்தவரை, தான் பெரியாரிடமிருந்து விலகிவிட்டால் தனது எதிர்காலம் இருளானதாகவே இருக்கும் என்பதை உணர்ந்திருந்தார். ஈ.வெ. ரா.வை பூஜை செய்கிறார்கள் என்று அண்ணா கடுமையாகத் தாக்கியிருந்தார். பின்னால் நடக்கப்போவதை முன்கூட்டியே சொல்லியது கதை.

பத்து நாட்களுக்குப் பிறகு, "என்னைப் பொறுத்தவரை நான் காங்கிரஸில் ஈடுபட்டது, சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டது, ஜஸ்டிஸ் இயக்கம், திராவிடர் கழகம் ஆகியவற்றில் ஈடுபட்டது எதற்காக? ஏன் இவற்றில் தொண்டாற்றுகிறேன்? அரசியலைக் கைப்பற்றுவதற்கல்ல. பின் ஏன்? சமூகத்தில் ஒரு பெரும் புரட்சியை உண்டாக்குவதற்காகவே! ஆனால், அரசியல் நோக்கமுடையவர்கள் என் மீது குறை கூறுகிறார்கள்" என்று பெரியார் அறிவித்தார். சுதந்திரம் நெருங்கி வந்துகொண்டிருந்த நேரம். ஜின்னா தனது பாகிஸ்தானுக்கு அரசியல் ஆதரவு உள்ளது எனக் காட்டியது போல திராவிட நாடு போராட்டம் அரசியல் ஆதரவோடுதான் நடத்தப்பட வேண்டும் என்று அண்ணாவும் அவர் தோழர்களும் முடிவெடுத்தார்கள். மேலும், சமுதாய சீர்திருத்தத்தை அரசியல் அதிகாரமின்றி அடையலாம் என்பதில் அவர்கள் அவநம்பிக்கை கொண்டிருந்தார்கள். எனவே, அதிகாரத்தைப் பற்றும் வாய்ப்புக் கிடைத்தால் அதைப் புறந்தள்ள அவர்கள் தயாராக இல்லை. பெரியார் இதை உணர்ந்துதான், தன் எதிர்ப்பாளர்களைப் பதவி ஆசை பிடித்தவர்கள் என்று வர்ணித்தார். கிட்டத்தட்ட இரண்டு மாதங்களுக்குப் பிறகு, 1947, ஜூன் 6 அன்று, அண்ணா 'ராஜபார்ட் ரங்கதுரை' என்ற கதையில் நேரடியாகவே விஷயத்துக்கு வந்தார். நாடகக் குழு உரிமையாளர் குருமூர்த்தி சிரமப்பட்டு தனது நாடகக் குழுவை நடத்தி வருகிறார்; ரங்கதுரை என்ற திறமையான நடிகரின் வரவால் அவருக்கு நல்லகாலம் பிறக்கிறது. ஆனால் அடக்கம் மிகுந்த ரங்கதுரை தன் வெற்றிக்கும் புகழுக்கும், 'கலாகேசரி'யான குருமூர்த்தியே காரணம், அவர் நாடகத்துக்கும் கலைகளுக்கும் அரிய சேவை செய்திருக்கிறார் என்று எப்போதும் நன்றியுடன் கூறுவார். குருமூர்த்திக்கு ரங்கதுரையினால் தனது நாடகக்குழு நிலைபெற்றதில் உளம் மிகுந்த மகிழ்ச்சி.

ஆனால், இந்த நல்லகாலம் அதிக காலம் நீடிக்கவில்லை. சில கெடுமதியாளர்கள் இருவருக்கும் இடையே பகைமை உணர்வைத்

தூண்டிவிடுகிறார்கள். குருமூர்த்தி இல்லாமல் ரங்கதுரை எதையும் சாதித்திருக்க முடியாது என்று அவர்கள் கூறியதை குருமூர்த்தி ரசித்தார்; கூட்டமும், வசூலும் இல்லாமல் நல்ல நடிகர்கள் கிடைப்பதே சிரமமாக இருந்த காலத்தை குருமூர்த்தி மறந்திருந்தார். ரங்கதுரையின் வரவால் நல்லகாலம் பிறந்ததை குருமூர்த்தியோ தனது பெருமை ஆக்கினார். ''நம்மால் அவன் வளர்ந்தால் வளர்ந்துவிட்டுப் போகட்டுமே! அவன் நன்றியுடன் இருக்கிறானா இல்லையா என்பது முக்கியமில்லை. அவனுக்கு அகந்தை ஏற்பட்டால், ஏற்பட்டுவிட்டுப் போகட்டுமே!'' என்றும் சொன்னார்.

இதே 'நலம் விரும்பிகள்', நாடகக் குழு உறுப்பினர்கள் சாப்பிடக்கூட முடியாத நிலையில் ஒருகாலத்தில் இருந்ததை ரங்கதுரையிடம் போய்ச் சொல்வார்கள். ரங்கதுரையின் குரல்தான் ரசிகர்களைக் கொண்டுவந்து குவித்தது; இன்றைய குருமூர்த்தியை உருவாக்கிற்று என்றார்கள். ரங்கதுரையோ, இருபது ஆண்டுகளாக குருமூர்த்தி ஒரு நாடகக் குழுவை நடத்திவருவது சாதனையென்றும், அதில் அவருக்கு இருந்த ஆர்வம்தான் காரணம் என்றும் சிந்தித்துக் கூறுவார். ஆனால் இருபது ஆண்டுகளாகக் குழுவை யாரும் கவனிக்கவும் இல்லை, மதிக்கவும் இல்லை. 'நீங்கள்தான் அதை மாற்றினீர்கள்! ஒரு குரோட்டன்ஸ் செடியில் எப்படி மல்லிகை பூக்கும்?' என்பார்கள். 'சிப்பிக்குள் இருக்கும் முத்தும், சேற்றில் செந்தாமரையும் எப்படி வெளியே தெரிகின்றன?' என்பார் ரங்கதுரை, பதிலடியாக. 'குருமூர்த்திதான் என்னை வெளியே வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தார்' என்றார் நன்றியுணர்வுள்ள ரங்கதுரை.

விவாதம் இதில் முக்கியமில்லை. குருமூர்த்தி - ரங்கதுரை இணை கலைக்கும், நாடகத்துக்கும் வரப்பிரசாதமாக அமைந்திருந்தது. இருந்தாலும் குருமூர்த்தியும் ரங்கதுரையும் மெல்ல மெல்ல விஷமிகளின் பிரசாரத்தில் மயங்கிப் போனார்கள். எனவே, நோய்வாய்ப்பட்ட தாயின் படுக்கையருகில் இருந்த ரங்கதுரை கவலையுடன், தான் இல்லாதபோது நாடகக் காட்சிகள் எப்படிப் போகின்றன என்றும், தான் கூடிய விரைவிலேயே வந்து சேர்ந்து கொள்வதாகவும் கடிதம் எழுதியதைக் கண்டு, அக்கறையுடனும் பொறுப்புடனும் எழுதியிருப்பதாக எடுத்துக்கொள்ளாமல் தனது இன்றியமையாமையை ரங்கதுரை சொல்வதாக எண்ணினார் குருமூர்த்தி. ரங்கதுரையின் தாய்க்குக் காசநோய் என்று தெரிந்தபிறகும், ரங்கதுரைக்காக எழுதப்பட்ட புதிய நாடகத்தில் புதிய ஆட்களை குருமூர்த்தி நடிக்க வைப்பதையறிந்து ரங்கதுரை வருத்தப்பட்டார். தான் தேவையில்லை, என்று குருமூர்த்தி

உணர்த்துவதாக எண்ணினார் ரங்கதுரை. குருமூர்த்திக்கு நன்றிபாராட்டத் தெரியவில்லையே என்று வேதனையுற்றார். விஷமிகள் இந்தப் பிளவை மேலும் பெரிதாக்கி, அதில் வெற்றியும் அடைகிறார்கள்.

குருமூர்த்தி, ரங்கதுரை இல்லாமலேயே தன்னால் நாடகக் குழுவை நடத்தமுடியும் என்று காட்ட, ரங்கதுரையோ தான் யாரையும் அண்டியிருக்கவில்லை என்று நிரூபிக்கிறார்... ஆனால் அவர் மனம் வேறு எந்த நாடகக் குழுவிலும் சேர இடந்தரவில்லை. தானே ஒரு குழுவைத் தொடங்கவும் அவருக்கு விருப்பமில்லை. அவருக்கு அதற்கான திறனும் தேவையும் இருக்கவில்லை.

ரங்கதுரை தன் நோயுற்ற தாயுடன் தங்கிவிட்டார். ஆபூர்வமாகவே வெளியே வந்தார். ஆனால், அவருடைய திறமை காரணமாக சில கிராமபோன் தட்டுகள் வெளியிட்டார். (அண்ணா திரைப்படங்களுக்குக் கதை - வசனம் எழுதுவதை இந்த உவமானம் சொன்னது.) இடையிலே இருந்தவர்கள் மீண்டும் சுறுசுறுப்பானார்கள். ரங்கதுரை நிறையச் சம்பாதிக்கிறார் என்றார்கள். இதைக் கேட்டு குருமூர்த்தி அதிருப்தி அடைகிறார். நல்ல உள்ளம் படைத்த சிலர், இசைத்தட்டுகளிலும்கூட, ரங்கதுரை, குருமூர்த்தியைப் புகழ்ந்துதான் பாடியிருக்கிறார் என்றார்கள். சிண்டு முடிப்பவர்களோ ரங்கதுரை ஏராளமாகச் சம்பாதிக்கிறார் என்று கதையளந்தார்கள். ரங்கதுரையின் கர்வத்துக்கு இந்த வெற்றியும் வசதிகளுமே காரணம் என எண்ணினார் குருமூர்த்தி. ரங்கதுரை, தான் கலைக்குச் சேவை செய்வதாகக் கூறியபோதும் நம்பிக்கை துரோகம் என்று குற்றம் சாட்டப்பட்டது. அவர் இசைத்தட்டுகளைப் பதிவு செய்வதில் அதிக நேரம் செலவிட்டு, தனிமையில் இருந்தார். சண்டை மூட்டுபவர்களோ ரங்கதுரை மிக உயர்ந்த இடத்தில் இருந்ததாகவும், நாடகக் குழுவைப் பயன்படுத்திக்கொண்டு இப்போது உதறிவிட்டதாகவும் பேசினார்கள். எவரேனும் அப்படி உயர்ந்த இடத்தையும், பொறுப்பையும் விட்டுவிட்டுப் போவார்களா என்று அண்ணா கேட்டிருந்தார்.

ரங்கதுரைக்கு மாற்றாகச் சேர்ந்தவர்கள், முதலாளி குருமூர்த்தி ஏன் தங்களுக்கு அதே பாராட்டையும் நிலையையும் தரவில்லை என வியப்படைகிறார்கள். யார் மனதையும் புண்படுத்தாமல் அண்ணா தன் தனிப்பட்ட நடையில் எழுதினார்: "குருமூர்த்தி என்ன செய்ய முடியும்? தயிரில் இருந்து வெண்ணெய் எடுக்கமுடியும், பன்னீரிலிருந்து அல்ல." ரங்கதுரை இதற்கு மேல் ராஜபார்ட் வேடம் புனையவில்லை. அவர் இப்போது சிறிய வெற்றிலை பாக்கு சோடா கடை வைத்திருந்தார். தான் செய்வதில் திருப்தி அடைந்தார். நல்லவர்கள், திறமையுள்ளவர்கள், ஈடுபாட்டோடு

செயல்படுபவர்கள் எது செய்தாலும் பிரகாசிப்பார்கள். பொறாமையும், மோசமான யோசனைகளும் இதை மாற்றிவிட முடியாது. அவருக்கு மன நிம்மதி கிடைத்தது. ஆனால் சண்டை விரும்பிகள், ராஜபார்ட்டாக வேஷம் கட்டியவர் ஒரு வெற்றிலை பாக்குக் கடைக்காரர் ஆனதில் மகிழ்ச்சி அடைந்தார்கள். ஒரு சிலரே இந்தப் பிளவு கலை உலகத்துக்கு இழப்பு என்று அறிந்திருந்தார்கள். அவர்கள் குருமூர்த்தியிடமோ ரங்கதுரையிடமோ போனால் ஏதும் பேசாமல் மௌனமாக இருந்தார்கள். "நான் குருமூர்த்தியின் நாடகத்துக்குப் போயிருந்தேன். நீங்கள் இல்லாமல் அது நாடகமாகவே இல்லை" என்று ஒருசிலர் சொல்வதைக் கேட்டு ரங்கதுரையின் கண்களில் கண்ணீர் மல்கும். கண்ணீர்தான் முடிந்துபோன அவர்கள் நட்புறவின் முடிவானது என்று அண்ணா வேதனையோடு கதையை முடித்திருந்தார்.

கதையின் சம்பவங்கள் எல்லாமே தெள்ளத் தெளிவாகத் தெரிந்தன. பெயர்கள்கூட அண்ணாவின் நன்றியுணர்வைக் காட்டின. 'குரு'மூர்த்தி என்பவர் அண்ணாவின் குரு - ஈ.வெ.ரா. நடிகர் ரங்கதுரை பெயரில் இருந்த 'துரை' அண்ணாதுரையைக் குறித்தது. நாடகக் குழு என்பது ஈ.வெ.ரா.வின் புரட்சிகர சுயமரியாதை இயக்கம். உண்மையிலேயே துணிச்சலான சிலரையும், புறந்தள்ளிய சிலரையும் தவிர வேறு எவரையும் ஈர்க்கவில்லை பெரியாரின் சுயமரியாதை இயக்கம்.

அண்ணாவின் தொடர்பு இயக்கத்தை மேலும் அறிவுசார்ந்த ஒன்றாகவும் அதே நேரத்தில் ஜனரஞ்சகமாகவும் ஆக்கியது. அவருடைய எழுச்சியூட்டும் சொற்பொழிவுகளும், பெரியார் புகழ்ச்சியும், தலைவருக்குக் கீழ்ப்படிதலும் ரங்கதுரையின் திறமையாகவும், தலைவருக்கு ஆற்றிய தொண்டாகவும் வெளிப்பட்டன. குருமூர்த்திதான் ரங்கதுரையை அறிமுகப்படுத்தினார். இதை அண்ணாவே சில இடங்களில் குறிப்பிடுகிறார். தவிர, குருமூர்த்தி அவருடைய திறமையைப் பேணி வளர்த்தார். அவருக்குச் சிறந்த வேடங்களைக் கொடுத்து நடிக்கச் சொன்னார். விரைவிலேயே ராஜபார்ட் என்பது ரங்கதுரையின் பெயரோடு பிரிக்கமுடியாமல் ஒட்டிக்கொண்டு விட்டது. ஈ.வெ.ரா. தன்னைத் துணை ஆசிரியராக வைத்திருந்ததையும், தலையங்கம் எழுதச் சொன்னதையும், சுயமரியாதை மாநாட்டில் தலைமை தாங்கவைத்ததையும், தனக்கு அடுத்த இடத்தைத் தந்ததையும் அண்ணா இப்படிச் சொன்னார். அண்ணாவின் உயர்வைக் கண்டு பொறாமை கொண்டவர்களின் பேச்சை இருவருமே உணராமலே கேட்டுக் கொண்டிருந்ததைக் குறிப்பிடுகையில் அண்ணாவின் நேர்மை புலப்படுகிறது. ஆனால்

அண்ணாவைவிட முப்பது வயது மூத்த ஈ.வெ.ரா. இன்னும் பெருந்தன்மையைக் காண்பித்திருக்கலாம். ரங்கதுரைக்கு ஏற்பட்ட மன வருத்தம், அண்ணாவினுடையதே. ரங்கதுரையின் விருப்பமும், நன்றியுணர்வும் அண்ணா, ஈ.வெ.ரா. மீது கொண்டிருந்ததே. பிரிந்திருந்த நேரத்திலும் அது மாறவில்லை. அண்ணா ஈ.வெ.ரா.வின் சமூக சேவையைப் பாராட்டி வியந்தார். மிகுந்த எதிர்ப்புகளையும், சொந்த கஷ்டங்களுக்கு இடையேயும் சுயமரியாதை இயக்கத்தை பெரியார் தொடர்ந்து நடத்தும் துணிவையும் அண்ணா பெரிதும் வியந்தார்.

எனினும் மனவேற்றுமை இன்னும் தீவிரமாகிப்போக அண்ணா தனியே குமுறினார். ரங்கதுரையும் அப்படித்தான். 'நல்லதம்பி' திரைப்படம் மூலம் அண்ணா திரையுலகில் நுழைந்தபோது ரங்கதுரையின் நிலையில்தான் இருந்தார். வேடிக்கை என்னவெனில், அந்தக் கதைக்கு அண்ணா சம்பளமாக எதையும் பெற்றுக் கொள்ளாதபோதே, பொறாமைப்பட்டவர்கள் எல்லோரும் அவருக்கு ஏராளமாகப் பணம் கிடைத்ததாக, ஏற்கெனவே சந்தேகத்தில் இருந்த ஈ.வெ.ரா.விடம் போய்க் கூறினார்கள். தன் இசைத்தட்டில் குருவைப் புகழ்ந்து பாடிய ரங்கதுரை போலவே, அண்ணாவும் தன்னை ஆதரித்த ஈ.வெ.ரா.விடம் நன்றியே காண்பித்தார். முடிவு 'கண்ணீர்' என்று அண்ணா கதையாக்கியது என்பது பின்னர் 'கண்ணீர்த்துளி'களாகி, அண்ணாவையும் அவர் ஆதரவாளர்களையும் ஈ.வெ.ரா. கேலியாகக் குறிப்பிடும் சொல் ஆயிற்று. அண்ணாவும் அவருடைய தோழர்களும், ஈ.வெ.ரா. மணியம்மையை மணந்துகொண்டவுடன், அதனால் தாங்கள் அழுவதைக் குறிக்கும் விதத்தில் தங்களை 'கண்ணீர்த்துளிகள்' என்றே அழைத்துக்கொண்டனர்.

ஒரு வாரத்துக்குப் பிறகு, அண்ணாவின் 'இரும்பாரம்' என்ற வரலாற்றை ஆதாரமாகக்கொண்ட சிறுகதை வெளியாயிற்று. கதை ஸ்பெயினில் நடக்கிறது. ஸ்பானிஷ் சக்கரவர்த்தி ஃபெர்டினான்ட் ஈ.வெ.ரா. எனில், கிறிஸ்டஃபர் கொலம்பஸ்தான் அண்ணா. கொலம்பஸின் பயணத்தை எதிர்த்த இஸபெல்லாவைக் கதையில் அறிமுகப்படுத்தியிருந்தது பொருத்தமாகவே இருந்தது. ஃபெர்டினான்டையும் அவர் மனைவி இஸபெல்லாவையும் அவர்கள் கிரானடா வெற்றியில் திளைத்திருக்கும்போது, இந்தியாவுக்கு மேற்கே செல்லும் தனது பயணத்துக்கு நிதி உதவி கேட்டு அணுகுகிறார் கொலம்பஸ். ஆனால், தன் ஆலோசகர்களின் அறிவுரைப்படி கொலம்பஸின் வேண்டுகோளை இஸபெல்லா நிராகரித்துவிடுகிறார். வேறு வழியின்றி கொலம்பஸ் வெளியேறிவிடுகிறார். மனைவி மீது சினம் கொண்ட

ஃபெர்டினான்ட், ஒரு வீரனை அனுப்பி கொலம்பஸை அழைத்துவரச் சொல்கிறார். மனைவியின் எதிர்ப்பையும் மீறி முடிவில் ஃபெர்டினான்ட்தான் கொலம்பஸின் பயணத்துக்கு அனுமதி அளிக்கிறான். பெரியாரின் அணுக்க உதவியாளர் மணியம்மைதான் இஸபெல்லாவோ? பின்னர் அவர்தானே இயக்கத்தை ஏற்று நடத்தப்போகிற காந்திமதி, பிறகு அரசியல்மணி என்கிற மணியம்மை? மணியம்மையாரின் தந்தை வேலூரில் ஒரு வணிகர். மணியம்மையார் மணவாழ்க்கை வேண்டாமென்று பெரியாரின் இயக்கத்துக்குத் தன் சேவையை முழுதும் அளித்தவர். பின்னர் அவரை மணந்தார். இயக்கத்தை அவரிடமிருந்து சுவீகரித்தார். இப்படி நடக்குமென்று அண்ணா முன்னரே எதிர்பார்த்தாரோ?

கொலம்பஸை, தன் உயிரையும் பொருட்படுத்தாமல் புதிய இடங்களைக் கண்டுபிடித்த லட்சியவாதியாக, அண்ணாவின் கதை புகழ்ந்தது. நீதிக் கட்சியினரைத் தள்ளிவைத்து திராவிடர் கழகம் கண்ட ஈ.வெ.ரா.வை இங்கே ஃபெர்டினான்ட் ஆகக் காண்பித்திருந்தார் அண்ணா.

கொலம்பஸோ சாதாரண மனிதன். அவருடைய சிறுவயதுப் பருவம் அண்ணாவின் சிறுவயதுப் பருவத்துக்கு இணையானது. வரலாற்று நாயகர்களாக தாங்கள் உருமாறப்போவதை அவர்களின் இளமைப் பிராயம் அடையாளம் காட்டவில்லை. கொலம்பஸை ஃபெர்டினான்ட் பால் மாறாத நன்றியுணர்வு கொண்டவராகக் காண்பித்திருந்தார் அண்ணா. நியாயம்தானே? ஃபெர்டினான்ட்தான் கொலம்பஸை அடையாளம் கண்டார்; போர்ச்சுக்கீசியர்களும், பிற மன்னர்களும், மறுத்துவிட்டபோதும் அவரது பயணத்துக்கு நிதி தந்தார். கொலம்பஸ் தன் வெற்றியை ஸ்பெயினின் வெற்றி என்றார். ஈ.வெ.ரா.தானே அண்ணாவைக் கண்டெடுத்தவர்? நீதிக் கட்சியை மக்கள் இயக்கமான திராவிடர் கழகமாக மாற்றிய அண்ணாவின் வெற்றியை அண்ணாவோ பெரியாருக்கே காணிக்கையாக்கினார். வேண்டாத சிலர் ஃபெர்டினான்டிடம் போய், கொலம்பஸை ஸ்பெயினின் மன்னராக அமெரிக்க - இந்தியப் பழங்குடியினர் நினைப்பதாகக் கோள் சொன்னார்கள். அண்ணாவுக்குக் கட்சியில் வளர்ந்து வந்த செல்வாக்கையும், அவர் அடைந்த உயர்வையும் அதனால் ஏற்பட்ட பொறாமை உணர்வையும் அவர்கள் பெரியாரிடமிருந்து தம்மை அந்நியப்படுத்தியதையும் சொல்லாமல் சொல்லியது கொலம்பஸின் கதை.

ஃபெர்டினான்ட் 'கதை சொல்லி'களின் பேச்சுக்கு மயங்கிவிடுகிறார்; அவருடைய கீர்த்தியையும், மாண்பையும் 'கதை

சொல்லி'கள் மேலும் கூறி இடைவெளி வளர்த்தனர். இறுதியில் இஸபெல்லா கொலம்பஸின் கவர்னர் பதவியைப் பறித்து, கொலம்பஸை அவரது சகோதரர்களுடன் கைது செய்து ஸ்பெயினுக்குத் திரும்ப கொண்டுவருகிறார்.

கொலம்பஸுக்கு எதிராக ஸ்பானிய படையினரும், பாதிரிகளும் கூறிய குற்றச்சாட்டுகள் காரணமாக அவன் பதவியை இழக்கிறான் என்பது சரித்திரம். ஆனால், அவனுடைய வெற்றி அரண்மனையில் பேச்சுப் பொருளாகி பொறாமைத் தீயை வளர்த்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. கொலம்பஸ் மனமுடைந்து மரணமடைவதாக அண்ணா கதையை நிறைவு செய்திருந்தார். ஆர்வமும் சாகசமும் நிறைந்த கொலம்பஸைக் ஃபெர்டினான்ட் உருவாக்கினார்; பொறாமைக்காரர்கள் கொலம்பஸை கொன்றுவிட்டனர் என்று முடித்திருந்தார்.

முந்தைய கதைகளைப் போல இந்தக் கதையும் இருந்தாலும், இஸபெல்லா என்ற மூன்றாவது பாத்திரம் - மணியம்மையைச் சுட்டிக்காட்டுவதாக அமைந்திருந்தது. அடுத்த ஆண்டு ஈ.வெ.ரா. அண்ணாவைத் தன் வாரிசு என ஈரோட்டில் அறிவித்தபோதும், மணியம்மை குறித்த அண்ணாவின் ஐயம் உண்மையாயிற்று.

அடுத்தவாரம் அண்ணா தன் கடைசி உருவகக் கதையை 'மரத்துண்டு' என்ற தலைப்பில் எழுதினார். தர்மலிங்கம் கஷ்ட சமயத்தில் உதவிய மரத்துண்டு ஒன்றை கஷ்டம் தீர்ந்தபின் வீட்டின் பின்புறம் ஒரு மூலையில் தூக்கி எறிந்துவிடுகிறார். தேக்கு மரம் என எண்ணி, வீட்டின் முகப்பில் அதை அழகாகப் பயன்படுத்தலாமே என யோசனை சொன்னார்கள் வீட்டுக்கு வந்தோர். தர்மலிங்கம் அந்த யோசனையைப் புறக்கணித்து, அதை ஒரு விறகுக்கட்டையைப் போலவே பாவித்தார்.

ஒருநாள் பலத்த புயல்காற்று வீசுகிறது. சுவரே இடிந்து விழுந்துவிடும்போல் இருக்கிறது. தர்மலிங்கம் தன் வேலைக்காரரை அழைத்து, புழக்கடையில் கிடக்கும் அந்தத் தேக்குமரத் துண்டை எடுத்து வந்து சுவருக்கு முட்டுக் கொடுத்து நிறுத்தச் சொல்கிறார். மக்கள் தர்மலிங்கத்தின் சமயோசித புத்தியைப் புகழ்ந்து தேக்கு மரத்தை சரியான சமயத்தில் உபயோகித்ததற்காகப் பாராட்டுகிறார்கள். தர்மலிங்கம் மக்களின் புகழ்ச்சியை ஏற்றுக்கொண்டாலும், சுவர் நிலையாக நின்றதும், தேக்குமரத்தை எடுத்துப் பழையபடியே கொல்லைப் புறத்தில் வீசிவிடுகிறார். தேக்கு மரத்தைக் கறையான் அரித்துக்கொண்டிருப்பதைப் பார்த்த ஒரு விருந்தாளி, "ஓ, இதனால்தான் தூக்கி எறிந்துவிட்டீர்களோ?' என்று கேட்கிறார். தர்மலிங்கம் பதில் கூறாமல் அமைதியாக



தலைமைச் செயலகம் முன்பாக அண்ணா பேசிய காட்சி...

இருக்கிறார். 'நான் பலத்தோடு இருந்தேன். எல்லோரும் என்னைப் பயன்படுத்திக் கொள்ளச் சொன்னார்கள். இப்போது என்னைக் கறையான்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றன. என்னை இப்போது ஒதுக்கிவிட்டார்கள்!' என்று தேக்கு மரத்துண்டு சொல்ல இயலாமல் தவிக்கிறது.

சோகம் நிறைந்த இந்தக் கதையில், ஈ.வெ.ரா. 1944-ல் எதிர்ப்பை வென்று நீதிக் கட்சிக்கு மறுபடி உயிரளிக்கத் தன்னுடைய உழைப்பே காரணம் என்று நினைவுறுத்தினார் அண்ணா. பெரியார் தன் நிலையை உறுதிப்படுத்திக் கொண்ட பிறகு, அண்ணாவின் தேவை குறைந்துபோய்விட அவரை ஒரு மரத்துண்டைப் போல ஒதுக்கி வைத்துவிட்டார். ஆனால், மிகப்பெரும் வேதனையும் வலியும் மீண்டும் அண்ணாவைத் தாக்கவிருந்தன.

9

கைக்கு வசப்படாத பதவி



இந்தியாவுக்கு உடனடியாகக் கிடைக்கவிருந்த சுதந்திரம், தலைவருக்கும் சீடருக்கும் இடையே ஏற்பட்டுவிட்ட இடைவெளியை இன்னும் பெரிதாக்கியது. தலைவரைப் பொறுத்தவரை விஷயம் மிக எளிதானது. நடுநிலையான பிரிட்டிஷார் போய்விடுவார்கள்! மக்கள் கருத்தைப் பற்றிக் கவலைப்படாத பெரியார், சுதந்திரத்தில் கொண்டாட ஒன்றுமில்லை என்று நினைத்தார். ஆனால், அண்ணாவுக்கோ தங்கள் போராட்டத்தை சுதந்திர இந்தியா சிக்கலாக்கும் எனினும் நாட்டின் விடுதலை என்பது வரலாற்றுச் சிறப்புமிக்க, மகிழ்ச்சியான நிகழ்வு. ஓர் எதிரி, நாட்டைவிட்டுப் போகும் தருணம் அது. பிரிட்டிஷார் வெளியேறுவதை எதிர்த்தால், அது 'தீராப் பழி' தேடித் தரும் என, சரியாக எடுத்துக் காட்டினார்.

1947, ஜூலை 25 அன்று, திராவிடர் கழகத்தின் நிர்வாகக் குழுத் தலைவர் தி.பொ.வேதாசலம், '*1947* ஆகஸ்ட் *15*-ம் நாள்... லட்சக்கணக்கான

திராவிட மக்களுக்கு அந்த நாள் ஒரு துன்ப நாளாகும்' என்று ஓர் அறிக்கை வெளியிட்டார். இரண்டு நாட்கள் கழித்து பெரியார், ஜூலை 27 அன்று வெளியிட்ட தனது 'பிரிட்டிஷ் - பனியா - பார்ப்பனர் ஒப்பந்த நாள்' என்ற அறிக்கையில் 'துன்ப நாள்' என்பதற்கு மூன்று காரணங்களைக் கூறினார். ஒன்று, கிடைத்திருப்பது பூரண சுயராஜ்யம் அல்ல. இரண்டு, வடநாட்டுக்காரர்கள் அதிகாரம் செலுத்தப் போகிறார்கள். மூன்று, திராவிட நாடே இலக்கு. ஆகஸ்ட் 6 அன்று விடுத்த மேலும் இரண்டு அறிக்கைகள் மூலம், 'ஆகஸ்ட் 9-ம் தேதி முதல் 12-ம் தேதி வரையில், தென்னிந்தியாவில் உள்ள திராவிடர்கள் அனைவரும் பெரும் கூட்டங்களைக் கூட்டவேண்டும். பொது மக்கள் யாவரும் திராவிட நாடு பிரிவினையின் அவசியத்தை உணருமாறு செய்யவேண்டும்' என்றும் கொண்டாட்டங்களில் பங்கு பெறுதல் கூடாது என்றும் வலியுறுத்தினார்.

பெருவாரியான மக்கள் அவரது போக்கை வெறுக்கத்தக்கதாகவும், காட்டிக்கொடுக்கக் கூடியதாகவும் கொள்வார்கள் என்பதைப் பற்றி அவர் கவலை கொள்ளவில்லை: "ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி நடக்கும் சுதந்திரத் திருநாள் என்னும் ஆரியர் - பனியா ஏமாற்றுத் திருவிழாவில் நாம் கலந்துகொள்ளவில்லை என்கிறோம்", தனது போக்கின் கனத்தை உணர்ந்தும், பெரும் அவதூறுக்கு இயக்கம் ஆளாகும் என்பதையும் அவர் உணராமலும் இல்லை. அதனால், "இதை காங்கிரஸ்காரரும் ஆரியர் - பனியாக்கள் அடிமைகளும் திரித்துக்கூறி வெள்ளையனை வெளியேற்றுவது திராவிடர் கழகத்துக்கு இஷ்டமில்லை என்று விஷமப் பிரசாரம் செய்வார்களாகின், அது காங்கிரஸாரின் மற்றொரு பித்தலாட்ட பிரசாரம் என்று திராவிட மக்கள் கருதவேண்டுமே ஒழிய, ஏமாந்து போகக் கூடாதென்று வேண்டிக்கொள்கிறேன்" என்று தனது அறிக்கையை முடித்திருந்தார்.

நினைத்துக்கூடப் பார்க்காத வகையில் அண்ணா, பெரியாருடன் வெளிப்படையாக மோதினார். 'திராவிட நாடு' ஆகஸ்ட் 10 இதழ் 'ஆகஸ்ட் 15 மகிழ்ச்சியான நாள்' என்றது. நிதானித்துச் செயல்படும் அண்ணா, தன் தலைவரின் மதிநுட்பத்துக்கு சவால் விடுகிற முடிவை அவ்வளவு எளிதாக எடுத்துவிடவில்லை. செழியனின் செம்புதாஸ் தெரு அறையில் இருந்த அண்ணா, சம்பத், நாவலர் நெடுஞ்செழியன், செழியன் மற்றும் என்.வி.நடராஜனுடன் தீவிரமாகக் கலந்து ஆலோசித்துவிட்டே பெரியாரை மறுதலிக்கும் தனது வரலாற்றுச் சிறப்புமிக்க 'ஆகஸ்ட் 15' அறிக்கையைத் தயாரித்தார்.

கட்சிக்குள்ளேயே பெரும்பான்மையினர் பெரியாரின் கருத்தையே ஒத்திருந்தனர். கட்சியினரிடத்தில் ஈ.வெ.ரா.வின் 'பிடி'யை இது காண்பித்தது. எனவே பெரியாருடன் இப்படி வெளிப்படையாக மோதுவது அண்ணாவை வருத்தமடையச் செய்தாலும், இயக்கத்தின் எதிர்காலத்தையும், தன்னுடைய எதிர்காலத்தையும் நிர்ணயிக்கும் ஒரு விஷயத்தில், துணிந்து தன் கருத்தை வெளியிட வேண்டிய கட்டாயம் அண்ணாவுக்கு இருந்தது. அண்ணாவின் 'ஆகஸ்ட் 15' அறிக்கை பெரியாரின் நிலையைத் தாழ்மையுடன் ஆனால், உறுதியுடன் எதிர்த்தது. அண்ணா ஆகஸ்ட் 15-ஐ சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த, உலகே ஆர்வத்துடன் கவனிக்கும் நாளாக வர்ணித்தார். தாங்கள் ஆங்கிலேயரின் அடிவருடிகள் என்ற குற்றச்சாட்டைத் துடைத்தெறிய இது வரலாறு வழங்கும் வாய்ப்பு என்றும், தாங்கள் சுதந்திரம் வேண்டுவோருக்குக் குறைந்தவர்கள் அல்ல என்றும், பிரிட்டிஷாரை எதிர்த்ததற்காக பெரியார் துன்பப்பட்டிருக்கிறார் என்றும், சுதந்திரத்தைக் கொண்டாடும் முக்கிய நபர்களில் அவருக்கும் சிறப்பான இடமுண்டு என்றும் அண்ணா கூறினார். 'அவருடைய கட்சியிலுள்ள எங்களுக்கு (சுதந்திரத்தை) கொண்டாட உரிமையுண்டு' என்றார். அண்ணாவின் நடுநிலையான அறிக்கை, சுதந்திரம் யாருக்கும் முழுமையாக எதையும் தந்துவிடவில்லை என்றாலும் சரித்திரத்தின் தவறான பக்கமாக தாங்கள் இருந்துவிடக் கூடாது என்ற பதைப்பை வெளிப்படுத்தியது.

தாங்கள் மட்டுமே அதிருப்தி கொண்டிருக்கவில்லை என்பதை அண்ணா சுட்டிக் காட்டினார். கொண்டாட வேண்டிய நேரம்தான் அது என்றாலும், காங்கிரஸோ, முஸ்லிம் லீகோ தங்கள் லட்சியத்தை முழுவதுமாக அடையவில்லை என்றும், அவர்களுடைய பெரும்பாலான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுவிட்டதாலும், 200 ஆண்டுகால அந்நிய ஆட்சி அகலப்போகிறது என்பதாலுமே அவர்கள் கொண்டாடுகிறார்கள் என்றும் எடுத்துச் சொன்னார்.

திராவிட இயக்கமும் பிரிட்டிஷ் ஆட்சி அகல வேண்டும் என்றே கோரியதாக அண்ணாவின் அறிக்கை மக்களுக்கு நினைவூட்டியது:

> இந்தி போராட்டம் உச்சத்தில் இருந்தபோது, நாங்கள் நீதிக் கட்சியின் மாகாண மாநாட்டில் (1939) சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம். காங்கிரஸ்காரர்களான நீங்கள் பிரிட்டிஷார் நாளை போக வேண்டும் என்றால், நாங்கள் அவர்களை இன்றே போகச் சொல்கிறோம்.

மற்ற அரசியல் கட்சிகள் எல்லாம் எங்களை ஏகாதிபத்தியத்தின் அடிமைகள் என்று குற்றச்சாட்டு கூறும்போது, நாங்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சி ஒழியவேண்டும் என்று பலமுறை கூறியிருக்கிறோம். அதை முடிவுக்குக் கொண்டுவர முயல்வோம். பிரிட்டிஷ் ஆட்சி நமக்கு நிறைய கெடுதலை விளைவித்திருக்கிறது; எனவே, நம் வெறுப்புக்கும் கண்டனத்துக்கும் உரியது அது...

ஆகஸ்ட் 15 அந்நியர் அட்சியிலிருந்து விடுபடும் நாள். நம்மைக் கசக்கிப் பிழிந்த பிரிட்டிஷ் ஆட்சி மறையப்போகிறது. இரண்டு எதிரிகளில் ஓர் எதிரி ஒழிந்துவிட்டான். இனி பனியா ஏகாதிபத்தியம் மட்டுமே இருக்கிறது.

பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பதிலாக வட இந்தியரின் ஆட்சி நடக்கும் என்று ஈ.வெ.ரா. சொன்னதை ஏற்றுக்கொண்டாலும், மக்கள் அதை இன்னும் உணரவில்லை என்று கூறினார் அண்ணா. ஆனால், வடக்கும் பிரிட்டிஷாரைப் போலவே ஏகாதிபத்திய உணர்வோடு சுரண்டலில் ஈடுபட்டால், அந்தத் தளையையும் அறுத்தெறிய முடியும் என்றார். தன் முயற்சிகளில் வெற்றி காண காங்கிரஸுக்கு 60 வருடங்கள் ஆயிற்று. ஆனால், ஜின்னாவோ ஆறே வருடங்களில் வெற்றி கண்டார். எப்படி? அது தேர்தல் வாக்குகளால் வந்த சக்தி என்றார் அண்ணா.

காங்கிரஸ் கட்சி அறுபது ஆண்டுகள் எடுத்துக்கொண்ட போது, ஜனாப் ஜின்னா குறுகிய ஆறே ஆண்டுகளில் சாதித்துவிட்டார் என்றால், லீகின் பலம் பெருகியிருந்தது. பிரிவினை பிரசாரம் மட்டுமே, முஸ்லிம் லீகின் பெரும்பான்மை உறுப்பினர் அதை ஆதரிக்கக் காரணமாக இருக்கவில்லை. நகராட்சி தேர்தல் முதல் டெல்லி சட்டசபை தேர்தல் வரை லீக் ஜெயித்துக்கொண்டே இருந்தது. நாமோ தேர்தலையே இன்னும் சந்திக்கவில்லை. பிரிவினைக்காக பிரிட்டிஷார் எடுத்த நடவடிக்கைகளிலும் நாம் பங்கு பெறவில்லை. நாம் மத்திய சட்டசபையில் அங்கம் வகிக்கவில்லை. அங்கம் வகித்த திராவிட காங்கிரஸ் உறுப்பினர்களோடு தொடர்பும் வைத்துக்கொள்ளவில்லை.

அதுபோல, குறுகிய காலத்தில் மாற்றத்தை உண்டாக்க முடியும் என்றார் அண்ணா. ஆனால், இந்த நாள், விடுதலைப் போராட்ட



உடுமலை நாராயணகவி, அண்ணா, என்.எஸ்.கே., யதார்த்தம் பொன்னுசாமி, நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ராமசாமி, சி.வி.ராஜகோபால் உள்ளிட்டோர்

வீரர்கள் திருப்பூர் குமரன், வ.உ.சிதம்பரம் மற்றும் பகத்சிங் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்த வாய்ப்புக் கிடைத்த நாள். அவர்கள் வாழ்ந்தது திராவிட நாடு என்ற யோசனை பிறப்பதற்கு முன். அவர்களின் சுதந்திர வேட்கையைப் பின்பற்றி, கழகத்தின் திட்டங்களை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று அண்ணா யோசனை கூறினார். உலகமே கொண்டாடும் ஒரு தினத்தை நம்முடைய கோரிக்கை என்ற அளவுகோலால் அளந்து பார்க்கக் கூடாது என்று பரிந்துரைத்தார். தங்கள் எண்ணங்களுக்குப் பிற முகாம்களில் ஆதரவு வளர்ந்துகொண்டு வருவதாக அண்ணா குறிப்பிட்டார்.

> இந்த சாதகமான சூழ்நிலையை, அந்த நாளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நாம் ஏன் இழக்கவேண்டும்?
>
> நம் கோரிக்கை இன்னும் ஆரம்பகட்டத்திலேயே

இருக்கிறது. நாம் இன்னும் அதுபற்றி விளக்கிக்கொண்டு இருக்கிறோம். நாம் எந்த தியாகமும் செய்யவில்லை. நம்மிடையே ஒரு குமரனோ, வ.உ.சிதம்பரமோ இல்லை. இருந்தாலும், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது தாளமுத்துவையும், நடராசனையும் பார்த்தோம். நாம் இப்போதுதான் அப்படிப்பட்டவர்களைச் சேர்க்கத் தொடங்கி இருக்கிறோம். போர் இன்னும் தொடங்கவில்லை. நாம் தோற்கவுமில்லை; ஜெயிக்கவுமில்லை. எனவே, எதற்காக ஒரு துக்க நாள்?

அண்ணா பழியைத் தவிர்க்கத் தவித்தார். எனவே, அவருடைய அறிக்கை: "நாம் பிரிட்டிஷாரின் அடிமைகள் அல்ல என்று கூற நமக்கு இருக்கும் கடைசி நாள் ஆகஸ்ட் 15. நாம் ஏன் அந்த வாய்ப்பை நழுவவிட்டு நம் மீது அழிக்கமுடியாத கறையை ஏற்க வேண்டும்?" என்று கேட்டது.

காங்கிரஸ் தலைவர் சுபாஷ் சந்திரபோஸின் கட்சி சுதந்திரத்தைக் கொண்டாட வேண்டாம் என சொல்லியிருந்தது. தாங்கள் அப்படிச் சொல்லும் நிலையில் இல்லை என்று வாதாடினார் அண்ணா.

போஸின் கட்சி காங்கிரஸின் திட்டப்படி இதுவரை பங்கெடுத்துக்கொண்டு வந்திருக்கிறது. காங்கிரஸின் வன்முறை நிகழ்ச்சிகளையும் தாண்டி, அவர்கள் ஆயுதம் தாங்கிய போராட்டத்தை, பிரிட்டிஷாருக்கு எதிராக அயல்நாட்டிலிருந்து மேற்கொண்டார்கள். எனவே, அவர்கள் ஆகஸ்ட் 15 கொண்டாட்டங்களில் பங்கு கொள்ளவில்லை என்றால், காங்கிரஸேகூட அவர்களை பிரிட்டிஷாரின் அடிமைகள் என்று கேலியும் கண்டனமும் கூற முன்வராது.

ஆகஸ்ட் 15 அன்று ஒதுங்கி இருப்பதோ, அது துக்க நாள் என்ற நிலையை எடுப்பதோ, இந்தத் துணைக் கண்டத்தில் மட்டுமல்ல, உலகம் முழுவதுமே நம்மைத் தவறாக எண்ணிவிட இடம் கொடுத்துவிடும். காங்கிரஸாரே சுதந்திர நாளை உரிமையோடு கொண்டாடும் நிலைமையை நாமே உருவாக்கி விடுவோம்...

சுதந்திரப் போராட்டத்தில் பல நிலைகள் உள்ளன. ஆகஸ்ட் 15 அதில் ஒன்று. ஆரம்பக் கட்டம் - முதல்

> வெற்றி - குறிப்பிடத்தக்க வெற்றி - அதைக் கொண்டாடிய பிறகு, மற்றவர்கள் ஆர்வம் குறைந்து விட்டாலும்கூட, திராவிடர்கள் தொடர்ந்து விடுதலைப் போராட்டம் நடத்தி திராவிட சுயாட்சியைப் பெறப் பாடுபட வேண்டும்...
>
> இருநூறு ஆண்டுகாலப் பழியும் வெட்கமும் துணைக் கண்டத்தின் முகத்திலிருந்து துடைக்கப்படும் நாள் ஆகஸ்ட் 15. அது திராவிடர்களுக்கும் திருவிழாதான் - துக்க நாள் அல்ல.

ஈ.வெ.ரா. கட்சியில் மூத்தவர்களையோ, நிர்வாகக் குழுவையோ தாம் முடிவை எடுக்குமுன் கலந்தாலோசிக்கவில்லை என்று அண்ணா சுட்டிக்காட்டினார். தனது அறிக்கை தன் மீது அவநம்பிக்கையும் வசையையும் சேர்க்கும் என அண்ணா அறிந்திருந்தார். "ஆனால், நான் என் உள்ளத்தைத் திறந்து பேசினேன்" என்றார். அவருடைய செயலின் கடுமையை உணர்ந்து அதன் விளைவுகளை எண்ணி, அறிக்கையில் இப்படி முடித்திருந்தார்:

> இது கட்சியின் கட்டுப்பாட்டை மீறியதாகவோ, தலைவரின் அறிக்கையை மீறியதாகவோ கருதப்பட்டு, ஒழுங்கு நடவடிக்கை ஏதும் எடுக்கப்படுமானால், இந்த ஒருநாள் மட்டுமே - இந்தக் கடைசி நாளே - முக்கியத்துவம் வாய்ந்த ஆகஸ்ட் பதினைந்தே - என் வாழ்நாளில் பிரிட்டிஷ் ஆட்சி இருக்கவே கூடாது என்ற கொள்கையை நான் கொண்டிருந்தேன் என மக்களுக்குக் கூற ஏற்ற நாள். கட்சியின் எந்தக் கடுமையான நடவடிக்கைக்கும் நான் கட்டுப்படுகிறேன்.
>
> என் செயல் தவறு என்று கருதி என்னைக் கட்சியிலிருந்து தலைவர் நீக்கினால், நான் தொடர்ந்து அடிப்படைக் கொள்கைகளான சமூக சீர்திருத்தம், பொருளாதார சமத்துவம், திராவிட நாடு ஆகியவற்றுக்காக, கட்சிக்கு வெளியே இருந்து உழைப்பேன் என்று கூறிக்கொண்டு, இந்த அறிக்கையை முடிக்கிறேன்.

'திராவிட நாடு' இதழின் மொத்த 16 பக்கங்களில் எட்டு பக்கங்களை 'ஆகஸ்ட் 15' எடுத்துக்கொண்டிருந்தது. பிரிட்டிஷார் வெளியேறுவதை வரவேற்கவில்லை என்றால், அது நிச்சயம் அவர்களுக்கு அழிக்கவொண்ணா அவப்பெயரைத் தேடித்தரும்

என்று மிகச்சரியாக அறிக்கை கணித்திருந்தது. ஆனால், நாம் முன்பு பார்த்த மாதிரி ஈ.வெ.ரா. இதற்குத் தயாராகவே இருந்தார். அவர் இந்த வாதத்தை 'மோசடி' என்றார். ஏமாற்றுவதற்கான முயற்சி என்றார். அண்ணா சமூக சீர்திருத்தத்துக்கும் சுதந்திரத்துக்கும் வாக்குச்சீட்டு அரசியல்தான் வழி என்று எண்ணினார்; பெரியார் மாறுபட்டார். இந்த உறுதியும் முற்றிலும் வேறுபட்ட சிந்தனையுமே பெரியாரின் பலமாக இருந்தது.

ஆனால் 1940-களின் முன் பகுதி வரை ஈ.வெ.ரா.வின் எண்ணமான சுதந்திரம் என்பது பிராமணர்களின் ஆதிக்கத்தை நீடிக்கச்செய்யும் என்ற நினைப்பைத்தான் அண்ணா பிரதிபலித்தார் என்கிறார் பி.ராமமூர்த்தி. "சுதந்திரம் கிடைப்பதற்கு முன்புவரை அதுதான் அவர் உணர்வாக இருந்தது. அவருடைய நடவடிக்கைகளிலும் எழுத்துகளிலும் இதற்கு மாறாக எதுவும் காணமுடியவில்லை. 1944-ல் ஈ.வெ.ரா. பிரிட்டிஷார் தொடர்ந்து இங்கேயே இருக்க வேண்டும் என்று கூறியபோது, அண்ணா அதை ஆட்சேபிக்கவில்லை" என்கிறார். பி.சி.கணேசனோ, "அண்ணா சரியான தருணத்துக்காகக் காத்திருந்தார்" என்கிறார். பி.ராமமூர்த்தியோ "1946-ல் பெரியார், பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவின் மற்ற பகுதிகளிலிருந்து போனாலும், சென்னை ராஜதானியிலிருந்து போகக் கூடாது என்று மகஜர் ஒன்றை சென்னை கவர்னரிடம் கொடுத்தபோதும் அண்ணாதுரை அவரைவிட்டுப் பிரியவில்லை. அந்த மகஜருக்கு ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை" என்று குறை கூறுகிறார். "இதுபோன்ற கேள்விகளை மற்றவர்களைப் பார்த்துக் கேட்பது சுலபம். ஒரு தலைவரிடமிருந்து கருத்து வேறுபட்ட உடனேயே அவரை விட்டுப் பிரிவதென்பது சாத்தியமில்லை. அதைச் செய்யக் காலம் கருதிக் காத்திருந்தார் என்பதுதான் உண்மை" என்று கணேசன் பதிலளிக்கிறார்.

சுதந்திரம் கிடைக்க இருந்த நேரத்தில், அண்ணா இப்படி வெளிப்படையாக மாறுபட்டு இருக்காவிட்டால், அது சரித்திரத்தில் களங்கமாக இடம்பெற்று, மாறா கறும்புள்ளியைச் சேர்த்திருக்கும். சில வருடங்களாகவே சுதந்திரம் பற்றிய பேச்சு கேட்டுக் கொண்டிருந்தது. ஆனால், சுதந்திரம் என்பது இப்போதுதான் நிச்சயமாயிற்று. தியாக சரித்திரத்தைக் கொண்ட பெரியாரைப் போல அல்லாமல், அண்ணா சரித்திரத்தின் தவறான பக்கங்களில் இடம்பெற்றால் அவரது பொதுவாழ்க்கை முடிந்தது என்று பொருள். ஈ.வெ.ரா.வின் காங்கிரஸ் தியாகமோ அல்லது அரசியலிலிருந்து விலகி இருக்கும் ஆசையோ அண்ணாவுக்கு இல்லை. என்றாலும் பெரியாரைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றியவர்களிடையே, அண்ணாவின் குரல் மட்டும் தனித்து

ஒலித்தது. தாக்கிய பலரில் பட்டுக்கோட்டை அழகிரி தனிப்பட்ட முறையில் அண்ணாவைத் தரக்குறைவாகப் பேசினார். அண்ணாவும் வெகுசிலருமே திராவிட இயக்கத்தில் இப்படி மலிந்திருந்த தரக்குறைவான பேச்சு முறையைத் தவிர்க்க முடிந்தது. அந்த நாளில் 'அஞ்சா நெஞ்சன்' அழகிரி மட்டுமே புகழ்பெற்ற பேச்சாளராக இருந்தார். ஆனால், அவரும்கூட அண்ணாவின் புகழைக் கண்டு அத்தனை மகிழ்ச்சியடையவில்லை. அண்ணாவின் மனது மிகவும் புண்பட்டிருந்தது. அண்ணாமலைப் பல்கலைக்கழக, பட்டமளிப்பு விழா மண்டபத்தில், மதியழகன் தலைமையில் 23.9.1947 அன்று 'நிலையும் நினைப்பும்' என்ற தலைப்பில் அண்ணா ஆற்றிய தொடக்க விழா சொற்பொழிவில், 'கொஞ்சநாளாக அரசியலிலேயே அலுப்புத்தட்டியவன் நான்' என்றார்.

அண்ணா தண்டனையை எதிர்பார்த்தார்; பெரியாரோ தன் சீடனின் கீழ்ப்படியாமையைப் பொறுத்துக் கொண்டார். எனினும் பெரியாரின் விசுவாசிகள் அண்ணாவின் செயலை 'நம்பிக்கைத் துரோகம்' என்று கருதினார்கள். பத்திரிகையாளரும், பெரியாரின் உதவியாளருமான ஜே.வி.கே, ''அண்ணாவின் பின்னால் ஓர் இளைஞர் படையே இருந்ததால், பெரியார் அவரை வெளியேற்ற விரும்பவில்லை'' என்கிறார். துணிச்சலோடு எதிர்நிலையை எடுத்திருந்தாலும், பெரியாரை விட்டு விலக அண்ணாவுக்கு தைரியம் பிறக்கவில்லை. சூழ்நிலை மிகவும் இறுக்கமாக இருக்க, அண்ணா கட்சி மற்றும் பிற பொது நடவடிக்கைகளிலோ, பொதுக்கூட்டங்களிலோ கலந்துகொள்ளாமல், எழுதுவதிலேயே கவனம் செலுத்தினார். 'திராவிட நாடு' இதழில், தாம் விலகவில்லை என்றும், ஒதுங்கி இருப்பதாகவும் ஒரு கேள்விக்குப் பதில் எழுதியிருந்தார். இருந்தபோதும், 1947 செப்டம்பர் 13 அன்று பெரியாரின் பிறந்த நாளையொட்டி அவருடைய தலைமையையும் அவர் அளித்த பயிற்சியையும் புகழ்ந்து, 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?' என்ற தலைப்பில் கட்டுரை வரைந்தார். ஆனால் கட்டுரையில் தலைவர் தம் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகவேண்டும் என்று கோடிகாட்ட அவர் தயங்கவில்லை.

> இவ்வளவு நீண்டகாலம் பொதுவாழ்வில் இருக்கும் வாய்ப்பு ஒருசிலருக்கே கிடைத்திருக்கிறது. ஆச்சாரியார் (ராஜாஜி) ஓர் எடுத்துக்காட்டு. ஆனால், அவருடைய பொதுவாழ்விலோ ரோஜா அதிகம்; முள் குறைவு. பெரியாருக்கோ கள்ளி, காளான் நிறைந்த பாதையிலே நடந்துசென்று புதுக்கழனி தேடுவது போன்ற பொது வேலை. இதிலே அவர்

இவ்வளவு நீண்டகாலம் ஈடுபட்டிருப்பது, ஆச்சாரியார் இருப்பதைவிட விசேஷமான சம்பவம் என்பதில் ஐயம் இல்லை. பெரியாருக்குக் கிடைத்திருப்பதைப் போன்ற ஆர்வம் மிக்க இளைஞர்கள், திராவிடத் தலைவர்களிலே வேறு யாருக்கும் கிடைத்ததில்லை. 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' என்று மனோன்மணிய ஆசிரியர் (பேராசிரியர் சுந்தரம் பிள்ளை) கூறியதுபோல, பெரியார் நம்பிக்கையுடன் கூறலாம்; கூறவேண்டும். அவருக்கு இனியும் ஓயா உழைப்பா? இத்தனை வயதிலும் இப்படி இடுப்பொடியப் பாடுபடுவதா? அவருடைய பெரும் படைக்கு அவர் பொறுப்பும் ஆசியும் அளித்து அனுப்பவேண்டும் - 'இன்னின்ன செயலைப் புரி' - என்று.

இந்தப் புகழ் கட்டுரை சூழ்நிலையின் கசப்பை மாற்றவில்லை. இதற்கிடையில் கறுஞ்சட்டை விவகாரம் மீண்டும் உயிர்பெற்று உறவுக்கு மேலும் உலைவைத்தது. காங்கிரஸ் நிர்வாகம் கறுஞ் சட்டை அமைப்பு மீது 1.3.1948 அன்று தடை விதிக்க அதற்கும் எதிர்வினையான பெரியாரின் சொற்பொழிவு, அண்ணா கறுஞ் சட்டை பற்றி எழுப்பிய பிரச்னைக்கும் பதிலாக அமைந்திருந்தது:

ஏனப்பா கறுஞ்சட்டை அணிந்துகொள்கிறீர்கள் என்று கேட்டால், நான் என்னமோ சட்டப்படி, சாஸ்திரப்படி சூத்திரனாம். பார்ப்பானின் தாசி மகனாம்; அப்படி இருக்க எனக்கு இஷ்டமில்லை. அது எனக்கு அவமானமாக, துக்ககரமானதாக இருக்கிறது. அதைப் போக்கிக்கொள்ள முயற்சி செய்வேன் என்பதன் அறிகுறியாக இதை அணிந்து கொள்கிறேன்.

யாராவது, என்னடா இழவுக்குப் போகிறவன் மாதிரி கறுப்பு உடை அணிந்திருக்கிறாயே, அல்லது நீ என்ன திருட்டுப்பயலா என்று கேலி செய்தால், இது ஒன்றும் அப்படியல்லப்பா. இழிவுப் போக்கு முயற்சியின் அறிகுறிதானப்பா இந்தக் கறுப்புச்சட்டை. கறுப்புடை அணிந்து கொள்வதற்காக என்னை சாவுக்குப் போகிறவன் என்றோ, திருடப்போகிறவன் என்றோ கூறினால், கறுப்புடை அணிந்து கோர்ட்டுக்குச் செல்லும் வக்கீல்களெல்லாம் என்ன, இழவுக்கா

போகிறார்கள்? அல்லது திருடத்தான் போகிறார்களா? கோர்ட்டில் கறுப்புடை அணிந்து நீதி வழங்கும் நீதிபதிகள், வெயிலுக்குக் கறுப்புக் குடை பிடித்துச் செல்வோர், பள்ளி ஆசிரியர் இவர்கள் எல்லாம் என்ன, இழவுக்குப் போகிறார்களா? கறுப்புடை அணிந்து பட்டம் பெறும் பட்டதாரிகள் எல்லாம் திருட்டுத்தனத்துக்காகவா பட்டம் பெறுகிறார்கள்? என்றெல்லாம் கேளுங்கள் என்று கூறினோம்.

இதையடுத்து, தூத்துக்குடியில் 1948, மே 8, 9 தேதிகளில் திராவிடர் கழக மாநாடு நடைபெற்றது. பத்தாயிரக்கணக்கான தொண்டர்கள் கறுஞ்சட்டை அணிந்து வந்து கலந்துகொண்டார்கள். அண்ணா வரவில்லை. பெரியாரின் புகழ்பாடும் நடிகவேள் எம்.ஆர்.ராதா அண்ணாவைக் கண்டனம் செய்து பேசினார். மற்றவர்களும் சளைக்கவில்லை. பெரியாரேகூட மறைமுகமாக, அண்ணாவைக் குறிப்பிடுகிற மாதிரி, ''தங்களின் முக்கியத்துவத்துக்காகவும், தங்களை வளர்த்துக்கொள்ளவும், தங்கள் சுயநலத்துக்காகவும் கழகத்தில் இருப்பவர்களைப் பார்த்து ஏமாந்து போய்விடாதீர்கள்" என்றார். தொடர்ந்து, கழக எழுத்தாளர் ஏ.வி.பி. ஆசைத்தம்பியை 'அறிஞர்' என்று விளித்தார்.

என்னைப் பொறுத்தவரையில், என்னைப் பின்பற்றி நடந்துவருபவர்கள் புத்திசாலிகளாக இருக்கவேண்டும் என்ற கவலை எனக்கு ஒரு சிறிதும் கிடையாது. தங்கள் அறிவை, ஆற்றலை, மறந்து என் லட்சியத்தை நிறைவேற்றிக் கொடுக்கக்கூடிய ஆண்கள்தான் எனக்குத் தேவையே ஒழிய, அவர்கள் புத்திசாலிகளா, முட்டாள்களா, பைத்தியக்காரர்களா, கெட்டிக்காரர்களா என்பது பற்றி எனக்குக் கவலை இல்லை.

நீங்கள் இந்த இயக்கத்தில் உள்ளவரை, உங்கள் சொந்தப் பகுத்தறிவை மட்டுமல்ல, உங்கள் மனசாட்சி என்பதைக்கூட மூட்டை கட்டி வைத்துவிட வேண்டியதுதான். கழகத்தில் சேரும் முன்பு நீங்கள் உங்கள் பகுத்தறிவு கொண்டு கழகக் கோட்பாடுகளை எவ்வளவு வேண்டுமானாலும் ஆராய்ந்து பார்க்கலாம்; என்னுடன் வாதாடலாம்.

மனசாட்சியோ, சொந்த பகுத்தறிவோ, கழகக் கொள்கையை ஒப்புக்கொள்ள மறுக்குமானால் உடனே விலகிக் கொள்வதுதான் முறையே ஒழிய,

> உள்ளிருந்துகொண்டே குதர்க்கம் பேசித் திரிவது என்பது விஷமத்தனமே ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.
>
> சிலருக்கு நான் ஏதோ சர்வாதிகாரம் நடத்த முற்படுகிறேன் என்று தோன்றலாம். இது ஓரளவுக்கு சர்வாதிகாரம்தான் என்பதையும் ஒப்புக்கொள்கிறேன். என்னுடைய சர்வாதிகாரத்தைக் கழக லட்சியத்தின் வெற்றிக்காக, பொது நன்மைக்காகப் பயன்படுத்துகிறேனே ஒழிய எந்த சிறு அளவுக்கும் எனது சொந்தப் பெருமைக்காகவோ, ஒரு கடுகு அளவாவது எனது சொந்த நன்மைக்காகவோ பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதை நீங்கள் ஆராய்ந்து பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டுகிறேன்.

இதைவிட வெளிப்படையாக அண்ணாவைப் பற்றி பெரியார் சொல்லி இருக்க முடியாது.

அப்படியும் பெரியாரின் சினம் குறையவில்லை. 'அண்ணாவைப் பற்றிய பேச்சு காதில் விழுந்தாலே எரிச்சல் அடைந்துவிடும் நிலையிலேயே இருந்தார்' என்கிறார் மறைமலையான். 'அண்ணா ஏன் வரவில்லை?' என பெரியாரிடம் மாநாட்டில் கேட்கப்பட, எரிச்சலுற்ற பெரியார்:

"முத்தன் ஏன் வரவில்லை? முருகன் ஏன் வரவில்லை? அப்புறம் எம்.எஸ்.சுப்புலட்சுமி ஏன் வரவில்லை? சுந்தராம்பாள் ஏன் வரவில்லை? என்று கேட்பீர்கள் போல இருக்கிறதே!" என்றாரே பார்க்கலாம்.

பிளவை இணைத்த இந்தி

இந்த உரசல் ஒருபுறம் இருந்தபோதும், ஜூன் 1948-ல் பள்ளிகளில் முதல் மூன்று வகுப்புகளில் இந்தி கட்டாய பாடமாக நுழைந்து, 'தந்தை'யையும் தனயனையும் மீண்டும் ஒருமுறை இணைத்தது. இந்தி எதிர்ப்பு மறியலைத் தொடங்கும் முதற்படைத் தலைவராக அண்ணாவை பெரியார் நியமித்தார். ஜூலை 1948-ல் சென்னையில் நடந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டில் ஈ.வெ.ரா. கூறினார்:

> இது கடைசிப் போராட்டம். வெற்றி அல்லது தோல்வி; இரண்டில் ஒன்று பார்த்துவிடத்தான் வேண்டும். பண்டைப் பெருமை பேசிப் பயனில்லை. தோழர் அண்ணாதுரை, 'நானும் வந்துவிட்டேன் போராட்டத்தில் முன் நிற்க' என்று சற்றுமுன் கூறியது

போல நீங்கள் எல்லோரும், இந்த திராவிட நாட்டிலுள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும், சிறுவனும் சிறுமியும் முன்வர வேண்டும். நமது பிரிவினை உணர்ச்சியை ஒழிக்கத்தான் அவசர அவசரமாக இந்தியைக் கொண்டு வந்து புகுத்துகிறார்கள். இது எல்லோரும் ஒன்று சேரக்கூடிய நல்வாய்ப்பாக இருக்கிறது.

இந்தி எதிர்ப்பு தற்காலிகமாக நிலைமையைச் சீராக்கி, பெரியாரிடம் மன மாற்றத்தை உண்டாக்கியது. 1948 அக்டோபர் 23, 24 தேதிகளில் தன் சொந்த ஊரான ஈரோட்டில் இரண்டு நாள் திராவிடர் கழக சிறப்பு மாநாட்டுக்கு அண்ணாவைத் தலைமைதாங்க அழைத்தார். ஈரோடு நகராட்சி அண்ணாவுக்கும், திரு.வி.க.வுக்கும் வரவேற்பு அளிக்கவும் ஈ.வெ.ரா. ஏற்பாடு செய்திருந்தார். நெகிழ்ந்துபோன அண்ணா எழுதினார்:

எனக்கு இத்தகைய வரவேற்புகளைப் பெறும்போது உடல் சிலிர்ப்பதில்லை. ஒரே ஒருமுறை, என் உடல் சிலிர்த்ததுண்டு - அது, மீண்டும் திரும்பி வர முடியாத 'அந்தக் காலத்தில்' - ஈரோடு நகராட்சி மன்றத்தின் வரவேற்பு எனக்கு அளிக்கப்பட வேண்டும் என்று பெரியார் முன்னின்று நடத்திய விழா ஊர்வலமாக, பழைய கோட்டைக் காளைகள் பூட்டிய வண்டியிலே நான் அமர்ந்துகொண்டிருக்க, வெண்தாடி காற்றினிலே அசைந்தாட, திராவிடச் செங்கோலாகிடத் தக்க வலிவு பெற்ற கைத்தடியை ஏந்திக் கொண்டு, அரிமா நோக்கு இதுதானோ என்று எவரும் எண்ணிடத்தக்க தனியானதோர் பார்வையை இப்புறமும் அப்புறமும் செலுத்திக் கொண்டு, பெரியார் ஊர்வலத்தில் நடந்து வந்தபோது, அன்று உள்ளபடி எனக்கு மேனி சிலிர்த்தது. இப்போது, மேனி சிலிர்த்திடுவது இல்லை! நன்றிகொள் உள்ளம் உண்டு!

மாநாட்டில் உற்சாகம் கரைபுரண்டோடியது. 'விடுதலை' ஆசிரியர் குத்தூசி குருசாமி, கூடியிருந்த மக்கள் திரளைக் கண்டு, 'காங்கிரஸ் கட்சியை அடுத்த தேர்தலில் முறியடிக்க முடியும்!' என்றார். ஈ.வெ.ராவோ அண்ணாவைத் தன் வாரிசு என்று மாநாட்டில் அறிவித்து மாநாட்டை வரலாற்றில் இடம்பெறச் செய்தார்.

இந்த மாநாட்டுக்கு நம் அருமைத் தளபதி அண்ணாதுரை அவர்களின் பெயர் தலைமைப்

பதவிக்கு பிரேரேபிக்கப்பட்டுள்ளது. எண்ணற்ற வாலிபர்கள் அவரே தலைவராக வேண்டுமென்று ஆசை கொண்டிருந்தனர். வரவேற்பு கமிட்டியினரும் ஆசைப்பட்டனர். ஆகவே, வரவேற்பு கமிட்டியார் என்னைக் கேட்டபோது நான் மகிழ்ச்சியோடு ஒப்புக்கொண்டேன். தலைமை வகிக்க அவரும் மகிழ்வுடன் ஒப்புக்கொண்டுள்ளார். அவரை நான் உங்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமில்லை. அவர் இந்தி எதிர்ப்புப் போரில் எவ்வளவு ஆர்வத்துடன் பணியாற்றி வருகிறார் என்பதும், அவர் இளைஞர் மனதை எவ்வளவு தூரம் தன்னிடத்தே இழுத்துக் கொண்டுள்ளார் என்பதும் உங்களுக்குத் தெரியும்.

எனவே சாவியையே கொடுத்துவிடுவோம். அவர்களுக்கு உரிமையாக இருந்தது இவருடைய பேச்சும் எழுத்தும்தான்.

என்னுடைய பொறுப்பை ஓர் இளைஞரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று நெடுநாளாகவே எனக்கு ஆசை இருந்து வந்திருக்கிறது. பெட்டிச் சாவி என்னிடம் இருந்தால் ஆபத்து ஒன்றுமில்லை, பந்தோபஸ்துக்கு ஒன்றும் பங்கம் ஏற்பட்டுவிடாது. இருந்தபோதிலும், எத்தனை நாளைக்கு நாமே வைத்திருப்பது என்ற அலுப்பு ஏற்பட்டுவிடுகிறது. எனவே, சாவியைக் கொடுத்துவிடுவோம். அவர்களுக்கு உரிமையானதை நாம் ஏன் 70 வயது தாண்டியும் சுமந்து திரியவேண்டும் என்கிற எண்ணம் ஏற்பட்டு விட்டது. வயது ஆக ஆக தளர்ச்சி அதிகமாகிக்கொண்டு வருகிறது. இனி ஜெயிலில் நல்ல இடம் பார்த்துக் கொண்டு ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டியதுதான். இனியும் வெளியில் அலைந்து கொண்டு இருப்பேனாகில், அது சுத்த பைத்தியக்காரத்தனமாகவே ஆகிவிடும் என்று உணர்ந்து, உரிமையாளரிடம் சாவியை ஒப்படைக்க முடிவு கட்டிக்கொண்டேன். இதை நீங்களும் முழு மனதுடன் ஆதரிப்பீர்கள் என்றே நினைக்கிறேன்.

அண்ணா சொன்னார்:

பெரியார் அவர்கள் பெட்டிச் சாவியை என்னிடம் ஒப்படைப்பதாகத் தெரிவித்தார். பொறுப்புள்ள

மகனிடம் பெட்டிச் சாவி அளிக்கப்பட்டால், அவன் சாவி கிடைத்ததே என்று தாறுமாறாகவோ, அவசியம் இல்லாதபோதோ அதை உபயோகித்துக் கொண்டிருக்க மாட்டான். திறக்கும்போதெல்லாம் தந்தையைக் கேட்டுக்கொண்டுதான் திறப்பான். தனக்கு வயது வந்தபிறகும், சாவி தந்தையிடமே இருந்தால், எவ்வளவு சாதுவான மகனுக்கும் கொஞ்சம் அருவருப்பு ஏற்படுவது சகஜம்தான். இருந்தாலும் அப்படியொன்றும் கிளர்ச்சி செய்தவன் அல்ல நான். மேலும், இயக்கப் பணப் பெட்டியின் சாவியை அவர் என்னிடம் அளித்ததாக நான் கருதிக்கொள்ளவில்லை.

அண்ணாவுக்கும் டி.கே.சீனிவாசனுக்கும் இடையில் நடந்த உரையாடல் இங்கு குறிப்பிடத்தக்கது.

இரவு நேரங்களில் திருச்சியிலிருந்து சென்னைக்கோ, காஞ்சிபுரத்துக்கோ செல்லும் ரயில் வண்டிகள் அனைத்துமே, இப்போது போலவே அப்போதும் துரித வண்டிகள்தாம். அவற்றில் ஏறிச்செல்லக் காத்திருப்போர் ஏராளமாக இருப்பார்கள். வண்டி வந்து நின்றதும் எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு உள்ளே நுழையும் முயற்சியில் ஈடுபடுவார்கள். இவரோ எல்லோருக்கும் கடைசியில் நின்றுகொண்டு அவர்கள் ஏறுவதைப் பார்த்தபடி இருப்பார். நான்தான் ஜன்னல் வழியாக ஏறி உள்ளே குதித்து அதன் அருகிலேயே அமர்ந்துகொள்வேன். வண்டியில் எல்லோரும் தங்களைத் திணித்துக்கொண்ட பிறகு, இவர் உள்ளே வந்து நான் பிடித்து வைத்திருக்கும் இடத்தில் அமர்ந்துகொள்வார். நானும் உள்ளே நுழைந்த வழியாகவே குதித்துவிடுவேன்.

இதைப்பற்றி ஒருநாள் நாங்கள் இருவரும் உரையாடிக்கொண்டு இருந்தபோது, நான் குறிப்பிட்டேன். 'இப்படியே இருந்தால் எங்கேயும் இடம் கிடைக்காது; நின்றுகொண்டே போகவேண்டியதுதான்!' இது நான் எதிர்பாராமலே இருபொருளில் அமைந்துவிட்டது. இதற்கு அவர் பதிலளித்தார்: 'அரசியலில் உன்னுடைய முறை வரும்வரை காத்திருக்க நீ கற்றுக்கொள்ளவேண்டும்.'

இலவுகாத்த கிளியானது அண்ணாவின் கதை. 1949 ஜனவரி 2-ம் தேதி, திருச்சி மாவட்ட திராவிடர் கழக மாநாட்டில் பங்கு கொண்ட பெரியார் சொன்னார்: 'நெருப்பு சுடாமல் குளிர்ச்சியாக மாறலாம்; வேப்ப எண்ணெய் தேனாக மாறலாம்; ஆனால் பதவி ஏற்றவன் யோக்கியனாக இருக்கமுடியாது' என்றார். ஈ.வெ.ரா. தனக்குப்பின் இயக்கத்தை எப்படி எடுத்துச் செல்வார் அண்ணா என சந்தேகப்படத் தொடங்கியிருந்தார். திரைக்கதை ஆசிரியராக அண்ணா வெற்றி சூடிக்கொண்டு இருந்தது வேறு அவரது சந்தேகத்தை அதிகப்படுத்தி இருந்திருக்கும். முழு நேரமும் இயக்கத்துக்கு உழைப்பாரா, சமூக இயக்கமாகவே இயக்கத்தை வைத்திருப்பாரா என்றெல்லாம் தோன்றியிருக்க வேண்டும்.

வேலைக்காரி

அரசியல் கதவு மூடிக்கொண்டதும் திரையுலகக் கதவு அண்ணாவுக்குத் திறந்து வழிவிட்டது. தமிழ்த் திரையுலகைப் புரட்டிப் போட்டது அண்ணாவின் நுழைவு. மந்திர சக்தி வாய்ந்த அண்ணாவின் வசனங்கள், சினிமாவின் சக்தியைக் கூட்டின. அண்ணாவும் அவர் தம்பியரும் சமூக - அரசியல் பிரசாரத்துக்கான களமாக சினிமாவை மாற்றிக் கொண்டார்கள்.

அறிவும், அழகும் நிரம்பிய எழுத்து மட்டுமே அண்ணாவுக்குப் புகழ் தேடித்தரவில்லை. தன் நிலைமையே ஸ்திரத்தன்மை இல்லாதபோதும், கே.ஆர்.ராமசாமி போன்ற தம்பியருக்கு தோள்கொடுக்கும் அபூர்வ பண்பு, அண்ணாவிடம் இருந்தது. அண்ணா எழுதிய 'வேலைக்காரி'யின் பட உரிமையை ஜூபிடர் பிக்சர்ஸார் வாங்கியிருந்தனர். ஆனால் நாடகத்தில் நடித்த கே.ஆர்.ராமசாமி மென்மையான பாத்திரங்களை மட்டுமே செய்ததால் கதாநாயகன் வேடத்துக்கு பொருத்தமானவர் அல்ல என்ற முடிவுக்கு ஜூபிடர் பிக்சர்ஸார் வந்திருந்தனர். இயக்குனர் ஏ.எஸ்.ஏ.சாமியிடம், "ராமசாமி நடிக்கமுடியாத பாத்திரம் ஏதும் இல்லை. அவர் கதாநாயகனாக நடிப்பார் என்பதாலேயே நான் சம்மதித்தேன். அவர் கதாநாயகனாக நடிக்கவில்லை என்றால், நீங்கள் 'வேலைக்காரி'யைப் படமாக்க வேண்டாம்!" என்று அண்ணா தெளிவாகக் கூறிவிட்டார். தம்பிகளிடம் அவர் வைத்திருந்த நேசமும், பாசமும் அத்தகையதாக இருந்தது. இது மட்டும் அல்ல.

அண்ணா வசனம் எழுத கோவையில் ஒரு பெரிய பங்களாவை ஏற்பாடு செய்தனர். அதிர்ச்சியடைந்த அண்ணா, 'நான் ஏ.எஸ்.ஏ.சாமியுடனே தங்குகிறேன்' என்றார். தனது

எளிமையைப் போன்றே எழுத்தின் வேகத்திலும் சாதனை படைத்தார் அண்ணா. ஒரே வாரத்தில் ஆயிரம் பக்கங்களை எழுதி, சாமியைத் தவிக்கவிட்டார். ஏ.எஸ்.ஏ.சாமி சொன்னார்:

> இரவு உணவு உண்டபிறகு அண்ணா ஜமக்காளம் ஒன்றில் உட்கார்ந்து, தலையணையை மடியில் வைத்துக்கொண்டு, எழுத ஆரம்பித்துவிடுவார். ஒரு பிளாஸ்க் நிறைய தேநீர், வெற்றிலை - பாக்கு, பொடி இவைதான் அவருக்கு வேண்டும். நான் அவருடன் நிறைய காகிதங்களோடு பேனாவையும் வைத்துக்கொண்டு உட்காருவேன். அண்ணா எழுத ஆரம்பிப்பார். அந்த அமைதியான இரவில், பேனா முனை, காகிதத்தில் உராயும் ஓசை மட்டுமே தொடர்ந்து கேட்கும். எழுதும்போது அவர் யோசிப்பதற்காகத் தயங்கியதோ, நிறுத்தியதோ இல்லை. காலை இரண்டு அல்லது மூன்று மணி வரை எழுதுவார். காலையில் பார்த்தால் நூறு முதல் இருநூறு பக்கங்களுக்கு வசனம் தயாராக இருக்கும். இப்படி அவர் ஒரு வாரத்துக்குள் வசனம் எழுதி முடித்துவிட்டார். ஆயிரம் பக்கங்களுக்கு மேல் அவர் எழுதியிருந்தார்.

'எதை விடுவது, எதை வைத்துக்கொள்வது என்று எனக்குச் சிக்கலாகிவிட்டது. காரணம், மொத்த வசனமுமே சிறப்பாகவும், அர்த்தமுள்ளதாகவும் இருந்தது' என்றார் சாமி. காலத்தால் அழியாத அண்ணாவின் வசனங்களைக் கேட்கும் வாய்ப்பை 'வேலைக்காரி' அளித்தது: 'கத்தியைத் தீட்டினாயே ஒழிய, புத்தியைத் தீட்டவில்லை நீ; சட்டம் என்பது இருட்டறை; அதிலே வக்கீலின் வாதம் ஒரு விளக்கு. ஏழையால் அந்தப் பிரகாசமான விளக்கைப் பெறமுடியாது'. 'வேஷமணியாத வேதாந்தி; மோசம் செய்யாத மாது; ஜோடி இல்லாத மாடப்புறா; சேடி இல்லாத ராஜகுமாரி இருக்க முடியாதாம்'; 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்' என்ற அவரது வசனங்கள் சாகா வரம் பெற்றவை.

'வேலைக்காரி' முதலில் எழுதப்பட்டது என்றாலும், 'நல்லதம்பி' கதைவசனம் சி.என்.அண்ணாதுரை என்று காட்டி அதற்கு முன்னர் வெளிவந்தது என்.எஸ்.கிருஷ்ணனும் எஸ்.வி.சகஸ்ரநாமமும் 1936-ல் வெளியான 'மிஸ்டர் டீட்ஸ் கோஸ் டு டவுன்' என்ற திரைப்படத்தைப் பார்த்திருந்தார்கள். அதேபோன்ற ஒரு கதை தங்களுக்கு வேண்டும் என்று அண்ணாவிடம் கேட்டார்கள் 1949 பிப்ரவரி 2, அன்று அண்ணாவின் 'நல்லதம்பி' திரையிடப்பட்டது ஒரு லட்சியவாதியான நல்லதம்பி தன்

கருத்துகளை மக்களிடம் சிரிக்கச் சிரிக்கச் சொல்லி சிந்திக்கவைப்பவர். அவருக்கு அதிர்ஷ்டம் அடித்து, ஜமீன்தார் ஆகிவிடுகிறார். அரண்மனையிலிருக்கும் பெண்ணையும் திருமணம் செய்துகொண்டு விடுகிறார். புதிய பட்டத்தையோ, செல்வத்தையோ, பெண்ணையோ ஆசைப்படாததால், தன் கருத்தைப் பரப்பவும் பணத்தை எல்லாம் தானம் செய்யவும் விரும்புகிறார். 'நல்லதம்பி' தாய்க்கும் மகளுக்கும் ஒரே ஒரு சேலை மட்டும் இருந்ததால், இருவரும் சேர்ந்து வெளியே வந்து, எப்படி ஒருவரை வரவேற்க முடியாமல் போயிற்று என்று வறுமையின் கொடுமையைக் காட்டியது. 'நல்லதம்பி' முன்னால் நடந்ததை சொல்லி, ஃபிளாஷ்பேக் கதை உத்தியில் ஜமீன்தார்களை, அவர்கள் வாழும் பகட்டான வாழ்க்கையை, ஏழைகள் படும் பாட்டை, குறிப்பாக ஏழைப் பெண்கள் படும் அவதியை, சமூகத்தின் மேல்தட்டு மக்களின் இரட்டை வேடத்தை எல்லாம் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தது.

முற்போக்கு சிந்தனைகளைத் தாங்கியிருந்தும் அண்ணாவின் கதையை 'நல்லதம்பி' முழுதும் பிரதிபலிக்கவில்லை. அண்ணா படத்தைப் பார்த்துவிட்டு, 'கிந்தனார் கதைக்கும், மதுவிலக்கு பிரசாரத்துக்கும் இடையே என் கதை கெட்டிக்காரத்தனமாக அடைக்கப்பட்டுவிட்டது' என்றார். இருந்தாலும் 'நல்லதம்பி' அண்ணாவின் பெருந்தன்மையையும், நட்புக்கு இலக்கணமாக இருந்ததையும் காண்பித்தது. அண்ணா திரைக்கதை - வசனம் எழுதியிருந்தாலும், கதாநாயகரும் தயாரிப்பாளருமான என்.எஸ். கிருஷ்ணனிடமிருந்து கடைசிவரை அதற்காக சம்பளம் பெற்றுக்கொள்ள வில்லை!

தாராள குணத்துக்குப் பெயர்போன என்.எஸ்.கே தன் பங்குக்கு ஒரு புத்தம் புதிய ஹிந்துஸ்தான் காரையும், கூடவே ஒரு டிரைவரையும் அண்ணாவின் வீட்டுக்கு அனுப்பிவைத்தார். டிரைவருக்கான சம்பளத்தையும், பெட்ரோல் மற்றும் பராமரிப்புச் செலவுகளையும் தானே ஏற்றுக்கொள்வதாகக் கூறிவிட்டார். ஆனால் அண்ணாவிடம் அந்த கார் தங்கவில்லை!

நடந்ததை அரங்கண்ணல் சொல்கிறார்:

> கலைவாணருக்கோ 'நல்லதம்பி'க்கு அடுத்ததாக இன்னொரு படம் தயாரிப்பில் இருப்பதாக விளம்பரம் செய்யவேண்டிய நிலை. சினிமா தயாரிப்பாளர்கள் ஒரு படம் முடிந்து அதனுடைய வரவும் - செலவும் கணக்குப் போட்டுப் பார்த்தால், இன்னொரு படம் எடுப்பதாக அறிவிப்புச் செய்தால்தான் தப்பமுடியும்.

தாராளமான கலைவாணரின் என்.எஸ்.கே 'பிலிம்'ஸைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்! 'வட்டியூர்' வலையில் அது சிக்க ஆரம்பித்த நேரம். அதனால், கார் அனுப்பிய சில நாட்களுக்கெல்லாம் பத்திரிகைகளில் 'தம்பிதுரை' என்ற படத்தயாரிப்பில் தாம் ஈடுபட்டு இருப்பதாகவும், அண்ணா கதை, வசனம் எழுதுவதாகவும் விளம்பரப்படுத்தி விட்டார்கள். தனக்கு, அண்ணா மறுக்கமாட்டார்; தனக்கு எழுதாமல் வேறு யாருக்கு எழுதுவார் என்கிற உரிமை எடுத்துக்கொண்டார் என்.எஸ்.கே.

தலைக்குமேல் தொல்லைகள் தொங்கிக்கொண்டு இருக்கும்போது, தன்னைக் கேட்காமல் என்.எஸ்.கே. விளம்பரம் செய்துவிட்டாரே என்று எங்களிடம் சொல்லிச் சங்கடப்பட்டுக் கொண்டார் அண்ணா. 'அவசரமாக ஏதாவது செய்து சங்கடப்படப் போகிறார் என்.எஸ்.கே' என்று கருதினார் அண்ணா. கழக வேலைகள் ஆரம்பித்துவிட்டால் எப்படியும் தன்னால் குறைந்தபட்சம் ஆறுமாத காலத்துக்கு சினிமா பக்கம் தலைக்காட்ட முடியாது என்று கருதினார். ஏற்கெனவே வெற்றிகரமாகப் படமெடுத்த 'வேலைக்காரி' தயாரிப்பாளர்களும், நண்பர்களுமான ஜூபிடர் சோமுவும், மொகைதீனும் அடுத்த படத்துக்காக வட்டமிட ஆரம்பித்தார்கள். இந்த நிலையில் மிகவும் கெட்டிக்காரரான ஏவி.மெய்யப்ப செட்டியார் அவர்கள் அண்ணாவின் 'ஓர் இரவு' நாடகத்தை விலைக்கு வாங்கி கே.ஆர்.ராமசாமி அவர்களை ஹீரோவாகப் போட்டுப் படத்தை ஆரம்பிக்கத் தயாராகிக் கொண்டிருந்தார். இந்தச் சூழ்நிலைகளை எல்லாம் விளக்கிச் சொல்லி, கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுமாறு என்.எஸ்.கே-விடம் சொல்லிவிட்டு வருமாறு தோழர் ஈ.வெ.கி. சம்பத்தை அண்ணா அனுப்பினார். மாலை நேரம். கலைவாணருக்கு அப்போதுதான் அவர் மறைவுக்கே காரணமான 'மாலை நேரப் பழக்கம்' அதிகமான சமயம். 'வட்டியூரி'ல் மாட்டிக் கொண்டு சீரழிவதே அதனால்தானே? 'வட்டியூர்' என்.எஸ்.கே.வைக் கொட்டிக் கொண்டிருந்தது சகோதரி டி.ஏ.மதுரமும் கூட இருந்திருக்கிறார்கள். அப்போது சம்பத் போய்ச் செய்தியைச் சொல்லிவிட்டு,

திரும்பி காஞ்சிபுரம் வந்தார். குடிபோதையில் இருந்த என்.எஸ்.கே. சரமாரியாக அண்ணாவை வசை பேசிவிட்டதை சம்பத் சொல்ல, அண்ணா மனம் வெதும்ப, உடனே காரை திருப்பித்தந்து விட்டார் அண்ணா. நல்லவேளையாக ஜூபிடர் பிக்சர்ஸார் கூடிய விரைவில் அண்ணாவுக்கு ஒரு புதிய ஹிந்துஸ்தான் காரை வாங்கி அனுப்பினர்.

'நல்லதம்பி' வெளியான இருபத்து மூன்று நாட்கள் கழித்து, 1949 பிப்ரவரி 25 அன்று, கதை - வசனம் அறிஞர் அண்ணாதுரை என்று டைட்டில் கார்டில் காட்டிய 'வேலைக்காரி' திரையிடப்பட்டது. அண்ணாவுக்கு 12,000 ரூபாய் சம்பளம். 'வேலைக்காரி' அண்ணாவுக்குப் பெரும் புகழைத் தேடித்தந்தது. எண்பது திரையரங்குகளில், 100 முதல் 150 நாட்கள் ஓடிய 'வேலைக்காரி', தமிழ் சினிமாவின் போக்கையே மாற்றியது. பிரசாரமே அண்ணாவின் எழுத்துகளில் பிரதானமாக இருந்தபோதும், இயக்கத்தின் நம்பிக்கைகளை வெகு சாமர்த்தியமாக நுழைத்து கூர்மையான, நறுக்குத் தெறிக்கும், சிந்தனையைத் தூண்டும் வசனங்களை புதிய அழகு தமிழ் நடையில் எழுதியிருந்தார். தனது ஊரில் 'வேலைக்காரி'க்கு கலைஞர் விளம்பர துண்டுப்பிரசுரம் எழுதியிருந்தார்: வேலைக்காரி - 'வெடிமருந்துத் தொழிற்சாலையில் வீசியெறிந்த தீப்பொறி!' என்ற கலைஞரின் விளம்பர வரி அண்ணாவின் வசனத்தைப் போலவே கவனத்தை ஈர்த்தது.

ரசிகர்களுக்கு அபூர்வ விருந்து படைத்து, திரைப்பட வசனங்களின் போக்கையே மாற்றியமைத்து, தம்பிகளுக்கு வெற்றிப்பாதை அமைத்துக் கொடுத்தது வேலைக்காரி. 1937-ல் தன் முதல் படம் 'அம்பிகாபதி'யில் 'நல்ல' தமிழைத் திரையில் அறிமுகப்படுத்தி திரைக்கதை - வசனத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தவர் இளங்கோவன். அவருடைய 'கண்ணகி' (1942) இந்த புதிய போக்குக்கு முன்னோடியாக அமைந்திருந்தது.

சுவரொட்டிகளில் இயக்குனர், தயாரிப்பாளர், பெயர்களை அச்சிட்ட திரைப்பட உலகம், கதை - வசனகர்த்தா பெயரையும் சேர்த்து அச்சிடத் தொடங்கியதும், பாட்டுப் புத்தகங்களை மட்டும் வெளியிட்டுக்கொண்டிருந்த திரைப்பட உலகம் கதை - வசனப் புத்தகங்களை வெளியிடத் தொடங்கியதும் 'வேலைக்காரி'க்குப் பிறகுதான்.

அண்ணாவின் கதைகள் அன்றாட வாழ்க்கையைச் சுற்றிப் பின்னப்பட்டவை; அதில் வரும் பாத்திரங்கள் சாமானியர்கள். கதாநாயகனின் பக்திகூட பிராமணர் அல்லாதார் வணங்கும் காளி,

மாரியம்மன் போன்ற கடவுள்களோடு மட்டுமே இருந்தது. 'வேலைக்காரி'யின் கதாநாயகன் ஆனந்தன், காளி தீமைகளைப் பொறுத்துக் கொள்வதைக் கண்டு மனமுடைந்து, அவளுடைய சிலைக்கு முன் நின்றுகொண்டு, "ஏ காளி, உன்னையே முழுதும் நம்பியிருந்த என்னை ஏன் இப்படித் தவிக்கவிட்டாய்? ஒரு பாவி அணிவித்த பூமாலைகளால் உன்னை அலங்கரித்துக்கொண்டு இருக்கிறாயே!" என்று ஒரு சராசரி பக்தனாக அவளுடைய கருணையையும், அறவுணர்வையும் கேள்வி கேட்கிறான். ஆனந்தனின் வேதனை, இந்த நேர்மையற்ற, வேடதாரிகளின் உலகைக் குறித்து இருந்தது. அவன் காளி மீது கொண்டிருக்கும் பக்தி, அவளிடம் உரிமையோடு பேசச் செய்தது. ரசிகர்கள் இந்தக் காட்சியை மிகுந்த கவனத்தோடு பார்த்தார்கள். அவர்களுடைய தினசரி வேண்டுதல்களைப் போலவே ஆனந்தனின் வேண்டுதலும் ஆதங்கமும் இருந்தது அவர்களை மிகவும் ஈர்த்தது. அவர்களைப் போல அல்லாமல், துன்பம், துயரம், இழப்பு ஆகியவற்றை ஆனந்தன் சகித்துக்கொண்டாலும் இறுதியில் அவர்களுக்குப் பிடித்த மாதிரியே, வெற்றியடைகிறான். 'வேலைக்காரி' நீதிமன்றக் காட்சி ஒன்றை முதன் முறையாக அறிமுகப்படுத்தியிருந்தது. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, 'பராசக்தி' கதை உச்சகட்டமாகிப் பெரும் வெற்றியை ஈட்டியது.

அண்ணா, ஒரு போலி பூசாரியைப் பாத்திரமாக வைத்திருந்தாலும், ஒரு நல்ல மனிதனைச் சாகடிக்கும் அகங்காரம் பிடித்த, கொடூர ஜமீன்தாராக வேதாசல முதலியார் என்ற வில்லனைக் காட்டியிருந்தார். இறுதியில் ஜமீன்தார் வேதாசல முதலியார் மனம் திருந்தி செல்வமும், உயர்சாதி உணர்வும் ஒழிக்கப்பட்டு, 'ஒன்றே குலம் - ஒருவனே தேவன்' என்பதே பரப்பப்படவேண்டும் என்பார். தன் நாத்திக குருவைப் போலல்லாது 'ஒன்றே குலம் - ஒருவனே தேவன்' என்ற திருமூலர் வாக்கில் அண்ணாவுக்கு இருந்த உடன்பாட்டைச் சொன்னது வேலைக்காரி. எனினும், வேலைக்காரி நாத்திக பிரசாரம் செய்ததாகக் குறை எழ, 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி, 'இது எதிர்க்கப்பட வேண்டிய திரைப்படம் அல்ல. தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்ட மிகச்சிறந்த படங்களில் ஒன்று' என்றார். ஜெயகாந்தனோ, 'வேலைக்காரியில் எதுவும் இல்லை' என்று காய்ந்தார்.

மாறாக, புரட்சிகரமான சமூக சீர்திருத்தக் கருத்துகளை முதன் முதலில் தன் கதைகள் மூலம் வெளியிட்ட பெருமை அண்ணாவுக்கு உண்டு. அவருக்கு முன்னால், புராண இதிகாசக் கதைகளுக்குப் பெருமளவும், சமூக உணர்வுக்குச் சிறிது இடமுமே சினிமாவில் இருந்தது. விதிவிலக்காக சொர்ணலதா (1937) குடியின் கேட்டைப்

பற்றிச் சொல்லியது. 'கல்கி'யின் 'தியாகபூமி' கணவரின் கொடுமையை எதிர்த்து விவாகரத்து கோரும் துணிச்சலான மனைவியைப் பற்றியது. 'பக்த சேதனா' தீண்டாமைக் கொடுமையைச் சாடியது. 'சாந்தா' (1941) ஒரு பிராமணர் பிராமணர் அல்லாதவர் மீது கொள்ளும் காதலைக் காண்பித்தது. 'பைத்தியக்காரன்' விதவைத் திருமணத்தை ஆதரித்தது; வயதானவர் இளம் பெண்ணை மணப்பதை எதிர்த்தது.

கதைக்கருவில் புதுமையில்லை பழையவை, எல்லோரும் அறிந்தவையையே அவை சொல்லின. எதிர்பார்ப்பதற்கு ஏதுமில்லாமல் வசனங்களும் முன்பே கேட்டவையாக இருந்தன.

கதை, மக்களின் உணர்வையும், பக்தியையும் ஈர்த்ததே தவிர, அறிவைத் தூண்டவில்லை. கதாநாயகன் பாடுவார், பாடிக்கொண்டே இருப்பார். திரைப்படங்கள் அவரது பாடும் திறனுக்குக் களம் அமைத்துத் தந்தன. பாடவும் நடிக்கவும் தெரிந்த எம்.கே.டி.பாகவதரும், பி.யு.சின்னப்பாவும் அதனாலேயே மக்கள் மனத்தில் இடம் பிடித்தார்கள். ரசிகர்களுக்கோ தங்களின் கதாநாயகனும் கதாநாயகியும் திரையில் தோன்றினாலே போதுமானதாக இருந்தது.

அண்ணாவும் அவரைப் பின்பற்றியவர்களும் இந்தத் துறையில் நுழைந்த பிறகே திரைப்படங்கள் 'பயாஸ்கோப்' என்ற நிலையைத் தாண்டி, மக்கள் கதைக்காகவும் வசனத்துக்காகவும் படங்களுக்கு வந்தனர். சமுதாய உணர்வுகளை பிரதிபலிக்கும் திரைப்படங்கள் முன்பு தயாரிக்கப்பட்டிருந்தாலும், அண்ணாவும் தம்பிகளும் அதை ஒரு வழக்கமாகவே மாற்றியமைத்திருந்தனர்.

10

அண்ணா ஏமாந்தார்!



1949

மார்ச் 28 அன்று, சுயமரியாதை இயக்கத் தளபதி 'அஞ்சாநெஞ்சன்' பட்டுக்கோட்டை அழகிரி காசநோயால் காலமானார். அழகிரி மறைவு குறித்து பெரியார் எழுதும்போது, 'நண்பர் அழகிரிசாமி எனக்கு 30 ஆண்டு நண்பரும், என்னை மனப்பூர்வமாக நிபந்தனை இல்லாமல் பின்பற்றி வருகிற ஒரு கூட்டுப் பணியாளருமாவார். கொள்கை வேற்றுமை, திட்ட வேற்றுமை, என்பது எனக்கும் அவருக்கும் ஒருநாளும் காண முடிந்ததில்லை: அவருடைய முழு வாழ்க்கையிலும் அவர் இயக்கத் தொண்டைத் தவிர எந்தவிதத் தொண்டிலும் ஈடுபட்டதில்லை. அவருக்குப் போதிய பணமில்லை. பல காரணங்களால் பொருளாதார நெருக்கடி அடிக்கடி அவருக்கு ஏற்படுவது இயற்கையாக இருந்து வந்தாலும், ஒரு சமயத்திலும் விளையாட்டுக்குக்கூட கொள்கையை எந்த விலைக்கும் விலைகூறி இருக்கமாட்டார். அழகிரிசாமியைப் போல்

இயக்கத்தில் படித்த, பாமர மக்களுடைய, இளைஞர்களுடைய மனதைக் கவர்ந்து பறிகொண்டவர்கள் அரிது என்றே சொல்லுவேன்' என்றார். எனினும், தனது நம்பிக்கைக்குரிய அழகிரிக்கு பெரியாரிடமிருந்து கிடைத்த உதவி சொற்பமே. மரணப்படுக்கையில் இருந்தவாறு அழகிரி, நாவலர் நெடுஞ்செழியனிடம் இப்படி கூறினார்: 'நான் குடித்தேன். ஆகவே கெட்டுப் போய்விட்டேன் என்கிறாராம் பெரியார்! எனது பலக் குறைவின் நிழலில் நின்றுகொண்டு தம் மகிழ்ச்சியைக் காட்டி மகிழ்கிறார் கிழவர்! மகிழட்டும்!' என்ற அழகிரி, அண்ணாவைதான் தவறாக எடை போட்டதற்காக மிகவும் வருந்தினார்.

தன் மீது அழகிரிக்கு 'பொறாமை'யிருந்தும், மரணப் படுக்கையில் அழகிரியால் 'படு எதிரி'யாகக் கருதப்பட்ட அண்ணா நிதியுதவி செய்ததோடு, தம்மைக் கூட்டத்துக்குக் கூப்பிடுவோர் நூறு ரூபாயைத் தோழர் அழகிரிசாமிக்கு அனுப்பிவிட்டுத் தம்மைக் கூட்டத்துக்குக் கூப்பிட வேண்டும் என்று நிபந்தனையும் விதித்திருந்தார். அழகிரியின் மறைவையடுத்து அவரின் குடும்பத்துக்கு, 1949 மே 29 அன்று, அண்ணா ரூ.6,000 நிதி திரட்டிக் கொடுத்தார். அதில் ரூ.3,500 வசூல் செய்த தொகை; மீதியை என்.எஸ்.கிருஷ்ணன் கொடுத்திருந்தார். அழகிரியின் மறைவைத் தொடர்ந்து பெரியாருக்கும் அண்ணாவுக்கும் ஏற்பட்ட துன்ப நிகழ்ச்சி, இருவரும் பிரிந்ததுதான்!

மே 14-ம் தேதி, அதாவது அழகிரியின் மறைவுக்குப் பிறகு சுமார் ஆறு வாரங்கள் கழித்து, பாதாளலிங்க கோயிலைத் திறந்து வைக்க திருவண்ணாமலைக்கு வந்திருந்த தம் நண்பரும், கவர்னர் - ஜெனரலுமான ராஜாஜியைச் சந்திக்க ஈ.வெ.ரா. தம் உதவியாளர் மணியம்மையுடன் வந்தார். ரயில்வே ஸ்டேஷனில் சுமார் முப்பத்திரண்டு நிமிடங்கள் நடந்த சந்திப்பு பற்றி ராஜாஜி அன்று மாலை கூறினார்: "எனது பழைய நண்பர் ஈ.வெ.ராமசாமியை (நாயக்கரை) இன்று காலை நான் கண்டது குறித்து, பொதுமக்கள் மிகத்தீவிரமான எண்ணம் கொண்டிருக்கலாம். நானும் அவரும் சந்தித்துப் பேசியது முழுமையும் அவர் என்னுடன் கலந்து பேச விரும்பிய சொந்த விஷயங்களைப் பற்றியே ஆகும். அவருடைய அரசியல் பொது நடவடிக்கைகளுக்கும் இதற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை." மறுநாள் பெரியார், 'ஆச்சாரியார் சந்திப்பு' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியிட்டிருந்தார். (விடுதலை 15.5.1949):

> காங்கிரஸ் இயக்கத்தில் நான் 1919-ல் சம்பந்தப்படும்போது அவரைத் தலைவராகவும் என்னை அவரைப் பின்பற்றும் சிஷ்யனாகவும்

கருதிக்கொண்டு சம்பந்தப்பட்டவன். அந்தக் காலத்தில் எங்கள் இருவருக்கும் லௌகீகத்தில் ஒரே மாதிரி யோக்கியதையும் நிலைமையும் இருந்தாலும், காங்கிரஸிலும் அவர் எனக்குச் சற்று அதிக மரியாதையும் சலுகையும் கொடுத்து வந்தார் என்றாலும், எனக்கு அவரைக் கண்டால் சற்று உண்மையாக அடக்கம் காட்டும்படி, பயப்படும் படியான அளவு உணர்ச்சி இருந்து வந்தது.

இன்றும் அவரை நேரில் காணும்போது, அந்த உணர்ச்சியே இருக்கிறது. இதற்குக் காரணம் அதை மாற்றிக்கொள்ள வேண்டிய தன்மையை என் தனிப்பட்ட முறையில் நான் அவரிடம் காணாததும், நல்ல உற்சாகமும் மக்கள் ஆதரவும் இருக்கிறதென்றும், நல்ல பயன் விளைகிறதென்றும், சொல்லிக்கொண்டு வரும்போது, அதற்கு சரிசமமாக என்னைச் சுற்றியும் விஷப்புகை சூழ்ந்துகொண்டு இருக்கிறதென்றும் சொல்ல நேர்ந்தபோது, 'ஏன் அப்படி?' என்று அவர் கேட்ட கேள்விக்குப் பதிலாக, அதன் காரணமாக நான் யாரையும் சட்டசபைக்கு நிற்க அனுமதிக்க மாட்டேன் என்பதும், பதவி ஏற்க விட மாட்டேன் என்பதும், இன்றைய அரசியலை நான் வெறுக்கிறேன் என்பதும்தான் என்று சொல்ல நேர்ந்தது. அதற்கு அவர், 'ஆம்! தகுதியுடையவர்கள் என்றும் தங்களுக்குப் பதவி கிடைக்கும் என்றும் கருதுபவர்களுக்கு உங்கள் கருத்து பெரிய சங்கடமாகத்தான் இருக்கும். அப்படிப்பட்டவர்கள் உங்களுக்கு ஓரளவுக்கு விரோதிகளாகவும்தான் ஆகக்கூடும். இது எல்லா இயக்கத்துக்கும் இயற்கைதானே, உங்களுக்குத் தெரியாதா? என்று (காங்கிரஸ் இயக்கத்தையே உதாரணம் காட்டுவது போல் ஜாடை காட்டி) சொன்னார்.

கடைசி ஜாடையை நான் எப்படி புரிந்துகொண்டேன் என்றால், தனது சுமையை சீக்கிரம் இறக்கி வைத்துவிட்டு வந்து, ஏதாவது பலனுள்ள காரியத்தைச் செய்யலாமென்று கருத்து இருப்பதாகக் கண்டேன். அவரிடம் மூன்று நான்கு மாதங்களுக்கு முன் தெரிவித்த என் சொந்த சங்கதி என்ன என்பதைப் பொதுமக்கள் இன்னும் ஒன்று இரண்டு மாதங்களுக்குள் அறிந்து கொள்ளலாம்.

> ஒன்று சொல்வேன். ஆச்சாரியாரைப் போன்ற அறிவும் திறனும், தன்னல மறுப்பும் உள்ள ஒரு ஜீவன் நல்ல சமயத்தில், நல்ல காரியத்துக்குப் பயன்படாமல் போனது குறித்து மிக மன வருத்தமும் பரிதாபமும் அடைகிறேன். இந்தக் கருத்தில் பல அறிஞர்கள் பங்குகொள்வார்கள் என்றே கருதுகிறேன். இன்று நம் நாட்டில் பொதுப்பணிக்கு ஆள் இல்லை, இல்லவே இல்லை. அறிவாளிகள் இருக்கிறார்கள். இந்த அறிவு, ஒரு தாசிக்கு அழகும் கலையும் ஏற்பட்டால், யாருக்கு என்ன லாபம் ஏற்படுமோ, அதுபோன்ற பயன்தான் அந்த அறிவாளிகளால் இருக்கின்றது. ஆச்சாரியாரைப் போல் பொதுவுக்குப் பயன்படும்படியாக ஏற்பட்டவர்கள் இல்லை!

ராஜாஜியை பெரியார் சந்தித்ததற்கு வேறு நோக்கமும் இருக்கக்கூடும் என அண்ணா சந்தேகப்பட்டார். அந்த மாதக் கடைசியில் கோவையில் நடந்த முத்தமிழ் மாநாட்டில், பெரியார் ஏன் ராஜாஜியைச் சந்தித்துப் பேசினார் என்பதை ஆவலாக இருந்த மக்களிடம் வெளியிடும்படிக் கோரினார். அது தன் சொந்த விஷயம், கட்சிக்குத் துளியும் சம்பந்தமில்லை என்று பெரியார் பதிலடி கொடுத்தார். ஆனால், மே 28 அன்று நடைபெற்ற, கோவை மாவட்ட ஏழாவது திராவிடர் கழக மாநாட்டில், பெரியார் அந்த 'சொந்த விஷயம்' என்ன என்பதைக் கோடிகாட்டி, அமைப்புக்கு ஒரு வாரிசு வேண்டும் என்பதைத் தான் ராஜாஜியிடம் விவாதித்ததாகக் கூறியது அண்ணாவின் ஐயத்தை உறுதியாக்கிற்று. பெரியார் ஏமாற்ற முனைவதாக அண்ணாவின் அனுதாபிகள் கலவரமடைந்து, பெரியாரின் திட்டம் குறித்துக் கிசுகிசுக்க ஆரம்பித்தார்கள். ஜூன் 19-ம் தேதி, 'விடுதலை'யில் 'விளக்கம்' என்ற தலைப்பிட்டு, சில தோழர்கள் விஷமத்தனமான பிரசாரத்தில் ஈடுபட்டிருப்பதாகவும், தன்னுடைய செயல் கழகத்தையோ அதன் பணிகளையோ பாதிக்காது என்றும், தன் செயலை விளக்குவதில் தனக்கேதும் பிரச்னை இல்லை என்றும் பெரியார் எழுதினார்:

> இந்தத் தலையங்கத்துக்கு விளக்கம் என்ற தலைப்பு ஏன் கொடுக்கப்படுகிறது என்றால், இந்த நெருக்கடியான சமயத்தில், நம் தோழர்கள் சிலர், பொதுமக்களிடம் தவறான பிரசாரம் செய்து வருகிறார்கள் என்பது தெளிவாகத் தெரிய வருகிறது. இதனால் கழகத்துக்காவது இயக்க வேலைகளுக்காவது ஒன்றும் குறைவு ஏற்பட்டுவிடாது என்பதாக எனக்கு நல்ல தைரியம் இருந்தபோதிலும், விளக்குவதில்



பெரியார், ராஜாஜி

எனக்கு ஒன்றும் கஷ்டமில்லை. ஆதலால், என் காதுக்கு வந்த விஷயங்களுக்கு விளக்கம் எழுதி விடலாம் என்று கருதுகிறேன்:

சி.ஆர். (ராஜாஜி) அவர்களிடம் நான் (ரகசியம்) பேசியது பற்றி, கோவை மாநாட்டிலேயே பிரஸ்தாபிக்கப்பட்டது யாவருக்கும் தெரியும். அது மிகுதியும் என் சொந்த விஷயம் என்று நான் முதலிலேயே தெரிவித்துவிட்டேன். கோவையிலும் அதை நான் தெரிவித்ததோடு, ஒரு விஷயம் அதிகமாகவும் சொல்லிவிட்டேன். அதாவது இயக்க விஷயத்தில் எனக்கு இதுவரை அளித்ததுபோல் அலைய உடல்நலம் இடம் கொடுக்கவில்லை.

நம்பிக்கையான ஒருவர் எனக்குக் கிடைக்கவில்லை என்றால், அதற்கு யாரும் கோபித்துக் கொள்ளக்கூடாது. கோபிக்கிறவர்களோ, குறை கூறுபவர்களோ, அப்படிப்பட்ட ஒருவரைச் சொன்னால் நான் ஏற்கத் தயாராக இருக்கிறேன். நம் இயக்கத்துக்குத் தொண்டாற்றும் பொறுப்பை ஏற்க முழுநேரத் தோழர்கள், தங்களை முழுதும் ஒப்படைப்பவர்கள் யார் இருக்கிறார்கள்? யார் இருந்தார்கள்?

இப்படி நான் சொன்னது, குறைகூறித் திரிகிறவர்களுக்கு,

மேலும் குறைகூறச் சற்று அதிக வசதி ஏற்பட்டு விட்டதாகவும் தெரிகிறது. என்னவென்றால், 'இயக்கத் தோழர்களிலே ஈ.வெ.ரா.வுக்கு ஒருவரிடம்கூட நம்பிக்கையில்லை என்று சொல்வது, இயக்கத் தோழர்களை அவமானப்படுத்தியதாக ஆகிறதென்றும், அப்படி சொன்னபிறகு, ஈ.வெ.ரா.விடம் மற்றவர்கள் எப்படி நம்பிக்கை வைக்க முடியும்?' என்றும், இப்படியாகப் பலவிதமாகவும் சொல்லப்படுவதாக அறிகிறேன். இதைப் பற்றி நான் அதிகம் விவரிக்க ஆசைப்படவில்லை.

இன்றைய அரசியல் நிலையில், அரசியலாருக்கும் நம் இயக்கம் அழிக்கப்பட வேண்டும் என்ற அவசியத்தில் இருக்கிறது. இதற்காக நம்மில் ஓர் ஆளாவது தன்னுடைய அழிவை லட்சியம் செய்யாமல் பலி ஆகவேண்டியது அவசியமான காரியமாகும். ஏனெனில், அந்த பலியினால் இயக்கத்தை என்றும் அழிக்காமல் காக்க முடியும். ஆதரவாளர்கள் அனேகர் இருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், திராவிட மக்கள் பெரிதும் மதித்து, நம்பி, பின்பற்றக்கூடிய அளவுக்கு நிலைமை கொண்டவர்களும், தன்னைப் பற்றிக்கூட கவலை இல்லாதவர்களும், இயக்கத் தொண்டே தனது முழுநேர மூச்சாகக் கொண்டவர்களுமாக இருந்தால் அல்லவா அது பயன்படும்? ஆகையால், அப்படிப்பட்டவர்கள்தான் என் கருத்துக்கு எட்டவில்லை என்றேன். அதனால்தான் நானே பலியாக வேண்டியிருக்கிறது. இதைப் பொதுமக்கள் சீக்கிரம் காணத்தான் போகிறார்கள்.

இயக்கத் தொண்டே முழு மூச்சாக இருக்க வேண்டும் என்ற பெரியாரின் வாதம் புதியது. இதைக் குறித்து ஈரோட்டில் அவர் ஏதும் குறிப்பிடவில்லை. பல கருத்து மாறுபாடுகள் இருந்தபோதும் பெரியாருடனே இருந்துவிட்ட குத்தூசி குருசாமி போன்றவர்களின் பணியையும் பெரியாரின் பேச்சு குறைவாக மதித்திருந்தது.

இதற்கெல்லாம் முன்பாகவே, மணியம்மையுடனான தன் திருமணத்துக்கு ராஜாஜி ஒரு சாட்சியாக இருக்க முடியுமா என ஈ.வெ.ரா. கேட்டுக் கொண்டிருந்தார். கவர்னர்- ஜெனரலாக இருந்த ராஜாஜி, 1949 பிப்ரவரி 21 அன்று, தனது பதிலில் தன் பதவியைச் சுட்டிக்காட்டி, தன் இயலாமையைத் தெரிவித்துக்கொண்டிருந்தார். முக்கியமாக, ஈ.வெ.ரா.வின் வயது கருதியும், தான் அவர் மீது

கொண்டிருந்த அன்பு காரணமாகவும், ஈ.வெ.ரா. இந்த வயதில் திருமணம் செய்துகொள்ள வேண்டிய அவசியமில்லை என்றும் ராஜாஜி யோசனை கூறியிருந்தார். ஈ.வெ.ரா.வுக்குப் பிறகு, எப்படி ஒரு முப்பது வயதுப் பெண்மணி அவருடைய சொத்துகளை நிர்வாகம் செய்ய முடியும் என்றும் ராஜாஜி வியந்திருந்தார். ஒரு வருடத்துக்கு இந்த எண்ணத்தைத் தள்ளி வைக்குமாறும், அதற்குப் பிறகும் இந்த எண்ணம் மாறவில்லை என்றால் அவர் தாராளமாகச் செய்துகொள்ளட்டும் என்றும்கூட ராஜாஜி யோசனை கூறியிருந்தார்.

ஜூன் 18 அன்று, தாம் மணியம்மையை மணமுடிக்க பெரியார் திருமணப் பதிவாளருக்கு விண்ணப்பித்தபோது, அண்ணாவின் முகாம் பெருத்த ஏமாற்றமடைந்தது. பத்து நாட்களுக்குப் பிறகு, ஜூன் 28 அன்று, பெரியார் இன்னோர் அறிக்கை வெளியிட்டார். தனது ஜூன் 19 அறிக்கையின் தொடர்ச்சியே அந்த அறிக்கை என்றும், மக்கள் அதை ஊன்றிப் படிக்க வேண்டுமென்றும் கோரினார்:

> கட்டாய இந்தி எதிர்ப்பு நடவடிக்கையில் நான் தீவிரமாக ஈடுபடப் போவதால் ஏற்படக் கூடிய விளைவு;
>
> உடுமலைப்பேட்டையில் நான் 144 தடையுத்தரவை மீறியதற்காக, சர்க்கார் நடத்தப் போவதாகத் தெரிய வரும் காரியத்தின் விளைவு;
>
> சென்னையில் 2 மாதத்துக்கு முன் நான் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிய பேச்சின் பேரில், சர்க்கார் ஏதோ நடவடிக்கை எடுக்க முயற்சி செய்வதாகத் தெரிய வருவதால், அதனால் ஏற்படும் விளைவு;
>
> ஆகிய மூன்று விளைவுகளுக்கும் நான் ஆளாகத் தயாராக இருக்க வேண்டியவனாக இருக்கிறேன். ஆதலால், அதற்குள் நான் இதற்கு முந்திய அறிக்கையில் தெரிவித்தபடி, இயக்க நடப்புக்கு, இயக்கப் பொருள்களுக்கு நான் ஓர் ஏற்பாடு செய்ய வேண்டியவனாக இருக்கிறேன்.
>
> என் மீது ஏற்படும் வழக்குகளுக்கு எதிர்வாதம் செய்வதில் நான் நம்பிக்கை இல்லாதவனாக இருப்பதால், சர்க்கார் கேஸ் தொடர்ந்தால் நான் தண்டனை அடைய வேண்டியது என்பது தவிர, வேறு முடிவு எதிர்ப்பார்ப்பதற்கு இல்லை. மற்றும்

நான் நாணயஸ்தர்கள் என்றும், இயக்கத்தினிடமும் என்னிடமும் உண்மையான பற்று உள்ளவர்கள் என்றும் நம்பின தோழர்கள் பலர், ஆயிரக்கணக்கில் ரூபாய்களை மோசம் செய்துவிட்டதைக் கண்டும், கண்டுபிடித்தும் வருகிறேன். சிலர் இன்னமும் என்னை மோசம் செய்துகொண்டு வருவதாக அய்யம் கொண்டும், உறுதிகொண்டும் வருகிறேன்.

இந்த நிலையில் என்னைப் பற்றியும், இயக்கத்தைப் பற்றியும், இயக்க நடப்பைப் பற்றியும் எனக்குப் பின்னும் ஓரளவுக்காவது இயக்கம் நடைபெற வேண்டும் என்பது பற்றியும், ஏதாவது ஒரு வழி செய்ய வேண்டியதைப் பற்றியும் மிகக் கவலையுடனும் பற்றுடனும் சிந்தித்து நடக்க வேண்டுமென கடந்த 4, 5 மாதங்களாகவே என்னை வாட்டி வருவதுடன், என் உடல் நிலைக்கும் காரணமாக இருந்து வருகிறது.

இதற்காக என் அனுபவத்தைக் கொண்டு எனக்குத் தோன்றியதை நான் செய்து முடிக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறேன். சற்றேறக்குறைய ஒரு முடிவுக்கும் வந்துவிட்டேன். அந்தக் காரியங்கள் எனது தோழர்களுக்கும், என்னிடம் அன்பும், எனது நலத்தில் கவலையும் உள்ளவர்களுக்கும் சற்றுப் புரட்சியாகவும், திடுக்கிடக்கூடியதாகவும், இயக்கமே அழிந்துவிடுமோ என்று பயப்படக் கூடியதாகவும், எனக்கும் ஒரு கெட்ட பேரும் இழிவும், ஏற்படக்கூடிய பெரிய தவறாகவும்கூடக் காண்ப்படுவதாகத் தெரிகிறது. பொதுமக்களுக்கும் அப்படியே காணப்படலாம்.

எனக்கு வயது 71-க்கு மேலாகிறது. நான் பொதுவாழ்வில் 40-50 வருஷ கால அனுபவமுடையவன். பொது ஜனங்களையும், சிறப்பாகப் பாமர மக்களையும் ஓரளவுக்கு உணர்ந்தவன். அவர்களது மனப் பான்மையையும் தெரிந்தவன். நான் நடப்பு முறையில் சுலபமாக யாருக்கும் இணங்கிவிடக்கூடிய அளவுக்கு வழவழப்பானவன் என்றாலும், கொள்கை, லட்சிய முறையில் உறுதியானவன். என்னிடம் உள்ள இயற்கை குணம் என் நண்பர்களுக்கும், கூட்டு வேலைக் காரர்களுக்கும் எவ்வளவு பொருத்தமற்றதாக இருந்தாலும், குற்றமானதாகக் கருதப்பட்டாலும்,

இந்த 30 ஆண்டில் என் கூட்டு வேலைக்காரர் பலர் விலகினாலும், அவர்கள் அதிருப்தியையும் எதிர்ப்பையும் கடந்து, அந்த என் இயற்கை குணத்தாலேயே மற்றவர் என்ன நினைப்பார்களோ என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் நடந்து வந்ததாலேயே யார் இயக்கத்தைவிட்டுப் போனாலும் சரி, எனக்கு எதிரியானாலும் சரி, என்று உறுதியாக நடந்ததாலேயே, பொது ஜனங்களுடைய நம்பிக்கைக்குச் சிறிதாவது ஆளானவனாக இருந்து, இயக்கத்தை நடத்தி வந்திருக்கிறேன். எனது காரியம், கொள்கை, திட்டம் எதுவானாலும் அவற்றைப் பற்றி என் அனுபவத்தில், துவக்கத்தில் நான் வெளியிடும் போது, பொதுவாகவே மக்களுக்கு எவ்வளவு கஷ்டமாக, கேடானதாகக் காணப்பட்டாலும், அதை விடாப்பிடியாக நடத்திக் கொண்டுவந்து, ஆட்சேபித்த மக்களைப் பெரிதும் ஆமோதிக்கச் செய்தே வந்திருக்கிறேனே தவிர, தவறு செய்ததாகக் கருதி விட்டுவிடவோ, திருத்திக்கொள்ளவோ, கவலைப்படாமலும் நடந்து வந்திருக்கிறேன்.

பொதுவாகச் சொல்ல வேண்டுமானால், எனது பொதுநல வாழ்வு என்பது பொதுமக்களுக்காக என்று கருதி வாழ்ந்து வந்திருந்தாலும்கூட, அவை என் சொந்த வாழ்வுக்காகச் செய்யப்படும் என் சொந்தக் காரியம், என் சுயேச்சையாக, சொந்த உரிமையாக நடந்தும் நடத்தியும் வந்திருக்கிறேன்.

ஆகவே, அப்படிப்பட்ட உரிமையையும் சொந்தப் பொறுப்பையும் ஆதாரமாகக் கொண்டே எனது லட்சியத்தின் நன்மை, இயக்கத்தின் நன்மை என்பதைக் கருதி, மேல் காட்டிய அவசர நிலையில் இயக்கத்துக்காகச் சில ஏற்பாடுகள் செய்ய முனைந்துவிட்டேன். அதைச் செய்ய வேண்டியது எனது அறிவின், யோக்கியமான கடமை என்பது உண்மை. ஜனங்கள் என்ன நினைப்பார்கள், எதிரிகள் என்ன சொல்லுவார்கள் என்பதைப் பற்றி எல்லாம் சிந்திக்க ஆரம்பித்தேனேயானால், இயக்கப் பாதுகாப்புக் காரியம் அடியோடு கெட்டுவிடும். இயக்கப் பொருள் இயக்கத்துக்காக நான் சேர்த்த பொருள். இயக்கத்துக்காக என்னை நம்பிப் பலர் அளித்த பொருள். இயக்கத்துக்காக நான் உதவ

வேண்டும் என்று கருதி இருக்கிற பொருள் ஆகியவை நாதியற்று இயக்கத்துக்குப் பயன்படாததாக, இயக்கமும் பொருளும் தலைவிரி கோலமாக ஆகிவிடுவதோடு உலகோர் என்னைப் பழி கூறவும் ஏற்பட்டுவிடும்.

எனவே சுமார் 4, 5 மாதங்களாகவே பொதுக் கூட்டங்களில் எனது பேச்சிலும் எழுத்திலும் தெரிவித்து வந்திருக்கிறபடியும், கோவை மாநாட்டில், 'எனக்கு வாரிசு ஏற்படுத்துவது பற்றித்தான் கவர்னர் - ஜெனரலிடம் பேசினேன்' என்று வெளியிட்டபடியும் அதில் மக்களுக்கு உறுதி கூறினபடியும், சமீபத்தில் 19-ம் தேதி 'விளக்கம்' என்னும் தலைப்பில் 'விடுதலையில்' குறிப்புக் காட்டி வந்திருக்கிறபடியும் முதலில் எனக்கும் என் பொருளுக்கும், சட்டப்படியான வாரிசாக ஒருவரை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம், அவசரம். ஆகையால், நான் 5, 6 வருஷ காலமாகப் பழகி நம்பிக்கை கொண்டதும், என் நலத்திலும் இயக்க நலத்திலும் உண்மையான பற்றும் கவலையும் கொண்டு நடந்து வந்திருக்கிறவருமான மணியம்மையை எப்படியாவது வாரிசு உரிமையாக்கிக் கொண்டு, அந்த உரிமையையும் தனிப்பட்ட தன்மையையும் சேர்த்து, மற்றும் சுமார் 4, 5 பேர்களையும் சேர்த்து இயக்க நடப்புக்கும், பொருள் பாதுகாப்புக்குமாக ஒரு டிரஸ்ட் பத்திரம் எழுத ஏற்பாடு செய்திருக்கிறேன். அந்தப் பத்திரமும் எழுதப்பட்டு வருகிறது.

தொண்டர்கள் தங்கள் தலைவர் எடுக்கவிருக்கும் நடவடிக்கை குறித்து பெருத்த ஏமாற்றமடைந்தார்கள். அவர்களால் ஒரு தெளிவான முடிவை எடுக்க இயலவில்லை. பலர் பெரியார் தன் மனதை இன்னும் மாற்றிக்கொள்ளக் கூடும் என எதிர்பார்த்தார்கள். அண்ணா சென்னைக்கு வந்து, கோவிந்தப்ப நாயக்கன் வீதியில் உள்ள தேவராஜ முதலியார் இல்லத்தில் தங்கினார். குடந்தை கே.கே.நீலமேகம், என்.வி.நடராஜன், குத்தூசி குருசாமி, ஆகியோர் அடங்கிய ஒரு நல்லெண்ணக் குழுவை ஏற்காட்டில் தங்கியிருந்த பெரியாரைச் சந்திக்க அனுப்பி வைத்தார். பெரியாரோ தூதுக் குழுவின் வேண்டுகோளை ஏற்க மறுத்தார். அதற்குப் பிறகு தேவராஜ முதலியார் இல்லத்தில், மாவட்டப் பிரதிநிதிகள் கூட்டத்தைக் கூட்டி மீண்டும் காஞ்சி மணிமொழியார், டி.எம்.பார்த்தசாரதி, கே.எம்.கண்ணபிரான், சி.வி.இராசன்

ஆகியோர் கொண்ட தூதுக் குழுவை அனுப்பிவைத்தார் அண்ணா. இந்தக் குழுவும் தோல்வியுடன் திரும்பியது. திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழு உறுப்பினர் 32 பேர், பெரியாரின் திருமண ஏற்பாட்டைக் கண்டித்து அவரது தகாத செயலைத் தவிர்க்காவிட்டால், தாங்கள் கழகப் பணியிலிருந்து விலகிக்கொள்ள நேரிடும் என்று எச்சரித்து பெரியாருக்குக் கடிதம் எழுதியும் பெரியார் பணியவில்லை. பாரதிதாசன், என்.வி.நடராஜன், பேராசிரியர் அன்பழகன், கலைஞர் கருணாநிதி, டி.கே.சீனிவாசன் உட்பட, முன்னணித் தலைவர்கள் பலர் ஈ.வெ.ரா.வின் செயலுக்குக் கண்டனம் தெரிவித்தனர்.

பெரியாரின் செய்கையை எதிர்த்து இப்போது எதிரணியினர் மக்கள் முன் தங்கள் வாதத்தை வைத்தனர். 'வெட்கப்படுகிறோம் - வேதனைப்படுகிறோம். இல்லை விரட்டப்படுகிறோம்' என்ற தலைப்பில் ஜூலை 3-ம் தேதி, முதல் அறிக்கை வெளிவந்தது:

> சென்ற ஆண்டு நாம் நமது தலைவர் பெரியாரின் 71-வது ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினோம்.
>
> இந்த ஆண்டு அவர் திருமண வைபவத்தைக் காணும்படி நம்மை அழைக்கிறார் - இல்லை அறிவிக்கிறார். கடந்த ஐந்தாறு ஆண்டுகளாகப் பெரியாருடைய உடலைக் கவனித்துக் கொள்ளும் திருத்தொண்டிலே தன்னை ஒப்படைத்துப் பணியாற்றி வந்தார் திருமதி மணியம்மையார். அந்தத் திருமதிக்கு வயது 26. அவர்கள்தான் பெரியாருக்கு மனைவியாகும் தொண்டில் இப்போது ஈடுபட நேரிட்டிருக்கிறது. சென்னையில் இவர்களின் பதிவுத் திருமண மனு பதிவு நிலையத்தில் கடந்த ஒரு வார காலமாக ஒட்டி வைக்கப்பட்டிருக்கிறது. பலர் பார்த்துத் திகைப்படைந்துள்ளனர்.
>
> 'என்னிடம் அன்பும், எனது நலத்தில் கவலையும் உள்ளவர்களுக்கும், சற்றுப் புரட்சியாகவும், திடுக்கிடக்கூடியதாகவும், எனக்கு ஒரு கெட்ட பேரும், இழிவும் ஏற்படக்கூடிய பெரிய தவறாகவும்கூடக் காணப்படுவதாகத் தெரிகிறது' என்று பெரியாரே 28.6.49 'விடுதலை'யில் வெளியிட்ட அறிக்கையிலே இதைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.
>
> கோபம், கொதிப்பு இவை மட்டுமே இதனால் ஏற்படும் என்று அவர் குறிப்பு காட்டுகிறார். ஆனால்,

இவை மட்டுமல்ல இந்தச் சேதியாலே ஏற்பட்ட விளைவு - கண்ணீர். தூய்மையுள்ளம் கொண்ட ஆயிரமாயிரம் இயக்கத் தோழர்கள் கண்ணீர் சொரிந்த வண்ணம் உள்ளனர்.

இந்தக் கண்ணீரை அவர் எதிர்பார்த்திருப்பாரா? அல்லது மதிக்கப் போகிறாரா என்பது ஒருபுறமிருக்க எதற்கும் கலங்கா உள்ளம் படைத்த இளைஞர்கள் இந்தச் சேதி கேட்டுக் கண்ணீர் வடிப்பது போல வேறு எப்போதும் நடைபெற்றதில்லை. உலக சம்பவங்களிலேயே இதற்கு இணையானதாக வேறு ஒன்றைக் காட்டவும் முடியாது.

நாம் அவரை ஓர் அரசியல் கட்சித் தலைவராக மட்டும் கொண்டு இருக்கவில்லை. இயக்கத்தைச் சார்ந்த ஒவ்வொருவரும் அவரைத் தங்கள் குடும்பத் தலைவர் என், வாழ்க்கைக்கு வழிகாட்டியென ஏற்றுக் கொண்டு, எந்த இயக்கத் தலைவரிடமும் காட்டாத அளவு மரியாதை உணர்ச்சியை, அன்பைக் காட்டி வந்திருக்கிறோம்.

நமது கண்களுக்கு அவர் நமது மானத்தை மீட்டுத் தரும் மகானாக, நம்மைப் பன்னெடும் காலமாகக் கொடுமைப் படுத்திவரும் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப் போர் புரியும் மாவீரராகக் காட்சி தந்து வந்திருக்கிறார். அவரை நாம் பின்பற்றி வந்தது, ஏறத்தாழ பக்தர்கள், அவதார புருஷர்களைப் பின்பற்றி வந்தது போலவேதான். இதற்குக் காரணம் நாம் மற்ற எந்தத் தலைவரையும்விட இவரிடம் தனிப்பட்ட தன்மை, பண்பு இருக்கிறது என்று உளமார எண்ணியதால்தான். வயது ஏற ஏற வாழ்க்கையைப் பற்றி, குடும்பத்தைப் பற்றி, சொந்த சுகத்தைப் பற்றிக் கவலைப்படாமல் அலைந்து திரிந்து அரும்பாடு பட்டு, நாம் வாழ, அவர் வாட்டத்தையும் பாடுகளையும் தாங்கிக்கொள்கிறார் என்று தெரிந்ததால் நாம் அவரை 'பெரியார்' என்றழைத்தோம், பெருமையுடன். பெயருக்கு முற்றிலும் உரியார், இவர் போன்றோர் வேறு யாரும் இல்லையென்று இறும்பூதெய்தியிருந்தோம்; இறுமாந்திருந்தோம்.

வாழ்க்கைப் பிரச்னையிலே அவர் மிகச் சிறப்பாகவும் மிகத் தெளிவாகவும் எடுத்துப் பேசி வந்த பகுதி

திருமணத்தைப் பற்றியது திருமண முறையிலே உள்ள மூடப் பழக்க வழக்கங்களை முறியடிக்கவும், பெண்களைக் கருவிகளாக்கும் கயமைத்தனத்தை ஒழிக்கவும், ஆண்களின் கொடுமையை அடக்கவும் அவர் ஆற்றியதுபோல வேறு எந்தத் தலைவரும் உரையாற்றியதில்லை.

உரையுடனா நின்றது? இல்லை. ஊரே மாறிற்று. நமது உள்ளமே மாறிற்று. ரிஷிகள் வகுத்துவைத்துவிட்டுப் போன திட்டங்களே மாறின; மகிழ்ந்தோம். பெருமை கொண்டோம். ஆணவம் கொண்டோம். பொருந்தாத் திருமணத்தை அவர் கண்டித்தது கேட்டு, கிழவர்கள் கலங்கினர்; குமரிகள் குதூகலித்தனர்.

காமப் பித்துக் கொண்டலையும் ஆண்கள், வயோதிகப் பருவத்திலே வாலிபப் பெண்ணைச் சொத்து சுகம் கிடைக்கும் என்ற ஆசை காட்டியோ, வேறு எந்தக் காரணம் காட்டியோ திருமணத்துக்கு சம்மதிக்கச் செய்தால், மானரோஷத்தில் அக்கறை உடைய வாலிபர்கள் அந்தத் திருமணம் நடைபெற இடந்தரலாமா என்று ஆயிரமாயிரம் மேடைகளிலே முழக்கமிட்டார். நமக்கெல்லாம் புது முறுக்கேற்றினார்.

பிள்ளை இல்லை என்ற காரணத்துக்காக, சொத்துக்கு வாரிசு இல்லை என்ற காரணத்துக்காக மனைவியைத் தேடும் கொடுமையை ஆயிரமாயிரம் மேடைகளிலே கண்டித்தார். அந்தக் காலத்து தசரதன் முதற்கொண்டு இந்தக் காலத்து 'தங்க பஸ்பம்' தேடும் கிழவர் வரையிலே எள்ளி நகையாடினார். தன்மானம் தழைத்திருந்த இடத்திலே 'பொருந்தாத் திருமணம்' யார் வீட்டிலாவது, எந்தக் காரணத்தாலாவது நடைபெற இருந்தால், போலீஸ் பந்தோபஸ்து தேடக்கூடிய அளவுக்கு நாட்டு மக்களின் உணர்ச்சி வேகம் உருவெடுத்தது. ஏற்கெனவே பொருந்தாத் திருமணம் செய்துகொண்டவர்கள்கூட, வெட்கத்தால், வேதனையால் தாக்கப்பட்டனர்.

'என் போன்ற வயதானவர்கள், கல்யாணம் செய்துகொள்ள எண்ணக்கூடாது. எப்படியாவது, அப்படி ஓர் எண்ணம் வந்து தொலைந்தால், தும்ப அறுத்ததாக (அதாவது விதவையாக) ஒரு நாற்பது

ஐம்பது வயதான குழந்தையைக் கல்யாணம் செய்து தொலைக்கட்டும்! பச்சைக் கொடி போல ஒரு பெண்ணை - வாழ்வின் சுகத்தை அறிய வேண்டிய வயதும் பக்குவமும் கொண்ட பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்வதா? காரணம் ஆயிரம் காட்டட்டுமே, காட்டினாலும் எந்த மானமுள்ளவன், அந்தக் கல்யாணத்தைச் சரியென்று கூறுவான்? யாருக்குச் சம்மதம் வரும்?' என்று அவர் பேசிய பேச்சுக் கேட்காத ஊரில்லை.

இப்படிப்பட்ட அறிவுரை புகட்டியவர் தமது 72-ம் வயதில் 26 வயதுள்ள பெண்ணை, பதிவுத் திருமணம் செய்துகொள்கிறார் என்றால், கண்ணீரைக் காணிக்கையாக்குவதைத் தவிர வேறென்ன நிலைமை இருக்கும்?

பொருந்தாத் திருமணம்! புனிதத் தலைவரின் பொருந்தாத் திருமணம்! எந்தக் காலத்திலும், எதிரியின் எந்த வீச்சும், சர்க்காரின் எந்த நடவடிக்கையும், இன்று நமது இயக்கத் தோழர்களைத் திகைக்கச் செய்திருப்பது போலச் செய்ததில்லை.

பல நெருக்கடிகளைப் பார்த்திருக்கிறோம். பல ஆபத்துகளைப் பார்த்திருக்கிறோம். இந்தப் பேரிடியை நம்மால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. முடியாது - முடியாது - நிச்சயமாக முடியாது.

முகத்திலே கரி பூசிவிட்டார். மூக்கறுத்துவிட்டார்! மூலையில் உட்கார்ந்து கதறுகிறோம் - சேதி தெரிந்தது முதல்.

வெட்கப்படுகிறோம் அயலாரைக் காண!

வேதனைப்படுகிறோம் தனிமையில்!

அந்தோ, எவ்வளவு பெரிய தாக்குதல்! எத்துணை அவமானம் தரும் காரியம்! இதற்கோ இவ்வளவு எழுச்சி பெற்றோம்! இந்தப் பழியையும் இழிவையும் ஏற்றுக்கொள்ளவா இந்த அளவு வளர்ந்தோம்!

என்னே நம் நிலை! என்னே நம் கதி! எங்கே நமக்குப் புகலிடம்! என்னதான் நமக்கு எதிர்காலம்! எதிரே பெரும் இருள்! சுற்றிலும் கேலி பேசுவோர்! இடையே நாம்! நெஞ்சிலே பெரும் வேதனை!

கண்களிலே நீர்! கைகால்களிலே நடுக்கம்!

இது நாம்! இதற்கோ இந்த வளர்ச்சி!

எம்மை ஆளாக்கிவிட்ட தலைவரே! இந்த கதிக்கு எம்மை ஆளாக்கவா இவ்வளவு உழைப்பும் பயன்பட வேண்டும்? உலகின் முன் தலைகாட்ட முடியாத நிலைமையில் எம்மைச் செய்யும் அளவுக்கு நாங்கள் தங்களுக்கு இழைத்த குற்றம் என்ன? நீங்கள் காட்டிய வழி நடந்தோமே, அதற்கா இந்தப் பரிசு?

முத்தமிட வந்த குழந்தையின் மூக்கைக் கடித்தெறியும் தாயை நாங்கள் கண்டதில்லை. தந்தையே, நாங்கள் செய்த தவறுதான் என்ன? இந்தத் தகாத காரியத்தை தாங்கள் செய்து, எங்கள் தன்மானத்தை அறுத்தெறிவது ஏன்? என்ன குற்றம் இழைத்தோம்?

ஏன், என்றும் அழியாத அவமானத்தைத் தேடித் தருகிறீர்? எப்படித் தாங்குவோம் இந்த அழிவை?

எத்தனை ஆயிரம் காரணம் காட்டினாலும், சமர்த்தான விளக்கம் உரைத்தாலும் 72 - 26 இதை மறுக்க முடியாதே! இது பொருந்தாத் திருமணம் என்பதை மறைக்க முடியாதே!

இந்தப் பொருந்தாத் திருமணம் நடைபெறக் கூடுமென்று நாம், யாரும், கனவிலும் எண்ணியதில்லை. பெரியாரின் கோலம், வயது, பேச்சு, வாழ்க்கையிலே அவருக்குப் பற்று அற்றது போலிருந்து காட்டிய தன்மை, ஆகியவை என்று எண்ணச் செய்யவில்லை. அதிலும் எப்படிப்பட்ட மாது!

பெரியாரின் உயிரைப் பாதுகாக்க, உடலைப் பாதுகாக்க, தக்கவிதமான உணவு, மருந்து தருதல், பிரயாண காலத்தில் வசதி செய்து தருவது போன்ற காரியத்தைக் கவனிப்பது என்கிற முறையில், இயக்கத்தில் ஐந்தாரு வருஷத்துக்கு முன்பு வந்தவர் மணியம்மையார்.

அப்பா, அப்பா! என்று அந்த அம்மை மனம் குளிர, வாய் குளிர, கேட்போர் காது குளிரக் கூறவும் அம்மா - அம்மா என்று கேட்போர் பூரிப்பு அடையும் விதமாக, பெரியார் அந்த அம்மையாரை அழைக்கவும், இந்தக் காட்சியைக் கண்டு பெரியாரின் வளர்ப்புப் பெண் இந்த மணியம்மை எனப் பல்லாயிரவர்

எண்ணி மகிழவுமான நிலை இருந்தது. அந்த வளர்ப்புப் பெண்தான் இன்று பெரியாரின் மனைவியாக இருக்கிறார்கள் - பதிவுத் திருமணமாம்!

என்னிடத்திலே பெரியார் இன்ன விஷயத்தைக் கலந்து பேசினார் - என்னை இன்ன காரியம் செய்யச் சொன்னார் என்று களிப்புடன் கூறிக்கொள்பவர்கள் ஒவ்வொரு ஊரிலும் பலர் உண்டு. இவ்வளவு பேர் இருந்தும், இந்தத் திருமண விஷயமாக, பெரியார் இவர்களில் யாரிடமும் பேசியதில்லை - யோசனை கேட்டதில்லை - ஜாடையும் காட்டியதில்லை.

ஆனால், இதுபற்றி கவர்னர் ஜெனரல் ஆச்சாரியாரிடம் திருவண்ணாமலையில் கலந்து பேசியிருக்கிறார், நமது தலைவர். தமது அறிக்கையிலே இதை அவரே கூறுகிறார். உங்கள் யாரிடமும் நான் பேசாத, பேச வேண்டிய அவசியமில்லாத விஷயத்தை, அவரிடம் பேசினேன் என்று கூறுகிறார்.

அவர் பாக்கியசாலி! உண்மையிலேயே உழைத்து உருக்குலைந்து போய் இவர் தவிர வேறு ஒரு தலைவரே கிடையாது என்று மனசார நம்பி, செக்கு மாடென உழைத்து வரும் நாம் பெறவில்லை அந்த பாக்கியத்தை! அன்பர் ஆச்சாரியார் பெற்றார்! ஆச்சாரியாரிடம் கலந்து பேசிய பிறகும், இயக்கத் தோழர்களில் யாரிடமும் இதுபற்றி மூச்சுவிடாமல், மிக மிக ரகசியமாக, இந்தத் திருமண ஏற்பாட்டுக்கான காரியத்தைத் துவக்கினார். எப்படியோ உண்மை தலைகாட்டிற்று, உள்ளம் கொதித்த தோழர் என்.வி.நடராஜன் பெரியாருக்குக் கடிதம் தீட்டினார், கண்ணீர் மல்கிய நிலையில். விடுதலை ஆசிரியர் குருசாமி, கடலூர் தோழர் குருசாமி, வேலூர் திருநாவுக்கரசு, தோழர் என்.வி.நடராஜன், குடந்தைத் தோழர் கே.கே.நீலமேகம் ஆகியோர் சென்றனர். பெரியார் இவர்களிடம் சமாதானம் கூறினார். தான் செய்யும் காரியம் தவறுடையதோ என்று சந்தேகம் இருக்கும் விதமாக அல்ல; நீங்கள் யார் என்று கேட்கும் விதமாகவே பேசினார்.

இவற்றுக்குப் பிறகு நம்மையெல்லாம் திடுக்கிடச் செய்து, தேம்பச் செய்து, ஊராரின் கேலியைக்

கிளப்பிவிட்ட திருமண ஏற்பாட்டுக்கு பெரியார் ஓர் அறிக்கை மூலம் விளக்கம் அளித்தார் - அந்த விளக்கம், இப்போது நடைபெற இருக்கும் திருமணம் என்பது இத்துடன் முடிந்துவிடும் செயல் அல்ல - பின்னால் வரவிருக்கும் பேராபத்துக்கு, பெரியதோர் இழிவுக்கு, முன்னறிவிப்பு என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

மணியம்மை, பெரியாருக்கு மனைவி மட்டுமல்ல இயக்கத்துக்குத் தலைமை தாங்கும் தகுதி பெறப்போகிறார். புதிய அன்னிபெசன்ட் புறப்படுகிறார்களாம்! பெரியாரே, இப்படி ஓர் அநியாயமான, கொள்கைக்கு முரணான, நாகரிக மக்கள் நகைக்கத் தக்க, பொருந்தாத் திருமணம் செய்து கொள்கிறீரே, இது சரியா என்று கேட்கிறோம்.

நடைபெறப் போவது பொருந்தாத் திருமணம் மட்டுமல்ல. புதிய மகுடாபிஷேகமும்.

ஒரு தவறு இன்னொரு தவறுக்குக் காரணமாகக் காட்டப்படுகிறது. பொருந்தாத் திருமணத்தால் ஏற்படும் இழிவையும் பழியையும் நாம் தாங்கிக் கொள்வது மட்டுமல்ல, இந்தத் தகாத முறையினால் 'தலைவி' ஆகப்போகும் மணியம்மையின் கீழிருந்து நாம் எதிர்காலத்தில் பணியாற்றவும் தயாராக வேண்டும்.

பல பாத்தியதைப் பேச்சு பேசுபவர்கள் இயக்கத்தில் உண்டு. அதிக காலமாகப் பணியாற்றியவர்கள் உண்டு. திறமையாகப் பணி புரிந்தவர்கள் உண்டு. சொத்தை, சுகத்தை இழந்தவர்கள் உண்டு. கண்ணையும் கரத்தையும் இழந்தவர்கள் உண்டு. இவர்கள் யாரும் வாரிசாக முடியவில்லை. இவர்களில் யாருக்கும் இயக்கத்தை நடத்திச் செல்லும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. மணியம்மைக்குக் கிடைத்திருக்கிறது! எந்த முறையில்? பெரியாரின் துணைவியாகும் முறையில்! என்ன தகுதியால்?

பெரியார் தமது அறிக்கையில் கூறுகிறார்: 'நான் ஐந்தாறு வருஷ காலமாகப் பழகி, நம்பிக்கை கொண்டதும், என் நலத்திலும், இயக்க நலத்திலும் உண்மையான பற்றும் கவலையும் கொண்டு நடந்து

வந்திருக்கிறதுமான மணியம்மை' என்று.

இதுதான் பொருந்தாத் திருமணத்துக்கும், அதன் மூலம் பொறுக்க முடியாத புதிய பட்டாபிஷேக ஏற்பாட்டுக்கும் காரணமாம்!

அவர் அம்மையாருடன் ஐந்தாறு வருஷம் பழகினாராம். அந்தப் பழக்கம் அம்மைக்குள் அபாரமான அறிவாற்றலை அவருக்கு விளக்கிவிட்டிருக்கிறது. ஒரு பெரிய இயக்கத்தை ஒப்படைக்கும் அளவுக்கு நம்பிக்கை பெரியாருக்கு ஏற்பட்டுவிட்டது.

அம்மையும் ஆச்சாரியார் போலவே உண்மையில் பாக்கியசாலிதான். இல்லையானால் பெரியார், 'என் ஆயுள் வரையும், கூடுமான அளவு என் ஆயுளுக்குப் பின்னும், ஒழுங்காக இயக்கத்தை நடத்தும் தகுதி இந்த மணியம்மைக்கு உண்டு' என்று கூறுவாரா?

வாரிசு முறை எதற்கு? யார் செய்யும் ஏற்பாடு? எந்தக் காலத்து முறை? ஓர் இயக்கத்துக்கு வாரிசு ஏற்படுத்துவது என்பது ஜனநாயக முறைக்கும் ஏற்றதுதானா? அல்லது நடைமுறையிலே வெற்றி தரக்கூடியதுதானா?

திராவிடர் கழகம், அதற்கென உள்ளதாகக் கூறப்படும் சொத்து என்பது, இன்னொருவருக்கும் வாரிசு முறைப்படி தரப்பட வேண்டிய காட்டு ராஜாங்கம் தானா?

'இயக்கத்திலே உள்ள எவரிடமும் எனக்கு நம்பிக்கையில்லை. எனக்கு, என் நம்பிக்கைக்கு உரியவர்களாக யாரும் தென்படவில்லை. இயக்கத்தை நடத்திச் செல்லும் தகுதியும் திறமையும் வேறு யாருக்கும் இருப்பதாக நான் எண்ணவில்லை. எனக்கு உங்கள் யாரிடமும் நம்பிக்கை கிடையாது; அது மட்டுமல்ல, எனக்கு மணியம்மை ஒருவரிடம்தான் நம்பிக்கை இருக்கிறது. எனவே, நான் அவர்களை என் 'வாரிசு' ஆக்குகிறேன், என் மனைவியாகப் பதிவு செய்வதன் மூலம்' என்று திட்டமாகக் கூறுகிறார்.

ஆனாலும், நாம் யோசிக்க வேண்டியவர்களாகிறோம். தலைவருடைய நம்பிக்கைக்கே பாத்திரமாக முடியாத

நாம், அவருடைய தலைமையின் கீழ் பணியாற்றி என்ன பயன் என்று. நம்மை நம்பாதவரை நாம் எப்படி நம்புவது? ஏன் நம்ப வேண்டும்? நம்மை, உன்னிடம் நம்பிக்கையற்றவருடன் இராதே, அவருடைய தலைமையிலே பணியாற்றாதே, ஓடு, ஓடு என்றுதானே கூறுகிறது? இதோ விரட்டப்படுகிறோம் நாம் கட்டிய கோட்டையிலிருந்து. நாம் பாடுபட்ட களத்திலிருந்து, தந்தை மக்களை விரட்டியடிக்கிறார், புதிய வாரிசு தேடிக்கொண்டு. உள்ளேயிருந்து கொண்டு அவர் உத்தரவிடுகிறார், 'இந்த அம்மை என் மனைவி. உங்களுக்குத் தலைவி. இருக்க இஷ்டமா இல்லையா?' என்று கேட்கிறார்.

இந்தத் திருமணம் எங்களை இழிவுபடுத்துகிறது. எங்கள் கொள்கையைப் பழிக்கிறது. இயக்கத்துக்குத் துடைக்க முடியாத பழியைத் தருகிறது. இது திருமணம் அல்ல. திருமணம் என்ற பேரால் ஓர் ஏற்பாடுதான் என்று பெரியார் சாக்குக் கூறுவது எங்கள் பகுத்தறிவைக் கேலி செய்வதாகவே நாங்கள் கருதுகிறோம். கட்சிக்காக அவர் செய்யப் போவதாகக் கூறும் ஏற்பாடு ஜனநாயகத்துக்கும் எங்கள் தன்மானத்துக்கும் சாவுமணி அடிப்பதாகும் என்று எண்ணுகிறோம். ஐந்து லட்ச ரூபாயும், சில வருஷ உழைப்பும், இடையே வந்த அம்மைக்குப் போய்ச் சேரும். அது பெரிய நஷ்டமல்ல. நமது மானம் நிலைக்கும். இதைவிட உருவான முறையிலே நம்மால் இயக்கத்தை நடத்திச் செல்ல முடியும். இயக்கம் நமது உழைப்பு- தலைவரின் சொத்து அல்ல. அவர் இயக்கம் என்று கருதி மணியம்மையிடம் தருவதாகச் சொல்வது இயக்கத்தின் கழிவுப் பொருளில் ஒன்று. இயக்கம் நமது வியர்வையிலும், கண்ணீரிலும் உழைப்பிலும் இருக்கிறது. அது எங்கும் போய்விடாது. இந்த அக்கிரமத்துக்கு நாம் பங்காளிகளல்ல என்பதை உலகுக்குக் காட்டிவிட்டு, பறிபோனது போக மிச்சமிருப்பதை வைத்துக்கொண்டு, உழைத்தது போக மிச்சமீதியிருக்கும் வலிவைக் கொண்டு நாம் தன்மான இயக்கத்தைக் கட்டிக்காக்க முடியும்.

இந்த நீண்ட அறிக்கை, உண்மை நிலையையும், காரண காரியங்களையும், உணர்வுகளையும் உள்ளடக்கியிருந்தது. தனது வழக்கப்படியே வரைவு அறிக்கையை அண்ணா தன் தோழர்களுக்கு

- குறிப்பாக நாவலர் நெடுஞ்செழியன், சி.வி.ராஜகோபால் மற்றும் அரங்கண்ணல் ஆகியோருக்கு - வாய்விட்டுப் படித்துக் காண்பித்தார். பின்னர் அது அச்சுக் கோப்பதற்காக அச்சுக்கூடத்துக்கு அனுப்பப்பட்டது.இதைத் தொடர்ந்து 'கண்டனக் கணைகள்' என்ற தலைப்பில், 'திராவிட நாடு' இதழில், திருமணத்தைக் கண்டித்தோரின் பட்டியல் நான்கைந்து பக்கங்கள் வெளியாகியிருந்தது.

'ஏன் நெடுஞ்செழியன், நாம் பெரியாரைக் கண்டிக்கிற அளவுக்கா வளர்ந்துவிட்டோம்? அவருடைய முடிவு கேட்டுத் திகைத்துத் தடுமாறியல்லவா நிற்கிறோம்! அடுத்த வாரத்திலிருந்து 'கண்டனக் கணைகள்' என்று தலைப்புப் போடாதே, 'கண்ணீர்த் துளிகள்' என்கிற தலைப்பில் வெளிவரட்டுமே!' என்றார் அண்ணா. 'கண்ணீர்த் துளிகள்' திமுக-வை நையாண்டி செய்ய பெரியாருக்கு வசதியாக போயிற்று. பெரியாருடனான தனது உறவு முடிவுக்கு வந்துவிடும் என்று எதிர்பார்த்தே 'ராஜபார்ட் ரங்கதுரை'யில் அண்ணா இந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியிருந்தார். கதையை அவர் இப்படி முடித்திருந்தார்: 'கடைசியில் அவர்களுடைய ஒத்துழைப்பு வெறும் கண்ணீர்த் துளியில்தான் முடிந்தது'. ஆனால், இப்போது அண்ணா மட்டுமே அழுதுகொண்டிருந்தார். பெரியார் அவரைச் சட்டை செய்யாததோடு, தன் செயல் குறித்து நம்பிக்கையுடன் இருந்தார்.

பெரியாரின் பதில் ஜூலை 7 அன்று வந்தது. ஆனால், அதில் அவர் தன் ஜூன் 19, 28 அறிக்கைகளை மேலும் விளக்கியிருப்பதாகச் சொன்னார்.

> என்னைப் பற்றி, இயக்கத்தைப் பற்றி, இயக்க நடப்பு பற்றி, எனக்குப் பின்னால் இயக்கம் நடைபெற வேண்டும் என்பது பற்றியும் விளக்கி இருக்கிறேன்.
>
> மேலும் அதே 28-ம் தேதி அறிக்கையில், 19-ம் தேதி அறிக்கையில் நான் குறிப்புக் காட்டி இருக்கிறபடி, (ஏற்பாடு என்பதற்குப் பொருள் நன்றாக விளங்கும்படியாகவே) 'எனக்கும் எனது பொருளுக்கும் சட்டப்படியான ஒரு வாரிசை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம்' என்று எழுதிவிட்டு அதன் கீழேயே அந்த வாரிசுக்கும் இயக்கத்துக்கும் என்ன சம்பந்தம் ஏற்படும் என்பதைப் பற்றியும் தெளிவுபடுத்தி இருக்கிறேன். அந்த வாரிசு உரிமையையும், தனிப்பட்ட உரிமையையும் மற்றும் 5 பேர்களையும் சேர்த்து இயக்க நடப்புக்கும் பொருள் பாதுகாப்புக்கும்

ஒரு டிரஸ்ட் பத்திரம் எழுத ஏற்பாடு செய்திருக்கிறேன். இப்படி எழுதியிருப்பதில் நான் மற்றவர்களை அலட்சியப்படுத்தியதாகவும், இயக்கத் தலைமைப் பதவியை மணியம்மைக்குப் பட்டம் சூட்டப் போவதாகவும் பொருள் கொள்வதற்கு இடம் எங்கே இருக்கிறது?

டிரஸ்ட் என்பது 5 - 6 பேர் கொண்ட டிரஸ்ட் ஆகும். அதில் ஒருவர் என் வாரிசு என்று நான் கருதிக் குறிப்பிட்டேன். மற்றபடி இது இயக்கத் தலைமைக்கு அல்ல.

நம்பிக்கையான ஆள் என்றது முழுநேர உழைப்பும் ஒரே நிலையான உறுதியும், பொறுப்பும், ஓய்வு - ஒழிவு எதிர்பாராமல் இதே வேலையில் தொண்டாற்றும் தன்மையும், தளரா உள்ளமும் உள்ளவர்களைக் காண முடியவில்லை. ஆகவே மிக ஜாக்கிரதையாக, பொறுப்பாக சிந்தித்துப் பார்த்து முடிவுக்கு வரவேண்டும்.

நாளைக்கு இயக்கத்தை யார் வேண்டுமானாலும் கைப்பற்றிவிடலாம். அது ஒருவர் கையிலேயே இருக்க வேண்டுமானால், அதாவது ஏற்ற ஒரு லட்சியத்திலேயே இருக்க வேண்டுமானால் நிதியும் அதைவிட முக்கியமான, திடமாக நடத்துகிறவர்களும் வேண்டும். அல்லது இயக்கப் பொருள் வேறு கொள்கைக்காரர்கள் கைக்குப் போகாமல் பாதுகாப்பாவதும் வேண்டும். எதற்கும் மெஜாரிட்டியே போதாது. ஆத்திரமே போதாது. மக்களை ஆத்திரத்துக்கும் ஆவேசத்துக்கும் கிளப்பிவிடும் தந்திரங்களே போதாது.

ஆதலால், பொறுப்புள்ள அறிஞர்கள், இளைஞர்கள் இதை கவனித்து நடந்துகொள்ள வேண்டுகிறேன்.

ஆகையால் இந்தத் திருமணப் பொருத்தத்தை அல்லது மணியம்மையை ஏமாற்றுகிற திருமணமும் அல்ல. ஏன்? பொருந்தாத திருமணமும் அல்ல. மணியம்மை உட்பட யாருக்கும் எந்த விதமான நிர்ப்பந்தமோ, அவருக்கு இஷ்டமில்லாத துன்பங்களை சகித்துக் கொண்டிருக்க வேண்டிய, அதாவது வாழ்நாள் அடிமைத் தன்மைக்கு ஆளானதோ ஆன திருமணம் அல்ல.

> என்னைப் பற்றியோ, என் புகழைப் பற்றியோ என் குணத்தைப் பற்றியோ நீங்கள் யாரும் கவலைப்பட வேண்டாம். இயக்கத்துக்கும் எனக்கும் விசுவாசமாக நீங்கள் நடந்துகொண்டீர்களா என்று உங்களையே நீங்கள் பரிசோதனை செய்துகொள்ளுங்கள். மீதியை என்னிடம் விட்டுவிடுங்கள்!

-என்று அறிவுரை கூறியிருந்தார்.

பெரியாரின் செயலும் அறிக்கையும், அந்தரங்கம், தனி மனித சுதந்திரம் ஆகிய விஷயங்களில் தமிழ்ச் சமுதாயம் அதுவரை அறிந்திராத அளவுக்கு அவரை வித்தியாசமான மனிதராகக் காண்பித்தன. ஈ.வெ.ரா.வுக்குள் ஒரு புரட்சியாளர் இருந்தார். தன் மனைவி நாகம்மையிடம் தாலியைக் கழற்றிவிடச் சொன்னபோதே அவருடைய புரட்சி மனப்பான்மை வெளிப்பட்டது. அவர் மணியம்மையை இயக்கத்துக்குத் தலைவராக்கியதுதான் பிரச்னையாக உருவாயிற்றே தவிர, மணியம்மையைத் திருமணம் செய்து கொண்டது அல்ல. ஈரோடு மாநாட்டில் அவர் பேசியது, வைதாலும் வாழ்த்தினாலும் மிகையாகச் செய்யும் அவருடைய குணத்தைக் காண்பித்தது. அண்ணாவுக்கோ தாம் ஏமாற்றப்பட்டோம் என்ற உணர்வைத் தவிர்க்க இயலவில்லை. ஆனால், வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது மாதிரி, முதலில் ஜூலை 13-ம் தேதி 'விடுதலை'யிலும், பின்னர் ஜூலை 16-ம் தேதி 'குடியரசு' இதழிலும், 'திருமண எண்ணம்' என்ற தலைப்பில் பெரியார் இவ்வாறு அறிக்கை வெளியிட்டு அவமதித்திருந்தார்:

> என் ஆயுள் உள்ள வரையிலும், சுயநலக்காரர்களுக்கும், இயக்கத்தால் பணம், பதவி, பெருமை பெறலாம் என்று அவசரப்படுபவர்களுக்கும், தன்னிஷ்டப்படி இயக்கத்தைத் திருப்பிக் கொள்ளலாம் என்று கருதுபவர்களுக்கும், இயக்கத்தின் பேரால் பணம் வசூல் செய்து வயிறு வளர்ப்பவர்களுக்கும், சில மைனர்களுக்கும் பெரிய சங்கடமாயிருந்ததால், என்னைக் கொன்றுவிடுவதைத் தவிர, வேறு வழி சாத்தியம் அற்றதாகிவிட்டது.
>
> இந்தக் கொலை ஏற்பாட்டுக்கும் காரணம் என்னிடம் கொஞ்சம் பணமிருக்கிறது. அதோடு, அதிசயிக்கத்தக்க வண்ணம் என் உடல்நிலை நோய்நொடி இல்லாமல், நல்ல உழைப்புக்குப் பயன்பட்டுவருகிறது. என் ஆயுளும் எப்படியோ வளர்ந்து வருகிறது.

கோடை காலம்

சோதனை மிகு
வளர்ச்சிப் பயணம்!

11

பிறந்தது தி.மு.க.



திராவிடர் கழக நிர்வாகக் குழுக் கூட்டம் 10.7.1949 அன்று திருச்சியில் தி.பொ.வேதாசலம் இல்லத்தில் கூடியது. 46 நிர்வாக உறுப்பினர்களில், 32 பேர் வந்திருந்தனர். மேலும், இயக்கத்தில் தீவிரம் கொண்ட 500-க்கும் மேற்பட்டோர் கூடியிருந்தனர். பெரியாரோ ஒருநாள் முன்னதாக 9.7.1949-ல், யாரும் அறியாத வகையில், இயக்கத் தோழர் சி.டி.நாயகம் இல்லத்தில், திருமணப் பதிவாளர் முன்னிலையில், மணியம்மையைத் திருமணம் செய்துகொண்டிருந்தார். இதை அறியாத நிர்வாகக் குழு, திருமணத் திட்டத்தைக் கைவிடக்கோரி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. ஒரே ஒருவர் மட்டும் வாக்கெடுப்பில் பங்குகொள்ளவில்லை. தீர்மானம் நிறைவேறும் அதேசமயத்தில் பெரியார் - மணியம்மை திருமணம் நடந்துவிட்ட தந்தியும் திருச்சிக்கு வந்து சேர்ந்தது! "அனைவரும் கொதிப்படைந்திருந்த நேரத்தில், "அமைதியாகச் சிந்தியுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். நானே அவசரமாகக்

காரியம் செய்துவிட்டேன் என்று சிலரால் எண்ணப்படுகிறேன் என்றால், இந்தப் பிரச்னையில் திடீர் முடிவுகள் எடுப்பது எவ்வளவு தீங்கு விளைவிக்கக் கூடியது என்பதைத் தோழர்கள் சிந்திக்கவேண்டும்" என்று தனக்கே உரிய பெருந்தன்மையோடு, கழகத் தோழர்களை அண்ணா கேட்டுக்கொண்டார்.

ஆனாலும், தொடர்ந்து ஒரு கசப்பான சூழ்நிலையே இருந்து வந்தது. 13.7.1949 'விடுதலை'யில், 'திருமண எண்ணம் தோன்றுவதற்குக் காரணமும், அவசர முடிவும்' என்ற தலையங்கத்தில், தம்மையும், மணியம்மையையும் கொல்ல யாரோ சதி செய்கிறார்கள் என்று பெரியார் மறைமுகமாக அண்ணா மீது பழிசுமத்தியிருந்தார். இதில் வேதனையுற்ற அண்ணா, பெரியார் மீது அவதூறு வழக்குத் தொடர்ந்தார். 6-வது மாஜிஸ்ட்ரேட் கோர்ட் விசாரணையைத் தொடங்கியதும் பெரியாரின் வழக்கறிஞர் கைலாசம், "அண்ணாதுரையைக் குறிப்பிட்டு, பெரியார் எதுவும் எழுதவில்லை" என்றார். மாஜிஸ்ட்ரேட், அண்ணாவின் வழக்கறிஞர் ஜெகநாதனை நோக்கி, ''என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்க, அதற்கு அண்ணாவின் வழக்கறிஞர், "அண்ணாதுரையைப் பற்றி ஏதும் அந்தக் கட்டுரையில் பெரியார் குறிப்பிடவில்லை என்றால், மனுவில் குறிப்பிட்டிருப்பது போல அதுவே போதும். வழக்கை முடித்துக்கொள்வோம்" என்றார். இதற்கிடையே ஜூலை 19-ம் தேதி, வெளியிட்ட தனது நெடிய அறிக்கையில் இரண்டு வருடங்களுக்கு முன்பாகவே ஓர் ஏற்பாடு தேவை என தான் உணர்ந்துகொண்டதாகச் சொன்னார் பெரியார்:

''இயக்கம் செயல்பட ஏதாவது ஏற்பாடு இருந்தால்தான் முடியுமே ஒழிய, இப்போது போல ஒரு தனி மனிதனிடம் இருக்கும் மரியாதையால் இனி இயக்கம் நடத்த முடியாது என்கிற எண்ணம் எனக்கு ஏற்பட்டு இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன, அப்படிப்பட்ட தனி மனிதனை மக்கள் இனி உருவாக்கவும் மாட்டார்கள் என்பதும் என் முடிவாகிவிட்டது" என அதில் குறிப்பிட்டு இருந்தார்.

ஈரோட்டில் புகழ்ச்சியால் குளிப்பாட்டிய பெரியாரா இப்படி அறிக்கை விடுகிறார் என்று திகைத்துப்போனார் அண்ணா: 'இப்போது அவரும் அவர் ஆதரவாளர்களும் கூறுகிறார்களே... ஆகஸ்ட் 15, கறுப்புச் சட்டை போடாதது, தூத்துக்குடி போகாதது, வேலைக்காரி, நல்லதம்பி எனும் கதைகள் தீட்டியது என்று ஒரு பட்டியல்! இவற்றுக்கெல்லாம் பிறகுதானே, ஈரோட்டில் பெட்டிச் சாவியைத் தந்தது? எப்படி முடிந்தது? இந்த 'துரோகி' ஈரோட்டில் பெட்டிச் சாவியைப் பெற்றானே! ஒரு தோழராவது, அப்போது

இன்று பேசும் 'துரோகம்' பற்றி எண்ணினார்களா? பெரியாருக்குத்தான் அப்படி எண்ணம் இருந்ததா? இருந்தால் அவர் கூறுவாரா, 'பெட்டிச் சாவியை ஒப்படைக்கிறேன்' என்று?"

அண்ணாவைப் பற்றி பெரியார், இரு வகையான எண்ணம் கொண்டிருந்தார் என எண்ணலாம். அண்ணா அசாத்தியமான திறமை கொண்டவர்; ஆனால், தான் எதிர்பார்த்தபடி கண்ணை மூடிக்கொண்டு தம்மைப் பின்பற்றுபவரல்ல என்று பெரியார் அறிந்துகொண்டார். மேலும், 'அண்ணா ஓர் உல்லாச மனிதர்' என்றும் பெரியாருக்கு ஏனோ மனதில் பட்டிருந்தது. பொதுநலத்தால் இணைந்திருந்தாலும், உருவான விதங்கள் வேறானதால், அவர்களின் இலக்கும் போக்கும், வேறுபட வேண்டும் என்பதே விதியானது. பெரியார் சீர்திருத்தவாதி; அண்ணாவோ சீர்திருத்தம் விழையும் அரசியல் தலைவர். ஒருவர் கண்டிப்பானவர் - கண்ணை மூடிக்கொண்டு தன்னை எல்லோரும் பின்பற்ற வேண்டும் என எதிர்பார்ப்பவர்; மற்றவர் மிகுந்த தன்னம்பிக்கையோடு, இப்படிச் செய்துதான் தீரவேண்டும் என்ற முடிவுக்குத் தள்ளப்படும்வரை, எதிர்ப்பைத் தாக்குப்பிடிக்கும் பண்புள்ளவர்; உதாரணம்: 1961-ல் ஈ.வெ.கி. சம்பத் கருத்து வேறுபாடு காரணமாகப் பிரிந்துபோனது. ஒருவர் அவசரக்காரர், கொள்கைத் தீவிரத்தின் விளிம்புக்கும் போகக் கூடியவர்; மற்றவரோ நிதானமாக பிரச்னைகளை மிதவாதியாக அணுகக் கூடியவர். பெரியார் தனிப்பட்ட போக்குள்ளவர்; அண்ணாவோ தன்னோடு பலரையும் அணைத்துச் செல்லும் பண்புடையவர். பெரியாரோ பொது மக்கள் கருத்தைப் பற்றிக் கவலை கொள்ளாதவர்; அண்ணாவோ அதைப் பற்றிய அக்கறையுள்ளவர். ஒருவர் எதையும் அப்படியே நம்பிவிடுவார்; இன்னொருவர் யோசித்தே முடிவெடுப்பார். ஒருவர் அதிகாரம் தீமையானது என்பார்; இன்னொருவர் அதைக் கருவியாகப் பயன்படுத்தவேண்டும் என்பார். இருவருமே காந்தமாகப் பிறரை ஈர்க்கும் கவர்ச்சி மிக்கவர்கள்; சாதனை புரியும் வேட்கையும், சமுதாயத்துக்குப் பயன்படவேண்டும் என்ற பேராசையாலும் உந்தப்படுபவர்கள்.

அண்ணா பற்றிய ஈ.வெ.ரா.வின் சந்தேகங்கள் எல்லாம் ஈரோடு நிகழ்ச்சிக்குப் பின், முனைப்புப் பெற்றன. இதில் குளிர்காய நினைத்தவர்கள் அவருடைய சந்தேகத் தீயைக் கிளறிவிட்டு, தீய விளைவுகளை ஏற்படுத்தினார்கள். பெரியார் முழுவதுமாக மாறியிருந்தார். நம்பிக்கை துரோகம் பற்றியும் இயக்கத்துக்கு அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றவேண்டிய அவசியம்

பற்றியும் இப்போது அடிக்கடி பேசினார். இவற்றைப் பற்றி, ஈரோட்டில் அவர் எதுவும் சொல்லவில்லை.

கட்சியில் அவருடைய தலைமையையும் சட்டாம்பிள்ளைத் தனத்தையும் இளைய தலைமுறையினர் சிலகாலம் சகித்துக்கொண்டார்கள். அவர் ஒதுங்கி வழிவிடுவது என்ற பேச்சு அடிபடத் தொடங்கியவுடன், அவர்களும் அவரைப் பற்றி வெளிப்படையாகப் பேசத் தொடங்கியிருந்தனர். ஈ.வெ.ரா.வோ அவர்களை 'எதிரிகள்' என முத்திரை குத்தினார். முத்தாய்ப்பாக "இயக்கம் எப்படி இருந்தாலும், இயக்கத்துக்கு யார் தலைவராக இருந்தாலும் என்னுடைய கொள்கைகளும், கொள்கைக்கு ஏற்ற பிரசாரமும் எனக்குப் பின்னும் நடக்கவேண்டும் என்கிற பேராசை எனக்கு உண்டு. மேற்கண்ட எல்லாக் காரணங்களாலும் நான் ஓர் ஏற்பாடு செய்ய எண்ணினேன். இந்த ஏற்பாட்டுக்கு சம்பத்தை பலதடவை நினைத்தேன். அவன், இயக்கத்தையும் என்னையும் விட்டுவிட்டு எதிரிகளினுடைய கையாளாகிவிட்டான். மகா சூதனாகவும் காணப்பட்டுவிட்டான்" என்று தனது அண்ணன் மகனையே குறிப்பிட்டார். (சம்பத் தி.மு.க.விலிருந்து வெளியேறிய பின் "அந்தக் கூட்டத்தில் சேர்ந்திருந்தும்கூட நாணயமாகவே இருந்திருக்கிறான்" என்று சம்பத்தை சிலாகித்துப் பேசினார். - *20.10.1961* 'விடுதலை') பெரியாரைவிட நாற்பத்தைந்து வயது குறைவான சம்பத், கட்சியில் இருந்த கலைஞர் கருணாநிதி, பேராசிரியர் அன்பழகன் போன்ற தன் வயதையொத்த தோழர்களின் நட்பை விரும்பியிருந்தால் அதில் வியப்பில்லை.

அண்ணாவுடன் அவருக்கு நெருங்கிய நட்பு இருந்தது. ஆனால், ஈ.வெ.ரா. அதை அப்படிப் பார்க்கவில்லை. அவரைத் தன் வாரிசாக நியமிக்க இருந்த சமயத்தில், மற்றவர்கள் தனது திட்டத்தைத் தகர்க்க சம்பத்தை மூளைச்சலவை செய்துவிட்டதாகவே ஈ.வெ.ரா. கருதினார். இவ்வளவு நல்ல வாரிசுரிமை கிடைக்க இருக்கையில், சம்பத் எப்படி தன்னைப் பிறர் மூளைச்சலவை செய்ய அனுமதித்து இருப்பார் என்று புரியவில்லை. எது எப்படியிருப்பினும், அப்படித்தான் ஈ.வெ.ரா நம்பினார்; அதிர்ச்சியுற்றார். ஈ.வெ.ரா.வின் ஜூலை 19-ம் தேதி அறிக்கை அவரது அதிர்ச்சியை வெளிப்படுத்தியது:

> இந்த ஏற்பாட்டில் இன்று சென்னையில் தங்களுக்குள் ஒற்றுமை இல்லாவிட்டாலும், என்னை எப்படியாவது ஒழித்துக்கட்டிவிட வேண்டும் என்ற காரியத்தில் - கருத்தில் சிறிதுகூட பேதமில்லாத ஒற்றுமை கொண்ட கூட்டத்தையும், பொறுப்பற்ற, அவர்களுடைய

வெளியூர் நண்பர்களையும் கண்டிப்பாக நான் சேர்க்கமாட்டேன் என்றும், அநேகமாக அவர்கள் அந்த ஏற்பாட்டில் விலக்கப்பட்டே போவார்கள் என்றும் அவர்களுக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது. அதற்காக அவர்கள் இந்த ஐந்தாறு மாதங்களாக - 3 மாதங்கள் மிகச்சிறப்பாக - ஊர் ஊராகக் கட்சி சேர்த்தார்கள். இந்த நிலையானது நான் எல்லாத் தலைவரையும், தொண்டரையும் தயவு - தாட்சண்யம் இன்றி நடத்தி வந்ததாலும், அவர்கள் யாராக இருந்தாலும் மிகவும் கண்டிப்புடன் இருந்து வந்ததாலும், என்னிடம் வெறுப்பும் துவேஷமும் கொண்டிருந்த மக்களில், உல்லாசத்துக்கும் சுயநலத்துக்கும், பெருமைக்குமாகக் கட்சியில் இருந்து பயனடைந்து வருகிறவர்களுக்கு என் மீது சமயம் பார்த்துப் பழிவாங்கவேண்டிய அளவு ஆத்திரம் ஏற்பட்டிருந்தது. அதிலும், பேச்சாளர், எழுத்தாளர் ஆகிவிட்டதாகக் கருதிக்கொண்டு இருப்பவர்களுக்கும், பேசுவதற்காகவே பல ஊர்களில் இருந்து அடிக்கடி அழைக்கப்படுகிறவர்களுக்கும் நான் எதிரியாகவே காணப்பட்டதால், இந்தக் கூட்டமும் சேர்ந்து, எதிரிக்கும் கையாட்களாக ஆகி, ஓர் ஐக்கிய முன்னணி அமைத்துவிட்டார்கள்.

இதன் பயனாக அவர்களிடம் விசுவாசமற்ற தன்மையையும் பொய் பக்தி காட்டும் தன்மையையும் நான் தெளிவாகக் கண்டு வந்ததோடு, வெளியில் அவர்கள், என்னைப் பற்றிப் பேசுவதையும், கட்சி சேர்ப்பதையும் நான் அடிக்கடி கேள்விப்பட்டு வந்தேன்.

இவை எல்லாவற்றுடன், இந்தி எதிர்ப்பில் இந்தக் கூட்டம் செய்து வந்த துரோகமும் சேர்ந்து, என் உணர்ச்சியையும் ஊக்கத்தையும் குறைத்து வந்ததோடு, இப்படிப்பட்ட ஆட்களை வைத்து இனி கட்சியில் ஒரு காரியமும் செய்யமுடியாது என்று கருதி, சீக்கிரம் ஏதாவது ஒரு கட்டுப்பாடான முடிவு எடுக்கவேண்டிய அவசியத்துக்குத் தூண்டிவிட்டது. கடைசியாக கோவை மாநாட்டில் மேடையிலும் தனிமையிலும் இதைச் சொல்லிவிட்டேன். அவ்வளவுதான் தாமதம். உடனே விஷமப் பிரசாரத்துக்குக் கட்டுப்பாடாக ஆரம்பித்துவிட்டார்கள். முதன்முதலாக தஞ்சையில்

திராவிட மாணவர் மாநாட்டில் கொட்டி விட்டார்கள்.

இதை 'விடுதலை'யிலும் தந்திரமாகப் பிரசுரித்துவிட்டார்கள். மற்றும் சில சங்கதிகள் என் காதுக்கு வந்தவுடன் அதைக் கண்டிக்கும் முறையில் ஒரு குறிப்பு எழுதச் செய்து, 'விடுதலை' பத்திரிகையில் போடும்படி சென்னைக்கு அனுப்பினேன். அதில் ரகசியம் என்று எழுதி அனுப்பினேன். அது போடப்படவில்லை. அதுமாத்திரமல்லாமல், உரியவரல்லாதவர் ரகசியமாக அதைப் படித்துப் பார்த்து, உடனே யாரைப் பற்றிப் போடும்படி எழுதினேனோ அவருக்குச் சேதி கொடுக்கப்பட்டு, நேரில் போய்க் காட்டப்பட்டு உஷார் படுத்தப்பட்டு விட்டது.

அந்தச் சேதி சரியானபடி பிரசுரித்திருந்தால் இன்றைய சம்பவங்கள் இவ்வளவு சீக்கிரத்தில் நடந்திருக்காது. எதிரிகளுக்கும் இவ்வளவு செல்வாக்கு ஏற்பட்டு இருக்காது.

இந்த நம்பிக்கை துரோகத்தை அறிந்து தாம் ஆடிப்போய்விட்டதாக பெரியார் குறிப்பிட்டார். அந்தக் குறிப்பில் இடம்பெற்ற சில பெயர்களில் கலைஞர் கருணாநிதி, பேராசிரியர் அன்பழகன் இருந்தனர். அந்தப் 'பட்டியலில்' அண்ணாவின் பெயரும் இருந்ததாகப் பின்னர் 'விடுதலை' குறிப்பிட்டிருந்தது!

அண்ணாவும் பிற தொண்டர்களும் வெளியேறுவது குறித்து தான் சிறிதும் கவலை கொள்ளவில்லை எனச் சொல்லும் வகையில் 'விடுதலை'யில் பெரியார் இப்படி எழுதியிருந்தார்:

"ஜீவானந்தம் போனார், சாமி சிதம்பரனார் போனார், கோவை அய்யாமுத்து விட்டுவிட்டுப் போனார். பொன்னம்பலனாரும் ஓடிவிட்டார். கே.எம்.பாலசுப்பிரமணியம் என்ன ஆனார்? ராமநாதன் போனாரே... இப்படி என்னை விட்டுவிட்டு, ஒவ்வொருவரும் ஓடியதால் நான் என்ன ஒழிந்தா போய்விட்டேன்? இந்த அண்ணாதுரை போனால் போகட்டுமே!"

அண்ணாவோ, "ஏன் அரங்கண்ணல்? இப்படி ஒவ்வொருத்தனும் போனான் போனான் என்று பெருமையாக எழுதியிருக்கிறாரே, இருக்கிறவனையெல்லாம் போகச் சொல்லிக் கொண்டே இருப்பதில் என்ன பெருமை இருக்கிறது? வைத்திருப்பது அல்லவா ஒரு தலைவர் செய்யவேண்டிய காரியம்! நீ மறுபுறம் யோசி. இப்படிப் போனவர்கள் எல்லாம் போகாமல் அய்யாவோடு

இருந்திருந்தால், இயக்கம் இந்தநேரம் எப்படி இருந்திருக்கும்!" என்று அரங்கண்ணலிடம் வேதனைப்பட்டார்!

முதல் அடி

வேதனைக்கு இடையிலும், தான் எதிர்வினையாற்றும் காலமிது என்று அண்ணாவுக்குத் தெரிந்தேயிருந்தது. விடுதலைக்கு பதிலளிக்க, 10.8.1949-ல் அண்ணாவை ஆசிரியராகக் கொண்டு 'மாலை மணி' நாளிதழ் வெளிவந்தது. உதவி ஆசிரியர்களாக இரா.நெடுஞ்செழியன், காஞ்சி கல்யாணசுந்தரம், பூ.கணேசன், வேலவன், நாகபூஷணம் ஆகியோர் பணியாற்றினர். கட்சி இதழ் ஆரம்பிப்பது என்பதை எளிதாக முடிவெடுக்க முடிந்தது. மற்றபடி, பலரும் 'ஈ.வெ.ரா.விடமிருந்து திராவிடர் கழகத்தைக் கைப்பற்ற வேண்டும்' என்று வாதாட அண்ணாவுக்கு இது பெருத்த சங்கடத்தைத் தந்தது. பத்து வருடங்களுக்குப் பிறகு அண்ணா அதை இப்படி நினைவுகூர்ந்தார்:

> திராவிட முன்னேற்றக் கழகம் என்று பெயரிட்டுக்கொண்டு, முன்பு போலவே நாம் தொடர்ந்து பணியாற்றவேண்டும் என்று, சென்னை முத்தியாலு பேட்டையில், ஓர் இல்லத்தில், ஆலோசனைக் கூட்டம் நடத்தியபோது, நான் சொன்ன நேரத்தில், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களிலிருந்து பொறுமைக்கு இருப்பிடம் எனத் தகும் நமது பொதுச் செயலாளர் வரையிலே, கொதித்தெழுந்து, கோபம் கொப்பளிக்கும் நிலை பெற்று, நாம் ஏன் பெயர் மாற்றிக்கொண்டு போகவேண்டும்? நமக்குத்தான் ஜனநாயக முறைப்படி பழைய பெயர் சொந்தம் என்று வாதாடிய காட்சி இப்போதும் நான் காண்கிறேன்.

அண்ணா கட்சித் தலைவராகப் பொறுப்பேற்று, கழகத்தின் சொத்துகளைக் கைப்பற்ற வேண்டும் என்றார் பாரதிதாசன். அண்ணாவின் குணாதிசயம் அதை ஏற்கவில்லை. 'லேபிள் வேண்டாம்' என்று உருவகக் கதை எழுதியவர் அல்லவா அவர்? பெயருக்காக, சொத்துகளுக்காக, தலைமைக்காகப் போராட்டம் என்பதெல்லாம் அவருக்கு உடன்பாடல்ல. அண்ணாவுக்கு நாற்பது வயதே ஆகியிருந்தது. அண்ணா, பெரியார் மீது மதிப்பும் பிரமிப்பும் கொண்டிருந்தார். அவரை மட்டுமே தலைவராக ஏற்றுக் கொண்டிருந்தார். தன் தலைவருடைய செயலால், அவர் மனம் நொந்துபோயிருந்தார் என்றாலும், பெரியார் மீது சினமும் ஏமாற்றமும் கொண்டவர்களிடம், 'பாருங்கள், அய்யாவின்

அனுபவம் ஏராளம். அவர் வயதானவர். அவருடைய பிராமணர் எதிர்ப்பு அசாதாரணமானது. அவர் அறியாமை இருளை அகற்ற வந்த பகுத்தறிவுப் பகலவன். அவருடைய கொள்கைகளையா நாம் எதிர்க்கிறோம்? அல்ல. நாம் அவருடைய செயலைத்தான் எதிர்க்கிறோம். அவருடைய கொள்கைகள் புனிதமானவை, புதுமையானவை. இவற்றை எல்லாம் நமக்கு போதித்தவர்தான் பெரியார். அல்லவா?' என்பார் அண்ணா.

இதற்கிடையே, ஆகஸ்ட் 7-ம் தேதி, திருச்சி மாவட்ட பத்தொன்பதாவது திராவிடர் கழக மாநாட்டில், பெரியார் தன் அசைக்கமுடியா வாதங்களை மிகவும் ஆணித்தரமாக எடுத்துவைத்தார்:

> ஆகவே தோழர்களே, இந்தத் திருமணம் என்பது பிள்ளைப் பேற்றிற்காகச் செய்துகொள்ளப்பட்டதும் அல்ல, இயற்கை இன்ப உணர்ச்சிக்காகச் செய்துகொள்ளப்பட்டதும் அல்ல என்பதோடு, வாழ்க்கைத் துணைக்காகவே செய்துகொள்ளப்பட்டது என்பதை அறிந்துகொள்ள வேண்டுகிறேன். ஆகவே இது, எனது வாழ்க்கை லட்சியம் செவ்வனே கை கூடுவதற்கான உதவி பெற, அதற்கான பணியை மேலும் பலன் உண்டாகும்படி, திறமையுடன் செய்வதற்கான உதவிபெற, ஓர் உற்ற துணையைத் தேடிக்கொண்ட 'திருமணம்'. மற்றும் எனது உடல் பாதுகாப்புக்கும், பொருள் பாதுகாப்புக்கும், உயிர் பாதுகாப்புக்கும் வசதியும் நம்பிக்கையும் உள்ள துணை வேண்டாமா? அதற்காகவும் பொருளைப் பாதுகாத்து என் கருத்துக்கு இசைய பயன்படுத்தி வரவும், இன்றைய நிலையில் எனக்கு ஒரு நம்பிக்கையான துணைவர் வேண்டும் என்றால், வேண்டாம் என்று சொல்ல எவருக்குத்தான் உரிமை உண்டு? எவரைத்தான் நான் கேட்டுச் செய்யவேண்டும்? அப்படித்தான் யாரையேனும் கேட்டுச் செய்ய எனக்கு என்ன அவசியம் இருக்கிறது? கேட்கவேண்டும் என்று சொல்ல யாருக்குத்தான் உரிமை இருக்கிறது? என் இஷ்டத்துக்கேற்ப வாழ்க்கைத் துணை தேடிக்கொள்கிறேன். இது என் சொந்த விஷயம். இதில் அன்னியர் பிரவேசிப்பது எவ்வளவு அநாகரிகமானது என்பதுகூட தெரியாதவர்கள் எப்படி பகுத்தறிவுவாதிகள், சீர்திருத்தவாதிகள் ஆவார்கள்? அப்படிப்பட்டவர்கள் எப்படி

மக்களுக்குப் பகுத்தறிவை, ஒழுங்குமுறையை போதிக்கத் தகுதியுடையவர்கள் ஆவார்கள்? இப்படிப்பட்ட விஷயங்களில் இது தப்பு, அது சரி என்று சொல்ல என்னைவிட அனுபவமும், பொறுப்பும், கவலையும் கழகத்தில் வேறு யாருக்கு இருக்குமுடியும்?

பிறர் இஷ்டத்துக்கா நான் துணை தேடுவது? மற்றும் நான் 'திருமணம்' இல்லாமல் 16 ஆண்டுகள் இருந்துவிட்டு, 17-ம் ஆண்டில் துணை தேடக் காரணம் என்னவென்று, 'ஏன் திருமணம்?' என்று கேட்பவர்கள், சிந்திக்க அறிவைப் பயன்படுத்த வேண்டாமா? துரோகத்துக்கும், வஞ்சகத்துக்கும் இதையா பயன்படுத்திக்கொள்வது..? அடுத்தாற்போல, இந்த வேறுபாட்டினால் சீர்திருத்தமுறை ஒன்றும் கெட்டுப்போக ஒரு காரணமும் இல்லை. எந்தக் கொள்கை கெட்டுவிட்டது..? இந்தப் பதிவுத் திருமணத்தின் மூலம் எந்தக் கழகக் கொள்கையைத்தான் நான் விட்டுக் கொடுத்துவிட்டேன் என்று தெளிவாக எடுத்துச்சொல்லி இவர்கள் மெய்ப்பிக்கட்டுமே! குறைகூறும் இவர்கள், தான் கழகக் கொள்கைகளுக்குச் சிறிதும் மாறுபடாமலே நடந்து வந்திருப்பது குறித்து யோசித்துப் பார்க்கட்டுமே! கழகத்தவர்களில்தான் எத்தனை பேர் கழகக் கொள்கைகளின்படியே எப்போதும் தவறாமல் நடந்து வருகிறார்கள்..? ஆனால், உண்மையாக திராவிடர் கழகம் இன்னும் அதிகமான பரிசுத்த நிலையைத்தான் அடைந்து கொண்டு இருக்கிறது. திராவிடர் கழக வளர்ச்சியைக் கெடுத்துவரும் காளான்கள் தாமாகவே கருகிப்போகும் அளவுக்குக் கழகம் நயம்பெற்று வரும் காலம் இதுதான்.

தனக்குத் துணையாக அருகிலேயே இருந்த மணியம்மை, தாம் விட்டுச் செல்வதைக் கட்டிக் காப்பார் என்று சரியாகவே கருதினார். அவரை முழுமையாக நம்பினார். மணியம்மை, தன் வாழ்க்கையையே இவருக்குப் பாதுகாப்பளிக்கவும் பணிவிடை செய்யவும் அர்ப்பணித்திருந்தார். அவருக்கு அரசியல் ஆசை ஏதும் இல்லை. சம்பத்தை நினைத்துப் பார்த்த பிறகே பெரியார் அவரை எண்ணினார். தத்து எடுத்துக்கொள்வது சாத்தியம் இல்லை என்பதால், திருமணம் ஒன்றே வழியாக இருந்தது. இது மணியம்மையை சொத்துகளின் வாரிசுதாரராகவும் ஆக்கும்.

அதேசமயம், அவர் கைக்குக் கழகமும் போய்விடும். இதை மறுக்க பெரியார் வார்த்தை ஜாலம் செய்தாலும், அவரது இந்தச் செயலை எதிர்த்தவர்கள் இதை அறிந்தே இருந்தார்கள். அவர்கள் அவமானப்படுத்தப்பட்டு விட்டதாகவும், ஏமாற்றபட்டதாகவும் எண்ணினர். கவிஞர் கண்ணதாசனோ இப்படி எழுதினார்:

> பெரியாரின் திருமணம் ஒரு காரணமாகச் சொல்லப்பட்டாலும், தி.மு.க.வைத் துவக்க அது உண்மையான காரணம் அல்ல.
>
> பெரியாரின் தலைமையின் கீழ் தாங்கள் யாருமே தங்கள் பணியில் முன்னேறமுடியாது என்று கட்சியில் ஒவ்வொருவரும் வெறுப்பு அடைந்திருந்தார்கள்.
>
> அது அண்ணாவிடம் இருந்தது; கருணாநிதியிடம் இருந்தது; நெடுஞ்செழியனிடமும் இருந்தது; அன்பழகனிடமும். அதேபோல சம்பத்திடமும்.
>
> இந்தத் தலைவர்கள் எல்லோரும் பெரியாரிடமிருந்து வெளியேறி தி.மு.க.வுக்கு வந்தவர்கள். உண்மையில், பெரியாரிடம் இருந்தவர்களில் 70 சதவிகிதத்துக்கு மேல் தி.மு.க.வில் இருந்தார்கள். அன்றைய 'விடுதலை' பத்திரிகை அதைப் பற்றித் தலைப்புப் போடும்போது, 'எதிரிகளுக்கு பெரிய வெற்றிதான்' என்றே தலைப்புப் போட்டது.

திருமணம் காரணமாக சொல்லப்பட்டாலும், அதற்கு அசாத்திய சக்தி இருக்கத்தான் செய்தது. 'ஆகஸ்ட்டிலே (பெரியார்) தீட்டிய அறிக்கைக்குக் கிடைக்காத ஆதரவு, திருமணப் பிரச்னையின்போது அவர் வெளியிட்ட கருத்துக்குக் கிடைத்த காரணம் என்ன? என்று கேட்டார் அண்ணா. இருந்தாலும் பிளவு குறித்து, அண்ணா ஒன்றும் மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்கவில்லை. மிகுந்த விரக்தியே அடைந்திருந்தார். அவர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் இருந்தபோதும், பெரியாரின் இந்த அதிரடி நடவடிக்கைக்கு அவர் தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ளவில்லை. அரசியல் வாழ்வைவிட்டே விலகி, ஒதுங்கிவிடுவது என்ற முடிவுக்கு வந்து, காஞ்சிபுரம் சென்று தங்கிவிட்டார் அண்ணா.

ஆனால், அப்படி எதுவும் நடந்துவிடவில்லை. அண்ணாவைத் தொடர்ந்து சம்பத் காஞ்சிபுரம் சென்றார். தனிக்கட்சி தொடங்க அவரைத் தூண்டினார். அண்ணாவோ, சம்பத் உட்பட யாருடைய எதிர்காலத்தையும் வீணாக்க விரும்பவில்லை. அண்ணாவுக்குப் பதினைந்து வருடங்கள் இளையவரான சம்பத், இன்டர் மீடியட் படிப்புதான் முடித்திருந்தார். அதனால், அவர் பட்டப் படிப்புக்குச்

செல்வது நல்லது என்றும், அப்போதைய திக்கற்ற நிலைமை சம்பத்துக்கு கிடைத்த வாய்ப்பு என்றும் அண்ணா நம்பினார். சம்பத்திடம் மேற்படிப்பு படிக்க லண்டனுக்கு செல்லுமாறு கெஞ்சிக் கேட்டுக்கொண்ட அண்ணா, தான் சினிமாத் துறையில் கவனம் செலுத்துவதாகச் சொன்னார். ஆனால், சம்பத் வேறு திட்டங்கள் வைத்திருந்தார். என்.வி.நடராஜனுடன் சேர்ந்து, அண்ணாவின் மனதை மாற்றுவதில் வெற்றிகண்டார்: "இது சரியில்லை அண்ணா! எப்போதும் இப்படித்தானா? பொறுப்பேற்கத் தயக்கமா? இந்த நேரத்தில் நாம் கடமையைச் செய்யத் தயங்கினால், நாடு நம்மை நிந்திக்கும். விளையாட இது சமயமல்ல. வேதனையை மறக்க, பொழுதுபோக்குகளில் மூழ்கிவிடக் கூடாது."

விளைவு?

அண்ணா எழுதினார்: "என்ன செய்வேன்? சென்னை சென்றேன். செயலாற்ற இணங்கினேன். ஆனால், அப்போது பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதில் எனக்கோர் அச்சம் பீடித்து இருந்தது!"

சென்னைக்கு வந்தபின், சினிமா பித்தரான அண்ணா, ஆஸ்கார் விருது பெற்ற ஆல்ஃபிரெட் க்ரீனின் 1929-ம் வருடத்திய படம் 'டிஸ்ரேலி' பார்க்கச் சென்றார். 'தன்னால் தலைமை ஏற்று நடத்தவும் முடியுமோ!' என்று ஐயத்தோடு, பொறுப்பை ஏற்கத் தயங்குகிறான் பிரிட்டிஷ் அரசியல் தலைவன் டிஸ்ரேலி. திரையரங்கில் பக்கத்தில் அமர்ந்திருந்த சம்பத்திடம் அண்ணா கேட்டார்: "இப்போதாவது புரிகிறதா? இதோ, டிஸ்ரேலி எப்படி அச்சமடைகிறான், பார்! புதிய பொறுப்புகளை ஏற்க; காரியமாற்ற வேண்டிய கட்டம் வருகிறபோது, கவலை எப்படிப் பிறக்கிறது பார்! இதே நிலைதானே இப்போது எனக்கு ஏற்படச் செய்கிறாய்? என்னால் முடியுமா? ஏன் எனக்குத் தொல்லை?"

இதற்கு, சம்பத் அளித்த பதில் அண்ணாவைத் திடுக்கிட வைத்தது.

"சுமையை, பாரத்தைத் தாங்கப்போவது நான் ஒருவன்தான் என்று ஏன் அண்ணா நீங்கள் எண்ணிக்கொள்கிறீர்கள்? சுமையைத் தாங்கப்போவது நாம் - உம் மீது மட்டுமல்ல பாரம்" என்றார் சம்பத். அண்ணா சொன்னார்: "அந்தப் பதிலிலே பொதிந்துள்ள தத்துவம், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கே அச்சாணியாக அமைந்திருக்கிறது - 'நாம்' என்பது வலுவும் பொலிவும் கொண்ட ஒரு தத்துவம்."

புதிய கட்சியின் எதிர்காலம் பற்றி அறிய, சம்பத் ஒரு கருத்துக் கணிப்பு மேற்கொண்டார். அமெரிக்க ஆராய்ச்சியாளர் பார்னெட்டிடம் சம்பத் சொன்னார்: 'அந்த நாளில் தி.மு.க.

தோன்ற நான் முக்கிய சக்தியாக இருந்தேன். யாருக்கும் பெரியாரை எதிர்த்து நின்று ஒரு கட்சியை உருவாக்கத் துணிச்சல் இருக்கவில்லை. நாம் ஒரு கட்சி தொடங்கி, பெரியாருக்கு ஒரு பாடம் கற்பிக்கவேண்டும் என்றேன். கட்சியை எங்கெங்கே ஆரம்பிக்கலாம் என்று முக்கியமான இடங்களைத் தேடினேன். மாநிலம் முழுதும் நானே சுற்றுப் பயணம் மேற்கொண்டு கண்டறிந்த பின்னரே, அரசியலில் தொடருவது என்று முடிவெடுத்தோம். 1949-ல் இந்தக் கணிப்பு நடந்தது.' கருத்துக் கணிப்பு நம்பிக்கையளிக்க, பிறந்தது தி.மு.க. தொண்டர்கள் இல்லாத திராவிடர் கழகத்துக்கு மணியம்மை மட்டுமே பாதுகாவலராக அலங்காரப் பதவி வகிக்க, இயக்கம் அண்ணாவின் கைக்குள் வந்துவிட்டது. கே.கே.நீலமேகம் தலைமையில், செப்டம்பர் 17 அன்று கூடிய 46 உறுப்பினர்களில் 23 பேர் அதாவது திராவிடர் கழக நிர்வாகக்குழுவில் சரிபாதியினர் திராவிட முன்னேற்றக் கழகம் துவங்க முடிவெடுத்தனர். கட்சிக்கான பெயர் எதேச்சையாக உருப்பெற்றது.

"அப்போ ஒரு கட்சி ஆரம்பிக்கிற சூழ்நிலை வந்தாச்சு! அதுதானே உங்க எண்ணம்? அரங்கண்ணல், ஒரு 'பேடை'க் கொண்டா... சொல்லுங்கப்பா ஒரு பேர் கட்சிக்கு" என்றார் அண்ணா.

> திராவிட சோஷலிஸ்ட் கழகம் - திராவிட சமதர்ம கழகம் - திராவிட சமுதாயக் கழகம் - திராவிட தீவிரவாதிகள் கழகம் - இப்படி ஒவ்வொருவரும் மனதுக்குப் பட்டதைச் சொல்லலானோம். அண்ணா எல்லாவற்றையும் குறித்துக்கொண்டார். பிறகு, ஆங்கிலத்தில் பெயர்களைச் சொல்லிப் பார்த்தோம். அண்ணா கேட்டார்: 'திராவிடியன் ப்ராக்ரஸிவ் ஃபெடரேஷன். அதாவது, திராவிடியனும் ஃபெடரேஷனும் வருது, தமிழில் திராவிடர் முன்னேற்றக் கழகம்.' 'ரொம்ப நல்லாயிருக்கு!' என்று ஒரே குரலில் சொன்னார்கள். 'அதிலும் கொஞ்சம் யோசிங்க. திராவிடியன் என்று சொல்லலாமா? அதாவது, திராவிடர் என்பதா - திராவிட என்பதா?' என்று அண்ணா யோசிக்கச் செய்தார். 'ஆமாண்ணா! திராவிடர் என்றால், ஒரு குறுகிய வட்டத்துக்குள் அடங்கிவிடுவது. அதிலும், நாம் எல்லாம் ரேஷனலிஸ்ட்டுகள். பகுத்தறிவுக் கொள்கைகளை யார் ஒத்துக்கிட்டாலும் நம்ம கட்சியிலே இருக்கலாம். அய்யாவுக்கும் நமக்கும் இந்த விஷயத்திலே நிச்சயம் 'டிஃபரன்ஸ்' தெரிஞ்சே ஆகணும். அதனாலே,

'திராவிட' என்று நிலப்பகுதியைக் குறிக்கிறதுதான் ரொம்பப் பொருத்தம்' என்று மதியழகன் அந்த யோசனைக்கு இறுதி வடிவம் கொடுத்தார். 'அப்ப நம்ப கொள்கைகளை ஏத்துக்கிட்டா அவங்களும் திராவிடியன்தானே?' என்றார் அண்ணா.

1949, செப்டம்பர் 17 அன்று, சென்னை முத்தியால்பேட்டையில் தி.மு.க. ஆலோசனைக் கூட்டம் கூடியபோது, அண்ணா, கட்சியின் பெயரைத் தேர்ந்தெடுத்ததை விளக்கினார்:

திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்த நம் கட்சிக்கு 'திராவிடர் முன்னேற்றக் கழகம்' என்று பெயர் இருப்பதுதானே பொருந்தும் என்று சில நண்பர்கள் கேட்கிறார்கள். அவர்கள் கேள்வியிலே பொருள் இருக்கிறது. அதேசமயம், நாம் இன்னும் சற்று விரிவான கண்ணோட்டத்துடன் நம் கட்சியின் பெயரை அணுக வேண்டுகிறேன். 'திராவிடர் முன்னேற்றக் கழகம்' என்று கூறும்போது, அதில் திராவிடர்கள் மட்டும் அங்கம் பெறலாம் என்று அரண் எழுப்புவதாக அமைந்துவிடுகிறது. இப்போதுள்ள உலகச் சூழ்நிலைக்கு, காலப்போக்குக்கு இது உகந்ததாக எனக்குப் படவில்லை. நம்முடைய கட்சியின் லட்சியம், திராவிட நாட்டைச் செழுமையான பூமியாகப் பேணிக்காப்பதாகும். அத்தகைய திராவிட மண்ணில், திராவிடர்கள் மட்டுமே வாழலாம் என்று வரையறை செய்வது குறுகிய நோக்கமாகும்; முடியாத செயலுமாகும். இந்த மண்ணுக்கு நன்றி உள்ளவர்களாக நடந்துகொள்ளும் எந்த இனத்தவரும் இன்னலின்றி இன்ப வாழ்வு வாழப் பணியாற்றுவதே நம் கட்சியின் லட்சியமாக இருக்க வேண்டும். இங்கே திராவிடரும் வாழலாம். ஆரியரும் வாழலாம். கிறிஸ்தவரும் வாழலாம். முகமதியரும் வாழலாம் என்ற பரந்த நோக்கத்தோடு நாம் பணியாற்றவேண்டும். அதேசமயம், நம் திராவிட நாட்டுக்கே உரிய பண்பாட்டைக் காக்கவும், தொழில்வளத்தைப் பெருக்கவும் நாம் பின்வாங்கத் தேவையில்லை. திராவிடர் கழகம் போல இன நலனுக்காக மட்டும் போராடாமல், பூகோள அடிப்படையில் 'திராவிடம்' முழுமைக்கும் நன்மைகள் உண்டாக - முன்னேற்றம் காண- நாம் பாடுபட வேண்டியிருப்பதால், 'திராவிடர் முன்னேற்றக் கழகம்'

என்பதைவிட, 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்று நம் கட்சிக்குப் பெயர் இருப்பதே எல்லா வகையிலும் பொருந்தும் என்பது என் தாழ்மையான எண்ணம்.

பழைய திராவிட நாடு கோரிக்கையைவிட இந்தச் சிந்தனை மேலானதாக இருந்தது. இயக்கத்தைக் குறிப்பிட்ட இனத்தின் முன்னேற்றத்துக்கு என்று குறுக்கிவிடாமல், திராவிடர் கழகம் போல முழுமையற்றதாகவும் போய்விடாமல், எல்லோரையும் அரவணைத்துச் செல்வதைக் காட்டுவதாகப் பெயர் அமைந்தது. இருப்பினும், மேலும் பலருடன் கட்சியின் பெயரைப் பற்றி விவாதித்து முடிவுக்குவர அண்ணா விரும்பினார். சென்னைக்கு வந்து தான் சந்தித்த ஒவ்வொருவரிடமும், தன்னைச் சந்தித்த ஒவ்வொருவரிடமும், என்ன பெயர் வைக்கலாம் என்று கேட்டுக் கருத்தறிந்தார். முடிவில் 'மாலை மணி' அலுவலக மாடியில், மதியழகனின் நோட்டுப் புத்தகத்தை வாங்கி, 'இதுதாம்பா முடிவான பெயர்!' என்று ஒரு முடிவுக்கு வந்து தி.மு.க. என எழுதினார். ஆங்கிலத்தில், Dravidian Progressive Federation. 'மும்முனைப் போராட்டம்' நடத்தியபோது, 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்பதைச் சுருக்கி 'DMK' என்று 'ஹிந்து' நாளேடு செய்தி வெளியிட, அதுவே பின்னர் நிலைத்துவிட்டது.

தி.மு.க.வின் முதல் பொதுச் செயலாளராக அண்ணா நியமிக்கப்பட்டார். கட்சியின் துவக்க நாளன்று, தனது கட்சியின் தலைவராக பெரியாரை அறிவித்து, அவரிடமிருந்து பிரிந்து வந்து தனிக்கட்சி கண்டபோதும் தனது பெருந்தன்மையையும் நன்றியறிதலையும் அண்ணா காட்டினார்.

12

கட்சி வளர்ச்சிக்கான உத்திகள்



புதிய கட்சியைத் தொடங்க, 1949 செப்டம்பர் 17-ம் தேதி முடிவானது. அன்று பெரியாரின் பிறந்த நாள்! கட்சியின் வேலைத் திட்டத்தை விளக்கவும் திராவிட முன்னேற்றக் கழகத்தை துவக்கவும் அடுத்தநாள் மாலை சென்னை - ராயபுரம், ராபின்சன் பூங்காத் திடலில் (இப்போது அண்ணா பூங்கா) பொதுக்கூட்டம் ஏற்பாடாகியது. ஏழைகள், தொழிலாளர்கள், மத்தியதரக் குடும்பங்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட வட சென்னையைவிட தி.மு.க.வின் தொடக்க விழா கூட்டத்துக்கு பொருத்தமான இடம் வேறு எது இருந்திருக்க முடியும்? கூட்டம் சரியாக பிற்பகல் 4 மணிக்குத் துவங்கியது.

கூட்டத்துக்குத் தலைமை தாங்க, பெத்தாம் பாளையம் பழனிசாமியை, டி.எம்.பார்த்தசாரதி முன்மொழிய, கே.கோவிந்தசாமியும் பி.வி.முத்துசாமியும் வழிமொழிந்தனர். தலைவரின் தொடக்கவுரைக்குப் பிறகு, ஏ.சித்தையன், என்.வி.நடராஜன், ஈ.வெ.கி.சம்பத்,

எஸ்.ஆர்.சுப்பிரமணியம், ஏ.வி.பி.ஆசைத்தம்பி, இரா.நெடுஞ்செழியன், மதுரை முத்து, கே.கே.நீலமேகம், சத்தியவாணி முத்து ஆகியோர் பேசினர். சாதனை படைக்கவிருக்கும் இரு இளைஞர்கள் - கலைஞர் கருணாநிதியும் கவிஞர் கண்ணதாசனும், புதிய கட்சியால் ஈர்க்கப்பட்டு, அந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்தனர். தொடக்க விழாவுக்குக் கலைஞர் அழைக்கப்பட்டிருந்தார்; அவர் கண்ணதாசனையும் கூட்டத்துக்கு அழைத்து வந்திருந்தார். இருபத்தைந்து வயதே நிரம்பிய, அண்ணாவுக்குப் பிறகு அந்த இயக்கத்தின் தலைவராகவிருந்த தமது நண்பனைப் பற்றி கண்ணதாசன் எழுதினார்:

> (பெரியாரின்) திருமணம் ஒரு பெரிய பரபரப்பை உண்டாக்கிற்று. ஆனால், அந்தப் பரபரப்பை அடிக்கடி கவனித்து, அதற்கு பதிலெழுதிக் கொண்டிருப்பார் கருணாநிதி. அப்போது கருணாநிதி மிகப் பிரபலமான அரசியல் தலைவரோ, சமுதாய சீர்திருத்த தலைவரோ அல்ல. ஆனாலும், அந்தத் திருமண விஷயத்தில், திருமண நேரத்தில் அவர் முந்திக்கொண்டு நின்றது, அவரை முன்னணியில் கொண்டுவந்து நிறுத்தியது.

கலைஞரோ தன் பாட்டுக்குத் தமது முதல் சந்திப்பிலேயே கண்ணதாசனை எடைபோட்டு இருந்தார்: "அவரைப் பார்த்த உடனேயே அவருடைய முகத்தில் 'இவர் எதைப் பற்றியுமே கவலைப்படாதவர்' என்று கொட்டை எழுத்தில் எழுதியிருந்ததை நான் புரிந்துகொண்டேன். மற்றவர்களை அவர் தாக்குவதும், மற்றவர்களால் அவர் தாக்கப்படுவதும் அவரைப் பொறுத்தவரையில் ஒரு வேடிக்கையான காரியமாகக் கருதுகிறார் என்பதைச் சில விநாடிகளில் என்னால் புரிந்துகொள்ள முடிந்தது." பின்னாளில் கண்ணதாசன் தி.மு.க.வைக் கடுமையாக விமரிசித்ததை விடவும் யாரேனும் செய்திருக்க முடியுமா என்ன? கலைஞரின் முன்னாள் நண்பரும், பின்னர் அவருக்கு அரசியல் எதிராளியுமான எம்.ஜி.ராமச்சந்திரனும் கண்ணதாசனைப் பற்றி கிட்டத்தட்ட இதே கருத்து கொண்டிருந்தார்: "அவர் எதையும் எந்த நேரத்திலும் பேசும் குணம் கொண்டவர். ஒரு பொதுக்கூட்டத்தில் பேசப்போகும் அவரிடம், அந்த நேரத்தில் அவருடைய நண்பர்களில் யாராவது, ஒருவர் தகாத செயல் செய்துவிட்டதாகச் சொல்லிவிட்டால் போதும், அது உண்மையா என்று அறிய முயலவே மாட்டார். அன்று பொதுக்கூட்டத்தில் கவிஞரின் பேச்சு முழுமையும் அந்த நபரைப் பற்றிய தாக்குதல் கருத்துகளே நிறைந்திருக்கும். அவர் எதையும் நம்பிவிடுவார். எதையும் நம்பவும் மாட்டார்."

ராபின்சன் பூங்கா கூட்டத்தில் ''கண்ணீர் வருகிற மாதிரி அண்ணா பேசினார்'' என்று கூட்டத்தின் மனநிலையைப் பிரதிபலிக்கும் வகையில் கண்ணதாசன் எழுதினார். பலமான மழை. ஆனால், கூட்டம் மழையைப் பொருட்படுத்தவில்லை. "மழையோ பலமாகப் பெய்கிறது. வந்திருக்கும் கூட்டமோ ஏராளம். பேச இருப்போரும் பலர். அவர்கள் யாவரும் பேச இருக்கிறார்கள். மழை பலமாகப் பெய்துகொண்டிருக்கிறது. சற்று சங்கடமான நிலைதான்; அடாத மழை பெய்கிறது. அளவற்ற கூட்டம். மழையால் தாய்மார்களும் தவிக்கின்றனர். நின்றுகொண்டே இருக்கிறீர்கள். சங்கடம்தான். ஆனாலும், சமாளிக்கிறீர்கள். இதுபோன்ற நிலைமைதான் நாட்டிலேயும்! சில காலம் கழகத்தின் வேலைகள் செயலற்றுக் கிடந்து, சங்கடமான நிலை ஏற்பட்டது. சரிசெய்தோம். திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியது'' என்று பேசினார் அண்ணா. கொள்கைகளால் தூண்டப்பட்டதால் அந்த முடிவை நியாயப்படுத்தி அண்ணா ஒரு சக்திமிக்க சொற்பொழிவை நிகழ்த்தினார். "திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்தது என்ற உடனே, ஒரு புதிய அரசியல் கட்சி பிறந்தது என்கிற எண்ணம் எனக்கு ஏற்படவில்லை. சமுதாய சீர்திருத்தத்துக்கு ஒரு புதிய வடிவம் கிடைத்துவிட்டது என்றுதான் நான் கருதினேன். இது வெறும் அரசியல் கட்சி அல்ல. மாபெரும் விடுதலை இயக்கம்" என்று கண்ணதாசன் தி.மு.க.வைப் பற்றி அன்று அந்தப் பேச்சு எண்ண வைத்தது. அவரே பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, 'தி.மு.க. என்பது தமிழர் நாகரிகத்துக்கு இறைவன் கொடுத்த சாபம். பரம்பரையான பண்பாடுகள், மங்கலங்கள், ஆலயங்கள், அறநெறிகள் அனைத்தையும் பாழ்படுத்தி கேலி செய்தே தி.மு.க. அப்பாவி மக்களிடம் வளர்ந்தது. நாணயத்திலும் ஒழுக்கத்திலும் அதற்கு எப்போதுமே நம்பிக்கை இல்லை' என்று தனது முடிவை மாற்றிக்கொண்டார். பின்னர், சம்பத் கூறியதை ஆமோதிப்பது போல கண்ணதாசன் கூறினார். பின்னாளில், சம்பத் சொன்னதுபோல, "அது (திராவிட நாடு) ஒரு பயங்கரமான அரசியல் மோசடி என்பதை யாரும் சிந்திக்கக்கூட இல்லை. கட்சியின் மீது நம்பிக்கை; கருத்துகளின் மீது நம்பிக்கை; தலைவர் மீது பக்தி - ஆம், அது ஒரு கட்சியாக இல்லை. மதமாகவே இயங்கிற்று."

அதுபோலவே அண்ணாவையும் தி.மு.க.வையும் கடுமையாக விமரிசித்த ஜெயகாந்தனோ, கவிஞரைப் போல அல்லாது, ஆரம்பத்திலிருந்தே தி.மு.க.வை இப்படித்தான் கண்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார்:

> தி.மு.க. ஓர் அரசியல் இயக்கமல்ல. மனித கௌரவம், சமுதாய முன்னேற்றம், இந்திய கலாசாரம் மற்றும் நம் நாகரிகத்துக்கே, சமூக - கலாசார அச்சுறுத்தல் அது. தி.மு.கழகத்தால் இந்தச் சமுதாயத்தில் ஏற்பட்ட பண்பாட்டுச் சீர்குலைவுகள் பல. தமிழ்க் கலை, இலக்கிய, அறிவியல் உலகில், ஏற்கெனவே ஏற்பட்டுவிட்ட பண்பாட்டுச் சீர்குலைவின் விளைவே தி.மு.கழகம் என்ற பேருண்மை எனக்குப் புரிந்தது.

கண்ணதாசனே, "நாகரிகமற்ற ஒரு கூட்டம்" என தி.மு.க.வை குறிப்பிட்டார். தமிழ்ச் சமுதாயத்தை அடிமைத்தளத்திலிருந்து மீட்க வந்ததாய் இயக்கத்துக்குச் சொன்ன இந்தக் கருத்துகள் நிச்சயமாகப் பெருமை சேர்ப்பதாக இல்லை. ஜெயகாந்தன் சுட்டிக்காட்டியது போல தி.மு.க.வுக்கு காங்கிரஸின் பாரம்பரியமும் இருக்கவில்லை. அதனால் வரக்கூடிய அரசியல் லாபங்களும் இல்லாமலேயே இருந்தது. பொருளாதாரப் பார்வையும் இல்லை. ஆனால், தமிழர்களின் பழைமையின் அடையாளம் காட்டி இலக்கிய, தொல்பொருள் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளை தமிழர்களுக்குப் பெரிதாக எடுத்துக்காட்டி ஓர் இன உணர்வை தி.மு.க.வினர் ஊட்டியதை மறக்க முடியாது. சுதந்திர திராவிட நாடு, பிராமணர்கள் - பனியாக்கள் சுரண்டல் இல்லாத பொற்காலத்தை உருவாக்கும் என்றனர் தி.மு.க.வினர்.



கண்ணதாசன்

இத்தகைய அந்நிய ஆதிக்க அச்ச உணர்வுப் பிரசாரமும், பிரச்னைகளை விளக்கும் முறையும், சாமான்ய வெகுஜன மக்களைக் கவரும்படி இருந்ததால், இதுவரை அரசியலால் ஈர்க்கப்படாத மக்களும் ஈர்க்கப்பட்டார்கள். ஆக, கட்சியின் தொடக்க நிலையையும் மீறி, ஆதரவாளர்களின் எண்ணிக்கை பல்கிப் பெருக, விமரிசகர்களோ தி.மு.க.வின் பாமரரையும், சாமான்யரையும் குறையாகக் கண்டனரே தவிர, கட்சியின் நிறையாகக் கொள்ளவில்லை.

1960-களின் துவக்கத்தில் இந்த விமரிசனங்கள் எல்லாம் பலம் பெறும் சமயத்தில், தி.மு.க. அரசியல் அரங்கில் பலம் வாய்ந்த சக்தியாக உருவெடுத்திருந்தது. எனவே, தி.மு.க.வினரால் அத்தகைய விமரிசனங்களை அலட்சியம் செய்ய முடிந்தது. ஆனால், 1949-லோ ஈ.வெ.ரா.வின் தாக்குதல் தி.மு.க.வினரை மிகவும் சங்கடப்படுத்தியது.

அண்ணாவின் தொடக்க உரை இதை வெளிச்சமிட்டுக் காட்டியது:

நான் என்ன செய்துவிட்டேன்? தலைவர் தவறினார் கொள்கையினின்றும், பகுத்தறிவுப் பாதையினின்றும். தவறு என்று மனதார நம்பினேன் - கூடாது என்று கருதினேன். கருதியது குற்றமா? கருத்தைத் தெரிவித்தேன், காரணத்தோடு. வேதனையை வெளிப்படுத்தினேன்; வெளிப்படுத்தியது குற்றமாகுமா? கொள்கையைக் கூறுவது குற்றமா? கூறுங்கள், தோழர்களே!

பெரியார் திருமணம் என்ற செய்தி கேட்டதும் அழுதவன் நான். ஆயாசம் கொண்டவன் நான். அதுமட்டுமல்ல. நான் ஒதுங்கிவிடுகிறேன் என்ற எண்ணத்தை, கருத்தைத் தெரிவித்தவன் நான். பேதம், பிளவு, மனத்தாங்கல், மோதல் கூடாது, நல்லதன்று என்று கருதும் போக்கும், மனப் பண்பும் படைத்தவன் நான். எனவே, என்வரையில் பெருந்தன்மையாகக் கட்சிப் பணியிலிருந்து விலகுவது நல்லது என்று முடிவு கட்டியிருந்தேன்.

பெரியார் சமாதானம் சொல்லிவிட்டார், 'என் சொந்த விஷயம்; எதிர்ப்போர் சுயநலமிகள் - சதிகாரர்கள்' என்று. மனப்புண் ஆறவில்லை. மக்கள், அப்படிப்பட்ட தலைவருடன் சேர்ந்து பணியாற்ற மாட்டோம் என்று கூறினர். செவி சாய்க்கவில்லை தலைவர். விலகுவார் என்று பார்த்தனர். விலகவும் இல்லை. அவரோடு சேர்ந்து பணிபுரிய முடியாத நிலையிலுள்ள மிகப் பெரும்பான்மையினர், கழக முக்கியஸ்தர்கள் கூடிப்பேசி ஒரு முடிவு செய்தனர். அந்த முடிவுதான் - திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோற்றம் - இது போட்டிக் கழகமல்ல. அடிப்படைக் கொள்கைகளில், கருத்துகளில் மாறுதல், மோதல் எதுவும் கிடையாது. சமுதாயத்திலே சீர்திருத்தம், சமதர்மக் குறிக்கோள், அரசியலில் வட நாட்டு ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை - ஆகிய கொள்கைகள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்பாடுகள்.

தலைவரோ அனைவரின் மீதும் நம்பிக்கையில்லை; நம்பமுடியாது என்று வேறு கூறியிருக்கிறார்.

சோம்பேறிகள், செயலாற்ற முடியாத சிறுவர் கூட்டம், உழைக்கத் தெரியாதவர்கள் என்று குற்றம் சாட்டியிருக்கிறார். யாரைப் பார்த்து? உழைத்து உழைத்துக் கட்சியை, கழகத்தை உருவாக்கிய உண்மைத் தொண்டர்களை, தம் வாழ்வையும் பாழ்படுத்திக்கொண்ட இளைஞர்களைப் பார்த்து.

இத்தனை ஆண்டுகளிலும் நான் அறிந்த தலைவர், தெரிந்த தலைவர், பார்த்த தலைவர் இவர் ஒருவர்தான். வேறு தலைவரின் தலைமையில் நான் வேலை செய்தது கிடையாது. செய்யவும் மனம் வந்ததில்லை; வராது. அதே காரணத்தால்தான் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குக் கூடத் தலைவரை ஏற்படுத்தவில்லை. இப்போது, அவசியம் என்றும் கருதவில்லை.

பெரியார்தான் எங்களை மறந்தார், உதாசீனம் செய்தார், 'உதவாக்கரைகள்' என்று கூறினார். மனம் நோகும்படிப் பேசினார், ஏசினார், நடந்தார், நடந்துகொண்டு இருக்கிறார். விவேகமல்ல என்று கருதுவதால், நாம் அவரோடு மேலும் போராடவோ மோதவோ விரும்பவில்லை.

அங்கிருந்து, நானாகவே எனது இடத்தைக் காலி செய்துவிட்டு வந்துவிட்டேன். நான் விரும்பினால், விரும்பியிருந்தால் அங்கேயே இருந்திருக்கலாம், எல்லாவகை விருதுகளோடும். என் நிலை என்ன அங்கே சாமான்யமானதா? எளிதில் கிடைக்கக் கூடியதா? இல்லையே! அங்கே அவர் கடவுளின் நிலையில் இருக்கிறார் என்றால், நான்தானே அர்ச்சகன்? அவர் தம்பிரான் என்றால், நான்தானே கட்டளைத் தம்பிரான்? அவர் தலைவர் என்றால், நான் தளபதி என்றுதான் போற்றப்பட்டேன் - புகழப்பட்டேன். நான் என்ன இவ்வளவு விருதையும் புகழையும் பாழ்படுத்திக்கொள்ளப் பித்தனா? வறட்டு ஜம்பம் பேசி கழகத்தில் நல்வாழ்வைக் கெடுத்துக்கொள்ள - நான் என்ன வெறியனா? அல்லது இதை விட்டு வேறு வேலை தேடக் குமாரராஜாவிடம் ஏதாவது விண்ணப்பம் போட்டிருக்கிறேனா? அதுவும் இல்லையே! எனக்கு என்ன லாபம் ஏற்படும் என்று அவரைக் கண்டிக்க வேண்டும்? கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்!

பெரியாரோடு நான் மாறுபட்ட கருத்துடையவன் என்று கூறப்படுகிறது. சிற்சில விஷயங்களிலே நான் மாறுபட்ட கருத்து கொண்டிருந்தாலும், நெடுநாட்களாகவே கருத்து வேறுபாடுகள் இருந்து வந்தாலும், அவற்றைப் பற்றி நான் கவலைப்படவில்லை. முடிந்த அளவு ஒத்துழைத்தே வந்திருக்கிறேன். முடியாத நேரத்தில் மிக மிகக் கண்ணியமான முறையில் ஒதுங்கியே இருந்திருக்கிறேன். பெரியார் காலம் வரை அவர் வழிப்படியே கழகம் நடக்கும். 'பிறகு பார்த்துக்கொள்வோம்' என்ற போக்கைக் கொண்டிருந்தவன் நான்.

அப்படி அவரால் அன்பாக நடத்தப்பட்டு வந்த நான் இல்லை. திரும்பிப் பார்த்தால் சம்பத்து இல்லை! கும்பகோணம் போனால் வரவேற்க குடந்தை கே.கே.நீலமேகம் இல்லை! திருச்சியிலே பராங்குசமில்லை, மதுரையிலே முத்து இல்லை... யாவருமே பெரியாரை விட்டு ஏகினரே! என்ன உழைப்பு! எத்துணை உறுதி படைத்தவர்கள்! 'நம்மிடம் இவர்கள் இல்லையே...' என்ற ஏக்கம் பெரியாருக்கு வராமலா போகும்? வந்தே தீரும். அப்போது, அவர் மகிழ்ச்சியா அடைவார்? அவர் வேண்டுமானால் நடிக்கலாம். மகிழ்ச்சியோடு இருப்பதாகக் காட்டிக் கொள்ளலாம், பிறர் முன்னால்! உண்மையில் மகிழ்ச்சி இருக்காது - இருக்கமுடியாது. இது மனித உள்ளம் படைத்த எவராலும் முடியாது!

திராவிட முன்னேற்றக் கழகத்தில் பணியாற்றத் தொடங்கி இருக்கிறோம். 'நான் மிகவும் சோம்பேறி. பெரியாரைப் போல உழைக்க முடியாது' என்று கூறுகிறார்கள். நான் ஒப்புக்கொள்கிறேன், பெரியார் போல உழைக்க முடியாது என்று. ஏன்? அவருக்கு உழைக்கும் சக்தி, போதுமான வசதிகள் இருக்கின்றன. அவ்வளவு வசதியும் சக்தியும் பெற்றவனல்ல நான் என்பது மட்டுமல்ல, பெரியாரைப் போல உழைப்பது தவறு, கூடாது, தேவையற்றது என்ற கருத்துடையவன் நான். அது ஜனநாயகத்துக்கு ஏற்றதல்ல, முரண்பட்டது என்ற கருத்தைக் கொண்டவன். ஒரே மனிதர், எல்லாப் பொறுப்பையும் வகிப்பது தவறு. பிறருக்கும் சந்தர்ப்பம் அளிக்க வேண்டியது கடமை என்ற போக்கைக் கொண்டவன்.

நான் துள்ளி விளையாடும் பள்ளிப் பருவத்து பாலகனா? அல்லவே! நாற்பது வயதை அடைந்தவன். இளைஞனின் துடிதுடிப்பும் கிழவரின் பொறுமையும், காரியமாற்றும் கருத்தும் ஒருங்கே கொண்ட வயதுதான் எனக்கு. நாற்பதைக் கடந்தவன், ஐம்பதுக்கு உட்பட்டவன். அதாவது, இந்தப் பத்து ஆண்டைத்தான் இளமைக்கும் முதுமைக்கும் இடையேயுள்ள காலம் என்று கூறுவர். பெரியார் தமது சுயமரியாதைக் கோட்பாட்டை இந்தப் பத்து ஆண்டுகளில்தான், அதாவது நாற்பதுக்கும் ஐம்பதுக்கும் இடையேதான், அமைத்தார். என்னாலும் செய்ய முடியும். முறைப்படி அவசியத்துக்கேற்ற வகையில்.

மற்றொரு காரணம் கூறப்படுகிறது. அதாவது, நான் சுயநலத்துக்காகவே இந்தத் திருமண ஏற்பாட்டை எதிர்க்கிறேன் என்று. எனக்கு திராவிடர் கழகத்திலே இருந்தபோது எந்த நலன் கெட்டுவிட்டது? ஒன்றும் கெடவில்லையே! நாடகம் எழுதாதே என்று, பெரியார் என்றாவது கண்டித்தாரா? கிடையாதே! சுயநலமாக இருந்தால், எனக்கு அங்கு இருப்பதால் என்ன கெட்டுவிட்டது? ஒன்றும் கெடவில்லை! சிற்சில சமயம் தலைவர் போக்குப் பிடிக்காதிருக்கலாம். அவர் கருத்து எனக்குப் பிடிக்காதிருந்திருக்கலாம். அவர் கருத்து எனக்குப் பிடிக்காதிருந்து, பொருத்தமற்றதாகத் தோன்றியிருக்கலாம். அப்போதெல்லாம்கூட முடிந்தவரை ஒத்துழைக்கத்தான் செய்தேன். சில சமயம் நாசூக்காக - பெருந்தன்மையாக ஒதுங்கியிருந்தேன். சில காலம் அரசியல் துறவறம் பூண்டிருந்தேன். இன்று காரணமின்றித் தூற்றப்படுகிறேன். கவலை இல்லை. நேற்று நம்மைப் புகழ்ந்தவர்தானே அவர்!

இவ்வளவு பேசுகிறாயே பேதம் கூடாது, பிளவு கூடாது, மோதல் கூடாது என்று. ஏன் நீங்கள் அங்கிருந்தே பணியாற்றக் கூடாது? விலகுவானேன்? வேறு கட்சி அமைப்பானேன் என்று கேட்கத் தோன்றும். கேள்வி சரியானதுதான். தவறு செய்தவர் தலைவரேயானாலும், தவறு தவறுதான் என்று எடுத்துரைத்தோம். அவரோடு இருந்து பணியாற்ற முடியாத நிலையில் இருக்கிறோம். எவரிடமும் நம்பிக்கை இல்லை என்ற இழி சொல்லையும்

உதவாக்கரைகள் என்ற பழியையும், தூற்றலையும் ஏசலையும் சுமக்கும் பெரும் பாரம் - பெரும் சுமை ஏற்பட்டுவிட்டது. இவற்றைத் தாங்கிக்கொண்டு அவரோடு இணங்கி வேலை செய்வது பெரிய காரியம். ஆகவே, விலகினோம், லட்சியத்தை நிறைவேற்ற பெருந்தன்மையோடு வேறு அமைப்பில் பணியாற்றுகிறோம்.

இன்னும் அவருக்கும் எனக்கும் உள்ள பற்று, பாசம் அகலவில்லை - என்னை விடவில்லை. நான் கேட்கிறேன்: 'தோழர்களே, எது முக்கியம் நமக்கு? லட்சியமா? பெரியாரா?' லட்சியம் தேவை. பெரியாரல்ல என்று முடிவு செய்தோம். அதோடு பிரச்னை முடிந்தது. இதோ நம் கண்முன் டெல்லி ஏகாதிபத்தியம் மக்களைப் பாழ்படுத்தும் பாசிஸம், பதுங்கிப் பாய நினைக்கும் பழைமைவாதம் - இவைதான் ஒழிய வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஒட்டுமாஞ்செடிதான். மண்வளம் ஏராளம். அதே பூமி; நீர் பாய்ச்ச, பதப்படுத்த, பாத்தி கட்ட முன் நிற்போர் பலர். ஒட்டுமாஞ்செடி பூத்துக் காய்த்துக் கனி குலுங்கும் நாள் வந்தே தீரும். இதனால், ஒட்டுமாஞ்செடி மாமரத்துக்கு விரோதமல்ல. திராவிடர் கழகத்துக்கு முரணானது அல்ல. ஒரே கருத்து கொண்டதே ஒட்டுமாஞ்செடி.

முக்கியமாக, முதல் வேலையாக, எழுத்துரிமை, பேச்சுரிமை எதையும் அடக்கும் சர்க்கார் போக்கை எதிர்த்துப் போரிட திராவிட முன்னேற்றக் கழக முன்னணிப் படை அமைய வேண்டும். அதில் பங்குகொள்ள சமதர்மத் தோழர்களே வாருங்கள் என்று வரவேற்கிறேன்! கம்யூனிஸ்ட்டுகளே ஒத்துழையுங்கள் என்று அழைக்கிறேன்!

பெரியாரே, நீங்கள் அளித்த பயிற்சிப் பக்குவம் பெற்ற நாங்கள், உங்கள் வழியில் சர்க்காரை எதிர்த்து, சிறைச்சாலை செல்லத்தான் வேண்டுகோள் விடுக்கிறோம். துவக்க நாளாகிய இன்றே! இன்றே!'

எதிர்ப்பைக் காண்பிப்பதில் ஒரு புதிய நளினத்தை, நாகரிகத்தை வெளிப்படுத்தியது அண்ணாவின் பேச்சு. கண்ணதாசன் குயுக்தியாக எழுதினார்:

தலைவர் நாற்காலி காலியாகவே இருக்கிறது. பெரியாரைப் பற்றி யாரும் தவறாகப் பேசக்கூடாது என்று கண்டிப்பாக உத்தரவு போட்டார். அவருடைய ராஜதந்திரம் மிகப் பயனுள்ளதாக இருந்தது என்பதை நான் கண்டேன். ஒரு கட்சியில் இருந்து இன்னொரு கட்சி பிரியும்போது, பிரிந்து வந்தவர்கள் முன்னாலே இருந்த கட்சியை ஏசாமல், அதைப் புகழ்ந்து அழிப்பது என்கிற கெட்டிக்காரத்தனத்தை அண்ணாவிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். திராவிடர் கழகத்தைப் புகழ்ந்து, பெரியாரைப் புகழ்ந்து, 'நான் வெறும் ஏவலாள்தான். நான் நிர்ப்பந்தம் காரணமாகத்தான் வெளியேறினேன். ஆனால், இவர்களுடைய நிர்ப்பந்தம் காரணமாகத்தான் பொதுச் செயலாளர் ஆகிறேன்' என்றெல்லாம் சொல்லி, அந்தப் பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டார்.

கண்ணதாசன் எண்ணியது போல அல்லாமல், ஈ.வெ.ரா. மீது அண்ணாவுக்கு இருந்த பற்று உண்மையானது, அலாதியானது. இறுதிவரை அந்தப் பற்று அப்படியே இருந்தது. கண்ணதாசன் அதை ராஜதந்திரம் என்று சொன்னாலும், அண்ணா தன் கட்சியையும், தாய்க் கழகத்தையும் பிரித்துப் பார்க்கவில்லை. 1951-ல் மாயூரத்தில் தி.மு.க. தஞ்சை மாவட்ட முதல் மாநாடு. அங்கு பேசிய அண்ணா சொன்னார்: "தமிழ்நாட்டின் பட்டிதொட்டிகளில் எல்லாம், பட்டினக்கரைகளில் எல்லாம், மூலை முடுக்குகளில் எல்லாம், தெருத் தெருவாகக் கறுப்பு - சிவப்பு இருவண்ணக் கொடி பறக்க வேண்டும் என்பதல்ல! திராவிடர் கழகக் கொடி - கறுப்பு சிவப்புக்கொடி கட்டாயம் பறந்தாக வேண்டும்!" விளைவு, அந்த நாளில் ரயிலில் பிச்சையெடுப்போர், "அய்யா கட்சி வேறில்லே, அண்ணா கட்சி வேறில்லே" என்று பாடினார்கள்.

இதற்கு மாறாக, ஈ.வெ.ரா.வின் கசப்பு உணர்வு தொடர்ந்தது. 1949, செப்டம்பர் 19 அன்று, 'அப்பாடா! தொலைந்தது தொல்லை!' என்ற 'விடுதலை' தலையங்கத்தில்...

கழகத்தைப் பரிசுத்தப்படுத்த வேண்டிய அவசியம் சிறிது காலமாகவே ஏற்பட்டது. கோவை மாநாட்டுக்குப் பின் மிகமிக அவசியமாகச் செய்யப்பட வேண்டியதாகி, ஜூன் மாதத்தில், தோழர் அண்ணாதுரை தூண்டுதல் மீது, தோழர் கருணாநிதி, அன்பழகன் ஆகியோர் வெளிப்படையாக தலைவர் மீது விஷமக் குறை கூறுவது கண்டு, அவர்களைக் கழகத்தைவிட்டே விலக்குவது என்கிற முடிவுடனேயே

அதற்கான காரியத்தை பெரியார் எடுத்துக்கொள்ள நேரிட்டது. தோழர் அண்ணாதுரை அதற்காகத் தாம் விலக்கப்படும் முன் கட்சி சேர்க்கும் வேலையில் ஈடுபட்டதும், அந்த நேரத்தில் திருமண ஏற்பாடானதும், அதை அண்ணாதுரை நல்ல வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு, கிளர்ச்சி துவங்கியதான காரியங்கள் யாவரும் அறிந்ததே!

- என்று பெரியார் எழுதியிருந்தார்.

தன்னை விட்டுப் பிரிந்து போகத்தான் 'திருமணம்' ஒரு சாக்காக இருந்தது என்றார் பெரியார். 'என்னை விட்டுப் பிரிந்து போகிறவர்கள் 'கண்ணீர்த் துளிகள்'. கொள்கைகள் பாழாகிவிட்டன என்று அவர்கள் பேசுவதெல்லாம் வெறும் மோசடி. அவர்களுக்குத் தெரியும், என்னோடு இருந்தால் சட்டசபைக்குப் போக முடியாது; பதவியை அடைய முடியாது. அதனால்தான் திருமணத்தை ஒரு சாக்காகச் சொல்கிறார்கள். அவர்களுக்கும் கொள்கைகளுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா என்ன?' என்றார். இரண்டு வாரங்களுக்குப் பின்னர், "திராவிடர் கழகம் ஒழிந்தாலொழிய, இவர்கள் தேர்தலில் நிற்க முடியாது. இவர்கள் சொந்த வாழ்வு மரியாதையாக நடைபெறாது. இதற்காகத்தான் இவ்வளவு பெரிய 'புண்ணிய காரியம்' செய்கிறார்கள்" என்றார் பெரியார்.

தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைக் கடந்தும், "அதிகாரத்தை விரும்பும் தி.மு.க. பிறகு, ஊழலில் சிக்கி, கொள்கைகளை சமரசம் செய்துகொண்டுவிடும்' என்றும் பெரியார் கவலைப்பட்டார். தி.மு.க. தொடங்கப்பட்டு இரண்டு வாரங்களுக்குப் பிறகு, முகத்தில் வாட்டமும் வேதனையும் நிழலாடியதை உணர்ந்து, அவருடன் அப்போது பணிபுரிந்த பத்திரிகையாளர் ஜே.வி.கே. பெரியாரை நோக்கிக் கூறினார்:

அய்யா ரொம்பக் கவலையில் இருப்பதாகத் தெரிகிறதே? கழகத்தில் இருந்து அண்ணாவோடு ஏராளமானவர்கள் வெளியேறிவிட்டார்களே என்ற கவலையா?' என்று கேட்டுவிட்டார். 'அவ்வளவுதான்! பெரியார் சிலிர்த்துக் கொண்டார். அவருக்கு ஆத்திரமே வந்துவிட்டது. 'என்ன சொன்னே? அண்ணாதுரையோடு நிறையப் பேர் வெளியேறிவிட்டதால் நான் கவலைப்படுகிறேனா? அவர்கள் வெளியேறிவிட்டதால் நான் ஏன் கவலைப்பட வேண்டும்? இந்த இயக்கத்தை யாரை நம்பி ஆரம்பித்தேன் தெரியுமா? என்னை நம்பி!

என்னையே நம்பி!' என்று திடமாக மாரைத் தட்டியபடி சொன்னார். ஆயினும், சற்று நேரம் கழித்து மெதுவான குரலில், 'நீ சொன்னதைப் போல என் மனதுக்குள் ஒரு கவலை இருந்து வருவது உண்மைதான்... அண்ணாதுரை எதற்காக நமது கழகத்தில் இருந்து விலகிச் சென்று புதிய கட்சியை ஆரம்பித்திருக்கிறார்? அவருக்கு அரசியலில் ஈடுபட்டு அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது. என்னோடு இருக்கும் வரையில் நான் அதற்கு அனுமதி தரமாட்டேன். அதனால், வெளியேறிவிட்டார். என்னுடைய கொள்கைகளை அரசியல் ரீதியாக நிறைவேற்றவே முடியாது என்பதில் திட்டவட்டமான தீர்மானத்தைச் செய்துவிட்டுத்தான், கழகத்தை இயக்கமாகவே நடத்தி வருகிறேன். அண்ணாதுரையோ தி.மு.க. என்ற அரசியல் கட்சியைத் தொடங்கியிருக்கிறார். அரசியல் என்று இறங்கிவிட்டால், பிறகு தேர்தல்களே முக்கியமாகிவிடும். தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற வேண்டுமானால் அதற்குப் பண பலம் தேவை. பிறகு, பல தரப்பிலிருந்தும் பணவசூல் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிடும். அப்போதே கொள்கைகள் எல்லாம் பின்னுக்குத் தள்ள வேண்டிய கட்டாயத்துக்குப் போய்விடும். இது ஒருபுறம் இருக்க, தப்பித்தவறி தி.மு.க. ஆளும் கட்சியாக மாறிவிட்டாலோ, அதிலிருந்துதான் என்னுடைய திராவிடர் கழகக் கொள்கைக்கே சரிவு ஏற்பட்டுவிடும்.

ஏனெனில், ஆளும் கட்சியாக மாறிவிட்ட பிறகு, கட்சிக்குள்ளேயே பல மையங்கள் தோன்றிவிடும். அதிகாரத்தைப் பயன்படுத்தி சொத்து சேர்ப்பதில் பலரும் இறங்கிவிடுவார்கள். ஏனெனில், சமுதாயத்தில் வசதியாக வாழவேண்டும் என்ற ஆசை இல்லாமல் போகாது. இதன் விளைவாகக் கட்சிக்கே கெட்ட பெயர் ஏற்படும் அளவுக்குச் சென்றுவிடும். அந்தச் சமயம் பார்த்து, என் கொள்கை ரீதியான எதிரிகள் ஊழல் என்ற கற்களால் திராவிட இயக்கத்துக் கொள்கைகளையே அழிக்கப் பார்ப்பார்கள். அது மட்டுமல்ல. தி.மு.க. அதிகாரத்தைக் கைப்பற்றுமானால், அதன்பிறகு கட்சிக்குள் ஏற்படக்கூடிய கருத்து

வேறுபாடுகளாலும் போட்டியாலும் கழகமே பலவிதமான பிளவுகளுக்கு உள்ளாவதைத் தவிர்க்க இயலாது' என்று நீண்ட உரையை பெரியார் நிகழ்த்தினார். அன்று காலை என்னிடம் பெரியார் பேசிய அவ்வளவையும் என்னுடைய மாமா வீட்டில், அண்ணாவிடம் விவரித்தேன். பெரியாரின் தீர்க்க திருஷ்டியின் தீட்சண்யத்தைப் பார்த்து, அண்ணா வெலவெலத்துப் போய்விட்டார்.

தமக்கு அதிகாரத்தின் மீது ஆசையில்லை என்று விளக்கும் வகையிலேயே அண்ணா பேசி வந்தார். அக்டோபர் 9 தேதியிட்ட 'திராவிட நாடு' இதழில் தன் நிலைமையை விளக்கி நீண்ட கட்டுரை ஒன்றை எழுதினார்: 'சேலம் மாநாட்டுக்குப் பிறகு இன்றுவரை, எந்தத் தேர்தல் பிரசாரக் கூட்டத்திலும் நான் கலந்து கொண்டது இல்லை. 'திராவிட முன்னேற்றக் கழகத்தின் உள் எண்ணம் பதவி தேடுவது, தேர்தலை நாடுவது' என்று பழி சுமத்துவது சரியில்லை என்பது பழி சுமத்திப் பேசுபவர்களுக்கே தெரியும். ஆனாலும் பாவம், அவர்கள் என்ன செய்வார்கள்?' தன் தலைவரின் நிலைக்கு விளக்கம் அளித்தார் அண்ணா:

ஒரு பெரிய தவறான கருத்தைக் கொண்டுவிட்டு, அதன் பயனாக மிகுந்த கஷ்டப்படுகிறார் பெரியார். அதாவது, நான் ஏதோ மிகமிக பிரயாசை எடுத்துக்கொண்டு தந்திரமாகத் திட்டமிட்டு, ஊரெங்கும் அன்பர்களை தூதனுப்பி, ஓர் எதிர்ப்பு முன்னணியை அமைத்து வைத்திருப்பதாகக் கருதுகிறார். எதிர்ப்பு முன்னணி அமைத்திருப்பதும் உண்மை. அது இன்று தனி அமைப்பாகத் தழைத்திருப்பதும் உண்மை. ஆனால், இந்த நிலைமையை உண்டாக்க நான் ஏதோ இரவு பகலாக, சாமர்த்தியத்தை எல்லாம் செலவிட்டு வந்திருக்கிறேன் என்று எண்ணுகிறாரே, அதுதான் தவறு. இந்தத் தவறான கருத்திலிருந்து மற்றும் பல தவறுகள் முளைக்கின்றன - சகஜமாகவே.

நிலைமை என்னை உண்டாக்கிற்று. நிந்தனை என்னை வளர்க்கிறது.

நிலைமையை நான் உண்டாக்கவில்லை; நிந்தனை எனக்குப் பழக்கமற்ற காரியம்.

ஈ.வெ.ரா. சற்றும் சளைக்கவில்லை. 1949 நவம்பர் 1 தேதியிட்ட 'விடுதலை' தலையங்கத்தில், நான்கைந்து வருடங்களாகவே

இந்த 'சதித் திட்டம்' தீட்டப்பட்டு வந்திருப்பதாகக் கூறி, அண்ணாவுக்கும் தனக்குமிடையே மனத்தாங்கல் ஏற்படக் காரணமான நிகழ்ச்சிகளை விவரித்திருந்தார். தம்முடைய தலைமையையும் கருத்தையும் முழுமையாக ஏற்றுக்கொள்ளாததையும், வேறுபாடுகளையும் 'சதித் திட்டம்' என்று ஈ.வெ.ரா. அர்த்தம் செய்துகொண்டார்.

இத்தகைய சூழலில் 20.11.49 அன்று, வேலூரில் பெரியாரின் கூட்டத்தில் தனது கட்சிக்காரர் கலவரமும் கலகமும் செய்ததாக அறிந்து, அண்ணா ஓர் அறிக்கை வெளியிட்டார்:

> தி.க.வும் தி.மு.க.வும் மோதிக்கொள்வது கழகத்தின் குறிக்கோள் வெற்றி பெறுவதற்கு உரிய வழியாகாது. மாறாக, மாற்றாருக்கும் அரசுக்கும் லாபம் தரும். ஆர்வத்துக்கும் ஆத்திரத்துக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் பொதுவாழ்வின் அபாயக் குறிகள். அப்படிப்பட்டவர்களுக்கு தி.மு.க.வில் சிறிதும் இடம் கிடையாது. கொள்கைக்காக நாம் இருக்கிறோம். குரோதத்துக்காக அல்ல.

- என்று வெளிப்படையாகக் குறிப்பிட்டார்.

ரத்தினவேலை ஓராண்டுக் காலம் கட்சியிலிருந்து நீக்கினார் அண்ணா.

புதிய கட்சி வரை...

புதிய கட்சிப் பணி அண்ணாவை மூழ்கடித்தது. மாதத்தில் இரண்டு நாட்களே அவர் காஞ்சிபுரத்தில் இருக்க முடிந்தது. மீதி நாட்களெல்லாம் கூட்டங்களுக்கு தேதி கொடுத்தார். நிறைய பயணம் செய்ய வேண்டியிருந்தது. ஏற்கெனவே, தம் தோற்றத்தைப் பற்றி அக்கறை கொள்ளாத அண்ணா, சுற்றுப் பயணங்களின்போது இன்னும் குறைவாக தன்னைப் பற்றி எண்ணினார். ஒரே வேட்டி சட்டையைப் பல நாட்களுக்கு அணிந்தார். கட்சித் தொண்டர் அல்லது அபிமானி வீட்டிலேயே தங்கிக்கொண்டார். பயணத்தின்போது கொறிக்க வேர்க்கடலையோ முறுக்கோ வைத்துக் கொண்டிருப்பார். எவ்வளவு தூரப் பயணம் என்றாலும், எவ்வளவு பசித்தாலும், அண்ணா ஹோட்டலில் இறங்கிச் சாப்பிடமாட்டார். வீதியில் எங்காவது மிக்சர் பொட்டலம் வாங்கிக் கொள்வார்.

எல்லாவற்றிலுமே அண்ணா மிகவும் கவனமாகவும் ஒழுங்காகவும் இருந்தார். புதிய கட்சியின் அலுவலகம், வட சென்னை பவழக்காரத் தெருவில், திருவொற்றியூர் சண்முகம் வீட்டில் செயல்படத் தொடங்கியிருந்தது. சண்முகம், வாடகை ஏதும் இல்லாமல்,

தன் வீட்டிலேயே கட்சி தொடர்ந்து செயல்பட வேண்டும் என்று விரும்பினார். சண்முகத்துக்கு அண்ணாவிடம் அளவற்ற பாசம். ஆனால், 'என்னதான் திருவொற்றியூர் சண்முகம் நமக்கு வேண்டியவர் என்றாலும், 'என் வீட்டில்தான் கழகம் இருக்கிறது' என்று வாய்தவறி ஒருநாள் அவர் சொல்லிவிட்டால், இவ்வளவு பேர் பட்ட பாடும் வீணாகிவிடும்' என்று எண்ணினார் அண்ணா. முடிவு, சில மாதங்கள் சென்னை தங்கசாலையில் கட்சி அலுவலகம் செயல்பட்டது. 1951 நவம்பரில், தி.மு.கழகத்துக்குச் சொந்தமாக, அறிவகம் தலைமை நிலையத்துக்காக, சென்னை ராயபுரம் சூரியநாராயண செட்டித் தெருவில், 24-ம் எண் கட்டடம், 30 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கப்பட்டது. கழக நாடகங்கள் நடத்தித் திரட்டிய நிதியிலிருந்து வாங்கிய இந்த இரண்டு மாடிக் கட்டடத்தை அண்ணாவின் நண்பர் ஜான் திறந்து வைத்தார். அந்த வருடம், தான் படித்த பச்சையப்பன் கல்லூரிக்கும் 20 ஆயிரம் ரூபாய் நிதி திரட்டிக் கொடுத்தார் அண்ணா.

நாடகங்கள் தவிர, முன்னணித் தலைவர்களும் பேச்சாளர்களும் புதிய கட்சியையும் அதன் கொள்கைகளையும் பொதுக் கூட்டங்கள் வாயிலாகப் பரப்பினர். 1950 மே மாதத்துக்குள் 2 ஆயிரத்து 35 கூட்டங்களையும், 11 மாநாடுகளையும் கட்சி நடத்தி முடித்திருந்தது. மணிக்கணக்காக பேச பேச்சாளர்களுக்கு விஷயம் இருந்தாலும், ஜெயகாந்தன் சொன்னதுபோல, பேச்சின் தரமோ உயர்வு என்று சொல்லும்படியாக இல்லை. அண்ணாவும் வேறுசில முன்னணித் தலைவர்களும் மட்டுமே இதற்கு விதிவிலக்காக இருந்தனர். "தி.மு.கழகம் பிறந்தவுடன் அவர்கள் நேரடியாக அரசியலில் பிரவேசிக்கவில்லையே தவிர, அவர்களது பொதுக் கூட்டங்களில் அரசியல் பிரச்னைகளைக் கற்றுக்குட்டித் தனமாக நிறையவே பேசினார்கள். நேருவைப் பற்றி மிக இழிந்த கதைகளைக் கூறினார்கள். பணக்காரர்களையும், வசதியாக வாழ்கிறவர்களையும் சாடுவதன் மூலம் ஏழை மக்களின், பாமரர்களின் கைத்தட்டலைப் பெற்றார்கள்" என்றார் ஜெயகாந்தன்.

நேருவின் செல்வந்தர் குடும்பப் பின்னணி தேசியப் பார்வை ஒருபுறமும், தி.மு.க.வினரின் சாமான்ய பின்னணியும், தமிழக அரசியலைத் தாண்டாத அவர்களின் நோக்கு இன்னொரு புறமும் ஆக, எதிரும் புதிருமாக இருந்தன. நேருவையோ காங்கிரஸையோ விமரிசிப்பதில் எல்லோருமே அண்ணா போல நயத்தக்க நாகரிகத்தைக் கையாளவில்லை. காங்கிரஸை ஜமீன்தார்கள், பஸ் தொழில் அதிபர்கள் மற்றும் பணக்காரர்களின் கட்சியாகவே தி.மு.க.வினர் பார்த்தனர். மக்கள் தொடர்புக்கு, தி.மு.க. பேச்சையும் எழுத்தையுமே பெரிதும் மேற்கொண்டிருந்ததால், பேச்சிலும்

எழுத்திலும் தரக்குறைவு என்பது ஓரளவு தவிர்க்க முடியாததாயிற்று. சில வேளைகளில், தோற்றத்தையும் பின்னணியையும் வைத்து காங்கிரஸ் தலைவர்களைக் கிண்டலும் கேலியும் செய்த தி.மு.க.வினர் தங்கள் 'அண்ணனின், 'கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு' என்ற தாரக மந்திரத்தைக் காற்றில் பறக்கவிட்டனர். அண்ணாவால் ஓரளவுக்கு மேல் கட்டுப்பாட்டைக் கொண்டுவர முடியவில்லை என்ற நிலையே இருந்தது. இப்படிப்பட்ட பேச்சாளர்களின் சமூக, பொருளாதார, கல்விப் பின்னணியையே அவர்களின் பேச்சு எதிரொலித்தது. குறிப்பாக அண்ணாவின் பிரசாரமும் ஆளுமையும் கட்சியில் கொண்டுவந்து சேர்த்திருந்த இரண்டாம் நிலை தலைவர்களின் இந்த அடையாளம் துரதிர்ஷ்ட வசமாக அமைந்தது. அதிலிருந்து தப்ப, வேறு வழியே இருக்கவில்லை.

ஜெயகாந்தனின் பார்வையிலோ, "அண்ணாவுக்கு ஏற்ற தம்பிகள் கிடைத்தது போல, தம்பிகளுக்கு ஏற்ற அண்ணா கிடைத்தார்."

> பலவீனமான சமூக - அரசியல் நேர்மை கொண்ட அண்ணாதுரையை தி.மு.க. தலைவராகத் தேர்ந்தெடுத்ததில் வியப்பேதுமில்லை. தனக்காகவும் கழகத்துக்காகவும் எல்லா வகை பலவீனங்களையும் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள அவர் எந்த அளவுக்கும் செல்வார். கலை, இலக்கியம், மொழி, பொருளாதாரம், அவர்கள் சந்திக்கிற சமூக அரங்குகள் எல்லாமே, அண்ணாதுரை எடுத்துக்கொண்ட நிலைப்பாடுகளின் தரம். இவை, ஏதும் அறியாதவர்களையும் மூர்க்கர்களையுமே கவர்ந்தது என்பதை நான் எவ்வாறு மறக்க முடியும்?

ஜெயகாந்தன் சொல்வது போலல்லாமல் அண்ணா மற்ற தலைவர்களிடமிருந்து வேறுபட்டு இருக்கவில்லை. மிக சாதுர்யமான அரசியல்வாதியான அண்ணா, வாய்ப்புகள் வருகையில் அவற்றை அழகாகப் பயன்படுத்திக்கொண்டு, மாறிவரும் அரசியல் தேவைகளுக்கு ஏற்ப அனுசரித்துப் போவதில் கெட்டிக்காரராக இருந்தார். ஆனால், அதுவே அண்ணாவின் பரிணாம வளர்ச்சிக்குக் காரணமாகவும் அமைந்தது. கலாசார, மொழி, தேசிய உணர்வுகளை அவர் பயன்படுத்திக் கொண்டபோதும், தமிழ்ப் பெருமை, சுயமரியாதை, இன அடையாளம் இவற்றைத் தூண்டிவிட்டார். அவர் எடுத்த நிலைப்பாடுகள் எல்லாம் சாதாரண மக்களைக் கவர்ந்தது என்பதாலேயே அவை அற்பமானவை என்றோ, ஏதும் அறியாதவர்களையும், மூர்க்கர்களையும் மட்டுமே ஈர்த்தன

என்றோ கூறமுடியாது. அண்ணாவின் ஆளுமையும், எவரையும் ஈர்த்துவிடும் அவரது பண்புகளும், ஓர் ஆதர்ச தலைவராக அவரை உருவாக்கின.

கட்சி ஏடுகளும், நாடகக் குழுக்களும், பேச்சாளர்களும், எழுத்தாளர்களும் மாநாடுகளும் கட்சியை மூலை முடுக்குகளுக்கெல்லாம் கொண்டு சென்றன. தி.மு.க. ஏடுகள் - படித்தவர்களையும், அவர்கள் மூலமாகப் பாமரர்களையும் குறிவைத்தன. சென்னையிலிருந்து 'மாலை மணி' வெளியாயிற்று. அண்ணாவின் 'திராவிட நாடு' பின்னர் 'காஞ்சி', கலைஞர் கருணாநிதியின் 'முரசொலி', அண்ணா ஆசிரியராக இருந்த ஏடான 'நம் நாடு' போன்றவை கட்சியின் முக்கிய குரல்களாக ஒலித்தன. செழியனின் 'மன்றம்', காஞ்சி மணிமொழியின் 'போர்வாள்', பேராசிரியர் அன்பழகன் மற்றும் ராதா மணாளனின் 'புதுவாழ்வு' டார்பிடோ ஜனார்த்தனத்தின் 'தோழன்', சி.பி.சிற்றரசின் 'தீப்பொறி', ஏ.கே.வேலன் மற்றும் டி.கே.சீனிவாசனின் 'எரிமலை', பின்னர் டி.கே.சீனிவாசன் மற்றும் ஆர்.எம்.வீரப்பன் இணைந்து நடத்திய 'ஞாயிறு', ஏ.வி.பி.ஆசைத்தம்பியின் 'தனி அரசு' போன்ற பல வார ஏடுகள், திராவிட இயக்கத்தின் பிரசார பீரங்கிகளாகச் செயல்பட்டு, இயக்கத்தின் கருத்து நாடெங்கும் பரவ உதவின. 'அந்தக் கவர்ச்சி - மேடைக் கவர்ச்சி, பத்திரிகைக் கவர்ச்சி, வெளியிடப்பட்ட புத்தகங்களின் கவர்ச்சி இவையெல்லாம் இன்று அழிந்துபோய் விட்டன. வரலாறு அவற்றை அழித்துவிட்டது. ஆனால், அன்று பிரசாரத்துக்கான சகல சாதனங்களாக இருந்த இவை, திராவிட முன்னேற்றக் கழகத்தை வெகு துரிதமாக வளர்த்தன" என கண்ணதாசன் எழுதினார்.

தி.மு.க.வின் சினிமா ஆளுமைகளான நடிகர்கள் பற்றியும் கண்ணதாசன் இப்படி எழுதினார்:

> சினிமா நடிகர்கள் ஈடுபட்ட உடனேயே அதற்குப் புதியதொரு கவர்ச்சி வந்தது. இந்தப் புரியாத விஷயங்களே சினிமாவிலேயும் வரத் தொடங்கியது.
>
> இவை அற்புதமான பிரசார சாதனம் என்பதை உணராத காங்கிரஸ்காரர்கள்தான் பைத்தியக்காரர்கள். அரசியலுக்கு இவை அனைத்தும் தேவை என்பதைக் காலம் உணர்த்திவிட்டது. காங்கிரஸ்காரர்களோ சினிமாவையும், அழகான சொற்பொழிவுகளையும், எழுத்துகளையும் கேலி செய்தே அழிந்தார்கள்.
>
> எதையும் அழகாகவும் ஆணித்தரமாகவும் சொல்லத் தெரிந்துவிட்டால், அது உண்மையோ பொய்யோ,

அவனைச் சுற்றிலும் ஒரு பெரும் கூட்டம் கூடிவிடும் என்ற உண்மையை அண்ணா நியாயப்படுத்தித் தமிழகத்திலே காட்டினார். அவரைச் சுற்றிலும்தான் கூட்டம் வந்தது.

காமராஜரோ 'கூத்தாடிகள்' என அவர்களைத் தாழ்த்தினார். ஆனால், அந்தக் கூத்தாடிகளின் முன்னேற்றத்தை அவரால் தடுக்க முடியவில்லை. கண்ணதாசன் விவரித்தார்:

மீன் சினையிலிருந்து மீன் குஞ்சுகள் புறப்படுவது போல, வெகு வேகமாக திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்தது.

மழை பெய்த உடனே மீன் சினை குஞ்சாக மாறிவிடும் என்பார்கள். ஓர் ஊரில் சொற்பொழிவு நிகழ்ந்து முடிந்தவுடனேயே அங்கிருந்து குறைந்தது இருபத்தைந்து இளைஞர்களாவது திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு வருவார்கள்.

வந்தது மட்டுமல்ல. ஐநூறு கிளைக் கழகங்கள் வேண்டும் என்று கேட்டார் அண்ணா. அதனால், போகிற வழிகளில் எல்லாம் கழகக் கொடி பறக்கத் தொடங்கியது.

டீ கடைகள், காபி கடைகள், பிராமணர் கடைகளைத் தவிர மற்ற கடைகளில் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் பிரவேசிக்க ஆரம்பித்தது. 'பம்பாய்க்குப் போனால், அங்கு இருக்கிற தமிழனும், பர்மாவுக்குப் போனால் அங்கு இருக்கிற தமிழனும் திராவிட முன்னேற்றக் கழகத்தவனாக மாறத் தொடங்கினான்.

யார் எல்லாம் கழகத்தால் ஈர்க்கப்பட்டார்கள்? கண்ணதாசன் சொன்னார்:

மாணவர்கள், வெளியிலே இருக்கின்ற தொழிலாளர்கள், இளைஞர்கள், இவர்களெல்லாம் இதன் வசப்பட்டவர்கள் ஆனார்கள். திட்டமிட்ட தொழிலாளி வர்க்கம் - அதாவது, மில் தொழிலாளிகள் போன்றவர்கள் - இவர்கள்தான் கம்யூனிஸ்ட்டு கட்சி போன்ற கட்சிகளிலே இருந்தார்கள் தவிர, தாழ்த்தப்பட்டவர்கள், திட்டமில்லாத தொழிலாளிகள், கைவண்டி இழுப்பவர்கள், ரிக்ஷா இழுப்பவர்கள், பழம் விற்பவர்கள், சந்தையிலே காய்கறி விற்பவர்கள், இப்படிப்பட்ட தொழிலாளிகள் அனைவருமே

திராவிட முன்னேற்றக் கழகத்தின்பால் ஈர்க்கப் பட்டார்கள்.

இவர்கள் எதைச் செய்து இந்தக் கட்சிக்கு வந்தார்கள் என்று கேட்டால், எதுவும் இல்லை. எதைச் சொல்லி அவர்களை இந்தக் கட்சி ஈர்த்தது? அதனுடைய மையக் கொள்கை என்ன? எதைச் சொன்னால் மற்ற கட்சிகள் அதே மாதிரி ஈர்க்க முடியும் என்று ஏதாவது ஓர் இலக்கணம் உண்டா என்றால், அதுவும் இல்லை' என்று கூறும் கண்ணதாசன், 'மேடையிலே பேசுகிறவர் மனம் போன போக்கில் பேசுவார். அந்தப் பேச்சே போதும் என்று எண்ணி, 'அற்புதம்' என்று சொல்லிக்கொண்டு வந்தார்கள்.

இன்று எண்ணிப்பார்க்கையில் தொண்டர்களைப் பற்றிய ஜெயகாந்தனின் வர்ணனை ஓரளவுக்குச் சரியாகவே இருக்கிறது:

சமூக வாழ்க்கையில் எந்தவித நல்லொழுக்கமும் இல்லாத, வெறும் சாதுர்யத்தினால் சமூகத்தைச் சுரண்டுகிற மிகச் சாமான்யமான மனிதர்கள் எல்லாத் தரப்பிலிருந்தும் தி.மு.கழகத்தை வந்தடைந்தார்கள். இதற்கு விதிவிலக்கான நல்ல மனிதர்களும் தி.மு.கழகத்தில் இருந்தார்கள். பின்னால் வந்தும் சேர்ந்தார்கள்; இப்போதும்கூட இருக்கிறார்கள் என்கிற உண்மையைக் கேள்விக்கு இலக்காக்குவது என்னுடைய நோக்கமாக எப்போதும் இருந்ததில்லை. ஆயினும் அந்த நல்லவர்கள் எப்போதுமே அசக்தர்கள். நாணயத்தையும் நல்லொழுக்கத்தையும் வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டவர்கள் அங்கே யாருமில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டு ஒரு மாதத்துக்குள், நாடு - நகரம் பட்டி-தொட்டி யாவும் அறுநூற்றுக்கும் அதிகமான கிளைக் கழகங்கள் தழைக்கலாயின. அறுநூறு கிளைக் கழகங்களும், ஐம்பதினாயிரத்துக்கு அதிகமான உறுப்பினர்களையும் கொண்ட மிகப் பலம் வாய்ந்த அமைப்பாக திராவிட முன்னேற்றக் கழகம் காட்சியளித்தது. 'எந்த ஓர் இயக்கமும் இவ்வளவு துரிதமாக வளர்ந்ததாக வரலாறு கிடையாது. ஐநூறு கிளைக் கழகங்கள் வேண்டும் என்று கேட்டார் அண்ணா. ஆனால், ஆயிரம், இரண்டாயிரம் என வளர்ந்தது' என்று பின்னர் கண்ணதாசன் எழுதினார்.

அண்ணா ஊட்டிய 'குடும்பப் பாசம்' அதற்கு மிகப்பெரிய காரணமாக இருந்தது. அது ஓரளவுக்கு திராவிடர் கழகத்திலும் இருந்தது என்றாலும், தலைவரான பெரியார் ஒரு கண்டிப்புக்காரத் தந்தையாக இருந்தார். தி.மு.க.விலோ, பாசத்தைப் பொழியும் 'அண்ணா' இருந்தார். தம்பிகள் (தங்கைகளும்) அவரிடம் பாசத்தையும் வழிகாட்டுதலையும் எதிர்பார்த்தார்கள். அவருடைய திறமை அவர்களை எத்தனைக்கெத்தனை வியக்க வைத்ததோ, அத்தனைக்கத்தனை அண்ணாவின் அன்பு அவர்களை உருக்கியது. அவர் ஒரு லட்சிய அண்ணனாக இருந்தார். 'அண்ணா' என்ற பெயர் மிகக் கச்சிதமாகப் பொருந்தியது. அவருடைய தி.மு.க. என்பது ஒரு பெரிய குடும்பமாகவும், எல்லோரும் அவருடைய உடன் பிறப்புகளாகவும் இருந்து, இன்ப-துன்பங்களில், குடும்பத்தில் ஒருவராக அண்ணாவும் அவர் தோழர்களும் பங்கு கொண்டனர். அவர்கள் தலைமையிலேயே மணவிழாக்களும், அவர்கள் முன்னிலையிலேயே துன்ப நிகழ்வுகளும் நடந்தன. "ஒரு தாயின் கருப்பை எங்கள் அனைவரையும் சுமக்கமுடியாது என்பதால், நாங்கள் பல தாய்மார்களுக்குப் பிறந்தோம்" என்று அண்ணா மிகப் பொருத்தமாகச் சொன்னார்.

கம்யூனிஸ்ட்டுகள் கழகத்தைப் பின்பற்றப் பார்த்ததை ஜெயகாந்தனோ, 'முற்றிலும் சாதகமில்லாதது; கம்யூனிஸ்ட்டு கட்சியின் தன்மைக்கு ஒவ்வாததாக இருந்தது' என்று கூறினார். "கம்யூனிஸ்ட்டுகள், தாங்கள் தி.மு.க.வுக்கு எந்தவிதத்திலும், எந்தத் துறையிலும் குறைந்தவர்கள் அல்ல என்று காண்பிக்க நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்" என்றார் அவர்.

சரி, காங்கிரஸ் எப்படி இருந்தது? 'காங்கிரஸ்காரர்கள் பெரும்பாலும் வியாபாரிகள் போலவே நடந்துகொண்டார்கள்' என்றார் கண்ணதாசன். 'முன்னேற்றக் கழகத்திலிருந்த குடும்பப் பாசம் காங்கிரஸில் இருந்திருக்குமானால், கழகம் வளர்ந்திருக்காது என்பது மட்டுமல்ல, காங்கிரஸ் இளைத்திருக்காது' என்றார் அவர். "அவரால் (அண்ணாவால்) காங்கிரஸை இளைக்க வைக்க முடிந்தது. ஒரு தேசிய வரலாற்றுப் பாரம்பரியத்தைக்கூட, கேலி செய்ய முடிந்தது. இனி காங்கிரஸ் அல்ல, கழகம்தான் என்று சொல்ல முடிந்தது."

ஆனால், காங்கிரஸ் தன் வெற்றியாலேயே அழிந்தது. மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றியிருந்ததால், அதிக எதிர்பார்ப்பையும் அது மக்களிடத்தில் தூண்டியிருந்தது. மேலும், காங்கிரஸ் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் இருந்த குறைபாடுகளை அண்ணாவும் அவருடைய தி.மு.க.வும் சாதகமாக்கிக்கொண்டனர்.



ஈ.வெ.கி.சம்பத், அண்ணா

இது போதாதென்று வளர்ந்துவரும் மொழி, கலாசார உணர்வுகளை காங்கிரஸ் புரிந்துகொள்ளத் தவறியது. கண்ணதாசன் சொன்னதுபோல, 1960-களிலும்கூட காமராஜ், 'தேசியம் என்றால் இந்திய தேசியம்தான். இதில் தமிழ் தேசியம் என்ன, தெலுங்கு தேசியம் என்ன?' என்று புரியாமல் இருந்தார்.

கம்யூனிஸ்ட்டுகள் நிலையும் அதுவே. "அடிப்படையிலே வலுவடைந்த காங்கிரஸ், அடிப்படையை வலுவாக வைத்துக்கொண்ட கம்யூனிஸ்ட்டு கட்சி இவை பெறமுடியாத பெரும் செல்வாக்கை, திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றது. மேலும், 1952 தேர்தலில் எதிர்க்கட்சிகளில் முதல் வரிசையில் இடம்பெற்ற கம்யூனிஸ்ட்டு கட்சி, மேலும் பலமாக வளர்ந்து விடுமோ என்று தமிழ்நாட்டு முதலாளிகளும் நிலச்சுவான்தார்களும் அஞ்சினர்" என்றார் பி.ராமமூர்த்தி. "இவ்வாறு ஓரளவு வளர்ச்சி ஏற்பட்ட பிறகு, 1957 தேர்தலில் பங்கெடுத்துப் போட்டியிட தி.மு.க. முடிவெடுத்தது. அந்த முடிவை ஊர்ஜிதம் செய்வதற்காகவும், தேர்தல் வேலைகளுக்கு ஊக்கம் அளிக்கவும், 1956 டிசம்பரிலோ, 1957 ஜனவரியிலோ சென்னையில் நடந்த தி.மு.க. மாநாட்டுக்கு, தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் அனைத்தும் - தேசியப் பத்திரிகைகளான

இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி உள்ளிட்ட சகல தினசரிகளும், வார ஏடுகளும் முக்கியத்துவமும் விளம்பரமும் கொடுத்தன" என்று ராமமூர்த்தி எழுதினார். இந்த முக்கியத்துவத்துக்குக் காரணமாக ஒரு பிரிவினைவாதக் கட்சி முதல் முறையாகத் தேர்தலில் போட்டியிட முடிவெடுத்திருந்ததைச் சொல்லலாம். பெரியார் விதைத்திருந்ததையும் தி.மு.க.வினர் அறுவடை செய்தனர். ''கூடவே பெரியாரின் பகுத்தறிவுப் பிரசாரம், மூடநம்பிக்கை ஒழிப்பு பிரசாரம் ஆகியவை மத்திய வர்க்கத்திடமும், கூலி வேலை செய்த விவசாயத் தொழிலாளர்கள், பெரியாரின் கறுஞ்சட்டைப் படையில் தீவிர ஆர்வம் காட்டி, அதில் அணி அணியாகச் சேர ஆரம்பித்தார்கள். தொழிற்சங்க இயக்கங்களை நடத்திய கம்யூனிஸ்ட்டு தலைவர்கள், சாதாரண பெட்டிக்கடை வைத்திருப்பவர்களைக்கூட, பூர்ஷ்வாக்கள் (முதலாளிகள்) என்று அழைக்க ஆரம்பித்தார்கள். சொற்ப நிலத்தை வைத்துக்கொண்டு இருந்தவர்களை நிலச்சுவான்தார்கள் என்று அழைக்க ஆரம்பித்தார்கள்" என்றார் பி.சி.கணேசன்." "கம்யூனிஸ்ட்டுகள் விளக்கமளித்த, வர்க்க பேதம் - வர்க்க போராட்டங்களைவிட, பிறப்பால் தாழ்ந்த தொழிலைச் செய்கின்ற நிலை தங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்கிற விஷயம் பாமர மக்களுக்கு சுலபமாகப் புரிந்தது" என்றார் கணேசன்.

> நான் கேட்கிறேன் பொதுவுடைமைத் தோழர்களை: பொதுவுடைமை பேசும் புனிதர்களே! பஞ்சம் பஞ்சமென்று பறை சாற்றுகிறீர்களே! அந்தப் பஞ்சம் யாவர்க்கும் பொதுவா? ஏன் ஒரு குலத்தைப் பஞ்சம் பிடிப்பதில்லை? உங்களுக்கு நல்லெண்ணம் இருந்தால், உங்கள் நெஞ்சில் தோன்றாமல் இருக்குமா? இந்தப் பஞ்சத்தினால் சம்மட்டி ஏந்தும் பார்ப்பானைப் பார்ப்பதில்லை. ஏன்? கல் உடைக்கும் பார்ப்பானைத்தான் கண்டதுண்டா நீங்கள்? ஏன் அந்தக் குலம் மட்டும் குனியாமல், வளையாமல் குந்திக் குதிர் போல பெருக்கிறது? ஏன் அவர்கள் கட்டை வண்டி ஓட்டுவதில்லை? கன மூட்டை சுமப்பதில்லை? மலத்தைக் கூட்டுவதில்லை? ஏன் நம்மவர் மட்டும் உச்சி வேளையில் உழைக்கின்றனர்? ஒரு பார்ப்பனப் பெண்ணும் பிறர் வீட்டில் பணிப் பெண்ணாக இருக்கக் காணோமே?

- என்று அண்ணா வாதிட்டார். தி.மு.க.வுக்கு எதிரான காங்கிரஸ் நடவடிக்கைகள் மக்கள் ஆதரவைப் பெற்று, தி.மு.க. வளரவே உதவின.

13

'ஆரிய மாயை'யும் காங்கிரஸ் ஏமாற்றமும்



நாடு சுதந்திரமடைந்த நான்கு மாதங்களுக்கெல்லாம், (அதாவது 1947, டிசம்பரில்) கம்யூனிஸ்ட்டு கட்சி தடை செய்யப்பட்டது. எண்ணற்ற ஊழியர்களும், தலைவர்களும் விசாரணையின்றிச் சிறையில் அடைக்கப்பட எஞ்சியிருந்தோர் தலைமறைவாயினர். உள்துறை அமைச்சர் சர்தார் படேல் காலமானபிறகு, உச்சநீதிமன்றத் தலையீட்டினால் அந்தத் தடை நீக்கப்பட்டது. திருவாங்கூர், தெலுங்கானா சமஸ்தான மன்னராட்சிகளை எதிர்த்து ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் பல கம்யூனிஸ்ட்டுகள் சிறை சென்றனர். வன்முறை மூலம் இந்தியாவில் மாற்றத்தைக் கொண்டுவர முடியாது என்பதை அவர்கள் உணர சில ஆண்டுகள் தேவைப்பட்டன. புதிதாக அரசியலில் பூத்திருந்த தி.மு.க.வினர் கம்யூனிஸ்ட்டுகள் சந்தித்த அடக்குமுறைகளையும் கொடுமைகளையும் பற்றித் தங்கள் மேடைகளில் நிறையப் பேசினார்கள். எனினும், 'அன்றைய ஆட்சியை வேரோடு பெயர்த்தெறியச் சபதமேற்று,

வேரும் வேரடி மண்ணுமாகப் பெயர்த்து சாய்த்துக்கொண்டிருந்த கம்யூனிஸ்ட்டு தோழர்களுக்கு, காங்கிரஸ் ஆட்சியில் இழைக்கப்பட்ட கொடுமைகளைக் கதை கதையாகப் பேசிப் பேசி, (தி.மு.க.வினர்) கூட்டத்தினரைக் கண்ணீர் விடச் செய்தார்கள். கொடுமைக்கு ஆளான கம்யூனிஸ்ட்டுகளின் தியாகத்தையும், வீரத்தையும் ஒரு சாகசக் கதை மாதிரி ஜனங்களே எங்கு பார்த்தாலும் பேசிக்கொண்டிருந்த காலம் அது. கம்யூனிஸ்ட்டுகளுக்கு வக்காலத்து வாங்குவது மாதிரியோ, ஆதரவு திரட்டுகிற மாதிரியோ அல்லாமல், காங்கிரஸை எதிர்த்துப் பேச ஒரு விஷயமாகவும், அன்றைய கூட்டத்தை வெற்றிகரமாக நடத்த ஓர் 'அயிட்ட'மாகவும் இவர்கள் அதைப் பற்றிப் பேசுகிறார்கள் என்றே நான் நினைத்தேன்' என்றார் ஜெயகாந்தன். 'நாளுக்கு நாள் கம்யூனிஸ்ட்டுகள் போலீஸின் அடக்குமுறையினால் நிலைகுலைந்து கொண்டே வந்தார்கள். நூற்றுக்கணக்கான கம்யூனிஸ்ட்டு தோழர்கள் அநியாயமாக உயிர் இழந்தார்கள். சேலத்தில் இருபத்திரண்டு பேர் சிறைக்குள்ளேயே சுட்டுக் கொல்லப்பட்டார்கள்' என கம்யூனிஸ்ட்டுகள் செயல்பட முடியாத சூழலில் தள்ளப்பட்டதைப் பதிவு செய்திருக்கிறார் ஜெயகாந்தன். இந்த நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் " 'வடக்கு வாழ்கிறது - தெற்கு தேய்கிறது', 'வடநாட்டு ஆதிக்கம்', 'இந்தி ஏகாதிபத்தியம்' போன்ற கோஷங்களை முன்வைத்து திராவிட நாடு பிரசாரத்தை வலுவாக நடத்தத் துவங்கியது. அதே சமயத்தில், கம்யூனிஸ்ட்டு கட்சியின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த கடும் அடக்குமுறையை வன்மையாகக் கண்டித்தும் பிரசாரம் செய்தது. இவற்றின் விளைவாக 1952 தேர்தல் சமயத்தில் தி.மு.க.வுக்கு ஓரளவு செல்வாக்கு வளர்ந்தது'' என்ற பி.ராமமூர்த்தியின் பதிவு ஜெயகாந்தனை மறுதலிப்பதாக உள்ளது. அண்ணாவும், தி.மு.க.வினரும் கண்டனக் கூட்டங்களில், முதலமைச்சர் குமாரசாமி ராஜாவின் காங்கிரஸ் அமைச்சரவையின் செயல்களை ஹிட்லரின் நடவடிக்கைகளுக்கு ஒப்பிட்டார்கள்.

குமாரசாமி ராஜாவின் அமைச்சரவையோ, கழகத்தின் கொள்கையைப் பற்றியும் பிரசாரத்தைப் பற்றியும் ஏற்கெனவே கவலை கொண்டிருந்தது. அண்ணாவின் 'லட்சிய வரலாறு' கவிஞர் குழந்தையின் 'ராவண காவியம்', பாரதிதாசனின் 'இரண்யன் அல்லது இணையற்ற வீரன்', ஏ.வி.பி.ஆசைத்தம்பியின் 'காந்தியார் சாந்தியடைய', கறுஞ்சட்டையைத் தடைசெய்ததை விமரிசித்த கவிஞர் செல்வராஜின் புத்தகம் போன்ற எல்லாமே அரசால் தடை செய்யப்பட்டிருந்தன. போர்வாள், 'சர்வாதிகாரி', 'தூக்குமேடை', 'ரத்தக் கண்ணீர்', 'மகாத்மா தொண்டன்', எம்.ஆர்.ராதாவின்

'கீமாயணம்' போன்ற நாடகங்களும் தடையிலிருந்து தப்பவில்லை. மக்களிடையே நல்லிணக்கத்தைக் குலைக்கவும் துவேஷத்தையும் வன்முறையையும் தூண்டச் செய்யக் கூடியவையாகவும் இவை இருந்ததாக குமாரசாமி ராஜா நிர்வாகம் முடிவு செய்திருந்தது.

ராஜாவுக்கு முன்பு முதலமைச்சராக இருந்த ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், பிராமணர்கள் கொடுத்த அழுத்தம் காரணமாகச் சில பிரச்னைகளைச் சந்திக்க நேர்ந்தது. இதை 1948, ஏப்ரல் 4, 'திராவிட நாடு' இதழில் அண்ணா சுட்டிக்காட்டி, தலையங்கம் எழுதியிருந்தார். அதைத் தொடர்ந்து இன்னொரு தலையங்கத்தில், திராவிட இயக்கத்தையே பிராமணீயம் அழிப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். இதற்குப் பரிசாக, 'திராவிட நாடு' ஏட்டுக்கு ரூ.3,000 பிணைத்தொகை கட்டச் சொல்லி அரசு ஆணை விதித்தது. இதை, கிரேக்க அரசு பொறாமையால் சாக்ரடீஸுக்கு விஷம் கொடுத்த நிகழ்ச்சிக்கு ஒப்பிட்டு எழுதினார் அண்ணா. இந்த எதிர்பாராத விளைவு குறித்து, வாசகர்களிடம் நிதியுதவியும் கோர ஏழே நாட்களில் ரூ.3,000 திரட்டப்பட்டது. 'இனி நிதி அனுப்பவேண்டாம்' என வாசகர்களிடம் அண்ணா வேண்டுகோள் வைத்தார். அத்துடன், அரசின் முடிவை எதிர்த்து வழக்கும் தொடர்ந்தார். அண்ணா வழக்கு நடத்த நிதி வேண்டி அண்ணாவின் 'ஓர் இரவு' நாடகத்தை கே.ஆர்.ராமசாமி நடத்தினார். நவம்பர் 1949-ல் சென்னை உயர்நீதிமன்றம் அண்ணாவுக்கு சாதகமாக தீர்ப்பளிக்க, 'திராவிட நாடு' வாசகர்களுக்கு அண்ணா பணத்தைத் திரும்பக் கொடுத்தார்.

ராஜா ஆட்சியின் வேகம் அத்தோடு நிற்கவில்லை. அண்ணாவின் 'ஆரிய மாயை' 1943-ல் முதலில் வெளியானது. ஏழு வருடங்களுக்குப் பிறகு ராஜாவின் நிர்வாகம் அந்தப் புத்தகத்தைத் தடை செய்து, புத்தகத்துக்குப் புத்துயிர் ஊட்டியது. அண்ணாவுக்கு முப்பது வயதே ஆகியிருந்தபோது எழுதப்பட்ட அந்தப் புத்தகம், பிராமணர்களைப் பற்றிய அவருடைய எண்ணங்களையும், அவரது விரிவான படிப்பறிவையும் காண்பித்தது. ஆனால், ராஜா நிர்வாகத்தின் தடை, இந்தப் புத்தகங்களை ஏதோ பரபரப்பான, புரட்சிகரமான புத்தகங்களாக ஆக்கியிருந்தது என்றார் கண்ணதாசன். இந்த அபத்த முயற்சிகளின் விளைவு எப்படி இருந்தது என்று கண்ணதாசன் எழுதினார்:

> சில புத்தகங்களின் பேரால் வழக்குகளும் தொடரப்பட்டன. அந்த வழக்குகள் பொது மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியதோடு, கழகத்தைப் பற்றித் தெரியாதவர்களையும்

தெரிந்துகொள்ளச் செய்தன. அந்த நாளில் தமிழகத்தின் கிராமங்களில் கழகத்துக்குக் கொஞ்சம் கூடச் செல்வாக்கு கிடையாது. குமாரசாமி ராஜாவின் அரசாங்கம் தொடுத்த வழக்குகளும், அவற்றின் முடிவுகளும் கழக வளர்ச்சிக்குத் தீனி போடத் தொடங்கின. அப்போதிருந்துதான் முன்னேற்றக் கழகக் கருத்துகளை வெளியிடும் புத்தகங்கள் புற்றீசல் போலப் புறப்படத் தொடங்கின.

இவ்வளவும் குமாரசாமி ராஜாவின் நடவடிக்கைகளால் விளைந்த விளைச்சல்களே!

'ஆரிய மாயை' வழக்குக்காக அண்ணா பலமுறை திருச்சிக்குச் செல்ல வேண்டியிருந்தது. 1950, செப்டம்பர் 18 அன்று, ரூ.700 அபராதம் அல்லது ஆறு மாதச் சிறைவாசம் என்று தீர்ப்பு வழங்கப்பட்டபோது, சிறைத் தண்டனையைத் தேர்ந்தெடுத்தார் அண்ணா. ஆனால், வழக்கின் மூலம் இயக்கத்துக்குக் கிடைத்த பெரும் விளம்பரம் குறித்து அவர் உள்ளுக்குள் மகிழ்ச்சியே அடைந்திருக்கவேண்டும். 1951, மார்ச் 1 வரை 'ஆரிய மாயை' 159 இடங்களில், தடையை எதிர்த்து வாசிக்கப்பட்டது. முன்னர், 1950 அக்டோபர் 8 அன்று சென்னையில் நடந்த கூட்டமொன்றில் அண்ணா கேட்டார்:

நான் என்ன எழுதினேன் ஆரிய மாயையில்? பார்ப்பணீயம் பேராசை கொண்டது என்று குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் அதைவிட மோசமாக பாரதியார் கூறியிருக்கிறார் - 'பேராசைக்காரனடா பார்ப்பான் பெரியதுரை யென்னிலுடல் வேர்ப்பான்.' இப்படி சொல்கிறார் தேசியகவி பாரதியார். அவருக்கு மண்டபம் கட்டுகிறார்கள். ஏன் அவரைக் குற்றம் சாட்டக்கூடாது? நான் என்ன அவரைவிட அதிகமாகவா எழுதிவிட்டேன்? தைரியம், திறமை, அறிவிலே நம்பிக்கை இருக்குமானால் நான் ஆரிய மாயை என்று தீட்டினால் ஆரிய மகிமை என்று தீட்டுவதுதானே? கல்கியாரில்லையா? விகடரை விரும்பி அழைத்தால் வரமாட்டாரா? தினமணி ஆசிரியர் முடியாதென்பாரா? மித்திரன் ஆசிரியர் வரமாட்டேன் என்று கூறுவாரா? அப்படியிருக்கும் போது ஏன் இவர்கள் நான் எழுதினால் மறுப்பேடு தீட்டக்கூடாது? வக்கில்லையா, வழியில்லையா?

யாரும் இந்தச் சவாலை ஏற்க முன்வரவில்லை, நூலில் இருந்த

முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டி, கம்யூனிஸ்ட்டு தலைவர் பி.ராமமூர்த்தி மட்டுமே எழுதினார். ஆனால் அவருடைய 'விடுதலைப் போரும் திராவிட இயக்கமும்' அண்ணா மறைந்து ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகே, 1978-ல் வெளியாயிற்று. பி.ராமமூர்த்தியின் முயற்சி, எதிராளியின் சாட்சியத்தைத் தகர்க்கிற மாதிரி வெகு கவனமான வாதமாக இருந்தபோதும், பிராமணீய இந்துத்துவம், சாதிப் பிரிவினைகளையும், சமூகப் பாகுபாடுகளையும் உருவாக்கிற்று என்ற முக்கிய அம்சத்தை உடைத்தெறியத் தவறியிருந்தது. ராமமூர்த்தியின் முயற்சியை பி.சி.கணேசன் பின்வருமாறு கூறுகிறார்:

> திராவிட இயக்கத்தைப் பற்றிய நேர்மையான விமரிசனமாக தோழர் ராமமூர்த்தியின் புத்தகம் அமையவில்லை. அதனால்தான் இந்திய வரலாற்றுப் போக்குகளை கவனிப்பதில் இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சி தொடர்ந்து தவறுகளையே செய்து வந்திருக்கிறது.
>
> தவறுகள் செய்யாமல் வளர்ச்சி அடைந்த அரசியல் இயக்கம் என்று எதுவும் இல்லை. இந்திய கம்யூனிஸ்ட்டு இயக்கம் செய்த தவறுகளை தோழர் ராமமூர்த்தி பின்னுக்குத் தள்ளிவிட்டு, திராவிட இயக்கத்தையும் பெரியார், அண்ணா போன்ற தலைவர்கள் செய்த சில தவறுகளையும் பூதாகாரமாகப் பெரிதுபடுத்தி திராவிட இயக்கமே ஒரு பிற்போக்கான இயக்கம் என்பது போலச் சித்திரிப்பதற்கு ஒரு பெரிய புத்தகத்தை எழுதி முடித்திருக்கிறார்.

ஆரிய மாயை

'ஆரிய மாயை'யில் அப்படி என்னதான் இருந்தது? அண்ணாவின் மேலோட்டமான ஆய்வுப்படி, ஆரியரின் தாக்கம் தெற்கே வருவதற்கு முன், பிறப்பால் பிரிவுகள் ஏதும் இங்கே இருந்ததில்லை. அதன் சீரிய கலாசாரமும் நெறிகளும் முகலாயர்கள் வரும்வரை அப்படியே இருந்தன. பிராமண ஆதிக்கத்தை அச்சத்தோடு பார்க்கவும், தங்கள் பழம்பெருமை குறித்துப் பெருமைப்படும் வகையிலும் தமிழ்ச் சமுதாயத்துக்கு - குறிப்பாக தி.மு.க. தொண்டர்களுக்கு - அந்தப் புத்தகம் அமைந்திருந்தது.

தான் ஆரியர்களைப் புகழ்ந்தோ இகழ்ந்தோ பேசவில்லை என்று தொடக்கத்திலேயே உறுதியளித்த அண்ணா வாசகரையும் தான் அப்படி இருக்கச் சொல்லப் போவதில்லை என்றும் சொல்லி,

பிறரது விமரிசனங்களை மட்டுமே தான் விவரித்துச் சொல்வதாகச் சொன்னார். எனினும் மொத்தப் புத்தகமுமே அண்ணாவின் ஆரிய எதிர்ப்பை உமிழத்தான் செய்தது. தன் வாதத்துக்கு ஆதரவாக, அபே ஜே.ஏ.டுபோய்ஸின் 'ஹிண்டு மேனர்ஸ் கஸ்டம்ஸ் அண்ட் செரிமனீஸ்' என்ற பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் வெளியிடப்பட்ட நூலிலிருந்து ஏராளமான மேற்கோள்கள் காண்பித்திருந்தார் அண்ணா. மைசூரிலும், கோயம்புத்தூரிலும் முப்பது வருடங்கள் வாழ்ந்த பிரெஞ்சு பாதிரியாரான டுபோய்ஸ், பிராமணர்கள் ஆட்சியாளர்களுடைய தயவை நாடி வாழ்ந்தார்கள் என்ற நிலையை எடுத்திருந்தார். தம் காலத்தில் அதிகாரிகளாக இருக்கும் பிராமணர்களின் பட்டியலை வெளியிட்டு, டுபோய்ஸ் 1807-ல் வெளியிட்ட கருத்து 1940-லும் பொருந்தும் என்று வாதாடினார், அண்ணா.

டுபோய்ஸின் குறிப்புகளை அவற்றின் பின்னணியில் வைத்தே பார்க்க வேண்டும். கிறிஸ்துவ மிஷனரிகள் சாதியையும், வர்ணாசிரம தர்மத்தையும் அறிந்தபின்னரே தங்கள் மதத்தின் சமத்துவ மேன்மையை வலியுறுத்த முடிந்தது. "பேராசைக்காரர்கள், பேரவா கொண்டவர்கள், தந்திரம் செய்பவர்கள், வஞ்சகமானவர்கள், இரட்டை நாக்கு படைத்தவர்கள், பணிந்து போகிறவர்கள், மறைமுகமாக (கோள்) குறை சொல்பவர்கள், பொய்யர்கள், நேர்மையற்றவர்கள், அடக்குமுறையாளர்கள், புதிரானவர்கள்" என்று டுபோய்ஸ் பிராமணர்களை வர்ணித்தார். அவற்றைப் பட்டியலிட்டு வாசகரின் மனதைத் துவக்கத்திலேயே பிராமணர்களுக்கு எதிர்ப்பாக மாற்றியபிறகு, ஏராளமான தமிழர்கள் பிராமணர்களை இன்னும் வணங்கி வருகிறார்களே என்று அண்ணா வருத்தப்பட்டார். பள்ளி ஆசிரியராகவோ, பூஜாரியாகவோ அல்லது தின்பண்டம் விற்பவராகவோ பிராமணர் இருந்தால், அவர்களிடம்கூடத் தமிழர்கள் பணிந்து போய்விடுகிறார்கள் என்று வேதனைப்பட்டார். பிராமணர்கள் உண்மையில் கோழைகளே என்ற டுபோய்ஸின் வாதத்தையும் தமிழர்களின் வீரத்தையும் ஒப்பிட்ட அண்ணா, "அவ்வாறாயின் அவர்கள் எப்படி போர் புரிந்துகொண்டிருந்தவர்களை வென்றார்கள்? ஆரிய மாயையில் அவர்கள் (திராவிடர்கள்) சிக்கிக்கொண்டார்கள் என்றுதானே பொருள்? அபே டுபோய்ஸ் போன்ற பாரபட்சமற்ற அறிஞர்கள் கூறிய பிறகும், நடுநிலையாளர் யாராவது அவர்களுக்கு மரியாதை அளிப்பார்களா?" என்று கேட்டார் அண்ணா.

இரண்டு கலாசாரங்களும் வெவ்வேறு என்றும், சுதந்திரமான, ஆரியருக்கு முந்தைய சிந்து சமவெளி (திராவிட) நாகரிகத்தை



பி.ராமமூர்த்தி, அண்ணா

ஆரியர்கள் சிதைத்துவிட்டனர் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறியிருந்ததை அண்ணா லாகவமாகப் பயன்படுத்திக் கொண்டார். ஆரிய மாயையைப் பற்றி அறுபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் இன்றும், சிந்து சமவெளி நாகரிகத்தைச் சார்ந்தவர்கள் பேசியது திராவிட மொழிதானா என இன்னமும் தெளிவாக முடிவெடுக்கமுடியாத நிலையே உள்ளது. வீரம் மறைந்தது; கலைகள் கறைபட்டன; பண்டைய நாகரிகம் பாழடைந்த நிலையை அடைந்தது. தொல்பொருள் ஆய்வு - சிந்து சமவெளி நாகரிகத்தின் திராவிட அம்சங்களையும், எந்த அளவுக்கு ஆரியரால் அழிவு நிகழ்ந்தது என்றும் சொன்னதாக அண்ணா சொன்னார். பின்னர் நிகழ்ந்த சீரழிவுக்கு ஆரியர்கள் பொறுப்பா எனத் தெரியவில்லை. காரணம், தாக்கியவர்களின் அடையாளங்கள் இன்னும் முழுமையாக உறுதி செய்யப்படவில்லை. உண்மை என்னவெனில், சிந்து நாகரிகம் ஏற்கெனவே சீரழிந்திருந்தது. ஒன்று மட்டும் நிச்சயம், பொருளாதாரத்திலும் சமூக நிலையிலும் ஏற்கெனவே சீர்குலைந்த நாகரிகத்தை மரண அடியாக ஏதோ தாக்கியதில் வியப்பில்லை.

எது எப்படியிருப்பினும் ஆரியர்கள் கட்டுக்கதைகளையும், பலவீனங்களையும் சிந்து சமவெளி நாகரிகத்துக்கு அறிமுகப்படுத்துமுன், தெற்கே வசித்த திராவிடர்கள் இயற்கையோடு இசைந்தவர்களாக, மிகுந்த தீரம் உள்ளவர்களாக, அறத்தை உயர்த்திப் பிடிப்பவர்களாக இருந்தார்கள் என்றார். ஆரியர்கள் வரும் வரை, தமிழர்கள் அறிவைத் தேடுவதில் ஆர்வத்தோடு

இருந்தார்கள், அபத்தங்களை அறவே ஒதுக்கித் தள்ளினார்கள் என்று சங்ககாலப் படைப்புகளை தாராளமாக அண்ணா கையாண்டு இருந்தார். மிக மோசமான கள்ளிச்செடி போன்ற ஆரிய - நாகரிகம்; எப்படி ஒரு மேன்மையான கலாசாரத்தையும், வீரத்தையும் பெற்றிருந்த நாகரிகத்தை வெற்றிகொண்டது என்பதை அண்ணா போதுமான அளவுக்கு விளக்கவில்லை:

> மற்ற மக்களுக்குத் தெரியாதது தங்களுக்குத் தெரியும் என்றும், மற்றவர்களால் சாதிக்க முடியாததைத் தாங்கள் சாதிக்க முடியும் என்றும் கூறுபவனை, ஆராய்ச்சியுடையோர், அவன் ஒரு புரட்டன் என ஏசி ஒதுக்குவர்; ஆராயும் திறனற்றோரோ 'அப்படியா!' என்று ஆச்சரியத்தால் வாய் பிளக்க நின்று கேட்பர்; கை கூப்புவர். இந்த முறையிலே ஆரியம் தமிழரிலே தன்னுணர்வு, அறிவு நுணுக்கம் அற்றவர்களைப் பலி கொண்டது. வீராவேசம் கொண்ட வேங்கையானாலும், சதுப்பு நிலத்திலே - படுகுழியிலே - வீழ்ந்துவிட்டால் சாகத்தானே வேண்டும்? நீள்வையம் எதிர்த்தாலும், எமக்கு நிகரில்லை என்று கூறிப் போரிடும் நந்தமிழனும் ஆரிய மதக் குழியிலே வீழ்ந்தான். அன்பு, ஆற்றல், ஆண்மை, மானம் என்னும் பண்புகளை இழக்க வேண்டி நேரிட்டது.

"இதன் பொருள் என்ன? திராவிடர்கள் - குறிப்பாக, தமிழர்கள் - ஆராயும் திறனற்றோராக - அறிவில்லாதோராக இருந்தனர் என்பதுதானே பொருள்? அண்ணாதுரை கூறும் பழந்தமிழர்களின் பண்பாடு, கலை, நாகரிக வளர்ச்சி என்பவற்றுக்கு ஏதாவது இந்தக் கூற்றில் இடமுண்டா? பழங்காலத் தமிழர்களை இழிவுபடுத்துவற்கு, இதைக்காட்டிலும் கடுமையான கூற்று வேறு ஏதும் இருக்க முடியாது" என்று திருப்பினார் ராமமூர்த்தி.

வேறு யாராலும் சாதிக்கமுடியாததை, தங்களால் செய்யமுடியும் என்று ஆரியர்கள் காண்பிக்கவே, வக்கணையில்லாதவர்கள் வாயைப் பிளந்துகொண்டு பார்த்து முழு மரியாதை கொடுத்தார்கள் என்று வாதிட்டார் அண்ணா. அதாவது, அறிவைத் தேடுவதில் ஆர்வம் மிகுந்த திராவிடர்கள் இப்போது அறிவற்றுப் போய்விட்டார்கள் என்றார் அண்ணா.

ஆரியர்கள் நச்சுக் கருத்துகளால் போதை ஏற்றி, திராவிடர்களைத் தங்கள் கருத்துகளைப் பரப்பும் கருவிகளாக மாற்றியிருந்தனர். தாங்கள் வணங்கும் கடவுள்கள் ஆரியர் உருவாக்கியவை என்று தம் போன்றோர் கூறுவதை தமிழர்கள் நம்பாததையும். மாறாக

'மேதைகள்' என்று தங்களை இகழ்ந்தும், சுயமரியாதைக்காரர்கள் எல்லாவற்றையும் ஆரிய சூழ்ச்சி அல்லது புனைகதை என்று சொல்வதாகவும் அண்ணா வருந்தினார். "எருமை மாட்டின் மீது மழை பெய்தால் அது அசட்டையாக இருப்பதைப் போல, தமிழர்களுக்கு தோல் தடித்துவிட்டது" என்றார் அண்ணா. "ஆராய்ச்சியாளர்களின் ஆய்வுகள் ஆதாரங்களாக இருந்தபோதும், சிலபேர் என்னைப் போன்றவர்களை பீதி மனப்பான்மை கொண்டவர்கள் என்றும், மற்றவர்கள் சுயமரியாதைக்காரர்கள், ஆரியர்கள் பால் வெறுப்பு கொண்டவர்கள் என்றும் சொல்கிறார்கள். ஆனால் ஆராய்ச்சியாளர்கள் மீது குற்றம் காண முடியாதுதானே?" என்றார் அண்ணா.

தங்கள் புராணக் கதைகளும், கட்டுக்கதைகளும் ஆராயப்பட்டால் தாக்குப்பிடித்து நிற்கமுடியுமா என்று ஆரியர்கள் கவலைப்பட வில்லை என்றார் அண்ணா. 'ஆண்டான், அடிமையிடம் போய் காரணத்தை விளக்கிச் சொல்லவேண்டிய அவசியம் என்ன?' என்றும் கேட்டார். பலிகளையும், யாகங்களையும், சடங்குகளையும், பிராமணர் அல்லாதாரை வதைக்கவும், ஏமாற்றவும் தான் பிராமணர்கள் பயன்படுத்துகிறார்கள் என்ற ஹேவலின் கருத்தைச் சுட்டிக்காட்டினார். அவர்கள் மட்டுமே அர்ச்சகராக இருப்பது, காட்டுமிராண்டித்தனமான, மூடநம்பிக்கைகளைப் பரப்பி எத்திப் பிழைக்க உதவியதால், அறியாமை மிகுந்த மக்கள் அவற்றை அனைத்துக்கும் நிவாரணியாக ஏற்றுக்கொண்டனர் என்றார். அர்ச்சகர் தொழிலை தாங்களே வைத்துக்கொண்டு, பிராமணர்கள் பிறரைத் தாழ்த்தி ஏமாற்றிக் கொண்டிருந்தனர் என்றும், ஆரிய கலாசாரத்துக்கு முன் வர்ணாசிரமப் பிரிவுகள் இந்தியாவில் இருக்கவில்லை என்றும், கி.மு.5000-க்கும் கி.பி.4000-க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆரியர்களாக, தாக்கம் ஏதும் இல்லாமல் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்ற பி.டி.சீனிவாச ஐயங்கார் வாதத்தை அண்ணா சொன்னார். ஆரம்ப பல்லவ ஆட்சிக் காலத்தைச் சரித்திரம் இன்னும் சரியாக வரையறுக்கவில்லை என்றாலும், பிராமணர்களைப் பல்லவர்கள் ஆதரித்தார்கள் என்று அண்ணா கூறியிருப்பதை, 'இதைவிட மோசமாகத் தமிழர்களை அண்ணா கண்டிக்கமுடியாது' என பி.ராமமூர்த்தி எழுதினார்:

ஆரியர் வருகைக்கு முந்தைய தமிழ்ச் சமுதாயத்தில் பிரிவுகள் இருந்தன என்றும், அண்ணா சொல்கிறபடி ஒன்றும் சமத்துவ சமுதாயமாக அது இருக்கவில்லை என்றும் சங்க இலக்கியங்களில் இருந்து மேற்கோள் காட்டினார் ராமமூர்த்தி. அதாவது, 'பாணன் (பாட்டு பாடுபவர்), கூத்தன் (கூத்தாடி) விறலி (கூத்தாடும் பெண்),

பரத்தை (தன் உடலைப் பிறருக்கு விற்றுப் பிழைப்பவள்), வருங்காலத்தை அறியும் அறிவு பெற்ற பெரியோரையும், பாராட்டத்தக்க பார்ப்பானையும் தலைவன் தலைவிக்கு உதவி செய்பவர்களாகக் கொள்வர் என்று கூறுகிறது. எனவே, 'தொன்னெறி மரபின் கற்பிற்குரியர்' என்று கற்பரசிகளைக் குறிப்பிடும் தொல்காப்பியர், பரத்தையையும் விறலியையும் கூடவே குறிப்பிடுகிறார். எனவே, சங்ககாலத்தில் நிலக்கிழார்கள் இருந்தனர். அவர்கள் வேலை செய்யாமல் இருந்தது மட்டுமல்ல அவர்களுக்குக் கற்புடைய மனைவிகளும் இருந்தனர். பரத்தையர்களும் (வைப்பாட்டிகளும்) உண்டு' என்றார்.

அண்ணா பெருமிதம் கொண்ட புறநானூற்றைப் பற்றியும், 'சங்க இலக்கியம் எனப்படும் 'எட்டுத்தொகை', 'பத்துப்பாட்டு', முதலிய இலக்கியப் படைப்புகளில் எல்லாம் தமிழ்நாட்டில் இருந்த எண்ணற்ற குறுநில மன்னர்கள், மூவேந்தர்கள் என்று சொல்லப்படும் சேர, சோழ, பாண்டிய பெருநில மன்னர்கள் மீது பாடிய பாடல்களைத் தவிர வேறு என்ன இருக்கிறது? இந்தக் குறுநில மன்னர்கள் ஒருவருக்கொருவர் புரிந்த சண்டைகள், அவற்றில் வெற்றி பெற்றவரின் வீரத்தைப் புகழ்தல், பெருநில மன்னர்களாகிய மூவேந்தர்கள் குறுநில மன்னர்களைத் தோற்கடித்த வீரம் ஆகியவற்றைத்தானே இந்த இலக்கியங்களைப் படைத்த புலவர்கள் பாடியுள்ளார்கள்!' எனக் குறிப்பிடுகிறார் ராமமூர்த்தி.

"ஏற்கெனவே நாம் குறிப்பிட்டது போன்று, புராதனக் குடிமக்கள் வாழ்க்கையிலிருந்து, விவசாயம் வளர்ந்து ஓங்கிய சமயம் சொத்துரிமை ஏற்பட்டது. அதிலிருந்து வர்க்க சமுதாயமும் தோன்றியது. உழைக்கும் மக்களை அடக்கி ஆள்வதற்கு மன்னன் என்ற தலைவனும், குடிகளை அடக்குவதற்குப் படைகளும் தேவைப்பட்டன" என்கிறார் ராமமூர்த்தி. "நாம் நம்பவேண்டும் என அண்ணாதுரை எண்ணும் சமூகத்துக்கும் இந்த சமூகத்துக்கும் பொதுவாக ஏதாவது இருக்கிறதா?" என்றார் ராமமூர்த்தி.

ஆரியர்களான பாணினியும் பதஞ்சலியும், நாலந்தாவும் விக்ரமசீலாவும் ஆரிய அறிவு அரண்கள் (நாலந்தா புத்த மதம் சார்ந்தது) திராவிடத்துக்குள் நுழைய முடியவில்லை என்கிறார் அண்ணா. திராவிடம் உயர்ந்து நின்றது. சந்திர குப்தர் காலத்திலும், குஷானர்கள் காலத்திலும் திராவிடம் தனித்தே நின்றது. அசோகரின் ஆட்சிக்காலத்தில்தான் திராவிடத்தின் ஒரு பகுதி அவருடைய சாம்ராஜ்யத்தில் சேர்ந்தது. இதை மறுத்த ராமமூர்த்தி,

> பிற்காலத்தில் முகலாய சக்கரவர்த்தி ஔரங்கசீப்பின் மறைவுக்குப் பிறகு அவன் ராஜ்யம் சின்னாபின்னமான

போது, சிவாஜியினால் அமைக்கப்பட்ட மராட்டிய சாம்ராஜ்யம் அவர் மகன் சாம்பாஜி காலத்தில், தமிழ்நாட்டில் தஞ்சாவூர் வரையில் பரவியது. தஞ்சை மாவட்டம் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வரும் வரையில் மராட்டிய மன்னர்களின் ஆட்சியில்தான் இருந்து வந்தது.

மராட்டிய சாம்ராஜ்யம் வீழ்ச்சியடைந்த காலத்தில் கர்நாடகத்தில் வடபகுதியில் பாமினி ராஜ்யம் என்றும், தென்பகுதியான மைசூரில் கிருஷ்ண வம்சத்தினரின் ஆட்சியும் ஏற்பட்டன. பாமினி ராஜ்யத்தின் தென்கோடி அதிபர்கள், சுயேச்சை அரசாக அறிவித்து தமிழ்நாட்டில் தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் ஆட்சி புரிந்தனர்.

கிருஷ்ண வம்சத்தினரின் கையிலிருந்த ஆட்சியை ஹைதர் அலி என்ற சிப்பாய் கைப்பற்றினான். அவன் மகன் திப்புசுல்தான் தமிழ்நாட்டில் கொங்குநாடு எனப்பட்ட கோவை, சேலம் மாவட்டங்களையும், திருச்சியையும் திண்டுக்கல்லையும் கைப்பற்றி ஆட்சி புரிந்தான்.

ஆனால், அண்ணா என்னவோ, 'இப்படிப்பட்ட வீர மறத்தமிழ் இனம் ஆரிய சதித்திட்டத்துக்கு அடிமையாகிப் போனார்களா?' என்று கேட்கிறார்.

- என்று குறிப்பிடுகிறார்.

உதாரணங்களில் அண்ணா தாராளம் காட்டியது ஒருபுறம் இருக்க, அவரது மையக் கருத்திலேயே முரண்பாடு இருந்தது. முப்பது வயதே ஆகியிருந்த அண்ணா, கலாசார, பாரம்பரிய தேசியத்தைத் தம் வாதத்துக்கு அடிப்படையாக எடுத்துக் கொண்டிருந்தார். "நர்மதைக்குத் தெற்கே திராவிட நாடு, நர்மதைக்கு வடக்கே ஆரிய நாடு என்று நாடு இருந்ததை உறுதியாகச் சொல்லமுடியும்" என்றார் அண்ணா. "அவர் வங்காளத்தையும் சேர்த்துக்கொள்ளலாம்" என்று அவரை கேலி பேசினார் ராமமூர்த்தி. எல்லா பிராமணர்களும் கலாசார ரீதியாகவும் இனரீதியாகவும் ஆரியர்கள் என்றால், பிராமணர் அல்லாதார் அத்தனை பேரும் திராவிடர்களாக இருக்க வேண்டுமல்லவா? பூகோள ரீதியாக, நர்மதைக்குத் தெற்கே திராவிடம் என்று வைத்துக்கொண்டால், நர்மதை நதிக்கு மேற்கே இருப்பவை ஆரியமாக இருக்கவேண்டும். ஆனால் அப்படி அல்லவே! ஏன்

இந்த கொள்கைக் குழப்பம்? திராவிட இயக்கம் இந்தியா முழுவதிலும் உள்ள பிராமணர் அல்லாதாரை இணைக்க முயன்றதால் உருவானதே இந்தக் குழப்பம். ஜின்னாவையும், அம்பேத்கரையும், முஸ்லிம் மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் ஆதரவுக்காக நாடிப் போனதால், (பார்க்க 4-ம் அத்தியாயம்) அச்சாணி போன்ற வடக்கு - தெற்கு, ஆரியர் - திராவிடர் இன வேற்றுமைக் கருத்தை அது பதம் பார்த்தது. இந்தக் குழப்பம் நாம் அத்தியாயம் 11-ல் பார்த்தபடி, 1949 வரை தீர்ந்தபாடில்லை.

தன் தலைவரின் பால் அதீதமாக வசப்பட்டிருந்த அண்ணாவிடமிருந்து 'ஆரிய மாயை'தான் எதிர்பார்க்க முடியும். அனுபவம் தந்த முதிர்ச்சியும் எதார்த்தமும், தனது அரசியல் வேட்கை என அண்ணாவின் எண்ணங்களின் கடுமையைக் குறைத்தன. பிராமணீய வழிமுறைகளை அவர் தொடர்ந்து கேள்விக்குள்ளாக்கி இருந்தார் என்றாலும், அதை நாசுக்காகவும், ஏற்கும்படியாகவும் செய்தார்.

'ஆரியமாயை'யில் பிராமணர்களைக் குற்றம் கண்டிருந்த அண்ணா 'பணத்தோட்டத்தில்' பனியாக்களை (வடக்கத்திய வியாபாரிகளை) சாடினார். எம்.ஜி.ஆரை அண்ணாவிடம் கொண்டு சேர்த்த நூல் 'பணத்தோட்டம்'. ராமமூர்த்தியோ, "திராவிட இயக்கத்தினர் தங்களை இந்தியாவிலுள்ள உண்மையான கம்யூனிஸ்ட்டு கட்சி என்று அடிக்கடி வர்ணித்துக் கொண்டார்கள். ஆனால் தொழிலாளர் - தொழில் முதலீடு ஆகியவற்றில் அவர்களுக்கு கம்யூனிஸ்ட்டுகளின் கருத்துகளோடு ஒத்துப்போக முடியவில்லை" என்றார். பல ஆண்டுகளுக்குப் பின்னர், இலங்கை பேராசிரியரான கார்த்திகேசு சிவத்தம்பி, "திராவிட இயக்கத்துக்குத் தொடர்ந்து எடுத்துச்செல்ல பெரிதாகப் பொருளாதாரத் திட்டம் என்று ஏதும் இல்லை" என்று குறைப்பட்டார். இந்தக் குறைபாடுகளைக் கடந்தும் திராவிட தேசியம் பேசிய தி.மு.க.வை மக்கள் விரும்பினர்.

காங்கிரஸுக்குள்ளேயே தி.மு.க.வினரை அரசியல் ரீதியாகவும், அறிவுபூர்வமாகவும் எதிர்கொள்ளத் தேவை இல்லை என்ற எண்ணம் இருந்தது. அண்ணா 'அடுக்குமொழி பேசி மயக்குகிறார்' என்றும் 'காமச்சுவையுள்ள கட்டுரைகள் எழுதிக் கெடுத்து வருகிறார்' என்றும் காங்கிரஸார் குற்றம் சாட்டினாலும் அவற்றுக்குப் பதிலளிப்பது தங்கள் கௌரவத்துக்கு இழுக்கு, அல்லது அவற்றை லட்சியம் செய்யாவிட்டால் அவை மறைந்து போய்விடும் என நினைத்தனர். தமிழ் தேசியத்தை மொத்தமாக இப்படி தி.மு.க.வுக்கு தாரைவார்த்துத் தந்தனர் காங்கிரஸார்.

சமூக நீதிக்கான முதல் போராட்டம்

1950, ஜனவரி 26 அன்று இந்தியா குடியரசாயிற்று. சுதந்திரத்தைப் போலவே இதையும் 'தென்னாட்டவர் அடிமையாகிய தினம்' என்று ஈ.வெ.ரா. வர்ணித்தார். அந்த அளவுக்குப் போக விரும்பாத அண்ணா, குடியரசு என்பது தனி திராவிட நாடு என்ற தங்கள் எதிர்காலக் குறிக்கோளுக்குத் தடையாக இருக்குமென்றார். 'மகிழ்ச்சிக்குரிய நாளல்ல - துக்கத்துக்குரிய நாளுமல்ல. அதிருப்திக்கு, வெறுப்புக்கு, கண்டனத்துக்குரிய நாள்' என்றார். இரண்டுங்கெட்டான் நிலைப்பாடு என்றாலும் சரித்திரத்தின் தவறான பக்கங்களில் இடம் பெறாமலிருக்கவும், திரித்துச் சொல்வதற்கு இடமளிக்காமலும் இருந்தது இந்த முடிவு.

குடியரசோடு உடன் வந்த அரசியலமைப்புச் சட்டமோ சிக்கலையும் எதிர்பாராத வாய்ப்பையும் சேர்த்தே அளித்தது. சென்னை மாகாண இட ஒதுக்கீட்டை எதிர்த்து இரண்டு பிராமண வழக்கறிஞர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர, அவர்களுக்கு சாதகமாக நீதிமன்றம் தீர்ப்பு வழங்க, தமிழக நகரங்களில் மாணவர்கள் தங்கள் எதிர்ப்பைக் காட்ட மறியலில் ஈடுபட்டார்கள். 1950, ஆகஸ்ட் 14 அன்று முழு அடைப்புக்குக் குரல் கொடுத்தார் ஈ.வெ.ரா. ஒத்துழைப்பு நல்கிய தி.மு.க.வினர் சென்னை பிராட்வேயில் ஈ.வெ.ரா. தலைமையில் நடந்த ஊர்வலத்தில் பங்கு கொண்டனர்.

உச்சநீதிமன்றம் 1950, ஆகஸ்ட் 27 அன்று சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பை உறுதி செய்தது. அந்த தினத்தில் கோவில்பட்டியில் கூட்டப்பட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் "கம்யூனல் ஜி.ஓ. சம்பந்தமாக அனைத்துக் கட்சி மாநாடு கூட்டவோ அல்லது வேறு யாருடைய முயற்சியிலாவது கூட்டப்படும் எல்லாக் கட்சி மாநாட்டில் கலந்து, தக்கதோர் கிளர்ச்சித் திட்டம் வகுக்கவோ, செயற்குழுவின் பொதுச் செயலாளர் அண்ணாவுக்கு அனுமதி அளிக்கிறது" என்றது.

நீதிமன்றத்தில் பின்னடைவு ஏற்பட்டாலும், மக்களிடையே சமூகத்துக்கு சாதகமான சூழலே நிலவியது. நீதிக் கட்சியினர் சமூக நீதியை நிலைநாட்டியிருந்தனர். காங்கிரஸிலும் அதிகாரம் மிகவும் பின்தங்கிய வகுப்பினர் கைக்கு வந்திருந்ததற்கு அடையாளமாக அந்தக் கட்சியின் தமிழகத் தலைவராக இருந்த காமராஜர் தெரிந்தார்.

சமூக நீதிக்கு ஆதரவாக அவர் இருந்ததில் ஆச்சரியமில்லை. அனைத்துத் தரப்பினரும் ஆதரவாக இருந்தனர். 1951-ல் கொண்டுவரப்பட்ட முதல் அரசியல் சாசன சட்டத் திருத்தம்

உச்சநீதிமன்றத் தீர்ப்பை மாற்றிப்போட்டது. பின்னர், 1953-54-ல் ராஜாஜி கொண்டுவந்த குலக்கல்வித் திட்டம் காரணமாக எழுந்த போராட்டம் காமராஜருக்கு நேரடியாகவே பலனளித்தது. பெரியாரும், தி.மு.கவும், கம்யூனிஸ்ட்டுகளும் இன்னும் காங்கிரஸுக்குள்ளேயே இருந்த ஒருசில பிரிவினரும், ராஜாஜி அறிமுகப்படுத்திய, மாணவர்கள் காலையில் பள்ளியிலும், பிற்பகல் தங்கள் குடும்பத் தொழிலையும் கற்கவேண்டும் என்ற விமரிசனத்துக்குரிய கல்வித் திட்டத்தை எதிர்த்தார்கள். ராஜாஜி தன் பதவியை இழக்க நேர்ந்தது. காமராஜர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். காமராஜர் குலக் கல்வி திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தோருக்கு ஆதரவாகச் செயல்பட்டிருந்தார். அவரைப் போலவே இரண்டு சமூக நீதி போராட்டங்களிலும், தி.மு.க. முக்கியப் பங்கு வகித்திருந்தது.

கலைஞர் – சம்பத்: கருத்து வேறுபாடு

தி.மு.க. துவங்கப்பட்டதில் இருந்தே, மாவட்ட மாநாடுகளை நடத்தத் தொடங்கியிருந்தது. அதன் ஆரம்பமாக திருச்சி மாவட்ட மாநாடு 1950, ஜனவரியில் அமைந்தது. பின்னர் சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி மாநாடுகள் தொடர்ந்தன. கோவில்பட்டியில் 1950-ம் ஆண்டு, ஆகஸ்ட் 26, 27-ல் நடைபெற்ற நெல்லை மாநாடு தி.மு.க.வின் போராட்ட அரசியலை ஆரம்பித்து வைத்தது. அதுபோலவே கட்சியினுள்ளே கருத்து வேறுபாடுகளையும், தனிநபர் போக்குகளையும் - உதாரணமாக கலைஞர் கருணாநிதிக்கும் ஈ.வெ.கி.சம்பத்துக்கும் இடையே ஏற்பட்ட பிணக்கை வெளிப்படுத்தி, கட்சியின் வருங்காலப் பிளவுகளுக்கான சாத்தியக்கூறுகளை அது காட்டியிருந்தது. இருபத்தாறு வயதே ஆன கலைஞர் மாநாட்டுத் தலைவராக அறிவிக்கப்பட்டிருந்தார். அவருடைய செயல்திறன், ஆர்வம், பேரவா, அவருக்கு இருந்த புகழ்வெளிச்சம் எல்லாமாகச் சேர்ந்து அவரை இயக்கத்தின் மீதும் அண்ணாவின் மீதும் சொந்தம் கொண்டிருந்த சம்பத்தோடு மோதவைத்தது.

"மாநாட்டுத் தலைவர் என்ற முறையில் கழகத்தின் அமைப்புகள், சிற்றூர்க் கிளை, நகரக் கிளை, மாவட்டக் கிளை, தலைமைக் கழகம் என்கின்ற அளவில் பரவலாக்கப்பட வேண்டும் என்றும், ஒவ்வோர் அமைப்புக்கும் தொடர்பு இருக்க வேண்டும் என்றும், தலைமைக் கழகத்தின் தாக்கீதுகள் பிறப்பிக்கப்பட்ட உடனேயே அவை சிற்றூர்க் கிளைகளுக்குச் சென்றடைகிற அளவுக்கு எல்லா மட்டத்திலும் உள்ள அமைப்புகளுக்கு இடையே ஒரு சங்கிலித் தொடர்பு இருக்க வேண்டும் என்றும், அத்தகைய நிலையை நாம்

இன்னும் உருவாக்காமல் இருப்பது வருந்தத்தக்கது" என்றும் கலைஞர் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். இந்தியை எதிர்க்கத் திட்டங்கள் வகுக்குமாறும் கேட்டுக்கொண்டார். சம்பத், 'நேற்று வந்தவர்கள் எல்லாம் இன்றைக்குக் கட்சியின் திட்டங்களுக்கு யோசனை கூறுகிறார்கள். இதுவரை கட்சியின் வளர்ச்சியைப் பார்த்தால் இப்போது இருப்பதே போதும்' என்று சாடினார். தொண்டர்கள் சம்பத்தின் சுடு மொழிகளை லட்சியம் செய்யவில்லை. அண்ணா குறைகளை ஏற்று, கலைஞர் வேண்டிய திட்டங்களை அறிவித்தார்:

> டெல்லி ஆதிக்கம் நம் மீது வளர்ந்துகொண்டே போகிறது. அதை எதிர்த்து வாகை சூடிட வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். அதற்கான காரியங்களைச் செய்ய வீர உணர்ச்சி வேண்டும் - திட்டம் வேண்டும் என்று என் தம்பிமார்கள் துடிக்கிறார்கள். அவர்கள் முன் பரீட்சார்த்தமாக இரண்டொரு திட்டங்களைத் தருகிறேன். அதில் ஒன்றுதான் டெல்லி மந்திரிகளுக்குக் கறுப்புக் கொடி காண்பிப்பது. அவர்கள் ஆதிக்கத்தால் அழிகிறது நாடு! அதைக் காட்டக் கறுப்புக் கொடி.
>
> உணர்வில்லாது எங்கள் குடும்பங்களைப் பட்டினி போடுகிறாயே, அடுக்குமா? என்று கேட்டுத் தாய்மார்கள் அடுப்பங்கரையில் இருக்கும் கரித்துணியைக் காட்டி அவர்களை வரவேற்க வேண்டும்.
>
> இந்தி குறித்தும் அண்ணா எச்சரித்தார்:
>
> இந்தியில் ஊர்களின் பெயர்களையும், கீழே தமிழில் பெயர்களையும் எழுதியிருக்கும் முறை, நம் தாய்மொழியை அவமானப்படுத்துவதாக மட்டுமல்ல - நமது சுயமரியாதைக்கே பங்கம் விளைவிக்கிறது. நமக்கு மானமுண்டா என்று கேட்பதுபோல் இருக்கிறது.

அண்ணாவுக்குப் பின்னர் மீண்டும் பேசிய கலைஞர் அண்ணாவின் செய்கையைப் பாராட்டி, அவரை 'ஜனநாயகத்தின் காவலர்' எனப் புகழ்ந்தார். 'இதை நான் பேசி முடித்ததும் மாநாட்டினர் பெருத்த ஓசையோடு கைதட்டி எனக்குப் பாராட்டுத் தெரிவித்தனர். அப்போது 'திராவிட நாடு' இதழ் நடத்தும் பொறுப்பினை, துணை ஆசிரியராக இருந்த சகோதரர் அரங்கண்ணல் கவனித்துவந்தார். அண்ணா அவரை அழைத்து, 'அரங்கண்ணல்! சம்பத்தின் பேச்சையும் மாநாட்டில் கருணாநிதியின்

தலைவர் முடிவுரையையும் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டாம் என்று ஆணையிட்டார்' என்று கருணாநிதி தனது 'நெஞ்சுக்கு நீதி'யில் எழுதியிருக்கிறார். சம்பத் - கலைஞர் இருவரிடமும் ஒரு நடுநிலையான போக்கை வைத்துக்கொள்வதை அண்ணா தொடக்கத்திலிருந்தே கடைப்பிடித்தார். அடுத்த ஆண்டு பிரச்னை வேறு உருவத்தில் வந்தது.

1951-ல் காஞ்சிபுரம் பொதுக்குழுவில், சம்பத் கொண்டுவந்த தீர்மானம் நாவலர் நெடுஞ்செழியனுக்கு எதிராகக் கொண்டு வந்தது போல் இருந்தாலும், மறைமுகமாக அண்ணாவைக் கண்டனம் செய்வதாகவே அது இருந்ததாக கலைஞர் எண்ணினார். அண்ணாவின் எழுத்துகள் தங்கள் முகாமைத் தாக்குவதாக சம்பத் கருதுவதாகவும், அதனால் அண்ணாவை எதிர்த்து ஏழெட்டு வருடங்களாக மறைமுகமாக செயல்பட்டதாகவும், அதன் முத்தாய்ப்பாக அண்ணாவின் 'எல்லாரும் இந்நாட்டு மன்னர்' என்பதற்குப் பதில் அளிப்பதுபோல் 'அண்ணாவின் மன்னன்' என்ற சம்பத்தின் கட்டுரை அமைந்ததாகவும் கலைஞர் கருணாநிதி குறை கூறினார். 'கழகத்தில் கருணாநிதிக்கு இடமில்லை' என சம்பத் குழுவினர் கோஷமிட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

சென்னையில் நடந்த முதல் மாநில மாநாட்டுக்காக மதுரையிலே நடந்த பொதுக்குழுவில், கே.கே.நீலமேகம் மாநாட்டுத் திறப்பாளராக சம்பத்தின் பெயரை முன்மொழிந்தார். கலைஞரும், அரங்கண்ணலும் நாவலர் நெடுஞ்செழியன் பெயரை முன்மொழிந்தும் வழி மொழிந்தும் சொன்னார்கள்.

'நீலமேகம் அவர்கள் வெளுத்ததெல்லாம் பால் என்று எண்ணிவிடக்கூடியவர்' என்று கலைஞர் பின்னர் எழுதினார். போட்டியைத் தவிர்க்க, "இரண்டு பேரும் வேண்டாம். மாநாட்டுத் திறப்பாளராக கே.கே.நீலமேகம் அவர்களே இருக்கட்டும்" என்று அண்ணா சொல்லிவிட்டார்.

மாநில மாநாட்டுக்கு முன்பு நாகர்கோவிலில் நடைபெற்ற குமரி மாவட்ட மாநாட்டில், அந்த மாநாட்டை நடத்தியவர்களுள் சிலர் சம்பத்தின் நெருங்கிய நண்பர்கள் என்றும் கலைவாணருக்கு மாநாட்டுப் பந்தலுக்குள் நுழைவதற்கே அனுமதி தர மறுத்துவிட்டார்கள் என்றும் கலைஞர் எழுதினார். தனது சொந்த ஊரில் மாநாட்டில் தனக்கே அனுமதி இல்லையா என்று கலைஞர், நாவலர் நெடுஞ்செழியன் ஆகியோரிடம் கண்ணீர்விட்டார். அண்ணாவுக்கும் கலைவாணருக்கும் இடையே 'நல்லதம்பி'யால் கடுமையான அபிப்ராய பேதம் நிலவிய நேரம் அது. 'கழகப்



அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன்

புல்லுருவிகளின் தலைவர் ஒரு கதை கட்டிவிட்டார்' என்று சம்பத்தைச் சொன்னார் கலைஞர். கலைஞர், கலைவாணரின் நிலையையும் நினைப்பையும் அண்ணாவிடத்திலே சொல்ல, அண்ணா கலைவாணரை அழைத்து வரச் சொல்ல, கண்களில் கண்ணீர் மல்க தன்னைக் கட்டிக் கொண்ட கலைவாணரைக் கண்டு அண்ணா நெகிழ்ந்தார்.

"என்ன அண்ணா, இந்த மாநாட்டில் நான் கிடையாதா?" - இது கலைவாணரின் கேள்வி.

"மாநாடு உங்கள் வில்லுப்பாட்டோடுதானே துவங்குகிறது?" - இது அண்ணாவின் பதில் என்று அந்தச் சந்திப்பைப் பற்றி சொல்லியிருக்கிறார் கலைஞர். சம்பத்துக்கும் கலைஞருக்கும் கருத்துவேறுபாடுகள் இருந்தபோதும், 1960 வரை கட்சிக்குள் ஓர் இறுக்கமான அமைதியே நிலவிவந்தது.

காங்கிரஸ் – எதிர்ப்பு விழாக்கள்

1950, செப்டம்பர் 7 அன்று, சென்னை திருவல்லிக்கேணியில் அண்ணா ஒரு பொதுக்கூட்டத்தில் 'கறுப்புக் கொடி' ஆர்ப்பாட்டத்தை முக்கியமானதாகக் குறிப்பிட்டார். "வடநாட்டு ஆட்சியில் (காங்கிரஸ்) நமக்குத் திருப்தி இல்லை. நமக்கான நலனில் மத்திய ஆட்சி அக்கறை காட்டவில்லை. நமது தேவைகளை மத்திய ஆட்சி மதிக்கவில்லை. நம்மை இழிநிலையில் வைத்துச் சித்திரவதைப் படுத்தும் டெல்லி ஆட்சியை நாம் விரும்பவில்லை. ஆகவே, நமது அதிருப்தியைத் தெரியப்படுத்த அங்கிருந்து எந்த மந்திரி வந்தாலும் கறுப்புக் கொடி காட்டுவோம்!" என்றார்.

மத்திய தகவல் தொடர்பு அமைச்சர் ஆர்.ஆர்.திவாகர், 1950 செப்டம்பர் 7 அன்று, சென்னையில் முதன் முதலாக தி.மு.க.வினரின் கறுப்புக் கொடிகளால் வரவேற்கப்பட்டார். மறுநாள் காஞ்சி புரத்திலும், பின்னர் மாமல்லபுரத்திலும் அவருக்குக் கறுப்புக் கொடி காட்டப்பட்டது. 1950, அக்டோபர் 24-ல் சென்னைக்கு வருகை தந்த மத்திய உள்துறை அமைச்சர் ராஜாஜிக்கு, கோட்டைக்கு அருகில் கறுப்புக் கொடி காட்டப்பட்டது. அதற்கு முந்தைய தினம் கூடிய தி.மு.க. செயற்குழு 144 தடையுத்தரவை எங்கு விதித்தாலும் மீறும்படி கழகத் தோழர்களுக்கு தாக்கீது பிறப்பித்திருந்தது.

பிரிவினை பேசிய தி.மு.க.வை, குமாரசாமி ராஜா நிர்வாகம் கவலையோடும், பதை பதைப்புடனுமே பார்த்து வந்தது. தி.மு.க.வைக் கட்டுப்படுத்த அது எடுத்த நடவடிக்கைகள் பல அர்த்தமற்றவையாக இருந்தன. சிறைக் கைதி ஏ.வி.பி.ஆசைத்தம்பியின் தலையில் முடியை மழித்ததை ஓர் உதாரணமாகச் சொல்லலாம். அதிரடி நடவடிக்கைகளும் அபத்த போக்கும் தி.மு.கழகத்துக்குக் கூடுதலான அரசியல் வெளிச்சத்தையே சம்பாதித்துக் கொடுத்தன. தி.மு.க. என்ற புதிய அரசியல் கட்சியினர், சீர்திருத்தக்காரர்களாகவும், கொள்கைக்காக துன்பப்படுவோராகவும் இந்த நடவடிக்கைகள் சித்திரித்தன. ஆனால், 'ஆரிய மாயை' எழுதியதற்காக, அபராதம் செலுத்த மறுத்து கைதாகிச் சிறை சென்ற அண்ணாவுக்கு ராஜா நிர்வாகம் எத்தகைய பேராபத்தை தி.மு.க-வுக்கு உருவாக்கியிருந்தது என்பது தெரியவில்லை.

14

'பராசக்தி'யின் கலைஞர், எம்.ஜி.ஆர்., தி.மு.க.



பெரியாருடன் ஓர் எதிர்பாராத சந்திப்பு

ஓராண்டே நிரம்பியிருந்த தி.மு.க.வுக்கு குமாரசாமி ராஜாவின் காங்கிரஸ் நிர்வாகம் இவ்வளவு பெரிய ஆபத்தைக் கொண்டு தரும் என்று அண்ணாவுக்குத் தெரியாது. 'ஆரிய மாயை' எழுதியதற்குத் தண்டனையாக அபராதம் கட்டுவதைவிட்டு, சிறைவாசத்தையே அண்ணா தேர்ந்தெடுத்து இருந்தார். அதேசமயத்தில் பெரியாருக்கும் அவருடைய 'பொன்மொழிகள்' என்ற புத்தகத்துக்காகச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இரண்டு தனித்தனி வழக்குகள், தனித் தனியாகத்தான் விசாரணைகள். எனினும் தீர்ப்பு மட்டும் ஒரே நாளில், 1950 செப்டம்பர் 18 அன்று வழங்கப்பட்டிருந்தது. அன்றைக்கு பெரியாரையும் அண்ணாவையும் அருகருகே நிற்கச் செய்து பின்னர் நடக்கவிருந்த சோதனைக்கு ஒத்திகை பார்த்தது வழக்கு மன்றம். தீர்ப்பையடுத்து போலீஸ் அதிகாரிகள் ஒரே

வேனில் இருவரையும் ஏற்றிச் சென்றனர். பெரியாருக்கு அடுத்த அறையில் அடைக்கப்பட்ட அண்ணாவின் உணர்ச்சிகளுக்கும், உறுதிக்கும் பெரியாரின் நெருக்கம் ஒரு பெரும் சவாலாக இருந்தது. தி.மு.க.வுக்கே ஒரு சோதனை அது என்று அண்ணாவின் நண்பர் ஒருவர் பின்னர் சொன்னார். சுலபத்திலே மனதைக் கரைய விட்டுவிடுபவர்தான் அண்ணா. அண்ணாவும் அதை அறிந்தே இருந்தார். "பத்து நாட்கள் அவருடன் பேசி, மீண்டும் பழைய நேசத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு என்னைத் தட்டித் தட்டி அழைத்தபோதும், நான் அந்தச் சபலத்துக்கு இடம் கொடுக்காமல் இருந்தேன். காரணம், கிராதகன் என்பதல்ல. நான் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கையும், அந்த அமைப்பை உருக்குலைக்கக் கூடியதாக இருக்கக்கூடாது என்ற நேர்மையான எண்ணத்தினால்தான்" என்றார் அண்ணா.

பக்கத்துப் பக்கத்து அறை. பகலெல்லாம் திறந்துதான் இருக்கும். சிறையில் இருவரையும் பார்க்கப் பலர் வந்தார்கள். அங்கு சிறிது நேரம்; இங்கு சிறிது நேரம். இன்னும் சிலர் கூர்ந்து கவனித்தபடி இருப்பார்கள், இருவரும் ஏதாவது பேசிக் கொள்கிறார்களா என்று. ஆனால், அதற்கு இருவரும் இடம் கொடுக்கவில்லை. பெரியார் அறைக்கு உள்ளே இருக்கும்போது அண்ணா வெளியே மரத்தடியில்! அவர் வெளியே வர முயல்கிறார் என்று தெரிந்ததும் அண்ணா அறைக்கு உள்ளே சென்றுவிடுவார். பத்து நாட்கள் இவ்வாறு கழிந்தன. விடுதலை ஆவதற்கு முன் தினம், பெரியாருக்கு வேலைகள் செய்து வந்த கைதி அண்ணாவின் அறைக்குள் நுழைந்து, 'ஐயா தரச் சொன்னார்' என்று சொல்லி அண்ணாவிடம் ஆறு பிஸ்கட்டுகள் தந்தார். அண்ணாவின் நினைவு பல ஆண்டுகள் பின்னோக்கி நகர்ந்து, பெரியாருடன் இருந்த அந்த இளவேனில் காலத்தை அசைபோட்டது.

கட்சியினர் சிறைவாசத்துக்கு எதிரான மறியல்களை நடத்த எதிர்பாராமல் பதினொன்றாம் நாளே அண்ணாவையும் பெரியாரையும் விடுதலை செய்தது அரசு. அண்ணாவை வரவேற்க யாரும் வரவில்லை; ஆனால், பெரியாருக்கு ஒரு வண்டி காத்துக்கொண்டிருந்தது. எங்கிருந்தோ திடீரென்று ஒரு புகைப்படக்காரர் முளைத்து இருவரையும் அருகருகே நின்றுகொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். அண்ணாவுக்குப் பாவம், ஒரே குழப்பம். அந்தப் படம் பின்னர் வெளியாகாமல் போனதில் நிம்மதிப் பெருமூச்சு விட்டார். பெரியாரை அழைத்துப் போக வந்தவர்கள், அதே காரில் அண்ணாவையும் அழைத்துக்கொண்டு போனார்கள். பெரியார் தன் நண்பர் வேதாசலம் வீட்டில் இறங்கிக்கொள்ள, அண்ணாவோ பயணத்தைத்



அண்ணா, பெரியார்

தன் தோழர் சாம்பு இல்லம் வரை தொடர்ந்தார். பயணத்தின்போது இருவரும் பேசிக்கொள்ளவே இல்லை!

ஆறு வருடங்களுக்குப் பின்னர், தனக்கு நேர்ந்த சோதனையை 'ஆண்டு பலவாக நம்மை நடத்திச் சென்றவர், நாம் அறிந்த ஒரே தலைவர், யாருடைய வாயிலிருந்து உதிரும் வார்த்தைகளை எல்லாம் தத்துவம் என்று கொண்டாடும் அளவுக்கு நாம் பக்தி செலுத்தி வந்தோமோ, அப்படிப்பட்ட பெரியார், அன்புக் கணைகளை ஏவியிருந்தால் அதை மட்டும் நம்மால் எதிர்த்திருக்கவே முடியாது' என்று எழுதினார் அண்ணா. "பாசத்துடன் கலந்த ஒரு பார்வை, பரிவான பேச்சு, பழைய நேசம் பாழ்படாது என்பதைக் காட்டும் சிறு நடவடிக்கை எழும்பியிருந்தால் போதும், முன்னேற்றக் கழகம் இல்லை!" என்று தி.மு.க.வைக் கலைத்திருக்கக்கூடிய பெரியாரின் அன்பைப் பற்றிச் சொன்னார். "ஆனால், என்றென்றும் ஒன்றுகூடவே முடியாத நிலையில் 'இரு பிரிவு'களையும் வைத்துவிட்டார், இடம் தேடி ஏங்கிக் கிடந்தவர். அன்பு எங்கே சுரந்துவிடுகிறதோ என்று பயந்து, நரகல் நடையை அள்ளி அள்ளி

வீசியும், அபாண்டம் சுமத்தியும், பழி - பாவத்துக்கு அஞ்சாத புகார்களை அவிழ்த்துவிட்டும் பெரியாரின் பெருந்தொண்டுக்குரிய பலனை 'குத்தகை'க்கு எடுத்துக்கொண்டார் அந்த குணாளர்" என்று பெரியாரின் இறுக்கத்துக்கு குத்தூசி குருசாமியைக் குறை கூறினார் அண்ணா. ஆனால், பெரியாரைக் குறையாக ஒரு வார்த்தைகூட அதில் எழுதவில்லை. தனக்கும் பெரியாருக்கும் இடையில் இருந்த நம்பிக்கையின்மையையும், ஏற்பட்டிருந்த பிளவையும் கருத்தில் கொள்ளாமல் குத்தூசி குருசாமியே அனைத்துக்கும் காரணம் என்று அண்ணா எண்ணியது அதிகப்படியாக இருந்தது.

தி.மு.க.வை பலப்படுத்தும் முயற்சி

பெரியாரின் நெருக்கத்திலிருந்தும், ஆளுமையிலிருந்தும் தப்பிய தி.மு.க., மத்திய மந்திரிகளுக்குக் கறுப்புக் கொடி காட்டும் தனது தீர்மானத்தையடுத்து, 1951 ஏப்ரல் 6 அன்று குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத்துக்கு சென்னையிலும், பிரதமர் நேருவுக்கு 1951, ஜூலை 16 அன்று கோலார் தங்கவயலிலும் அவர்களுக்கு எதிராகக் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தியது. 1951 வேறொரு வகையிலும் மறக்கமுடியாத ஆண்டாக அமைந்தது. அந்த வருடம் அண்ணாவின் வெற்றிகரமான 'ஓர் இரவு' நாடகம் திரைப்படமாக வெளியானது. ஏவி.மெய்யப்ப செட்டியார் நாடகத்தைப் பார்க்கத் தஞ்சாவூர் போனார். அவருக்கு நாடகம் பிடித்துப் போயிற்று. திராவிட இயக்கத்திலிருந்த அவர் நண்பர் இராம. சுப்பையா அந்த நாடகத்தைத் திரைப்படமாகத் தயாரிக்கவேண்டும் என ஏவி.எம்மை கேட்டுக் கொண்டார்.

திருச்சியில் நடிகர் எஸ்.எஸ்.ராஜேந்திரனின் திருமணத்தை நடத்திவைக்கப் போயிருந்தார் அண்ணா. அவரைத் தேடி ஏவி.எம்மும் ராமசுப்பையாவும் திருச்சி சென்றார்கள். திரைப்பட உரிமையைக் கொடுக்க அண்ணா இசைந்து, சன்மானமாக ரூ.10 ஆயிரம் கேட்டார். ஏவி.எம். ஸ்டுடியோவில் இருந்த செட்டியாரின் அலுவலக அறையில் ஒரே இரவில் வசனத்தை முடித்துத் தந்தார் அண்ணா. "இயக்குனர் நீலகண்டனும் நானும் காலையில் அவரைப் பார்க்கப் போனோம். அண்ணா நீலகண்டனைக் கூப்பிட்டு, 'இதோ 300 பக்கங்கள் எழுதி முடித்துவிட்டேன். திரைப்படத்துக்கு ஏற்ற மாதிரி அங்கே இங்கே திருத்தம் செய்யத் தயங்காதீர்கள். உங்களுக்குத் தெரியும் நடையும், பாணியும். நீங்கள் இணை இயக்குனர் வேறு!" என்றார். அண்ணா எழுதத் தொடங்குமுன், "எனக்கு ஒரு கூஜா தண்ணீர், ஒரு தம்ளர், வெற்றிலை - புகையிலை, நான் தரையில் உட்கார்ந்து எழுத ஒரு சின்ன மேசை.



என்.எஸ்.கே. படத் திறப்பு விழா: அண்ணா. உடன் இருப்பவர் எஸ்.எஸ்.ஆர்.

யாரும் எனக்காகக் காத்திருக்க வேண்டாம். நான் முடித்தவுடன் உங்களிடம் சொல்கிறேன். நான் காலையில் சற்று நேரம் கழித்துத்தான் எழுந்திருப்பேன். அப்போது நீங்கள் வந்தால் போதும்" என்று கூறியிருந்தார்.

ஒரே இரவில் நடக்கும் சம்பவங்களைக் கொண்டது 'ஓர் இரவு'. படம் பெரும் வெற்றி அடையவில்லை என்றாலும், நல்ல படமாகவே அமைந்தது என்றார் ஏவி.எம். மூன்று வருடங்கள் கழித்து வெளியான அண்ணாவின் 'சொர்க்கவாசல்' வெற்றிப் படமாக அமைந்தது. தி.க.விலிருந்து தி.மு.க. பிறந்திருந்தாலும், அது நாத்திக இயக்கமல்ல என்று 'வேலைக்காரி' சொல்லியதை 'சொர்க்கவாசல்' அழுத்திச் சொன்னது.

'சொர்க்கவாசல்' திரைப்படத்தின் வில்லன் ஒரு மடாதிபதி. ஒரு மடம் கட்டுவதற்காக டிக்கட்டுகள் விற்க ஏற்பாடு செய்து பணம் திரட்டுகிறான். அண்ணாவின் கதாநாயகன் மதிவாணன், கிறிஸ்துவ சீர்திருத்தக்கார மார்டின் லூதர் போன்ற நோக்குக் கொண்டவர். தான் ஒன்றும் நாத்திகனல்லவென்றும், கடவுளின் பெயராலும் மதத்தின் பெயராலும் வீணாக ஆடம்பரச் செலவுகள் செய்வதை எதிர்ப்பவன் என்றும், அந்தப் பணத்தை ஏழைகளுக்கு உதவப் பயன்படுத்தலாமே என்றும் கூறுகிறான். மடாதிபதி மதிவாணனைக் கொல்லப்போவதாக மிரட்டுகிறார். முடிவில்

மடாதிபதியின் நண்பரான மன்னர் வெற்றி வேலன் திருந்தி, மடாதிபதியைக் கைது செய்கிறார். 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்று 'சொர்க்கவாசலை' அண்ணா முடித்திருந்தார்.

'ஓர் இரவு', 'சொர்க்கவாசல்' இரண்டும் சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பி அண்ணாவையும் தி.மு.க.வையும் மக்களிடம் பிரபலப்படுத்தின. 1949-ல் தொடக்கத்திலிருந்தே தி.மு.க. மாவட்ட அளவில், கொள்கை மாநாடுகளில் சமூக சீர்திருத்தம், மாணவர்கள், வகுப்புரிமை, மகளிர், எழுத்துரிமை முதலியவற்றை கருத்தரங்கங்கள், கவியரங்கங்கள், நாடகங்கள், இசை நிகழ்ச்சிகள் என்று எத்தனை மாவட்டங்களில் முடியுமோ அத்தனையிலும் நடத்திமுடித்து, சென்னையில் 1951-ம் ஆண்டு, டிசம்பர் 13 முதல் 16 வரை முதல் மாநில மாநாட்டைக் கூட்டியது. தீவுத்திடலில் ஏற்பாடுகளைக் காணச் சென்ற அண்ணா, பிரமாண்டமான மேடையையும் பந்தலையும் பார்த்துவிட்டு, அந்த அளவுக்குக் கூட்டம் வருமா என்று பயந்தார். ஆனால், மாநாட்டின்போது அந்த இடம் நிரம்பி வழிந்ததைக் கண்டு ஆனந்தத் திகைப்படைந்தார்! நான்கு நாள் மாநாட்டில், ஒரு தெலுங்கு நாடகம் உட்பட ஐந்து நாடகங்கள் போடப்பட்டன. மாநாட்டின் மூன்றாம் நாள், சோவியத் யூனியனிலிருந்து அப்போதுதான் சுற்றுப் பயணம் முடிந்து திரும்பியிருந்த என்.எஸ்.கிருஷ்ணன், 'நான் கண்ட ரஷ்யா' என்ற தலைப்பில் பேசினார். அண்ணாவின் "கண்ணீர்த்துளிகளே! என் கண்ணின் மணிகளே" என்ற மாநாட்டு விளிப்புக்கு பலத்த கைத்தட்டலும் வரவேற்பும் கிடைத்தது. மாநாட்டுக்கு வந்திருந்தவர்கள் அனைவரையும், ஒவ்வொரு பிரிவினரையும் குறிப்பிட்டு வரவேற்புப் பேசிக் கொண்டே வந்தார் அண்ணா. பெரியாரைப் பற்றி கூறுகையில், "இந்த நேரத்தில் நம்மை எல்லாம் ஆளாக்கிய பெரியார்...." என்ற அண்ணாவால் அதற்குமேல் பேசமுடியாமல் சில நொடிகள் பேச்சு அறுந்துவிட்டது.

மேடையில் இருந்த ஈ.வெ.ரா.வின் முன்னாள் தொண்டர் கம்யூனிஸ்ட்டு ஜீவானந்தத்தைக் குறிப்பிட்டுச் சொன்னார் அண்ணா:

> ...இதே மேடையில், நமது தோழர் ஜீவானந்தம் இருக்கிறார். நாங்கள் வேறு வேறு இயக்கத்தில் இன்று பணியாற்றுகிறோம். ஆனால், பெரியாரும் ஜீவானந்தமும், பெரியாரும் நானும் ஓர் இடத்திலிருந்து பணிபுரியும் நாள் எதிர்காலத்தில் உண்டு என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. மூவரும் சந்திக்கும் முகாம் ஏற்படத்தான் போகிறது. அது பொது உடைமை

முகாமாகப் பெயர் பெறட்டும். நான் கவலைப்பட வில்லை. ஆனால், அத்துடன் 'திராவிட' அடைமொழி சேர வேண்டும். திராவிடப் பொதுவுடைமைக் கட்சி என்று கூறுங்கள். அதிலே முதல் அங்கத்தினன் நான். திராவிட சமதர்மக் கட்சி என்று கூறுங்கள். அதிலே முதல் அங்கத்தினன் நான். ஆனால், 'திராவிட' என்ற அடைமொழி இல்லாவிட்டால் அங்கே நான் இருக்கமாட்டேன்.

நம் வளர்ச்சியைக் கண்டு பலர் ஆச்சரியப்படுகிறார்கள். இன்னும் சிலர் அச்சப்படுகிறார்கள். வேறு சிலர் சந்தேகிக்கிறார்கள். இது என்னென்ன செய்யுமோ, எது எதற்கு வழி வகுக்குமோ என்று ஐயம் அவர்களை வாட்டுகிறது. அவர்களுக்குத் தெளிவாகச் சொல்கிறேன்; திராவிட முன்னேற்றக் கழகம் கண்ணியத்துக்குத் தோழன், கொள்கைக்கு நண்பன், திராவிடத்தின் பாசறை என்பதை உணருங்கள்...

இதுவரை, திராவிட முன்னேற்றக் கழக ஒப்புதல் பத்திரத்தில் 15 பேர்களுக்கு மேல் கையொப்பம் இட்டிருக்கிறார்கள். அவர்களிலே முதலாளிமார்கள் உண்டு. ஒரு ஐயர்கூட இருக்கிறார்! இவர்களைப் பார்க்கும்போது கொஞ்சம் சந்தேகம். இந்தச் சந்தேகத்துக்கிடையே நம் கட்சிக் கொள்கைகளைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்.

- என்றார் அண்ணா.

அண்ணா - பெரியாரும், கம்யூனிஸ்ட்டுகளும், தி.மு.க.வும் இணைந்து பணியாற்றலாம் என்று தனது விட்டுக் கொடுக்கும் மனோபாவத்தையும், அதேநேரத்தில் அரசியல் சாதுர்யத்தையும் காண்பித்திருந்தார். பெரியார் உடன்படமாட்டார் என்றும், கம்யூனிஸ்ட்டுகள் திராவிட நாடு கொள்கைக்கு எதிரானவர்கள் என்றும் அவருக்குத் தெரியும். ஆனால் கம்யூனிஸக் கொள்கைகளுக்கும் தி.மு.க.வுக்கும் வேறுபாடு ஏதுமில்லை என்ற செய்தியைச் சொல்வதன் மூலம், அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களையும் இணைத்துக்கொள்ள அவர் விரும்பினார். அதேபோல் பெரியாரை திருப்திப்படுத்த, 'திராவிடர்களின் கருத்தை அறியாமலும், திராவிடரின் ஜீவாதார உரிமைக்கு ஊறு செய்யும் வகையிலும், ஒரே கட்சியாரின் எதேச்சாதிகார முறைப்படியும் தயாரிக்கப்பட்ட இந்திய அரசியல் சட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் கண்டிப்பதன் அறிகுறியாக, அந்தச்

சட்டத்தின்படி நடைபெறும் முதல் பொதுத் தேர்தலில் தி.மு.கழகம் அபேட்சகர்களை நிறுத்தி கலந்துகொள்வதில்லை' என்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தது தி.மு.க. முன்னதாக 1951, நவம்பர் 17 பொதுக்குழுவில் ஐம்பதுக்கு மேற்பட்டோர் காங்கிரஸ் ஏகாதிபத்தியத்தை ஒழிக்க வேண்டும் என்று குறிப்பிட்டனர். எனினும், தி.மு.க.வைப் போட்டியிலிருந்து விலக்கி 1952 பொதுத் தேர்தலில் கம்யூனிஸ்ட்டுகளையும், காங்கிரஸ் அல்லாத நாணயமுள்ள திறமைசாலிகளான முற்போக்குக் கருத்தினரையும் ஆதரிப்பது என்று அண்ணா முடிவெடுத்தார். இப்படி முடிவெடுத்ததன் மூலம் பெரியாரையே பின்பற்றியிருந்தார் அவரது தனயன். காங்கிரஸிலிருந்து 1925-ல் விலகியபிறகு, தனது சமுதாயத் திட்டங்களுக்காக, பெரியார் நீதிக்கட்சியைத் தானாக முன்வந்து ஆதரிக்கத் தொடங்கினார். பின்னர், கம்யூனிஸ்ட்டுகளையும் இன்னும் சிலரையும் பெரியார் ஆதரித்தார். கம்யூனிஸ்ட்டுகளுக்கான தனது ஆதரவை ரயில் சிநேகிதம் போன்றது என்று விளக்கினார். தி.மு.க.வின் ஆதரவோ '1. திராவிட நாடு கொள்கையை ஆதரிக்கிறேன். 2. சட்டமன்றத்திலோ, பாராளுமன்றத்திலோ உறுப்பினரானால் மேற்கண்ட பிரச்னை சம்பந்தமாகவும் தி.மு.கழகக் கொள்கைக்கு ஆதரவு தேடும் வகையிலும் பணியாற்றி வருவேன்' என்ற உறுதிமொழியையொட்டியே அமைந்தது.

ஏன் திராவிட நாடு என்ற சுமையை தி.மு.க. தொடர்ந்து சுமக்க வேண்டும்? முதலாவதாக, தாய்க் கழகத்தின் கொள்கையை தான் விட்டுவிடவில்லை என்று காண்பிக்க வேண்டியிருந்தது. இரண்டாவதாக, திராவிட நாடு கோரிக்கை தமிழ்ப் பண்பாடு, உணர்வுப் பின்னணியில் கட்சியை வளர்க்க உதவியது. மூன்றாவதாக, 'திராவிடம்' என்ற அடைமொழி தமிழக அரசியலையும், தென்னக அரசியலையும் பேச, எழுத உதவியதோடு, தெற்கே திராவிடம் என்றும் வடக்கே ஆரியம் என்றும் ஒரு வசதியான பிரிவினையைத் தோற்றுவித்தது. பத்து ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்ப் பகுதியில் கட்சி அடைந்த வெற்றிகள் திராவிட நாடு கோரிக்கையை ஓர் அரசியல் சுமையாக மாற்றின.

ஆனால், 1950-களில் நிலைமை வேறு. 1951 டிசம்பர் 16 அன்று, அண்ணா சுயேச்சைகள் உட்பட நாற்பத்திரெண்டு பேருக்கு கட்சியின் ஆதரவை நல்கினார். தி.மு.க. ஆதரவுடன் நீதிக்கட்சி வேட்பாளராக போட்டியிட்ட பி.பாலசுப்பிரமணியத்தை ஆதரித்து, தென் சென்னையில் பிரசாரம் செய்த அண்ணா, " 'சண்டே அப்சர்வர்' பாலசுப்பிரமணியம் என் அரசியல் ஆசான்" என்று நெகிழ்ந்து கூறினார். காமன்வீல் கட்சியைச் சேர்ந்த வன்னியத்

தலைவர் மாணிக்கவேல் நாயக்கரும், தமிழ்நாடு உழைப்பாளர் கட்சியைச் சேர்ந்த வன்னியத் தலைவர் ராமசாமி படையாச்சியும் தி.மு.க. ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்தனர். கம்யூனிஸ்ட்டுகள் நிபந்தனைக்கு ஒப்புக்கொள்ளாததால் தி.மு.க. அவர்களை ஆதரிக்கவில்லை. ஜெயகாந்தன் தி.மு.க.வின் இந்த நிலைப்பாட்டை "அந்தப் பேரம் மிகவும் அசிங்கமாக இருந்தது" என்றார். எது எப்படியிருப்பினும், இரண்டு கட்சிகளுக்கும் இந்த உடன்பாடற்ற நிலை உகந்ததாகவே இருந்தது. இரு கட்சிகளுக்கும் பொது அம்சங்கள் சில இருந்தாலும், அவர்கள் ஆதரவு தேடியதோ சமூக அமைப்பில் ஒரே களத்திலே - அதனால் போட்டியாளர்களாக இரு கட்சிகளும் இருந்தன. எல்லாவற்றையும் வர்க்க அடிப்படையில் பார்த்த கம்யூனிஸ்ட்டுகள், தி.மு.க.வின் 'திராவிட நாடு' கோரிக்கையைப் பிற்போக்கானது என்று கூறினர். தி.மு.க.வினரோ சாதியும் பிராமணீயமுமே எல்லா தீமைக்கும் வேர் என நம்பினர்.

> கம்யூனிஸ்ட்டுகள் மத்தியில் இவர்களைப் பற்றிக் 'கோமாளிகள்' என்றும், தமிழக அல்லது தென்னாட்டு முதலாளித்துவத்தின் கையாட்கள் என்றும், ஆங்கில - அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ரகசிய உறவுக்காரர்கள் என்றும், தேசியப் பகைவர்கள் என்றும், தொழிலாளி வர்க்க அரசியலில் ஊடுருவிக் கெடுக்கும் சீர்குலைவாளர்கள் என்றும், பொறுக்கி வர்க்க பிரதிநிதிகள் (லும்பன் புரோலிடேரியட்ஸ்) என்றும் பலவாறான எதிர்மறைக் கணிப்புதான் இருந்ததே ஒழிய, ஜனநாயகவாதிகள் என்றோ, இடதுசாரிகள் என்றோ, தேசிய நலனில் அக்கறை உடையோர் என்றோ, தொழிலாளி வர்க்கத்தின் ஆதரவாளர்கள் என்றோ, இடதுசாரிகள் என்றோ, நல்லபிப்ராயம் கிஞ்சித்தும் இல்லாதிருந்தது.
>
> - என்றார் ஜெயகாந்தன்.

தி.மு.க.வின் ஆதரவு இல்லாத போதும், கம்யூனிஸ்ட்டுகள் நல்ல முறையிலேயே தேர்தலில் வென்றிருந்தனர். நாடெங்கும் நடந்த பொதுத் தேர்தலில் சென்னை மாகாணத்தில் மட்டுமே காங்கிரஸுக்குப் பெரும்பான்மை கிட்டாது போயிற்று. 375 இடங்களில், காங்கிரஸ் 152 இடங்களையே கைப்பற்றியது. அரசின் தவறான அரிசி கொள்முதல் கொள்கையும், அதன் விளைவாக அரிசி தட்டுப்பாடும், தோல்விக்கான காரணங்களில் ஒன்றாகச் சொல்லப்பட்டன. (1967-ல் காங்கிரஸின் அதிரடி

தோல்விக்கு அரிசித் தட்டுப்பாடுதான் முக்கிய காரணமாக அமைந்தது) இரு அமைச்சர்கள் நீங்கலாக மற்ற எல்லா அமைச்சர்களும் தோல்வி அடைந்தார்கள். தமிழ்நாட்டுப் பகுதியைச் சேர்ந்த ஆதிதிராவிட அமைச்சர் ஒருவரும், தெற்குக் கன்னட மாவட்டத்தைச் சேர்ந்த ஏ.பி.ஷெட்டியும் மட்டுமே தப்பிப் பிழைத்தவர்கள். முதலமைச்சர் பி.எஸ்.குமாரசாமி ராஜாவும் தோற்றுப்போனார். அறுபத்து மூன்று இடங்களைக் கைப்பற்றி சுயேச்சைகள் இரண்டாவது பெரிய குழுவாக இருந்தனர். அறுபத்தோரு இடங்கள் பிடித்த கம்யூனிஸ்ட்டு கட்சியினர் மூன்றாவதாக வந்தனர். அண்ணா, 'காங்கிரஸ் கட்சி சார்பிலேயே நின்று வெற்றி பெற்ற சிலரும், இதுகாறும் காங்கிரஸார் அலட்சியப்படுத்திய பிற்படுத்தப்பட்ட வகுப்பின் செல்வாக்கின் துணைகொண்டே வெற்றி பெற முடிந்தது' என்றார்.

ஆட்சியமைக்க காங்கிரஸ் ராஜாஜியை அணுகியது. 'தனிப் பெரும்பான்மை பெற்ற காங்கிரஸ் கட்சியை ஆட்சியமைக்கக் கூறியபோது, வலிமையான தலைவர் சட்டப்பேரவை காங்கிரஸ் கட்சிக்குத் தேவை என்ற நிலை ஏற்பட்டது. எனவே, ராஜாஜியிடம் சென்று அந்த நெருக்கடியான நேரத்தில் கட்சித் தலைமையை ஏற்க வேண்டும் என்று அவரைக் கேட்டுக்கொண்டோம். அந்த யோசனை பற்றி ராஜாஜி உற்சாகம் காட்டவில்லை. தேர்தலில் தோற்றுப்போன காங்கிரஸின் முக்கிய தலைவர்களின் கருத்தை அவர் அறிந்துகொள்ள விரும்பினார். ராஜாஜியைச் சந்திக்குமாறு காமராஜரும் வற்புறுத்தப்பட்டார். காமராஜர் ராஜாஜியைச் சந்தித்து, நெருக்கடியிலிருந்து காங்கிரஸைக் காப்பாற்ற வருமாறு ராஜாஜியைக் கேட்டுக் கொண்டார்' என்றார் சி.சுப்பிரமணியம். ராஜாஜி, சற்றும் தாமதிக்காமல் ஒன்பது இடங்களைப் பிடித்திருந்த காமன்வீல் கட்சியை தம் அமைச்சரவைக்குள் கொண்டு வந்தார். இதை கம்யூனிஸ்ட்டு கட்சி, ராஜாஜி காமன்வீல் கட்சியினரை 'நயமாக ஏமாற்றி'யதாக குற்றம்சாட்டியது. அந்தக் கட்சியின் தலைவர் மாணிக்கவேலு நாயக்கரை முதலமைச்சர் 'வலைபோட்டுப் பிடித்தார்' என்றார் அண்ணா. தங்கள் ஆதரவில் வென்ற மாணிக்கவேலர் மாறியது தி.மு.க.வினருக்கு மிகுந்த வருத்தத்தை தந்தது. வாலாஜாபாத்தில் மாணிக்கவேலருக்குக் கறுப்புக்கொடி காட்ட இரண்டு மைல் தூரத்துக்கு அவர்கள் அணிவகுத்தனர். மாணிக்கவேலரை 'திரும்பிப் போ - துரோகியே திரும்பிப் போ' என்ற கோஷம் வரவேற்றது.

இந்தப் பின்னணியில் 1952 ஆகஸ்ட் 1 அன்று, ரயில் நிலையங்களில் உள்ள பெயர்ப் பலகைகளில் இருக்கும் இந்தி எழுத்துகளை அழிக்க, பெரியார் விடுத்த அழைப்பு தி.மு.க.வுக்கு பிடித்திருந்தது. முன்னதாக

1952 ஜூலை 27 அன்று 'விடுதலை'யில் பெரியார் தி.மு.க.வினரை 'குள்ளநரிக் கூட்டம்' என்றார்.

> இந்தக் கிளர்ச்சியானது முன்னையக் கிளர்ச்சிகள் போன்றதல்ல. அவை கட்டாய இந்தி கூடாது என்பதற்காக நடத்தப்பட்டவை. அவற்றில் பார்ப்பானது வேஷமே முக்கியமாக இருந்தது. என்னைப் பொறுத்தவரை, அந்தக் குறிக்கோள் வைத்தும் அவை நடத்தப்பட்டவை. ஆனால், இது அப்படி அல்ல. கட்டாய இந்தி கூடாது என்பது மாத்திரமல்ல. அப்படியானால் குள்ளநரிக் கூட்டமெல்லாம் இதில் புகுந்து துரோகம் செய்துவிட முடியும். இதற்கு யாரும், 'நானும்கூடத்தான்' என்று சொல்லிவிட முடியும். ஆதலால் இந்தக் கிளர்ச்சி கட்டாய முறைக்கு மாத்திரமல்லாமல், அரசியலிலும், சமுதாய இயலிலும், கல்வி இயலிலும், அரசாங்க ஆதரவில், அரசாங்க நடப்பில் திராவிட நாட்டில் (தமிழ் நட்டில்) இந்தி தலைகாட்டக் கூடாது என்பதற்காகவே! ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால், ரயில் பலகைகளில், போஸ்ட் ஆபீஸ்களில், கார்டு - கவர்களில், போஸ்ட் முத்திரைகளில் கட்டாயமாகவா இந்தியை சர்க்கார் புகுத்துகிறார்கள்? அவர்கள் ஆட்சி முறையில் குழாயில் தண்ணீர் வருவது போல் வந்து இந்தி புகுந்துகொண்டு இருக்கிறது.

பெரியார் தமது கட்சியினரை சித்திரித்திருந்ததை ஒதுக்கித் தள்ளிவிட்டு "உறுதியோடு நமது அறப்போர் ஆரம்பமாகிறது. நமது எதிரியின் வெறியை அடக்க, பெரியார் அவர்களும் ஆகஸ்ட் முதல் தேதியைக் குறிப்பிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். *1950* ஆகஸ்டில் நாம் எச்சரித்தோம்! *1952* ஆகஸ்டை அவர் தேர்ந்தெடுக்கிறார்! இரட்டைக் குழல் துப்பாக்கி - வடநாட்டு ஆதிபத்தியத்தின் மீது தாக்கப்போகிறது. மகிழ்கிறோம்!" என்றார் அண்ணா.

தி.க.வும் தி.மு.கவும் இந்தி எழுத்துகளை ஒரே நாளில், ஆனால் தனித் தனியாக, அழிக்க முனைந்தார்கள். அண்ணாவும், சம்பத்தும், கே.ஆர்.ராமசாமியும் கோயமுத்தூர் ரயில் நிலையத்தில் இந்தி எழுத்துகளை தார் கொண்டு அழிக்க, 'குள்ளநரிகளி'ன் பங்களிப்பை பெரியார் பெருந்தன்மையோடு ஏற்றுக்கொண்டார். கலைஞர் கருணாநிதி திருச்சி ரயில் நிலையத்தில் பெயர்ப் பலகையை அழிக்க வேண்டியிருந்தது. "தி.மு.க. ஊர்வலம் தெப்பக்குளத்தைத்

தாண்டிப் போகும்போது, முன்னால் போய்க் கொண்டிருந்த பெரியார், காரிலிருந்து இறங்கி எங்களை வாழ்த்தினார்" என்றார் கலைஞர்.

பராசக்தி

பெரியாரின் வாழ்த்தையடுத்து மக்களிடமிருந்தும் ஏகோபித்த வரவேற்பை கலைஞர் சம்பாதித்தார். அந்த வருடம் கலைஞரின் 'பராசக்தி' திரைப்படம் வெளியாகி, தி.மு.க.வையும், அதன் கொள்கைகளையும் பட்டிதொட்டியெங்கும் எடுத்துச் சென்றது. கலைஞரின் திரையுலகத் தொடர்பு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் 'ராஜகுமாரி'யில் தொடங்கியிருந்தது. அதற்கும் முன்னர், கலைஞர் பெரியாரின் 'குடியரசு' இதழில் துணை ஆசிரியராக இருந்தார்.

இசைக் கலைஞர் சிதம்பரம் ஜெயராமன் தன் மைத்துனர் கலைஞரை இயக்குநர் ஏ.எஸ்.ஏ.சாமியிடம் வசனம் எழுதப் பரிந்துரை செய்திருந்தார். சாமியிடமிருந்து அழைப்பு வர, கலைஞர் பெரியாரிடம் உத்தரவு கேட்க, பெரியாரும் சம்மதம் கொடுத்தார். சாமியிடம் தான் அரசியலிலும் ஈடுபட அனுமதிக்க வேண்டும் என்று கலைஞர் கேட்டுக்கொண்டார். சாமியும் அதற்குச் சம்மதித்திருந்தார்.

அந்தச் சமயத்தில் கோவை ஜூபிடர் பிக்சர்ஸ் சோமு, சாமியிடம் ஒரு படம் பண்ணக் கேட்டிருந்தார். அப்போது திரைவானில் மின்னிக்கொண்டிருந்த பி.யு.சின்னப்பா - டி.ஆர். ராஜகுமாரியை விட்டுவிட்டு, அறிமுக நிலையிலிருந்த எம்.ஜி.ராமச்சந்திரனையும், மாலதியையும் சோமுவிடம் சாமி பரிந்துரைத்தார்: "ஸ்ரீமுருகன் படத்திலே எம்.ஜி.ராமச்சந்திரனும் மாலதியும் பரமசிவன் - பார்வதியாக அற்புதமாக நடித்திருக்கிறார்கள். ஆனந்தத் தாண்டவம் ஒன்றை மெய்சிலிர்கும்படி இருவரும் ஆடியிருக்கிறார்கள். அவர்கள் ஜோடிப் பொருத்தமும், ஆட்டமும், முகபாவங்களும் பிரமிக்கும்படியாக இருந்தது. அவர்களையே ஹீரோ - ஹீரோயினாகப் போடலாம்" என்றார் சாமி. வருங்கால முதலமைச்சர்கள் இருவரை 'ராஜகுமாரி' இப்படி முதல் முறையாக இணைத்தது. 'அந்தப் படத்தில்தான் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். முதல் முதலாகக் கதாநாயகனாக நடித்தார். கதர் உடையும், கழுத்தில் துளசிமணி மாலையும் துலங்கிடக் காட்சியளிக்கும் காந்தி பக்தரான எம்.ஜி.ஆர். அவர்களுடன் எனக்குத் தொடர்பும், நட்பும் தோன்றிய காலம் அதுதான். காந்தியின் நூல்களை அவர் எனக்குக் கொடுப்பார்' என்று எழுதினார் கலைஞர்.

கலைஞரின் முதல் திரைப்படமான 'ராஜகுமாரி'யோ கலைஞரின் பெயரை இருட்டடிப்புச் செய்தது. மனைவியையும் நண்பர்களையும்



எஸ்.எஸ்.வாசன், சிவாஜி கணேசன், மொரார்ஜி தேசாய், அண்ணா, ஒய்.பி.சவான்

அழைத்துக் கொண்டு திரையரங்குக்குச் சென்ற கலைஞருக்கு ஏமாற்றமே காத்திருந்தது. 'திரையில் என் பெயர் ஏன் போடவில்லை?' என்று கேட்ட கலைஞரிடம், 'கொஞ்சம் பொறு உனக்கு விளம்பரம் கிடைத்தபிறகு போடுகிறேன்!' என்றார் சோமு. 'ஓர் எழுத்தாளன், தான் எழுதுவதற்குப் பெறுகிற பணத்தைவிட அதற்குக் கிடைக்கிற விளம்பரத்தையும் புகழையும்தான் அதிகமாக விரும்புவான். அந்த நிலை எனக்கு விதிவிலக்கல்ல. உள்ளம் குமுறியது' என்றார் கலைஞர்.

ஆனால், தீயை மூடிவைக்க முடியாதல்லவா? விரைவிலேயே சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் டி.ஆர்.சுந்தரம், கவி கா.மு.ஷெரீஃபை கலைஞரிடம் அனுப்பி தனது படத்துக்கு எழுதக் கேட்டார். சாமியிடம் கூறியது போலவே, தம்முடைய பொது வாழ்க்கைக்கு எந்தத் தடையும் விதிக்கக்கூடாது என்று கலைஞர் வலியுறுத்தியதை ஒப்புக்கொண்டு அவருக்கு மாதம் ரூ.500 சம்பளம் என்று முடிவு செய்யப்பட்டது. ஒரு நாள் ஒத்திகையரங்கில் ஷெரீஃபும், எம்.ஜி.ஆரின் அண்ணன் எம்.ஜி.சக்கரபாணியும், நெற்றியெல்லாம் விபூதி பூசிய, உயரமான ஒருவரை அறிமுகப்படுத்தினர். 'இவரும் இங்குதான் இருக்கிறார். பாடல்கள்

எழுதுகிறார்' என்றார்கள். கவிஞர் கண்ணதாசன், பின்னர் கலைஞருக்கு மிகவும் நெருக்கமானார்.

'பராசக்தி'யில் கலைஞரின் வசனம் இளமைத் துடிப்புடன் அமைந்திருந்தது 1950-ல் எம்.ஜி.ஆர். கதாநாயகனாக நடித்த 'மந்திரிகுமாரி'க்கு கலைஞர் எழுதியிருந்த வசனம் ஏற்கெனவே பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. கலைஞர் 'பராசக்தி'க்கு வசனம் எழுத அமர்த்தப்பட்டார். அதன் அறிமுக கதாநாயகன் சிவாஜி கணேசனுக்கு ரூ.250 மாதச் சம்பளம். எஸ்.எஸ்.ராஜேந்திரனையும் தி.மு.க. கலைஞர்களில் ஒருவராக பராசக்தி கொண்டுவந்து நிறுத்தியது. எனினும் 'பராசக்தி' கண்ணுக்குத் தெரியாத கதாநாயகனாக, அண்ணாவையும், கட்சியின் கொள்கைகளையும் கொண்டிருந்தது. அதை நேர்த்தியாகவும், நயமாகவும் செய்திருந்தார் கலைஞர். கம்யூனிஸ சித்தாந்த அறிவை அளவுகோலாக வைத்திருந்த கம்யூனிஸ்ட்டுகளுக்கு அண்ணாவை அவர் தம்பிகள் அறிஞராக்கியதோ, அவரது தம்பிகளின் எழுத்தும், பேச்சும், கற்பனையும் கட்சிக்கு கொண்டு சேர்த்த பெரும் வரவேற்பையோ ஜீரணிப்பது சிரமமாக இருந்தது. 'கம்யூனிஸ்ட்டு கட்சியில் நான் சந்தித்த சிந்தனாவாதிகளையும், கொள்கை வீரர்களையும், தியாகசீலர்களையும் தி.மு.க.வினரோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் எனக்கு இவர்களைப் பற்றி மிகவும் சாமானிய மதிப்பே ஏற்பட்டது. இவர்கள் மீது எனக்கு எந்தவிதமான மரியாதை உணர்ச்சியும் ஏற்படவில்லை. பரிகாசத்துக்கும் ஏளனத்துக்கும் உதாரணமாக நாங்கள் அண்ணாதுரையை மேற்கோள் காண்பிப்பது உண்டு. என்னைப் போன்றே பெரும்பான்மையான கம்யூனிஸ்ட்டுகளும் இருந்தார்கள். பெரும்பான்மை என்று சொல்வதுகூட ஒருவித சலுகை கருதியே' என்றார் ஜெயகாந்தன்.

ஆனால், தி.மு.க.வின் வளர்ச்சி தடுத்து நிறுத்த இயலாத ஒன்றாக இருந்தது. 'பராசக்தி' திரைப்படமும் அதற்கு உதவியிருந்தது. 1942-ல் இரண்டாவது உலகப் போரைப் பின்னணியாகக் கொண்டு, சோகமாகக் கதை சொல்லி சுபமாக முடிந்திருந்தது 'பராசக்தி'. கல்யாணியின் மூன்று சகோதரர்கள் - சந்திரசேகரன் (எஸ். வி.சகஸ்ரநாமம்), ஞானசேகரன் (எஸ்.எஸ்.ராஜேந்திரன்) மற்றும் குணசேகரன் (சிவாஜி கணேசன்) ஆகியோர் முன்பே பர்மாவுக்குப் போய்விட்டதால், கல்யாணி அவர்களைப் பார்த்ததில்லை. கல்யாணியின் திருமணத்துக்காகத் தமிழ்நாட்டுக்கு வரும் குணசேகரன் ஏமாற்றப்படுவதால், தப்புவதற்குப் பைத்தியம் போல நடிக்கிறான். ஞானசேகரனோ இந்தியா வரும் வழியில் ஒரு காலை இழந்துவிடுகிறான். சந்திரசேகரன் நீதிபதியாகி, சென்னையில் வாழ்க்கை நடத்துகிறார். அவரால் கல்யாணியையும்,

சகோதரர்களையும் கண்டுபிடிக்க முடியவில்லை. கல்யாணியோ கைக் குழந்தையுடன் ஒரு விதவையாகியிருந்தாள். பல துன்பங்களை அனுபவித்தபின், பராசக்தியின் கோயிலுக்கு வருபவளை, பூசாரி வஞ்சகமாகக் கெடுக்கப் பார்க்கிறான். அவனிடமிருந்து தப்பி, குழந்தையை ஆற்றில் வீசிவிட்டுத் தற்கொலை செய்துகொள்ள முயல்கிறாள் கல்யாணி.

அன்றைய காங்கிரஸ் அரசு, பர்மாவிலிருந்து வந்த அகதிகளின் துயரத்தைக் கண்டும் காணாமல் இருந்தது என்றது 'பராசக்தி'. தமிழ்நாடு கள்ளக் கடத்தலுக்கும், சட்டம் - ஒழுங்கு சிதைந்த ஒழுங்கீனத்துக்கும், லஞ்ச முறைகேடுகளுக்கும் களனாக காங்கிரஸ் ஆட்சியில் இருந்ததாக பராசக்தி தி.மு.க. பிரசாரக் கதை சொன்னது.

பாரதிதாசனின் 'வளமார் எமது திராவிட நாடு வாழ்க வாழ்கவே' என்ற நடனக் காட்சியுடன் பராசக்தி திரையில் 'திராவிட நாடு' பேசியது. நடனத்தின் முடிவில், கடல் கடந்த தமிழரின் கண்ணீரே கடல் நீர் என்ற அண்ணாவின் வாக்கியம் பின்னணிக் குரலில் கேட்டது. நல்ல வாழ்க்கையைத் தேடி அயல்நாடுகளுக்குப் போன தமிழர்கள் அங்கே துன்பத்துக்கிடையே தங்கள் தாயகமான தமிழகத்துக்கு ஏங்கியதை சொன்னது 'பராசக்தி'.

நீதிக் கட்சிப் பெரியவர் பிட்டி தியாகராஜரின் படத்தை சந்திரசேகரனின் மாமனார் படமாகப் படத்தில் காட்டினர். கல்யாணியின் குழந்தையின் பெயர் நாகம்மை (பெரியாரின் முதல் மனைவி) என்றும், ஆண் எனில் நீதிக் கட்சித் தலைவர் பன்னீர் செல்வம் என்றும் படம் பாடம் சொன்னது. இவை நேர்த்தியான பிரசாரமெனில் கெடுமதி படைத்த பூசாரி மூலம், மூடநம்பிக்கையையும் மதத்தின் பெயரால் இழைக்கப்படும் அநீதிகளையும் திரைப்படம் சாடியது. "அம்மன் எப்போதடா பேசினாள், முட்டாள்?" என்ற மறக்கமுடியாத வரிகள் பூசாரியை நோக்கி மட்டும் கேட்கப்பட்டதல்ல. படம் பார்க்க வந்த ரசிகர்களை அவர்களின் நம்பிக்கையைக் குறை சொல்லாமல் இந்தக் கேள்வி குடைந்தது. பூசாரியைத் தற்காப்புக்காகத் தாக்கிய குணசேகரன் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகிறான். அவனுடைய வாக்குமூலம் சாதி, மதம், பக்தி என்ற பெயரில் உல்லாச வாழ்க்கை, வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை என்று காங்கிரஸ் ஆட்சியில் திராவிட நாட்டின் சமூக நிலையை ஒட்டுமொத்தமாகச் சுட்டிக் காட்டியது. ஒருகாலத்தில் க்ளியோபாட்ரா அணிந்திருந்த முத்துகள், தமிழ்நாட்டிலிருந்து பெறப்பட்டவை என்றது 'பராசக்தி'.

தன் சகோதரியின் செயலுக்கு நியாயம் கற்பிக்கிற மாதிரி, குணசேகரன் இயற்பகை நாயனார் தன் பக்தியைக் காண்பிக்க, சிவபெருமானுக்கு பிள்ளைக் கறி சமைத்துப் போட்டதை எடுத்துச் சொல்லி கல்யாணியின் குழந்தை பார்வதியிடம் பால் அமுதுண்ட திருஞானசம்பந்தர் அல்ல என்றும், அதுபோன்ற அதிசயங்கள் பார்வதியின் குழந்தையைக் காப்பாற்ற முடியாததைக் குத்திக் காட்டுகிறான். நல்லவேளையாகக் குழந்தை காப்பாற்றப்பட்டு, அண்ணனும் தங்கையும் விடுதலையாகிறார்கள்.

ஒரு கட்டத்தில் குணசேகரனின் காதலி அவனுடைய அப்பாவித்தனத்தைக் குறிப்பிட்டு, அவனுடைய துன்பங்களுக்கு அவனே காரணம் என்று குறை கூறுகிறாள். முதலில் கோபப்பட்டாலும், குணசேகரன், அவளை புத்திசாலியாக இருப்பதாகவும், உலக அனுபவத்தோடு பேசுவதாகவும் சொல்லி, யார் அவளுக்கு ஆசிரியர்? என்று கேட்கிறான். "அண்ணா" என்கிறாள் அவள், தன் முற்போக்குச் சிந்தனையுள்ள அண்ணனைக் குறிப்பிட்டு. அது 'அண்ணா'வைத்தான் சொன்னது என்பது படம் பார்ப்போர் அனைவருக்கும் புரிந்தது. "அவருக்கு ஒரு முற்போக்கு நெஞ்சம் உண்டு" என்று குணசேகரன் காதலி சொன்னதில், ஏதேனும் சந்தேகம் இருந்தால் அதுவும் தீர்ந்தது. இறுதியில் உடன் பிறப்புகள் அனைவரும் ஒன்று சேர்ந்துவிடுவார்கள்.

கலைஞர் மிக கெட்டிகாரத்தனமாக அன்றைய நடைமுறை அரசியலை அவரது வசனத்தில் கோத்திருந்தார். அதில் மிகவும் தேர்ந்தவராக இருந்தார் கலைஞர். அவருடைய 'அபிமன்யு'வில் (1948) துச்சாதனன் தன் அண்ணனிடம் "அண்ணா, இது ஆச்சாரியாரின் (குரு துரோணாச்சாரியாரின்) சதி!" என்றது ராஜாஜியைத்தான் என்று ரசிகர்கள் புரிந்துகொண்டனர். 'நாம்' படத்தில் சிதம்பரம் ஜெயராமன் பாடிய ஒரு பாடல் நேரடியாகவே, "பல்லாண்டு வாழ்க அறிஞர் அண்ணா, பல்லாண்டு வாழ்க குமரன்" (கதாநாயகனின் பெயர்) என அமைந்திருந்தது. 'அரசிளங்குமரி'யில் காதலி, காதலனிடம், "என் அண்ணாவுக்கு அரண்மனையில் இருப்பவர்களைப் பிடிக்காது" என்று கூறும்போது, காமிரா அண்ணாவின் படத்தைக் காண்பித்தது. 'பூமாலை'யில் தன் அண்ணனைப் பற்றி மிக உயர்வாகப் பேசும் சகோதரி, "யாராவது என் அண்ணாவைப் பற்றி மோசமாகப் பேசினால் அவர்களைச் சுட்டுவிடுவேன் சுட்டு!" என்றாள்.

ஆனால், அண்ணாவுக்கு எல்லாமே புகழ்ச்சியும் பாராட்டுமாகத்தான் இருந்தது என்று சொல்லமுடியாது. 1955-ல், ம.பொ.சிவஞானத்தின் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த

ஏ.பி.நாகராஜன் அண்ணாவை அறிஞர் என தூக்கிவைத்துக் கொண்டாடுவதற்குப் பதில் சொல்கிற மாதிரி 'என் தங்கை'யில், 'மெத்தப் படித்தவர் போலவே நீங்க வெளுத்து வாங்கறீங்க - அண்ணா வேஷம் போடுறீங்க... அர்த்தம், அனர்த்தம் எல்லாம் தெரிஞ்ச அறிஞராயிட்டீங்க, அண்ணா அறிஞராயிட்டீங்க' என்று குத்தலாய்ப் பாடினாள்.

'பராசக்தி'யோ அண்ணா தலைமையில் இருந்த தி.மு.க.வின் கீழ் தமிழகத்துக்கு ஒரு பொற்காலம் காத்திருந்ததாக சொன்னது. 'பராசக்தி'யில் குணசேகரனின் காதலி, குணசேகரனிடம் உங்கள் பிச்சைக்காரக் கூட்டத்தை நம் மாளிகைக்கு அழைத்து வாருங்கள் என்பாள். தி.மு.க. ஆட்சியில் பிச்சைக்காரர்கள் மாளிகைவாசி ஆகமுடியும் என்றார் கலைஞர். படத்தின் இறுதியில் ஒரு பிச்சைக்காரர் மறுவாழ்வு விடுதி திறப்பு விழாவுக்கு வருவதாக அண்ணாவைக் காட்டியது படம். பெரியாரும் ராஜாஜியும் மேடையில் இருக்க, அண்ணா சில நொடிகள் பேச, கலைஞர் அவருக்குப் பொன்னாடை போர்த்தினார்!

இப்படி நிஜத்தையும், நிழலையும் ஒன்று சேர்த்து தி.மு.க.வின் எதிர்காலத்துக்கு வித்திட்டிருந்தார் கலைஞர். பராசக்தி பல வகைகளில் சரித்திரம் படைத்தது. திருமண இல்லங்களில் எம்.எஸ்.சுப்புலட்சுமி, கே.பி.சுந்தராம்பாள், எஸ்.ஜி.கிட்டப்பா, எம்.கே.தியாகராஜ பாகவதர் பாடிய கிராமஃபோன் பாடல்களை முதலில் 'பராசக்தி', பின்னர் 'மனோகரா' புரட்டிப்போட்டன. திருமண வீடுகள் 'பராசக்தி', 'மனோகரா' வசனம் பேசின. அதுபோலவே பட வாய்ப்புத் தேடி போவோர் கலைஞரின் வசனங்களில் ஒன்றை எடுத்துக்கொண்டு சிவாஜி மாதிரி பேசி நடித்துக் காட்டுவதும் வழக்கமானது.

கைத்தறி விற்பனையும் தி.மு.க.வும்

படங்கள் கை கொடுத்தாலும் வழமையான பிரசார முறைகளின் பலத்தை தி.மு.க. புரிந்தே வைத்திருந்தது. 1953 ஜனவரி 4 அன்று, "ஒவ்வொரு கண்ணிலிருந்தும் கண்ணீரைத் துடைக்க" கைத்தறி ஆதரவு தினம் கொண்டாடியது தி.மு.க. விடுதலைப் போரின்போது காங்கிரஸார் கதரைச் சுமந்து விற்றது போல, அண்ணாவும் தம்பியரும் கைத்தறித் துணியைச் சுமந்துகொண்டு திருச்சி நகர வீதிகளிலும் பிற நகரங்களிலும் விற்றனர். ஆலைத் துணிகளுடன் போட்டியிட முடியாமல், கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடந்தன. நெசவுத் தொழிலாளிகள் வறுமையில் உழன்றனர். அந்தப் பட்டினிப் பட்டாளத்தின் பரிதாபத்தை வெளிச்சம்போட கம்யூனிஸ்ட்டுகள் ஸ்ரீவில்லிப்புத்தூர் - அருப்புக்கோட்டையிலிருந்து

500 மைல் பாதயாத்திரை ஒன்றை சென்னை வரை நடத்தினர். அந்தப் பாதயாத்திரையின் போது எழுந்த எழுச்சியையும் உணர்ச்சிக் கொந்தளிப்பையும் கண்ட அண்ணா தம் கட்சித் தலைவர்களிடம் கைத்தறித் துணிகளைத் தோள் மீது சுமந்து கொண்டு தெருத் தெருவாக விற்கச் சொன்னார். இப்படி சரியான நேரத்தில், சரியான பிரச்னையைக் கையிலெடுப்பதில் அண்ணா தேர்ந்தவர். காங்கிரஸுக்குக் கதர்போல, தி.மு.க.வுக்கு கைத்தறி, கட்சியின் அம்சங்களில் அடையாளங்களில் ஒன்றாக ஆனது. ஆனால், தி.மு.க. வாழ்க்கைப் பிரச்னைகளை மட்டுமே வெளிச்சம் போடவில்லை. அந்த வருடம் கட்சி நடத்திய மும்முனைப் போராட்டம் மொழி, கலாசார தேசியத்தை முன்னிறுத்தியது.

சென்னை மாகாணத்தில் தங்கள் வளர்ச்சி முடங்கிப்போகிறது என்று நெடுநாட்களாகவே ஆந்திரர்கள் தனி தெலுங்கு மாநிலம் கோரி வந்தார்கள். 1953, அக்டோபர் 1-ல் ராயலசீமா பகுதிகளும் கடற்கரையோர ஆந்திரப் பகுதிகளும் தனியே பிரிக்கப்பட்டு ஆந்திர மாநிலமாக அறிவிக்கப்பட்டது. எஞ்சிய சென்னை மாகாணத்திலிருந்து 1956-ல் தெற்கு கன்னட மாவட்டம் மைசூருக்கும், மலபார் கடற்கரைப் பகுதி புதிய கேரள மாநிலத்துக்கும் மாற்றப்பட, தமிழ்ப் பகுதிகள் சென்னை மாநிலம் ஆயின. மதராஸுக்கு வடக்கேயிருந்த கஞ்சம், ஒரிஸாவுக்குப் போயிற்று. மொழிவாரி மாநிலங்களுக்கு ஆதரவாக இருந்த பொதுமக்களின் ஆதரவையொட்டி, மாநில சீரமைப்பு ஆணையம் 1953, டிசம்பர் 22-ல் உருவாக்கப்பட்டது. தி.மு.க.வின் மும்முனைப் போராட்டத்தில் மொழிவழி மாகாணப் பிரிவினால் ஏற்பட்ட பிரச்னை ஒரு முனையாகியது. காங்கிரஸ் 1908-லேயே மொழிவாரியாக மாகாணங்களைப் பிரிக்க ஒப்புக்கொண்டபோதும், முடிந்தவரை அந்த எண்ணத்துக்குச் செயல்வடிவம் தருவதை ஒத்திப் போட்டே வந்தது. 1948-ல் நேரு, பட்டேல், பட்டாபி சீதாராமய்யா கொண்ட குழு, மொழிவழி மாகாணத்தின் சாதக - பாதகங்களைக் கட்சி எண்ணிப் பார்க்கவில்லை என்றது. ஆனால், காலம் கடந்துவிட்டிருந்தது. ஆந்திர மாநிலம் கோரி சாகும் வரை உண்ணாவிரதம் இருந்த பொட்டி ஸ்ரீராமுலு 1952 டிசம்பர் 16-ல் காலமாக, நேருவின் நிர்வாகம் ஆந்திராவுக்கு இசைவு அளித்தது. மேலும், அடுத்த ஆண்டு மாநில சீரமைப்பு ஆணையத்தை நிறுவியது.

மொழி வழி மாநிலங்கள் பிரிக்கப்பட்டவுடன், தமிழரசுக் கழகத் தலைவர் ம.பொ.சிவஞானம், சித்தூர் மாவட்டத்தைத் தமிழகத்துடன் சேர்க்க வேண்டும் என்ற கிளர்ச்சியைத் துவக்கினார். அண்ணாவைச் சந்தித்து, அவர் தி.மு.க.வின் ஆதரவைக் கோர சித்தூர் மாவட்ட

தி.மு.க. உறுப்பினர்கள் மட்டும் சித்தூர் தமிழர் போராட்டத்தில் கலந்துகொள்ளலாம் என்று அண்ணா அனுமதி அளித்தார். தினமும் நூற்றுக்கும் மேற்பட்ட தி.மு.க.வினர் திருத்தணியில் ரயில் நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு கைதாயினர். மாவட்ட அளவில் மட்டுமே போராட்டத்தை நடத்தியதில் அண்ணாவின் முதிர்ச்சி தெரிந்தது. லாபமோ, நஷ்டமோ - பாதிக்கப்பட்டவர்களே இதுபோன்ற உணர்வுபூர்வ பிரச்னையில் முடிவு எடுக்க வேண்டும் என்று சொல்லுவதாக அது இருந்தது. மேலும், தமிழர் - தெலுங்கர் பிளவைப் பெரிதாக்க அண்ணா விரும்பவில்லை. உதாரணமாக, 1954 ஆகஸ்டில் நடைபெற்ற நாகர்கோவில் தி.மு.க. மாநாட்டில், தேவிகுளம் - பீர்மேடு கேரளத்துக்குச் செல்லாமல் தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தவும், திராவிட நாட்டில் எந்த இனமும் மற்றொரு இனத்தை சுரண்டாது; உரிமை கோராது என்று சொல்லும் வகையில் 'மயிலும், கிளியும், மாடப்புறாவும் சோலையிலே கூடி வாழட்டும் என்று நான் கூறினேன் என்றால், ஒன்றையொன்று கொத்தித் தின்ன வேண்டுமென்றா கூறினேன்?' என்று அண்ணா சொன்னார். சித்தூர் மாவட்டம் ஆந்திராவுக்குப் போய்விட்டாலும், திருத்தணி தமிழகத்துக்குக் கிடைக்க சிவஞானம் தனது போராட்டத்தில் வெற்றி அடைந்தார். ஆனாலும், ம.பொ.சி.யின் போராட்டத்தை நேரு, 'சிறுபிள்ளைத்தனமானது', 'முட்டாள்தனமானது' என்று கண்டித்திருந்தார். "தமிழர்களை மிகமிகத் தாழ்வாக பண்டித நேரு கண்டித்தபோது, தம்பி! சீறி எழுந்து, கிளர்ச்சி நடத்தி, கடும் தண்டனைகளை ஏற்றுக்கொண்டவர்கள் நாம் - அவரல்ல (ம.பொ.சி.) அவர், பண்டித நேருவைக் கண்டிக்காதது மட்டுமல்ல முட்டாள்கள், சிறுபிள்ளைத்தனம் என்று பண்டித நேரு இவர்களையா ஏசிப் பேசினார்? எங்களையன்றோ அப்படி பேசினார்? நேருவை யாராவது கண்டித்தால் ம.பொ.சி-க்கு எரிச்சல் வருகிறது. பண்டிதரைப் பதட்டமாகக் கண்டிக்கும் பதர்களை விட்டுவைக்க மாட்டேன் என்பார். அவ்வளவு குரு பக்தி அவருக்கு" என்றார் அண்ணா. நேரு பேசியதை தி.மு.க. பெரிதாக்கியதில் பூர்விக காங்கிரஸ்காரரான ம.பொ.சி-க்கு வருத்தமே.

1953 ஏப்ரல் 25, 26 தேதிகளில் நடந்த திருச்சி மாநாட்டில், அண்ணா வடக்கத்திய பனியாக்களின் ஆதிக்கத்தை எதிர்த்து அடையாளப் போராட்டம் அறிவித்தார். டால்மியா என்ற வடக்கத்திய முதலாளி நடத்திவந்த சிமென்ட் தொழிற்சாலை இருந்த டால்மியாபுரத்தை, அதன் பழைய பெயரான 'கல்லக்குடி' என்று மாற்ற வேண்டும் என கட்சி அறைகூவல் விடுத்தது. மும்முனைகளில் இதுவே முதல் முனையாகியது.

வந்தார் எம்.ஜி.ஆர்.

திருச்சி மாநாடு கட்சியின் வரலாற்றில் ஒரு மைல்கல். தி.மு.க.வில் எம்.ஜி.ஆர் தன்னை முறையாக இணைத்துக்கொண்டது இந்த மாநாட்டில்தான். கலைஞர் ஏற்கெனவே அண்ணாவின் படைப்புகளை எம்.ஜி.ஆருக்கு அறிமுகப்படுத்தியிருந்தார். "பொதுவாகவே எனக்கு அரசியலைப் பொறுத்தவரையில் சோர்வே உண்டாகிவிட்டது. அத்தகைய நிலையில்தான் பேரறிஞர் அண்ணாவின் 'பணத்தோட்டம்' என்ற புத்தகத்தைப் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது; படித்தேன்; பலமுறை படித்தேன். கொஞ்சம் கொஞ்சமாகத் தொடர்பு ஏற்பட்டது; அண்ணாவோடு அல்ல. அவருடைய கொள்கையோடு. காந்திய வழியில் இன்னமும் நான் நம்பிக்கை வைத்துள்ள முழு நம்பிக்கையின் அடிப்படையில், நான் கேட்ட கேள்விகளுக்கு, பேரறிஞர் அண்ணாவிடமிருந்து என் உள்ளம் ஏற்றுக்கொண்ட பதில்கள் நிறைய கிடைத்தன' என்றார் எம்.ஜி.ஆர். கலைஞர் கருணாநிதியோ, 'எங்களுக்கிடையே அடிக்கடி விவாதங்கள் நடைபெறும். அவற்றின் முடிவு, பிறகு அவர் கழக அணியில் இருந்ததுதான்!" என்றார்.

சினிமா, இவர்கள் உறவை மேலும் பலப்படுத்தியது. முதல் முறையாக கலைஞரும் எம்.ஜி.ஆரும் இணைந்து பணியாற்றிய 'ராஜகுமாரி' மகத்தான வெற்றி கண்டது. எனினும், இதற்குப் பிறகு எம்.ஜி.ஆர். பழையபடி சிறுசிறு பாத்திரங்களை ஏற்கும் நிலையே இருந்தது. கலைஞர் கதை - வசனம் எழுதி எம்.ஜி.ஆர். கதாநாயகனாக நடித்த 'மந்திரிகுமாரி'யும் (1950) நன்றாகவே ஓடியது.

எம்.ஜி.ஆருக்கு ஒரு முக்கிய பாத்திரம் கொடுப்பதாக இருந்தால்தான், தான் மந்திரிகுமாரிக்கு எழுதமுடியும் என்று கலைஞர் தெளிவாக்கி இருந்தார். இந்தப் பின்னணியில் எம்.ஜி.ஆரும் சக்கரபாணியும் 'மருதநாட்டு இளவரசி' படத்துக்கு கலைஞரை எழுதக் கேட்டுக் கொண்டிருந்தனர். துடிப்பான எம்.ஜி.ஆரை கலைஞர், மன்னனாக, வீரமிக்க போர்வீரனாக, நாயகனாக, தீமையை எதிர்த்துப் போராடும் புரட்சிக்காரனாக உருவாக்கினார். தான் வடித்துத் தந்த இந்த ஃபார்முலா, எம்.ஜி.ஆரின் எல்லா படங்களுக்கும் நிரந்தரமாக அமைந்துபோகும் என்பதை அவர் அறிந்திருக்கவில்லை. 'மருதநாட்டு இளவரசி'யில் கலைஞரின் வசனமும், எம்.ஜி.ஆரின் சண்டைக் காட்சிகளும், மீண்டும் எம்.ஜி.ஆரை கதாநாயகனாக உயர்த்தவும், அந்த கதாநாயக அந்தஸ்தை தக்கவைத்துக் கொள்ளவும் உதவின. இந்த இரட்டையரின் கூட்டுறவு அரசியல் அரங்குக்கும் பரந்து விரிந்தது.

1952 ஏப்ரல் 5 அன்று, எம்.ஜி.ஆரின் 'இன்பக் கனவு' நாடக இடைவேளையின்போது, கலைஞர் எம்.ஜி.ஆருக்கு 'புரட்சி நடிகர்' என்று பட்டம் கொடுத்தார். 1972-ல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்தவுடன், எம்.ஜி.ஆர். 'புரட்சித் தலைவராக' உயர்ந்தார். 'புரட்சி நடிகர்' பட்டம் கிடைத்த அன்று, நன்றிப் பெருக்குடன் எம்.ஜி.ஆர்., "புரட்சி நடிகராக நான் கழகத்துக்கு என்னை சமர்ப்பணம் செய்கிறேன். நான் கதராடை அணிந்தாலும், பெரியார் - அண்ணா கொள்கைகளுக்காக உழைப்பேன்" என்றார். திருச்சி மாநாட்டில் தி.மு.க.வில் தன்னை இணைத்துக் கொண்டதன் மூலம் எம்.ஜி.ஆர். இதை உறுதி செய்தார்.

இதற்கு ஓராண்டுக்குப் பிறகு, கலைஞரின் திரைக்கதை - வசனத்துடன் 'மலைக்கள்ளன்' எம்.ஜி.ஆருக்கு மேலும் புகழ் சேர்த்தது. மலைக்கள்ளனை எழுதிய நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை, "தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு", என்ற தனது பாடலால் திரைப்படத்தில் கண்ணுக்கும் செவிக்கும் விருந்து படைத்ததோடு, தமிழ்த் தேசிய உணர்வையும் ஊட்டியிருந்தார். 'மதுரை வீரன்' எம்.ஜி.ஆரின் பெயரைப் பட்டித்தொட்டியெங்கும் அறிமுகம் செய்தது. 1958-ல் 'நாடோடி மன்னன்' திரைப்படத்தில், தி.மு.க. கட்சிக் கொடியை எம்.ஜி.ஆர் காண்பித்து, தி.மு.க. என்றால் எம்.ஜி.ஆர்., எம்.ஜி.ஆர். என்றால் தி.மு.க. என்பதை காட்டியிருந்தார். இப்படித்தான் பாமர மக்கள் எண்ணினர். எம்.ஜி.ஆரின் பிளைமவுத் காரில் பறந்த தி.மு.க. கொடியைப் பார்த்துவிட்டு, கோவில்பட்டியில் கூடிய மக்கள் கூட்டம் "எம்.ஜி.ஆர். கொடி... எம்.ஜி.ஆர். கொடி..." என்று குரல் எழுப்பியது. காரில் எம்.ஜி.ஆரோடு அண்ணாவும் இருந்தார். ஒரு நண்பர் அண்ணாவிடம் இந்தப் போக்கை குறையாகச் சுட்டிக்காட்ட "உங்களுக்குப் புரியாது. எம்.ஜி.ஆருக்குக் கிடைக்கும் இந்தப் புகழ் எல்லாம் கட்சிக்குத்தான் போய்ச்சேரும். கட்சிதான் பயனடையும்" என்றார் அண்ணா. தன்னம்பிக்கையோடும், தம்பிகளின் வளர்ச்சியில் தளர்ச்சி அடையாதவராகவும் அண்ணா இருந்தார். அவர் ஓர் அபூர்வ தலைவர். ஆலமரத்தோடு அவரை ஒப்பிட்டாலும், அதன் கீழ் எந்தச் செடியும் வளராது என்ற உண்மைக்கு மாறாக, அவருடைய நிழலில் வளர்ந்த தலைமைக்குத் தகுதி படைத்த தம்பிகளும் தங்கைகளும் நிறைய உண்டு. கலைஞர் கருணாநிதியும் எம்.ஜி.ஆருமே இதற்கு மிகச்சிறந்த உதாரணங்கள்.

'நாடோடி மன்னன்' திரைப்படத்தில் அண்ணாவின் கொள்கைகளான இலவசக் கல்வி, உழவனுக்கு நிலம் ஆகியவற்றை எம்.ஜி.ஆர். சொன்னார். அந்தப் படத்தின் வெற்றி விழா சென்னை

எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் நடைபெற்றபோதுதான் எம்.ஜி.ஆரை 'இதயக்கனி' என்றார் அண்ணா. 'மரத்தில் ஒரு கனி பழுத்துத் தொங்கிக்கொண்டிருந்தது. அது யாருடைய மடியில் விழுமோ என்று பார்த்துக் கொண்டிருந்தேன். நல்ல வேளையாக அந்தக் கனி என் மடியிலேயே வந்து விழுந்துவிட்டது. அந்தக் கனியை எடுத்து நான் பத்திரமாக என் இதயத்தில் வைத்துக்கொண்டேன்' என்று பலத்த கரவொலிக்கிடையே அண்ணா குறிப்பிட்டார்.

இரண்டு வருடங்களுக்குப் பின்னர், "கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் போல் மக்களிடமிருந்து மிகுந்த அன்பைப் பெற்றவர்" என்று எம்.ஜி.ஆரை அண்ணா கூறினார். எம்.ஜி.ஆர். இப்போது தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் ஆகியிருந்தார். எனினும் சிவாஜி கணேசன் தி.மு.க.விலிருந்து விலகும் வரை, எம்.ஜி.ஆர். கட்சியின் முதன்மை கலைஞர் ஸ்தானத்துக்கு காத்திருக்க வேண்டியிருந்தது. 1953 திருச்சி மாநாட்டில், "அண்ணா ஆணையிட்டால் நான் பட ஒப்பந்தங்களை எல்லாம் கிழித்தெறிந்துவிட்டு, போரில் ஈடுபடுவேன்" என்று கணேசன் பேசியிருந்தும் கணேசனின் அரசியல் நாட்டம் எம்.ஜி.ஆரின் ஈடுபாட்டைக்காட்டிலும் குறைவாகவே இருந்தது.

1953-ம் ஆண்டு, திருச்சி - தஞ்சைப் பகுதிகளை தாக்கிய புயல், மிகுந்த சோகத்தை ஏற்படுத்தியிருந்தது. அப்போது வசூலித்த நன்கொடையைக் கைத்தறித் துணிகள் வாங்கி அன்பளிப்பாகக் கொடுக்க கட்சி திட்டமிட்டிருந்தது. அதே ஆண்டு, பெரியார் கடவுள்களுக்கு எந்தச் சக்தியும் கிடையாது என்று காண்பிக்க பிள்ளையாரை உடைக்கத் தீர்மானித்திருந்தார். "நான் பிள்ளையாரையும் உடைக்கமாட்டேன். பிள்ளையாருக்குத் தேங்காயும் உடைக்கமாட்டேன்!" என்றார் அண்ணா சாதுர்யமாக. "நம்மோடு நாளாவட்டத்தில் வந்து சேர வேண்டியவர்களை, வீணாக வெறுப்படையச் செய்துவிடும் என்ற விருப்பத்தால்தான் ஒதுங்கியிருந்தோம்!" என்றார் அந்த அரசியல் சாணக்கியர்!

15

1956 - விலகுகிறது... தேர்தல் முக்காடு!



பெரியாரின் பிள்ளையார் சிலை உடைப்பைவிட அதிகக் கொந்தளிப்பை 1953 கோடையில் ராஜாஜி அறிமுகப்படுத்திய கல்வித் திட்டம் உண்டாக்கிற்று. பள்ளிக்குச் செல்லும் வயதை அடைந்த குழந்தைகளில் பாதிப்பேரே பள்ளிக்குச் சென்றனர்; இதில் 60 சதவிகிதம் பேர், ஐந்து வருடங்களுக்கு முன்னரே படிப்பைக் கைவிட்டனர். ராஜாஜியின் கல்வித் திட்டப்படி, ஆறு முதல் பதினோரு வயது வரையுள்ள குழந்தைகளுக்கு அரைநாளே பள்ளிக்கூடம். பிற்பகல் நடக்கும் பள்ளிகள் காலையிலும் பிற்பகலிலும் இரண்டு ஷிஃப்டுகளில் நடக்கும். இதன் மூலம் பள்ளி படிப்பில் சேரும் குழந்தைகளை இரட்டிப்பாக்கலாம். ஆனால், இப்படி சேமிக்கிற இரண்டு மணி நேரத்தில் குழந்தைகள் தங்கள் குடும்பத் தொழிலைக் கற்றுக்கொள்ளலாம் என்பதுதான் மிகப்பெரிய பிரச்னையாக வெடித்தது. கல்வி அமைச்சரையும், காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களையும் கலக்காமல்

தன்னிச்சையாக ராஜாஜி இதை அறிவித்தார். இப்படி அறிவிக்கலாமா என்று கேட்டதற்கு, "சங்கரரும் ராமானுஜரும் தங்கள் கொள்கைகளை வெளியிடுவதற்கு முன்பு மற்றவர்களிடம் கலந்துகொண்டா வெளியிட்டார்கள்?" என்று பதில் சொன்னார்.

ராஜாஜியின், "சாதி முறைக்கு அங்கீகாரம் அளிப்பதாகத் தோன்றும் இந்தத் திட்டம்" என்று (ராஜாஜியின் பேரன் ராஜ்மோகன் காந்தியினால் பின்னர்) வர்ணிக்கப்பட்ட ராஜாஜியின் முயற்சி அவரது முதலமைச்சர் பதவியையும் அரசியல் வாழ்வையும் முடிவுக்கு கொண்டு வந்தது. பெரியாரும் தி.மு.க.வும் 'குலக் கல்வித் திட்டம்' என்று ராஜாஜியின் முயற்சியைக் கண்டனம் செய்தனர் புதிய ஏற்பாட்டுக்கு உருவான எதிர்ப்பைக் கண்டு, குறிப்பாகச் சாதி முறையை இது நீடிக்கச் செய்யும் என்ற குற்றச்சாட்டைக் கேட்டு ராஜாஜி உண்மையில் அதிர்ச்சி அடைந்தார். துரதிர்ஷ்டவசமாக, ராஜாஜியின் புதிய கல்வித் திட்டத்தை காமராஜரும் ஏற்கவில்லை. அந்தத் திட்டத்துக்கு எதிராக காமராஜர் பகிரங்கமாகப் பேசினார்.

கம்யூனிஸ்ட்டுகள் சட்டசபையில் திட்டத்தைத் திரும்பப் பெறுமாறு ஒரு தீர்மானம் கொண்டுவந்தனர். தன் கட்சியின் ஆணைப்படி காஷ்மீர் தலைவர் ஷேக் அப்துல்லாவைச் சந்திக்க, தீர்மானத்தைத் தாக்கல் செய்த பி.ராமமூர்த்தி போய்விட்டதால், ஒரே வோட்டில் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது. கலைஞர் கருணாநிதியும் தி.மு.க.வினரும், ராமமூர்த்தி ஒரு சக - பிராமணரை இக்கட்டிலிருந்து காக்கவே இப்படிச் செய்ததாகக் குறை கூறியதாக ராமமூர்த்தி சொன்னார்.

சட்டமன்றத்தில் தீர்மானம் தோல்வியைச் சந்தித்தாலும் தி.மு.க.வின் மும்முனைப் போராட்டத்தின் மூன்றாவது முனையாகியது குலக்கல்வித் திட்டம். முதலாவது முனை 'டால்மியாபுரம்' என்ற பெயரை 'கல்லக்குடி' எனப் பழையதாக மாற்றுவது. இரண்டாவது நேருவின் அவமதிப்புக்கு எதிரான கிளர்ச்சி. மூன்றாவது முனையை ராஜாஜி அன்பளிப்பாக்கி இருந்தார்.

நாஞ்சில் மனோகரன் நடத்திய நாகர்கோவில் மாநாட்டில்தான், அண்ணா போராட்டத்தின் இரண்டாவது முனையை வெளியிட்டார். அண்ணா, செழியன், ராசாராம் மற்றும் வி.பி.ராமன் ஆகியோர் ராமனின் ஃபியட் காரில் நாகர்கோவிலுக்குப் பயணமானார்கள். போகிற வழியில், ம.பொ.சிவஞானத்தின் எல்லைப் போராட்டத்தை நேரு 'நான்சென்ஸ்' என்று அலட்சியம்

செய்தது உட்பட பல விஷயங்கள் குறித்து விவாதித்தார்கள். நான்கு பேருக்குமே நேருவின் வார்த்தைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அடுத்த சில நாட்களில் நேரு சென்னை வருவதாக இருந்தார். அண்ணாவும் ராசாராமும் நேருவுக்குக் கறுப்புக் கொடி காட்ட வேண்டும் என்றார்கள். வி.பி.ராமனும், செழியனும் அது மிகையாக இருக்கும் என்றபோதிலும், கறுப்புக்கொடி காட்டுவது என்று முடிவெடுக்கப் பட்டது 1953, ஜூலை 11, 12 தேதிகளில் நடந்த சென்னை மாவட்ட மாநாட்டில் அண்ணா மும்முனைப் போராட்டம் பற்றிய கட்சியின் திட்டத்தை வெளியிட்டார்:

> பெரியாரின் பிள்ளை சம்பத், முதலமைச்சரின் வீட்டு முன்னால் (ஜூலை 14). பெரியார் கட்சியின் போராட்டம், சட்டசபை முன்னால் (ஜூலை 15). தந்தை நடத்துவதற்கு முன் தனயன், ஆச்சாரியார் வீட்டின் முன் தடுத்து நிறுத்துகிறார்...
>
> ஆச்சாரியார் பச்சைப் பாம்பு போன்றவர்... பச்சையிலையிலே ஒளிந்து பதுங்கிப் பதுங்கிப் பாய்கிறார். அக்கிரமமான திட்டத்தையும் புகுத்துவார்- புன்னகையும் மின்னவிடுவார்...
>
> தோழர் கருணாநிதியை டால்மியாபுரம் போராட்டத்துக்குத் தலைவராக நான் பணித்ததற்குக் காரணம், கதையிலே மட்டுமல்ல, கற்பனையோடு என்ற அளவிலே அல்ல - கடமையிலே எடுத்ததை முன்வைத்த காலைத் தவறவிடமாட்டார் என்ற நம்பிக்கையை நாடு அறியத்தான் அவரை டால்மியாபுரம் போராட்டத் தலைவனாக நியமித்தேன். நினைவில் நிறுத்துங்கள்: 'மாக்யவெல்லி'யை எதிர்க்கிறோம். மனதிலே வையுங்கள்...
>
> தமிழரைத் தாழ்வாகப் பேசினார் நேரு. தமிழரின் போராட்டங்களைத் துச்சமென மதித்து, தன் இச்சைப்படி முட்டாள்தனம் என்றார்...

சம்பத்தையும் கலைஞரையும் ஒவ்வொரு முனைக்குத் தலைமை தாங்கச் செய்ததன் மூலம் அண்ணா மீண்டும் கட்சியில் இருந்த இரண்டு அதிகார மையங்களை சமன் செய்திருந்தார். ஆனால், மும்முனைப் போராட்டம் முடிவில் கலைஞருக்குத்தான் அதிக வெளிச்சத்தைத் தந்தது. 1953, ஜூலை 13-ம் நாள் மாலை நடந்த செயற்குழுக் கூட்டத்தில், பங்கேற்ற பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணா, இரா.நெடுஞ்செழியன், கே.ஏ.மதியழகன், ஈ.வெ.கி.சம்பத்,

என்.வி.நடராஜன் ஆகிய ஐவரையும் முன் நடவடிக்கையாகக் கைது செய்தனர் போலீஸார். பத்திரிகைகள் அவர்களை தி.மு.க.வின் 'ஐம்பெரும் தலைவர்கள்' என்றன. வழக்கில் சம்பந்தப்பட்ட ஐம்பெரும் தலைவர்களும் சரியாக 11 மணிக்கு நீதிமன்றம் புகுந்தனர். ஒவ்வொருவரும் ரூபாய் ஐநூறு அபராதத் தொகையாகச் செலுத்த வேண்டும்; தவறினால் மூன்று மாதம் வெறுங்காவல் தண்டனையும் அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பாயிற்று. ஐவரும் சிறை சென்றனர்.

தலைவர்களைக் கைது செய்தபோதிலும், தொண்டர்கள் கட்சியின் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்திச் சென்று போராட்டத்தின் உயிர் காத்தனர். ராஜாஜி பதவி விலக நேர, காமராஜர் முதல்வரானார். அவர் செய்த முதல் வேலை ராஜாஜியின் அந்தக் கல்வித் திட்டத்தைத் திரும்பப் பெற்றதுதான்! மற்ற இரு முனைகளில் ரயில் நிறுத்த ஆர்ப்பாட்டம், பலரைச் சிறையில் கொண்டு சேர்த்தது. கே.வி.கே.சாமி 'தூத்துக்குடி சதி' வழக்கில் கைதானார். கல்லக்குடி பெயர் மாற்றப் போராட்டம் தொடர்ந்து 100 நாட்கள் நடைபெற்றது. துப்பாக்கிச்சூடும் தடியடியும் அதன் அங்கமாகியது. துப்பாக்கிச்சூடு இரண்டு வாலிபர்களின் உயிரைக் குடித்தது. கருணாநிதிக்கும் இன்னும் நால்வருக்கும் ஆறுமாதச் சிறைத்தண்டனை கிடைத்தது. அவரைப் பின் தொடர்ந்த இரண்டாவது அணிக்குத் தலைமை தாங்கிய காரைக்குடி இராம.சுப்பையாவுக்கும் இன்னும் பல தோழர்களுக்கும் மூன்று மாதச் சிறைத் தண்டனை கிடைத்தது.

மூன்றாவது அணிக்குத் தலைமை தாங்கிய கண்ணதாசன், அங்கே நடந்ததைச் சொல்கிறார்: "ஒன்று 'டால்மியாபுரம்' 'கல்லக்குடி'யாக வேண்டும். இல்லையென்றால், என் பிணம் விழ வேண்டும்!' என்றார். முதல் அணியின் தலைவர் கருணாநிதி. இரண்டாவது அணிக்கு இராம.சுப்பையா. மூன்றாவது அணிக்குத் தலைவர் கண்ணதாசன். ஸ்டேஷனுக்கு வெளியிலே சுவரில் எழுதப்பட்டிருந்த 'டால்மியாபுரம்' என்ற பெயரின் மீது ஒரு போஸ்டரை கருணாநிதி ஒட்டினார். நூற்றுக்கணக்கான போலீஸாரும், சர்க்கிள் இன்ஸ்பெக்டர்களும் அங்கே குழுமியிருந்தனர். யாரையும் அவர்கள் கைது செய்யவில்லை. பிறகு, முதலணி ஸ்டேஷனுக்குள் நுழைந்தது. எல்லோரும் உள்ளே சென்று, பிளாட்பாரம் பெயர்ப் பலகைகள் இரண்டிலும் 'கல்லக்குடி' போஸ்டரை ஒட்டினார்கள். அப்போதும் யாரும் கைது செய்யப்படவில்லை. கட்சியின் தீர்மானம் என்னவோ போஸ்டர் ஒட்டுவதுதான்."

கலைஞர் என்ன செய்வது என்று யோசித்தார். பத்து நிமிடங்களில்

ஒரு ரயில் வருவதாக இருந்தது. அது வந்தவுடன் கலைஞர் தம்முடன் நான்கு பேரை அழைத்துக்கொண்டு தண்டவாளத்தில் படுத்துக்கொண்டுவிட்டார். போலீஸ்காரர்கள் இதை எதிர்பார்க்கவில்லை. தண்டவாளத்தை விட்டு நகர மறுத்தவர்கள் கைது செய்யப்பட்டனர். கலைஞர் ஒரு முன்னுதாரணத்தை ஏற்படுத்தியிருந்தார். அவர் காட்டிய வழியில் இரண்டாவது அணி முழுவதும் இராம.சுப்பையா தலைமையில் ரயிலுக்கு முன்னால் படுத்துவிட்டது. எல்லோரையும் போலீஸார் கைது செய்தார்கள். கண்ணதாசனின் மூன்றாவது அணி புறப்படுவதற்கு வகுத்திருந்த நேரம் பகல் 1.30 மணி. ரயில் நிலையத்துக்கு அவர் வந்தபோது பெரிய திருவிழா நடப்பது போல அந்த இடம் தோற்றமளித்தது. போலீஸ் அதிகாரிகள் அனைவரும் ஆத்திரமடைந்த நிலையில் இருந்தனர். கவிஞரின் அணி, ரயில் வந்ததும், அதன் முன்னால் படுப்பதற்கு ஓடியது. ஆயுதம் ஏந்திய போலீஸார் அவர்களைத் தடியாலடித்துத் துரத்தினார்கள். சிலரை அலாக்காகத் தூக்கி அருகில் நின்ற கூட்ஸ் ரயிலுக்கு அந்தப் பக்கம் எறிந்தார்கள். ரயில் புறப்பட்டுவிட்டது. ஓடிய ரயில் ஒரு பர்லாங்கு தூரத்தில் நின்றது. அங்கே தண்டவாளத்தில் சுமார் 5000 பேர் அமர்ந்திருந்தார்கள். தடியடிக்கு உத்தரவிட்டார்கள். மறியல் செய்தவர்கள் கற்களை வீசவே குழப்பம் ஏற்பட்டு, துப்பாக்கிச் சூட்டுக்கு உத்தரவிடப்பட்டது. ரயிலுக்குள் குண்டு பாய்ந்து கேசவன், நடராஜன் என்ற இரண்டு பயணிகள் மாண்டு போனார்கள்.

தடியடியில் கண்ணதாசனுக்கு மூட்டு விலகிவிட்டது. அவரால் இடது கையைத் தூக்கவே முடியவில்லை. மூட்டு பிசகிய கையைத் தூக்கி நிறுத்தி கைக்கு ஒரு 'தொட்டில்' போட்டார்கள். அணித் தலைவன் என்ற முறையில், காயமடைந்தவர்களை அவர் சந்தித்தார். அவர்களிலேயே மிகக் குறைவான காயம் அவருக்குத்தான்! அவருக்கே அது வெட்கமாக இருந்தது. அந்தத் தொண்டர்களின் தீவிர உணர்ச்சி மறக்க முடியாதது. தங்கள் வலியையும் மறந்து, தலைவர் உடம்பு எப்படி இருக்கிறது என்று அவர்கள் விசாரித்தார்கள். டி.எஸ்.பி. அவரை விசாரித்தார். "உன்னைக் கைது செய்கிறேன்" என்றார். கவிஞர் கைது செய்யப்பட்டதில் மகிழ்ந்தார். தியாகம் என்பதற்காக அல்ல. வெளியே போனால் அவமானம் என்பதற்காக! டி.எஸ்.பி. அன்பில் தர்மலிங்கத்திடம் போய், "நீ யார்?" என்று கேட்டார். "திருச்சி மாவட்ட தி.மு.க. செயலாளர்" என்றார். "அப்படி என்றால்?" என டி.எஸ்.பி. கேட்டார். "ஜில்லா கலெக்டர் மாதிரி" என்று பளிச்சென்று பதில் சொன்னார் தர்மலிங்கம். தி.மு.க.வின் கட்சி அமைப்பு இன்னும் முழுதும் அறிமுகம் ஆகாத நேரம். எனினும்

முதல் ஐந்து ஆண்டுகளிலேயே கட்சி நிறைய வளர்ந்திருந்தது. 'ஐம்பெரும் தலைவர்கள்' வழக்கை விசாரித்த நீதிபதியின் குறிப்புகள் இதோ: "எதிரிகளுக்கு ஏராளமான ஆதரவாளர்கள் உள்ளனர் என்பதில் சந்தேகமில்லை. பொதுமக்களில் பெரும் பகுதியினர் அவர்களிடம் பெரும் மதிப்பு கொண்டுள்ளனர். இவர்களின் லட்சியம் எவ்வளவு தூரம் நியாயமானவை - நேர்மையுள்ளவை என்பதைப் பற்றி இங்கு முடிவுகட்ட வேண்டிய அவசியமில்லை. வகுப்புகளற்ற - ஜாதிகளற்ற சமுதாயத்தை நிறுவுவது பாராட்டத்தக்க லட்சியம்தான். ஆனால், அந்த லட்சியம் ஈடேற, ஜனநாயக திராவிடத் தனி அரசு ஏற்படுத்துவது அவசியமா என்பதைப் பற்றி எளிதில் முடிவு கூறிவிடுவதற்கில்லை."

நீதிபதி தன் தீர்ப்பில், "தனி மனிதனின் சுதந்திரம் புனிதமாகக் கருதப்படுகிறது. அவன் வீட்டில் எந்தவிதமான தலையீடும் இருக்கக் கூடாது. இது நமது அரசியல் சட்டம் அளித்துள்ள பெரும் பாக்கியம். அரசியல் கண்டனம், மக்கள் மன்றங்களுடனும், பொதுக் கூட்டங்கள் போன்றவற்றுடனும் நின்றுவிட வேண்டும். எந்த நபரும் தங்கள் வீட்டில் அமைதியுடன் தங்கவும், தன் இச்சைப்படி நடமாடவும் உரிமையுண்டு. அது பாதிக்கப்படுவதை அவன் சகிக்கமாட்டான். ஆகவே, எதிரிகள் தங்கள் ஆட்கள் அமைதியான - கண்ணியமான முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலுடன் இருந்தாலும், கிளர்ச்சி இப்போது நின்றுவிட்டபடியாலும் கடுமையான தண்டனை விதிப்பது அவசியமில்லை என்று கருதுகிறேன்" என்று கூறினார்.

கருணாநிதிக்கும் இன்னும் நால்வருக்கும் ஆறு மாதச் சிறைத் தண்டனையும் காரைக்குடி இராம.சுப்பையாவுக்கும் மற்றவர்களுக்கும் மூன்று மாதச் சிறைத் தண்டனையும் கிடைத்தது. சிலருக்கு ஒன்றரை ஆண்டும், சிலருக்கு ஓராண்டும் தண்டனை கிடைத்தது. தூத்துக்குடியில் கே.வி.கே.சாமியின் தலைமையில் ரயிலை நிறுத்தியவர்களை, சதி, கொள்ளை, திருட்டு இவற்றோடு ரயிலை நிறுத்தியதாகவும் குற்றம் சாட்டினர். "தூத்துக்குடி வழக்கினை மட்டுமல்லாது கல்லக்குடி வழக்கினையும் நாம் நடத்தியாக வேண்டும். இரண்டும் முக்கியமான வழக்குகள். இவற்றை நடத்த தி.மு.க. பணக்கோட்டையல்ல. எனவே, இதற்கான நிதியைத் திரட்டியாக வேண்டும்" என்ற அண்ணா, "பொது வாழ்க்கையில் இத்தகைய வீரர்களோடு சேர்ந்து வாழும் பேறு பெற்றோமே என்று உள்ளம் பூரிக்கத்தானே செய்யும்? திராவிட முன்னேற்றக் கழகம் தென்றலிலே பிறந்ததல்ல; தீயிலே முளைத்தது" என்று குறிப்பிட்டார்.

போலீஸ் துப்பாக்கிச்சூடும், உயிர் இழப்பும், சிறைத் தண்டனைகளும் அண்ணாவை மிகவும் பாதித்தன. முன்னதாக ஈ.வெ.ரா. தி.மு.க.வின் திட்டத்தை இப்படி கேலி செய்திருந்தார்: "இன்றைய வழிப் போக்கர்களின் மன மகிழ்ச்சிக்காக இதுகளுக்கு ஒரு போராட்டமா?" ஆனால், பின்னர் அவரே தி.மு.க.வினர் சந்தித்த அடக்குமுறைகளுக்கு கண்டனம் தெரிவித்து சென்னைக் கடற்கரையில் கூட்டம் நடத்தினார். இப்படி அபூர்வமாக தி.மு.க.வின் மீது பரிவு காட்டிய ஈ.வெ.ரா.வின் ஆதரவு, 1954 ஏப்ரல் 13 அன்று, காமராஜ் முதல்வராகப் பதவியேற்றதும் பழங்கதையாகிப் போயிற்று.

காமராஜர் வந்தார்

சாமான்யரான பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த காமராஜர் முதல்வராகப் பதவி ஏற்றது தி.மு.க.வினருக்கு மகிழ்ச்சி தந்திருக்க வேண்டும். ஆனால், அரசியல் ரீதியாக பிராமணரான ராஜாஜியை எதிர்கொள்வது எளிது. காமராஜரோ தங்களில் ஒருவராய் இருந்தார். பிரம்மசாரியாக எளிய வாழ்க்கை நடத்தினார். தனது உடல் பொருள் ஆவியை பொது வாழ்க்கைக்கே அர்ப்பணித்தார். கிட்டத்தட்ட ஒன்பது ஆண்டுகள் பிரிட்டிஷார் சிறையிலிருந்தார். இப்படிப்பட்ட சிறந்த தகுதிகளுடன் இயற்கையாகவே அமைந்த தலைமைப் பண்புகளும், 1940-ல் மாநில காங்கிரஸ் தலைமைப் பதவிக்கு காமராஜரை உயர்த்தி வைத்தன.

இந்தியாவின், ஆங்கிலம் பேசா முதல் முதலமைச்சராக இருந்த காமராஜர், மக்களுடன் வெகு எளிமையாகப் பழகினார். அவரது போக்கு பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிட வாக்காளர்களை காங்கிரஸுக்கு அழைத்து வந்தது. மற்றவர் தன்னிடம் சொல்வதை பொறுமையோடு கேட்டார். மக்களோடு நேரடித் தொடர்பு வைத்துக்கொண்டார். யாரும் எளிதில் அவரை அணுக முடிந்தது. தமிழகத்தின் அத்தனை கிராமங்களுக்கும் இரண்டு தடவை சென்று வந்திருந்தார். அவருக்கு அனைத்தும் அத்துபடியாயிருந்தது. சராசரி மக்களின் தேவைகள் தெரிந்திருந்தன. தன்னம்பிக்கையோடு சட்டமன்றப் பணிகளைத் தன் நெருங்கிய சகாக்களான சி.சுப்பிரமணியம், எம்.பக்தவத்சலம் ஆகியோரிடம் ஒப்படைத்தார். சட்டமன்றத்தில் அவர் பேசியது மொத்தமே ஆறு முறைதான்.

காமராஜரின் ஆட்சியில் எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் கொண்டு செல்லப்பட்டது. 1968-ல், 22,100 கிராமங்கள் மின்சார வசதி பெற்று தி.மு.க.வின் பிரசார சாதனமான சினிமா ஊடுருவ உதவியது. கூடவே தி.மு.க.வும் என்று சொல்லவும் வேண்டுமோ? தேசிய அளவில் 54,700 கிராமங்கள் மின்வசதி பெற்றன என்பதை

ஒப்பிடும்போது, காமராஜரின் சாதனை பிரமாண்டமானது. பாசனத்துக்கான பம்ப்செட்டுகள் 14,373-லிருந்து 2,60,000 ஆக 1951-க்கும் 1966-க்கும் இடைப்பட்ட காலத்தில் உயர்ந்தன. அப்போதுதான் மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைந்திருந்தது. அதுவரை பள்ளிக்கூடங்களையே எட்டிப் பார்த்திராத பத்தாயிரக்கணக்கான குழந்தைகள் பள்ளிக் கல்வி பெற, மதிய உணவு திட்டத்தை மிகுந்த யோசனையோடு அறிமுகப்படுத்தினார். (1951-ல் 18.52 லட்சத்திலிருந்த ஆரம்பப்பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை, 1966-ல் ஐம்பது லட்சமாயிற்று.) அது போலவே காமராஜரின் ஆட்சிக் காலத்தில் தொழில் - பொருளாதார வளர்ச்சி குறிப்பிடத்தகுந்ததாக இருந்தது. பவானிசாகர், அமராவதி, பாபநாசம், மலம்புழா, ஆழியாறு போன்ற பாசனத்துக்கான அணைக்கட்டுகள் அவர் காலத்தில்தான் கட்டப்பட்டன. சென்னை கிண்டியில் தொழிற்பேட்டை, நெய்வேலி நிலக்கரி தொழிற்சாலை, ரயில் பெட்டி தொழிற்சாலை, பாரத மிகுமின் நிறுவனம், ஐ.ஐ.டி, ஊட்டி மற்றும் நெய்வேலி அனல் மின் நிலையங்கள் உருவாக அவர்தான் காரணம். 'தொழில் வளர்ச்சியில் இந்தியாவின் மூன்றாவது ஸ்தானத்தை அடைந்தது தமிழகம்' என்றார் பி.ராமமூர்த்தி. 'மத்திய சர்க்காரை மிரட்டி, பிரிவினை இயக்கம் தமிழ்நாட்டில் தோன்றி வளருகிறது. இதை வளரவிடாமல் தடுக்க வேண்டுமானால் வடநாட்டில் இருப்பது போல தமிழ்நாட்டிலும் தொழிற்சாலைகளைத் துவக்க மத்திய சர்க்கார் லைசென்ஸ் வழங்க வேண்டுமென்று கோருவதற்கு இந்த இயக்கம் அவர்கள் கையில் பலமானதோர் ஆயுதமாக விளங்கியது. தமிழ்நாட்டு மாநில அரசும் இதை நன்றாகப் பயன்படுத்திக்கொண்டது என்றார் ராமமூர்த்தி. இப்படிப்பட்ட வலிமைமிக்க, சாதனை படைத்த அரசியல் எதிரியை தி.மு.க. எப்படி எதிர்த்து நிற்க முடியும்?

1954 ஜூனில் நடந்த தேர்தலில், முதலமைச்சர் காமராஜர் குடியாத்தம் தொகுதியில் போட்டியிட்டார். எதிர்த்து நின்றவர் கம்யூனிஸ்ட்டு வேட்பாளர் வி.கே.கோதண்டராமன். ஈ.வெ.ரா., காமராஜருக்கு ஆதரவு அளித்தார். அண்ணாவும் ஆதரவு அளித்ததுதான் ஆச்சர்யம். - "எழுதுபவர்களுடைய கட்டைவிரல்களை வெட்டிவிடுவோம்" என்று தி.மு.க.வினரை காமராஜர் எச்சரித்ததை மறந்து காமராஜரை, "குணாளா, குலக்கொழுந்தே" என்று புகழ்ந்தார் அண்ணா. தி.மு.க. குடும்பத்தினர் அவருக்காக கடினமாக வாக்கு சேர்த்தனர். வென்றதும் ராஜாஜியைப் பின்பற்றினார் காமராஜர், முதல் வேலையாக எஸ்.எஸ்.ராமசாமி(படையாச்சி)யை மந்திரியாக்கி, அவரது



அண்ணா, காமராஜர்

உழைப்பாளர் கட்சியைக் 'கபளீகரம்' செய்தார். அந்தக் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.பி.சுப்பிரமணியம், ஏ.கோவிந்தசாமி மற்றும் பலர் எஸ்.எஸ்.ராமசாமியின் 'கட்சியை காங்கிரஸுடன் இணைப்பது' என்ற முடிவை ஏற்கவில்லை. மாறாக, சுயம்பிரகாசத்தின் தலைமையில், திராவிட நாடாளுமன்ற கட்சி உறுப்பினர்களாக இயங்கினார்கள்.

தி.மு.க. காமராஜரிடம் கொண்ட ஆதரவு நிலை விலகி, ஆதரவு-ஆதரவற்ற என்ற நிலையாகி பின்பு வெளிப்படையான எதிர்ப்பு என்றாகியது. அண்ணா கட்சியின் நடுநிலையை இவ்வாறு விளக்கினார்: "காமராஜரிடம் மயங்கியோ, அவரால் விரட்டப்பட்டோ நாம் அவர்பின் செல்வதாக யாராவது எண்ணுவார்களானால் அது தவறு. நாம் காமராஜரை, (குலக்)கல்வித்திட்டம் ஒழிவதற்கு அவர் காரணமாக இருந்தார் என்பதற்காகப் பாராட்டினோம்; அவ்வளவுதான். அதற்காகவே அவருடைய காங்கிரஸ் சர்க்காரை ஆதரிக்கிறோமா - இல்லையா என்று கேட்கிறார்கள். எதிர்வீட்டுப் பெண்ணின் மீது உனக்குப் பகையா, காதலா என்றா கேட்பது? இப்போதைக்குப் பகையும் இல்லை, காதலும் இல்லை; அவ்வளவுதான்."

எனினும் காமராஜரின் அரசியல் செல்வாக்கு வேகமாக உயர்ந்துகொண்டிருந்தது. 1955, ஜனவரி 21 - 23 தேதிகளில் சென்னை ஆவடியில் அகில இந்திய காங்கிரஸ் மாநாடு காமராஜருடைய நிர்வாக அமைப்புச் செயல் திறமையையும், நேருவின் சர்வதேசப் புகழையும் வெளிச்சம் போட்டுக் காட்டியது. யுகோஸ்லாவிய அதிபர் டிட்டோ மாநாட்டுக்கு வந்திருந்தார். இந்தியாவின் பிரச்னைகளை மிகுந்த கவலையோடும் அதே நேரத்தில் கொள்கை என்று பிடிவாதம் பிடிக்காத, யதார்த்தமான நேருவின் உரை பலரின் மனதைக் கவர்ந்தது. 'சோஷலிஸபாணி சமுதாயம்' என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானத்தை ஆவடி காங்கிரஸ் மாநாடு நிறைவேற்றியது.

எனினும் 'பொதுத்துறையில் துவக்கப்படும் தொழில்கள் எல்லாம் தங்களுடைய வளர்ச்சிக்கே பயன்படப் போகின்றன என்பது இந்திய முதலாளிக்குத் தெரியும். இந்த 'சோஷலிஸ்ட்' பிரசாரத்தை காங்கிரஸ் செய்து கொண்டிருப்பதில் மக்கள் மயங்குவார்கள்; அதே சமயத்தில் தாங்கள் வளர்ந்துகொண்டே போவதற்கு நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது என்பது அவர்களுக்குத் தெரியும்' என்று எழுதினார் பி.ராமமூர்த்தி.

ஆவடி மாநாடு காமராஜருக்குப் பெரும் பெருமையைச் சேர்த்தது என்றாலும் ஒரு மாநிலக் கட்சியின் தலைவராக அந்தக் கண்ணோட்டத்திலேயே பேசிய அண்ணா, "ஆவடி காட்டியும், பாண்டுங் (சர்வதேச மாநாடு) பற்றிப் பாராட்டிப் பேசியும் தென்னாட்டவர் காணும் பலன் என்ன? காவடி தூக்கித் திரிய வேண்டி இருக்கிறது எதற்கும் எப்போதும்!" என்றார்.

ஆவடியின் முக்கியத்துவத்தைக் குறைத்தபோதும், இந்திக்கு எதிராக தேசியக் கொடியை எரிக்கும் பெரியாரின் 1955 ஆகஸ்ட் 1 திட்டத்திலிருந்து தி.மு.க. விலகியே இருந்தது. "இந்தி எதிர்ப்பு விஷயத்தில் அனுதாபம் கொண்ட காங்கிரஸ்காரர்களையும் நமது பக்கம் சேர்க்கும்படியானதாக கிளர்ச்சி இருக்க வேண்டும். கொடி கொளுத்துவது போன்ற முறையால், காங்கிரஸ்காரர்களுக்கும் திராவிட இயக்கத்துக்கும் நேசம் ஏற்படவே முடியாத ஒரு மோசமான சூழ்நிலை ஏற்பட்டுவிடும். எனவே, வேறு முறையைக் கொள்வோம்" என்றார் ராஜதந்திரி அண்ணா. அதுபோலவே அதே வருடம் ராமர் படத்தைக் கொளுத்திய போதும் தி.மு.க.வை அந்தக் கிளர்ச்சியிலிருந்து மிகத் தொலைவாக வைத்திருந்தார், ஒரு காலத்தில் ராமாயணத்தைக் கொளுத்த வேண்டும் என்ற அண்ணா. ஆனாலும், அண்ணாவின் அரசியல் ஆதாரத்தையே காமராஜரை 'பச்சைத் தமிழன்' என்று கொண்டாடி பெரியார் அசைக்கப் பார்த்தார். பதிலுக்கு, "காமராஜர் பார்வைக்கு

மட்டும்தான் திராவிடன்" என்றார் அண்ணா. "பாரேன், தம்பி! ஆரிய ஆச்சாரியார் விலகினார், திராவிட காமராஜர் வந்தார் என்று, உருவம் கண்டு உள்ளம் பூரித்துக் கிடந்தது என்ன ஆயிற்று? ஆரியம், திராவிட உருவினர் ஆட்சியிலும் இருந்துகொண்டு வெற்றி, வெற்றி என கொக்கரிக்கிறதே!" என்று எழுதினார் அண்ணா. மேலும், "காமராஜர் தமது திறமையினால் தமிழரின் உரிமையைப் பெற்றுத் தருவார் என்று என்னால் துளியும் நம்ப முடியவில்லை. தமிழர் உரிமை, தமிழகம் பற்றித் துளியும் அக்கறை காட்டமாட்டார். நாம்தான் அவரைப் பச்சைத் தமிழர் என்று பாராட்டுகிறோம். அவர் மொழி, இனம், நாட்டு உணர்ச்சிகளுக்குத் தமது உள்ளத்தில் இடமளித்துப் பழக்கப்பட்டவரே அல்ல. அவருக்குச் சுறுசுறுப்பும் தெம்பும் தரக்கூடியது வோட்டு வேட்டை ஒன்றுதான்!" என்று 1955 இறுதியில் அண்ணா சாடினார்.

காமராஜர் தன் பங்குக்கு, தி.மு.கழகத்தவரின் எதிர்பார்ப்புகள் அவர்களின் அரசியல் அறியாமையைக் காட்டுகிறது என்றார். அதிகாரத்தின் பாரத்தையோ பொறுப்பையோ அறியாதோர் தி.மு.க.வினர் என்றார். பதிலுக்கு காமராஜரின் அரசியல் ஸ்தானமே அவர் தமிழ் உணர்வு அற்றவர் என்பதனால் வந்தது என்றார் அண்ணா. "திராவிட இன உணர்ச்சி மலர்ந்துள்ள இடத்தில், ஆச்சாரியார் போன்றோர் ஆட்சியில் அமர்ந்திருப்பது அமளிக்கு வழிகோலும் என்ற அச்சத்தால், திராவிட இனத்தவராகவும், அதேபோல, அந்த உணர்ச்சியை அறிந்துகொள்ளத்தக்க அறிவாற்றல் அற்றவராகவும் ஒருவர் கிடைத்தால், அவரைப் பிடித்து இழுத்து வந்து தலையில் மகுடத்தைக் கவிழ்த்து (காமராஜரை) உட்காரவைத்தால், நாட்டிலே அமளி மூளாதிருக்கும் என்பதன்றி, பிறிதோர் நோக்கத்தை நேரு பெருமகனாரும் கொண்டிருக்க வழியில்லை" என முடித்தார் அண்ணா.

தட்சிணப் பிரதேசமும்
திருத்தி அமைக்கப்பட்ட சென்னை மாகாணமும்

காமராஜரின் போதாத காலம் தொடர்ந்தது. திருவாங்கூர் சமஸ்தானத்தின் கீழ் இருந்த தேவிகுளம் - பீர்மேடு என்ற தமிழ் பேசும் பகுதிகள் கேரளத்துக்குச் சென்றன. இதற்கும் காமராஜர்தான் காரணம் என்றார் அண்ணா. தேவிகுளம்-பீர்மேடு பகுதிகளை தமிழகத்துடன் இணைக்க நடந்த போராட்டத்தை அந்தப் பகுதி காங்கிரஸ் தலைவர் மார்ஷல் நேசமணிதான் தலைமையேற்று நடத்தினார். "தமிழர் வாழும் குமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் சேர வேண்டும் என்ற போராட்டத்திலும் தி.மு.க. ஒதுங்கியே

நின்றது" என்றார் தி.மு.க.வை எதற்கும் குறை சொல்லும் பி.ராமமூர்த்தி. (தி.மு.க. அந்தப் போராட்டத்தில் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டதாக நாவலர் நெடுஞ்செழியன் கூறுகிறார்).

1955 அக்டோபரில் மாநில சீரமைப்புக் குழு, கேரளா - கர்நாடகா உட்பட பதினாறு மாநிலங்களை அமைக்கப் பரிந்துரை செய்தது. கிட்டத்தட்ட அதேசமயம், மேற்குவங்க முதல்வர் பி.சி.ராய் பெரிய மாநிலங்கள் என்ற யோசனையை அளித்திருந்தார். அதன்படி, தெற்கில் கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு மூன்றும் சேர்ந்த 'தட்சிணப் பிரதேசம்' உருவாகும்.

'தட்சிணப் பிரதேசத்தை' ராஜாஜி ஆதரித்தார். "தமிழ்நாடு - மிகச்சிறிய அமைப்பு. இந்திய அரசியலிலே இந்தச் சிறிய அமைப்புக்குச் செல்வாக்கு ஏற்படாது. பெரிய அளவில் உள்ள உத்தரபிரதேசம் வைத்ததுதான் சட்டமாக இருக்கும்" என்று காரணம் காட்டினார். மொழிவாரி மாகாணங்களை ஆதரித்த கம்யூனிஸ்ட்டுகள் இந்த யோசனையை எதிர்த்தனர். 'திராவிட நாடு' கோரிக்கை வைத்த ஈ.வெ.ரா.வும் அண்ணாவும்கூட இதை எதிர்த்ததுதான் வேடிக்கை. 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று 1938-ல் வாதிட்டிருந்த ஈ.வெ.ரா. தட்சிணப் பிரதேசத்தில் தமிழரல்லாதோர் ஆதிக்கம் இருக்கும் என அஞ்சினார். ராஜாஜியின் 'தட்சிணப் பிரதேச' யோசனையை 'கலவை' என்று விமரிசித்தார் அண்ணா: "ஆச்சாரியார் கொண்டுள்ள அச்சத்தைப் போக்கிக்கொள்ள அவர் காட்டும் பரிகாரம், தட்சிணப் பிரதேசம். அது கலவை! தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம் எனும் மொழி வழி அரசுகள் கூடாது - கிடையாது. இவையாவும் ஒரே கொப்பரையில் போட்டுக் கொதிக்க வைத்துக் குழம்பாக்கி ஒரு வார்ப்படமாக்க வேண்டுமாம் - தட்சிணப் பிரதேசமென்று. இது ஆச்சாரியாரின் அவியல்!" என்றார். தொடர்ந்து, "மொழிவழி பிரிந்து இன வழி ஒன்று சேரல்"தான் தி.மு.க.வின் தாரக மந்திரம் என்றார் அண்ணா.

சீரமைப்புப்படி, தேவிகுளம் - பீர்மேடு கேரளாவுக்குச் சென்றதை தமிழக அரசியல் கட்சிகள் அனைத்துமே எதிர்த்தன. 1956, பிப்ரவரி 20 அன்று, எதிர்ப்பை தெரிவிக்கும் அனைத்துக்கட்சி போராட்டத்தைக் கைவிட காமராஜர் வேண்டினார். தி.மு.க.வின் வேலை அந்தப் போராட்டம் எனப் பெரியார் கருதினார். 'இது கடைந்தெடுத்த காலித்தனம்; கண்ணீர்த் துளிகளின் கயவாளித்தனம். அர்த்தால் தேவையில்லை' என்றார். அண்ணாவோ, தனது பொதுச் செயலாளர் நெடுஞ்செழியனை கூட்டணி அமைத்ததற்காகப் பாராட்டி, 'பதவி ஏற்ற ஓராண்டுக்குள்ளாகத் தி.மு.கழகத்துக்கு நாவலர் பெற்றுத் தந்துள்ள மகத்தான ராஜதந்திர

வெற்றியாகும்' என்றார். 'தமிழக எல்லைகளைத் தருக! சென்னைக்குத் தமிழ்நாடு என்று பெயரிடுக! தட்சிணப் பிரதேச யோசனையைக் கைவிடுக!' என்பதே கூட்டணியின் கோரிக்கையாக இருந்தது. 'மொழிவழி அரசு கேட்டால் வழியில் ஒன்றினை இழந்துவிட வேண்டுமாம்: தேவிகுளம் - பீர்மேடு கிடையாதாம்! தேவிகுளம் பிறவும் தேவை என்று நாம் கேட்டாலோ, மொழிவழி அரசு கிடையாதாம்! 'கொண்டை மிஞ்ச வேண்டுமானால், செண்டு கேட்காதே' என்று நேரு கூறுகிறார் என்றார் அண்ணா.

கட்சிகள் ஒருமனதாகக் குரல் கொடுத்தும், தமிழக சட்டசபை எடுத்த நிலையையும் மீறி, இரண்டு இடங்களும் கேரளாவுக்கே போயின. "குளமும், மேடும் முக்கியமா? அதெல்லாம் இந்தியாவுக்குள்ளேதானே இருக்கிறது?" என்று காமராஜர் நடந்ததை ஏற்றுக்கொள்ளச் சொல்லி பேசினார். அண்ணா அலட்சியம் என்றார். ஆனால், வேடிக்கை என்னவெனில் 'தட்சிணப் பிரதேச' யோசனையைக் கைவிட காமராஜர்தான் காரணமாக இருந்தார்!

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டம் 1956-ல் அமிர்தசரஸில் கூடியபோது, பி.சி.ராயின் திட்டத்தை ஏற்பதாக முடிவு செய்தது. அதில் கலந்துகொண்ட சி.சுப்பிரமணியம்,

> தென்னிந்தியாவில் கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு ஆகியவை அடங்கிய தட்சிணப் பிரதேசம் ஒன்றை அமைக்கலாம் என்று யோசனை கூறப்பட்டது. இது குறித்துக் கணிசமான விவாதம் நடந்தது. தட்சிணப் பிரதேசம் அமைப்பு குறித்துக் காமராஜர் அதிருப்தி கொண்டிருந்தார். எனவே, பி.சி.ராயின் திட்டத்தை ஏற்றுக்கொள்ளலாம் என்று பரிந்துரைத்த ஒரு தீர்மானத்தை, கோவிந்த வல்லப் பந்த் கொண்டு வந்ததை நான் வழிமொழிய காமராஜர் ஒப்புக்கொள்ளாவிட்டால், எனக்கு தர்மசங்கடமான நிலை ஏற்படும் என்று காங்கிரஸ் மகாசபையின் தலைவரிடம் கூறினேன். அதைத் தொடர்ந்து காமராஜரிடம் இது பற்றிக் கேட்கப்பட்டது. தமக்கு ஆட்சேபம் எதுவும் இல்லை என்று காமராஜர் கூறினார். பிறகு, தீர்மானத்தை வழிமொழிந்து நான் பேசினேன். டாக்டர் பி.சி.ராயின் திட்டத்துக்குத் தமிழ்நாட்டில் போதிய ஆதரவு இல்லை என்றும், எனவே சர்க்கஸ் கூடாரத்தில் கம்பியின் மீது நடப்பவன் நிலையில் நான் இருக்கிறேன் என்றும்

எனது உரையில் குறிப்பிட்டேன். பின்னர், தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. கர்நாடக முதலமைச்சர் ஹனுமந்தய்யா, கேரள முதலமைச்சர் கோவிந்த மேனன் ஆகியோருடன் பேசினேன். தட்சிணப் பிரதேசம் அமைப்பதில் அவர்கள் இருவரும் மிகுந்த அக்கறை காட்டினார்கள். காமராஜர், டி.டி.கிருஷ்ணமாச்சாரி ஆகியோருடனும் விரிவாகப் பேசினேன். காமராஜரும் தட்சிணப் பிரதேசத் திட்டத்துக்கு ஆதரவாக இருந்தார் என்ற கருத்துதான் எனக்கு ஏற்பட்டது. பிற்பகல் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்பாக, காமராஜருக்கு ஈ.வெ.ராமசாமி நாயக்கரிடமிருந்து ஒரு தந்தி வந்தது. அந்தத் தந்தியில் தட்சிணப் பிரதேச அமைப்பு யோசனையை ஈ.வெ.ரா. கடுமையாக எதிர்த்திருந்தார். தட்சிணப் பிரதேசம் அமைக்கப்பட்டால், இதர மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் தமிழர்கள் மீது ஆதிக்கம் செலுத்துவார்கள் என்றும், சென்னை மாகாணத்தில் காமராஜரின் தலைமை நீங்கிவிடும் என்றும் அந்தத் தந்தியில் ஈ.வெ.ரா., காமராஜரை எச்சரித்தார். ஈ.வெ.ரா.விடமிருந்து இவ்வாறு ஒரு தந்தி வந்தது என்ற விவரம் அப்போது தெரியாது. ஆனால், பிற்பகலில் காங்கிரஸ் காரிய கமிட்டி கூடியதும், தட்சிணப் பிரதேச அமைப்புத் திட்டத்தைத் தாம் ஆதரிக்கவில்லை என்றும், எனினும் காரிய கமிட்டி அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டால் தாம் அதை ஒப்புக்கொள்வதாகவும் காமராஜர் தயக்கத்துடன் கூறினார். காமராஜர் தட்சிணப் பிரதேசத் திட்டத்தை ஏற்கவில்லை என்றால், அவர் மீது அந்தத் திட்டத்தைத் திணிக்கத் தமக்கு விருப்பமில்லை என்று நேருஜி கூறிவிட்டார். அத்துடன் தட்சிணப் பிரதேசம் அமைக்கும் யோசனை கைவிடப்பட்டது.

ஆனால், காலப்போக்கில் சிறிய, தமிழ்பேசும் மதராஸ் மாகாணம், காங்கிரஸ் அரசியலுக்கு உகந்ததாக இருக்கப்போவதில்லை என்பதை அன்று அவர் அறிந்திருக்கவில்லை.

மாறாக, அண்ணா அதை ஒரு நல்ல வாய்ப்பு என்று கருதியிருக்க வேண்டும்; எனினும் குறுக்கப்பட்ட தமிழகத்தை வரவேற்று வருங்காலத்தில் மாநிலம் திராவிட நாட்டின் ஒரு பகுதியாக இருக்கும் என்றார். 'புதிய தமிழகம் அமைகிறது - அதிலே நமது நம்பிக்கையும் மலர்கிறது. மொழிவழி அரசு - திராவிடக்

கூட்டாட்சிக்குத்தான் வழிகோலும் என்பது நமது திடமான நம்பிக்கை' என்று எழுதினார். அந்தச் சமயத்தில் தெற்கே வந்த ஆசாரிய வினோபாவிடம், "கூட்டாட்சியாக்கிய பிறகு, ஆட்சியிலே யாருக்கேனும், எந்தப் பகுதிக்கேனும் அதிருப்தி ஏற்பட்டால், பிரிந்து போக உரிமை தருகிறோம்" என்றும் சொன்னார் அண்ணா. தொடர்ந்து, "ஆந்திரர்கள் தமிழர்களுடன் ஒரே அரசில் இருந்ததால், தங்கள் வளர்ச்சி தடைப்பட்டது என்று எண்ணி கசப்பு அடைந்திருப்பார்கள். அவர்கள் தனியாகிவிட்டார்கள். இப்போது அவர்களுக்கும் மத்திய சர்க்காருக்கும்தான் தொடர்பு. இப்போதும் தங்களுக்கு வளர்ச்சி இல்லை என்றால், அதற்குக் காரணம் தமிழரல்ல, மத்திய சர்க்கார்தான் என அறிந்துகொள்வார்கள்." மறுபடி வினோபாபாவே, "மத்திய சர்க்கார் அநீதியாக நடப்பதால்தானே பிரிந்துபோக விரும்புகிறீர்கள்? நீதியாக நடந்துகொண்டால்?" என்று கேட்டபோது, "அப்படிப் பார்ப்பதைவிட இதுபோல எண்ணக் கேட்டுக்கொள்கிறேன். மத்திய சர்க்கார் அநீதியாக நடப்பதால் கசப்படைகிறோம் என்று கூறுவதைவிட, மத்திய சர்க்கார் என்று ஒன்று இருந்தால், அநீதிதான் நடக்கும் என்று கொள்ள வேண்டுகிறேன். மேலும், நீதியாக நடக்கக்கூடிய கடைசித் தலைமுறையே இப்போது வடநாட்டில் உள்ளது என்று நினைக்கிறோம். இனி வரக்கூடிய தலைமுறையில் அதிகமான அநீதிதான் இருக்கும்" என்று வினோபாவுக்கு பதில் அளித்தார் அண்ணா.

மாநிலச் சீரமைப்பு தி.மு.க.வுக்கு சாதகமாக அமைந்தது. 1953 ஜூனிலேயே விருதுநகரில் நடைபெற்ற ராமநாதபுரம் மாவட்ட மாநாட்டில், தனக்கு முன்னர் பேசிய உ.ராஜாம்பாள் அம்மையாரின் பேச்சைச் சுட்டிக்காட்டி, தேர்தலில் பங்குகொள்ளத் தனக்குத் தயக்கம் ஏதும் இல்லை என்றார் அண்ணா: "பொதுத் தேர்தலிலே ஈடுபட்டு மக்களிடம் வோட்டுகளைப் பெருவாரியாகப் பெற்று, சட்ட-சபைகளைக் கைப்பற்றி திராவிடத் தனியரசு பிரகடனத்தை வெளியிட வேண்டும் என்று அம்மையார் கூறியிருக்கிறார்கள். எழுச்சியூட்டும் கருத்து இது. திராவிட முன்னேற்றக் கழகம் இதுபற்றி முறைப்படி எண்ணிப் பார்த்து, தக்க திட்டத்தைத் தீட்ட முன்வரும் என்று உறுதியாகக் கூறுவேன்" என்றிருந்தார்.

1957 பொதுத் தேர்தல் நெருங்கி வந்த வேளையில், தேர்தலில் பங்கு கொள்வது பற்றி கட்சிக்குள்ளே விவாதிக்கப்பட்டது. விவாதம் தேர்தலில் போட்டியிட வேண்டுமா, வேண்டாமா என்பது பற்றி அல்ல. கட்சிக்குள் பங்கெடுக்கும் எண்ணமே மேலோங்கியிருந்தது. ஆனால், எது சரியான தருணம் என்பதில்தான் கருத்து வேறுபாடு இருந்தது. கே.கே.நீலமேகம் உட்பட கட்சியில்

இருந்த சிலர், கட்சி முதிர்ச்சி அடையாத நிலையில் தேர்தல் களத்தில் இறங்குவது தோல்விக்கு வழிவகுக்கும் என்றனர். அண்ணாவும் அப்படியே நினைத்தாலும், சம்பத்தும் இன்னும் சிலரும் பிடிவாதமாக இருந்தனர்.

மும்முனைப் போராட்டம் தி.மு.க.வை தமிழகம் முழுக்க அறிமுகப்படுத்தியிருந்தது காமராஜர் வேறு, "தேர்தலுக்காவது, அவர்கள் நிற்பதாவது!" என்று கேலி செய்து வந்தார். "பேசினால் மட்டும் போதுமா? அதனால் வோட்டு கிடைத்துவிடுமா? பைத்தியக்காரனைச் சுற்றிக்கூடத்தான் பத்துப்பேர் இருக்கிறார்கள்! அவர்களுக்கு தைரியம் இருந்தால் தேர்தலில் நிற்கட்டும். யார் வேண்டாம் என்றார்கள்? தேர்தலில் போட்டியிட்டால்தானே மக்கள் யார் பக்கம் என்று தெரியும்!" என்று சீண்டி விட்டார்.

சட்டமன்றத்துக்கு உள்ளே வந்தால் தி.மு.க. பொறுப்பை உணர்ந்து பக்குவம் அடையும்; அரசு நிர்வாகத்தில் உள்ள தடைகளையும் சங்கடங்களையும் அந்தக் கட்சி உணரும் என்று அவர் எதிர்பார்த்தார். ஆனால், அவரை அறியாமலே அவரது அறைகூவல் சட்டமன்றத்துக்கு வெளியே தி.மு.க.வினர் எழுப்பி வந்த கருத்துகளை உள்ளேயும் கூற வாய்ப்பும் வசதியும் ஏற்படுத்தப் போவதை அவர் அறிந்திருக்கவில்லை. பதிலுக்கு அண்ணா சொன்னார்:

> கோயில் வாசலில் ஒருத்தி பூ விற்றுக் கொண்டிருந்தாள். அவள் அந்த வழியாகப் போகிற சாமியாரைப் பார்த்து, 'என்ன சாமியாரே, உமக்கு எப்போது கல்யாணம்?' என்று கேட்டாள். சாமியார் முதலில் மௌனமாகப் போய்விட்டார். சாமியாரின் மௌனத்தைக் கண்ட பூக்காரி, தினந்தோறும் சாமியாரை அந்த வழியாகப் பார்க்கும்போதெல்லாம், பூ விற்கிற வேலையைக்கூடக் கவனிக்காமல் 'என்ன சாமியாரே, எப்போது கல்யாணம்?' என்று தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார். ஒரு பெண் இப்படி அடிக்கடி கேட்டால் என்னதான் சாமியாராக இருந்தாலும் வீம்பு வந்துவிடாதா? ஒருநாள் அந்தப் பெண்ணைப் பார்த்து, 'கல்யாணமா? நான் தயார். நீ தயாரா?' என்று திருப்பிக் கேட்டுவிட்டார். அந்தக் கதையைப் போலத்தான், காமராஜரும் நம்மைப் பார்த்து 'சட்டசபைக்கு வருகிறாயா, வரமுடியுமா?' என்று அறைகூவல் விடுக்கிறார். சாமியார் பூக்காரிக்குச் சொன்ன பதிலைக் கழகமும் ஒருநாள் காமராஜருக்குச் சொல்ல நேரிடும்!

"திராவிட இயக்கத்தின் ஆதரவுடன், முதல் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வென்றவர்களுக்கு அண்ணாவிடம் பெரிய மரியாதை ஏதும் இருக்கவில்லை. அவரை ஒரு தலைவராகப் பார்க்காமல், ஒரு பேச்சாளராக, பிரசாரம் செய்பவராகவே பார்த்தார்கள். அண்ணாவே இவ்வாறு நினைத்தாரா என்று தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், அவர் தோழர்களும் தொண்டர்களும், கட்சியைச் சேர்ந்தவர்களும் இது அநியாயமானது என எண்ணினார்கள். தேர்தலில் பங்கெடுக்க முடிவெடுத்ததில், கட்சியின் மட்டத்தில் அமைதியாக நடந்த விவாதங்களும் காரணம்" என்றார் க.ராசாராம்.

முடிவெடுத்த அந்த நாள் திருச்சியில் மே 17 முதல் 20 வரை நடந்த இரண்டாவது மாநில மாநாட்டில் வந்தது: "வறண்ட தலையினர் கூடினோம் திருச்சியில். வீழ்ச்சியுற்ற நிலையில் இருந்தும் மீட்சி பெற, எழுச்சி பெறக் கூடினோம். எண்ணி எழுபது போலீஸ் உண்டா? ஏற்பாடுகளைக் கவனிக்க வசதிகள் உண்டா? ஒரு லட்சம் என்று முதல் நாள் கூறினர் - நாலாம் நாள், மூன்று லட்சத்துக்குக் குறையாது என்றனர் நமது தோழர்கள். அல்ல, ஊரார் யாரைக் காணக் கூடினர்? காண்பது பெரும்பேறு என்று கருதத்தக்க நிலைபெற்ற ஞானவான்களையா? மனமருளை ஓட்டி அஞ்ஞானத்தை விரட்டிடும் ஆற்றல் பெற்ற அருளாளர்களையா? கவர்னரையா? முதலமைச்சர்களையா? மூதறிஞர்களையா? இல்லை, சாமான்யர்களைக் காணக் கூடினர்" என்றார் அண்ணா.

மாநாட்டில் நாவலர் நெடுஞ்செழியனைத் தலைமை ஏற்க வழிமொழிந்த அண்ணா, "தம்பீ வா, தலைமை ஏற்க வா! உன் ஆணைக்கு நாங்கள் எல்லோரும் அடங்கி நடப்போம், வா!" என்று அழைத்ததும், நாவலரின் தலைமையும் ஆரோக்கியமான ஜனநாயக மரபுகளின் அடையாளமாக இருந்தது என்றால், பிறரின் திறமையைக் போற்றி வளர்க்கும் தன்னம்பிக்கை அண்ணாவிடம் மட்டுமே இருந்தது என்பதும் உண்மை. நாவலர் நெடுஞ்செழியனின் உயர்வு சமரசத்தினாலும் அமைந்தது. சம்பத்தும் கலைஞரும் அந்தப் பதவியை விரும்பியிருந்தார்கள்.

தேர்தலில் போட்டியிட வேண்டுமா... வேண்டாமா? என்று மாநாட்டுக்கு வந்திருந்தவர்களிடம் நடைபெற்ற வாக்கெடுப்பில் 56,942 பேர் தி.மு.க. போட்டியிட வேண்டும் என்றும், 4,203 பேர் போட்டியிட வேண்டாம் என்றும் வாக்களித்தனர். "திருச்சி மாநில மாநாட்டில் தொண்டர்களை வோட்டுப் போட வைத்து, தேர்தலில் ஈடுபடுவதாக 'மேக்-அப்' இல்லாத ஒரு நாடகம் நடத்தினார் அண்ணா. இது பெரியாரின் கண்களைக் கட்டவே!" என்றார் கண்ணதாசன். ஆனால், தன் முடிவை நியாயப்படுத்திய அண்ணா

சொன்னார்: "தேர்தல் என்பது ஒரு ஜனநாயகக் கடமை. எப்படி வயது வந்த ஒரு பெண் பருவமடைந்துவிட்டாள் என்றால், அவள் 'மணவினைக்குத் தயாராக இருக்கிறாள்' என்பது எவ்வாறு உறுதிப்படுகின்றதோ, அதைப்போல." தொடர்ந்து, "தி.மு.க. தேர்தலில் ஈடுபடுகிறது என்றாலும், இடம் பிடித்து இனிப்புப் பெற அல்ல; பதவி பிடித்துச் சுவைக்க அல்ல; பல்வேறு நாட்டின் தலைவர்கள் இன்று அக்கறைகாட்ட மறுக்கிறார்கள், திராவிட நாடு பிரச்னை குறித்து அவர்களின் கவனத்தை ஈர்க்கவும், ஆதரவைப் பெறவும் தேர்தல் வெற்றியின் மூலம் பொதுமக்களின் ஆதரவு இருப்பதை எடுத்துக்காட்டும் தூய நோக்கத்துக்காகவே! எனவே, தேர்தலில் ஈடுபட்டாலும், கழகம் விடுதலை இயக்கம் எனும் மாண்பினை இழந்துவிடாது. விடுதலைக் கிளர்ச்சியின் ஒரு கட்டமாகவே கழகம் தேர்தலில் ஈடுபடுவதைக் கொள்கிறது" என்றார்.

எப்படியாயினும், தேர்தலில் பங்கு பெற இருந்த கொள்கைத் தடங்கலைக் கடந்தபிறகு அண்ணா, "நாம் பதவிக்காக இதில் ஈடுபடுகிறோம் என்று எவரும் எண்ணிவிடக் கூடாது" என்றார். ஆனால், எல்லோரும் அப்படி நினைக்கவில்லை. குறிப்பாக கண்ணதாசன்! "அந்த மாநாட்டிலேதான் - தான் பார்ப்பனர்களுக்கு எதிரி அல்லவென்றும் - பார்ப்பணீயத்துக்கே எதிரி என்றும் அண்ணாதுரை பேசினார். அந்தப் பேச்சுக்குக் காரணம் உண்டு. 'முன்பெல்லாம் பதவி தேடுவோர் பட்டுப்பூச்சிகள், வெட்டுக்கிளிகள்' என்று பேசிவந்த அவர், அந்த மாநாட்டில் தேர்தலில் கலந்துகொள்வது பற்றி வோட்டெடுப்பு நடத்தினார்" என்றார் கண்ணதாசன். 1956, ஜூன் 10 தேதியிட்ட தனது 'தம்பிக்கு' கடிதத்தில், 'தேர்தலில் ஈடுபட்டு எப்படியாவது சட்டசபையில் இடம் பிடித்துக்கொண்டு அதன் மூலமாகப் புதிய கௌரவம், செல்வாக்குப் பெற்று, பளபளப்பு அடையவேண்டும் என்ற அற்ப நோக்கத்துக்காக நாம் ஈடுபடவில்லை. அரசியல் பட்டுப்பூச்சிகளும் வெட்டுக்கிளிகளும் அந்தவிதமான அற்ப ஆசை கொள்ளும்' என்று அண்ணா எழுதினார். "பார்ப்பனர்கள் என்னதான் ஆதிக்க வெறியர்களாக இருந்தாலும், அவர்களுக்கு வோட்டுரிமை இருக்கிறதல்லவா? அந்த வோட்டும் அவருக்குத் தேவை அல்லவா..? விடுதலை வீரர் அண்ணாதுரை ராஜதந்திரியாகத் தொடங்கினார். சமுதாயக் கருத்துகள், நாத்திகக் கருத்துகள் மெல்ல அவரிடம் இருந்து விடைபெறத் தொடங்கின. கொள்கையின் முதற்கட்டச் சரிவைத் துவக்கிவைத்தது திருச்சி மாநில மாநாடு" என்றார் கண்ணதாசன். அப்படிக்கூட இருக்கலாம். ஆனால், இந்தி எதிர்ப்பில் கட்சி தீவிரமாகவே இருந்தது.

16

தேர்தல் 'சரி' – இந்தி 'கூடாது'!

காங்கிரஸுக்கு எதிர்ப்பு



1965-ம் ஆண்டுக்குப் பிறகு இந்தியாவின் ஆட்சிமொழியாக, ஆங்கிலத்துக்கு பதில் இந்தி என்பது நடைமுறைப்படுத்த முடியவில்லை. ஆங்கிலமே இணை மொழியாகத் தொடரும் என்ற அறிவிப்பு, 'இந்தி மட்டும்' என்றதற்கு எதிரான தி.மு.க.வின் எதிர்ப்புகளுக்கும், முயற்சிகளுக்கும், மொழிப்போர் தியாகத்துக்கும் கிடைத்த வெற்றி. அரசியலமைப்புச் சட்டத்தின்படி, 1955 ஜூன் 7 அன்று ஆட்சி மொழிக் குழு பி.ஜி.கேர் தலைமையில் அமைக்கப் பட்டது. குழுவின் அறிக்கை, 1956 ஜூலை 31 அன்று வெளிவந்தது. உறுப்பினர்கள் டாக்டர் சுப்பராயனும், பேராசிரியர் டாக்டர் சுனிதிகுமார் சட்டர்ஜியும் அறிக்கை முடிவுகளுக்குத் தங்கள் கவலையைத் தெரிவித்திருந்தார்கள். அறிக்கை முடிவுகளுக்கு எதிர் கருத்துகளைத் தெரிவித்திருந்த தமிழரான டாக்டர் சுப்பராயன், கேர் குழுவின் முடிவை 'வெறித்தனம்' என்றார். வங்கத்தின் சுனிதிகுமார் சட்டர்ஜியோ, 'இந்தி ஏகாதிபத்தியம்' என்றார்.

இந்தி ஆதரவாளர்களுக்கு கோ அறிக்கையின் 'டைமிங்' தவறாக அமைத்திருந்தது. காங்கிரஸுக்கோ, சொல்லவே வேண்டாம்! இலங்கையில் 1956 ஜூன் மத்தியில் வெடித்த இனக் கலவரத்தில் நூறு தமிழர்கள் மாண்டிருந்தனர். இருபத்தைந்து உடல்கள் கண்டெடுக்கப்பட்டபோது அண்ணா எழுதினார்: 'தம்பி, அங்கே தமிழர் சடலங்கள்! அவர்கள் யாருடைய குழந்தைகளாக இருக்கக் கூடும்? எத்தனை குழந்தைகளை விட்டுச்சென்று இருக்கிறார்கள்... அங்கே காட்டாட்சி நடக்கிறது; நம் தாய்நாடு இங்கே இருக்கிறது. ஒரு தமிழர், காமராஜர்தான் ஆள்கிறார்... ஆனால், தமிழ்த் தாயின் விசும்பல்கள் அவர் செவியில் விழுவதில்லை.'

தமிழ்நாட்டிலும் மகிழ்ச்சி கொள்ளும்படியான நிலைமை இல்லை. மொழி வழிச் சீரமைப்பினால் சென்னை ராஜதானியின் தமிழ்ப் பகுதிகள் சென்னை மாநிலமாக உருவாக இருந்தது என்றாலும், தேவிகுளமும் பீர்மேடும் கேரளாவுக்கு போகவிருந்ததை அண்ணா காங்கிரஸின் 'நம்பிக்கை துரோகம்' என்றார். உலக அளவில் மெட்ராஸ் என்ற பெயரே அதிகம் அறியப்பட்டதால், மாநிலம் 'மெட்ராஸ்' என்றே அழைக்கப்படும் என்று காமராஜர் வலியுறுத்தியது மேலும், தமிழர்களின் உற்சாகத்தைக் குறைத்திருந்தது. காமராஜரின் உணர்வின்மையைக் குறை கூறினார் அண்ணா:

"தமிழ்நாடு என்று சென்னை ராஜ்யத்துக்குப் பெயர் இருக்கவேண்டும் என்று, நாட்டில் உள்ள எல்லாக் கட்சிகளும் கூறுகின்றன. அவருடைய சகாக்களேகூடத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் கூறுகிறார்கள். ஒரு துளி பரபரப்பு, சிறிதளவு மன எழுச்சி, கொஞ்சம் ஆர்வம் தெரிகிறதா? இல்லை, இல்லை! 'தமிழ்நாடு என்று பெயரா? ஏனாம்? அதற்கென்ன இப்போது அவசரம்? தெலுங்கரும், மலையாளிகளும் சென்னை ராஜ்யத்தை தமிழ்நாடு என்றுதான் அழைப்பார்கள்! நாமே நம்மைத் தமிழ்நாடு என்று அழைத்துக்கொள்ள வேண்டுமா?' என்று கேட்கிறார்."

1956 ஜூலை இறுதியில், சங்கரலிங்க நாடார் தமிழ்நாடு என்று பெயரிடக் கோரியும் உண்ணாவிரதம் தொடங்கியபோதும்கூட காமராஜர் மசியவில்லை. காந்தியவாதி சங்கரலிங்கனார், தன்னைக் காணவந்த அண்ணாவிடம், "நான் சாவதனாலாவது..." என்று கண்ணீர் மல்கக் கூறியிருந்தார். சங்கரலிங்கனார் போட்டது தப்புக்கணக்கு. 1956 அக்டோபர் 13 அன்று, 77 நாள் உண்ணாவிரதம் சங்கரலிங்கனாரைக் கொன்றபோது, 'ஒரு பெரியவர், உண்ணாவிரதம் இருந்து, சாகக் கண்டும் முதலமைச்சரின் மனம் இளகவில்லை! கண்டோமே!' என்று அண்ணா எழுதினார்.

அண்ணாவுக்கு நேருவும் அப்படித்தான் இதயமற்றவராகத்

தெரிந்தார். நவம்பர் 1956-ல் ஒரு பெரிய புயல் தாக்கி தமிழகத்தை நாசம் செய்திருந்தபோதும் நேரு அபலைகளைப் பார்வையிட வில்லை. "பண்டித நேரு - சந்தோஷம் கொண்டாட தமிழ்நாட்டுக்கு வருகிறார்! எம்.எஸ்.சுப்புலட்சுமியை அவர் வீட்டில் போய்ப் பார்த்து வருகிறார். ஆவடிக்கு வந்தபோது அதற்கு நேரம் கிடைத்தது! புயலால் - வெள்ளத்தால் - விபத்தால் அழுகுரல் எழும்போது அவருக்கு நேரம் கிடைக்கவில்லை போலும்..! சங்கீதம் கேட்கவும், நாட்டியம் காணவுமான நிகழ்ச்சிகளுக்கு வருகிறார். அழுகுரல் எழும்போது வருவதில்லை. இவரை எப்படி நாம் நம்மவர் என்று ஏற்றுக்கொள்வது?" என்றார் அண்ணா.

நேருவைப் பற்றிய அண்ணாவின் விமரிசனம் இப்படிக் கடுமையாக இருந்ததென்றால், தங்கள் பங்குக்கு நேரு அபிமானிகள் அண்ணா 'புரட்சியாளர்' என்று கொண்டாடப்படுவதை ஆபாசம் என்றனர். தி.மு.க-வினரோ தங்கள் இயக்கம் புரட்சி செய்யப் பிறந்த விடுதலை இயக்கம் எனப் புகழ்பாடினர். அப்படிப்பட்ட தம்பிகளுக்கு அண்ணா - இத்தாலியின் கரிபால்டி, துருக்கியின் கமால்பாட்சா, அமெரிக்க சிந்தனையாளர் ராபர்ட் இங்கர்சால் ஆகியோரின் கலவையாகத் தெரிந்தார்.

ஸெலிக் ஹாரிசன், "அண்ணாதுரையின் ஆதரவாளர்கள் அவரை 'திராவிட மாவோ' என்று சொல்வது மிகையாகத் தோன்றினாலும், அவர் சக்திவாய்ந்த பேச்சாளர். இந்தப் பகுதியில் மக்கள் செல்வாக்குப் பெற்ற ஒரே தனிப்பெரும் தலைவர்" என்றார். நேரு அபிமானி ஜெயகாந்தனால் இதையெல்லாம் சகித்துக்கொள்ள முடியவில்லை. அண்ணா மறைந்து ஆறு வருடங்களுக்குப் பிறகு, 1975-ல், 'பரிதாபத்துக்குரிய தமிழகத்தில் நேருவை எதிர்த்து வளர்ந்துகொண்டிருந்த கூட்டத்தின் தலைவராக உயர்ந்திருந்த அண்ணாதுரையை அவரது தம்பிமார்கள் 'கமால்பாட்சா' என்று பாராட்டிக் கொண்டிருந்தனர். இந்த அவலத்தைக் கண்டு நான் சிரித்தேன். ஆனால் அதேசமயத்தில், இந்தக் கூட்டம் வளர்வதைப் பார்த்து நான் வயிறெரிந்தேன்' என்று எழுதினார் ஜெயகாந்தன்.

'புயல் தாக்கி' வீழ்ந்த சிவாஜி கணேசன்

நேருவைப் பற்றிய அண்ணாவின் விமரிசனம் நயமாக இல்லாமல்போனாலும், ஒரு சராசரி மனிதனின் மனநிலையைப் பிரதிபலித்தது. நேருவை அக்கறையற்றவர் என்று காட்டிய புயல் தி.மு.க.வையும் விட்டுவைக்கவில்லை. புயலால் பாதிக்கப் பட்டோருக்கு தி.மு.க. திரட்டிய நிவாரண நிதி, சிவாஜி கணேசனுக்கும் கட்சிக்கும் இடையே ஒரு பிளவை உண்டுபண்ணியது. அதிக வசூல் செய்தது சிவாஜி கணேசன். ஆனால், பாராட்டை

வசூலித்தவர் எம்.ஜி.ஆர். 'பைத்தியம் பிடித்தவன் போல்' ஆனார் சிவாஜி கணேசன்:

மாலை ஆறு மணியளவில் பாராட்டுக் கூட்டம் நடக்கிறது. அப்போதுதான் முதன் முதலில் எம்.ஜி.ஆரைக் கூட்டிச் சென்று, அந்தக் கூட்டத்தில் மேடையேற்றி கௌரவிக்கிறார்கள். அதிகமாக நிதி வசூலித்தவன் நான்தான். ஆனால் எம்.ஜி.ஆர். அவர்களை அந்தக் கூட்டத்தில் மேடை ஏற்றிப் பாராட்டுகிறார்கள்!

'எங்கே கணேசன், வரவில்லையா?' என்று அண்ணா அவர்கள் கேட்டிருக்கிறார். 'இல்லை. கணேசன் வரமுடியவில்லை என்று சொல்லிவிட்டார்' என்று சிலர் அண்ணாவிடம் கூறியிருக்கிறார்கள். அப்போது அண்ணாவைச் சுற்றிக்கொண்டு ஒருசிலர் இருந்தார்கள். அவர்கள் எல்லாம் என்னை அண்ணாவிடமிருந்து கழட்டிவிட நினைத்தார்கள். அந்த நேரத்தில் கலைஞர் அவர்களும்கூட அங்கு இருந்தார்கள். அவ்வளவு நெருக்கமாக இருந்தும் 'கணேசனைக் கண்டிப்பாகக் கூப்பிடுங்கள்' என்று அவராலும் கூறமுடியவில்லை. பாவம், அவர் என்ன செய்வார்! இந்த அதிர்ச்சி என்னைப் பாதித்தது. நான் எல்லா அவமதிப்பையும் பொறுத்துக்கொண்டு, பொறுமையுடன் இருக்க முயன்றேன். ஆனால், இந்த நிகழ்ச்சியால் பைத்தியம் பிடித்தவன் போல் ஆகிவிட்டேன்.

பல நாட்கள் நான் மிகவும் வருத்தமாக இருந்தேன். ஒருநாள் என்னுடைய நெருங்கிய நண்பரான இயக்குநர் பீம்சிங் வந்தார். 'வாருங்கள், திருப்பதி போய்வரலாம்' என்றார். அதிகாலை நாங்கள் விஸ்வரூப தரிசனம் பார்த்தோம். 'தினத்தந்தி'யில் 'நாத்திக கணேசன் ஆத்திகனாக மாறினார்' என்று தலைப்புச் செய்தி வந்தது. என் போஸ்டரில் சாணி அடிப்பது, நான் எங்கே சென்றாலும் ஆசிட் வீசுவது, என் காரின் மீது கம்பியால் குத்துவது, கல்லால் அடிப்பது போன்ற மிருகத்தனமான கொடிய செயல்களைச் செய்துகொண்டிருந்தனர். இவையெல்லாம் திருப்பதி கோயிலுக்குச் சென்றதால் மட்டும் வந்ததில்லை. என்னை விலக்கிவைக்க வேண்டுமென்று நினைத்தார்கள்; விலக்கிவிட்டார்கள்.

அவ்வளவுதான்... என்னை தி.மு.க.காரர்கள் தூக்கிக் கொண்டுபோய் காங்கிரஸில் போட்டார்கள். நான் காங்கிரஸுக்கு போகக் காரணமாக இருந்தவர்கள் அவர்கள்தான். அன்று முதல் காமராஜர் அவர்கள் சாகும்வரை அவருடன் காங்கிரஸில்தான் இருந்தேன்.

நட்சத்திரங்களில் கணேசன் அல்ல, பின்னர் வந்து சேர்ந்த எம்.ஜி.ஆர்.தான் சூரியனாக ஜொலிப்பார் என்று சேலம் தெளிவுபடுத்தியது.

இதுவும் நல்லதற்கே. கணேசன், எம்.ஜி.ஆர்., தி.மு.க. என்று அனைவருக்கும் இந்தத் திருப்பம் சாதகமாகவே ஆயிற்று. தி.மு.க.வில் இருந்ததால் ஏற்காமல் போன பல வேடங்களை கணேசனால் இப்போது ஏற்று நடிக்க முடிந்தது. சிவபெருமானாகவும், அப்பராகவும், திரையில் மாறிய சிவாஜி கணேசன், இந்தியாவின் தலைசிறந்த நடிகரானார். எம்.ஜி.ஆர். தி.மு.க.வின் மூலதனமானார். எம்.ஜி.ஆரும் கட்சியும் ஒருசேர வளர்ந்தனர். 1957 தேர்தலில் சில பிரசாரக் கூட்டங்களில் எம்.ஜி.ஆர். பங்கு கொண்டார். தொலைவாகப் போய்விட்ட சிவாஜியை "எங்கிருந்தாலும் வாழ்க!" என்று அண்ணா மனதார வாழ்த்தினார். "கணேசன் கழகத்தை ஏணி போல் பயன்படுத்திக்கொண்டார்" என்றவரிடம் அண்ணா, "கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடிக்கவில்லை. சிவாஜி கணேசனும் அப்படித்தான்!" என்றார் பெரியமனதோடு. முதலமைச்சரான பிறகு, சிவாஜியைப் பாராட்டிய ஒரு விழாவில் இந்தக் கருத்தைப் பலர் அறியச் சொன்னார் அண்ணா.

சிவாஜியின் விலகல், கட்சியின் வளர்ச்சியையும் அதனால் விளைந்த போட்டா போட்டி, உட்கட்சித் தகராறுகள் ஆகியவற்றையும் எடுத்துக்காட்டுவதாக இருந்தது. 1957 ஜனவரி 31 அன்று, நேருவே சென்னையில் தி.மு.கழகத்தைப் பற்றி, "ஒன்று மட்டும் உறுதியாகக் கூறுகிறேன். வானமே இடிந்து விழுந்தாலும் இந்தியாவின் எந்த ஒரு பாகத்தையும், இந்தியாவிலிருந்து பிரித்துச்செல்ல விடமாட்டோம். இந்தியாவை எதுவும் பிரிக்கமுடியாது. இந்தியாவிலோ, இந்தியாவுக்கு வெளியிலோ எந்த சக்தியாலும் இந்தியாவைப் பிரிக்க இயலாது. இதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளட்டும். ஏற்கெனவே ஒரு பாகிஸ்தான் ஏற்பட்டுவிட்டது. இனியும் ஒரு பாகிஸ்தான் ஏற்பட விடமாட்டோம்!" என்று தி.மு.க.வினருக்கு மறைமுகமாக சவால் விடுத்தார். எனினும் தி.மு.க.வின் வளர்ச்சி காங்கிரஸுக்கு கவலையாக இருந்தது.

பெரியாரும் தம்மால் இயன்றதை காங்கிரஸுக்குச் செய்தார். அண்ணாவின் காஞ்சிபுரம் தொகுதிக்கே சென்று, காங்கிரஸ்

வேட்பாளருக்கு ஆதரவு கோரினார். அப்போது அவரை அறியாமல், சொல்லக்கூடாத இழிமொழிகளையெல்லாம் சொல்லித் தீர்த்தார். கம்யூனிஸ்ட்டுகளும், காங்கிரஸை விட்டுவிட்டு தி.மு.க. மீது பாய்ந்தனர். ஆனாலும், பத்திரிகைகள் அப்படி ஒரு தோற்றத்தை ஏற்படுத்தியதாகச் சொன்னது கம்யூனிஸ்ட்டு கட்சி. 'தமிழ்நாட்டில் நமது கட்சித் தலைவர்களின் முக்கியமான உரைகளைக் கட்சிப் பத்திரிகை வெளியிட்ட விதமானது, காங்கிரஸுக்குப் பதிலாக தி.மு.க.வை நமது பிரதான தாக்குதல் இலக்காக ஆக்கியிருப்பது போல் ஓர் எண்ணப் போக்கைத் தோற்றுவித்துவிட்டது' என்றது. 'தி.மு.க. திராவிட நாடு என்று கோருவது, தமிழ்நாட்டு முதலாளிகள் ஆந்திரப் பகுதியையும், மலபார், கன்னடப் பகுதிகளையும் சுரண்டுவதற்காகத்தான் என்ற எண்ணம் அந்த மக்களிடையே ஏற்படாமல் இருக்கமுடியுமா?' என்று தன் பங்குக்கு பி.ராமமூர்த்தி கேள்வி எழுப்பினார். எனினும், தி.மு.கழகம் பாகிஸ்தானிடம் லட்சம் ரூபாய் வாங்கிக்கொண்டு தேர்தலில் ஈடுபடுவதாக அவர் சொன்னது, 'மனமறிந்த பொய்' என்றார் கலைஞர் கருணாநிதி. இந்தியா, ராணுவச் செலவுகளைக் குறைத்து, அந்தப் பணத்தை வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என தி.மு.க.வினர் சொன்ன கருத்தைக்கு பி.ராமமூர்த்தி அப்படி கூறிவந்தார்.

'பொய்'த்தாக்குதல்கள்கூட தி.மு.க.வுக்கு உதவின என்றாலும், ராமமூர்த்தியுடன் வாதாட அண்ணா விரும்பவில்லை. "கம்யூனிஸ்ட்டுகள் தப்புக்கணக்குப் போட்டுப் போட்டு, பின்னர் திருத்திக்கொள்வது அவர்களின் தலைசிறந்த கொள்கைகளிலே ஒன்றாக இருப்பதால், சீக்கிரத்தில் உண்மைநிலை உணர்ந்து திருந்துமாறு அவர்களை வேண்டுகிறேன்" என்று 24.4.57 அன்று பொன்மலையில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் தெரிவித்தார் அண்ணா. அவரைப் பொறுத்தவரை, தி.மு.கழகம் ஒரு விடுதலை இயக்கம்.

"பிற கட்சிகள் நாங்களும் அமைச்சர்களாகக் கூடும், ஆகவேண்டும், ஆக விரும்புகிறோம் என்று சொல்கின்றன. தி.மு.க., நாங்களும் அமைச்சர்களாக முடியும் என்று சொல்கின்ற கட்சி அல்ல. எங்களுக்கென்று ஒரு தாயகம் இருந்தது. அந்த நாட்டினுடைய துரைத்தனம் எங்களிடத்திலே இல்லை. அது ஆயிரம், ஆயிரத்தைந்நூறு மைல்களுக்கு அப்பால் இருக்கிற டெல்லி புதிய பாதுஷாக்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டது. அதைத் திரும்பப் பெற்றுத் தாயகத்தைத் தனித் தரணியாக்கித் தன்னாட்சி செலுத்துவதற்கு நாங்கள் ஏற்பட்டிருக்கின்றோம்" என்றார் அண்ணா.



அண்ணா முதலமைச்சர் ஆனபிறகு,
தன் தாயை வணங்கி வாழ்த்து பெற்றார்.

தேர்தலும், சட்டசபை நுழைவும்

எனினும், கட்சியின் தேர்தல் அறிக்கையில், 'திராவிட நாடு' இடம்பெறவில்லை. மாறாக மாநில சுயாட்சி பேசியது அறிக்கை. மாநிலங்களுக்கு அரசியல் சமத்துவம், மைய அரசின் அதிகாரங்களுக்கு உச்சவரம்பு, தொழில்களை தேசியமயமாக்குதல், ஐந்தாண்டுத் திட்டங்களில் தெற்குக்குப் பாரபட்சம் காண்பிப்பதை முடிவுக்குக் கொண்டுவருவது, நிலச்சீர்திருத்தம், தாய் மொழிக் கல்வி என்று பல கோரிக்கைகளைக் கட்சி முன்வைத்தது.

தி.மு.க. வேட்பாளர்கள் 124 பேர் சட்டமன்றத் தேர்தலுக்கும், 11 பேர் நாடாளுமன்றத் தேர்தலுக்கும் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டனர். அதற்குமுன்னர், நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில் ஐந்து பேர் கொண்ட குழு மாநிலத்தில் சுற்றுப் பயணம் செய்து தேர்தல் வாய்ப்புகள் குறித்து ஆராய்ந்தது. 1957 பிப்ரவரி 10 அன்று சென்னையில் தேர்தல் மாநாட்டில் "வாழ்ந்த இனம் வீழ்ந்து கிடக்கிறது. அதை மீண்டும் எழச்செய்யும் முயற்சியே தி.மு.க. தேர்தல் ஈடுபாடு!" என்றார் அண்ணா. 'வடக்கு வாழ்கிறது;

தெற்கு தேய்கிறது', 'காகிதப்பூ மணக்காது; காங்கிரஸ் சோஷலிஸம் இனிக்காது' என்ற காங்கிரஸின் சோஷலிஸக் கொள்கைகளுக்கு எதிரான அண்ணாவின் வாசகங்கள் மக்களைக் கவர்ந்தன. 1955 ஆவடி அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் 'சோஷலிஸ பாணி சமுதாயம் அமைப்போம்' என்று காங்கிரஸ் சொல்லியதை இவை குத்திக்காட்டின. "பெரும் நிலப்பிரபுக்களும், கோடீஸ்வரர்களான தொழிலதிபர்களும் வெளிநாட்டு முதலாளிகளுடன் கூட்டாகப் பெருந்தொழில் நடத்துபவர்களும் காங்கிரஸில் கூடி நின்று ஜனநாயக சோஷலிஸம் பேசுவது, இருபதாம் நூற்றாண்டின் இணையில்லாத அரசியல் மோசடி" என்றார் அண்ணா. இருந்தாலும் அரசியல் நாகரிகம் அறிந்த அண்ணா, காமராஜர் போட்டியிட்ட விருதுநகர் தொகுதியில் அவரை எதிர்த்து பிரசாரம் செய்யவில்லை. இத்தனைக்கும் அப்போது அங்கே காமராஜர் ஜெயராம் ரெட்டியாரின் வடிவில் கடுமையான போட்டியைச் சந்தித்தார். அண்ணா, காமராஜரை எதிர்த்து என்றுமே பிரசாரம் செய்ததில்லை!

ஆனால், அரசியல் சாதுர்யரான அண்ணா, அதை சுட்டிக்காட்டத் தவறவில்லை:

> நானோ, ஆசைத்தம்பியோ, அன்பழகனோ, சம்பத்தோ, கருணாநிதியோ, கண்ணதாசனோ, சிற்றரசோ, சண்முகமோ, சத்தியவாணியோ, நடராஜனோ யாராவது சாத்தூர் சென்றோமா? ரெட்டியார் நல்லவரோ கெட்டவரோ, ஒருபுறம் அது கிடக்கட்டும்.
>
> சங்கரலிங்கனாரைச் சாகடித்தவருக்கு, சென்னைக்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்காதவருக்கு, தேவிகுளம் - பீர்மேடு பறிகொடுத்தவருக்கு, வோட்டுப் போடாதீர்கள்! என்று பேசி இருக்கக் கூடாதா? நம்முடைய பிரசாரம் அங்கும் மும்முரமாகி இருந்தால் காமராஜரின் வெற்றிக்கு ஆபத்து ஏற்பட்டிருக்காதா? நேர்மைக்கு இடம் தருபவர்களை நெஞ்சில் கை வைத்துச் சொல்லச் சொல்லுங்கள்... அரசியல் நாகரிகம் நம்மை சாத்தூர் பக்கம் போகவிடாமல் தடுத்தது! ஆனால் அவர்?

தி.மு.க.வுக்கு சட்டமன்றத்தில் 16,53,435 வோட்டுகளும், பதினைந்து இடங்களும் கிடைத்தன. "நான் குறைந்தது 30 இடங்களாவது கிடைக்கும் என்று கணக்கிட்டிருந்தேன்" என்றார் அண்ணா.



எம்.ஜி.ஆர், அண்ணா

தமிழகத்தின் அரசியல் வரலாறு தி.மு.க. பக்கம் சாய்வதை முதன்முதலாகத் துல்லியமாக எடுத்துக்காட்டிய 1957 தேர்தல் வெற்றிக்குப் பின்னால் இருந்தோரை, கம்யூனிஸ்ட்டு கட்சி தமிழ்நாடு கமிட்டியின் ஐந்தாவது மாநாட்டு அறிக்கை அடையாளம் காட்டியது:

> இவர்களுடைய சமூக அஸ்திவாரத்தைப் பின்வருமாறு நிர்ணயிக்கலாம். கிராமங்களில் பணவசதியுள்ள விவசாயிகளின் பிள்ளைகள்; பள்ளிப் படிப்பு முடித்து கிராமத்திலிருக்கும் இளைஞர்கள்; சில மத்தியதர விவசாயிகள்; சிறுதொழில் நடத்துபவர்கள்; மாணவர்கள்; ஸ்தாபனரீதியாகத் திரட்டப்படாத நகர உழைப்பாளிகளில் ஒரு பகுதி; சர்க்கார் சிப்பந்திகளில் கணிசமான பகுதி; பள்ளி உபாத்தியாயர்களில் ஒரு பகுதி; சிற்சில இடங்களில் ஹரிஜனங்கள். மேற்கூறிய பகுதிகளிடம் தி.மு.க. மேலும் பரவினால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கூட்டணியாக மட்டும் செயல்பட்டிருந்தால் எதிர்க்கட்சியினர் இன்னும் நிறைய இடங்களை வென்றிருக்கக்கூடும். மும்முனைப் போட்டிகளில் கம்யூனிஸ்ட்டுகள் காங்கிரஸுக்கு ஆதரவாக

இருந்தனர் என்றாலும், தி.மு.க.வுக்குக் கிடைத்த குறைவான இடங்களுக்கு தங்களின் திறமை, தெளிவு, வசதி, அனுபவக் குறைவே காரணம் என்று அண்ணா மனமாற ஒப்புக்கொண்டார். நிதிக் குறைவுக்கு தன்னையே நொந்துகொண்டார்: "புரட்சி நடிகர் எம்.ஜி.ராமச்சந்திரன், நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ராமசாமி, லட்சிய நடிகர் ராஜேந்திரன், நடிகமணி டி.வி.நாராயணசாமி இவர்கள் இந்தத் தேர்தல் செலவுக்கென்றே ஒரு நல்ல நிதி திரட்டி உதவ வேண்டும் என்பதற்காக, ஒரு படத்தில் ஊதியமே பெறாமல் நடித்துத் தருவதாக முன்வந்தனர். நான்தான் அவர்கள் தரயிருந்த அரிய வாய்ப்பிபைப் பயன்படுத்தி, சில லட்ச ரூபாய்கள் கிடைப்பதற்கான வாய்ப்பைப் பெறத் தவறிவிட்டேன்!" என்று வருந்தினார் அண்ணா.

போடப்பட்ட வோட்டுகளுக்கு விகிதாசார வாக்கெடுப்பு முறை இல்லாததால், குறைவான இடங்களே தி.மு.க.வுக்கு கிடைத்திருந்தன. காங்கிரஸுக்கு தி.மு.க.வைவிட மூன்று மடங்கு (49,23,374) வோட்டுகள் கிடைத்து, தி.மு.க.வின் 15 இடங்களைவிட 45 இடங்கள் என்றில்லாமல், 151 இடங்கள் கிடைத்தன. அதாவது தி.மு.க.வைப் போல் பத்து மடங்கு அதிக இடங்கள். காங்கிரஸிலிருந்து பிரிந்து போட்டியிட்ட காங்கிரஸ் சீரமைப்புக் கட்சி பதினாறு இடங்களிலும், சுயேச்சைகள் பன்னிரண்டு இடங்களிலும், கம்யூனிஸ்ட்டுகள் நான்கு இடங்களிலும், சோஷலிஸ்ட்டுகள் இரண்டு இடங்களிலும், ஃபார்வர்ட் பிளாக் இரண்டு இடங்களிலும் வெற்றி அடைந்தன. காஞ்சிபுரம் தொகுதியில் அண்ணா 31,861 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். எதிரணி காங்கிரஸ் வேட்பாளர் டாக்டர் சீனிவாசன் பெற்ற வாக்குகள் 20,718. கலைஞர் கருணாநிதி, பேராசிரியர் அன்பழகன், ஏ.வி.பி.ஆசைத்தம்பி, எஸ்.சத்தியவாணி முத்து, ஏ.கோவிந்தசாமி மற்றும் எம்.பி.சுப்பிரமணியம் ஆகியோர் வெற்றி பெற்ற பதினைந்து பேரில் அடங்குவர். நாவலர் நெடுஞ்செழியனும், கண்ணதாசனும் தோற்றுப் போனார்கள். ஈ.வெ.கி.சம்பத்தும், திருவண்ணாமலை தர்மலிங்கமும் நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்கள். குறிப்பாக, தி.மு.க. சென்னை நகரிலும், வட ஆற்காடு - தென் ஆற்காட்டிலும், சேலத்திலும் அதிக அளவில் அறியப்பட்டிருந்ததால் அங்கு அதிக இடங்களை வென்றிருந்தது.

வெற்றி விழாக் கூட்டத்தில் 'நமது வெற்றி சாதாரண சம்பவம் அல்ல. நாம் பெரியதோர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு இருக்கிறோம்... நம்மை இன்று மற்றவர்கள் ஆராய்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது' என்றார் அண்ணா. 'தமிழக அரசியல் வரலாற்றில் புதியதோர் கட்டம்; நமது கழகத்தின்

வரலாற்றிலும் புதிய கட்டம்' என்று கட்சியின் சட்டமன்ற நுழைவை அண்ணா குறிப்பிட்டார்.

தி.மு.க.வின் சட்டசபை நுழைவு, நிலச்சீர்திருத்தம் மற்றும் பிற முக்கியமான பிரச்னைகளில் கட்சியை ஈடுபடச் செய்தது. ஆனால், முதுகுளத்தூர் பிரச்னை தி.மு.க. சட்டசபையில் முதல் முதலாகச் சந்தித்த சோதனையானது. 1957 செப்டம்பர் 11 அன்று, ஆதிதிராவிடத் தலைவர் இம்மானுவேல் படுகொலை செய்யப்பட்டார். அதற்கு முன்தினம்தான் தேவர் வகுப்பின் மரியாதைக்குரிய பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கும் அவருக்கும் வாக்குவாதம் நடந்திருந்தது. செப்டம்பர் 14 அன்று, கீழ்த்தூவல் கிராமத்துக்கு போலீஸார் சம்பந்தப்பட்டோரைத் தேடிப் போனபோது, நடந்த ரகளையில் ஐந்து தேவர் இனத்தவர் குண்டு பட்டு இறந்தனர். போலீஸ் வேண்டுமென்றே அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாக தேவர்கள் குறை கூறினர். காமராஜர் அமைச்சரவை மீது கம்யூனிஸ்ட்டுகள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தனர்.

தி.மு.க., தேவர்களையோ ஆதிதிராவிடர்களையோ பகைத்துக்கொள்ள விரும்பவில்லை. 'திராவிட நாடு' ஏடு சம்பவங்களை 'கறை' என்று விமரிசனம் செய்தது. ஆதி திராவிடர்களும் தேவர்களும் சமூகத்தின் கீழ்மட்டத்தில் இருப்பவர்கள் என்றும், ஒருகாலத்தில் தமிழினத்தின் ஒரே பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள் என்றும் சொன்னது. சட்டமன்றத்தில் பேச எழுந்த அண்ணா, "இந்தப் பிரச்னை சம்பந்தமாக, தான் பேசத் தேவையில்லை எனில் மகிழ்ச்சியாக இருந்திருக்கும்" என்று இரு பிரிவினரில் யார் பக்கமும் சாயாமல் இருக்க நினைத்த கட்சியின் நிலையை பிரதிபலித்தார். ஆனால், தீர்மானம் வாக்கெடுப்புக்கு வந்தபோது, தி.மு.க. வெளிநடப்பு செய்தது. " 'காமராஜ் நாடார் தலைமையில் இயங்கும்' என்ற அடைமொழி வேண்டாம் என்று சொன்னேன். 'இந்த மந்திரி சபை மீது நம்பிக்கை இல்லை' என்று பொதுவாக இருந்தால் போதும் என்று சொன்னேன். ஏனென்றால் வெங்கட்ராமன் தலைமையிலோ, பக்தவச்சலம் தலைமையிலோ, சி.சுப்பிரமணியம் தலைமையிலோ இந்த மந்திரி சபை இயங்கினால் நம்பிக்கை உண்டு என்பது மாதிரியாக அர்த்தம் கொடுக்கும் என்றும் சொன்னேன். ஆனாலும், அவர் (கம்யூனிஸ்ட்டு தலைவர் எம்.கல்யாணசுந்தரம்) என் பேச்சைக் கேட்கவில்லை. கடைசி விநாடி வரை வாதாடினேன். முதுகுளத்தூர் சம்பவங்களுக்குக் காரணம் காமராஜ் நாடாரும், பக்தவச்சலமும்தான் என்று அவர்கள் திரும்பத் திரும்பச் சொன்னார்கள்..." என்று காரணம் சொன்னார் அண்ணா.

தொடர்ந்து, "இந்தக் கலவரம் சம்பந்தப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தின் மீது நீதிமன்ற விசாரணை தேவையில்லை என்று கனம் அமைச்சர்கள் சொல்லும்போது 'அது தேவை' என்று வற்புறுத்த விரும்புகிறோம். ஆனால், அதை இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் வற்புறுத்துவோமானால், இரண்டு மந்திரிகளின் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதையும் வற்புறுத்துபவர்களாவோம். அப்படிச் செய்து அதன் விளைவுகளுக்கு கனம் அமைச்சர்களை உட்படுத்த விரும்பவில்லை" என்று 'டெக்னிகாலிட்டிஸ்' பேசினார் அண்ணா. அண்ணாவுக்கோ, தி.மு.க.வுக்கோ காமராஜர் மீதோ அவரது அமைச்சர்கள் மீதோ திடீரென அன்பு பெருக்கெடுத்து விடவில்லை. டெக்னிகாலிட்டிஸ் பேசி, கட்சி ஒரு மாதிரியாக எந்தக் கெட்ட பெயரும் சம்பாதித்துக்கொள்ளாமல் தப்பித்துக்கொள்ள, காமராஜர் பெயர் உதவியது. எனினும் தங்கள் சட்டசபை அனுபவமின்மையை ஈடுகட்டுவது போல ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் மொழி, கலாசாரம் தொடர்பாக தி.மு.க.வினர் வெளுத்துக் கட்டினர். பேரவையின் முதல் கூட்டத்திலேயே ஆளுனருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுகையில் க.அன்பழகன், சென்னைக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்க வேண்டுமென வற்புறுத்தி ஒரு திருத்தம் கொண்டு வந்தார். ஆனால், (ஆட்சியைப் பிடிக்கிறவரை) 1967 வரை அதற்காக காத்திருக்க வேண்டியிருந்தது. "திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட அனைத்துத் திருத்தங்களையும் நாங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆனால் 'தமிழ்நாடு என்று பெயரிட வேண்டும்' என்ற திருத்தத்தின் மீது மட்டும் வோட்டெடுப்பு நடத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்" என்றார் அண்ணா. பின்னர் வோட்டெடுப்பு நடந்தது. ஆதரவாக 42 உறுப்பினர்களும், எதிர்த்து காங்கிரஸ் கட்சியினர் 127 உறுப்பினர்களும் வாக்களித்ததால், தி.மு.க.வின் தீர்மானம் தோற்றது.

ஆக்கபூர்வமான எதிர்க்கட்சி

அண்ணாவும், தி.மு.க.வும் சட்டசபையில் நுழைந்ததை வரவேற்று 'ஆனந்த விகடன்', 'சட்டசபையில் இனி ஒரு புது விழிப்பு ஏற்படும். கேள்விகளும் மந்திரிகளின் பதில்களும் காரசாரமாக இருக்கும். அண்ணாதுரை என்ன சொல்கிறார் என்பதைப் பொதுமக்கள் அக்கறையுடன் கவனிப்பார்கள். தமிழர் நலத்துக்கான காரியம் போட்டி போட்டுக்கொண்டு செய்யப்படும். அந்த முறையில் அண்ணாதுரையின் வெற்றியை வரவேற்கிறோம்' என்று எழுதியது.

சபாநாயகரைத் தேர்வு செய்தபின் அவரை வரவேற்றுப் பேசிய அண்ணாதுரை, "உங்களுக்குத் தெரியும், நாங்கள் விசித்திரமான அரசியல் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். நாட்டிலுள்ள எல்லோரும் அறியவேண்டும். விசித்திரமான நிலைமைகள், விசித்திரமான கட்சிகளை உருவாக்கும்" என்று தி.மு.க.வின் விசித்திரத்துக்கு விளக்கம் சொன்னார்.

அண்ணாவின் தலைமையில், இந்த 'விசித்திர' அரசியல் கட்சி ஆக்கபூர்வமான எதிர்க்கட்சியாகவே செயல்பட்டது. காங்கிரஸ் அமைச்சரவையின் திறமையையும் நோக்கத்தையும் அண்ணா புகழத் தயங்கவில்லை. 'ஆனந்த விகடன்' மிகச் சரியாகக் கணித்தது போலவே, மாநிலத்துக்கு அதிகம் கேட்டுப் பெறத் தூண்டும் வகையிலேயே தி.மு.க.வின் செயல்பாடு அமைந்திருந்தது. 'எங்களைக் காரணம் காட்டியே நீங்கள் மத்திய அரசிடம் வேண்டியவற்றைக் கேட்டுப் பெறவேண்டும்' என்று தூண்டினார் அண்ணா. "தொழில் துறையில் நீங்கள் எங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஆட்சியாளரைக் கேட்டுக் கொள்கிறோம். நீங்கள் எங்களை ஆயிரம் குறை கூறுங்கள்; நாங்கள் அஞ்சமாட்டோம். ஆனால், நீங்கள் மத்திய அரசிடம் இப்படி ஒரு கூட்டம் இருக்கிறது என்று கூறிப் போராடி, நம்முடைய பகுதிக்கு உரிமையைக் கேட்டுப் பெறலாம்" என்றார்.

தமிழ்நாட்டில் பெரிய தொழிற்சாலைகள் அமையாததை அண்ணா வருத்தத்தோடு சுட்டிக்காட்டி, மத்திய அரசின் 2,000 கோடி ரூபாய் பட்ஜெட்டில், தெற்கே கணிசமாக ஏதும் செலவிடப்படவில்லை என்று கூறியவர்:

> நிதியமைச்சரின் உரையில் சென்ற ஆண்டு முதல் இந்த ஆண்டு வரை, எத்தனை லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கப்பட்டு இருக்கின்றன என்ற தகவல் இருக்கிறதா? இல்லை. தன்னுடைய பட்ஜெட்டில், எங்கள் நிதியமைச்சர் அத்தகைய விவரங்களைத் தருவார். ஆனால், அதில் சேலம் அலுமினியத் தொழிற்சாலை இருக்காது, இரும்பு மற்றும் அனல்மின் நிலையங்கள் இருக்காது, அணுக்கூடம் இருக்காது. மறைகளும், திருகாணிகளும் மட்டுமே இருக்கும். 'விருத்தாசலத்தில் எங்களுக்கு திருகாணி தொழிற்சாலை இருக்கிறது. பண்ருட்டியில் பீங்கான் தொழிற்சாலை, பத்தமடையில் பனையோலைத் தொழில் இருக்கிறது' என்றுதான் சொல்லுவார். மரியாதைக்குரிய நிதியமைச்சரையும்

ஆளும்கட்சி உறுப்பினர்களையும் கேட்கிறேன், இவ்வளவுதானா உங்கள் திறமை? நான் உங்களை மதிக்கிறேன். உங்கள் கட்சியினர் உங்களுக்கு ஏன் அதிகாரம் வழங்கக் கூடாது?

- என்று கேட்டார்.

ஆனால், அண்ணாவை மறுத்து ஜெயகாந்தன், 'பிற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் இந்தியாவிலேயே பஞ்சாபுக்குப் பிறகு தமிழகமே அதிகப் பலனும் வளர்ச்சியும், முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டத்தில் பெற்றது என்று புள்ளிவிவரக் கணக்கறிந்தோர் கூறினர்' என்று எழுதினார். "சுதந்திரத்தின்போது பதினான்காவது இடத்தில் இருந்த தமிழகம், பிறகு இந்தியாவின் தொழில் வளர்ச்சியில் மூன்றாவது இடத்தை அடைந்துவிட்டது" என்று ராமமூர்த்தியும் கூறினார். தமிழ்நாட்டு முதலாளிகள் தி.மு.க.வின் திராவிட நாடு கோரிக்கையைக் காட்டி வளர்ந்ததாகவும், அதனாலேயே தி.மு.க.வுக்கு நிதியுதவி அளித்ததாகவும் சொன்னார். தமிழ்நாட்டு முதலாளிகள் தி.மு.க.வினருக்குத் தொலைநோக்குப் பார்வையோடு நிதியுதவி அளித்தனரா என்பது சந்தேகமே. தி.மு.க.வுக்கும் ஆட்சி அதிகாரத்துக்கும் இருந்த நெடியதூரமே ராமமூர்த்தியின் வாதத்தை சத்தற்றதாக்குகிறது. காங்கிரஸோ தன் சாதனைகளைத் திறமையாக விளம்பரப்படுத்திக்கொள்ளத் தவறியது. தங்கள் ஆட்சியின் வளர்ச்சித் திட்டங்களே தங்களுக்கு விளம்பரமாக அமையும் என அவர்கள் எண்ணினரோ என்னவோ, காங்கிரஸின் ஆக்கபூர்வ பணிகளே, சாதனைகளே அதற்கு எதிரியானது. மக்களிடத்தில் அதிக எதிர்பார்ப்பைத் தூண்டிவிட்டு, அதைச் சந்திக்க இயலாத காங்கிரஸை செயல்திறனற்ற கட்சியாகக் காட்டியது இந்த எதிர்பார்ப்பு.

ஜெயகாந்தன் காங்கிரஸின் சாதனைகளை தி.மு.க.வினர் குறைத்துப் பேசியதாக வருந்தினாலும், காங்கிரஸ் அரசைப் புகழவேண்டும் என்றபோது அண்ணா தயங்கவில்லை. 1957 ஜூலை 17 அன்று கல்வி மானியக் கோரிக்கையின் மீது பேசும்போது, "இந்த அமைச்சரவையும் கட்சியும் பெருமிதம் கொள்ள வேண்டும். எந்த அமைச்சரவையையும் விட, இந்த அமைச்சரவையிடமிருந்து நாங்கள் இன்னும் அதிகம் எதிர்பார்க்கிறோம்" என்றார் அண்ணா. இன்னொரு சந்தர்ப்பத்தில், காமராஜர் அமைச்சரவையை தாராளமாகப் புகழ்ந்தபிறகு, "பல பிரச்னைகள் தீர்க்கப்படாமலே இருப்பதற்குக் காரணம், உங்களுக்கு அதிகாரமும் சுதந்திரமும் இல்லாதுபோனதால்தான்!" என்றார். "உணவுத் துறையில் மாநில அமைச்சர் ஒருவர் இருக்கையில், மத்தியில் இன்னோர் உணவு

அமைச்சர் இருக்கத் தேவை என்ன?" என வாதாடினார். "மாநிலங்களே ஏன் இந்தப் பிரச்னைகளைக் கையாளக்கூடாது?" என்று கேட்டார். ஒருங்கிணைப்புப் பணியை டெல்லி செய்தால் போதுமே என்றார். "எதற்கெடுத்தாலும் தேசிய அபிவிருத்தி கவுன்சிலுக்குத்தான் போக வேண்டியிருக்கிறது!" என்று மனம் புழுங்கினார்.

எதிர்க்கட்சியில் இருந்தாலும், முதலமைச்சரை அணுகி, தன்னுடைய தொகுதி நிலைமையை காமராஜரின் கவனத்துக்குக் கொண்டு செல்ல அண்ணா தயங்கவில்லை. காமராஜரும் பெருந்தன்மையோடு அவருடைய அழைப்பை ஏற்றுக்கொள்ளவே, அண்ணா தன் கட்சித் தொண்டர்களிடம், "காமராஜர் (காஞ்சிபுரம் தொகுதி) தண்டலத்துக்கு வருகிறார். கறுப்பு - சிவப்பு எங்கேயும் இருக்கக்கூடாது! என் பெயரைக் கெடுத்துவிடாதீர்கள்!" என்று உருக்கமாகக் கேட்டுக்கொண்டார். காமராஜரை வரவேற்றுப் பேசுகையில், "பெருந்தலைவர்கள் தொண்டே முக்கியம் எனக் கொண்டவர்கள். அவ்வளவு ஏன்? கட்சியே மக்கள் தொண்டு செய்வதற்குத்தானே! அப்படித் தொண்டுசெய்து சாதாரண ஊழியனாக இருந்து, பெருந்தலைவராக வரமுடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இருப்பவர் காமராஜர். அரசியல் கட்சிகள் ஒன்றையொன்று தாக்கிக்கொள்ளும் தருணத்தில், இந்த மாநாட்டில் காமராஜர் கலந்துகொண்ட அரசியல் பெருந்தன்மைக்கு, வரவேற்று நன்றி கூறுகிறேன்!" என்று நெஞ்சாற அண்ணா சொன்னார்.

நேருவின் வசவும், கழகத்தின் முடிவும்

1957-ன் பிற்பகுதியில் பெரியார் தீவிர போராட்ட மனநிலையில் இருந்தார். அரசியல் அமைப்புச் சட்டத்திலிருந்தே சாதியை விரட்டவேண்டி, பெரியார் கட்டளைக்கிணங்க அவரது திராவிடர் கழகத் தொண்டர்கள், 1957 நவம்பர் 26 அன்று சாதியைப் பாதுகாப்பதாக திராவிடர் கழகம் கருதிய அரசியலமைப்புச் சட்டப் பகுதிகளின் பிரதிகளை எரித்தனர். இதனால், சுமார் மூவாயிரம் பேருக்கு இரண்டு மாதங்கள் முதல் மூன்று வருடங்கள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. பெரியாரே மிகுந்த சலிப்புற்றிருந்ததாகத் தெரிந்தது. 1957 டிசம்பர் 14 அன்று தனது உரையில், பிராமணர்களுக்கு எதிராக வன்முறையைப் பயன்படுத்தச் சொன்னதாகப் பெரியாருக்கு ஆறு மாதச் சிறைத் தண்டனையும் கிடைத்தது. இந்தக் குற்றச்சாட்டைப் பெரியார் மறுத்தார். முன்னதாக, 1957 நவம்பர் 11 அன்று தேசியக் கொடியை எரிக்க எண்ணம் கொண்டிருந்த பெரியாரைக் கைது செய்ய வகை செய்யும் மசோதாவை எதிர்த்து அண்ணா, "பெரியாரைக்

கட்டுப்படுத்த கடுமையான சட்டம் கொண்டு வந்தால், தமிழகத்தில் லட்சக்கணக்கானோர் வருத்தப்படுவார்கள் என்பதை இந்த அரசு தெரிந்துகொள்ள வேண்டும்" என்றார். கிறிஸ்துவ மத புரட்சியாளர் மார்ட்டின் லூதர் 1520-ம் ஆண்டு, போப் ஜான் XII தன்னை கத்தோலிக்கத்திலிருந்து வெளியேற்றிய தடை ஆணையை மற்ற கிறிஸ்துவ சட்டங்களோடு விட்டன்பர்கில் எரித்ததை பெரியாரின் செய்கைக்கு முன்னுதாரணமாக காட்டினார் அண்ணா.

பெரியாரின் கவலையைப் போலல்லாமல், இந்தி மொழியைப் பயன்படுத்துவது குறித்த வகையில் அரசியலமைப்புச் சட்டத்தில் தி.மு.க.வுக்குச் சில கவலைகள் இருந்தன. அரசியல் கட்சியான தி.மு.கவைப் பொறுத்த அளவில், சமூகப் பிரச்னைகளைவிட, அரசியலே முக்கியமாகப்பட்டது. பெரியாரின் அதிரடி சீர்திருத்தப் பாதையிலிருந்து மெல்ல நழுவி, இந்தி மொழி மீது பாய்ந்தது தி.மு.க. 1957 செப்டம்பர் 21 அன்று திருவண்ணாமலையில் தி.மு.கழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. இந்தியை ஆட்சிமொழியாக்கும் ஷரத்தை அரசியல் சாசனத்தில் இருந்து நீக்கக் கோரியும்; 13.10.57-ல் நாடெங்கும் இந்தி எதிர்ப்பு நாள் கொண்டாட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதற்கிடையே, பெரியாரின் அதிரடி செயலைக் கண்டித்து, "கிழவரை நீண்ட காலத்துக்குச் சிறையில் வையுங்கள். அல்லது பைத்தியக்கார விடுதியில் தள்ளுங்கள். வெளியே விடாதீர்கள்!" என்று பிரதமர் நேரு கூறியது தி.மு.க.வினரிடம் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. "என்னுடைய நாட்டில் வந்து என்னைத் திட்ட இந்தக் காலிப்பயல் நேருவுக்கு என்ன உரிமை இருக்கிறது?" என்று பெரியார் திருப்பிக் கேட்டார். நேரு, இந்தியை எதிர்த்த ராஜாஜியையும் மற்ற தமிழறிஞர்களையும் பார்த்துப் "படுகிழங்கள்" என்றார். ஜனவரி 6-ம் நாள், ஆயிரக்கணக்கானோர் நேருவுக்கு கறுப்புக் கொடி காட்ட அவர் பயணம் செல்லும் பாதையில் காத்திருந்தனர். நேருவோ கடைசி நேரத்தில் வேறு வழியில் பயணம் செய்தார். கொடி பிடித்தோர் கொந்தளிக்க, போலீஸார் தடியடிப் பிரயோகம், கண்ணீர் புகைக்குண்டு தாக்குதல், துப்பாக்கி பிரயோகம் என இறங்க, பலர் காயமுற்றனர், இருவர் இறந்தனர். அந்த வாரத் துவக்கத்தில் அண்ணாவையும் இன்னும் சிலரையும் ஐந்து நாட்கள் தடுப்புக் காவலில் வைத்தனர். அரை நூற்றாண்டுக்குப் பின்னர், இப்போது யோசித்துப் பார்க்கையில், இந்த மாதிரி பிரச்னைகளில் கூட கட்சி எதிர்ப்பு தெரிவிக்கவும், கூட்டத்தைக் கூட்டி உணர்ச்சியைக் கிளப்பிவிடவும் பயன்படுத்த முடிந்ததை எண்ணி வியக்காமல் இருக்க முடியவில்லை.



கருணாநிதிக்கு கணையாழி அணிவித்தார் அண்ணா.

அதுபோலவே, 'இந்தி', தி.மு.க.வையும் மாநில காங்கிரஸையும் தற்காலிகமாக இணைக்க முடிந்தது என்பது வியப்பைத் தரலாம். 1958-ம் ஆண்டில், குவஹாத்தி நகரில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, மத்திய அரசின் ஆட்சிப் பணிகளுக்கு இந்தியைப் படிப்படியாக பயன்படுத்தவும், மத்திய அரசின் பணிகளில் ஆங்கிலத்தின் உபயோகத்தைக் குறைக்கவும் கோர் மொழி கமிஷன் பரிந்துரைத்ததை தீர்மானமாக ஏற்றுக்கொள்வதாக இருந்தது. இந்தி மொழி பேசாத மக்கள் பெரும்பான்மையாக வாழும் மாநிலங்களுக்கு, குறிப்பாகத் தமிழ்நாட்டுக்கு, இது கவலையளித்தது. 'அப்போது தமிழ்நாட்டில் மிகவும் பலமான இந்தி எதிர்ப்பு இயக்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இந்தத் தீர்மானம் தென் மாநிலங்களில் காங்கிரஸுக்கு விரோதமான சூழ்நிலையை உருவாக்கும் என்பதால், இதை எதிர்ப்பது என்று காமராஜர், சஞ்சீவ ரெட்டி, நிஜலிங்கப்பா, ஹனுமந்தையா ஆகியோரும் மற்றும் சிலரும் முடிவு செய்தனர்' என்று சி.சுப்பிரமணியம் எழுதியிருக்கிறார். மேலும், 'மொழிப் பிரச்னை குறித்து எல்லா அரசியல் கட்சிகளின் ஆதரவுடன் கூடிய ஒரு குறிப்பாணையை தமிழ்நாடு அரசின் சார்பில் சமர்ப்பிக்க

நான் விரும்பினேன். இந்தக் குறிப்பாணையைத் தயாரிப்பதற்கான சர்வகட்சிக் குழுவில் உறுப்பினராக இருக்குமாறு தி.மு.க. தலைவர் அண்ணாதுரையை நான் கேட்டுக்கொண்டேன். 'இந்தி மொழியை அறிமுகப்படுத்துவதை தி.மு.க. எதிர்க்கிறது. எனவே, எந்தவிதமான சமரசத்துக்கும் இடமில்லை. காங்கிரஸ் கட்சியும் தி.மு.க.வும் ஒருங்கே ஒப்புக்கொள்ளக்கூடிய பொது நிலை எதுவும் இருக்கமுடியாது' என்று அண்ணாதுரை வலியுறுத்திக் கூறினார். அவரது கருத்துகளில் அவர் உறுதியாக இருக்கலாம் என்றும், குறிப்பாணைத் தயாரிப்புப் பணியைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு காங்கிரஸுக்கும், தி.மு.க.வுக்கும் இடையே இசைவான நிலை ஏற்பட வாய்ப்பு இருக்கக் கூடும் என்றும் நான் அவரிடம் கூறி, சர்வகட்சிக் குழுவில் பங்கு கொள்ள அவரை ஒப்புக்கொள்ளுமாறு செய்தேன்' என்று குறிப்பிட்டிருக்கிறார் சி.சுப்பிரமணியம். 'சில பகுதிகளில் ஆங்கிலம் இல்லாமல் இந்தியை மட்டும் பயன்படுத்துவது சாத்தியம்' என்ற ஒரு பரிந்துரையும் அந்த அறிக்கையில் இருந்தது. "தமிழ்நாடு அரசினரும், தமிழக மக்களும் இதை ஒப்புக் கொள்ளவில்லை" என்கிறார் சி.எஸ்.

மத்திய அரசு, தமிழக சட்டசபையின் கருத்தைக் கேட்கும் என்று சி.சுப்பிரமணியம் நம்பிக்கையுடன் இருந்தார். ஆனால் அண்ணாவுக்கு அந்த நம்பிக்கை இருக்கவில்லை. ஆங்கிலம் பயன்படுத்த 1965 வரையறை குறித்திருப்பதை 'அபாயகரமானது, விபத்து நேரும்' எனக் கூறிய அண்ணா, மத்திய அரசோ அதன்பின்னர் வரும் ஆட்சியாளர்களோ அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவது மட்டுமே மொழிப் பிரச்னையில் எந்த ஆபத்தும் வராமல் தவிர்க்க உதவும் என்றார். எனினும், தி.மு.க. உறுப்பினர்கள் தவிர, மற்ற எல்லாக் கட்சியினரும் ஒரே முகமாகி, இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற தீர்மானத்தைத் தோற்கடித்துவிட்டனர்.

ஆனால், 'இந்தி பேசுகிறவர்களுக்கு ஆங்கிலம் எப்படியோ, அப்படித்தான் இந்தி பேசாத மக்களுக்கு இந்தி ஓர் அந்நிய மொழியே' என்ற ராஜாஜியின் ஆவேசமான அறிக்கை, கட்சிக்கு உற்சாகத்தைத் தந்தது. ராஜாஜி இப்போது புதிதாக உருவான சுதந்திரா கட்சிக்குத் தலைவராக இருந்தார். கம்யூனிஸ்ட்டுகள், 'வலதுசாரி பிற்போக்கு சக்தி' என்று சுதந்திராவை வர்ணிக்க நேருவோ, 'பிரபுக்கள், அரண்மனைவாசிகள், ஜமீன்தாரர்களின் காலத்தைச் சேர்ந்த, பாசிஸ நோக்குள்ள கட்சி' என்றார். ஆனால், பத்தாண்டுகளில் சுதந்திராவையும், கம்யூனிஸ்ட்டுகளையும் தனது தலைமையின் கீழ் அமைந்த கூட்டணியில் ஒன்று சேர்த்து அதிசயப்படுத்தினார் அண்ணா.

சென்னை மாநகராட்சியைக் கைப்பற்றியது தி.மு.க.

1959 ஜனவரியில் நடைபெற்ற சென்னை மாநகராட்சித் தேர்தலில் தி.மு.க. பெற்ற வெற்றி கட்சியினருக்குப் பெரும் மகிழ்ச்சியை அளித்தது. மாநிலத்தில் மற்ற இடங்களில் தி.மு.க. பெரிய வெற்றியடையவில்லை. ஐம்பத்தைந்து நகராட்சிகளில் இருபது நகராட்சிகளில் மட்டுமே, 350 இடங்களில் போட்டியிட்டு நாற்பது பேரே வெற்றி பெற முடிந்தது. இருந்தாலும் சென்னை வெற்றி மகத்தான உற்சாகத்தைத் தந்திருந்தது. சென்னையில், நூறு இடங்களில் காங்கிரஸுக்கு 37 இடங்களும், தி.மு.க.வுக்கு தொண்ணூறு இடங்களில் 45 இடங்களும் கிடைத்தன; பெரும்பான்மை எண்ணிக்கை பெற ஆறு இடங்கள் குறைவாக இருந்தன. கம்யூனிஸ்ட்டுகளுக்கும் பிரஜா சோஷலிஸ்ட்டுகளுக்கும் இரண்டு இடங்கள் வீதம் கிடைத்தன. சோஷலிஸ்ட்டு கட்சிக்கு ஓர் இடமும், சுயேச்சைகளுக்கு 13 இடங்களும் கிடைத்தன. முஸ்லிம் லீக் தலைவர் அப்துல் சமது சுயேச்சையாகப் போட்டியிட்டாலும், தி.மு.க. ஆதரவுடன் நின்று வென்றிருந்தார். கட்சியின் வெற்றி சொல்லிக்கொள்ளும்படியாக இருந்தபோதும், மேயர் பதவியைக் கட்சி பெறுவதில் அண்ணா தயக்கம் காட்டினார். மற்ற கட்சித் தலைவர்கள் அண்ணாவின் கருத்துக்கு எதிரான எண்ணம் கொண்டிருந்தனர். சென்னையிலிருந்து வெளியான 'மெயில்' பத்திரிகைகூட ஜனநாயகப் பொறுப்பை தி.மு.க. ஏற்காமல் தவிர்க்கக்கூடாது என்று எழுதியது. 1959 ஜனவரி 15 அன்று நடந்த வெற்றி விழாக் கூட்டத்தில், தி.மு.க. நிர்வாகத்தை ஏற்கவேண்டுமா, வேண்டாமா என்று மக்களிடமே கையை உயர்த்தச் சொல்லிக் கேட்டுக்கொண்டார். அண்ணா தனது நிதானப் போக்கை நியாயப்படுத்தும் வகையில் "நான் அரசியலில் மிகுந்த பொறுமைசாலி. பழம் பழுக்கும் வரை காத்திருப்பேன்; பழுத்ததும் வேறு யார் கையிலும் விழுந்துவிடாமல் பார்த்துக்கொள்வேன். பழுத்துவிட்டால் அது என் மடியில்தான் விழவேண்டும்!" என்றார். கூட்டம் ஆர்வத்துடன் கையை உயர்த்த... தி.மு.க.வை மேயர் பொறுப்புக்கு ஆதரிக்குமாறு எதிர்க்கட்சிகளைக் கேட்டுக் கொண்டார் அண்ணா.

பின்னர், கட்சி வழக்கறிஞர் வி.பி.ராமனின் இல்லத்தில், எம்.ஜி.ஆரை அண்ணா அவரிடம் அழைத்துவரச் சொன்னார். சில வீடுகள் தள்ளி வசித்து வந்த எம்.ஜி.ஆரை., "இதற்கு நிறைய முயற்சி தேவைப்படுகிறது. நீங்கள்தான் எங்களுக்கு உதவ வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார் அண்ணா. அப்போது எம்.ஜி.ஆருக்குப் பெரும் திரளாகக் கூட்டம் வரத்தொடங்கியிருந்த நேரம். தி.மு.க. கொடியுடன் எம்.ஜி.ஆர். தோன்றிய 'நாடோடி மன்னன்'

திரைப்படம் மிகப்பெரிய வெற்றியைத் தந்தபிறகு, கட்சியில் அவருடைய செல்வாக்கு பெருமளவுக்கு உயர்ந்து கொண்டிருந்தது. "இது வெற்றியடைந்தால் நான் மன்னன்; இல்லையென்றால் நான் நாடோடி" என்று முன்னர் எம்.ஜி.ஆர். கூறியிருந்தார். அண்ணாவின் திராவிட நாட்டை நாடோடி மன்னன் காட்டியது. எம்.ஜி.ஆர். ரசிகர்களில் பலர் 'நாடோடி மன்னனை' மீண்டும் மீண்டும் பார்க்க தங்கள் ரத்தத்தை விற்றுப் பணம் தேடிக்கொண்டிருந்தனர். 'நாடோடி மன்னன்' வெற்றி விழா 1958 அக்டோபர் 16-ல் மதுரையில் நடந்தது. எம்.ஜி.ஆருக்கு நாவலர் நெடுஞ்செழியன் 800 கிராம் எடையுள்ள தங்க வாளை, மதுரை தமுக்கம் மைதானத்தில் சுமார் இரண்டு லட்சம் மக்கள் முன்னிலையில் வழங்கினார். "இந்தத் திரைப்படத்தின் வெற்றி, நான் சார்ந்திருக்கும் தி.மு.க.வின் வெற்றி" என்றார் எம்.ஜி.ஆர்.

அந்தச் சமயத்தில்தான் ஸ்டான்லி க்ராமர் இயக்கிய, காரி கிராண்ட், ஃபிராங்க் சினாட்ரா, மற்றும் சோஃபியா லாரன் நடித்த 'ப்ரைட் அண்ட் பாஷன்' (1957) சென்னையில் திரையிடப்பட்டிருந்தது. அந்தப் படத்தைக் குறிப்பிட்டுவிட்டு, "அந்த மாதிரி நாலே நாலு படங்களைத் தணிக்கை செய்யாமல் திரையிட அனுமதித்தால் திராவிட நாட்டை நாங்கள் அடைந்துவிடுவோம்!" என்றார் அண்ணா. நாடோடி மன்னனைப் பற்றியும் சென்னையில் நடந்த படத்தின் 100-வது நாள் கொண்டாட்டத்தின்போது (1958 நவம்பர் 30), "மரத்தின் உச்சியில் ஒரு பழம் இருந்தது. அது எனக்குக் கிடைக்குமா என்று நான் நினைத்துக் கொண்டிருந்தபோது, அது என் மடியில் வந்து விழுந்தது. நான் அதை என் இதயத்தில் தாங்கிக் கொண்டேன். இதுதான் என் இதயக்கனி!" என்று எம்.ஜி.ஆருக்கு அண்ணா புகழாரம் சூட்டினார்.

அண்ணா, மாநகராட்சித் தேர்தலில் தன்னிடம் கேட்ட உதவியை செய்யத் தயாரானார் அவரின் 'இதயக்கனி'. க.ராசாராமை தொடர்புகொண்ட எம்.ஜி.ஆர். தி.மு.க. பெரும்பான்மை பெற, அவரை சென்னை கவுன்சிலர்களின் ஆதரவைத் திரட்டித் தருமாறு கேட்டுக் கொண்டார். மேயர் தேர்தலுக்கு நான்கு நாட்கள் முன்பாகவே சென்னையில் வந்து தங்கினார் அண்ணா. தி.மு.க.வுக்கும் கம்யூனிஸ்ட்டுகளுக்கும் ஓர் உடன்பாடு ஏற்பட மேயர் தேர்தல் வழி வகுத்தது. கோவை மேயராக கம்யூனிஸ்ட்டு வேட்பாளரை தி.மு.க. ஆதரிக்கவே, அதற்குப் பதிலாக சென்னையில் கம்யூனிஸ்ட்டுகள் தங்கள் ஆதரவை தி.மு.க.வுக்குத் தந்தனர். இதன் விளைவாக அ.பொ.அரசு சென்னையில் தி.மு.க.வின் முதல் மேயர் ஆனார். தமிழகத்தின் தலைநகர் நிர்வாகத்தைக் கட்சி பெற்றது, அதற்குத் தனி அந்தஸ்தை அளித்தது. இந்த தி.மு.க. - கம்யூனிஸ்ட்டு

கூட்டுறவு, கே.ஆர்.ராமசாமி மேலவைக்கும், பி.ராமமூர்த்தி ராஜ்யசபாவுக்கும் தேர்ந்தெடுக்கப்படவும் உதவியது.

தி.மு.க.வின் நகர நிர்வாகத்தைப் பொறுத்தவரை, கட்சி 'பணக்காரர்களிடமிருந்து வரிகளைப் பெற்று ஏழைகளுக்கு உதவும்' என்று அண்ணா கூறினார். நீண்ட நாட்களாகத் திட்டமிடப்பட்டிருந்த கிருஷ்ணா, பென்னையாறு திட்டங்களைக் கட்சி நிர்வாகம் முடுக்கிவிடும் என்றார். ஆனால் அடுத்த ஆண்டே, நிதி திரட்டும் அதிகாரங்கள் எல்லாம் மாநில அரசிடம் முடங்கிக் கிடப்பதால், மாநகராட்சியின் கைகள் கட்டிப் போடப்பட்டு இருக்கின்றன என அண்ணா கூறினார். ஆனால் கட்சிக்குள்ளேயே பல நிலைகளில் பிரச்னைகள் எழுந்து, அவை ஏழு வருடங்களுக்குப் பின்னர் மாநகராட்சி நிர்வாகத்தில் தலைகாட்டத் துவங்கின. 'தேசத்துக்காகவும் கட்சிக்காகவும் தியாகங்கள் பல செய்தவர்கள் எல்லாம் இருக்குமிடம் தெரியாமல் ஒருபக்கம் போக, இன்னொரு பக்கம் எந்தவிதமான தேசிய மரியாதைக்கும் லாயக்கற்றவர்களான தி.மு.க.வினர் பதவியும், அதிகாரமும் பெற்று காங்கிரஸுக்கு சவால் விட்டுத் திரிகிற கொடுமை சகிக்க முடியாததாக இருந்தது' என பின்னர் ஜெயகாந்தன் எழுதினார். அன்றாட வாழ்க்கைத் தேவைகளான குடிநீர், வடிகால், குப்பை அள்ளுதல் போன்ற அடிப்படைப் பணிகளில் ஈடுபாடு காட்டுவோரின் அணுகுமுறையும், திறனும் பொதுவாழ்க்கையில் கீழ்மட்டத்திலேயே இருந்தன. எனவே, ஜெயகாந்தன் 1975-ல் சொன்னார்: "சென்னை கார்ப்பரேஷனில் தி.மு.கழகத் தலைமையில் ஊழலே ஓர் ஒழுக்கமாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. தி.மு.கழகத்தின் அரசியல் நிர்வாகப் பிரவேசம் இந்த ஊழலுக்கு சமூக அந்தஸ்தையே தந்திருந்தது."

1959 மாநகராட்சித் தேர்தல் வெற்றி கட்சியினுள்ளும் மனப்புழுக்கத்தை கொண்டுவந்தது. அந்தத் தேர்தலில் சென்னையில் தி.மு.க.வுக்காக அதிகம் உழைத்தவர்கள் தானும், நடிகர் டி.வி.நாராயணசாமியும்தான் என்ற கண்ணதாசன் இப்படி எழுதினார்:

> தான் எதிர்பார்த்தது போல தி.மு.கழகம் பெரும்பான்மையாக வெற்றி பெற்றது. அண்ணாதுரையே திகைத்தார். ஏனென்றால் அவர் எதிர்பார்க்கவில்லை. வெற்றி பெற்ற பல கவுன்சிலர்கள் தமது கம்பெனிக்கே முதலில் வந்து தமக்கு நன்றி தெரிவித்துவிட்டுப் போனார்கள்' என்கிறார் கண்ணதாசன். தொடர்ந்து, 'கடற்கரையில் மாபெரும் பாராட்டுக் கூட்டம். வெற்றி பெற்ற கவுன்சிலர்கள்

வரிசையாக அமர்ந்திருக்கிறார்கள். நடுவில் அண்ணாதுரை. அவர் பக்கத்தில் கருணாநிதி. கவுன்சிலர்கள் அறிமுகப்படுத்தப்படுகிறார்கள். பலர் பாராட்டிப் பேசுகிறார்கள்; தேர்தலில் கடுமையாக உழைத்த தானும் மற்றவர்களும் அனாதை போல் ஒரு மூலையில் அமர்ந்திருந்தோம். கருணாநிதி பேசுகிறார். அந்த வெற்றிக்குத் தானே கஷ்டப்பட்டவர் போல பேசுகிறார். இவ்வளவு பேர் ஜெயிப்பார்கள் என்று ஏற்கெனவே தனக்குத் தெரிந்ததாகவே பேசுகிறார். அடுத்தாற்போல் அண்ணாதுரை சென்னை மக்களுக்கு நன்றி தெரிவிக்கிறார். காங்கிரஸை வீழ்த்திவிட்ட பெருமையைப் பேசுகிறார். வெற்றிக்காக உழைத்தவர்கள் பட்டியலைச் சொல்கிறார். அதில் என் பெயரும் வரும் என்று காத்துக்கொண்டு இருந்தேன். அப்படி ஒருவன் உலகத்தில் இருப்பதாகவோ, தேர்தலில் உழைத்ததாகவோ அவர் சிந்திக்கக்கூட இல்லை. அதுமட்டுமா அவர் செய்தார்? வர்ணனைகளோடு ஒரு விஷயத்தை ஆரம்பித்தார்: 'நான் என் மனைவிக்கு நகை வாங்கக்கூட கடைக்குச் சென்றதில்லை. எனக்கென்று நான் நகைக் கடை ஏறியதில்லை. இன்று மதியம், வேகாத வெயிலில் ஊரெங்கும் அலைந்து கடையெங்கும் தேடி வாங்கி வந்தேன் ஒரு கணையாழி. அந்தக் கணையாழியை இந்த வெற்றியை ஈட்டித் தந்த என் தம்பி கருணாநிதிக்கு அணிவிக்கிறேன்' என்றார். நான் கூனிக் குறுகிப் போனேன்.

பயன் கருதாத உழைப்பு, அரசியலில் எப்படி அலட்சியமாக ஒதுக்கப்படும் என்பதை அப்போதுதான் தான் கண்டதாகக் கூறினார். அண்ணா அவர் இதயத்திலிருந்து சரியத் தொடங்கினார். அவரை வரம்பு மீறிப் புகழ்ந்துகொண்டிருந்த அவர் உள்ளத்தில் அன்றுதான் அண்ணாவைப் பற்றிய கசப்பான எண்ணம் உதயமாயிற்று. 'ஒரு களங்கமற்ற பக்தனை' அன்று அண்ணா இழக்கத் தொடங்கினார். கூட்டம் முடிந்து அண்ணா கடற்கரை மரக்கலத்தின் மீது போய் அமர்ந்தார். "என்ன அண்ணா, இப்படிச் சதி செய்துவிட்டீர்களே!" என்று நேருக்கு நேர் கேட்டார் கண்ணதாசன். "அட, நீயும் ஒரு மோதிரம் வாங்கிக்கொடு. அடுத்த கூட்டத்தில் போட்டு விடுகிறேன்!", என்றார் அண்ணா என்கிறார் கண்ணதாசன். "அப்படித்தான் கருணாநிதியும் வாங்கிக் கொடுத்தாரா?" என்று கண்ணதாசன் அண்ணாவைத் திருப்பிக்

கேட்டார். "அட சும்மா இரு. அடுத்த தேர்தல் வரட்டும். பார்த்துக் கொள்ளலாம்" என்றார் அண்ணா என்கிறார். கண்ணதாசனின் ஏமாற்றம், கட்சியில் கலைஞரின் வளரும் செல்வாக்கை ஒரு பகுதியினர் ஆழ்ந்த வருத்தத்தோடுதான் ஏற்றுக்கொண்டனர் என்பதைக் காட்டியது. அவர்கள் பார்வையில் கலைஞருக்குக் கிட்டிய முக்கியத்துவம் வரம்புமீறியதாக இருந்தது.

ஆனால், அப்போதைக்கு இந்தி 'தொல்லை'யைக் கட்சி தீவிரமாக எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. இதில் நாடாளுமன்ற ஆங்கிலோ - இந்திய உறுப்பினர் ஃப்ராங்க் அந்தோணியின் போக்கு கட்சிக்குப் பெரும் பலமாக உதவியது. 1959-ல், ஃப்ராங்க் அந்தோணி நாடாளுமன்றத்தில் அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது பிரிவில், நாட்டில் பதினைந்து அங்கீகரிக்கப்பட்ட மொழிகளுக்கு இணையாக, (இப்போது, 22 மொழிகள்) ஆங்கிலத்தையும் சேர்க்கவேண்டும் என்ற தனிநபர் மசோதா ஒன்றை அறிமுகப்படுத்தினார். அந்த மசோதா மீது நடைபெற்ற விவாதத்தில் 1959 ஆகஸ்ட் 7 அன்று பிரதமர் நேரு, ஆங்கிலம் பற்றிய அவருடைய புகழ்பெற்ற வாக்குறுதியை அளித்தார்:

"நான் இரண்டு விஷயங்களை நம்புகிறேன். இப்போது நான் கூறியது போல இந்தி திணிப்பு கூடாது. இரண்டாவது, குறிப்பிட்டுச் சொல்ல முடியாத காலத்துக்கு - அது எவ்வளவு காலம் என்று எனக்குத் தெரியாது - கூடுதல் இணைப்பு மொழியாக ஆங்கிலம் இருக்கும். வசதிகளுக்காக என்று சொன்னாலும்கூட, இந்தி பேசாத பகுதியிலுள்ள மக்கள் அவர்களுடைய வளர்ச்சிக்கான பாதைகள் மூடப்பட்டுவிடும் என நம்புவதால் - அரசுடன் இந்தி மொழியில் கடிதப் போக்குவரத்தை மேற்கொள்ள வேண்டிவரும் என்ற காரணத்தால் நான் இதைக் கூறுகிறேன். அவர்கள் ஆங்கிலத்தில் கடிதம் எழுதலாம். எனவே, நான் அதை ஒரு மாற்று மொழியாக, மக்கள் விரும்பும் வரை இருக்க விட்டுவிடுகிறேன். அந்த முடிவை நான் இந்தி தெரிந்த மக்களிடம் விடப்போவதில்லை; இந்தி மொழி பேசாத மக்களிடம்தான்..."

நாடாளுமன்ற ஆட்சிமொழிக்குத் தலைவராக இருந்த உள்துறை அமைச்சரும் தீவிர இந்தி ஆதரவாளருமான ஜி.பி.பந்த் இதைக் கேட்டபின்னர், "நான் இரண்டு வருடங்களில் சாதித்ததை பிரதமர் இரண்டு நிமிடங்களுக்கும் குறைவான நேரத்தில் தகர்த்து எறிந்துவிட்டார்!" என்று வருத்தப்பட்டுக் கொண்டார். 1959 செப்டம்பரில் பூந்தமல்லியில் நடைபெற்ற தி.மு.க. மாநாடு நேருவின் வாக்குறுதியை வரவேற்றபோதும், நேரு - தனது வாக்குறுதியை சட்டபூர்வமாக்க வேண்டும் என்று கோரியது.

இந்தி எதிர்ப்பு கட்சிக்குள், கலைஞர்கள், நடிகர்கள் மற்றும் திரைத்துறையைச் சார்ந்தவர்களுக்குத் தரப்பட்ட முக்கியத்துவம் ஏற்படுத்தியிருந்த பிரச்னைகளை மூடி மறைத்திருந்தது. 1960 ஏப்ரல் 27 அன்று இந்திய குடியரசுத் தலைவர், நாடாளுமன்ற ஆட்சிமொழிக் குழுவின் அறிக்கையைச் செயல்படுத்த ஆணை பிறப்பித்து, மீண்டும் இந்தியைப் பிரச்னையாக்கினார். அந்த ஆணையைத் திரும்பப் பெறவேண்டும் என தி.மு.க. கோரியது. காமராஜர், தி.மு.க.வின் போராட்டத்துக்கு எதிராகக் கடுமையான நிலை எடுக்கப்போவதாகக் கூறினார். " 'இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியா? செய்யட்டும் பார்க்கலாம்' என்கிறார். துப்பாக்கி இருக்கிறது. தோட்டாக்கள் உள்ளன என மிரட்டுகிறார்" என்றார் அண்ணா.

1960 ஜூன் 17-ல் குமாரபாளையத்தில் நடந்த தி.மு.க. பொதுக்குழுவில், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை தலைமை ஏற்று நடத்த மிகக் கவனமாக சம்பத்தை நியமித்தார் அண்ணா. இதற்குப் பின்னர் கோடம்பாக்கத்தில், 1960 ஜூலை 31 அன்று நடந்த இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில், "தி.மு.கழகம் தோன்றிய காலந்தொட்டு போராட்டம் நடத்தவேண்டும் என்ற மன அரிப்பு எனக்கு எப்போதும் ஏற்பட்டதில்லை. போராட்டம் நடத்தினால்தான் இந்த இயக்கம் இருக்கும் என்பதில்லை. அந்த நிலைக்கு இயக்கமே கொண்டுபோய்ச் சேர்க்கும்" என்றார்.

சம்பத், 1960 ஆகஸ்ட் 3 அன்று பிரதமருக்கு கடிதம் எழுதி, குடியரசுத் தலைவரின் ஆணை தந்த கவலை, கட்சியின் நோக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அவருடைய உறுதிமொழியையும் மீண்டும் கோரியிருந்தார். மூன்று நாட்கள் கழித்து நேருவிடமிருந்து வந்த பதிலில், குடியரசுத் தலைவரின் ஆணை பிரதமரான தனது முந்தைய உறுதிமொழியைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது என்றது. மேலும், குடியரசுத் தலைவருக்கு 'அவமரியாதை கற்பிக்கும் வகையில்' தி.மு.க.. வேண்டுமென்றே நடந்துகொள்வது குறித்து ஆழ்ந்த வருத்தம் தெரிவித்தது. நேருவின் பதிலைக் காரணம் காட்டி கறுப்புக் கொடி போராட்டத்தைக் கைவிட்டது தி.மு.க. 1960 ஆகஸ்ட் 11 அன்று நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில், 'இந்த வெற்றி திராவிட வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்படும்' என்றார் அண்ணா. நேருவின் கை ஐசன்ஹோவர், ட்ரூமன், ஸ்டாலின் மற்றும் நாசர் கைகளைக் குலுக்கிய கை என்று குறிப்பிட்டு, 'அந்தக் கைதான் என் தம்பிக்கு அளித்த உறுதிமொழிக் கடிதத்தில் கையெழுத்து இட்டிருக்கிறது' என்றார். சம்பத் சாதித்த சாதனையாக இதைக் கட்சி கண்ணுற்றது. இது சம்பத்துக்கும் கட்சிக்கும் மறக்கமுடியாத தருணம். ஆனால், சம்பத் அப்படி நினைத்ததாகத் தோன்றவில்லை. அது பின்னர் வெளிப்படையிருந்தது.

17

'தோழர் அண்ணாதுரை'யை விட்டு விலகினார் சம்பத்



1961

கட்சியின் திட்டங்களும் போராட்டங்களும் கட்சிக்குள்ளே இருந்த பிரச்னைகளை மூடி மறைத்திருந்தன. ஆனால், அது அதிக நாட்கள் நீடிக்கவில்லை. இதில் வேடிக்கையான வேதனை என்னவென்றால், தி.மு.க.வை ஆரம்பிக்க அண்ணாவுக்குத் துணையாக இருந்த தம்பி சம்பத்தே கட்சியை உடைக்கக் காரணமானார். சம்பத், அவருக்கென்று இருந்த தொண்டர்களுடன் கவர்ச்சிமிக்க தலைவராக இருந்தாலும், அண்ணா மீதும் கட்சியின் மீதும் அவர் வைத்திருந்த பிடிப்பு, கட்சிக்கு நல்லதோடு கெட்டதையும் சேர்த்தே உருவாக்கிற்று.

1969 பிப்ரவரியில் அண்ணா காலமானபோது, சம்பத் சூட்டிய புகழாரம்:

என் அண்ணனே,

நல்லண்ணனே!

நீ வென்ற இதய சாம்ராஜ்யத்துக்கு ஈடும் இணையும் உண்டோ? வெற்றி வீரனே, உன் அளவுக்கு இரங்கி, பாரதம் முழுவதும் கொடிகள் தாழப் பறக்குதே!

இன்று நீ விடைபெறும் நாள்! என்னை ஒருவேளை தேடுவாயே! எதிரில் வந்து வணங்க வேண்டுமே! ஓரிலையில் உண்டு, ஒரு பாயில் படுத்து, ஒன்றாகச் சிரித்து, ஒன்றாக அழுது, உம்மைத் தொடர்ந்தபடி இருந்த உமதாசைத் தம்பி, கடைசி முறையாக உமது திருமுகத்தைக் காணாது இருக்க ஒல்லுமோ!

ஆனால், ஏழே வாரங்களுக்குப் பின்னர், 1969 மார்ச் 30 அன்று, 'ஆனந்த விகடன்' அண்ணா நினைவு மலரில், சம்பத் தன் முன்னாள் தலைவரைக் காட்டமாகத் தாக்கி எழுதியிருந்தார்:

> தைரியமாகவும், விரைவாகவும் பிரச்னைகளில் முடிவெடுக்கும் தலைவர்கள்தான் அரசியலில் வெற்றிபெறும் தலைவர்கள் என்று பெரிதும் கூறப்படுகிறது. ஆனால், அண்ணாவின் வாழ்க்கை இதற்கு நேர்மாறானது.
>
> எந்தப் பிரச்னையையும் அதிகபட்சம் எந்த அளவுக்கு ஒத்திப்போட்டு 'தப்ப'முடியுமோ, அந்த அளவுக்கு ஒத்திப்போடும் வழக்கத்தைக் கொண்ட அண்ணா அவர்களின் அரசியல் வாழ்க்கை, மக்கள் மதிப்பீட்டில் மிக வெற்றிகரமான ஒன்றாக அமைந்தது, பலருக்கும் வியப்பூட்டும்.

'மாநில அரசியலில் மிக உயர்ந்த பதவியும், மக்கள் மத்தியில் பெரிய பேரும் பெற்றிருந்தார்' என்று எழுதிவிட்டு, 'அண்ணாவின் அரசியல் தனிப்பட்ட வகையில் வெற்றிகரமானது என்பதில் இரு கருத்துக்கு இடமில்லை' என ஒப்புக்கொண்டபின், 'அவரது அரசியலால் நாடும், மக்களும் எந்த அளவு பயனும், பலமும் பெறமுடிந்தது என்பது என்றுமே சர்ச்சைக்கு உரியதாகத்தான் இருக்கமுடியும்' என்று முடித்தார். அண்ணா முடிவுகள் எடுப்பதில் தயங்குவார் என்பதை நினைவுகூரும் வகையில் இரண்டு நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டுவிட்டு, தன் முன்னாள் தலைவருக்கு வஞ்சப்புகழ்ச்சியாகப் பாராட்டுத் தெரிவித்தார்:

முதலாவது, "1946-ல் திராவிடர் கழக மாநில மாநாடு பெரியார் தலைமையில் தூத்துக்குடியில் நடந்தபோது, நாவலர் நெடுஞ்செழியன், தனது 'மன்றம்' பத்திரிகையில், 'கழகத்தில் ஜனநாயக முறைகளை பெரியார் அனுமதிக்காது சர்வாதிகாரப் போக்கில் செல்கிறார்' எனக் கண்டித்து எழுதினார். அடிக்கடி அண்ணா அவர்களோடு உட்கார்ந்து, நாங்கள் பேசியவற்றின்



எம்.ஜி.ஆர்., மதியழகன், அண்ணா, ராஜாஜி, கருணாநிதி

உணர்ச்சியை அவர் எழுதிக் காட்டிவிட்டார். அந்த நேரத்தில் தூத்துக்குடி மாநாட்டுக்கு நெடுஞ்செழியன் வந்தால் விரசமான சம்பவங்கள் நிகழக்கூடும் என்ற நிலை இருந்தது. அண்ணா அவர்கள் மாநாட்டுக்குச் செல்ல வேண்டாம் என நெடுஞ்செழியனுக்குக் கூறிவிட்டார்கள். தூத்துக்குடி மாநாட்டுக்கு சில நாட்கள் முன்கூட்டியே திருச்சிக்கு அண்ணா வந்தார்; நானும் சென்றேன். திருச்சியில் அப்போது எங்கள் இனிய நண்பர் சாம்பு அவர்கள் வீட்டில்தான் தங்குவது வழக்கம். பெரியார் முகாம் வேதாசலம் வீட்டில். 'ஒன்று, நெடுஞ்செழியனை மாநாட்டுக்கு வரச்செய்து, அவற்றால் ஏற்படும் விளைவுகளை நாம் அனைவரும் ஏற்கவேண்டும். அல்லது நாம் அனைவருமே தூத்துக்குடிக்குச் செல்லக்கூடாது' என்று நான் பிடிவாதம் பிடித்தேன். மாநாட்டை பகிஷ்கரிக்கும் முடிவுக்கு அண்ணாவால் எளிதில் வரமுடியவில்லை. 'பகிஷ்கரிப்பதற்கான காரணத்தை விவரமாக எழுதிக்கொடு' என்று எழுதி வாங்கினார். "போவதில்லை என்று முடிவானது என்பதைவிட, அந்த முடிவுக்கு அவரை நான் துரத்தியதாகவே எனக்குப் பட்டது." இரண்டாவது, திராவிட நாடு பிரச்னை பற்றியது. (அதை 4-வது அத்தியாயத்தில் பார்த்தோம்.) "விளைவுக்குப் பின் விளக்கம் கொடுத்தே பெரும் அரசியல் தலைவராக எழமுடிந்தது என்பது அவருக்கு முன்னும் எவராலும் முடிந்ததில்லை; அவருக்குப் பின்னும் இனியொருவராலும் முடியவும் முடியாது.

அவர் ஒரு தலைசிறந்த நடிகர். அவரது நடிப்பாற்றலுக்கு இவ்வுலகில் ஈடு இணை இல்லை" என்றார் சம்பத்.

சம்பத்தின் கிண்டல், கேலியையும் அண்ணாவின் மறைவின்போது அவர் தீட்டிய உணர்ச்சிமிகு சமர்ப்பணத்தையும் எந்தவிதத்தில் எடுத்துக்கொள்வது? 1930-களின் தொடக்கத்தில் இருந்தே ஈரோட்டிலிருந்து அண்ணாவை அறிந்திருந்த சம்பத், தம்மைவிட பதினைந்து வயது மூத்த அண்ணாவிடம் ஒரு தனித்த நெருங்கிய நட்பு கொண்டிருந்தார். தன் சித்தப்பா ஈ.வெ.ரா.வையும் அவருடைய மிகுந்த செல்வத்தையும் 1949-ல் வேண்டாம் என்று விட்டுவிட்டு அண்ணாவிடம் வந்து சேர்ந்தார் சம்பத். இந்தச் செயல் தியாகமாகக் கருதப்பட்டது. சம்பத்தின் தீவிர ஆதரவாளரான கண்ணதாசன் குதர்க்கமாக, "தன் சித்தப்பாவிடம் இருந்துகொண்டு அவரால் வளரமுடியாது என்று நினைத்ததால்தானோ என்னவோ, அண்ணா, கலைஞர், நெடுஞ்செழியன் மற்றும் அன்பழகன் ஆகியோர் விரித்த 'வலையில்' விழுந்துவிட்டார்" என்றார்.

அண்ணாவுக்கு சம்பத்தின் மீது இருந்த அன்பு மாசற்றது. சம்பத்தின் திருமணத்தை ஏற்பாடு செய்தவர் என்ற முறையில் அண்ணா பெருமிதம் கொண்டிருந்தார். பின்னர், சம்பத் பிரிந்துபோனபோது, "சம்பத்தின் மனைவி அவருக்கு உணவுகூடப் போடமாட்டார்; ஏனென்றால் அவர் என் கட்சியைச் சேர்ந்தவர்" என்றார். அந்த அளவுக்கு சம்பத் அண்ணாவிடம் உரிமை கலந்த நட்பு கொண்டிருந்தார். அதைக் கட்சியிலும் அவர் எதிர்பார்த்ததே பிரச்னையானது. "தங்கள் குடும்பத்தோடு அண்ணாவுக்கு இருந்த தொடர்பையும், தான் அவரிடமிருந்து பெற்ற மதிப்பையும் மனதில் கொண்டு, தனக்கே கட்டுப்பட்டவராக அண்ணாவை இயக்கும் எண்ணம் சம்பத்தைப் படாதபாடு படுத்திக்கொண்டிருந்தது" என்று குறிப்பிடுகிறார் டி.கே.சீனிவாசன். விவேகமற்ற விளையாட்டுத்தனத்தை, சம்பத் கொண்டிருந்தார் என்று கூறும் கருணானந்தம், இன்டர்மீடியட் வகுப்பு மாணவனாக சம்பத் இருந்தபோது 1944-ல் திராவிட இளைஞர் மாநாட்டில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை நினைவுகூர்ந்திருக்கிறார்: "மேடையில் நடிகமணி டி.வி.நாராயணசாமி, உணர்ச்சி பொங்கப் பொங்க பேசிக்கொண்டிருக்கிறார்! மேடையில், தலைமை ஏற்றிருந்த அண்ணாவை நோக்கிக் கீழே வருமாறு சம்பத் சைகை செய்தார். 'நாராயணசாமி, பேசு' என்று கை காட்டிவிட்டுக் கீழே இறங்கிவந்து அண்ணா எங்களிடையே அமர்ந்தார். திருப்பூர் எஸ்.ஆர்.சுப்பிரமணியம் நல்ல வசதி படைத்த இயக்கத் தோழர், கொஞ்சம் விவேகமில்லாத தன்மையில் சில நேரங்களில் நடந்துகொள்வார். அவர் சம்பத்தின் கையைப் பற்றிக்கொண்டு,

தெரிந்தது போல அவருக்குக் கைரேகை பார்க்க ஆரம்பித்தார்! அந்தப் பகுதியில் ஒரே சிரிப்பு. கும்மாளம்! அண்ணாவும் எங்களோடு சேர்ந்து உரக்கச் சிரிக்கிறார்! டி.வி.என். மிக மிக உரத்த குரலில், 'ஏன் சிரிக்கிறீர்கள்? என் பேச்சில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது?' என்றெல்லாம் அண்ணாவைப் பார்த்துக் கேட்கிறார். 'இருங்க!' என்று எழப்போன அண்ணாவை அப்போது சம்பத் தடுக்கிறார். அண்ணா சம்பத்தின் கையை விலக்கிவிட்டு மேடையை நோக்கிப் போனார். சினம் ஆறாததால், டி.வி.என். அதோடு உட்கார்ந்துவிட்டார். அடிக்கடி மற்றவர்களைக் கேலிப் பொருளாக்கி நகைப்பதும், அண்ணாவிடம் தனக்குள்ள செல்வாக்கினால், பொது இடங்களில் அவரைத் தன்வசப்படுத்திக் கொண்டு பிறரை ஏளனம் செய்ய முற்படுவதும் சம்பத்துக்கு ஒரு கெட்டபழக்கமாகவே இருந்தது. அவருடைய நல்ல தன்மைகள் எவ்வளவோ மறைக்கப்பட்டு, மற்றவர்களின் அருவருப்புக்கு ஆளாக நேர்ந்தது!" மேலும், அண்ணாவுக்கும், சம்பத்துக்கும் இருந்த கருத்து வேறுபாடுகள் வெளிப்படையாகவே தெரிந்தன. 1961-ல் களங்கப்பட்ட வேலூர் செயற்குழுவில், பேராசிரியர் அன்பழகன், "நாங்கள் ஒன்றும் வேறுபாடுகளைக் காணக் கட்சிக் கூட்டங்களுக்கு வரவில்லை" என்றார். டி.கே.சீனிவாசன் சம்பத்தைப் பற்றி, "திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்ட போதிலிருந்தே அவருடைய தொல்லைகளும் தொடர்ந்தன" என்றார்.

ஒருபுறம் சம்பத்தின் மீது அன்பும் பாசமும்; இன்னொருபுறம் கட்சிக்குள்ளேயே இருந்த போட்டா போட்டி, கருத்து வேறுபாடுகள் இவற்றைச் சமாளிக்கவேண்டிய நிலைமைகளுக்கு இடையே சிக்கிக்கொண்ட அண்ணா, சம்பத்தின் எதிர்பார்ப்புகளைச் சந்திக்க இயலவில்லை. அண்ணாவின் பொறுமை மந்தநிலைக்கு ஒப்பானதாகப் போய், பின்னர் தயக்கமாகி, சகித்துக்கொள்கிற நிலையை எட்டி, மன்னித்து, இணங்கிப் போய்விடுவதில் முடிந்தது. பிறரின் தவறுகளை ஏற்கும் தாராள மனம் அண்ணாவை எதையும் வலியுறுத்தாமல், எதையுமே அதன் போக்கில் போக விட்டுவிடுபவராக வைத்திருந்தது. இளைஞரான சம்பத் அவசரக்காரராக இருந்தார். அண்ணாவைப் போல அவருக்கு நிதானமோ, தயக்கமோ, பொறுமையோ இருக்கவில்லை.

சம்பத்தின் கருத்து வேறுபாடுகள்

கட்சியைவிட்டு விலகும் வரை பெரிதாக எந்தக் குறையையும் தெரிவிக்காவிட்டாலும், சினிமாவும், நடிகர்களும் கட்சியில் பெற்ற முக்கியத்துவம் சம்பத்துக்குத் தொடக்கத்தில் இருந்தே பிடிக்கவில்லை. சினிமாவும் நடிகர்களின் தாக்கமும் கட்சியின்

அடித்தளத்தை விரிவாக்கியிருந்தாலும், கட்சியின் பெருமையை அவை குறைக்கவே செய்தன. நடிகர்கள் மீது தொண்டர்கள் கொண்டிருந்த கண்மூடித்தனமான பக்தி தி.மு.கழக அரசியல்வாதிகளிடையே அதிருப்தியை உண்டாக்கியது. பொதுக் கூட்டங்கள் கட்சியின் ஆதாரமாக இருந்தன. எனினும், மிகச்சிறந்த பேச்சாளர்கள்கூட, சில வேளைகளில் நடிகர்களின் வெளிச்சத்தால் பின்னுக்குத் தள்ளப்பட்டனர். கட்சியில் ஆபரணமாக ஜொலித்த எம்.ஜி.ஆர்., பலநேரம் தலைவர் ஒருவர் பேசிக்கொண்டு இருக்கும்போது இடையே வந்து சேருவார். அவர் வருகை மக்களிடையே உண்டாக்கிய பரவசத்தை எம்.ஜி.ஆரே இப்படி குறிப்பிட்டார்: "பொதுக்கூட்டங்களில் நான் பேசுவதாக இருந்தால், அந்தக் கூட்டத்தில் என்னை அல்லாது வேறு எப்படிப்பட்ட சிறந்த பேச்சாளராக இருந்தாலும் சரி, தத்துவவாதியாக இருந்தாலும் சரி, அந்தக் கூட்டத்தில் நான் மேடைக்கு வந்ததும் பிறருடைய பேச்சு தடைபடும் அளவுக்கு மக்களிடையே ஓர் எழுச்சி உண்டாகும். பேச்சாளர் பிறகு பேசமுடியாமல் போய்விடும்."

அண்ணாவே இந்த வெளிச்சத்தால் பாதிக்கப்பட்ட தருணங்கள் உண்டு. அப்போது அண்ணா எப்படி நடந்துகொண்டார் என்பதை எம்.ஜி.ஆர். இப்படி எழுதியிருக்கிறார்: "லட்சோப லட்சம் இளைஞர்களுக்கு அவர் தனிப்பெரும் தலைவராக இருந்தபோதும், சாதாரணமான வேறொருவர் அவருடைய பேச்சைக் கேட்க முடியாமல் குறுக்கிட்டுவிட்டால் அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ள மாட்டார்; மாறாக ஒரு தாயின் பாசத்துடன் என்னை அவர் வரவேற்று அன்பைக் காட்டினார். நான் எப்போதும் அண்ணாவின் பெருந்தன்மையை எண்ணி அவரைப் புகழுவேன்.

தன்னம்பிக்கை மிக்க சினிமா புகழை புரிந்துகொண்டிருந்த அண்ணா, அந்தச் சந்தர்ப்பத்தையும் அதுபோன்ற பல நிகழ்ச்சிகளையும் எளிதாகக் கையாண்டவர்; எனினும் கட்சிக்கு உறுதுணையாகவும், வெற்றிகரமாகவும் அமைந்த சினிமா ஃபார்முலாவை அவர் கைவிட விரும்பவில்லை. கட்சியின் மற்ற தலைவர்கள் அண்ணாவைப் போல அவ்வளவு தன்னம்பிக்கையோடும், தாராள மனதோடும் இருக்கவில்லை. இதேபோன்ற அனுபவம் கவிஞர் கண்ணதாசன் அவர்களுக்கும் என் காரணமாக மக்கள் உண்டாக்கிவிட்டார்கள்" என்று குறிப்பிட்டுள்ள எம்.ஜி.ஆர்., "அவரால் பொறுத்துக்கொள்ள முடியாமல் போன நிலையில், அண்ணா அவர்களிடம் தனது உள்ளக் குமுறலைக் கொட்டினார். அதற்கு அண்ணா அவர்கள் வழக்கம் போல சிரித்தவாறே, 'நீயும் சினிமாவில் வேடமிட்டு நடித்துவிடு. உனக்கும் அப்படிப்பட்ட வரவேற்பு இருக்கும்.

பிறகு நீ வந்தால் மற்றவர்களின் பேச்சு கெடும். சினிமாவில் நடித்துவிடேன்!' என்று கூறிவிட்டார்."

ஆனால், சம்பத் தம்மை வெறுத்ததாக எம்.ஜி.ஆர். சொன்னார்:

> ஒருநாள் மூர் மார்க்கெட்டில், நான்கு வழிகள் சேரும் மையத்தில் மேடை அமைத்திருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் ஈ.வெ.கி. சம்பத் அவர்களும் வழக்கறிஞர் வி.பி.ராமன் அவர்களும், நானும் பேசுவதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. நான் சென்றபோது ஈ.வெ. கி.சம்பத் அவர்கள் பேசிக்கொண்டு இருந்தார்கள். நான் மேடைக்குப் பின்பக்கமாகச் சென்றேன். மூன்று பக்கங்களிலும் இருந்த ஆண்களும், இளைஞர்களும் முண்டி அடித்துக்கொண்டு வர முயன்றனர். அதுவரை மிகமிக அமைதியாக இருந்த கூட்டம் கட்டுக் குலைந்தது... எனக்கு ஏற்பட்ட மனவேதனை அளவிடமுடியாதது. திரு.சம்பத் அவர்களின் பேச்சைக் கேட்கும் அரிய வாய்ப்பை மக்கள் இழந்துவிட்டார்கள் என்பதைக் கூறி, மக்களின் செயலை வன்மையாகக் கண்டித்துப் பேசினேன். இருப்பினும் திரு.சம்பத் அவர்கள் என் மீது வைத்திருந்த அன்பை நான் இழந்துவிட்டதோடு, அவருடைய வெறுப்புக்கும் நான் ஆளாகிவிட்டேன் என்பதைச் சிறிது காலத்துக்குப் பிறகே உணர்ந்தேன்.

எம்.ஜி.ஆரோடு இப்படியெனில், கலைஞரோடு வெளிப்படையாக எந்தப் போட்டியும் இல்லை என்றாலும், கட்சியில் சம்பத்தின் இடத்துக்கு அவரைப் போலவே பேரவா உள்ள கலைஞர் கருணாநிதியிடமிருந்து சவால் உருவாயிற்று. தன் ஆதரவாளர்களைப் பெருக்கிக்கொள்ளும் கலைஞர் கருணாநிதியின் திறன் சம்பத்துக்கு இருக்கவில்லை. எனினும், அவரது வழிமுறைகளை சம்பத்தும் கண்ணதாசனும் குறை சொன்னார்கள். கருணாநிதியின் 'போக்கை' அண்ணா கண்டிக்கவில்லை என்பதில் கண்ணதாசனுக்குப் பெரும் கசப்பு ஏற்பட்டிருந்தது. எல்லாம் அண்ணாவின் ஆசீர்வாதத்தோடுதான் நடக்கிறது என்று சம்பத் கருதினார்.

சம்பத்தின் குற்றங்காணுதலுக்குக் கொள்கை ரீதியான காரணம் இருக்கத்தான் செய்தது. 1950-களின் பிற்பகுதியில் கட்சியின் தாறுமாறான போக்கில் குறை கண்டு அவர் சீரமைப்பு கோரினார். 1957-ல் நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர்,

அவருக்குள் இருந்த மனக்குமுறல்கள் வேகம் எடுத்தன. "நாடாளுமன்ற வாழ்க்கையில் சம்பத்துக்கு ஏற்பட்ட அனுபவம், அகில இந்திய அளவில் அவரைச் சிந்திக்க வைத்திருந்தது" என்றார் கண்ணதாசன். "ஏற்கெனவே டெல்லியில் பெரியார் அவரைச் சந்தித்துத் தயார் செய்து வைத்திருந்ததால், தி.மு.க.வுக்கு எதிரான புதிய தேசியக் கொள்கையைப் பேசுவதில் அவர் குழப்பம் இல்லாமல் இருந்தார். இதை அவரது நாடாளுமன்ற வாழ்க்கையில் கிடைத்த லாபம் என்று கூறவேண்டும்" என்றார் கண்ணதாசன். டெல்லி சம்பத்தை அசைத்துப்பார்த்தது என்றும் கொள்ளலாம். "நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு டெல்லிக்குப் போறவன் யாரும் கடைசிவரை கட்சியில் நீடிக்கமுடியாது! அவ்வளவு சுகபோகம், வசதி - வாய்ப்புகள் அங்கே! பார்லிமென்ட் ஹவுசின் ரத்தினக் கம்பளத்திலே காலடி பட்டாலே எவனும் சுருண்டுவிடுவான்!" என்று சம்பத் தன்னிடம் கூறியதாகக் கவிஞர் கருணானந்தம் தெரிவித்திருக்கிறார். டெல்லி அனுபவத்தில் மூழ்கிப்போயிருந்த சம்பத்தின் கட்சி சீரமைப்பு வாதங்கள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கின. கம்யூனிஸ்ட்டு கட்சியைப் போலவே, அமைப்பைக் கட்டுக் கோப்புடன் அரசியல் கட்சி ரீதியில் நடத்தவேண்டும் என்று சம்பத் விரும்பினார். அதையொட்டியே அவர் திராவிட நாடு கோரிக்கையை கட்சி விட்டுவிட வேண்டும் என்றும் எண்ணினார். வேடிக்கை என்னவென்றால், திராவிட நாடு கோரிக்கை வேண்டாம் என்ற சம்பத்தின் பரிந்துரை அப்போதைக்கு சம்பத்தையும் கலைஞர் கருணாநிதியையும் இணைந்து செயல்படவைத்தது. அண்ணாவுக்கு தனது வாதத்தின் மீது நம்பிக்கை ஏற்படுத்த, சம்பத்துக்கு நிறைய உதவி தேவைப்பட்டதாகத் தோன்றுகிறது. அதனாலேயே பொதுச் செயலாளர் பதவி 1960-ல் காலியாகும்போது, அதை கலைஞர் கருணாநிதி எடுத்துக்கொள்ள சம்பத் சம்மதித்த மாதிரியும் தோன்றியது. ஆனால், இருவருக்கும் இடையே இருந்த பிணைப்பு தற்காலிகமானதாகவே இருந்துவிட, நிகழ்ச்சிகள் வேறுமாதிரி நடந்துபோய் அண்ணாவே பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். அதன்பின்னர், சம்பத் தனது கட்சிச் சீரமைப்புக் கோரிக்கையைத் தீவிரமாக்கி திராவிட நாடு எண்ணத்தைக் கைவிட நிறைய வலியுறுத்தினார். அண்ணாவின் காலதாமதப் போக்கும், சம்பத்தின் தப்புக்கணக்கும் சேர்ந்து சம்பத்தை வரம்பு மீறச் செய்ய, நேரடியாகவும், மீண்டும் திரும்ப இயலாமலும் அண்ணாவுக்கு எதிராக அவரை நிறுத்தின. வரலாற்றாசிரியர் பார்னெட், "கருணாநிதி உடனடியாக நிலைமையை உணர்ந்து தன்னம்பிக்கை மிகுந்த சம்பத்தை

நேரடியாக அண்ணாவோடு மோத, காய்களை நகர்த்தினார்" என்றார்.

அண்ணா இரண்டு தலைவர்களிடமும் அன்பு செலுத்தினார்; ஒருவரை விட்டுவிட்டு இன்னொருவரை அவர் ஆதரிக்கவில்லை. கட்சிக்குள்ளேயே கலைஞர் கருணாநிதியும் சம்பத்தும் இணைந்து முன்னேற வாய்ப்புகள் இருக்குமளவுக்கு பார்த்துக்கொண்டார். கலைஞர் கருணாநிதி அசாத்திய திறமை படைத்தவர். அண்ணாவை ஆரம்பத்திலிருந்தே அறிய அவருக்கு வாய்ப்பு இல்லாவிட்டாலும் அல்லது சம்பத் உரிமையோடு பழகியது போல பழகாத குறையை, தன்னுடைய இணையற்ற ஆற்றலாலும், கடின உழைப்பாலும், கடமை உணர்வாலும் அண்ணாவின் நெஞ்சத்தில் இடம் பிடிப்பதில் ஈடுகட்டினார். அவரும் சம்பத்தும் முதல்முறையாக, வெளிப்படையாக வேறுபட்ட சமயத்தில், 1951-ல் கோவில்பட்டியில் நடந்த திருநெல்வேலி மாவட்ட மாநாட்டில் சந்தித்ததை 13-வது அத்தியாயத்தில் பார்த்தோம்.

கலைஞர் கருணாநிதி பலவிதங்களில் அண்ணா போலவே இருந்தார். அண்ணா போன்றே சாதாரணக் குடும்பப் பின்னணி; நாடகாசிரியர், எழுத்தாளர், பத்திரிகையாளர், திரைப்பட வசனகர்த்தா, சொக்கவைக்கும் பேச்சாளர், திறமையான அமைப்பாளர், நிதி திரட்டுவதில் வல்லவர். சுருங்கச் சொன்னால், அண்ணாவும் கட்சியும் அவரில்லாமல் இயங்கமுடியாது. அதோடு, கலைஞர் கருணாநிதியும் அண்ணாவும் சினிமா, அரசியல் என்ற இருவேறு உலகங்களை லகுவாகச் சுற்றி வந்தனர். சினிமா உலகத்தைப் பொறுத்தவரையில் சம்பத்துக்கு அது வேற்றுலகமாகவே இருந்தது.

மேலும், சம்பத்தின் முகாம் அண்ணாவைக் கலைஞரின் ஆதரவாளராகவே பார்த்தது. கலைஞரைக் குறித்த விமரிசனத்தில் சம்பத், தாம் நேரடியாக ஈடுபடவில்லை; அதை கண்ணதாசன் எடுத்துக்கொண்டார். உள்ளேயிருந்து உணர்ந்திருந்த கண்ணதாசனின் எழுத்து, கடுமையாகவும் தீவிரமாகவும் இருந்தாலும், அவற்றை கண்ணதாசனின் சுய விமரிசனத்தோடு பார்ப்பதே நல்லது. 'போற்றியவர்களைத் தூற்றுவேன்; தூற்றியவர்களைப் போற்றுவேன். எனக்கு நிலையான புத்தியோ, நிரந்தரமான நியாயமோ இல்லாது போயிற்று' என அவரே எழுதுகிறார்!

1959 ஜூலை 11, 12 தேதிகளில் நடைபெற்ற மாயவரம் பொதுக் குழுவில், "கட்சிப் பதவியில் இருப்போர், சட்ட சபையிலோ, சட்ட மேலவையிலோ, நாடாளுமன்றத்திலோ பதவி வகிக்கக் கூடாது" என்றார் சம்பத். ஒரே நபர் இரட்டைப் பதவிகளை வகிப்பதை

அவர் எதிர்த்தார். "மாயவரம் பொதுக்குழுவில் சம்பத் ஒரு தீர்மானம் கொண்டுவந்து அண்ணாதுரையையும், கருணாநிதியையும் அலறவைத்தார்." என்றார் கண்ணதாசன். தன்னைக் குறிவைத்துக் கொண்டுவரப்பட்ட அந்தத் தீர்மானத்தை தாம் தோற்கடித்திருக்க முடியும் என்று கலைஞர் நம்பினார். எனினும் சம்பத்தின் தீர்மானம் சட்டமாக்கப்படுவதை அண்ணா விரும்பவில்லை. "இதை ஒரு சம்பிரதாயமாக மட்டும் வைத்துக்கொள்ளலாம்" என்ற அண்ணாவின் யோசனையைப் பொதுக்குழு ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. அண்ணா மீண்டும் கட்சியின் இருவேறு துருவங்களில் மையத்தை தேர்வு செய்திருந்தார். சம்பத் முகாமுக்கு ஏற்றாற்போல, அவைத் தலைவர் என்றொரு பதவியை பொதுக்குழு ஏற்படுத்தி, அவர் பொதுச் செயலாளருக்குப் பதிலாக நிர்வாகக் குழு, பொதுக்குழு மற்றும் பிற அமைப்புகளுக்குத் தலைமை வகிப்பார் என்று முடிவு செய்தபின், சம்பத் முதல் அவைத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இந்த சாமர்த்தியமான நடவடிக்கை, வளர்ந்துவரும் பிளவை இணைத்துவிடும் என்று அண்ணா நம்பியிருந்தால், அவர் சம்பத்தின் தீவிர மனக்குறையை அறியாது போனார் என்றுதான் கூறவேண்டும். சுமார் எட்டு மாதங்களுக்குப் பின்னர், 1960 பிப்ரவரி 26-ல் மிகுந்த கசப்புற்றிருந்த சம்பத், பொதுக்குழு உறுப்பினர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்: பல விஷயங்களைப் பற்றி அதில் குறிப்பிட்டுவிட்டு, தி.மு.க.வை புதிய மடம் என்றும், அண்ணாவை மடாதிபதி என்றும் குறிப்பிட்டிருந்தார். 'கழகம் இனியும் ஒரு தேசிய விடுதலை இயக்கம் அல்ல என்றும் நடிகர்கள் மட்டுமே கௌரவமும் விளம்பரமும் பெற, கட்சியின் மூத்த தலைவர்கள், நீண்டநாள் தொண்டர்கள், தியாகிகள், கட்சிக்காக உயிர் நீத்தவர்களுக்கு அவை மறுக்கப்பட்டு வருகின்றன. திட்டங்கள் வகுப்பதிலோ, உத்திகள் செய்வதிலோ தொலைநோக்குப் பார்வை இல்லை. திராவிட நாட்டைப் பொறுத்தவரை, அந்த விஷயம் எழுப்பப்படும்போது பார்த்துக்கொள்ளலாம் என்ற அணுகுமுறையே உள்ளது. அதேபோல, இந்தி எதிர்ப்பும் அவ்வப்போது நடக்கும் கூட்டங்களில் மட்டுமே பேசப்படுகிறது' என்றும் சம்பத் சாடினார்.

இந்தக் கடுமையான விமரிசனத்துக்குப் பிறகும், அண்ணா சம்பத்தின் எழுத்தைக் கண்டுகொள்ளாதது போலவே இருந்தார். ஐம்பது நாட்கள் கழித்து, சம்பத்தின் மடல் குறித்து அவர் தம்பிகளுக்கு இப்படி உறுதி கூறினார்: "தம்பி, கட்சியில் ஒரு பிளவும் இல்லை. பயப்படாதே. கட்சியிலே இன்னின்ன முறைகள் ஏற்பட்டு, பொலிவும் வலிவும், தரமும் தூய்மையும் வளரவேண்டும்

என்று, தம்பி சம்பத் தன் கருத்தைக் கூறியிருப்பது, பிளவுக்கு அறிகுறியுமல்ல, வழியும் ஆகாது" என்று கூறி தனது தைரியத்தைக் காண்பித்துக் கொண்டார். சம்பத்தின் நிரந்தரமாகிவிட்ட விமரிசனத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டாலும், தனது செய்கைக்கான காரணத்தை சம்பத் உணரவேண்டும் என அண்ணா எதிர்பார்த்தார். இருவருமே வயதாலும், அனுபவத்தாலும் முதிர்ச்சி பெற்றிருந்தாலும் ஒரேமாதிரியான கொள்கைப் பின்னணியிலிருந்து வந்திருந்தாலும், இருவரும் கட்சியின் வளர்ச்சி குறித்து வெவ்வேறு விதமாகச் செயல்பட்டார்கள். கட்சி எப்படி வளர்ந்ததோ அந்த முறையை அண்ணா ஏற்றுக்கொண்டார். ஆனால், அதன் வரலாறு அல்லது போராட்டம் குறித்து ஏதும் அறியாதவர்கள் குறிப்பிடத்தக்க சக்தியாக கட்சியில் வளர்ச்சி பெற்றுவிட்டதற்கு, தி.மு.க.வின் நடிக பட்டாளமும் ரசிகர்களும் காரணமாக இருந்தனர். அதேபோல, தனிப்பட்ட முறையில் அண்ணா ஊட்டிய பாசம் மிகுந்த வெற்றியைத் தந்தபோதும், அதேசமயம் தம்பிகள் சிலரின் அத்துமீறிய செயல்களையும், குறைகளையும் பாராமல் அவர் கண்களை மூடிக்கொண்டுவிடும் அணுகுமுறையும் அண்ணாவின் குறைபாடாக இருந்தது. இவையெல்லாம் 1959-ல் வெடித்தபோதும், ஈ.வெ.கி.சம்பத் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து விலகி விட்டார் என்ற பலமான வதந்தி 1956-ல் நடந்த திருச்சி மாநாட்டிலேயே, முதல்நாளே பரவியிருந்தது. அங்குதான் சம்பத்தையும், கலைஞர் கருணாநிதியையும் விட்டுவிட்டு நாவலர் நெடுஞ்செழியனை தமக்குப்பின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தார் அண்ணா. 1956-ல் அண்ணாவிடம், தான் சம்பத் பற்றிய வதந்தியைக் கேட்டபோது, " 'அதெல்லாம் இருக்காது' என்று அலட்சியமாகச் சொன்னாலும், அண்ணாவின் உள்ளத்தில் சலனம் உண்டாகிவிட்டது என்பதை முகம் காட்டியது" என்றார் கருணானந்தம்.

கட்சியில் திராவிட நாடு தீவிர பிரச்னை ஆயிற்று. திராவிட நாடு கோரிக்கை உண்மையில் அடைய முடியாததாக, வீணானதாக ஏன், தர்மசங்கடமானதாக, டெல்லிக்குப் போனபிறகு சம்பத்துக்குத் தோன்றியது. தேர்தலில் தி.மு.க. அக்கறை காண்பிக்கத் தொடங்கியபிறகு அந்தக் கோரிக்கை மேலும் காலத்துக்கு ஒவ்வாததாகத் தோன்றிற்று. மாநில சீரமைப்பு 1956-ல் நடந்தபிறகு, திராவிட நாடு எண்ணத்தையே கைவிட்டு விட்டார் பெரியார். 'திராவிட நாடு' என்ற வாசகத்தைக் கற்றுத் தந்த பெரியார், 'திராவிட நாடாவது, வெங்காயமாவது' என்று அவரே அதைத் தோலுரித்துக் காட்டியபோது தி.மு.கழகத்துக்குள்ளேயே அதுபற்றி அவநம்பிக்கை ஏற்படத் தொடங்கியது.

அண்ணாவும் சரி, தி.மு.க.வும் சரி, திராவிட நாடு எண்ணத்தைக் கருவிலுள்ள சிசுவாகத்தான் வைத்திருந்தனர். சமயத்துக்கு ஏற்ற மாதிரி பேச, கடைசி வரை ஒரு முழுமையான உருப்பெறாத, தற்காலிக கோரிக்கையாகவே அந்த எண்ணம் இருந்துகொண்டு வந்து, கட்சியைக் குழப்பத்தில் வைத்திருந்தது. கண்ணதாசன் அதை இவ்வாறு விவரிக்கிறார்:

> திராவிட நாடு என்பதென்ன? அது எதிலே இருந்து எதுவரை? இதில் ஒரு தலைவருக்கும் இன்னொரு தலைவருக்கும் இடையே வேறுபாடுகள், மாறுபாடுகள் இருக்கும்.
>
> விந்திய மலையிலிருந்து தென்குமரி வரை உள்ளதுதான் திராவிட நாடு என்பது தெரியும். கன்னியாகுமரி என்பதிலேதான் எல்லோரும் உறுதியாக இருந்தார்களே தவிர, வட எல்லை எது என்பது பல பேருக்குத் தெரியாது.
>
> நல்லவேளையாக கிழக்கும், மேற்கும் கடலாகத் தெரிந்த காரணத்தினால் அதில் தகராறு எதுவும் தோன்றவில்லை.
>
> திராவிட நாட்டினுடைய எல்லைகள் பற்றி மட்டுமல்லாது, திராவிட இனத்தின் வரலாறு பற்றியும் அன்று யாருக்கும் எதுவும் தெரியாது என்பது உண்மை.
>
> அண்ணா அவர்கள் மேடையிலே பேசும்போது ஒன்று சொல்வார்கள்...
>
> ஆனால், கருணாநிதியுடைய விளக்கம் வேறாக இருக்கும். மற்ற இளம் பேச்சாளர்களுடைய விளக்கம் இன்னும் வேறாக இருக்கும். அதைக் கொஞ்சம் படித்தவர்களாக, புதிதாக வருகிறவர்கள், இன்னும் கொஞ்சம் கற்பனையைக் கலந்து பேசுவார்கள். எல்லாக் கூட்டங்களையும் தொடர்ந்து ஒரு படித்தவன் கேட்டால் அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிடும்.

1960-ல் சம்பத், கலைஞர், நாவலர் மற்றும் மதியழகன் எல்லோரும் கட்சியின் வழக்கறிஞர் வி.பி.ராமனின் சென்னை வீட்டில் சந்தித்தார்கள் என்கிறார் கண்ணதாசன். "காஞ்சிபுரத்திலிருந்த அண்ணாவையும் கலந்துகொள்ளுமாறு அழைத்தார்கள். 'திராவிட நாட்டுக் கொள்கையைக் கைவிட்டால் கழகத்துக்கு நல்ல எதிர்காலம்' என்று சம்பத்தும் மற்றவர்களும் சொன்னார்கள். அதற்கு அண்ணா அவர்கள் கைவிட முடியாது என்று

சொல்லவில்லை. 'காலம் வரும். காலத்தை எதிர்பார்த்துக் காரியம் செய்யவேண்டும். ஒருகட்டம் வரும்போது நானே அதை மாநாட்டில் அறிவித்துவிடுவேன். அதை திடீரென்று வெளியிட்டால் நம்முடைய தோழனுக்கு அதிர்ச்சி ஏற்பட்டுவிடும்' என்றார்." அண்ணா, 1959 - 1960-களில் இந்தச் சிக்கலான எண்ணத்தைக் கைவிடுவதில் தவறேதும் காணவில்லை என்ற சம்பத் 'ஆறு மாதத்தில் மாநாடு - அதில் தீர்மானம் - நான் பிரேரேபிக்கிறேன் - நீ ஆமோதிக்கிறாய் - சரிதானே?' என்று அண்ணா தன்னிடம் சொன்னதாக எழுதியிருக்கிறார். "கூடவே வந்து டெல்லிக்கு அனுப்பினார். பின் அந்த முடிவைக் கட்சிக்குச் சொல்லத் தயங்கினார்; பின்வாங்கினார்" என சம்பத் கூறியிருக்கிறார்.

"குமாரபாளையம் பொதுக்குழுவிலே 1960 ஜூன் 17 அன்று சம்பத் சில சிக்கலான தீர்மானங்களைக் கொண்டுவந்தார். அவற்றை மெதுவாக நயந்து பேசி, வாபஸ் வாங்கவைத்து விட்டார் அண்ணா" என்கிறார் கண்ணதாசன். இதற்குப் பிறகு லாயிட்ஸ் சாலையில் கூடிய பொதுக்குழு, நாவலர் நெடுஞ்செழியனை அடுத்து ஒரு பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுக்க விரும்பியது. "அன்றைக்கு சம்பத்தின் கைதான் வெகுவாக ஓங்கியிருந்தது. அன்று அவர் விரும்பியிருந்தால் - அவர்தான் பொதுச் செயலாளர். துணைக் குழுக்களுக்கான தேர்தல் அங்கு நடந்தபோது, எல்லாக் குழுக்களிலும் சம்பத்தின் ஆதரவாளர்களுக்கே ஏராளமான வாக்குகள் கிடைத்தன. கருணாநிதியும் அவரது ஆதரவாளர்களும் கலங்கிப்போய் இருந்தார்கள். கலைஞர் கருணாநிதி, சி.பி.சிற்றரசை ஆதரிக்க, சம்பத் மதியழகனை ஆதரித்தார். அண்ணாதுரை சம்பத்தைத் தனியே அழைத்துக்கொண்டு போனார். உண்மையிலேயே கண்ணீர்விட்டு அழுதார். 'இந்தத் தடவை மட்டும் நான் பொதுச் செயலாளராக இருந்துவிடுகிறேன். நமக்குள்ளே தகராறு இருப்பதாக யாருக்கும் தெரியவேண்டாம்!' என்றார். சம்பத்தின் இளகிய நெஞ்சம் அண்ணாதுரையின் கண்ணீருக்குப் பணிந்துவிட்டது" என சொல்கிறார் கண்ணதாசன். பிறகு, சம்பத்தே தன் ஆதரவாளர்களிடம் அண்ணாதுரைக்கு விட்டுக்கொடுக்குமாறு கூறினார். அண்ணாதுரை பொதுச் செயலாளராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். "தோழர் மதியழகன் அவர்கள் பொதுச் செயலாளராக வரவேண்டுமென பெரிதும் விரும்பினேன். நான் பொதுச் செயலாளராக இருந்தபோது, துணைப் பொதுச் செயலாளர் பொறுப்பேற்றுத் திறம்பட பணியாற்றியவர். அவரது ஆற்றல்கள் மேலும் நல்ல வகையில் நாட்டுக்கும் நமக்கும் பயன்பட வேண்டுமென எண்ணினேன். ஆனால், சில நிலைமைகள் காரணமாக நான் இந்தப் பொறுப்பை

ஏற்கிறேன்" என்று 1960 நவம்பர் 25 பொதுக்குழுவில் அண்ணா தெரிவித்தார். "லாயிட்ஸ் ரோடு பொதுக்குழுவுக்குப் பிறகும் கட்சியில் சம்பத்தின் கையே ஓங்கியிருந்தது. அதைத் தகர்க்க அண்ணாதுரை ரகசியமாகத் திட்டமிட்டார். திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முன்னால், அண்ணாதுரை சம்பத்தைக் கேலி செய்து, 'ஆப்பிள் கார்ட்' என்ற பெர்னார்ட் ஷா நாடகத்தை மையமாகக் கொண்டு ஒரு கட்டுரை 'திராவிட நாடு' இதழில் எழுதியிருந்தார். 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்பது அதன் தலைப்பு. அதில் ஷாவின் போனர்ஜியஸ் என்ற பாத்திரம் புயலார் என்ற பெயரில் மாற்றப்பட்டு இருந்தது. அது சம்பத்தைக் கேலி செய்வது போல இருந்தது. ஷாவின் அசல் நாடகத்தில், டாம்பீகமான அமைச்சர் ஒருவர், மன்னரை வாய்மூடி மௌனியாக்கிவிட்டு, அதிகாரத்தையும் விட்டுக்கொடுக்கச் செய்துவிட்டு, பிரதமரை மன்னாதி மன்னராக்க முனைகிறார். ஆனால், மன்னர் கெட்டிக்காரர். தன் எதிரிகளை அடக்குகிற மாதிரி, தானே பதவியிலிருந்து இறங்கி பிரதமர் பதவிக்குப் போட்டியிட்டுத் தேர்ந்தெடுக்கப்பட விருப்பம் தெரிவிக்கிறார். அதைக் கேட்டவுடன் பிரதமர் பின்வாங்கிவிடவே, பழைய நிலைமை தொடர்கிறது! பொதுக்குழுவில் சம்பத் ஏமாந்துவிட்டதாகவும், தான் வெற்றி பெற்றுவிட்டதாகவும் மறைமுகமாக அண்ணாதுரை அதில் கூறியிருந்தார்" என்றார் கண்ணதாசன். என்றாலும் அண்ணா, தான் ஒரு சூழ்நிலைக் கைதியைப் போல உணர்ந்திருக்கக் கூடும்.

"தி.மு.கழகத்தில் ஒருவரையொருவர் மறைமுகமாகத் தாக்கி எழுதுவது மிகவும் அதிகம்" என்ற கண்ணதாசன், 'திராவிட நாடு' இதழை சம்பத்திடம் கொடுத்து அதைப் படித்துப் பார்க்கச் சொன்னார். சம்பத் சிறிது நேரம் யோசித்த பின். "பிறகு நானொரு கட்டுரை எழுதித் தருகிறேன். அதை 'தென்றலில்' போடுவீர்களா?" என்றார் சம்பத். உடனே, "கொடுங்கள், பிரசுரிக்கிறேன்" என்றார் கண்ணதாசன். "அண்ணாதுரையைப் போல முழுக்க முழுக்க மறைமுகமாக அவரால் எழுதமுடியவில்லை. கட்டுரையின் தலைப்பையே 'அண்ணாவின் மன்னன்' என்று கொடுத்துவிட்டார்" என்றார் கண்ணதாசன். 'அண்ணா அவர்கள் வெறும் தமிழ்நாட்டு பெர்னார்ட் ஷாவாக இருந்திடின் அவருக்கோ, அவரது ரசிகர்களுக்கோ இத்தகைய தர்மசங்கடங்கள் நேரிடா. ஆனால், திராவிடத்தின் இழந்த சுதந்திரத்தை மீட்டுத் தரும் விடுதலை வீரராகவும், புதிய நாடு பெறச் சற்றுக் காலதாமதமாயினும் மந்திரி சபை அமைக்கும் தறுவாயில் உள்ள ஒரு தலைவருக்கு, சாதாரண சமூக நாடகங்கள், கதைகள் எழுதினாலேகூட வேண்டாத விவாதங்கள் வளரும். 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' போன்ற

அரசியல் நாடகக் கேலிச் சித்திரங்களைப் படைக்கும்போது, அதிகப் பாதுகாப்புத் தேவை. ஷாவின் மன்னனுக்கு, அவனை மேலும் அழகுள்ளவனாக்க புதிய அணிமணிகள் சூட்டுவதோடு நில்லாமல், உள்ள குறைகளை மறைக்கும் திருப்பணியிலும் அண்ணா அவர்கள் ஈடுபட்டுள்ளது மட்டுமின்றி, புயலார் (போனர்ஜியஸ்) மீது அண்ணாவுக்கு ஏற்பட்ட கோபத்தில், ஷா அவனைக் கெட்டவனாக்கியிருக்கும் அளவு போதாதெனப் பதைத்து, மேலும் அவனை நகைப்புக்குரிய தோல்வி காணும் பொல்லாதவனாக மாற்றவும் அதிகமான மையைச் செலவழித்துள்ளார். இது நாடக விமரிசனமா? அல்ல. ஏனெனில் இது நாடகம் அல்ல. இது கட்டுரைக்கு மறுப்பா? அதுவுமல்ல. அது கட்டுரையல்லவே? 'கழகக் கட்டுரை மொழிபெயர்ப்பு நாடகம்' என்னும் தனிப்பட்ட ஒருவகை. சில உணர்ச்சிகள், சில நூதன முறைகளில் வெளியிடப்பட்டுள்ளன. அவை சில உணர்ச்சிகளைக் கிளப்பிவிட்டன. அவையே இவை' என எழுதினார் சம்பத்.

வேலூரில் ஏற்பட்ட சிக்கலும் அதன் விளைவும்

இந்தப் பின்னணியில், ஒரு வாரத்துக்குப் பின்னர் 1961 ஜனவரி 21, 22 தேதிகளில் வேலூரில் பொதுக்குழு கூடியது. கூடுவதற்கு நான்கு நாட்கள் முன்பு, சம்பத் வீட்டில் மதியழகன், ராசாராம், ஏ.கோவிந்தசாமி, எம்.பி.சுப்பிரமணியம், ஆர்.எஸ்.பாண்டியன், பொன்னுவேல், கண்ணப்பா வள்ளியப்பன், கண்ணதாசன் ஆகியோர் கூடி, பத்துக்கு மேற்பட்ட (கண்ணதாசன் வார்த்தையில்) 'பயங்கரமான' தீர்மானங்களைத் தயாரித்தார்கள். கண்ணதாசன் விவரித்திருக்கிறார்- அவர்களுக்குத் தெரியாமலேயே கருணாநிதி ரகசியமாக ஒரு வேலை செய்து கொண்டிருந்தார். பொதுக்குழுவில் பெரும் ரகளை செய்வது என்று முடிவு கட்டி அண்ணாதுரையின் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொண்டு, மேல் மட்டத்தில் இருந்த அண்ணாதுரையின் ஆதரவாளர்களுக்கெல்லாம் தெரிவித்துவிட்டு, ஒவ்வொருவரையும் தயார் செய்து, அடியாட்கள் சிலரையும் ஏற்பாடு செய்துகொண்டு, முதல்நாளே வேலூருக்குக் கொண்டுவந்து சேர்த்துவிட்டு - தானும் அங்கேயே வந்துவிட்டார். ஒவ்வொருவர் கையிலும் 'அண்ணாவின் மன்னன்' கட்டுரை வெளிவந்த 'தென்றல்' இதழ் இருந்தது. 'படித்துப் பாருங்கள். அண்ணாவுக்கு ஆபத்து' என்று ஒவ்வொருவரிடமும் அந்த இதழை சிலபேர் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். காலையில் முடிந்திருக்க வேண்டிய செயற்குழு - முடியாமலேயே நீண்டுகொண்டு போவதாகச் செய்தி வந்தது. அப்போது, சத்திரத்தில் முனுசாமி ஒரு கட்டிலில் சாய்ந்து கொண்டிருக்க, கண்ணதாசன் ஒரு சிறிய காகிதத்தில் குறிப்புகள்

எழுதிக்கொண்டிருந்தார். பரபரப்போடு உள்ளே நுழைந்தார் ஆர்.எஸ்.பாண்டியன். 'செயற்குழுவில் அடிதடி நடக்கிறது. சம்பத்தை எல்லோரும் அடிக்கிறார்கள்' என்று சொன்னார் அங்கிருந்து காரை எடுத்துக்கொண்டு செயற்குழு நடக்கும் இடத்துக்குச் சென்றார்கள். செயற்குழுவில் கலந்துகொண்டு இருந்த எம்.பி.சுப்பிரமணியன் (எம்.எல்.ஏ.) இறங்கி வந்தார். மதுரை சண்டியர் ஒருவர் சம்பத்தின் சட்டையைப் பிடித்ததாகவும், கருணாநிதி சத்தம் போட்டுத் திட்டியதாகவும், இரண்டு நடிகர்கள் (எஸ்.எஸ்.ராஜேந்திரன், எம்.ஜி.ஆர்.) முண்டா பனியனோடு வந்து நின்றதாகவும், அண்ணாதுரை அழுததாகவும் அவர் சொன்னார். (2008 நவம்பரில், எஸ்.எஸ்.ஆர்., தான் சம்பத்தை அன்று தாக்கியதாகவும், அண்ணா அவரை சம்பத்திடம் மன்னிப்புக் கோரச் சொன்னதாக ஒரு கூட்டத்தில் சொன்னார்.) 'உனக்காவது சொத்து, சுகம் இருக்கிறது சம்பத். அரசியலை விட்டால் எங்களுக்கு வேறு தொழில் ஏது?' என்று அன்பழகன் பரிதாபமாகக் கேட்டாராம். ஏ.கோவிந்தசாமி இறங்கி வந்தார். கண்ணதாசனையும் அவர் நண்பர்களையும் சமாதானப்படுத்திவிட்டு, கண்ணதாசனை காரில் ஏற்றி அனுப்பினார். 'நீங்கள் பேசாமல் நகரச் சத்திரத்துக்குப் போங்கள். இன்னும் ஒரு மணி நேரத்தில் செயற்குழு முடிந்துவிடும். நாங்கள் வந்துவிடுகிறோம்' என்றார் எம்.பி.சுப்பிரமணியம், இதற்கு முன்னால். இரவு 9 மணிக்குக் கட்சியில் தான் வகித்து வந்த அவைத்தலைவர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு சம்பத்தும், எம்.பி.சுப்பிரமணியமும் மற்ற நண்பர்களும் சத்திரத்துக்கு வந்தார்கள். அதற்குள் செயற்குழுச் செய்தி பரவி சம்பத்தின் ஆதரவாளர்கள் அனைவரும் அங்கே வந்துவிட்டார்கள். 'இப்போதே கட்சியில் இருந்து எல்லோரும் ராஜினாமா செய்ய வேண்டும்' என்றொருவர் கூறினார். மதியழகன்தான் இதில் தீவிரமாக இருந்தார். சம்பத் எல்லோரையும் அமைதிப்படுத்தினார். மறுநாள் நடக்கவிருக்கும் பொதுக்குழுவில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும் என்றார். இப்படியெல்லாம் எழுதிய கண்ணதாசன், "சம்பத் செய்த இரண்டாவது தவறு இது" என்றார். "தனது ஆதரவாளர்களின் யோசனையை அன்றைக்கே அவர் ஒப்புக்கொண்டிருந்தால், அண்ணாதுரையும் கருணாநிதியும் சம்பத்திடம் சரணடைய வேண்டி இருந்திருக்கும். காரணம், அன்று பெரும்பான்மையான ஆதரவு சம்பத்துக்கே இருந்தது. நீலிக் கண்ணீர் வடித்து, சம்பத்தின் ஆதரவாளர்கள் பல பேரை தன் பக்கம் இழுப்பதற்கு அண்ணாதுரைக்கு ஒரு வாய்ப்பை சம்பத் கொடுத்து விட்டார். ஏராளமானவர்கள் ராஜினாமா யோசனை சொன்னபோது அதை மறுத்துவிட்டார்" என்று கண்ணதாசன் கருத்து சொல்லியிருக்கிறார். இப்போது காலத்தின் துணை

கொண்டு யோசித்துப் பார்த்தால், சம்பத்தின் வெற்றி வெறும் கணக்களவிலும், நிரந்தரமற்றதாகவும் இருந்திருக்கும்.

"மறுநாள் பொதுக்குழுவில், தகராறுக்கு இடமில்லாத பொதுத் தீர்மானங்கள் மளமளவென்று நிறைவேற்றப்பட்டன. பிறகு சம்பத் குழுவின் தீர்மானங்களைக் கையில் வைத்துக்கொண்டு அண்ணாதுரை எழுந்து பேசினார். கருணாநிதி ஒன்றும் அறியாத கன்னிபோல உட்கார்ந்திருந்தார். 'கட்சியில் குழப்பம் வந்து ஏதாவது ஆகுமென்றால், என்னை உயிரோடு காணமுடியாது' என்று அவர் கூறியதும், 'ஐயோ, அண்ணா!' என்று சிலர் அழுதார்கள். அழுதவர்களின் நடிப்பு, அண்ணாதுரையின் நடிப்பையும் மிஞ்சி நின்றது" என்றார் கண்ணதாசன். "அண்ணாதுரை தொடர்ந்து, 'சம்பத் குழுவின் தீர்மானங்களை இப்போது விவாதிக்க வேண்டாம். தீர்மானங்களை ஒத்திவைக்க விரும்புகிறேன். நான் ஒத்திவைப்பதை ஆமோதிப்பவர்கள் கையைத் தூக்குங்கள்' என்றார். அவர்களுடைய ஆதரவாளர்கள் மட்டுமே கையைத் தூக்கினார்கள். கையைத் தூக்காதவர்களைப் பற்றி, 'அந்தக் கைகளை நான் அறிவேன். சமயம் வரும்!' என்று கூறினார் அண்ணா" என்றார் கண்ணதாசன். மாலையில் சம்பத்தும் அவர் ஆதரவாளர்களும் ஊர்வலத்துக்கோ, கூட்டத்துக்கோ போகவில்லை; அன்று மாலையே எல்லோரும் புறப்பட்டுச் சென்னை வந்து சேர்ந்தார்கள்.

மறுநாள் மாலை காங்கிரஸ் நாளேடு 'நவ இந்தியா'வில் 'தி.மு.க. அவைத்தலைவர் பதவியிலிருந்து சம்பத் ராஜினாமா' என்று முதல் பக்கத்தில் செய்தி வெளியிட்டு பொதுக்குழு நிகழ்ச்சிகளை விவரித்திருந்தது. மறுநாள் மாலை, கட்சி ஏடான 'நம் நாடு' இதழ் சம்பத்தின் ராஜினாமா கடிதத்தை வெளியிட்டு, அது அவர் சொந்த விருப்பம் என்றும் கலவரம் ஏதும் நடக்கவில்லை என்றும் சொன்னது.

சம்பத் அதற்கு மறுப்புத் தெரிவித்தார்: 'பெரியாரை மடாதிபதிபோல நடத்துகிறார் என்று குற்றம்சாட்டி நாம் வெளியே வந்தோம். அந்த மடாதிபதியை விட்டு வெளிவந்தது, இந்த மடாதிபதிக்குப் பட்டங்கட்டுவதற்கு அல்ல' என்று சம்பத் தன் அறிக்கையில் வெளிப்படையாக இவ்வளவு நாள் மூடிவைத்ததை வெளியிட்டிருந்தார். வேலூர் பொதுக்குழுக் கலவரம் திட்டமிட்டு நடந்ததே தவிர, இயற்கையாக எழுந்தது அல்ல என்றும் சம்பத் தனது அறிக்கையில் கூறியிருந்தார். அண்ணா தன் பங்குக்கு, 'வேலூரில் நடந்தது என்ன?' என்று ஒரு நீண்ட அறிக்கை வெளியிட்டார். அங்கே கலவரம் ஏதும் நடக்கவில்லை என்றார்.

கழக சட்ட திட்டங்களில் திருத்தங்கள் அனுப்பியவர்களைப் பற்றி தோழர் மதுரை முத்து அவர்கள் குறிப்பிட்டார். அவைத்தலைவர், 'சபையில் இல்லாதவர்களைக் குறித்துப் பேசக்கூடாது' என்று கூற, 'பேசுவதில் தவறில்லை. இது சட்டமன்றமோ, பாராளுமன்றமோ அல்ல' என்று அன்பழகன் எடுத்துக் காட்டியும், 'பேசக்கூடாது' என்று அவைத்தலைவர் கண்டிப்பான குரலில் கூற, 'அப்படியானால் பொதுக்குழுவுக்குப் போகலாம், வாருங்கள்' என்று உரத்த குரலில் சம்பத் கூறி, தனது கைப்பையை எடுத்துக்கொண்டு எழுந்து நிற்க, மற்றவர்களும் 'வா, போகலாம்' என்று ஒருவரையொருவர் தள்ளிக்கொண்டு குரல் கொடுத்து எழுந்து நின்றனர்.

பிறகு, நான் மற்றவர்களுக்கு ஏற்பட்ட பரபரப்பைக் குறைத்துக்கொள்ளும்படியும், அமைதியான பேச்சில் பிரச்னையைப் பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என்றும் கூறிய பிறகு, யாவரும் அமர்ந்து மேலும் பேசலாயினர். கழகக் கட்டுத்திட்டங்களுக்கு மீறி எழுதப்படும் கட்டுரைகளைப் பற்றியும், பேச்சுகளைப் பற்றியும் சுமார் 2.30 வரை பேச்சு நீடித்தது. பிறகு, பகல் உணவுக்கு செயற்குழு கலைந்து, மீண்டும் 4 மணிக்குக் கூடியது.

தோழர் சம்பத் அவர்கள் எழுதிய 'அண்ணாவின் மன்னன்' என்ற கட்டுரை தங்கள் மனதை வெகுவாகப் பாதிக்கிறது என்றும், கட்சியின் கட்டுப்பாட்டுக்கு அது உகந்ததல்ல என்றும், மாற்றாருக்கு இடங்கொடுக்கும் நிலையை ஏற்படுத்திவிடுகிறது என்றும் தங்கள் அபிப்ராயத்தை வெளியிட்டனர். தோழர் சம்பத் (அவைத்தலைவர்) அதற்கு விளக்கமளித்தார். 'எனக்குச் சரியென்றும், கழகத்துக்கு மிகமிகத் தேவை என்றும் நான் நினைக்கிற கருத்துகள், முறைகள் பற்றி தொடர்ந்து கூறிவருவது உண்மை. ஆனால், அவை ஏற்றுக்கொள்ளப்படாததுடன், செயற்குழுவினர்களாகிய எனது நண்பர்களுக்கு மன வேதனையைத் தந்து வருகிறது. இந்த நிலையில் நான் மேற்கொண்டுள்ள கருத்துகள் - சிறுபான்மையினரின் கருத்து - இதற்கு முரணாகிறது. இந்த நிலையில் நான் பொறுப்பான அவைத்தலைவர் பதவியில்

இருந்துகொண்டு, எனது கருத்தைப் புகுத்தும் முறையை மேற்கொள்வது தூய ஜனநாயகமாகாது என்று கருதுவதால், நான் அவைத்தலைவர் பதவியிலிருந்து விலகி, சாதாரண உறுப்பினராகவே கழகப் பணியாற்ற முடிவு செய்திருக்கிறேன்' என்று அனைவரும் திடுக்கிடும்படி சம்பத் கூறினார். அனைவருமே அதிர்ச்சி அடைந்தனர்.

அப்போது மணி 5.30. 'அப்படி விலகத் தேவை இல்லை, சம்பத்!' என்று வாதாடினேன். மேலும், இரவு எட்டு மணி வரை, அனைவருமே விலக வேண்டியதில்லை என்று கேட்டுக்கொண்டனர். மறுநாள் காலை சந்திப்பதாகக் கூறிச் சென்றார் சம்பத்.

மறுநாள் காலை 11 மணிக்குச் செயற்குழு கூடும் கட்டத்தில் சம்பத் என்னைச் சந்தித்து, தனது விலகல் கடிதத்தைத் தந்தார். மதியழகன் அவர்கள் உடன் இருந்தார். மூவரும் கண்கலங்கித்தான் போனோம். 'அண்ணா, நீங்களேவா கலங்குவது?' என்று தைரியம் கூறி, மாலை பொதுக்கூட்டத்தில் சந்திப்பதாக சம்பத் விடைபெற்றுக் கொண்டார். ஆனால், தன் முடிவை மாற்றிக்கொள்ளவில்லை. மறுநாள் செயற்குழு. நாங்கள் திரும்பிவிட்டோம்.

மறுநாள் மாலை 6 மணிக்கு பொதுக்குழுக் கூட்டம் முடிந்தது. இவைதான் வேலூரில் இரண்டு நாட்கள் நடந்தவை...

ஆங்காங்கு ஏற்படும் கருத்து வேற்றுமைகள், பிளவுக்கு வழி அமைக்கும் அளவுக்குப் பேச்சுகள் நடைபெறுவதும் இனி தவிர்க்கப்பட்டு, கழகத்தின் கண்ணியமும் கட்டுப்பாடும் காப்பாற்றப்படத்தக்க முறையில் என்னுடன் ஒத்துழைக்கும்படி அனைவரையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

சம்பத் அண்ணாவின் அறிக்கைக்கு மறுப்புத் தெரிவித்தார். அவருடைய அறிக்கை கிட்டத்தட்ட கண்ணதாசன் நிகழ்ச்சிகளை வர்ணித்ததையொட்டியே இருந்தது.

அண்ணாவும் சம்பத்தும் மாறி மாறி விடுத்த அறிக்கைகளால் சூழ்நிலை மோசமாகி வருவதை அறிந்த சிலர், சமரசத்துக்கு முயன்றனர். "அவர்களில் உண்மையாகவே சமரசத்தில் ஆர்வம் காட்டியவர் திரு. ஏ.கோவிந்தசாமி. அண்ணாதுரை அப்போது

காஞ்சியில் இருந்தார். அவரைச் சுற்றியிருந்த சில பூசாரிகள் சமரசமே கூடாதென்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்களிடமிருந்து அண்ணாதுரையைப் பிரித்து, எப்படியும் கொண்டுவந்து விடுவதாகவும், ஒரு பொது இடத்தில் இருவரும் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யும்படியும் கோவிந்தசாமி தொலைபேசியில் கூறினார்" என்றார் கண்ணதாசன். முதலில் சம்பத் அதற்கு இணங்கவில்லை. கண்ணதாசனும் இரண்டொரு நண்பர்களும் வற்புறுத்தியதன் பேரில் சம்பத் இணங்கி வந்தார். சன் தியேட்டருக்கு எதிரே உள்ள பால மந்திருக்குப் பக்கத்துத் தெருவில் - அபிபுல்லா ரோடு சந்திக்கும் இடத்தில் இருந்த ஒரு நண்பரின் வீட்டை ஏற்பாடு செய்து, அதன் விலாசத்தையும் கோவிந்தசாமியிடம் தெரிவித்துவிட்டார் கண்ணதாசன். பேச்சுவார்த்தை ஆரம்பித்தபோது கண்ணதாசனும், கோவிந்தசாமியும் உடன் இருந்தார்கள். நடந்துபோன விவகாரங்களைக் கிளப்பாமல், இனி எப்படி நடந்துகொள்வது என்பது பற்றியே அண்ணாவும் சம்பத்தும் பேச விரும்பினார்கள். "நேர்முகச் சந்திப்பில் அவர்கள் மிகவும் கவலையோடு காணப்பட்டார்கள். நெருங்கிப் பழகிய பழக்கத்தின் பாசத்தால் அன்று அதிகமாகவே பேசினார்கள். இறுதியில் இருவரும் சேர்ந்து ஓர் அறிக்கை விடுவதென்று முடிவாயிற்று" என்றார் கண்ணதாசன்.

"அந்த அறிக்கையில், செயற்குழுவில் நடந்த வன்முறைகளுக்குத் தான் வருந்துவதாக அண்ணாதுரை குறிப்பிட வேண்டும் என்று சம்பத் கேட்டுக்கொண்டார். முதலில் யோசித்த அண்ணா, பிறகு அதை ஒப்புக்கொண்டு அவ்வாறே அறிக்கை எழுதினார். அன்று இரவே நாகர்கோவிலில் ஒரு கூட்டத்துக்கு அண்ணாதுரை போகவேண்டி இருந்தது. மறுநாள் காலை பத்திரிகைகளில் 'அண்ணாதுரை - சம்பத் அறிக்கை' வெளிவந்தது. கருணாநிதியின் முரசொலியில் மட்டும் வெளிவரவில்லை" என்றார் கண்ணதாசன்.

"அறிக்கையைப் பார்த்த கழகத்து நடிகர்கள், நாகர்கோவிலில் இருந்த அண்ணாதுரைக்கு ஒரு தந்தி கொடுத்தார்கள். ஏற்கெனவே செயற்குழுவில் நடந்த வன்முறையில் நடிகர்களும் பங்கு கொண்டதாக சம்பத் கூறியிருந்தார். ஆகவே, வன்முறையைக் கண்டித்து அறிக்கையில் இருந்த வாசகம் தங்களைக் காட்டிக்கொடுப்பதாகவும், தாங்களும் வன்முறையில் ஈடுபட்டதாக அண்ணாவே ஒப்புக்கொள்வது போல இருக்கிறதென்றும், அது தங்கள் மனதைப் புண்படுத்துவதாகவும் நடிகர்கள் தங்கள் தந்தியில் குறிப்பிட்டிருந்தார்கள்." என்றார் கண்ணதாசன். அடுத்த வார 'தென்றல்' இதழில் ஒரு கற்பனை நாட்டையும், ஒரு கற்பனைக் காட்சியையும் படைத்து, 'பாவமன்னிப்பு' என்ற தலைப்பில் அந்த

நடிகர்களைக் கேலி செய்திருந்த கண்ணதாசன், "தந்தியைப் பார்த்த அண்ணா குழப்பமடைந்தார். அண்ணா, அவர்களுக்காகப் பரிந்து வேறோர் அறிக்கை வெளியிட்டார். அதன் விளைவாக, கட்சியினுள் உள் தகராறு பழைய நிலையை மீண்டும் எட்டியது. 'நிலையான புத்தி இல்லாதவர்களின் எந்த வாக்குறுதியை மதித்து நடப்பது? வரட்டும், பார்க்கலாம்!' என்றார் சம்பத்." என்கிறார். அடுத்து நடந்த திருச்சி கூட்டம் ஒன்றில் சம்பத்தும் கண்ணதாசனும் பேசினார்கள். கூட்டம் ஆரம்பிக்கப்பட்டு தலைவர் பேசி முடித்ததும் கண்ணதாசன் பேச எழுந்தார். உடனே கீழே இருந்த ஒருவன், மாலை போடுகிற பாவனையில் மேடை மேல் ஏறினான். மடியில் இருந்து ஒரு செருப்பை எடுத்தான். கண்ணதாசனின் சட்டையைப் பிடித்துக்கொண்டு சத்தமிட்டபடி செருப்பை ஓங்கியதும், கண்ணதாசன் தன் காலால் அவனை எட்டி உதைத்தார்... "கருணாநிதிக்கு அவன் மிகவும் வேண்டியவனாக இருந்தான்" என்றார் கண்ணதாசன்.

1961 பிப்ரவரி 23 அன்று திருச்சி சம்பவத்தைக் கண்டித்து, தான் மறுநாளிலிருந்து உண்ணாவிரதம் இருக்கப் போவதாக சம்பத் அறிவித்தார். பத்திரிகைகளுக்குச் செய்தி கொடுக்குமுன்பே காஞ்சியில் இருந்து இதைப் பற்றி அண்ணா சம்பத்திடம் டெலிபோனில் பேசினார். அண்ணா எவ்வளவோ தடுத்துப் பார்த்தார். உண்ணாவிரதம் இருக்கப்போவது உறுதியென்று சம்பத் தெரிவித்து விட்டார். 'பொதுவாழ்வில் அண்ணாவை நம்பி நுழைந்தவர்களைப் புழுதிகளாக்கும்படி அண்ணாவைத் தூண்டினால்..? என்ன செய்வது என்று புரியாமல் தவித்தார் அண்ணா' என்று சம்பத் அண்ணாவுக்குத் தந்த அழுத்தத்தைப் பற்றி எழுதினார் டி.கே.சீனிவாசன். சம்பத்தைப் பார்க்க, காஞ்சியிலிருந்து ஓடோடி வந்தார் அண்ணா. திருச்சி நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்கள் அனைவரையும் கண்டித்து, கட்சியை விட்டு விலக்க வேண்டும் என்ற சம்பத்தின் கோரிக்கையைத் தன் நண்பர்களுடன் கலந்து பேசுவதாக சொன்ன அண்ணா, அன்று சம்பத்துக்கு ஒரு முடிவும் சொல்லாமல் போனார். சம்பத் தன் கோரிக்கையை வற்புறுத்தாமலேயே உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி வேண்டி மறுநாளும் அண்ணா வந்து பேசினார். மூன்றாவது நாளே சம்பத்தின் உடல்நிலை மோசமாகத் தொடங்கிற்று. அண்ணா அன்று முழுவதும் எதுவும் சாப்பிடவில்லை.

"அன்று மாலை சிறுநீரகமும் கெட்டு, உயிருக்கே ஆபத்து விளையும் நிலைமை ஏற்பட்டுவிட்டதாக சம்பத்தைப் பரிசோதித்த டாக்டர் கிருஷ்ணன் கூறினார். அந்தச் செய்தி உடனே

அண்ணாவுக்குத் தெரிவிக்கப்பட்டது. கண்ணதாசன் நேரில் போய்ச் செய்தியைச் சொன்னதும் பெரும் பதட்டத்தோடு எழுந்தார் அண்ணா. குரல் கொடுத்து அழுதேவிட்டார். அவர் கையைப் பிடித்துக்கொண்டு, 'இந்த உண்ணாவிரதத்தை உடனே நிறுத்துவதற்கு நீயாவது எனக்கு உதவக்கூடாதா?' என்றார் கண்ணதாசனிடம். சம்பத்தின் கையைப் பிடித்துக்கொண்டு அண்ணாதுரை அழுதார். கடைசியில் கட்சியில் நடைபெறும் காலித்தனங்களை உடனுக்குடன் கண்டிப்பதாகவும், திருச்சி நிகழ்ச்சிகளுக்குக் காரணமானவர்களைக் கண்டுபிடித்துக் கட்சியை விட்டே விலக்குவதாகவும் ஒப்புக்கொண்டார். உண்ணாவிரதத்தை நிறுத்த சம்பத் சம்மதித்தார். உடனே சம்பத்தைத் தூக்கி நிறுத்தி, 'இதில் வெற்றி பெற்றது சம்பத்துதான்' என்று கூடியிருந்த கூட்டத்தினருக்குச் சொன்னார். சம்பத்தைக் கையில் தாங்கியவாறே சிறிது பழச்சாறு கொடுத்து நெற்றியில் முத்தமிட்டு அழைத்துக்கொண்டு சம்பத் வீட்டுக்குப் புறப்பட்டார். அடுத்த நாலாவது நாள் 'காவலர் கூட்டம்' என்ற பெயரில் எல்லா மாவட்டங்களில் இருந்தும் கட்சியில் முக்கியமானவர்களை அழைப்பதென்றும், கூட்டத்தை 26.2.61-ல் திருவொற்றியூரில் நடத்துவதென்றும் முடிவெடுத்தார். " 'முரசொலி'யைத் தவிர, மற்ற எல்லா ஏடுகளும் இவற்றை வெளியிட்டிருந்தன" என்றார் கண்ணதாசன். 25.2.61 தேதியிட்ட 'முரசொலி'யில் கட்சியின் பொருளாளர் பதவியைத் தான் ராஜினாமா செய்திருப்பதாக கலைஞர் கருணாநிதி அறிவித்தார்.

'காவலர்' கூட்டம் இறுக்கத்தைத் தளர்த்தியது. அண்ணாதுரை உருக்கமாகப் பேசினார். இரண்டு பகுதியினரையும் திருப்தி செய்கிற மாதிரி பேசினார். "உண்ணாவிரதத்துக்குப் பிறகு அண்ணாதுரையின் மனப் போக்கில் மட்டும் நல்ல மாறுதல் தென்பட்டது" என்கிறார் கண்ணதாசன். "இந்தக் கட்சி அழிந்துவிட்டால் இன்னும் ஒரு தலைமுறைக்குத் தமிழர்களுக்கு விடிவே கிடையாது. ஆகவே, ஒற்றுமை வேண்டும்" என்ற அண்ணா. "நீங்கள் என்னை ஒரே மாதிரி 'அண்ணன்' என்று அழைப்பது எனக்குப் பெருமையாக இருக்கிறது. இந்த அன்பு சிதைந்துபோனால், நீங்கள் அண்ணாதுரையை உயிரோடு காணமுடியாது" என்று சொல்லிவிட்டு, "நான் உங்கள் தலைவன் அல்ல; உங்கள் அண்ணன். தங்கள் புகழை வைத்துச் சிலர் கட்சி ஆரம்பித்து இருக்கிறார்கள்; சிலர் பணத்தைக் கொண்டு; சிலரோ தங்கள் அறிவைக் கொண்டு. ஆனால், நான் உங்கள் பாசத்தைப் பெற்றவன். எனவே, அந்த அன்புப் பாதையில் செல்கிறேன். உங்களில் யாரேனும் ஒருவர் அதைக் குறைத்தாலும், என்னால்

அதைத் தாங்கமுடியாத பலகீனமானவன் நான்! நாம் பாசத்தால் கட்டுண்டு இந்த இயக்கத்தைப் பன்னிரண்டு ஆண்டுகளாக நடத்தி வருகிறோம்!" என்று அண்ணா கூறியதாக அரங்கண்ணல் பதிவு செய்திருக்கிறார். "இதுவரை தவறு செய்தவர்கள் - இங்கே வேண்டாம் - தனியாக என்னிடம் வந்து வருத்தம் தெரிவித்தால்கூடப் போதும். இந்தப் பிணக்கு விடுபட்டுப் போகும். பழைய பாச உணர்ச்சி வந்துவிடும்!" என்றார் அண்ணா. உணர்ச்சிவயப்பட்டு எழுந்த கண்ணதாசன், அண்ணாதுரையின் கைகளைப் பிடித்துக்கொண்டு, "இதில் நான் தவறு செய்திருந்தால் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்!" என்று கண்ணீர் சிந்தினார். அண்ணா மனம் நெகிழ்ந்தார். அவருடைய கைகளைக் கண்களில் ஒற்றிக்கொண்டார் கண்ணதாசன். அவர் கண்ணதாசனின் கைகளை முத்தமிட்டார். உடனே அண்ணா மேடையேறி, திருச்சி நிகழ்ச்சியை வன்மையாகக் கண்டித்தார். கட்சியைவிட்டு விலக்குவேன் என்று எச்சரித்தார். நடிகர்கள் (எம்.ஜி.ஆர்., எஸ்.எஸ். ஆர்.) கண்ணதாசனைத் தூக்கிக் கொண்டு வெளியே ஓடினார்கள். 'வாழ்க' முழக்கத்தோடு, உற்சாக மதமதப்பில் கூட்டம் கலைந்தது. எல்லோரும் கண்ணதாசனிடம் அன்பு பாராட்டினார்கள், கருணாநிதியைத் தவிர. 'கருணாநிதி அப்போதும் 'இது ஒரு போலி நாடகம்' என்று நெடுஞ்செழியனிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.' என்று அதைக் கேட்டதாக கண்ணதாசன் எழுதினார்.

கலைஞர் கருணாநிதியும், எஸ்.எஸ்.ஆரும் (அவரும் ராஜினாமா செய்திருந்தார்) தங்கள் ராஜினாமாக்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்கள். மறுநாள் சம்பத் வீட்டுக்கு அண்ணா வந்தார். அண்ணா, சம்பத், கருணாநிதி, கண்ணதாசன் ஆகிய நால்வரும் எல்லா மாவட்டங்களிலும் சுற்றுப்பயணம் செய்வதென்றும், இந்த ஒற்றுமையை,கீழ்மட்டத்தொண்டர்கள் வரை நிலைநாட்டுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. 'ஆனால், கட்சியை எப்படியும் உடைத்தே தீருவது என்று முடிவுகட்டியிருந்த கருணாநிதி அந்தக் கூட்டங்கள் நடைபெறாமல் தடுப்பதில் முனைந்தார்' என்று எழுதுகிறார் கண்ணதாசன். நாவலர் நெடுஞ்செழியன், கலைஞர் கருணாநிதி, என்.வி.என்., மதுரை முத்து, அன்பில் தர்மலிங்கம், அரங்கண்ணல், முல்லை சத்தி, எம்.ஜி.ஆர்., எஸ்.எஸ்.ஆர். மற்றும் பலர், கூட்டம் முடிந்ததும் சம்பத் வீட்டுக்குச் சென்றார்கள். கண்களில் நீர் பொங்க, சம்பத் எல்லோரையும் அணைத்துக்கொண்டார். மறுநாள் அண்ணா சம்பத்தைக் காணவந்தார்.

அன்று அண்ணாவும் சம்பத்தும் சென்னை மயிலாப்பூரில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசினார்கள். "இத்தனை நாளாகச் சேர்ந்திருந்த சோகம், நேற்று முழுமையாகத் துடைக்கப்பட்டுவிட்டது.

என் தம்பியின் உண்ணாவிரதத்தை நிறுத்தச் செய்ததை நான் என்னுடைய வெற்றிகளில் மிகப் பெரிதாக மதிக்கிறேன்!" என்றார் அண்ணா. முப்பத்தாறு நாள் போராட்டம் நன்றாகவே முடிந்த மாதிரி தோன்றியது. ஆனால், அப்படி ஏதும் நடக்கவில்லை.

1961 ஏப்ரல் 2 அன்று அண்ணாவும் சம்பத்தும் மாயவரத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுவதாக இருந்தது. இருவரும் சேர்ந்து பேசுவதாக இருந்த பத்து கூட்டங்களில் அது முதலாவது. ஆனால், அந்தக் கூட்டங்கள் சரியாக நடைபெறவில்லை. "ஏன் அப்படி அண்ணாதுரை மாறினார் என்று விவரித்துக்கொண்டே போவது தேவையற்றது. சுயமாகச் சிந்திக்கிற சக்தியையே அவர் அப்போது இழந்திருந்தார். அவரை விஷமாக்குவதில் கருணாநிதி வெற்றிபெற்றார்" என்றார் கண்ணதாசன். ஒற்றுமைக்காகப் போடப்பட்ட கூட்டங்களை எல்லாம் ஒத்திவைத்திருப்பதாகவும், ஏப்ரல் 9-ம் தேதி சென்னைக் கூட்டம் மட்டும் நடைபெறும் என்றும் அண்ணா அறிவித்துவிட்டார். அதுவரை ஏற்பட்ட முன்னேற்றம் தடைப்பட்டு இரண்டு முகாம்களிலும் அவநம்பிக்கை தெரியத்தொடங்கியது. திருநாவுக்கரசு கூற்றுப்படி, "தூத்துக்குடியில் நடக்கயிருந்த பொதுக்குழு பற்றி அண்ணா சம்பத்திடம் தெரிவிக்கவில்லை. நிகழ்ச்சிகளின் இந்தப் போக்கு குறித்து சம்பத் ஏமாற்றமடைந்தார்." கண்ணதாசன் 'கருணாநிதியை கோயபல்ஸ் என்றும், அண்ணாவை கோயபல்ஸின் குருநாதர்' என்றும் வர்ணித்தார்.

இறுதிப் பிளவு

1961 ஏப்ரல் 9 அன்று சம்பத், கண்ணதாசன் மற்றும் சிலர் கட்சியை விட்டு வெளியேறி, தமிழ் தேசியக் கட்சியை ஆரம்பித்து, அதற்கு அடுத்த ஆண்டே அதை காங்கிரஸுடன் இணைத்தார்கள். சம்பத்துக்கு நெருக்கமாக இருந்த அல்லது அவரது அனுதாபிகளாக இருந்த ஏ.வி.பி.ஆசைத்தம்பி, மதியழகன் மற்றும் டி.கே.பொன்னுவேலு ஆகியோர் அவருடன் போகவில்லை. "அண்ணாவுக்கும் சம்பத்துக்கும் இடையே இருந்த வேறுபாடு கொள்கை ரீதியானதல்ல, ராஜதந்திர உத்தியைச் சார்ந்தது என்று அவர்கள் கருதியதே காரணம்" என்றார் பார்னெட். "கட்சியிலிருந்து அவர்களை விரட்ட சினிமாவும், நடிகர்களும்கூடப் போதுமான சக்திகளாக இல்லை" என்றும், "சம்பத்தின் தலைமையில் அணிவகுக்க அவை உதவவில்லை" என்றும் அவர் அபிப்பிராயம் சொன்னார். பலரும் தாங்கள் உருவாக்கிய கட்சியை விட்டுவிட்டுச் செல்ல விரும்பவில்லை. அவ்வப்போது கருத்து வேறுபாடுகள் எழுந்தாலும், அண்ணாவிடம் அவர்களுக்கு இருந்த பாசப் பிணைப்பு, அவர்களை அண்ணாவுடன் வைத்திருந்தது.

நிகழ்வுகளின் போக்கைக் கண்டு அண்ணா மிகுந்த வேதனையடைந்திருந்தார். இறுதிவரை, சம்பத் வெளியேறியதை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. அண்ணாவின் எழுத்துகளும் பேச்சுகளும், அவர் சம்பத்துக்காக எவ்வளவு ஏங்கினார் என்பதைக் காட்டின. சம்பத் வெளியேறிய மூன்று நாட்களுக்குப் பின்னர், ஏப்ரல் 12-ம் தேதி, தாம் தம் தம்பியையும், அவருடைய ஆதரவாளர்களையும் இழந்துவிட்டதாகவும் அவர்கள் திரும்பிவர வேண்டும் என்றும் அண்ணா கூறினார்.

> நான் திராவிடக் கழகத்திலிருந்து வெளியேறியதும் என் தந்தையை இழந்தேன். இன்று என் தம்பி சம்பத்தை இழந்தேன். நான் பெரிய துரதிர்ஷ்டசாலி. நாம் குற்றம் குறைகளை காலத்தாலும், நண்பர்களின் கூட்டு முயற்சியாலும் சரியாக்கிவிடலாம். எனவே, வெளியேறியவர்களை எல்லாம் நான் திரும்ப வருமாறு கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் என் அரசியல் வட்டத்திலிருந்து போயிருக்கலாம். ஆனால், என் இதயத்தைவிட்டு அவர்கள் போக முடியாது. என்னுடையதைவிடப் பரந்த இதயம் இன்னொன்று இருக்கமுடியாது. அவர்களால் காணமுடியாது...
>
> உங்களை எல்லாம், ஒன்று கேட்டுக்கொள்கிறேன். இனி நடைபெறும் கூட்டங்களில் சம்பத் ஏன் வெளியேறினார் என்று யாரும் பேசக்கூடாது... நீங்கள் என்னிடம் நெருக்கமான நட்பு வைத்துக்கொண்டால், என்னிடமிருந்து எல்லா வகையான அன்பும் கிடைக்கும். எந்த இதயமும் இதைக் கொடுக்காது. நீங்கள் விரும்பினால் இந்த இதயத்தை எடுத்துக்கொள்ளுங்கள்!

மறுநாள் கடலூரில் பொதுக்கூட்டத்தில் பேசும்போது, எப்படி தன் தம்பி சம்பத் தன்னை நடுக்காட்டில் விட்டுவிட்டுப் போகலாம் என்று வினவினார். பிளவுக்குப் பிறகு, மிகுந்த சிந்தனைக்குப் பின் பேசிய பேச்சுகளில் ஒன்றாக அந்தப் பேச்சு அமைந்தது.

> பதினொன்றாம் தேதி தோல்வியையும், அதன் காரணமாக உண்டான வலியையும் நான் கூற விரும்புகிறேன். அந்தப் பிரச்னை எழக் காரணம் என்ன, அது உருவாக்கப்பட்டதா அல்லது தானே உருவாயிற்றா என்பதை எல்லாம் யோசிக்கும் திறன் இழந்து, கட்சிக்குள்ளேயே அதைத் தீர்த்துவைக்க முடியாமல் இருக்கிறேன். அது என்னுடைய நிர்வாகத்

திறமையில் உள்ள குறைபாடாக இருக்கலாம். நடுக்காட்டில் இப்படி என்னை விடுவது நியாயமில்லை. நான் உங்களைக் கழகத்துக்குத் திரும்பச் சொல்கிறேன். கழகத்தில் சில பலகீனங்கள் இருக்கின்றன. ஆனால், அதைச் சரிப்படுத்த எனக்குத் தேவையான ஓய்வு தரவில்லை. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக நான் வறுத்தெடுக்கப்பட்டேன். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக நான் ஒரு கால்பந்து போல உதைபடுகிறேன். குடையில் கம்பிகள் மழைக்காற்றில் உடைந்துபோனாலும், அதை வீசி எறியாமல் உபயோகிக்கிறார்கள். அதேபோல, எனக்குச் சிந்திக்க வாய்ப்புக் கொடுக்காமல் நீங்களாக ஒரு முடிவு எடுக்கக் கூடாது. இந்தக் கசப்பு அகலவேண்டும் என்றும், நாம் எல்லோரும் கையைக் கோத்துக்கொண்டு நடக்க வேண்டும் என்றும் விரும்புகிறேன்...

மனம் வெதும்பி, நெஞ்சை நெகிழச் செய்த இந்தப் பேச்சுக்குப் பின்னரும், அண்ணாவின் அழைப்பும் அவர் கவலையும் அவருக்கே உரித்தானவை என்றார் சம்பத்; கேட்க இனிமையாக இருந்தாலும் பின்பற்ற முடியாதது என்றார். சம்பத் சுத்தமாக அந்தப் பாசத்தை எல்லாம் தாண்டி வந்துவிட்டார். கண்ணதாசன் சொன்னது போல, "அண்ணா அண்ணா என்று யாரைப் பன்னிரண்டு வருஷ காலம் அழைத்து வந்திருந்தோமோ அவரை 'அண்ணாதுரை' என்றே அழைக்கும்படி தோழர் சம்பத் சொல்லிக் கொடுத்திருந்தார்" என்றால் பார்த்துக்கொள்ளலாம்.

தொடக்கத்தில் "கழகத்தில் சில குறைபாடுகள் இருந்தன, அவற்றைத் தீர்த்துவைப்பதில் எனக்கிருந்த திறமை போய்விட்டது" என்று அண்ணா ஒப்புக்கொண்டு இருந்தார். அண்ணாவின் தலைமைப் பண்பையும், குறைபாடுகளையும் கண்ணதாசன் சொல்கிறார்:

தி.மு.க. தலைவர்கள் கூட்டம் நடத்துவதும், கூட்டத்துக்குப் போவதும் லாபகரமான தொழில் என்று கருதியவர்கள், நாத்திகம் பேசுபவர்களுக்குக் குறைந்தபட்சம் பண்பாடுகூட இருக்காது என்பதை நிரூபிக்கத் தொடங்கினார்கள். உண்மையிலேயே அண்ணா இதற்கு விதிவிலக்காக இருந்தார். பெரியாரைப் போல அவர் கண்டிப்பாகவும் இருந்திருந்தால் கட்சியின் பிரமுகர்கள் அவ்வளவு மோசமான லாப வேட்டைக்காரர்களாக ஆகியிருக்க மாட்டார்கள். இரக்கம், தாட்சண்யம் எல்லாம்

நிறைந்த கருணை உள்ளம் அண்ணாவின் உள்ளம். அதனால், எதையும் கண்டிக்காமலும், கண்டுகொள்ளாமலும் இருந்துவிட்டார். ஆத்திரம் அதிகமாகும்போதுகூட, ஜாடை மாடையாகத்தான் எதையாவது சொல்வார்.

அண்ணாவே, 1967 தேர்தலின்போது, கட்சியின் வேட்பாளராக தேர்வாக பலமான போட்டி இருந்தபோது, தன்னைப்பற்றி இப்படி எழுதினார்:

எனக்குள்ள பொறுத்துக்கொள்ளும் உணர்ச்சி வலுவுள்ளது என்றாலும், சிக்கல்களை அறுத்து எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தக்க தீர்வளிப்பதற்கான ஆற்றல் பெரிய அளவில் என்னிடம் இல்லை.

எனக்கென்று சொந்தத்தில் விருப்பு, வெறுப்பு அதிக அளவிலே இல்லை என்றாலும், உடன் இருப்போரின் விருப்பு, வெறுப்புகளை ஒரே அடியாகத் தள்ளிவிட்டு முடிவு காணும் 'கண்டிப்பு' என்னிடம் போதுமான அளவு இருக்கிறதா என்பதிலே எனக்கே நிரம்ப ஐயப்பாடு உண்டு. எல்லாம் என்னிடம் விட்டுவிடலாம் என்ற பேச்சிலே எனக்கு இனிப்பும் கிடைப்பதில்லை, அதனை நான் விரும்புவதுமில்லை. எல்லாவற்றையும் ஏற்ற முறையில் தீர்த்துவைத்திடும் ஆற்றல் என்னிடம் நிரம்ப இருக்கிறது என்ற நம்பிக்கையும் எனக்கில்லை.

ஆனாலும் பெரியார் இவர்களை, "கூத்தாடிகள், கூவிக்கிடப்போர், அடுக்குமொழியினர், ஆபாச நடையினர், பணம் தேடிகள், பதவிப் பித்தர்கள், காமச்சுவைப் பேச்சில் கதை எழுதிப் பிழைப்போர், அன்னக்காவடிகள்" என்றெல்லாம் ஏச்சுப் பேசியபோது, சம்பத் எப்படி தனக்கு ஆதரவாக நின்றார் என்பதை அண்ணா எடுத்துச் சொன்னார்.

ஆனால், சம்பத்தின் விமரிசனம் கூர்மையானதாக ஆக ஆக, சுய விமரிசகராக இருந்த அண்ணா, சம்பத்தைப் பொறுத்த அளவில் மாறிப்போனார். "திராவிட நாடு ஒரு பகற்கனவு" என்று பேசிய சம்பத்தின் பேச்சைக் கேட்டுப் பரிதவித்த அண்ணா, "நான் சாமான்யன். அசகாய சூரத்தனமாகப் பேசுவதென்றால் எனக்கு அச்சம். அதுபோலவே இவ்வளவு காலம் லட்சக்கணக்கானவர்களிடம் ஊட்டிய நம்பிக்கையை மறந்து, எழுச்சியைத் துச்சமென்று மதித்து, எதையும் எப்போதும் விருப்பம்போல மாற்றிக்கொள்ளலாம் என்று துணிந்து, கொண்ட கொள்கையைக் குப்பை என்று கூறிட முடியாது... நான் மெத்தக் கூச்சப்பட்டவன்" என்றார் சம்பத்தின் அபார மாற்றத்தைக் குத்திக்காட்டும் வகையில்.

நடிகர்களைப் பற்றிக் குறை கூறிய சம்பத், அதற்கு முன்னால் அப்படிப்பட்ட குற்றச்சாட்டை எழுப்பாததையும் சொன்னார். அண்ணா முழுக்க முழுக்க கழகத்துக்கே பயன்பட வேண்டும் என்ற சம்பத்தின் யோசனைக்கும், கலைத் தொடர்பு வேண்டாம் என்றதற்கும், " 'பொதுத் தேர்தல் வருவதற்குள் ஒரு படத்துக்காவது கதை எழுதுங்கள் அண்ணா' என்று என்னிடம் சொன்னவரா நாட்டினரைப் பார்த்து, 'சேச்சே! இப்படி ஒரு தலைவனா! படத்துக்குக் கதை எழுதுகிறானே!' என்று பேசுவது" என்று பதிலளித்தார் அண்ணா. "நேரு வீசாத கண்டனமா? கேலிக் கணையா இனி ஒருவர் தி.மு.க. மீது வீசப் போகிறார்கள்? என்னை இழித்தும் பழித்தும் பேசுவது பற்றிக் கோபம் வரவில்லை. இருந்த நாட்களிலே நிகழ்ந்தவற்றைத்தான் எண்ணி எண்ணி உருகியபடி இருக்கிறேன். என்ன செய்வது, தம்பி, எனக்கு இதயம் இருக்கிறதே" என்று முடித்தார் அண்ணா.

சம்பத்தின் தமிழ் தேசியக் கட்சி தமிழ்நாட்டுக்கு சுய ஆட்சி உரிமையை வழங்க வேண்டும் என்று கோர, சம்பத்தையும் அவர் ஆதரவாளர்களையும் தோலுரித்துக் காட்டுவது அண்ணாவுக்கு மிக எளிதாகப் போயிற்று. அண்ணாவைப் போலவே, 'திராவிட நாடு' சுமையை எங்கே இறக்கிவைப்பது என்பது சம்பத்துக்கும் ஒரு பிரச்னையாக இருந்ததை அவரது சுயாட்சி உரிமை சொல்லியது. பிரிவினை பற்றிய சம்பத்தின் தலைகீழாகிப் போன வாதமும் ஏக இந்தியா என்ற அவருடைய சிந்தனையும், அண்ணாவை இவ்வாறு பதில் சொல்ல வைத்தது:

> வடநாடு நரகலோகமும் அல்ல; வடவர் யமகிங்கரரும் அல்ல என்றும் இத்துணை வேகமாக சம்பத்தின் பக்தி முற்றிவருகிற நிலை காணும்போது, இனி ஒரு புதிய சட்டமே செய்து, நாட்டுப் பிரிவினை கோருவோரைக் கடுஞ்சிறையில் தள்ள வேண்டும். அப்போதுதான் இந்திய ஒற்றுமை நிலைக்கும் என்று பண்டித நேருவுக்கே யோசனை கூறக் கூடும் என்றன்றோ தோன்றுகிறது.

அண்ணா அந்தச் சட்டம் பற்றிக் கூறியது சரியாகவே இருந்தது. ஆனால், சம்பத் அதன் காரணகர்த்தா அல்ல. 1962 ஏப்ரலில் கிடைத்த தி.மு.க.வின் தேர்தல் வெற்றி, தி.மு.க. தொடர்ந்து பிரிவினை வாதம் செய்ய முடியாதவாறு, 1963 அக்டோபரில் அரசியலமைப்புச் சட்டத்தில் பதினாறாவது சட்டத் திருத்தத்துக்கு வழி கோலியது. அண்ணாவின் புத்திசாலித்தனமும், எதார்த்த நிலைப்பாடும் கட்சிக்கு உண்டான சோதனையை, வாய்ப்பாக மாற்றின.

18

திராவிட நாடு கைவிடப்பட்டது!



வெற்றிகரமான சினிமா ஃபார்முலாவில் கட்சி தொடர்ந்து செல்லவும், நடிகர்கள் முக்கியப் பங்கு வகிக்கவும் அதுவரை ஒரு கேள்விக்குறியாக இருந்த சம்பத்தின் வெளியேறல் அந்தக் கொள்கைத் தடைகளை அகற்றியிருந்தது என்றாலும், சம்பத்தும் அவரது ஆதரவாளர்களும் வெளியேறியதால், கட்சி - அவர் கைவிடச் சொன்ன திராவிட நாடு கொள்கையைத் தொடர்ந்து வலியுறுத்தவும் நிர்ப்பந்திக்கப்பட்டு இருந்தது. சம்பத் வெளியேறியதால் எந்தப் பின்னடைவும் இல்லை, அடிப்படை லட்சியங்களைக் கட்சி கைவிடவில்லை என்பதைக் காண்பித்துக்கொள்ளவும் வேண்டியிருந்தது. சரியாக ஒரு மாதம் கழித்து, ‘‘துரோகிகள்’ விலகிய பிறகு, இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை எதிர்த்து 1961 மே 9-ம் தேதி ஒரு பேரணியை சென்னையில் தி.மு.க. நடத்தியது’ என்று எழுதினார் கலைஞர்.

சம்பத்தின் தமிழ் தேசியக் கட்சியை தோழமையோடு பார்த்த காமராஜர், அந்தக் கட்சிக்கு நேசக்கரம் நீட்டினார். காங்கிரஸுக்கும் தமிழ் தேசியக் கட்சிக்கும் இடையே அரும்பத் தொடங்கியிருந்த உறவைக் கண்டு கொதித்த அண்ணா, காமராஜரின் மீது தனது கடுமையைக் காட்டினார், "நீ என்ன செய்துவிட்டாய்? என்று கேட்கும் காமராஜருக்குக் கூறுகிறேன். கோலாகலமாக உட்கார்ந்து கொட்டமடித்த உங்களைப் பம்பரம் போல் ஊர் ஊராகச் சுற்றும்படி செய்திருக்கிறேன். இன்று 8 மந்திரிகளும் என் பின்னாலேயே பறந்து பறந்து வருகிறார்கள்" என்றார் அண்ணா.

காமராஜரையும், அவரது அமைச்சரவை சகாக்களையும் அண்ணா விரட்டிக் கொண்டிருந்தது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை காமராஜர், தி.மு.க. 1962-ல் சட்டமன்றத்தில் பெற்ற பதினைந்து இடங்களைக்கூடப் பெற முடியாமல் செய்ய வகுத்த வியூகம். ஸ்ருதி கூடிக்கொண்டே வந்த திராவிட நாடு கோரிக்கைக் கூச்சலுக்கு ஒரு முடிவுகட்டியே தீரவேண்டும் என்று காமராஜர் நினைத்தார். ஆனால், அண்ணாவோ திராவிட நாட்டைப் பற்றி முன்னெப்போதையும்விட விடாப்பிடியாக இருந்தார். "நாம் தன்னந்தனியாக விடப்பட்டாலும், அடக்குமுறைகள் ஏவப்பட்டாலும், பாலைவனத்தில் கொண்டுவிடப்பட்டாலும், நமது இறுதி மூச்சு உள்ளவரை திராவிடத்தின் விடுதலைக்குப் போராடி வெற்றி பெறுவோம்" என கட்சியின் மூன்றாவது மாநில மாநாடு 1961 ஜூலை மாதம் மதுரையில் நடந்தபோது அறைகூவல் விடுத்தார். "ஜின்னா அளவுக்கு வலிமை பெற்றவன் அல்லன் என்றாலும், இங்கே என்னை விட்டால் வேறு யாரும் கிடையாது. இந்தக் காரியத்தை நான்தான் செய்ய வேண்டியவனாக இருக்கிறேன். பாகிஸ்தான் கேட்ட முஸ்லிம் சமுதாயம் இருந்த அளவுக்கு இந்த திராவிட இனம் திரண்டிருந்தால், திராவிடம் கொடுக்காவிட்டால் நான் எடுத்துக்கொள்வேன் என்று என்னால் சொல்லமுடியும்" என்றும் அச்சமூட்டினார்.

அண்ணாவின் விவேகமற்ற பகட்டுப் பேச்சு, தமிழல்லாத பிற தென் மாநிலங்களில் இருபது ஆண்டுகளுக்குப் பின்னரும் திராவிட நாடு கோரிக்கைக்கு ஆதரவு இல்லாத எதார்த்த நிலையை வெளிச்சமிட்டுக் காட்டியது. அப்படி இருந்தபோதும், தி.மு.க.வின் வளர்ந்துவரும் பலம் காமராஜருக்குக் கவலையையே அளித்தது. 1961 ஆகஸ்ட் 10 - 12 தேதிகளில் டெல்லியில் நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டில், மதம் - மொழி குறித்து நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் உருவாகி வந்த பிரச்னைகளைச் சமாளிக்க தேசிய ஒருங்கிணைப்பு மாநாடு ஒன்றைப் பெரிய அளவில் நடத்த முடிவு

எடுக்கப்பட்டது. அப்போது காமராஜர், "தி.மு.கழகத்தின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கத் தேவையில்லை; அது தன்னாலே அழிந்துவிடும்; இப்போதே அதில் ஏற்பட்ட பிளவு, சண்டை - சச்சரவு எலக்ஷனுக்குப் பிறகு, இருக்கவே இருக்காது! அதைப் பற்றிக் கவனிக்காமல் இருந்துவிட்டால், அது தன்னாலே செத்துவிடும்" என்று பேசியதாக அண்ணா எழுதினார். அக்டோபர் 1961 மதுரையில் காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் காமராஜர், "அடுத்த தடவை தி.மு.கழகம் அடியோடு ஒழிக்கப்பட்டுவிடும்" என்று நேரு முன்னிலையில் சொன்னதாக அண்ணா கூறினார். மதுரையில் நேரு, தி.மு.க.வுக்கு மறைமுகமாக அறிவுறுத்துகிற மாதிரி, "காலங்காலமாக இந்தியா யாத்திரிகர்களின் நாடாக இருந்து வருகிறது. பனிபடர்ந்த இமயத்திலுள்ள பத்ரிநாத், கேதார்நாத் மற்றும் அமர்நாத் ஆகியவை தொட்டு, தெற்கே கன்னியாகுமரி வரை தேசம் முழுவதும் பழங்காலப் புனிதத் தலங்கள் இருந்து வருகின்றன... வெவ்வேறு அரசுகள் நடைபெற்றாலும், நாம் வெவ்வேறு மொழிகள் பேசினாலும், பாரதம் என்ற இந்த மாபெரும் பூமி புனிதமானதாக ஆண்டாண்டுகளாக நம்மை இணைத்து வைத்திருக்கிறது. இந்தப் பட்டிழை போன்ற பிணைப்பு இன்றும் நம்மை பலவிதங்களில் ஒன்றாகச் சேர்த்து வைத்திருக்கிறது" என்றார்.

இதற்கு மயங்கிவிடாத அண்ணா, "இந்தியா ஒன்றாக இருக்க வேண்டும் என்று வடவர்கள் சொல்வது, தென்னாட்டைச் சுரண்ட, நம் நாட்டை ஆள; ஆகவே அதிகாரத்தைக் கொடுத்துவிட்டு, 'இந்தியா ஒன்றாக இருக்கலாம்' என்பது, பாகத்தைப் பிரித்துக்கொண்டு ஒரே வீட்டில் வாழலாம் என்பதைப் போலத்தான்" என்று பதில் சொன்னார். மதுரை மாநாட்டில் நேரு, "உள்நாட்டுப் போர் மூண்டாலும் ஒற்றுமையைக் காப்போம்" என்று அறைகூவல் விட்டதற்கு, உணர்ச்சி வசப்பட்ட அண்ணா இப்படிப் பேசினார்:

> நேருவுக்குச் சொல்கிறேன்: ஒளிவு மறைவு இல்லாமல் சொல்கிறேன்.இதை நினைவிலேவைத்துக்கொள்ளுங்கள். நான் கட்டளையிட்டால் ரயிலே ஓடாது. தி.மு.கழகம் அனுமதி அளித்தால் தண்டவாளமே இருக்காது. ஓடுகின்ற ரயிலின் முன்னால் சிலபேர் பிணமானால் மற்றவர்கள் ஓடிப்போய் விடமாட்டார்கள். அஞ்சல் நிலையங்கள் இயங்காது. இந்த நிலைமைகள் வளர்ந்துவிட்டால், எப்போது அதை அடக்கலாம் என்றால், இப்போது வாண வேடிக்கை விட்டார்களே, அதைப்போல் எங்களையெல்லாம், சுட்டுப்

> பொசுக்கினால்தான் அது நடக்கும். அந்த அளவுக்கு ஆற்றலைத் தேக்கி வைத்துள்ளவன் நான். ஆனால், நான் ரத்தம் சிந்துவதை விரும்பாதவன். பிணம் விழுவதை வேண்டாதவன். எனவே, நாங்கள் இந்த முறைகளை அமைத்துக் கொள்ளவில்லை.

மேலும், பிரிவினை கேட்பது குற்றமாகும் என்று சட்டம் வரப்போகிறது என்ற செய்தி வரத் தொடங்கியவுடன், "நம்மிடம் இருப்பதில் எது கொதி தாங்கும் அரிசி, எது கூழாகும் அரிசி என்பதை அறிந்துகொள்ள இந்தச் சட்டம் பயன்படும்" என்றார் அண்ணா. ஆனால், தமிழக நிதியமைச்சர் சி.சுப்பிரமணியம், தேசிய ஒருமைப்பாட்டு மாநாடு சென்னையில் நடைபெற்றபோது,

> இப்போதே நாட்டுப் பிரிவினையைக் குற்றம் என்று சட்டம் இயற்றியிருப்பதாக சிலர் நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள். என்ன சட்டம் என்று படித்துக்கூடப் பார்க்காமல், நாட்டுப் பிரிவினை என்பதே குற்றம் என்று சட்டம் இயற்றியிருக்கிறார்கள் என்று குறை கூறுகிறார்கள். அப்படி இப்போது சட்டம் ஒன்றும் இல்லை. அப்படிச் சட்டம் இயற்ற வேண்டும் என்பதும் எங்கள் கருத்தல்ல. எங்கள் கருத்து, அதைப் பற்றி மக்களே சரிசெய்து கொள்வார்கள் என்பதுதான். பொறுத்திருந்து பார்க்க வேண்டும். அதைப் பற்றி எந்தவிதமான சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதைப் பொதுமக்களிடம் விட்டுவிடலாம் என்று விடப்பட்டிருக்கிறது. அந்தச் சோதனையும் பிப்ரவரி (1962) மாதத்தில் வர இருக்கிறது என்றார்.

சி.சுப்பிரமணியத்துக்கு பதில் அளிக்கிற மாதிரி, "எங்களுடைய வாதங்களை நீங்கள் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம். ஆனால், எங்களுடைய தூய்மையான இதயத்தை தயவுசெய்து சந்தேகப் படாதீர்கள்" என்ற அண்ணா தொடர்ந்தார்:

> நாங்கள் இந்தக் கொள்கையில் எங்களை ஈடுபடுத்திக்கொண்ட நேரத்தில், இழிமொழியும் பழிச்சொல்லும் எங்களை வந்து தாக்கும் என்று உணர்ந்த பிறகுதான் தேர்ந்தெடுத்துக் கொண்டோம். ஆனால், நாங்கள் கேட்கிற அந்தக் கோரிக்கை இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டது என்றால், நாங்கள் அத்தனை பேரும் எங்களுடைய ரத்தத்தைச் சிந்தி அடைய வேண்டும் என்று எண்ணிக்கொண்டு இருக்கிறோம். ஆகையால், கத்தி இருந்தால்



அண்ணா, பெரியார்

கூர்மையாகத் தீட்டிக்கொள்ளுங்கள். சட்டம் இருந்தால் விரைவில் அமலுக்குக் கொண்டுவாருங்கள். தனிப்பட்ட முறையில் நாங்கள் பெரிய துணிச்சல்காரர்கள் என்பது அல்ல. நாங்கள் அந்த லட்சியத்தை அவ்வளவு பரிபூரணமாக நம்பிக்கொண்டு இருக்கிறோம்.

அண்ணா, "திராவிட நாடு, திராவிடர்களின் உரிமை" என்றார். "நம்முடைய உரிமையை நாம் கேட்கிறோம். அதுவும் வரலாற்றின் அடிப்படையிலே, பண்பாட்டின் அடிப்படையிலே கேட்கிறோம்" என்ற அண்ணாவுக்கு, "உங்களுடைய வாதத்தை ஒப்புக்கொண்டு எடுத்துக்கொண்டாலும், வரலாற்று அடிப்படையில் பார்த்தால், எந்தக் காலத்தில் 'திராவிட நாடு' ஒன்றாக, ஒரே அரசியலின் கீழ் இருந்திருக்கிறது?" என்று பொருத்தமாகவே கேட்டார் சுப்பிரமணியம். "வரலாற்றை வைத்துக்கொண்டு யாரையும் ஏமாற்றமுடியாது" என்றார் அண்ணா. "ஒரு காலத்தில் தற்காலத்திய நாட்டு எல்லைகளெல்லாம் இருக்கப்போவதில்லை" என்ற சுப்பிரமணியம், அண்ணாவைப் பரந்த பார்வை கொள்ளச் சொன்னார். "உலகப் பொதுமொழியாகிய ஆங்கிலம் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப் படுமென்று நீங்கள் சொல்கிறீர்கள். அப்போது, நான்கு மொழி பேசக்கூடியவர்கள் ஒன்றாக

இருக்கமுடியுமா? அப்படியானால், ஏன் ஏழு மொழிகள், பத்து மொழிகள் பேசுகிறவர்கள் ஒன்றாக இருக்க முடியாது?" என்று கேட்டார். ஆனால், ஐம்பதாண்டுகளுக்குப் பிறகும் பிரிவினை குறித்து இறுதியான முடிவு எட்டப்படவில்லை என்பதற்கு உதாரணம் கொசாவோ. (2008, பிப்ரவரியில் தனி நாடாக தன்னைப் பிரகடனம் செய்துகொண்ட கொசாவோவை இதுவரை சுமார் 70 நாடுகளே அங்கீகரித்துள்ளன.)

முடிவாக, "இன்றைக்கு மக்கள் முன்னிலையில், பிரிவினை அடிப்படையில், தேர்தலுக்கு வாருங்கள்" என்று சுப்பிரமணியம், தி.மு.க.வுக்கு சவால் விடுத்தார். திராவிட நாடு பற்றி சி.எஸ். விரித்த வலையில் அண்ணா அப்போதும் சரி, பின்னரும் சரி விழவில்லை. "இன்றைக்கு மக்கள் தீர்ப்பளிக்காவிட்டாலும், ஒரு முறையல்ல, இன்னொரு முறை, இன்னுமொரு முறை என்று பார்ப்போம்" என்றார், அந்தச் சவாலின் கனத்தை உணர்ந்திருந்த அண்ணா. தி.மு.க.வின் வளர்ச்சியை அவர் திராவிட நாட்டுக் கோரிக்கைக்குக் கிடைத்த ஆதரவாக எடுத்துக்கொள்ளவில்லை. நீண்டகால காங்கிரஸ் ஆட்சியைக் கண்டு வெறுத்துப்போனதாலேயே தி.மு.க.வுக்கு மக்கள் ஆதரவு இருப்பதாக அண்ணா கணித்ததாகத் தெரிகிறது. திராவிட நாடு, 1957 தேர்தல் அறிக்கையில் இடம் பெறாவிட்டாலும், கட்சியில் ஏற்பட்ட பிளவு காரணமாக, இப்போது மறுபடியும் தொலைநோக்கு இலக்காக அது உருப்பெற்றது. தி.மு.க.வின் ஐம்பது பக்கத் தேர்தல் அறிக்கை சோஷலிஸ பொருளாதாரம், நேரடி வரி, வங்கிகளை தேசியமயமாக்குதல், எண்ணெய் வளக் கண்டுபிடிப்பு, அணுமின் நிலையம் போன்றவற்றை அடக்கியிருந்தது. நிலமற்ற ஆதிதிராவிட குடும்பத்தினருக்கு மூன்று ஏக்கர் பாசன நிலம், ஐந்து ஏக்கர் வறண்ட நிலம் என்ற உறுதிமொழியையும் அறிக்கை சொன்னது. காங்கிரஸின் நில உச்சவரம்பு மசோதா மூன்று முறைகள் விவாதிக்கப்பட்டாலும், காங்கிரஸ், இந்த விஷயத்தில் விரைந்து செயல்படத் தயங்கியது. "இவ்வளவு காலம் பிடித்திருப்பதால், நிலச் சொந்தக்காரர்கள், இந்தச் சட்டம் வந்தால் தங்களைப் பாதிக்காமல் இருக்கவேண்டும் என்பதற்காக, பல்வேறு வகையில் நிலத்தைப் பிரித்து எழுதிக் கொண்டார்கள் என்பதை ஒளிவுமறைவு இல்லாமல் அமைச்சர் அவர்களே இந்த மன்றத்தில் பலமுறை ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள்" என்றார் அண்ணா. "இது உச்சவரம்பு மசோதா அல்ல; மிச்சமிருப்பதற்கு வரம்பு கட்டும் மசோதா என்பது மட்டுமல்ல; இதன்மூலம் பாதிக்கப்படுகிற ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு அடைக்கலம் அளிக்கும், அபயம் அளிக்கும் மசோதா என்றுதான் நான் நம்புகிறேன்" என

வாதிட்டார். பின்னர் ஒரு பொதுக்கூட்டத்தில், "தி.மு.கழகம் கோட்டையில் ஆளும் பொறுப்பில் அமருமானால், இன்று நிலத்தை விடாமல் காப்பாற்றி வைத்துக்கொண்டு இருக்கிறவர்களிடத்தில் உள்ள நிலங்களை எல்லாம் நிச்சயமாகப் பறிமுதல் செய்வோம். நிலமில்லாத ஏழைகளுக்கு நிலம் வாங்கித்தருவதில் தி.மு.க. நிச்சயம் ஈடுபடும்!" என அறிவித்தார் அண்ணா. நில உச்சவரம்பை காங்கிரஸின் முப்பதிலிருந்து பதினைந்து ஏக்கருக்குக் கொண்டுவரக் கட்சி விரும்பியது.

1962 பொதுத் தேர்தல்

1967 தேர்தலுக்கு முன்மாதிரியாக, முஸ்லிம் லீக், கம்யூனிஸ்ட்டு, ஃபார்வர்டு பிளாக் மற்றும் வலதுசாரி சுதந்திரா கட்சி ஆகியவற்றுடன் தேர்தல் கூட்டணி அமைக்க தி.மு.க. திட்டமிட்டது. காங்கிரஸல்லாத வாக்குகளை சிதறாமல் ஓர் அணிக்கு கொண்டுவரும் பேரவா இந்த முயற்சியில் தெரிந்தது. திராவிட கட்சிகளை இன அடிப்படையில் வெளிப்படையாக துவேஷ பிரசாரம் செய்பவர்கள் என்றும், சான்றற்ற, நிரூபிக்கப்படாத முரண்பாடுகளைக் கூறுபவர்கள் என்றும் ராஜாஜி குற்றம் சாட்டி வந்திருந்தும், அண்ணாவும், அவருடைய தம்பிகளும் ராஜாஜியை 'சாணக்கியர்', 'மாக்கியவல்லி' 'குள்ளநரி' என்றும் பிற பெயர்களிட்டும் அழைத்திருந்தபோதும், இரண்டு தரப்பின் பொதுவான இலக்கான காங்கிரஸ் எதிர்ப்பு அவர்களை இணைத்தது. "தேர்தல்களின்போது ராஜாஜி பகிரங்கமாகவே தி.மு.க.வுக்கு ஆதரவளித்தார். இது தி.மு.க.வுக்கு தார்மீக உந்துதலை அளித்தது மட்டுமின்றி, அதற்கு கண்ணியத்தையும், மதிப்பையும் தேடித்தந்தது" என்று சுப்பிரமணியம் குறிப்பிட்டார். ராஜாஜிக்கு, காங்கிரஸைப் பதவியிலிருந்து இறக்கக் கிடைத்த கருவியாக தி.மு.க. அமைந்தது. தி.மு.க-வுக்கு ராஜாஜி செய்ததை சி.எஸ். இப்படிச் சொன்னார்.

இறுதியில் தன்னுடைய வழக்கமான கூட்டணிக் கட்சியான முஸ்லிம் லீகுடன் மட்டுமே உறவு என தி.மு.க. கூறும் நிலை பிறந்தது. இருப்பினும் பல தொகுதிகளில் கூட்டணி முன்பே அறிவித்திருந்த வேட்பாளர்களே போட்டியிட்டனர். பல தொகுதிகளில் சுதந்திரா கட்சியினர் தி.மு.க.வையும் காங்கிரஸையும் எதிர்த்தனர். இந்த நிலையும் தி.மு.க.வுக்கே சாதகமாயிற்று. காங்கிரஸ் வாக்குகளையே சுதந்திரா பிரித்தது.

தங்கள் பிரசார உத்தியின் மீது இருந்த நம்பிக்கையில் சுப்பிரமணியமும் காமராஜரும் காங்கிரஸுக்குக் கூடுதலாக 15 முதல் 30 இடங்கள் கிடைக்குமெனக் கணித்திருந்தனர். வடநாட்டார்

- தென்னாட்டார் என்றும், உயர்சாதி - தாழ்ந்த சாதி என்றும் மலினமாக பிரசாரம் செய்ததாக தி.மு.க.வை காமராஜர் கடுமையாகச் சாடினார்.

'போராட்டங்களையும், வேற்றுமைகளையும் தூண்டிவிடத்தான் கட்சிகளா?' என்று கேட்டார். ஏழைகளே தான் வணங்கும் கடவுள் என்றார். பகுத்தறிவுவாதியான பெரியாரோ, உணர்ச்சிவயப்பட்டு: 'எனக்கு வயதாகிவிட்டது. நான் அதிகநாள் இருக்கமாட்டேன். நான் போனபிறகு, காமராஜர் தமிழர்களின் நலனைப் பாதுகாப்பார். அவர்தான் என் வாரிசு' என்று அறிவித்தார். மாறாக, 83 வயது ராஜாஜி, 'காங்கிரஸைத் தோற்கடியுங்கள். அதன் பலத்தைக் குலையுங்கள்' என்றார்.

தி.மு.க.வுக்காக எம்.ஜி.ஆர். பிரசாரம் மேற்கொண்டார். 'நான் பல ஊர்களுக்குச் சென்று, கழகக் கூட்டங்களில் பேசினேன். ஒருநாளைக்கு ஏறத்தாழ முப்பது, நாற்பது கூட்டங்களில் பேசியிருப்பேன். என்னிடம் சொல்லப்பட்ட கூட்டங்கள் பத்து என்றால், முன்னறிவிப்பு இன்றி ஏற்பாடு செய்து, வழிமறித்து நடத்தப்பட்ட கூட்டங்கள் முப்பதாவது இருக்கும். அந்த நிலையில் நான் ஊர் சுற்றிக்கொண்டிருந்தபோது, சென்னையில் என் மனைவி சதானந்தவதி எமனோடு போராடிக் கொண்டிருந்தாள். தேர்தல் முடிந்ததும் சதானந்தவதி காலமானாள்' என்று எம்.ஜி.ஆர். தனது பிரசாரத்தைப் பற்றி எழுதியிருக்கிறார். சதானந்தவதியின் இறுதிச் சடங்குக்கு வந்திருந்த அண்ணா, 'நடக்கக் கூடாதது நடந்துடுச்சு. என்ன செய்யறது? சிலசமயம் நாம் நினைக்கறது நடக்கறதில்லே. நினைக்காதது நடக்குது. இதுதான் இயற்கை. இனிமே மனச திடப்படுத்திக்கிட்டு மேலே செய்யவேண்டிய காரியத்தைப் பாருங்க' என்றதையும் பதிவு செய்திருக்கிறார் எம்.ஜி.ஆர். அதன்பிறகு, தனது கண்ணைத் துடைத்தவாறு அண்ணாவைப் பார்த்து எம்.ஜி.ஆர்., "இன்னைக்குத்தானே வோட்டு எண்ற நாள்?" என்று கேட்க, அண்ணா அவரை அதிசயத்தோடு பார்த்தவாறு, 'ஆமாம்' என்று தலையை ஆட்டினார். "நீங்க இங்க இருக்கீங்களே? அங்கே ஏதாவது தப்பு நடந்துட்டா?" என்று கேட்ட எம்.ஜி.ஆரிடம் அண்ணா சொன்னார்: "இனிமே தப்பு நடக்குறதுக்கு ஒண்ணுமே இல்லே!"

பிரசாரத்தின்போதே அண்ணாவுக்கு வெற்றிவாய்ப்பு குறைவு என்று எம்.ஜி.ஆர். உணர்ந்திருந்தார். "அண்ணா அவர்கள் வெற்றி பெற வாய்ப்பிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எனவே, எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்றேன்" என எம்.ஜி.ஆர். தான் தொண்டர்களிடம் சொன்னதை சொல்லியிருக்கிறார்.

அண்ணாவின் தோல்வி

அண்ணாவுக்கு மட்டும்தான் சோதனை என்றில்லை; கலைஞரைத் தவிர, 1957-ல் வென்ற மற்ற 14 பேருமே தங்கள் இடத்தை இழந்திருந்தனர். ஆனாலும், மொத்தத்தில் போட்டியிட்ட 142 இடங்களில், சட்டமன்றத்தில் தி.மு.க. ஐம்பது இடங்களையும், முப்பத்து நான்கு லட்சம் வாக்குகளையும், போட்டியிட்ட 18 நாடாளுமன்ற இடங்களில், ஏழு இடங்களையும் வென்றிருந்தது. சுதந்திரா கட்சி 96 இடங்களில் போட்டியிட்டும் ஆறே இடங்களை மட்டுமே பிடிக்க முடிந்தது. சுதந்திரா காங்கிரஸை எதிர்த்துப் போட்டியிட்ட தொகுதிகளில் சிறிதளவு வித்தியாசத்தில் தி.மு.க. வெற்றி பெற்றிருந்தது. சுதந்திரா காங்கிரஸ் வோட்டுகளை பிளந்ததும் அதிருப்தி காங்கிரஸ் சீர்திருத்த கட்சி போட்டியிடாததும் தி.மு.க.வின் வெற்றிக்கு உதவியாக இருந்தது. இந்தமுறை மத்திய தமிழகத்திலும், தென் தமிழகத்திலும் கட்சி கணிசமான வாக்குகளைப் பெற்றது. எனினும், 139 இடங்களில் வென்றிருந்த காங்கிரஸ் கட்சியே ஆட்சி அமைத்தது. தேர்தல் களத்தில் காங்கிரஸின் 'ஏகபோகம்' அடிவாங்கியதோடு, 1967 தேர்தலில் ஆறு மாநிலங்களை காங்கிரஸ் இழக்கப்போகிறது என்று முன்னெச்சரிக்கை செய்வது போல, அடுத்த மாநிலமான கேரளத்தில் கம்யூனிஸ்ட்டுகள் வெற்றி பெற்றிருந்தார்கள். இந்தப் பின்னடைவுகள் இருப்பினும், காங்கிரஸ் வெற்றி குறிப்பிடும்படியே இருந்தது. தன் தேசிய வாக்குகள் ஒன்றரை சதவிகிதமே குறைய 46 சதவிகித வாக்குகளை காங்கிரஸ் பெற்றிருந்தது. நாடாளுமன்றத்திலும் காங்கிரஸுக்குப் பத்து இடங்களே குறைந்திருந்தன.

தி.மு.க.வுக்குக் கிடைத்த முப்பத்து நான்கு லட்சம் வாக்குகளும் பிரிவினைக்குக் கிடைத்த வாக்குகள் என காமராஜர் எண்ணாவிட்டாலும், லண்டன் 'டைம்ஸ்' இதழ், 'தி.மு.க.வின் கோரிக்கை வெளிப்படையாகவும், 'சுயாட்சி'யாகவும், மறைமுகமாக 'பிரிவினை'யாகவுமே இருக்கிறது' என்றது, காங்கிரஸின் அச்சத்தை ஒத்திருந்தது. எனினும் தி.மு.க. அண்ணாவின் தோல்வியால் மிகவும் துவண்டுதான் இருந்தது. சோகமே உருவாக இருந்த தம்பிகளை அண்ணா, 'அறுவடை வெற்றியுடன் முடிவுற்றதை எண்ணி அகமகிழ்ச்சி கொள்ளவேண்டிய நேரத்தில், அண்ணன் தோற்றுப் போனானே என்பதையே எண்ணி எண்ணி ஏங்கிக் கிடப்பது சரியன்று; முறையன்று; தேவையில்லை; எனக்குப் பிடித்தமானதுமன்று' என எழுதி தேற்ற வேண்டியிருந்தது. அண்ணாவே தன் தோல்வியை முதலாம் ரிச்சர்ட் மன்னனின் நிலையோடு ஒப்பிட்டிருந்தார்: "புனிதபுரியாம் ஜெருசலம் நகருக்குள், அணிவகுத்துச் செல்லலாம். அதை நடத்திச் செல்பவன்,

ஜெருசலம் நகருக்குள் செல்லக்கூடாது என்று கூறிவிட்டனர். எனவே அணிவகுப்பு புனிதபுரிக்கு உள்ளே சென்றது. அதை நடத்திச் சென்ற ரிச்சர்ட், ஜெருசலம் நகர நுழைவாயிலில் நின்றுகொண்டிருந்தான். புனிதப் போரில் ஒரு கட்டம்தான், ஜெருசலம் நகருக்குள் கிறிஸ்துவர்கள் செல்லலாம் என்று சாலடீன் அனுமதி அளித்து, போர் நிறுத்த ஏற்பாட்டுக்கு இசைவு அளித்தது." என்ற அண்ணா "என்னை ரிச்சர்ட் நிலைக்கு நான் உயர்த்திக்கொள்ள இதை எழுதவில்லை. இதைப் படித்துவிட்டு, மாற்றார்களும் (காங்கிரஸாரும்) தங்களை சாலடீனுடன் ஒப்பிட்டுக் கொண்டுவிட வேண்டாம்." என்றார்.

ஆனாலும், தோல்வி அவரை மிக அதிகமாகவே பாதித்திருந்தது. "மக்களை மிரட்டியும், மயக்கியும் வாக்குகள் பறிக்கப்பட்டன. பணம் தாராளமாகப் படையெடுத்தது" என்றார் அண்ணா. (ஏதோ இன்றைய தேர்தல்களைப் பற்றிச் சொல்வது போல் தோன்றுகிறது அல்லவா?!) "நான் காஞ்சிபுரத்தில் பேசியபடி, என்னுடன் வெங்கடேசப் பெருமாள் போட்டி போட முன்வந்துவிட்டார். ஆனால், அந்த நிலைமையையும் மீறி, வெற்றி கிடைத்தால்தான் உண்மையான வெற்றியாகும்." என்றார் அண்ணா. பெருமாள் படத்தின் மீது சத்தியம் செய்து வோட்டு வாங்கிக் கொண்டதாக வெளியான செய்தியை அவர் இப்படி சொல்லியிருந்தார். "எந்தக் கருத்தைக் கொண்டோ, எதற்கு வயப்பட்டோ என் தொகுதி மக்கள் என்னை ஆதரிக்க மறுத்துவிட்டார்கள். என்றாலும், மீண்டும் அவர்களின் நல்லெண்ணத்தையும் ஆதரவையும் பெறுவதற்கே நான் பணியாற்றி வர இருக்கிறேன்" என்று மிகவும் அடக்கத்தோடு முடித்திருந்தார்.

தேர்தல் முடிவுகள் வெளியானதுமே, அண்ணா பெங்களூரில் உள்ள ஜெயநகரில் இருக்கும் ஜெயவிலாஸுக்குச் சென்றுவிட்டார். 'பெங்களூரில் ஜெயநகர் என்ற பகுதியில், ஜெயவிலாஸ் என்ற இல்லத்தில் தங்கியிருந்துவிட்டு வருகிறேன். வேடிக்கை அல்ல தம்பி! விசித்திரம். ஆனால், உண்மை. தோல்வி கிடைத்தும் நான் சென்று தங்கியிருந்த இடம் ஜெயவிலாஸம். ஜெயநகர்! போதுமா விசித்திரம்!' என்று எழுதினார் அண்ணா. பின்னர், பெங்களூரிலிருந்து 160 கி.மீ. தொலைவில் இருக்கும் சிரவணபெலகொலாவுக்குப் பயணமானார். அங்கேதான் ஜைன முனி கோமதீஸ்வரரின் பிரமாண்ட சிலை இருக்கிறது. 'குன்றின் மீது அறுபதடி உயரம் அந்தப் பேருரு. பிறந்த மேனி! திறவாக் கண்கள். எனினும் கனிவு வழிகிற நின்றநிலை! காண்போரை நின்றநிலையினராக்கிவிட்ட கவர்ச்சி! தன்னை மறந்த நிலையில் பிறந்த மேனியாக நிற்கும் அந்தப் பேருரு, மனதை ஓரிடத்தில்

பதியவைத்து, மற்ற எதையும் எண்ண முடியாத நிலைபெற்று இருக்கும். காட்சி கண்டவரோ கருத்தறிவார்; கண்டதனை விளக்கிட முடியாது, உண்மை!' என்று அதைக் கண்டு வியந்து பிரமித்து அண்ணா எழுதினார்.

காஞ்சிபுரம் தொகுதியைக் குறிப்பிடுகையில், "காஞ்சிபுரம் நகரில் எனக்கு வோட்டுகள் குறைவாகக் கிடைத்த பகுதிகள் யாவும் நமது கழகக் கூட்டங்கள் தொடர்ந்து சாதாரண காலத்தில், அதிகமான அளவில், நடத்தப்படாத இடங்கள். வோட்டுகள் கிடைத்துள்ள வகையை ஆராய்ந்து பார்க்கும்போது, சென்ற தேர்தலின்போது கழகத்துக்கு அதிக வாக்குகள் கிடைத்த பல இடங்களில், காங்கிரஸுக்கு அதற்கு அடுத்தபடியாகவும், கம்யூனிஸ்ட்டுக்கு மூன்றாவதாகவும் வோட்டுகள் கிடைத்தன. இந்தமுறை காங்கிரஸுக்குக் கிடைத்த வாக்குகள், கழகத்துக்குக் கிடைத்ததைவிட அதிகம்: எந்த முறையில் என்றால், முன்பு காங்கிரஸுக்கும் கம்யூனிஸ்ட்டுக்கும் தனித்தனியாகக் கிடைத்த வாக்குகளின் கூட்டு, இம்முறை காங்கிரஸுக்குக் கிடைத்திருக்கிறது. கழகத்துக்கான ஏற்பாடு வேலைகளும், சிக்கல் நீக்கும் காரியமும், மற்ற தொகுதி வேலைகளும் என்னை அந்த அளவுக்கு நகரில் வோட்டுக் கேட்க இடம் தரவில்லை" என்றார் அண்ணா. ஆனால், 1957 தி.மு.க-வுக்கும் 1962 தி.மு.க-வுக்கும் வித்தியாசம் இருந்ததும் ஒரு முக்கிய காரணம். கட்சி போலவே அண்ணாவும் வளர்ந்திருந்தார். 'அண்ணா பல தொகுதிகளுக்குச் செல்ல வேண்டியிருந்தது. "ஏன்யா, வோட்டு வாங்கப் போறவர் வராம, நீங்க ஏன் வந்தீங்க?" என்று பொதுமக்களில் பல பேர் தலைவர்களைப் பார்த்துக் கேட்டார்கள். ஒரு பலத்த அதிருப்தி ஏற்பட இந்த முறை காரணமாயிற்று' என்று எழுதியிருக்கிறார் இராம.அரங்கண்ணல். மாறாக, 1957 தேர்தலின்போது, அண்ணா ஒவ்வொரு வாக்காளரையும் சந்தித்திருந்தார். "போன தேர்தலை வெறும் தொண்டர்கள் மட்டும் இருந்து நடத்தினோம். இந்தத் தேர்தல் நாளன்று வட்டமிட்ட தலைவர்களும் கார்களும் மட்டும் 200-க்குமேல் இருக்கும். அண்ணா நம்மைக் கேட்காமல் யாரையோ விட்டுக் கேட்கச் சொல்கிறாரே - இவ்வளவு கார்கள் உலா வருகின்றனவே - ரொம்ப வசதியாகிவிட்டாரோ - இவைதான் காஞ்சியில் அண்ணா தோற்றதற்கான முக்கிய காரணங்களாகும்" என்றார் அரங்கண்ணல். எனினும் துயரம் என்னவெனில், 'ஓராயிரம் எண்ணங்களைத் தொகுத்துச் சொல்லி, சட்டமன்றத்தில் அண்ணா உரை நிகழ்த்துவாரே, அந்தப் பெருமகனின் இடத்தில், ஒருநாள்கூடச் சட்டசபையில் வாய் திறக்காத ஒரு பஸ் முதலாளி வந்து உட்கார்ந்திருந்தார்' என்று அண்ணாவின் தோல்வியைக் குறித்து

கலைஞர் எழுதினார். தனது தோல்வியையும் மீறி கட்சியின் வெற்றி குறித்துப் பெருமையடைந்த அண்ணா, சட்டமன்ற, நாடாளுமன்ற வெற்றிகள் எல்லாம், இறுதியாக திராவிட நாட்டுக்கு இட்டுச் செல்லும் படிக்கட்டுகளே என்று கூறினார். 'மக்கள் தீர்ப்பு நாட்டு விடுதலைக்குக் கிடைத்துவிட்டது என்று திருவிடத்தைப் பிணைத்து வைத்துள்ள பேரரசு உணர்ந்து, மதித்து விடுதலை அளித்திடின் நன்றி கூறுவோம். நல்லெண்ணத்தை எந்நாளும் மறவோம்' என எழுதினார் அண்ணா.

மாநிலங்களவை

அண்ணாவின் காஞ்சிபுரம் தோல்வி ஒருவகையில் நல்லதாகப் போயிற்று; தமிழ்நாட்டுக்கு வெளியேயும் அண்ணா அறியப்பட அது உதவியது. ஏனென்றால், அதன்பின்னர் அவர் மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு டெல்லி சென்றார். முதன்முதலாக பென்னாகரம் நன்றியறிவிப்பு பொதுக்கூட்டத்தில் "தி.மு.க. சார்பில் வெற்றி பெற்ற ஏழு பேருக்கு வழிகாட்ட அண்ணா டெல்லி மாநிலங்களவைக்கு வரவேண்டும்" என்று க.ராசாராம் சொன்னாலும், "நான் டெல்லிக்குச் செல்லும் நிலை ஏற்பட்டது இருக்கிறதே, அது தோழர் தர்மலிங்கத்தின் வெற்றிகளிலே ஒன்று. இதமாகப் பேசிப் பேசி என்னை 'ராஜ்யசபை' செல்வதற்கு இசையும்படி செய்வதிலே அவர் வெற்றி பெற்றார்!" என்று திருவண்ணாமலை தர்மலிங்கத்துக்கே தனது ராஜ்யசபை முடிவைக் காணிக்கையாக்கினார் அண்ணா. ஆனால், டெல்லிக்குச் சென்ற பதினைந்தே நாட்களில் அண்ணா தமிழ்நாட்டையும் அவரது தினசரி பழக்கங்களையும் மறக்கமுடியாதவராகத் தவித்தார். கட்சி நடவடிக்கைகளில் இருந்தும், தம்பிகளிடம் இருந்தும் அவர் எப்போதும் இத்தனை நீண்டகாலம் பிரிந்து இருந்ததில்லை. அது அவருக்குப் பிடிக்கவே இல்லை. 'தமிழகத்தை விட்டுக் கிளம்பிப் பதினைந்து நாட்களுக்கு மேலாகிவிட்டன. என் எண்ணம் அவ்வளவும் தமிழகத்திலே நமது கழகப்பணி எந்த நிலையில் இருக்கிறதோ என்பது பற்றியேதான். தொடர்ந்து பதினைந்து நாட்கள் இயக்கப் பணிக்காகத் தோழர்களிடம் தொடர்புகொள்ளும் காரியமாற்றாது இருந்து பழக்கமில்லை. பிடிக்கவும் இல்லை. தம்பி கருணாநிதிக்கு எழுதிய கடிதத்திலே இதைக் குறிப்பிட்டு இருந்தேன்' என அண்ணா எழுதினார்.

மே மாதம் முதல் நாள் காலை அண்ணாவின் மாநிலங்களவை கன்னிப் பேச்சுக்கு வாய்ப்பு தரப்பட்டு இருந்தது. 'முன்னாள் இரவு மொட்டைமாடியில் வெட்டவெளியில் படுத்தபடி, நாம் எங்கிருந்து புறப்பட்டு, எங்கு வந்திருக்கிறோம். எங்கெங்கெல்லாம் பேசியிருக்கிறோம், நாளை எங்கு பேசப்போகிறோம், இங்கு

திராவிட நாடு பற்றிப் பேசும் வாய்ப்புப் பெறும் அளவு கழகம் பதிமூன்றே ஆண்டுகளில் வளர்ந்து இருக்கிறதல்லவா என்றெல்லாம் எண்ணியபடி படுத்துக்கிடந்தேன். மேஜை மீது பல புத்தகங்கள், விளக்கொளி பளிச்சென்று! ஆனால் படிக்கக்கூடத் தோன்றவில்லை. நினைத்து நினைத்து மகிழத்தான் தோன்றியது. இத்தனை வளர்ச்சிக்கும் காரணமாக உள்ள (தம்பி) நீயோ, நெடுந்தொலைவில், நான் சாம்ராஜ்யங்களின் சவக்குழிகள் நிரம்பிய புதுடெல்லி நகரில். காங்கிரஸ் ஏகாதிபத்தியத்தின் அடித்தளம் என்று கூறத்தக்க பாரத ஒற்றுமை எனும் ஏற்பாட்டுக்கு எதிர்ப்பானது என்று கருதுவோரால், மிகப் பலமாகத் தாக்கப்பட்டுவரும் நாட்டுப் பிரிவினை பற்றி, நாளை அரசவையில் பேசும் வாய்ப்பு கிடைத்தது குறித்த எண்ணத்தை அணைத்தபடி உறங்கலானேன்' என அண்ணா எழுதியிருக்கிறார்.

நடைமுறைக்கு மாறாக, அண்ணாவின் கன்னிப் பேச்சில் குறுக்கீடு நேர, 'நான் குறுக்கீடுகளுக்கு வெட்கப்படவில்லை. அவற்றை வரவேற்கிறேன்' என்ற அண்ணா தொடர்ந்தார்:

> இந்தியாவின் ஒரு பகுதியாக இப்போதும் இருக்கும் நாட்டிலிருந்து நான் வருகிறேன். நாங்கள் வேறு இனம். அதற்காக எதிரிகள் அல்ல. நான் திராவிட இனத்தைச் சார்ந்தவன். என்னை திராவிடன் என்று கூறிக்கொள்வதில் பெருமைப்படுகிறேன். அதற்காக நான் வங்காளிகளுக்கோ, மராட்டியர்களுக்கோ, குஜராத்திகளுக்கோ எதிரி அல்ல... திராவிடர்களிடம் உறுதியான ஏதோ ஒன்று உள்ளது. வித்தியாசமானதாக, முற்றிலும் தனிப்பட்டதாக எதையோ அவர்கள் நாட்டுக்கு அளிக்கவல்லவர்கள் எனக் கருதுகிறேன். அதற்காகத்தான் சுய நிர்ணய உரிமையை எங்களுக்குக் கொடுக்கவேண்டும் என நான் கோருகிறேன்.

பிரிவினையின் பயங்கர விளைவுகள் பற்றி தனக்குத் தெரியும் என்றும் அதன் விளைவுகளைச் சந்தித்தவர்களுக்கு தான் இரங்குவதாகவும் சொன்ன அண்ணா, "தீய விளைவுகள் ஏற்பட்டுவிடுமோ என அஞ்சவேண்டாம். அங்கேயும் இங்கேயுமாக அதிருப்தியுற்ற பகுதிகள் கலவையாக இருப்பதைவிட, தேசங்களின் கூட்டாக இந்தியா இருக்க என் விருப்பத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்!" என்றார். எந்த வெறுப்பு காரணமாகவும் தாம் திராவிட நாடு கோரவில்லை என்றும், பிரிந்தால் சிறிய நாடாக, அடக்கமாக, ஒரே இனத்தவரைக் கொண்டதாக, ஒரே உணர்வுள்ள மக்கள் ஒன்றிணைந்து வாழ வகை செய்யும் நாடாக அது இருக்கும் என்றார். அப்போது பொருளாதார முன்னேற்றத்தை

மேலும் வலுவாகவும், சமூக முன்னேற்றத்தை மேலும் பயனுள்ளதாகவும் ஆக்கமுடியும் என்றார்.

பின்னர், தம்பிகளுக்கு அன்றைய அனுபவத்தை எழுதுகையில்,

'நான் அந்த சபையில் திராவிட இனத்தைச் சேர்ந்தவன் என்று சொன்னபோது, என்னையும் அறியாமல் என் உடம்பு புல்லரித்தது' என்று குறிப்பிட்டிருந்தார். மாநிலங்களவையில் பலருக்கும் திராவிட நாடு கோரிக்கை அதிர்ச்சியை அளித்தது என்ற அண்ணா, தனது பேச்சும், திராவிட நாடு பிரச்னையும் பெற்ற கவனிப்பைக் கொண்டு பரவசமுற்றிருந்தார். இந்தியாவுக்கு வெளியே, 'டைம்ஸ்' பத்திரிகை அண்ணாவின் உரையைக் குறிப்பிட்டு, 'தனி தென்னிந்திய மாநிலக் கோரிக்கை' கேட்கப் பட்டதாகத் தலைப்புக் கொடுத்து செய்தி வெளியிட்டிருந்தது.

எனினும், அண்ணாவுக்கு பதில் சொன்ன நேரு, மாநிலங்களவையில், "திராவிட நாடு கோரிக்கையை நனவாக்கச் செய்யப்படும் எந்த முயற்சியும் முழுமையாகவும், முழு சக்தியோடும் முறியடிக்கப்பட வேண்டும்" என்றார். தி.மு.க.வுக்கு ஏமாற்றமளிக்கும் வகையில், தாம் அந்தக் கோரிக்கையைத் தீவிரமானதாகக் கருதவில்லை என்றும், அது எதார்த்தமானதல்ல எனவும் உலகின் நடைமுறையிலிருந்து மாறுபட்டது என்றும் கூறினார். "இப்படி ஒரு கோரிக்கையை ஏற்க இந்தியாவை ஆயிரம் துண்டுகளாக உடைக்க வேண்டிவரும்" என்றார் பிரதமர் நேரு.

திராவிட நாடு ஒருபுறம் இருக்க, சென்னையில், தி.மு.க. நடத்திய விலைவாசி எதிர்ப்புப் போராட்டம் அண்ணா உட்பட ஆயிரக்கணக்கானோரை சிறையில் தள்ளியது. அண்ணா வேலூர் சிறையிலும், நாவலர் நெடுஞ்செழியன் சென்னை சிறையிலும், கலைஞர் திருச்சி சிறையிலும் அடைக்கப்பட்டனர். 'இனி தி.மு.க. விலைவாசி எதிர்ப்பில் தன்னை மக்களின் தோழனாகக் காண்பித்துக்கொள்வதோடு, தனி திராவிட நாடு கேட்கவும் முடியும்' என்று 'டைம்ஸ்' இதழ் எழுதியது. மேலும், 'அமைதியாக மறியல் நடத்தவேண்டும் என்று அண்ணா வேண்டுகோள் விடுத்தும், 'காலி கூட்டம்' வட இந்தியர் வாழும் பகுதிகளில் ரகளை செய்தது' எனவும் எழுதியது.

திராவிட நாடு கோரிக்கை தள்ளிவைப்பு

1962 தேர்தலில் தி.மு.க. அடைந்த வெற்றி காமராஜரை மிகவும் பதட்டம் அடையச் செய்தது என்றும், இந்தப் பிரச்னை காங்கிரஸ் செயற்குழுவில் விவாதிக்கப்பட்டது என்றும் பதிவு செய்திருக்கிறார் அவரது வரலாற்றாசிரியர் நரசிம்மன். பின்னர், நடந்த



இரா.செழியன், அண்ணா, க.அன்பழகன்

"திருச்செங்கோடு நாடாளுமன்றத் தேர்தலில், கழகத்தின் சார்பில் போட்டியிட்ட நண்பர் கந்தப்பன் காங்கிரஸைத் தோற்கடித்து 720 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அந்த வெற்றி கண்டு காமராஜரும், டெல்லி வட்டாரமும் திடுக்கிடும் நிலை பிறந்தது. 'திராவிட நாடு பிரிவினை வேண்டுமா, வேண்டாமா என்பதற்காக நடைபெறும் தேர்தல் திருச்செங்கோடு தேர்தல்' என்று சி.சுப்பிரமணியம் தேர்தல் பிரசாரம் செய்தது குறிப்பிடத்தக்கது" என்று கலைஞர் குறிப்பிட்டிருக்கிறார். தி.மு.க.வின் தேர்தல் வெற்றி திராவிட நாடு சவாலின் பரிமாணத்தையே மாற்றியிருந்தது. இதற்கு மத்திய அரசு 1962-ன் கோடையில் பதில் சொன்னது. சி.பி.ராமசாமி அய்யரின் தலைமையில் காமராஜரையும் மற்றும் பல

முதலமைச்சர்களையும் கொண்ட தேசிய ஒருமைப்பாட்டுக் குழு ஒன்றை மத்திய அரசு அமைத்தது. அந்தக் குழுவின் பரிந்துரை ஜனவரி 1963-ல், பிரிவினை வாதத்துக்குத் தடை போட்ட அரசியலமைப்புச் சட்டத்தின் பதினாறாவது சட்டத் திருத்தமாக வெளியானது. மத்திய அரசு அண்ணாவுக்கு விட்ட பெரும் சவால் இது. அவர் எதிர்த்துப் போராடுவாரா அல்லது விட்டுக் கொடுத்துவிடுவாரா? இந்தியாவின் வடகிழக்கில் சீன துருப்புகள் 1962-ல் ஊடுருவ, அண்ணாவுக்கு இந்த இக்கட்டிலிருந்து தப்ப ஒரு வழி கிடைத்தது. விலைவாசி உயர்வுக் கிளர்ச்சி காரணமாகச் சிறையில் இருந்தபோதும், "தி.மு.க.வில் அங்கம் வகிக்கும் நாங்கள், இந்திய அரசுக்கு அதன் இறையாண்மையைப் பாதுகாக்க உதவும் வகையில் உதவிக்கரம் நீட்டுவோம்" என்று அறிக்கை விடுத்தார் அண்ணா. "பண்டித நேருவிடமிருந்துதான் நம் கோரிக்கையைக் கேட்டுப் பெறவேண்டுமே தவிர, சீனாக்காரனிடமிருந்து அல்ல" என்று அவர் சொன்னது இன்றும் பேசப்படுகிறது.

1962, அக்டோபர் 3 அன்று விடுதலையான அண்ணா, கட்சியின் நடவடிக்கைகளையும் திராவிட கோரிக்கையையும் தற்காலிகமாக நிறுத்திவைத்தார். இரண்டாவது உலகப் போரின்போது பெரியார் திராவிட நாடு கோரிக்கையை நிறுத்திவைத்தது போல, அண்ணாவும் அவரைப் பின்பற்றினார். அன்று மாலை வேலூரில் பேசும்போது, "டெல்லியில் இருப்பவனையே நமக்குப் பிடிக்கவில்லை என்றால், எங்கோ பீகிங்கில் இருப்பவனை நமக்குப் பிடிக்குமா?" என்று தனக்கே உரிய முறையில் கேட்டார் அண்ணா.

நான்கு நாட்களுக்குப் பிறகு மெரினா கடற்கரையில் பேசும்போது, "வீடு இருந்தால்தான் ஓடு மாற்றலாம். நாடு இருந்தால்தான் கட்சி நடத்தலாம். நாட்டுக்கே ஆபத்து என்று வந்திருக்கிற நிலையில் நாம் பிரிவினை பேசுவது அயலானுக்கு இடம் கொடுத்துவிடுவதாகும். நாம் அப்படி நடந்துகொண்டால் வருங்காலத் தலைமுறை நம்மைச் சபிக்கும்" என்று தெரிவித்தார் அண்ணா. எனினும், தி.மு.க.வுக்கு ஆபத்து வந்துவிடுமோ என அஞ்சிய அண்ணா, 'மக்கள் உரிமைக் கழகம்' என்ற அமைப்பு ஒன்றைத் தம் வழக்கறிஞர் நாராயணசாமியின் உதவியுடன் பதிவு செய்தார். "சுப்ரீம் கோர்ட் வரை நாம் திராவிட நாடு பிரச்னையை எடுத்துச் செல்வதானால் எவ்வளவு செலவாகும்?" என்று சம்பத் மைத்துனர் - பின்னாளில் அண்ணாவின் உதவியாளர் கஜேந்திரனிடம் கேட்ட அண்ணாவுக்கு, "சுமார் ஒரு லட்சம் ரூபாய் ஆகும்" என்று பதிலளித்தார் கஜேந்திரன். உடனே அண்ணா, "பார்த்தீர்களா? அவ்வளவு பெரும் தொகையைச் செலவழிக்க நம்மால் முடியுமா?" என்றார். "நீண்டகாலம் சிறையில் இருக்க எவ்வளவு பேர் தயார்? எனக்குப் பெயர் பட்டியலைத்

தாருங்கள்! என்றார்" எனக் குறிப்பிடுகிறார் தோப்பூர் திருவேங்கடம். கிடைத்த பதில்கள் அவருக்கு திருப்தியளிக்கவோ, நம்பிக்கையூட்டக்கூடியதாகவோ இருக்கவில்லை. திராவிட நாடு கோரிக்கையில் அவருடைய ஈடுபாட்டைத் தொடர அண்ணாவால் முடியாமல் போனது.

கம்யூனிஸ்ட்டு, காங்கிரஸ் நடந்துகொண்ட முறை

திராவிட நாடு கோரிக்கை சீன ஊடுருவலால் ஒத்திவைக்கப் பட்டதாக அண்ணா சொன்னாலும், அது கை கழுவப்பட்டுவிட்டது என்பது அனைவருக்கும் தெரிந்தே இருந்தது. மாநிலங்களவையில், "இந்த ஆக்கிரமிப்பு நமது எல்லா பிரச்னைகளையும், வேற்றுமைகளையும், விரோதங்களையும் இயற்கையாகவே தூக்கி எறிந்துவிட்டது" என்றார் அண்ணா. இந்தியா என்ற கருத்துக்கு எதிராகவே தன் வாழ்நாள் முழுவதும் இருந்திருந்தாலும், சீன ஆக்கிரமிப்பு அண்ணாவின் ஆழ்மனதில் இருந்த இந்தியத்தை வெளிக்கொணரத்தான் செய்திருந்தது. நேருவை நாட்டின் மீட்பர் என்றும், புத்துயிர் ஊட்டியவர் என்றும் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய உன்னதங்களின் கலவை என்றும் வர்ணித்தார்.

எதிர்பார்த்தது போலவே வரவிருக்கும் தடைச்சட்டம்தான் பிரிவினைக் கோரிக்கையை அண்ணா கைவிடக் காரணம் என்று, காங்கிரஸ் அறிவித்தது. தி.மு.க.வைக் காக்கவேண்டிய அவசியம்; திராவிட நாடு வெறும் கனவாக இருந்தது; சீன ஆக்கிரமிப்பு கொணர்ந்திருந்த பரந்த பார்வை; அனைத்துக்கும் மேலாக ஆட்சி அதிகாரத்தைப் பெறுகிற அரிய வாய்ப்பு - இவையே திராவிட நாட்டைத் தூக்கிப்போட உண்மையான காரணங்களாக இருந்தன. "தி.மு.க.வின் பொதுக்குழு, செயற்குழு முதலிய எந்த அமைப்பும் கூடாமல் நாட்டு மக்களுக்கு இந்த முடிவு அறிவிக்கப்பட்டதை இங்கு குறிப்பிடாமல் இருக்கமுடியாது" என்றார் பி.ராமமூர்த்தி. "தமிழ்நாட்டு முதலாளிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு, பரந்த இந்திய மார்க்கெட் மிகவும் தேவை. மேலும், இந்தப் பொருள்களைத் தயாரிப்பதற்கு வேண்டிய இரும்பு, உருக்கு, நிலக்கரி முதலான மூலப்பொருள்கள் எதுவும் தமிழ்நாட்டில் அறவே இல்லை. வடநாட்டுத் தொழிற்சாலைகளில் இருந்துதான் இந்த மூலப்பொருள்கள் தமிழ்நாட்டுக்கு வந்தாக வேண்டும். இந்த நிலையில், தனி திராவிட நாடு கோரிக்கைக்கு அர்த்தமே இல்லை. அந்த திராவிட நாட்டைக் கொண்டு இந்தத் தமிழ்நாட்டுத் தொழிற்சாலைகளை நடத்த, தமிழ்நாட்டு முதலாளிகள் மூலப்பொருள்களுக்கு எங்கு போவார்கள்? விற்பனைக்கு

எந்த சந்தைக்குச் செல்லமுடியும்? இந்த நிலையில்தான், அந்த முதலாளிகள் மறைமுகமாகக் கொடுத்த நிர்ப்பந்தம்தான் தி.மு.க. தலைமையை தனி திராவிட நாடு கோரிக்கையைக் கைவிடும்படி செய்தது" என்று பி.ராமமூர்த்தி வகுப்புவாத சாகசத்தோடு வாதம் செய்திருக்கிறார். "அதனாலேயே வேலூர் சிறையிலிருந்து வெளிவந்ததும், திராவிட நாடு கோரிக்கையைக் கைகழுவி தமிழ்நாட்டுக்கு அதிக அதிகாரங்கள் மட்டுமே போதும் என்றார் அண்ணா" என்பது ராமமூர்த்தியின் வாதம்.

ராமமூர்த்தியின் வகுப்புவாதப் பார்வை ஏற்புடையதாக இல்லை. அவர் கூறியபடி, 1949 முதல் 1962 வரை, திராவிட நாடு கோரிக்கை உயிரோடு இருக்கையில் மூலப்பொருள்கள் தட்டுப்பாட்டை தமிழ்நாட்டு முதலாளிகள் அனுபவிக்கவில்லை. பிரசாரம் சூடுபிடித்தவுடன், மூலப்பொருள்கள் வருவது தடைபடும் சூழ்நிலை ஏற்பட்டதும், தொழிலதிபர்கள் திராவிட நாட்டைக் கைவிடக் கோரினர். மூலப்பொருள் பெற்று, தயாரித்து, விற்பனை செய்ய இந்தியா ஒரே நாடாக இருந்தால்தான் முடியும் என அவர்கள் வலியுறுத்தவே, அண்ணா சம்மதித்தார் என்று ராமமூர்த்தி கூறுவதற்கு, ஆதாரம் ஏதும் இல்லை. "வளர்ந்துவரும் இந்தத் தமிழ்நாட்டு முதலாளிகள், தி.மு.க.வின் திராவிட நாடு கோரிக்கையைக் காட்டி, மத்திய சர்க்காருக்கு நிர்ப்பந்தம் கொடுத்து, தமிழ்நாட்டில் பல புதிய துறைகளில் தொழிற்சாலை நிறுவ மத்திய சர்க்காரிடம் லைசென்ஸ், நிதி வசதிகள் முதலியவற்றை நாடினார்கள்" என்றும் சொல்கிறார் ராமமூர்த்தி. இது உண்மைக்கு மாறாகத் தோன்றுகிறது. 'திராவிட நாட்டின் தந்தை' என்ற பெயரை அவ்வளவு எளிதாகவா அண்ணா விட்டுக்கொடுத்திருப்பார்? முதல்வர் ஆனபிறகு, "அந்த நாளில் தாம் பணம் படைத்தோர் எவரிடமும் தொடர்பு வைத்திருக்கவில்லை" என்று சட்டமன்றத்தில் தி.மு.க.வின் அப்போதைய நிலையைச் சொன்னார் அண்ணா. 1957 தேர்தலில் வெற்றி பெற்றதும், 'காங்கிரஸைக் காலமெல்லாம் எதிர்த்து வந்தவர் ஒருவர் - என்னைத் தருவித்து, 'இதுவரையில் கழகத்துக்கு ஆதரவு காட்டாதிருந்து வந்தவர்கள்கூட, இது வளருகிற கட்சிதான் என்பது இப்போது மெய்ப்பிக்கப்பட்டு விட்டதால், இனி ஆதரவு அளித்திட முன்வருவார்கள்' என்று பேசி என் ஆவலைக் கிளறினார். நான் சில நிறுவனங்களுக்குச் செல்ல முடியும், ஆதரவு காட்டச் சொல்லி, அவர்களுக்கெல்லாம் சில லட்சங்களை நன்கொடையாகக் கொடுப்பது என்பது மிக எளிதான காரியம்' என்றார். 'ஒரு காரியம் செய்ய வேண்டும். நீங்கள் தொழில்களை, பேருந்துகள் போன்ற தொழில்களை - தேசியமயமாக்க வேண்டும் என்ற பேச்சை விட்டுவிட வேண்டும்'

என்றார். 'எங்கள் அரசியல் வேறு என்று கூறிவிட்டு வந்துவிட்டேன்' என்று அப்படி வந்த ஒரு வாய்ப்பை தாம் ஒதுக்கியதை எழுதியிருக்கிறார் அண்ணா. "அண்ணா பொதுமக்களின் நன்கொடையையே ஆட்சிக்கு வந்தபின்னரும் நம்பியிருந்தார். எந்தத் தொழிலதிபரையும் அணுகவில்லை" என்று அடித்துச் சொல்கிறார் பண்ருட்டி எஸ்.ராமச்சந்திரன்.

கம்யூனிஸ்ட்டுகள் குறித்து அண்ணா அவநம்பிக்கை கொண்டிருந்தபோதும், சீன ஊடுருவலால் வலதுசாரிகள் தங்கள் இயக்க இடதுசாரிகளைச் சிறையில் அடைக்குமளவுக்கு வசைமாரி பொழிந்தபோதும், அவர் நடுநிலையே வகித்தார். இன்னும் சொல்லப்போனால், 'இந்த துஷ்பிரசாரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மாறாக, சட்டமன்றத்தில், தேர்தலில் கலந்துகொள்ள எங்களை அனுமதிக்க, விடுதலை செய்ய வேண்டும் என்று கோரினர்' என்று பி.ராமமூர்த்தியே பதிவு செய்திருக்கிறார். இந்த நிலைப்பாடே 1964-ல் தாய்க்கட்சியிலிருந்து பிரிந்து புதிதாகத் தொடங்கப்பட்ட இடது கம்யூனிஸ்ட்டு கட்சிக்கும் தி.மு.க.வுக்கும் ஒரு புரிதலையும், நட்பையும் ஏற்படுத்தியது.

திராவிட நாடு கோரிக்கையை அண்ணா தற்காலிகமாக ஒத்தி வைத்திருந்தபோதும், மத்திய அரசு பிரிவினைத் தடைச்சட்டத்தைக் கொண்டுவருவதை நிறுத்தி வைத்துவிடவில்லை. கன்னியாகுமரியில் 1962 டிசம்பர் 29, 30 தேதிகளில் தென்னக முதலமைச்சர்களின் தென்மண்டல மாநாடு பிரிவினைத் தடைச்சட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தது. "மண்டலக் குழு சட்ட நிலைப்படி பிரிவினைப் பிரசாரத்தைத் தடைசெய்ய முடிவெடுத்துள்ளது. ஆனால், உண்மை நிலைப்படி பார்த்தால், பிரிவினை பிரசாரம் நிறுத்தப்பட்டு விட்டிருக்கிறது. இவ்வாறு இருக்கையில் மண்டலக் குழு இப்படி ஒரு முடிவு எடுக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்" என்று அண்ணா ஓர் அறிக்கை விடுத்தார். "இந்த மகத்தான தேசத்தின் அங்கத்தினர்களான நீங்கள், பிரசாரத்தைத் தடை செய்யுமுன் எங்களைப் புரிந்துகொள்ள முயற்சி செய்திருக்க வேண்டுமல்லவா? நாங்களென்ன அரசியல் அரங்கத்தில் தீண்டப்படாதவர்கள் என்ற அளவுக்குத் தாழ்ந்து போய்விட்டோமா?" என்றும் மாநிலங்கள் அவையில் பேசினார் அண்ணா.

திருவாங்கூர் திவானாக சி.பி.ராமசாமி அய்யர் இருந்தபோது, அந்த சமஸ்தானத்தின் சுதந்திரத்தை அறிவித்ததோடு, பாகிஸ்தானுடன் ஓர் ஒப்பந்தமும் செய்ய வலியுறுத்தியவர், இப்போது தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவில் தலைமை வகிக்கும் வேடிக்கையைச் சுட்டிக் காட்டினார் அண்ணா. மேலும், அந்தக்

குழு தி.மு.க.வைக் கலந்தாலோசிக்கவில்லை. முதலமைச்சர் எம்.பக்தவத்சலம், "எங்களைக் கேட்காமல் - எங்களைச் சந்தித்துப் பேசாமல், தேசிய ஒருமைப்பாட்டுக் குழு சிபாரிசு செய்தது எப்படி என்று கேட்கிறார்கள். ஓர் உவமானம் சொல்கிறேன். யாரும் தவறாகக் கருதக்கூடாது. விபசாரத் தடைச்சட்டம் செய்திருக்கிறோம். 'பாதிக்கப்படும் விபசாரிகளைக் கேட்டீர்களா?' என்று சொல்வது பொருந்தாது" அவ்வளவுதான் பக்தவத்சலம் அவர்களின் ஆதுரம்!

அனைத்துக் கட்சி ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்து, பிரிவினைக் கோரிக்கைப் பற்றி நாட்டில் பயணம் செய்து கருத்தறிந்து வரச் சொன்னார் அண்ணா. "என்னை நம்பச் செய்யுங்கள். பின்னர், என் கோரிக்கை யோசிக்கத் தகுந்ததல்ல என்று கூறுங்கள்!" என்று மாநிலங்களவையில் பேசினார் அண்ணா. தடைச்சட்டம் காரணமாக தி.மு.க. தலைமறைவாகிவிடும் என்று யோசனை கூறப்பட்டபோது, "நாங்கள் தலைமறைவாகப் போகமாட்டோம். ஆனால், எங்கள் அதிருப்தி நிச்சயம் தலைமறைவாகும்!" என்றார்.

நாடாளுமன்றத்தில் 1963 மே மாதத்தில் சட்டத்திருத்தம் பெருவாரியான ஆதரவோடு ஒப்புதல் பெற்றபோது, சட்டத்தை மறுபரிசீலனை செய்யுமாறு அண்ணாவின் குரல் மட்டுமே ஒலித்தது. "நீங்கள் போரில் தோற்றுப்போய்விட்டீர்கள் என்று வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்... சேலத்துக்கு உருக்காலை கிடையாது என்று நீங்கள் மறுத்தால், நான் அங்கே எழுவேன். தூத்துக்குடிக்கு அதன் முன்னேற்றங்கள் இல்லை என்று சொன்னால், அங்கே தி.மு.க. வந்துவிடும். எனவே, இந்த நாட்டின் அரசியல் சாசன கூட்டாட்சித் தத்துவத்துக்கு எதிராக இருக்கும் ஒருமைத்தன்மைக்கு தி.மு.க.வின் எதிர்ப்புச் சக்தியை ஒரு வாள் முனையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்" என்றார்.

அண்ணாவின் இத்தகைய தொலைநோக்கும் தி.மு.க.வின் மாநில உரிமை கோரிக்கையும், மத்திய மாநில உறவுகள் குறித்த சர்க்காரியா கமிஷன் 1983 ஜூனில் அமைக்கப்பட்டபோது எல்லோராலும் அறியப்பட்டது. அண்ணா விரும்பிய அளவு கமிஷனின் குறிப்புகளும் பரிந்துரைகளும் இல்லாதுபோனாலும், மத்திய - மாநில அரசுகளுக்கு இடையே அரசியல் அமைப்பு ரீதியாக சீரமைப்பும், மீள்பார்வையும் தேவை என்பதை அங்கீகரித்தது.

சமரசம்

1963 மே இறுதியில், பிரிவினைத் தடைச்சட்டம் ஒப்புதல் பெற்றபிறகு அண்ணா தமிழ்நாடு முழுக்க சுற்றுப் பயணம் செய்து நிலைமையை ஆராயப் புறப்பட்டார். இந்தப் பயணத்தின்போது,

22.5.63 அன்று குடந்தையில் இருந்தார் அண்ணா. "தி.மு.கழகத்தையே கலைத்துவிடுவதாக அண்ணாதுரை கூறினார் என்பதாகச் சென்னை இதழ்கள் சில தவறாக செய்தி வெளியிட்டன. அண்ணா, இந்தச் செய்தியைப் படித்ததும் ஏற்பட்ட கோபத்தை எதிரிலிருந்து பார்த்த நான் அதிர்ச்சி அடைந்தேன்" என்கிறார் கலைஞர். "தி.மு.கழகத்தைக் கலைத்துவிட மாட்டேனா என்று ஆவலுடன் எதிர்பார்த்துச் சிலர் ஏங்குகிறார்கள். தி.மு.கழகம் என்ன, என் வீட்டு மாட்டுக் கொட்டடியா, நான் நினைத்ததும் கலைத்துவிடுவதற்கு? குறைந்தது 25 பேர்களைக் கொண்ட 4,000-க்கு மேற்பட்ட கிளைக் கழகங்கள் சேர்ந்து அமைத்த வட்டக் கழகங்கள்; அவற்றுக்கு மேலே மாவட்டக் கழகங்கள்; அவற்றுக்கு மேல் பொதுக்குழு; செயற்குழு; தலைமைக் கழகம். இப்படி அடியிலிருந்து ஜனநாயகக் கோவையாக அமைக்கப்பட்டிருப்பது தி.மு.கழகம். இதை எப்படி ஒருவர் நினைத்தால் கலைக்கமுடியும்?" என்றார் அண்ணா.

பின்னர், 1963 ஜூனில், 16-வது திருத்தத்தை தி.மு.க. எப்படி எதிர்கொள்வது என்று அண்ணாவுக்குக் கருத்தறிவிக்க, இரா.செழியன் தலைமையில், மதியழகன், டி.கே.சீனிவாசன், அரங்கண்ணல், தில்லை வில்லாளன் ஆகியோர் கொண்ட குழுவைக் கட்சி அமைத்தது. கட்சிக்கு பிரிவினையை விடுவதைத் தவிர வேறு என்ன வழி? குழு அமைப்பு ஒரு சடங்கே. 1963 குளிர்காலத்தில், 'சுதந்திர திராவிட நாடு' என்ற லட்சியத்தைக் கைவிட்டதாக, கட்சியின் சட்ட விதி திருத்தப்பட்டது. நான்கு தென் மாநிலங்கள் சேர்ந்த, இந்திய அரசியல் சட்டத்துக்கு உட்பட்ட, திராவிடக் கூட்டமைப்பாகக் கட்சியின் புதிய நோக்கம் அறிவிக்கப்பட்டாலும், அது தொடர்பாக கட்சி எந்த முயற்சியும் செய்யவில்லை.

எதிர்க்கட்சிகளின் கேலிப்பேச்சுக்கு, "கழகத்தின் பிரசாரத்தை எதிர்த்து மாய்த்திட முடியாமல், கழகத்தைச் சமாளிக்க இந்திய அரசியல் சட்டத்தையே திருத்திட ஆட்சியாளர்கள் கூச்சத்தை விட்டு, வெட்கத்தை விட்டுத் தயாராகிவிட்டபோது, 'நாட்டின் நிலைமைக்கு ஏற்றபடி கழகம் தன் சட்டத் திருத்தத்தைத் திருத்திக்கொண்டு இயங்குவதில் தவறு என்ன இருக்கமுடியும்..? ஏன் கழகம் தடையை மீறவில்லை?' என்று கேட்பவர்களின் உள் எண்ணம், கழகத்தைச் சாகடிக்க வேண்டும் என்பதுதான்" என்று பதிலளித்தார் அண்ணா.

"அரசியல் சட்டத்திருத்தம் காரணமாக, அதன் விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் வீராவேச உணர்ச்சியால் மட்டும் உந்தப்பட்டுக் கழகம் செயல்படும், உடைபடும், அழிந்துவிடும்

என்று காமராஜரும் அவர் போன்றோர் சிலரும் நம்பிக்கொண்டு இருந்தார்கள். இப்போது நான் எடுக்கும் முடிவு, கழகம் உருக்குலையாமல் இருந்திட வழி செய்கிறது" என்று விளக்கினார் அண்ணா. இதுவரை, திராவிட நாடு கேட்டதற்காக அண்ணாவைக் குறை கூறியவர்கள், இப்போது அந்தக் கோரிக்கையைக் கைவிட்டதற்காக கேலி பேசினார்கள். ஆனால், அவர் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை; அவர் தம்பிகளும் அவரைப் போலவே இருந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் தி.மு.க.வில் இருந்ததற்கு அண்ணா என்ற மந்திரத் தலைவரே காரணம். அவர்களைப் பொறுத்தமட்டில் அண்ணா அப்படியே இருந்தார்.

திராவிட நாட்டைக் கைவிட்டபோதும், கோரிக்கைக்கான காரணங்கள் அப்படியேதான் இருந்தன என்று முதல்வரான பின்னரும் சுட்டிக்காட்டினார் அண்ணா:

> நான் திராவிட நாட்டுக் கோரிக்கையை விட்டுவிட்டேன். ஆனால், திராவிட நாடு கேட்பதற்கு என்னென்ன காரணங்கள் இருந்தனவோ அவற்றில் ஒன்றைக்கூட விட்டுவிடவில்லை. அதில் ஒளிவுமறைவு இல்லை. அதைச் சொல்லிக்கொள்வதற்கும் வெட்கப்படுவதற்கும் ஒன்றும் இல்லை. மொழி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக திராவிட நாடு கேட்டோம். அதை விட்டுவிடவில்லை. 'திராவிட நாட்டைத்தான் விட்டுவிட்டீர்களே, ஏன் இந்தியை எதிர்க்கிறீர்கள்?' என்று கேட்டால், ஒப்புக்கொள்ள முடியுமா?

இந்தி மயமாக்குதல், தமிழ் கலாசாரத்துக்கும், அடையாளத்துக்கும் பன்மொழிக் கோட்பாட்டுக்கும் எழுந்த ஆபத்தாகக் கட்சி கருதியது. இந்தி தெரிந்தால்தான் இந்தியனா? கட்சியின் இந்தி ஆட்சிமொழி எதிர்ப்புக் கொள்கை 1963-ல் தொடங்கியிருந்தாலும், 1965-ல்தான் உச்சகட்டத்தை அடைந்தது. அந்தக் கட்டம் வீரமிக்க தனிப்போராட்டம்; அதில் ராஜாஜியின் ஆதரவு மட்டுமே கட்சிக்குக் கிடைத்தது. ஆனால், பெரும்பான்மைத் தமிழர்களின் உணர்வுகளை பிரதிபலித்ததால் இறுதியில் தி.மு.க.வே வென்றது. தி.மு.க.வின் முயற்சியால் இந்தி பேசுகிற - இந்தி பேசாத மக்களிடையே இணைப்பாக ஆங்கிலமே இன்றும் இருந்துவருகிறது. ஆனால், இந்தப் போராட்டத்தின் விலையோ ரத்தமும், கண்ணீரும், தியாகமும் நிறைந்ததாக இருந்தது!

19

இந்தி எதிர்ப்புப் போராட்டம்: தீக்குளித்த சின்னசாமி



ஆட்சிமொழி மசோதா

ஆட்சிமொழியான ஆங்கிலம் அகற்றப்படும் என்பதால் இந்தி பேசாத மக்களின் ஒரு பகுதியினருடைய கவலைகளை அறிந்திருந்த பிரதமர் நேரு, 1963 கோடையில், ஆட்சிமொழி மசோதாவைத் தாக்கல் செய்யும்போது, "இந்த மசோதா, இதற்குமுன் நடைபெற்றவற்றின் தொடர்ச்சியே. ஆங்கிலம் 1965-ல் ஒரு குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு பயன்படுத்தப்படமாட்டாது என்ற அரசியலமைப்புச் சட்டம் கொண்டுவந்துள்ள கட்டுப்பாட்டைக் குறித்தே! அந்தக் கட்டுப் பாட்டை நீக்கவே இது தாக்கல் செய்யப்படுகிறது" என்றார்.

இந்தி மற்றும் ஆங்கில மொழி ஆதரவாளர்கள், தங்களுக்குச் சாதகமாக மசோதாவை மாற்ற முயன்றார்கள். உணர்வுகள் பொங்கி, சிக்கல் உருவாகியபோதும், ஆட்சிமொழி மசோதா, எப்படி தொடக்கத்தில் வடிவமைக்கப்பட்டதோ

அப்படியே எவ்வித மாற்றமுமில்லாமல் 1963 மே 10-ல் சட்டமாகியது. "நாடாளுமன்ற - மாநிலங்களவை உறுப்பினர்கள் பெரும்பான்மையாக ஒரு நிலை எடுக்கும்பட்சத்தில் இந்தச் சட்டம் எப்போது வேண்டுமானாலும் பயனின்றிப் போய்விடும் என்ற நிலையில், அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்தால் ஒழிய, பிரதமரின் 'ஆங்கிலமே நீடிக்கும்' என்ற வாக்குறுதி, இனி வர இருக்கும் அரசாங்கங்களின் விருப்பு வெறுப்புக்கு உட்பட்டுவிடும்!" என்றார் அண்ணா, மாநிலங்களவையில். "ஆங்கிலம் ஒரே சமநிலையை இரண்டு பிரிவினருக்கும் அளிக்கிறது" என்ற அண்ணா, மொழியைப் பொறுத்தமட்டில் தற்போதுள்ள நிலையே நீடிக்க (ஸ்டேடஸ் கோ) அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தை வலியுறுத்தினார். "வருங்காலத்தில், ஒரு சரியான முடிவை எட்டிக்கொள்ளலாம்" என்றார்.

1963, ஜூன் மாதம் 8 - 10 தேதிகளில் சென்னையில் நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுவில், 'ஆட்சிமொழிகள் மசோதாவும், அரசாங்க உத்தரவுகளும் திட்டங்களும் இந்தி திணிப்பைத் தீவிரப்படுத்துகின்ற காரணத்தால், நேரடிப் போராட்டத்தைத் துவக்கிவிட வேண்டும்' என முடிவெடுக்கப்பட்டது. கலைஞர் கருணாநிதி தலைமையில், என்.வி.நடராஜன் மற்றும் மாவட்டச் செயலாளர்கள், மாநில அமைப்பாளர்கள் கொண்ட ஒரு போராட்டக் குழு அமைக்கப்பட்டது. பின்னர் நடந்த கட்சிக் கூட்டம் ஒன்றில், கலைஞரின் தலைமையை அண்ணா புகழ்ந்து பேசினார். "அவருடைய பணியால்தான், இந்தியாவின் முழு கவனமும் தி.மு.க.வுக்குக் கிட்டியது... மூத்தவனான நான், தம்பியான கருணாநிதியைப் பாராட்டுகிறேன். ஏனென்றால் எடுத்துக்கொண்ட எந்தப் பணியையும் முடிக்கும் ஆற்றல் அவரிடம் இருக்கிறது..." என்றார்.

முன்னதாக மாநிலங்களவையில், "எந்த வாதத்தையும், எந்த வேண்டுகோளையும், எந்தக் காரணத்தையும் ஏற்காமல் இந்தியைத் திணிப்பதென்று அவர்கள் துணிந்தபிறகு, லால்பகதூர் சாஸ்திரியார் எதிரே வீற்றிருக்கின்ற நேரத்தில், அவரைப் பார்த்தபடி நான் சொன்னேன்... நீங்கள் பிடிவாதமாக யாருடைய வார்த்தைக்கும் மதிப்பளிக்காமல் இந்தியைத் திணிப்பதென்றால், கடுமையான போராட்டம் - தீவிரமான போராட்டம் - நிச்சயமாகத் தென்னகத்தில் ஏற்படும். இந்தி எங்களுக்கு எடுப்புச் சாப்பாடு; ஆங்கிலம் எங்களுக்கு, நாங்கள் சொல்கின்ற முறைப்படி சமையல் செய்து போடுகிற சமையற்காரன்; தமிழ் எங்களுடைய மனையை அறிந்து - எங்களுடைய மனமறிந்து - எங்கள் ஊனறிந்து - உணர்வறிந்து - எங்களுடைய ஊனை வளர்க்கத் தக்க தாய்!" என்று

பேசியிருந்தார் அண்ணா. "மாநில ஆட்சிமொழியாக இருப்பதும், திராவிட மொழிகளில் தலையாயதுமான தமிழையும் மத்திய ஆட்சிமொழியாக ஏற்கவேண்டும் என்று வற்புறுத்துவதுடன், மாநில ஆட்சிமொழிகளாகியுள்ள மொழிகளையெல்லாம் மத்திய ஆட்சிமொழிகளாக ஏற்றுக்கொள்ளும் வரையில், ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சிமொழியாக இருக்கவேண்டும்" என்றும் அண்ணா, கட்சியின் முடிவை வலியுறுத்தியிருந்தார்.

"இந்தியை எதிர்த்து நேரடி நடவடிக்கை என்பதெல்லாம் வெறும் அரசியல் தந்திரம். இந்தியாவின் ஆட்சிமொழி ஆங்கிலம் என்பதைப் பொறுக்கவே முடியாது. காரணம் அது அந்நிய மொழி. அது என்றென்றும் நீடிக்கமுடியாது. அது நமக்குப் பெருமை ஆகாது" என்றார் நேரு. 1963 ஆகஸ்ட் 4-ம் தேதி சேலத்திலும், ஆகஸ்ட் 25 தஞ்சாவூரிலும் நடைபெற்ற தி.மு.க. மாநாடுகள் இந்தி எதிர்ப்பைத் தீவிரப்படுத்தின.

இதற்கிடையே, 1963-ம் ஆண்டு, அக்டோபர் 2 அன்று, தமிழக - இந்திய அரசியலில் திருப்புமுனையாகப் பார்க்கப்பட்ட காமராஜரின் ராஜினாமா நடந்தது. முன்னாள் முதல்வரான காமராஜர் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவராகப் பொறுப்பேற்றார். எனினும், 'காமராஜரின் இந்த உயர்வு தமிழ்நாட்டு மக்களும் காமராஜருமே தற்கொலை செய்துகொள்வதற்கு ஒப்பானது' என்று பெரியார் தந்தி ஒன்றில் காமராஜரை எச்சரித்தார். பெரியார் சொன்னது போலவே ஆயிற்று. மாநிலத்தில் காங்கிரஸைப் பொறுத்தமட்டில் அப்போது தொடங்கிய இறங்குமுகம் இன்றுவரை நீடிக்கிறது; தேசிய அளவில் காமராஜருக்குப் புதிய அந்தஸ்தை அளித்தபோதும், அவருடைய செல்வாக்கு அதற்குபின்பு சரியத் தொடங்கி, பின்பு நிமிரவேயில்லை. திருவண்ணாமலையில், அந்த ஆண்டு ஜூனில் நடந்த இடைத்தேர்தலில், "தி.மு.க.வின் ப.உ.சண்முகம் காங்கிரஸைத் தோற்கடித்ததே காமராஜரின் இந்த திடீர் முடிவுக்குக் காரணமாக இருக்கக்கூடும்" என்றார் கலைஞர். காமராஜரின் வரலாற்றை எழுதிய வி.கே.நரசிம்மன், திருவண்ணாமலை இடைத்தேர்தலில் காமராஜரே பத்து நாட்கள் எல்லா கிராமங்களிலும் பிரசாரம் மேற்கொண்டதையும், அவருடைய அமைச்சர்கள் ஐந்து பேர் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்ததையும், அப்படியிருந்தும் காங்கிரஸ் தோல்வியைத் தழுவியதையும் குறித்திருக்கிறார்.

காங்கிரஸுக்கு தேசிய அளவிலும், நிச்சயமாக சென்னை மாநிலத்திலும், சோதனைக்காலம் துவங்கியிருந்தது. காமராஜர் காங்கிரஸ் கட்சித் தலைமையை ஏற்றதும் ஆட்சியை விட்டு அமைச்சர்கள் வெளியேறி கட்சிக்குப் புத்துயிர் அளிக்கும்

'காமராஜ் திட்டம்' கொண்டு வந்தார். காமராஜ் திட்டத்தின் மூலம் தம் எதிரிகளை வெளியே அனுப்ப நேரு முயலுகிறார் என்று சிலர் கருதினர். காமராஜரால், தன் வாரிசாக சென்னை மாநில முதல்வர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.பக்தவத்சலம், தி.மு.க.வுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம் என்றே கூறவேண்டும். இந்தி எதிர்ப்பைப் பொறுத்த அளவில், மறக்கப்பட்ட போதிலும், சாதுர்யம் இல்லாமல் பக்தவத்சலம் நடந்துகொண்டார். "இந்தி - எதிர்ப்பு இயக்கத்தின் உணர்ச்சிகரமான அம்சத்தை முதலமைச்சர் பக்தவத்சலம் புரிந்துகொள்ளவில்லை. அதை ஒரு பொருட்டாக மதிக்கத் தவறி உதாசீனம் செய்துவிட்டார். இது அல்லாமல், மாநிலத்தில் உணவு நிலைமையும் திருப்திகரமாக இல்லை. ஆனால், பின்னர்தான் ஒரு விஷயம் தெரியவந்தது... அதாவது, அரிசியும் கோதுமையும் போதிய அளவுக்கு அதிகமாகவே இருந்திருக்கின்றன; விநியோகத்தில்தான் தில்லுமுல்லும் மோசடியும் நடைபெற்றுள்ளன" என்று சி.சுப்பிரமணியம் குறிப்பிட்டிருக்கிறார்.

அப்போது, இந்திக்கு ஆட்சிமொழி அந்தஸ்தை அளித்திருந்த அரசியலமைப்புச் சட்டத்தின் 17-வது பிரிவின் பிரதிகளை எரிக்கப் போவதாக வந்த தி.மு.க.வின் அறிவிப்பு பக்தவத்சலம் அரசுக்குப் பெரும் தலைவலியாக இருந்தது. அதற்கு முந்தைய நாள், 1963-ம் ஆண்டு, நவம்பர் 16 அன்று, விலைவாசிப் போராட்டத்தில் ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு, ஏழாவது முறையாகச் சிறைப்பறவையாகியிருந்தார் அண்ணா. 55 வயது நிரம்பிய அண்ணா, தொத்தாவின் மீது வைத்திருந்த பாசத்தையும், நேருவின் பால் கொண்டிருந்த பிரமிப்பையும் அவரது சிறைக் குறிப்புகள் சொல்லின. கட்சியில் ஒற்றுமையை உருவாக்கும் அணுகுமுறை, தாராள மனப்பான்மை என்ற அவரது தலைமைப் பண்புகளையும் அவை காண்பிக்கின்றன. பல நேரங்களில் கட்சியின் அடுத்த நிலை தலைவர்கள் கூட அவருடைய எண்ணங்களைக் கட்டுப்படுத்தக் கூடியதாக அவருடைய தாராள மனப்பான்மை இருந்தது.

கைதி எண் 6342-லிருந்து சில பகுதிகள்:

மாடிக் கட்டடம். 5-ம் நம்பர் அறை. மணிகூட அடிக்கிறது - 9. நவம்பர் 25. எனக்கு ஏற்கெனவே பழக்கமான இடம்.

****

16-ம் தேதி காலை காஞ்சிபுரத்திலிருந்து நான், தோழர்கள் பார்த்தசாரதி, பொன்னுவேல், சுந்தரம், வெங்கா ஆகியோருடன் திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக ஜீப்பில் கிளம்பினேன் சென்னைக்கு.

அமைந்தகரை போலீஸ் அதிகாரி பாதையின் நடுவே நின்றார். நில் என்று கை காட்டினார். முன்பக்கத்தில் உட்கார்ந்திருந்த என் அருகே வந்தார். காவல் நிலையம் சென்று ஜீப் நின்றது. நான் அடையாறு போலீஸ் கொட்டடியில். பொன்னேரியில் சுந்தரம். பூவிருந்தவல்லியில் பொன்னுவேல். காஞ்சிபுரத்தில் பார்த்தசாரதி. செங்கற்பட்டில் வெங்கா! லாக்-அப்பில், தரையில் விரித்துக்கொள்ள என்ன கிடைக்கும்? ஒரு பழைய விரிப்பு! நான் கொண்டு போயிருந்த சால்வை, தலையணை ஆயிற்று. நாலைந்து இரவுகள் எனக்குச் சரியான தூக்கம் கிடையாது. எனவே, இடத்தின் இடர்ப்பாடுகள் பற்றிய கவலையற்றுத் தூங்கிவிட்டேன். போலீஸ் அதிகாரிகள், என்ன எண்ணிக் கொண்டார்களோ, தெரியவில்லை. பயலுக்குப் பழக்கம் என்று எண்ணிக் கொண்டார்களோ!

****

அறப்போர் துவங்கப்படவேயில்லை. அதற்குள் தமிழகத்தில் 2000 கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர். உன் உழைப்பின் பலன் வீண்போகவில்லை என்பது விளங்கும். எத்தனை வழக்கறிஞர்கள்! எத்தனை பட்டதாரிகள்! பஞ்சாயத்து தலைவர்கள்! நகராட்சி மன்றத் தலைவர்! சட்டமன்ற உறுப்பினர்கள்! கண்ணியமான வாழ்க்கை நடத்துபவர்கள்! 2000 பேர் சேர்ந்து விட்டனர்.

****

சென்னைச் சிறைச்சாலையில் ஒவ்வொரு நாளும் கருணாநிதியும் நாவலரும் நானும் - இரண்டொரு நிமிடங்கள் பேசிக் கொள்கிறோம். அமெரிக்க குடியரசுத் தலைவர் கென்னடி படுகொலை செய்யப்பட்ட பாதகத்தை எண்ணி நான் மிகுந்த வேதனையில் ஆழ்ந்து போயிருந்தேன். வெறிச்சிட்டுப்போன ஒரு வேதனை கப்பிக் கொண்டிருந்த நிலை!

1963 நவம்பர் 29 - வழக்கு மன்றம் சென்றிருந்தேன். சென்றிருந்தேனா? அழைத்துக் கொண்டு போகப்பட்டேன். உள்ளே நாவலர், கருணாநிதி, மதி, ஆசைத்தம்பி, நடராஜன், சத்தியவாணி மற்றும் பலர் இருந்தனர். நான் மற்றவர்களுடன் அளவளாவ

அனுமதி கிடைக்கவில்லை. 'ஐயா, தாங்கள் படித்த 'குற்றச்சாட்டு' மெய்ப்பிக்கப்படுவதற்கான தகவல்கள் மட்டுமே இந்தத் தாள்களில் உள்ளன என்றால், நான் இப்போதே பதில் கூறிவிட விரும்புகிறேன். நான் குற்றவாளி அல்ல... உடனே டிசம்பர் 5-ம் தேதி பகல் 12 மணிக்கு வழக்கு நடைபெறும் என்று அறிவித்தார். சிறைக்குள் சென்றதும், நான் பழையபடி 5-ம் நம்பர் அறையில் தனியாக! தனியாக இருக்கும் பழக்கம் இதுவரை ஏற்பட்டதில்லை. அதென்ன கெட்டபழக்கம்? தனியாக இருந்து பழகிக்கொள் என்று சர்க்கார் எனக்கு போதிக்கிறது. நன்றி! மகிழ்ச்சி இல்லை! நன்றி!

****

அன்றுதான் (1963, நவம்பர் 29) மேயர் தேர்தல். நிலைமை சாதகமாக இல்லை. கம்யூனிஸ்ட்டு கட்சி காங்கிரஸுக்கு வோட்டு அளிக்க முடிவு செய்துவிட்டது. கிருஷ்ணமூர்த்தி நல்லவர். நமது கழகம் அல்ல - பண்புள்ளவர். பழகுவதற்கு ஏற்ற பெரிய மனிதர். இதை விளக்கி இவருக்கே ஆதரவு அளிக்கும்படி 14-ம் தேதியே ஓர் அறிக்கை எழுதி மாநகராட்சி மன்ற தி.மு.க. தலைவர் அ.பொ.அரசு அவர்களிடம் கொடுக்கச் செய்திருந்தேன். அந்த நல்லவருக்குத் துணை நிற்க, கழகம் தவிர வேறு யாரும் இல்லாததால், மேயர் தேர்தலில் அவர் தோற்றுவிட்டார் என்பதை, இழந்த கோட்டையை ஒரு படை திருப்பித் தாக்கிப் பிடித்தால் செய்தி வெளியிடுவது போல, நாலரை ஆண்டுகளுக்குப் பிறகு சென்னை கார்ப்பரேஷனை காங்கிரஸ் கைப்பற்றிவிட்டது!

கழக வளர்ச்சியில் அந்தக் கட்சிகளுக்கு ஏற்பட்டுவிட்ட அருவருப்பு, திகைப்பு, ஆத்திரம். இதைப் போக்கிக் கொள்ள அவர்கள் காங்கிரஸுக்கு வலிவூட்டுகிறார்கள். இது இடதுசாரிக் கொள்கையாம்!

****

தி.மு.க.வின் போராட்டத்தை 'சிறுபிள்ளைத்தனமானது' என்று நேரு சென்னையில் விமரிசித்ததை பத்திரிகைகள் முக்கிய இடம் கொடுத்து வெளியிட்டிருந்தன. அரசியல் சட்டத்தைக் கொளுத்துவதால் பிரச்னை

தீர்ந்துவிடுமா என்று நேரு கேட்டிருக்கிறார். தி.மு.க. கோரும் அரசியல் சட்டத்திருத்தம் குறித்து நேரு ஏன் பதட்டமடைய வேண்டும் என்று எனக்குப் புதிராக உள்ளது. (அப்படிச் செய்வது மிகவும் கடினம் என்று அண்ணா அறிந்திருக்க வேண்டும். இந்தி வட்டாரத்தை முற்றும் பகைத்துக்கொள்ளாமல் நேரு அதைச் சாதிக்க முடியாது) நாட்டுப் பிரிவினையை நாம் விட்டுவிட்டதற்காகவும், நமது கழக சட்டத்திட்டத்தைத் திருத்தி அமைத்திருப்பதற்காகவும் மகிழ்ச்சி தெரிவித்துப் பேசிவிட்டு, இது போதாது, மனம் மாறவேண்டும், இதயம் மாறவேண்டும் என்று கூறி இருக்கிறார்.

****

1963, டிசம்பர் 5 அன்று, நீதிமன்றம் பிற்பகலில் தொடங்கியது. தி.மு.க.வின் முதல் சென்னை மேயர் அரசு, நிறைய உணவு எடுத்துவந்திருந்தார். தோழர்கள் அந்த விதவிதமான உணவு வகைகளை வர்ணித்தனர். அந்த உணவைவிட, நண்பர்களின் அன்பே எனக்குப் பெரிய உணவாக இருந்தது. அன்று இரவு, என் இடது கையில் நான் அனுபவித்த வலி, வலது கரத்துக்குப் பரவியது. எனக்குச் சிகிச்சை தரவேண்டும் என்று சிறை அதிகாரிகளிடம் சொல்லத் தீர்மானித்தேன்.

****

இன்று இரவு, வலி வலது கரத்தைத் தாக்கிவிட்டது.

****

ஆனால், மிகப்பெரும் வேதனை அண்ணாவைத் தாக்கவிருந்தது. இனி அண்ணாவின் வார்த்தைகளில்:

தொத்தாவை இழந்த வேதனை

தொத்தாவின் உடல்நிலை எழுந்து நடமாடக் கூடியதாக இல்லை; பழையபடி இருந்திருந்தால் இந்நேரம் ஏழெட்டு முறையாவது வந்து பார்த்திருப்பார்கள். நான் அவர்களுக்குப் பக்கத்தில் இருந்து பரிவுடன் பணிவிடை செய்யவேண்டியது முறை. ஆனால், நான் மேற்கொண்டுவிட்ட கடமை, ஒரு மகன் தாய்க்குச் செய்யவேண்டிய கடமையை நான் செய்ய முடியாமலாக்கிவிட்டது. இதைத் தொத்தாவும் அம்மாவும் உணர்ந்துவிட்டனர் என்பது

என் உள்ளத்தில் எழும் சங்கடத்தைப் பாதியாக்கிவிடுகிறது. என் பொது வாழ்க்கைத் துறை என்னுடைய இயல்புகளையே அடியோடு மாற்றிவிட்டது என்பதை அவர்கள் இருவரும் மிக நன்றாக அறிவார்கள். தொத்தாவாகிலும், பேசித் தன் உணர்ச்சிகளைக் கொட்டிவிடுவதன் மூலம், மனதை அழுத்திக்கொண்டு இருக்கும் வேதனையை ஓரளவுக்குக் குறைத்துக் கொள்வார்கள். அம்மா அப்படி அல்ல. ஆனால் நான் மேற்கொண்டுள்ள கடமைக்காக, இந்த வேதனையை அவர்களும் தாங்கிக்கொள்ளத்தான் வேண்டும் என்ற நிலை நிலைத்துவிட்டது. இதிலிருந்து இனி விடுதலை ஏது!

மற்ற நேரங்களைவிட இம்முறை தொத்தா மனதிலே இயற்கையாக ஏற்படக்கூடிய சங்கடத்தை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, மிகக் கலகலப்பாக இருந்து, என்னைக் காஞ்சிபுரத்திலிருந்து வழி அனுப்பி வைத்தது என் உள்ளத்துக்குப் புதியதோர் எழுச்சியை, தெம்பைக் கொடுத்தது. நல்ல காரியத்துக்காகப் பணியாற்றுகிறான் மகன் என்ற பெருமிதம் அவர்களின் கண்ணொளியிலே கண்டேன். என்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கிவிட்டவர்கள் முதுமையால் நலிவுற்று இருக்கும் நாட்களில் நான் இங்கு வந்திருக்கிறேன். என் துணைவி ராணி, இம்முறை சிறையிலே என்னை வந்து பார்த்தபோது கண்களில் நீர் துளித்தது கண்டு மிகவும் சங்கடப்பட்டேன். என் மூத்த மருமகப் பெண் சரோஜா - எனக்கு மருமகப் பெண்ணாக வந்த பலன் - சிறையையும் வந்து பார்த்தாகிவிட்டது. மருத்துவக் கல்லூரியில் படிக்கும் பரிமளமும், அச்சகப் பொறுப்பையும் பரிமளம் பதிப்பக வேலையையும் கவனித்துக்கொள்ளும் இளங்கோவனும் உடன் வந்தனர். ஒவ்வொரு நாளும் நண்பர்கள் வருகின்றனர். ஆனால், வழக்கு முடிந்து தண்டனை என்று ஆகிவிட்டபிறகு இப்படி அடிக்கடி வரமுடியாது - பத்து நாட்களுக்கு ஒருமுறைதான் பார்க்கமுடியும். அந்தப் பழக்கம் கவனத்தில் இருக்க வேண்டும் என்பதற்காகவே ராணி என்னை உடனடியாக சைதாப்பேட்டை சிறையில் வந்து பார்க்க விரும்பியபோது 'வேண்டாம், ஒரு வாரம் போகட்டும்!' என்று சொல்லி அனுப்பினேன்.

பொதுவாழ்க்கைத் துறையில் முழுக்க முழுக்க என்னை ஒப்படைத்துவிட்டேன் என்பதை உணர்ந்து அதற்குத் தகுந்தபடி என் குடும்பத்தினர் தங்களுடைய நினைப்புகளைச் செப்பனிட்டுக்கொள்ள வேண்டியதுதான்! வேறுமுறை இல்லை!

தொத்தா, 31.12.63-ல் காலமானார். அவருடைய மறைவு அண்ணாவை மனம் குமுறிடவைத்தது. "நான் அவர்கள் பக்கம் இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கவில்லை, என் சிற்றன்னை பேச்சிழந்து, உயிரை இழந்து கொண்டிருக்கிறார்கள்..." என்று அண்ணா வருந்தினார். அவரை அண்ணா காணச் சென்றபோது, தொத்தா நினைவிழந்து கிடந்தார். "அவர் குரலொலி செவி புகவில்லை. அவரைக் காண அந்தக் கண்கள் திறக்கவில்லை. அவர்கள் மரணத்துக்கான பயணத்திலே இறங்கி விட்டார்கள்" என்றார் அண்ணா. ஆறு நாட்கள் அருகேயே இருந்தார் அண்ணா. இரவும் பகலும் - ஊண் உறக்கம் மறந்து அழுத கண்களுடன் மிகுந்த மனவலியுடன் சிற்றன்னையின் உடலுக்கு அண்ணா தீ மூட்டினார். தொத்தா உயிர் நீத்தபோது நாவலரும், நடராஜனும், கலைஞரும், சத்தியவாணி முத்துவும், அலமேலு அப்பாதுரையும் பிறரும் உடனிருந்து ஆறுதல் கூறினர். டி.வி.என், கே.ஆர்.ஆர்., எம்.ஜி.ஆர்., எஸ்.எஸ்.ஆர்., சிவாஜி கணேசன் ஆகியோர் வந்திருந்து ஆறுதல் கூறினர். முன்னதாக முதலமைச்சர் பக்தவத்சலம், விடுமுறை என்றபோதும், பரிமளம் அண்ணாவின் மகன் என்று தெரியாத நிலையிலும், அண்ணாவுக்கு பரோல் கிடைக்கவில்லை என்று அறிந்து, பரிமளத்தை உள்ளே அழைத்துச் சென்று, அவர் எதிரிலேயே தொலைபேசி மூலம் பெரிய அதிகாரியிடம் தொடர்புகொண்டு, உடனே அண்ணாவின் பரோலுக்கு ஏற்பாடு செய்தார்.



தொத்தா (ராஜாமணி அம்மாள்)

தொத்தாவின் மறைவையடுத்து, இருபத்தோரு நாட்களுக்கு அண்ணா காஞ்சிபுரத்திலேயே இருந்தார்; அதுவரை அவர் அனுபவித்திராத மனவலியால் துடித்தார். தான், தனது சிற்றன்னையின் அருகில் இருந்து, அவரை கவனித்துக்கொள்ள முடியவில்லையே என்று மனம் வெதும்பினார். பரோலில் கடைசி

நேரத்தில் வெளிவந்ததையே காங்கிரஸ் கிண்டல் செய்தது. 'பெரும் காங்கிரஸ் தலைவர்கள் பரோலில் சென்றிருக்கிறார்கள்' என்று எழுதிய அண்ணா, "எவ்வளவு தரம்கெட்ட நிலைக்கு வந்துவிட்டது அரசியல்!" என்று வருந்தினார். "எத்தனை இழி மொழி, கேலி மொழி இதற்கு! அவ்வளவு வக்கற்றுப்போன நிலை வந்துவிட்டதா! அவ்வளவு வறண்டு போய்விட்டதா, நெஞ்சத்தின் ஈரம், நேர்மை, பண்பு!" என்றும் குமுறினார்.

சிற்றன்னையின் ஈமக் காரியங்கள் முடிந்தபிறகு அண்ணா சிறை திரும்பினார். உதவிக்கு, உடன் ஒரே ஒருவர். அண்ணாவின் இதயமும் மனதும் அந்தத் தனிமையைத் தாங்கமுடியாமல் தவித்தன. 'சிறை எதனாலே கொடுமை ஆகிறது' என்பது பற்றி யோசித்த அண்ணா சொன்னார்:

> அறையில் பூட்டி வைக்கிறார்கள் என்பதால் மட்டும் அல்ல. கொடுமைக்கு மிக முக்கியமான காரணம், ஒருநாள் போலவே மற்ற எல்லா நாட்களும் உள்ளன! எல்லா நாட்களும் ஒரே விதமாகவே தோற்றம் அளிக்கும்படியான நிலை, சிறையில் இருப்பதைத் தாங்கிக்கொள்ள முடியாத கொடுமை என்று உணர்வார்கள்.
>
> பொது வாழ்க்கைத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள், ஒவ்வொரு நாளும் பல பிரச்னைகளை, பல கோணங்களிலிருந்து பல நண்பர்களுடன் பேசி, சுவையும் பயனும் பெறுபவர்கள். தோழமையினால் பெறப்படும் இனிமையைப் பெரிதும் வரவேற்பவர்கள், கழக அமைப்பு பற்றி, கழகத் தோழர்களின் எண்ணங்களைப் பற்றி அறிவதிலும், உரையாடி அகமகிழ்வதிலும் ஈடுபட்டவண்ணம் இருக்கும் எவரையும் செயலற்றவர்களாக இருக்கும் நிலையை மேற்கொள்ள வைக்கிறார்களே, சிறையில்! இதைவிடக் கொடுமை வேறென்ன இருக்கமுடியும்!

சின்னசாமி

அண்ணாவின் சிந்தனைகளை ஈர்க்கும் செய்தி வெளியிலிருந்து வந்தது. நகராட்சித் தேர்தல்களிலும், சென்னை மாநகராட்சித் தேர்தலிலும் தி.மு.க. வெற்றி பெற்றிருந்தது. தேர்தல் பிரசாரத்தின்போது, "வேட்டைக்காரன் வருவான், ஜாக்கிரதை!" என்று காங்கிரஸ் தலைவர் காமராஜர் எச்சரித்திருந்தார். எம்.ஜி.ஆரின் 'வேட்டைக்காரன்' வெளிவந்திருந்த நேரம் அது. எம்.ஜி.ஆர். பிரசாரத்துக்கு வருவார் என்பதை மனதில் வைத்தே

அவர் அவ்வாறு பேசினார். 'இந்த வெற்றிச் செய்தியைப் படித்துவிட்டு சாப்பிட உட்கார்ந்தபோது, இது சிறையாக அல்ல, சிங்கார மாளிகையாக மாறிவிட்டது. வார்டர்களின் பார்வையிலே ஒரு பாசம் திடீரென்று மலர்ந்தது. அதிகாரிகளின் பேச்சிலே புதுமணம் வீசியது!' என்று குறிப்பெழுதினார் அண்ணா. அந்த இன்ப உணர்ச்சியுடன் அன்றிரவு உறங்கச் சென்றார். 1964, பிப்ரவரி 25 அன்று, தாம் ஆறாம் எண் அறைக்கு மாற்றப்பட்டுவிட்டதாக அண்ணா பதிவு செய்திருக்கிறார். 5-ம் எண் அறையில் அன்பழகன், ஏழாவது அறையில் 'தையற்கலை ஆசிரியர்' சுந்தரம். எட்டாவது எண் அறையில் மதியழகன்.

மார்ச் மாதம் துவங்கியிருந்தது. சென்னை மெரினா கடற்கரையில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம். அதைப் பற்றியோ இந்தியை எதிர்த்து தீக்குளித்த சின்னசாமியைப் பற்றியோ பத்திரிகைகள் எழுதாதது அண்ணாவை வருத்தமுறச் செய்தது. அண்ணா எழுதினார்:

> 'மொழி காத்திடும் தூய நோக்குடன், தன்னைத்தானே தீயிலிட்டுக் கொண்ட தியாகச் செம்மல் சின்னசாமி பற்றி நாலு நல்ல வார்த்தை எழுதக்கூட மனம் வரவில்லையே!' என வருத்தமடைந்தார் அண்ணா. விளக்கமளிக்கும் வாதத்தன்மை மிக்க ஆயிரம் தலையங்கங்கள் தீட்டி டெல்லியின் போக்கை மாற்ற முயன்றாலும் அடையமுடியாத வெற்றியை, இந்த இதழ்கள் தீக்குளித்த சின்னசாமியின் படத்தைத் தமது இதழ்களில் வெளியிட்டு அந்தச் சம்பவம் காட்டும் பாடத்தை பண்டித நேரு உணரும்படி செய்திருந்தால், மொழிப் பிரச்னையிலே மகத்தான வெற்றி ஏற்பட்டிருக்குமே! தீக்குளித்த ஐந்து நாட்கள் முன்னர், அவர் திருச்சியிலிருந்து சென்னைக்குச் சென்றிருக்கிறார், புகைவண்டியில். அப்போது முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம் அவர்களும் அதே வண்டியில் பயணம் செய்திருக்கிறார். சென்னையில் வண்டியைவிட்டு இறங்கியதும் சின்னசாமி, திரு. பக்தவத்சலத்துக்கு எதிரிலே சென்று, 'நீங்கள் தமிழைக் காப்பதற்காக இந்தித் திணிப்பைத் தடுக்கக் கூடாதா?' என்று கெஞ்சிக் கேட்டிருக்கிறார். உடனே காவல் துறையினர் அவரைக் கைது செய்து, பின்னர் விட்டுவிட்டனர். அவர் தாம் இறப்பதற்கு முந்தைய நாள் தம் நண்பர் ஒருவருக்கு எழுதியுள்ள கடிதத்தில், 'ஏ, தமிழே! நீ வாழவேண்டும் என்பதற்காக

நான் துடியாய்த் துடித்துச் சாகப்போகிறேன். சிறையிலிருக்கும் அறிஞர் அண்ணாவும், தி.மு.கழக வீரர்களும் விடுதலை செய்யப்பட வேண்டும். அதனால்தான் நான் போர் முனை செல்கிறேன்!'

தி.மு.க. மீது இருந்த வெறுப்பால் செய்தியேடுகள் சின்னசாமியைப் பற்றிய செய்தியை வெளியிடவில்லை என்றும், சின்னசாமி தமிழக வரலாற்றில் நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டார் என்றும் அண்ணா சொன்னார்.

எனினும் சின்னசாமியின் தீக்குளியலில் அண்ணாவுக்கு உடன்பாடில்லை. 'இறந்துவிடுதல் தேவையற்ற முறை' என்று மனம் வருந்தினார். தமிழர்கள் மத்தியில் இந்திக்கு எதிரான மனநிலை வலுத்திருந்ததை சின்னசாமியின் தீக்குளிப்பு சொன்னது. மற்றோர் இளைஞனும் இதுபோலச் செய்யப்போவதாக அறிவித்திருந்ததாகச் செய்தி கண்டு திடுக்கிட்டுப் போனார் அண்ணா. 'இருந்து அந்தியை எதிர்த்துப் போராட வேண்டும்' என்ற அண்ணாவின் அறிவுரையைப் பின்பற்ற சிலர் மறந்தனர். ஆனால், ஒரு வருடத்துக்குப் பின்னர் பலர் சின்னசாமியைப் பின்பற்றினர்!

'அந்தத் தியாகச்சுடரின் திருவுருவப் படத்தை, திருச்சி தேவர் மன்றத்தில் 6.12.64-ல் திறந்து வைக்கும் பேறு எனக்குக் கிடைத்தது' என்று கலைஞர், சின்னசாமியைப் பற்றி பதிவு செய்திருக்கிறார். 1964 பிப்ரவரி நகராட்சித் தேர்தல்களின்போது, தீக்குளித்த சின்னசாமியின் படத்தை தி.மு.க. வெளியிட்டிருந்தது. முதலமைச்சர் பக்தவத்சலம், "மரியாதை செலுத்தலாம்; ஆனால் படமாக வெளியிடக்கூடாது" என்றார். "எங்களைப் படம் போடக்கூடாது என்று கூறிவிட்டு, மாநகராட்சித் தேர்தலில் திருப்பதி வெங்கடேசுவரர் படத்தையும் போட்டு, காளைமாட்டுச் சின்னத்தைப் போட்டு வெளியிடுவது பண்பா? என்று முதலமைச்சரைப் பணிவோடு கேட்கிறேன். நீங்கள் மாத்திரம் 'பெரிய'சாமியின் படத்தைப் போடும்போது, 'சின்ன'சாமியின் படத்தை நாங்கள் போட்டது தவறா?" என்று சட்டமன்றத்தில் கேள்வி எழுப்பினார் கலைஞர். தி.மு.க. ஆட்சிக்கு வந்த நாற்பது நாட்களில் சின்னசாமிக்கு, 16.4.1967-ல் ஒரு நினைவுச் சின்னம் எழுப்பி அதை கலைஞர் திறந்து வைத்தார்.

சின்னசாமியின் மறைவு சோகத்தைத் தந்தாலும், சென்னை உயர் நீதிமன்றம் தி.மு.க. வசமிருந்த சென்னை மாநகராட்சி, லாரிகள் வாங்கியதில் எந்த முறைகேடும் செய்யவில்லை என்று தீர்ப்பளித்தது அண்ணாவுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தது. எதிர்க்கட்சிகள் ஒரு பேரணியை இந்தப் பிரச்னை காரணமாக ஏற்பாடு செய்திருந்தன. 'இதற்கு முன்னால் கார்ப்பரேஷனிலோ,

அல்லது கவுன்சிலர்களிடத்திலோ, அரசு யந்திரங்களிலோ ஊழலுக்கு இடமே இல்லாமல் காந்திய ஒழுக்கத்துடன் காங்கிரஸ்காரர்கள் நடந்துகொண்டிருந்தார்கள் என்று நான் நினைக்கவுமில்லை; சொல்லவுமில்லை. ஆனால், தி.மு.கழகத்தின் அரசியல் நிர்வாகப் பிரவேசம் இந்த ஊழலுக்கு சமூக அந்தஸ்தையே தந்திருந்தது. ஊழல் இல்லாமல் நிர்வாகம் இல்லை என்று ஆக்கியிருந்தது. ஊழலே இங்கு ஓர் ஒழுக்கமானது தி.மு.க.வினால்தான்' என்று உயர் நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகும் லாரி பிரச்னையைப் பற்றி ஜெயகாந்தன் எழுதினார்.

அண்ணாவின் கட்டுப்பாட்டில் இல்லாத கட்சி

1964 மார்ச் 7, இரவு அண்ணா ஹெச்.ஜி.வெல்ஸ் எழுதிய 'மேன்கைன்ட் இன் த மேக்கிங்' நூலைப் படித்துக்கொண்டு இருந்திருக்க வேண்டும். சிறைவாசம் நிறையப் படிக்கக்கூடிய வாய்ப்பை அவருக்கு அளித்திருந்தது. மார்ச் 10-ம் தேதி, மேலவைக்கு யாரை ஆதரிப்பது என்பது பற்றி கலைஞரும் நாவலரும் அண்ணாவைச் சந்தித்துக் கூறினர். சில சட்டமன்ற உறுப்பினர்களும் வலியுறுத்தியதாக ஒரு கருத்தையும் கூறினார்கள். "பதில் ஏதும் கூறக்கூடிய நிலையிலும் இடத்திலும் நான் இல்லையே! எனவே, நான் என்ன சொல்ல இருக்கிறது? நிலைமைக்குத் தக்கபடி முடிவு எடுத்துக்கொள்ளுங்கள்!" என்று கூறி அனுப்பினார் அண்ணா. "கழகத்தின் சார்பில் எடுக்கப்படும் எந்த முடிவும் நான் என் இச்சையாகவோ, எனக்கு ஏற்படக்கூடிய விருப்பு வெறுப்பை மட்டுமே கணக்கிட்டோ மேற்கொள்வதில்லை. என்றாலும், எனக்கென்று ஏதேனும் ஒரு 'விருப்பம்' எழுகிறது என்றால், அதை நிறைவேற்றி வைக்கும் விருப்பம் கழகத்தினர் சிலருக்கு இருப்பதில்லை என்பதை பல சந்தர்ப்பங்களில் நான் உணர்ந்து வருகிறேன். வருந்தி என்ன பயன்?" என்று அண்ணா வருத்தப்பட்டார். தனது பள்ளி நண்பர் சி.வி.ராஜகோபாலை 'எம்.எல்.சி.'யாக்க அண்ணா விருப்பம் தெரிவித்தபோது, அடுத்த நிலையிலிருந்த தி.மு.க. தலைவர்கள் விளையாட்டாகவும் கேலியாகவும் இந்த எண்ணத்தைக் கருதியது, அண்ணாவுக்கு வருத்தத்தைத் தந்தது. நீண்டநாட்களுக்குப் பின் இறுதியில் சி.வி.ராஜகோபால் மேலவை உறுப்பினர் ஆனார்.

சிறையில் புதிய இடத்துக்குப் போவதற்கு முன், ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தபோது, மார்ச் 11 அன்று, சி.வி.ராஜகோபால் உண்ணாவிரதம் இருக்கப் போவதாகக் கொடுத்த தந்தி அண்ணாவுக்குக் கிடைத்தது. கெட்ட செய்திகள் தொடர்ந்தன. "மேலவைத் தேர்தல் சம்பந்தமாக ஏற்பட்டுவிட்ட சில விரும்பத்தகாத

நிலைகளைக் கண்டபோது, தூக்கிவாரிப் போடுவது போல, மேலவை உறுப்பினர் பதவியை நண்பர் எம்.ஜி.ராமச்சந்திரன் ராஜினாமா செய்துவிட்டாராம்" என்று அன்று மாலை மதியழகன் சொல்ல, அண்ணா திகைத்துப் போனார். கட்சிக்காரர்கள் அடிக்கடி நிதி கேட்டு எம்.ஜி.ஆரைத் தொல்லைப்படுத்துவதால் அவர் சகோதரர் சக்கரபாணிக்குப் பிடிக்காமல் போயிற்று என்றும், ஓர் அதிர்ச்சி வைத்தியம் செய்யவே இந்த முடிவை எம்.ஜி.ஆர். எடுத்ததாகவும் திரைப்பட இயக்குநர் டி.ஆர்.ராமண்ணா கூறியிருக்கிறார். மற்றவர்களுக்கு அது அதிர்ச்சி தந்ததோ இல்லையோ, அண்ணா அதிர்ச்சியடைந்தது உண்மை. நாவலரும், என்.வி.என்-னும் பிறரும் அவருடைய ராஜினாமாவை மறுபரிசீலனை செய்யக் கோரியும் எம்.ஜி.ஆர். அதை ஏற்க மறுத்துவிட்டார்.

'நடேஷ் ஆர்ட் ஃபிலிம்ஸ் தயாரித்த, எம்.ஜி.ஆர். நடித்த 'என் கடமை' படம் 13.3.64-ல் வெளிவந்தது. கழகத்துக்குள் என்ன மனக்கசப்போ, கழகத்தினரால் தனக்கு அளிக்கப்பட்டிருந்த சட்ட மேலவை உறுப்பினர் பதவியை எம்.ஜி.ஆர். ராஜினாமா செய்த செய்தி பத்திரிகைகளில் வந்தது. இந்தச் செய்தி வெளியான பிறகு தியேட்டர்களில் கூட்டம் குறையத் தொடங்கியது. செய்தி வெளியான சில நாட்களிலேயே தியேட்டர்களிலிருந்து 'என் கடமை' படத்தை எடுத்துவிட்டார்கள்' என எழுதியிருக்கிறார் அறந்தை நாராயணன். எம்.ஜி.ஆரின் ராஜினாமாவுக்கும் 'என் கடமை' திரைப்படம் வசூலைத் தராததற்கும் அறந்தை நாராயணன் முடிச்சுப் போட்டாலும், எம்.ஜி.ஆர். அவ்வாறு எண்ணவில்லை. 'என் கடமை' வெளிவந்த நான்கு மாதங்களுக்குப் பின்னர், 'தெய்வத்தாய்' என்ற திரைப்படத்தில் எம்.ஜி.ஆர். வாலி எழுதிய 'மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்' என்று தி.மு.க.வைக் குறிக்கும் பாடலைப் பாடினார். "கழகத்துக்கும் எம்.ஜி.ஆருக்கும் அமைந்துவிட்ட பாசம், சொல்லிக்கொடுத்து ஏற்பட்டதல்ல. தூண்டிவிட்டுக் கிளம்பியதுமல்ல. தானாக மலர்ந்தது. அவர் கழகத்தைத் துறந்துவிடுவதோ, கழகம் அவரை இழந்துவிடுவதோ நினைத்துக்கூடப் பார்க்கக் கூடாது. எனவே, அவர் மேலவை உறுப்பினர் பதவியை விட்டு விலகினாலும், கழகத்தை விட்டு விலகமாட்டார், என் நெஞ்சிலிருந்து விலகமாட்டார் என்று எனக்கு உறுதி உண்டு. அந்த உறுதியைத் துணையாகக் கொண்டு மனச் சங்கடத்தை மாற்றிக்கொள்ள - குறைத்துக்கொள்ள முனைவதிலேயே இன்று பெரும்பகுதி சென்றுவிட்டது. எதற்கும் காரணமாக என் சொல்லோ, செயலோ இல்லை. என் இயல்பு தனித்தன்மை வாய்ந்தது. நான் கழகத்தை நடத்திச் செல்லும் முறை

அந்த இயல்பை ஒட்டியே பெரிதும் அமைந்துவிட்டிருக்கிறது. கழகத்தை நான் வெறும் அரசியல் கட்சியாகக் கருதுபவனல்ல - எவர் ஒப்புக்கொண்டாலும் மறுத்தாலும் நான் மிக ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருப்பது 'கழகம் ஒரு குடும்பம்' என்ற கருத்தினை" என்றும் பதிவு செய்திருக்கிறார் அண்ணா.

இதைத் தொடர்ந்து, "காய் வேக நெருப்பின் வெப்பமும் தேவை. அதேநேரம் அந்த வெப்பம், வேகவைக்கும் அளவிலும் முறையிலும் அமைந்திருக்க வேண்டும். அதற்காகவே ஒரு பாத்திரம்! வெப்பத்தால் பாத்திரம் தாக்குண்டு காய் வேகுமளவுக்கு வெப்பத்தை அதன்பக்கம் திருப்பிவிட்டு, மற்றதை தான் பெற்றுக்கொள்கிறது. பாத்திரம் கரி பிடித்து விடுகிறது - காய் வெந்து சுவைப் பண்டமாகிறது. கழகத்துக்கு நான் அப்படிப்பட்ட ஒரு பாத்திரமாக இருக்கிறேன் - மகிழ்கிறேன்!" என்று தன் நிலையை விளக்கியிருக்கிறார் அண்ணா.

18.3.64 அன்று காலை எம்.ஜி.ஆரின் அறிக்கையைக் கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தார் அண்ணா. கட்சியில் இருக்கும் சிலரது நடவடிக்கைகளை தாம் புரிந்துகொள்ளாததாலேயே தான் ராஜினாமா செய்ததாகவும், கட்சிக்கு தான் தொடர்ந்து உழைக்கப் போவதாகவும் எம்.ஜி.ஆர். தெளிவுபடுத்தியிருந்தார். அண்ணாவை மகிழ்வூட்டும் செய்திகள் தொடர்ந்தன. தி.மு.க.வின் வேட்பாளர், கிருஷ்ணமூர்த்தி சென்னை மாநகராட்சியைப் பிடித்திருந்தார். முதல் தடவையாக காங்கிரஸின் கோட்டையான பொள்ளாச்சியையும் தி.மு.க. வென்றது. காஞ்சிபுரத்திலும், ஆரணியிலும் தி.மு.க. வென்றிருந்தது.

மார்ச் 26-ல் அண்ணா எழுதிய நாட்குறிப்பில், 'எம்.ஜி.ஆர் கழகப் பொதுக்கூட்டத்தில் பேசியது 'நம் நாடு' இதழில் வெளிவந்திருந்தது. உருக்கமான பேச்சு. கழகத்திடம் அவர் கொண்டுள்ள உள்ளன்பு தெள்ளெனத் தெரிகிறது. சில நாட்களாக நான் அடைந்திருந்த மனச் சங்கடம் அவர் கழகக் கூட்டத்தில் பேசினார் என்ற நிகழ்ச்சி பற்றி அறிந்ததால் நீங்கிற்று' என்று பதிவு செய்திருந்தார்.

எனினும் மூன்று மாதங்களுக்குப் பிறகு, 1964 ஜூலையில் ஜி.உமாபதியும், எஸ்.ஏ.கரீமும் ஏற்பாடு செய்திருந்த காமராஜர் பிறந்தநாள் விழாவில் எம்.ஜி.ஆர்., 'காமராஜர் என் தலைவர்; அண்ணா என் வழிகாட்டி' என்றது மீண்டும் எம்.ஜி.ஆரை ஒரு பிரச்னையாக்கியது. பதிவு செய்து வைத்திருந்த அந்தப் பேச்சை, எம்.ஜி.ஆர். மறுநாள் படப்பிடிப்பின்போது போட்டுவிட்டு, அங்கிருந்தவர்களின் கருத்தைக் கேட்டதாக இயக்குநர்

டி.ஆர்.ராமண்ணா தெரிவித்திருக்கிறார். எம்.ஜி.ஆரின் பேச்சுக்கு அவருடைய ஆரம்பகால காங்கிரஸ் ஈடுபாடும், தாமதமாக ஏற்பட்ட திராவிட இயக்கத் தொடர்புமே காரணம் என்கிறார் எஸ்.எஸ்.ராஜேந்திரன். ஆர்.எம்.வீரப்பன், "எம்.ஜி.ஆருக்கு காமராஜரிடம் உண்மையான மதிப்பு இருந்தது" என்கிறார். இது சாத்தியமே. 1964-ல் மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உடனேயே, எம்.ஜி.ஆர். காங்கிரஸ்காரரும், மூத்த அரசு அதிகாரியும், நண்பருமான க.திரவியத்தைச் சந்தித்தபோது, அவர் எம்.ஜி.ஆரிடம், "நீங்கள் காமராஜரை நம்பலாம்" என்று ஆலோசனை சொல்லியிருந்தார். ஹார்ட்கிரேவ் போன்ற சிலர் "எம்.ஜி.ஆருக்கு எதிராக தி.மு.க.வில் சலசலப்பு ஏற்பட்டிருக்கிறதென்றும், அவர் கட்சியைக் கைகழுவி விடுவார்" என்றும் எம்.ஜி.ஆரின் செய்கைக்கு அர்த்தம் கற்பித்தனர். அப்போது தி.மு.க. இந்தி - எதிர்ப்புப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்ததும், தனது சினிமா வாழ்க்கையைப் பாதுகாத்துக் கொள்ளவே எம்.ஜி.ஆர். அப்படி பேசியிருக்கக் கூடும் எனவும் அருணன் கூறுகிறார். அண்ணா அவர் சுபாவப்படி, எதுவும் கூறவில்லை. 'வழிகாட்டி' என அண்ணாவைச் சொல்லியிருந்தாலும், எம்.ஜி.ஆர். அண்ணாவைத் தொழும் அளவுக்குக் கடவுள் நிலைக்கு பின்னர் உயர்த்திப் பேசினார். உதாரணமாக, 1980 செப்டம்பர் 16-ல் அண்ணாவின் காஞ்சிபுரம் வீட்டை நினைவகமாக மாற்றியபோது, முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர்., "அண்ணாவை என் கடவுளாகவே பார்க்கிறேன். அவரைப் போன்ற பண்புள்ள தலைவரை நான் இதுவரை கண்டதில்லை!" என்று புகழ்ந்தார்.

1964 கம்யூனிஸ்ட்டு கட்சி பிளவுபட்டதைக் குறித்த ஆண்டு.

1964, மார்ச் 28-ல் தம் குறிப்பில், 'என்னைப் பொறுத்தமட்டில் கம்யூனிஸ்ட்டு கட்சியில் பிளவு ஏற்படுவது களிப்பூட்டும் நிகழ்ச்சி அல்ல. காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தைப் புது வலிவு கொள்ளச் செய்கிறதே என்பது கவலை தருவதாக இருக்கிறது' என்று எழுதியிருந்தார் அண்ணா.

'ஏப்ரல் 30 அன்று கம்யூனிஸ்ட்டு கட்சியின் பிளவு என்பது ஓரிரு ஆண்டுகளில் நிகழ்ந்துவிடும்' எனக் கருதினார் அண்ணா. கட்சியின் சீனா ஆதரவு இடதுசாரிப் பிரிவு, (பின்னர் சி.பி.எம்.) தி.மு.க.வின் தோழமைக் கட்சியாயிற்று. 1961 -லேயே காங்கிரஸுடனான அணுகுமுறை குறித்து கம்யூனிஸ்ட்டுகளிடையே பிளவு இருந்ததாகத் தெரிகிறது. இடதுசாரிகள் காங்கிரஸைப் பிற்போக்கு சக்தி என்றாலும், கட்சி அதிகாரபூர்வமாக அவ்வாறு எண்ணவில்லை. கம்யூனிஸ்ட்டு இயக்கத்தின் இடைப்பட்டவர்கள் காங்கிரஸில் பிற்போக்கு மற்றும் முற்போக்குச் சக்திகள் இரண்டுமே

இருப்பதாகக் கருதினார்கள். சீன - இந்தியப் போர், புது வேறுபாட்டுக்கு ஆதாரமாகி, வலதுசாரிப் பிரிவினர் சீனாவை ஆக்கிரமிப்பு சக்தியாக வர்ணிக்க வைத்தது. இடதுசாரிகளின் கைதுக்கு வலதுசாரிகள் காரணமானது கட்சியை உடைத்தது. பம்பாயிலும், கல்கத்தாவிலும் நடந்த கட்சி மாநாடுகளில், சி.பி.ஐ. என்று வலதுசாரியும், சி.பி.எம். என்று இடதுசாரியுமாகக் கட்சி இரண்டாகியது. மாநிலக் கட்சியுடன் சி.பி.எம். இணைந்துகொள்வது என்ற முடிவுப்படி தி.மு.கவுடன் அது கைகோத்துக் கொண்டது ஓரளவுக்குப் பலன் தந்தது என்றாலும், சி.பி.எம்.மால் தி.மு.க-வின் தமிழ் தேசிய கலாசாரத்தோடு போட்டிபோட முடியாது போயிற்று.

சம்மட்டி அடியாக வந்த நேருவின் மறைவு

1964, மே மூன்றாம் வாரத்திலிருந்து அண்ணாவின் தோழர்களை ஒவ்வொருவராக விடுதலை செய்யத் தொடங்கியிருந்தார்கள். அன்று முழுவதும் அண்ணா அந்தத் தோழர்கள் நினைவாகவே இருந்தார். மே 27-ம் தேதி 'நேரு காலமாகிவிட்டாராம்' என்று சிறைக் காவலாளிகள் கூறியபோது, அண்ணாவுக்கு நெஞ்சிலே 'சம்மட்டி அடி' வீழ்ந்ததுபோலாகிவிட்டது. 'பண்டித நேரு தலைவராக மட்டும் இருந்து வந்தவர் அல்ல. உலகத் தலைவர்களிடையே அவருக்கு இருந்துவந்த நட்பும் தொடர்பும் இங்கு மட்டுமல்ல, ஒரு போரற்ற, பூசலற்ற காலத்தை உருவாக்கும் நிலைமையை மலரச் செய்தது. காங்கிரஸ் கட்சியிடமும், ஆட்சி முறையிடமும் கசப்பும் கொதிப்புமான கோபமும் கொண்ட போதெல்லாம்கூட, பண்டித நேருவுடைய சிறப்பு இயல்புகள், அறிவாற்றல், தனித்தகுதி பண்பு ஆகியவற்றை நான் மறந்ததுமில்லை. நமது கூட்டங்களிலே எடுத்துச் சொல்லத் தவறியதுமில்லை' என்று அண்ணா எழுதியிருக்கிறார்.

' நான், அவரிடம் பேசி அறியாதவன். நான் ராஜ்யசபையில் பேசியதையும் அவர் இருந்து கேட்கவில்லை. ஆனால், நான் பேசிய மறுநாள், பண்டித நேரு பேசுகையில், இரண்டு மூன்று முறை என் பேச்சைக் குறிப்பிட்டுக் காட்டி, சிலவற்றை ஒப்புக்கொள்வதாகப் பேசினார். அந்தப் பேச்சின்போது அவருடைய பார்வை என் மீது பலமுறை வீழ்ந்தது - அந்தக் காட்சி இப்போதும் தெரிவது போலிருக்கிறது' என்று எழுதியிருக்கிறார் அண்ணா. "இந்தியா ஒரு நாடல்ல பல இன மக்களைக் கொண்ட ஒரு துணைக் கண்டம்" என அண்ணா மாநிலங்களவையில் கூறியிருந்தார். அதற்குப் பதிலளித்த பண்டித நேரு, "இந்தியா ஒரு நாடல்ல என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால், அதை ஒரு நாடாக்க நாம் முயற்சி

செய்ய வேண்டும்" என்றார். "அது அவருடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது" என்றார் அண்ணா. 'ஐம்பது ஆண்டுக்கால வரலாற்றை உருவாக்கிய அந்தப் பெருந்தலைவர், ஜனநாயகத்திலே, எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பேச்சை இது தவிர்க்கமுடியாதது என்று மட்டுமல்ல, இது தேவைப்படுவது, வரவேற்கப்பட வேண்டியது என்ற பண்பு உணர்ச்சியுடன் பதில் அளிப்பார் - அத்தகைய ஒரு ஜனநாயகச் சீமான் மறைந்துவிட்டார்' என்று தனது குறிப்பில் எழுதியிருக்கிறார் அண்ணா. "நாட்டவருடன் கழகத்தவரும் இந்த துக்கத்தில் பங்கேற்றுக்கொள்ள வேண்டும்" - கூட்டங்கள், ஊர்வலங்கள் வேண்டாம் என்று அனுதாபச் செய்தி கேட்டு வந்த கலைஞரிடமும் அரங்கண்ணலிடமும் கூறி அனுப்பினார்.

நேருவின் மறைவு சிலோனில் குடியுரிமை மறுக்கப்பட்ட தமிழர்களின் நிலையை இன்னும் சங்கடத்துக்கு உள்ளாக்கியது. 29.10.64-ல் சிரிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தம் 5,25,000 பேரைத் திரும்ப ஏற்றுக்கொள்ள வகை செய்தது. ஒப்பந்தப்படி ஐந்தேகால் லட்சம் பேர் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு விடுவர். பதினைந்து ஆண்டுகளில் - பல தவணைகளில் மூன்று லட்சம் பேருக்கு மட்டும் இலங்கை அரசு 'குடியுரிமை' வழங்கிடும். எஞ்சிய ஒன்றரை லட்சத்துக்கும் மேற்பட்டோரின் கதியோ பின்னரே முடிவு செய்யப்படும்; உடன்பாடு காணப்படும். டிசம்பர் 1964-ல், மாநிலங்களவையில் அண்ணா பேசுகையில், "நேரு யாத்த 1953-54 இந்தோ - சிலோன் ஒப்பந்தப்படி, 'தாங்களாகத் திரும்பி வருவது' என்பதே ஒப்பந்தத்தின் ஆத்மாவாக இருந்ததை, பண்டித நேரு தொடர்ந்து கடைப்பிடித்து வந்த நியாயமான கொள்கையை, கொஞ்சமும் கவலையின்றி அவரது வழித் தோன்றல்கள் கைவிட்டுவிட்டார்கள்" என்றார். "வேறு என்ன மாற்று?" என்று கேட்கும் மத்திய அரசின் நிலையைக் குறை கூறிய அண்ணா, "சிலோன் அரசு திருப்பி அனுப்பும் ஐந்து லட்சம் பேரை இந்தியா ஏற்றுக்கொள்ளாமல் போனால் என்ன நடக்கும்?" என்று திருப்பிக் கேட்டார். நேருவுக்குப் பின் பிரதமரான லால்பகதூர் சாஸ்திரி, "உங்கள் பக்தவத்சலமும் இராமையாவும் (அப்போதைய அமைச்சர்) சொல்லித்தான் ஒப்பந்தம் செய்தேன்!" என்றார்.

அடுத்தசில வாரங்களில் அண்ணாவின் சக்தி முழுதையும் ஈர்த்துவிடுமளவுக்கு இந்தி பிரச்னை எழுந்தது: இந்தி ஆட்சிமொழியாக 1965 ஜனவரி 26 முதல் ஆகப்போகிறது என்ற காலக்கெடுதான் அது. 1942-ல் 'வெள்ளையனே வெளியேறு' போராட்டத்துக்குப் பிறகு தமிழகம் அதுவரை கண்டிராத உள்நாட்டுக் கலவரத்தைக் காணவிருந்தது.

இலையுதிர் காலம்

ஆட்சியில் - நோய்

20

'இந்தி'யனா? இந்தியனா?



உயிர் தமிழுக்கு

'ஒருவர் 'இந்தி'யனாக இருக்க வேண்டுமா, இல்லை இந்தியனாக இருக்க வேண்டுமா?'

-இந்தக் கேள்விதான், இந்தி மொழியை ஆட்சிமொழியாக அறிவிக்கும் நாள் - 1965 ஜனவரி 26 நெருங்குகையில், தமிழர் மனங்களில் மேலோங்கி இருந்தது.

"நல்ல நாட்டுப் பற்றுள்ள, அறிவாளிகளான குடிமக்கள் மூன்று கோடிப் பேரை, கோபம் கொண்ட பிரிவினைக்காரர்களாக மாற்றும் சட்டம் இது. எனினும், கட்டாயமாக அரசியல் அமைப்புச் சட்டத்தின் (ஆட்சிமொழி பற்றிய) பதினேழாம் பிரிவு - அரபிக் கடலிலே தூக்கியெறியப்பட வேண்டும்!" என்று ராஜாஜி எச்சரித்தார்.

தி.மு.க.வின் தலைமைச் செயற்குழு 8.1.1965-ல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியது:

அ) 1965 ஜனவரி 26-ம் நாளாகிய குடியரசு தினத்தின் முக்கியத்துவத்தை தி.மு.கழகம் உணர்ந்திருந்த போதிலும், தென்னக மக்களின் விருப்பத்தையும், நலத்தையும் சீரழிக்கக்கூடிய விதத்தில் அந்த நாளை இந்தித் திணிப்பு நாளாக இந்தியப் பேரரசினர் மேற்கொண்டிருப்பதாலும், அந்த நாளில் இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை ஆட்சிமொழியாக ஏற்றுக்கொண்டுள்ளது என்று இந்திய அரசினரால் திரித்துக் கூறப்படும் என்பதை உணருவதாலும், அந்த நாளில் தென்னக மக்களின் இந்தி எதிர்ப்பு உணர்ச்சியையும், மனக் கொந்தளிப்பையும் காட்டுவதன் அறிகுறியாக, அந்த நாளை துக்க நாளாகக் கொள்வது என்றும்,

ஆ) அன்று எல்லா ஊர்களிலும் கண்டனக் கூட்டங்கள் நடத்துவது என்றும்,

இ) துக்க நாளின் அறிகுறியாக அன்று கறுப்புக் கொடியைக் கட்டுவது, கறுப்புச் சின்னம் அணிவது என்றும்

- இந்தச் செயற்குழு முடிவு செய்திருக்கிறது.

'இது 'துரோக மனப்பான்மையைக்' காட்டுவதாகும் என்றும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்' என்றும் முதலமைச்சர் பக்தவத்சலம் உறுதியாக அறிவித்தார்.

முன்னதாக, 1965 ஜனவரி 17 அன்று, இந்தியைத் திணிப்பது, புத்திசாலித்தனமல்லாத, அநீதியான, பாரபட்சமான கொடுங்கோன்மை என்று திருச்சியில் தாம் ஏற்பாடு செய்த சென்னை மாநில இந்தி எதிர்ப்பு மாநாட்டில் ராஜாஜி அறிவித்தார். சென்னை, மகாராஷ்டிரா, கேரளா மற்றும் அன்றைய மைசூர் மாநிலங்களில் இருந்து வந்திருந்த 700 பிரதிநிதிகளும், அரசியலமைப்புச் சட்டம் 17-ம் பிரிவை அமல்படுத்துவதைக் காலவரையறையின்றி நிறுத்திவைக்க வேண்டும் என்று கோரினர். ஆனால், தெற்கேயிருந்த அனைவருமே இப்படி எண்ணவில்லை. உதாரணமாக ஆந்திரபிரதேச சட்ட அமைச்சர், தென்னாட்டினர் இந்தி கற்று, இந்தி பேசும் மக்களை அவர்கள் மொழியிலேயே தோற்கடிக்க வேண்டும் என்றார். இதற்கிடையே உள்துறை அமைச்சகம், இந்தி மாற்றத்தை அங்கீகரிக்கும் வகையில், சில அதிகார முடிவுகளை இந்தி மொழியில் இதழ்களில் வெளியிட்டது. ஒரு குறிப்பிட்ட பதவி வரையில் மத்திய அரசு ஊழியர்கள் இந்தியைக் கட்டாயமாக அறிந்திருக்க வேண்டும் என்றும்,

இந்தி முதன்மையான ஆட்சிமொழியாக, 1965 ஜனவரி 26 முதல் அமலாகும் என்றும் சுற்றரிக்கை சொன்னது. சுற்றறிக்கை எழுப்பிய சர்ச்சையை அடுத்து, இது ஓர் அடையாள முயற்சியே என்றும், இந்தி பேசாதவர்களுக்கு அதிகக் கஷ்டம் ஏதுமின்றி இந்தி அறிமுகப்படுத்தப்படும் என்றும் உள்துறை அமைச்சர் குல்ஜாரிலால் நந்தா வலியுறுத்தினார்.

இதற்கும் மேலாக, டெல்லியிலும், பஞ்சாபிலும் பொதுக் கூட்டங்களில் பிரதமர் சாஸ்திரி பேசுகையில், "நாங்கள் எந்த மொழியையும் நாட்டின் எந்தப் பகுதி மக்கள் மீதும் திணிக்க விரும்பவில்லை" என்று கூறி, ஆங்கிலமே 1965, ஜனவரி 26-க்குப் பிறகும் கால வரையறையின்றிப் பயன்படுத்தப்படும் என்பதை நினைவுகூர்ந்தார். காங்கிரஸ் தலைவர் காமராஜர் "நான் இருக்கும்போது இந்தி வந்துவிடுமோ? வராது; வந்தால் அந்த ஆணையைக் கிழித்து எறிவேன்!" என்று முழக்கம் செய்தார். ஆனால், அது வரத்தான் செய்தது;- ஆனாலும் காமராஜரால் எதுவும் செய்ய முடியவில்லை. உள்துறை அமைச்சரும், பிரதமரும் உறுதி கூறியும், தமிழர்கள் எதிர்ப்புத் தெரிவித்தும்கூட, நாட்டுக்கு ஒரே பொதுமொழி தேவை என்ற வறட்டுத்தனமான நம்பிக்கைக்காக, பல மொழி பேசும் - பல இன மக்கள் என்ற கொள்கைக்கு விடுமுறை கொடுத்துவிட்டு மத்திய அரசு செயல்படுவது தெளிவாயிற்று.

உள்துறை அமைச்சகத்தின் நடவடிக்கைகள் ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டாலும், 1965 ஜனவரி - பிப்ரவரி சென்னைக் கலவரத்துக்குத் தூண்டுதலாக இருந்தது இந்திரா காந்தியின் தலைமையில் இருந்த செய்தி - ஒலிபரப்புத்துறை அமைச்சகமே. அவருடைய அமைச்சகம், மாற்றத்தைக் கொண்டுவரப் போவதாக வெளியிட்ட சுற்றறிக்கை, இந்தி எதிர்ப்பில் முன்னணி வகித்த மாணவர்களை உசுப்பிவிட்டது. தி.மு.க.வின் போராட்டத் தீர்மானத்தையடுத்து, அண்ணா ஜனவரி 25-ம் தேதி தடுப்புக் காவலில் கைது செய்யப்பட்டு இருந்தார். மற்றவர்கள் மறுநாள் கைது செய்யப்பட்டனர். தி.மு.க.வின் தலைவர்களும், பிறரும் சிறையில் இருக்க, மாணவர்கள் போராட்டத்தை, ஒருநாள் முன்னதாகவே - ஜனவரி 25-ம் தேதியே - கையிலெடுத்துக் கொண்டார்கள். அன்று சுமார் 50,000 மாணவர்கள் சென்னைக் கல்லூரிகளிலிருந்து திரண்டுவந்து, நேப்பியர் பூங்காவிலிருந்து செயின்ட் ஜார்ஜ் கோட்டை வரை சென்று, சென்னை மாநிலத்தில் பள்ளிப் பாடத்திட்டத்திலிருந்தே இந்தியை நீக்கக் கோரி முதலமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்கப் புறப்பட்டார்கள். 'விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதே அவர்களின் நோக்கம். விண்ணப்பத்தை அளிப்பதற்காகத் தம்மை வந்து சந்திக்கும்படி

ஒரு மாணவர் குழுவை பக்தவத்சலம் சுலபமாக அழைத்திருக்கலாம். அவ்வாறு செய்வதற்குப் பதில், தலைமைச் செயலகத்தை நோக்கி அணிதிரண்டு வரும் மாணவர்களைத் தடுத்து நிறுத்துமாறு காவல் துறைக்கு அவர் கட்டளையிட்டார். காவல் துறையினர் மாணவர்கள் மீது தடியடிப் பிரயோகமும், கண்ணீர் புகைப் பிரயோகமும் செய்வதில் ஈடுபட்டனர்' என்று எழுதியிருக்கிறார் சி.சுப்பிரமணியம். "மாணவர்களை நான் சந்திக்க மாட்டேன். அவர்களை எதற்காக நான் பார்ப்பது?" என்றும், "மாணவர்கள் கல்லூரிக்கு வராவிட்டால் போகட்டும். எனக்கு ஐந்து கோடி ரூபாய் மிச்சம்" என்று முதல்வர் பக்தவத்சலம் எடுத்தெறிந்து பேசியது மாணவர்களிடையே மேலும் வெறுப்பைத் தூண்டியது. சி.எஸ்.எழுதியிருப்பது போல, 'துரதிர்ஷ்டவசமாக இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் உணர்ச்சிகரமான அம்சத்தை மதிக்கத் தவறி உதாசீனம் செய்துவிட்டார். விளைவு? பொதுத் தேர்தல் சமயத்தில் மாணவர்கள் வீடு வீடாகச் சென்று வாக்காளர்களைச் சந்திக்க ஆரம்பித்தனர்; வாக்காளர்களின் காலில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து, காங்கிரஸுக்கு வாக்களிப்பதில்லை என்ற உறுதிமொழியை அவர்களிடமிருந்து பெற்றனர்' என சி.சுப்பிரமணியம் பதிவு செய்திருக்கிறார்.

அன்று மாலை ஐந்தரை மணி அளவில் சென்னை மெரினா கடற்கரையில் மாணவர்கள் பொதுமக்கள் முன்னிலையில் சில இந்தி மொழிப் புத்தகங்களை எரித்தனர். மதுரையில் வடக்கு மாடவீதி வழியாக மாணவர்கள் ஊர்வலம் சென்றபோது, காங்கிரஸ் அலுவலகம் தாக்கப்பட்ட செய்தி காட்டுத்தீயெனப் பரவியது. மேலும், "என்னுடைய இல்லம் உட்பட, அண்ணா, எஸ்.எஸ்.ஆர். உள்ளிட்டோர் இல்லங்களிலிருந்தும், அறிவகத்தின் மீதும் பறந்து கொண்டிருந்த கறுப்புக் கொடியை காங்கிரஸ் ஆதரவாளர்கள் அறுத்தெறிந்தனர்" என்கிறார் கலைஞர்.

ஜனவரி 26 அதிகாலையில் கலைஞரும், பிற தி.மு.க. தலைவர்களும் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட, ஒரு தி.மு.க. உறுப்பினர், டி.எம்.சிவலிங்கம், கோடம்பாக்கத்தில் தீக்குளித்துத் தற்கொலை செய்துகொண்டார். அடுத்தநாள் கீழப்பழுவூர் சின்னசாமி அவரைப் பின்பற்றினார். அடுத்தநாள் விருகம்பாக்கம் அரங்கநாதன், அய்யன்பாளையம் வீரப்பன், ரங்கசமுத்திரம் முத்து ஆகியோர் தீக்குளித்தும், கீரனூர் முத்து, விராலிமலை சண்முகம், கோவை (பீளமேடு) தண்டபாணி ஆகியோர் நஞ்சுண்டும் இந்தித் திணிப்பை எதிர்த்து மாண்டனர். 'டைம்ஸ்' இதழ் இப்படி எழுதிற்று: 'தென்னிந்திய நகரம் திருச்சியில், சென்றவாரம், 20 வயது ஓட்டல் ஊழியர் அவசர அவசரமாக



டாக்டர் ராதாகிருஷ்ணன், அண்ணா

தன் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் குறிப்புகள் எழுதி அனுப்பிவிட்டு பூச்சிக்கொல்லி மருந்தை உட்கொண்டு தற்கொலை செய்துகொண்டார். இந்தப் பகுதியில், ஒரே வாரத்தில், இது மூன்றாவது தற்கொலை. இதற்குமுன்னர் இரண்டு இளைஞர்கள், அவரைப் போலவே திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராக இருப்பவர்கள், தங்கள் உடம்பில் பெட்ரோல் ஊற்றிக்கொண்டு, வியட்நாம் எதிர்ப்பு மாதிரி, தீவைத்துக் கொண்டு மாண்டனர். மூவருமே இந்தித் திணிப்பை எதிர்த்தவர்கள்.'

'டைம்ஸ்' இதழ் சுட்டிக்காட்டிய மாதிரி, புதிய சட்டப்படி, அரசாங்க காரியங்கள் இனி இந்தியிலேயே நடத்தப்பட வேண்டும். இந்தியைக் கற்கும் அதிகாரிகளுக்கு மூத்தநிலை பணி உயர்வு அளிக்கப்படும். தற்கொலைகள் தவிர, கலவரங்களும், பஸ் எரிப்புகளும், மறியல்களும் நடைபெற்றன. அவை முடிவதற்குள் 1500 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். மீண்டும் 'டைம்ஸ்':

> மறுப்புத் தெரிவிக்கும் தென்னிந்தியர்களின் பக்கம் நியாயம் இருக்கிறது. இந்தியர்கள் 14 மொழிகளிலும், 831 பேச்சு வழக்கு மொழிகளிலும் பேசுகின்றனர். படித்த இந்தியரிடையே பொதுவான ஒரே மொழி ஆங்கிலம்தான். இந்தி எழுத்துரு தென்னிந்தியர்களுக்குத் தாண்டமுடியாத தடையாக இருந்தது. நேர்க்கோட்டின் மேலே வளைந்தும் நெளிந்தும், மாறுபடும் மெய்யெழுத்துகளோடும் இருக்கின்றது. தமிழ் நளினமான வட்டங்களோடும் வளைவுகளோடும் நுட்பமாக உள்ளது.

தி.மு.க. தலைவர்கள் 'மொழிப்போர் தியாகி'களை மேடைகளில் புகழ்ந்து பாராட்டினர். 'இந்தி எதிர்ப்பின் தானைத்தலைவனாக, தமிழ் மொழியின் பாதுகாவலனாக, தி.மு.கழகத்தைச் சேர்ந்த தமிழறியாப் பாமரர்களே மாலை சூட்டிக் கொண்டனர்' என்று எழுதினார் ஜெயகாந்தன்.

வெகுவிரைவில் தி.மு.க. பேச்சாளர்கள் மொழிப்போர் தியாகிகளின் பெயர்ப் பட்டியலைப் படிப்பது கூட்டங்களில் வழக்கமாயிற்று. இந்தி எதிர்ப்பைக் காட்டும் வகையில் 1938 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் உயிர்நீத்த தாளமுத்து நடராஜன் பெயர்களில் இருந்து பட்டியல் தொடங்கி இறுதியில் உயிர் நீத்தோரின் பெயரோடு முடியும். எனினும், "தீக்குளிக்கிறவர்கள் வறுமையால் செத்திருக்கலாம். அல்லது யாராவது கொலை செய்து நரபலி கொடுத்திருக்கலாம்" என்று முதலமைச்சர் பக்தவத்சலம் சொன்னது வேடிக்கையாக இல்லை. ஜனவரி 27-ம் தேதி அண்ணாமலை பல்கலைக்கழக மாணவர்கள் ஊர்வலத்தில், போலீஸார் சுட்டபோது சிவகங்கையைச் சேர்ந்த பி.எஸ்ஸி. மாணவரான ராஜேந்திரன் குண்டுகள் பாய்ந்து அந்த இடத்திலேயே மாண்டார். "அந்தத் துப்பாக்கிச் சூட்டில், இளங்கோவன் என்னும் மாணவரும் குண்டுகள் பாய்ந்து சிகிச்சைக்காக கடலூருக்குக் கொண்டுசெல்லப்படும் வழியிலேயே மடிந்துவிட்டார்" என்று கலைஞர் பதிவு செய்திருக்கிறார். தி.மு.க., பக்தவத்சலத்தின் ராஜினாமாவைக் கோர, தான் எப்போது போகவேண்டும் என்று தனக்குத் தெரியுமென்று அவர் பதிலுரைக்க, 1965 பிப்ரவரி 1 வரை இருபத்தொன்பது கல்லூரிகள் மூடப்பட்டிருந்தன. கேரளா, மைசூர், ஆந்திராவிலும், மேற்கு வங்கம், அஸாமிலும் போராட்டங்கள் வெடித்தன. எனினும் அதுவரை நடந்தது ஒன்றுமில்லை என்று சொல்லுமளவுக்கு மிகுந்த மோசமானது நிகழக் காத்திருந்தது.

மேலோட்டமாக அமைதி தெரிந்ததால், அண்ணா பிப்ரவரி முதல் தேதியும், மற்றவர்கள் அடுத்தநாளும் விடுதலை செய்யப்பட்டனர். வெளியே வந்த அன்றே அரசியல் சட்டத்திருத்தம் தேவை என்ற தி.மு.க.வின் கோரிக்கையை அண்ணா வலியுறுத்தினார். அதற்கு முந்தைய தினம் பெங்களூரில், காங்கிரஸின் மூத்த தலைவர்கள் முதல்வர் எஸ்.நிஜலிங்கப்பா, மேற்கு வங்க காங்கிரஸ் தலைவர் அதுல்ய கோஷ், ஆந்திர பிரதேசத்தின் சஞ்சீவரெட்டி, காமராஜர் ஆகியோர் இந்திக்குப் புது அந்தஸ்து அளிக்க அவசரம் காண்பிப்பது, நாட்டின் ஒற்றுமைக்கே ஆபத்து விளைவிக்கும் என்று எச்சரித்தனர். எனினும், அமைச்சரவையில் இரண்டாம் நிலையில் இருந்த

மொரார்ஜி தேசாய், தமிழக காங்கிரஸ் தலைவர்களிடம், இந்திக்கு எதிர்ப்பு தெரிவிப்போரின் தவறைத் திருத்தி அவர்களை இணங்கச் செய்யுமாறு கேட்டுக்கொண்டார். இந்தி எதிர்ப்பின் வரலாற்றை அறியாத குஜராத்திக்காரரான தேசாய், தற்போதைய போராட்டங்கள் நிகழ்வதற்கு முன்னால், 1950-களிலேயே இந்தியை ஆட்சிமொழியாகச் செய்திருக்க வேண்டும் என்று வருந்தினார்!

மேலோட்டமான அமைதி அதிக நாள் நீடிக்கவில்லை. இயற்கைதானே? மாணவர்கள் மறுபடியும் பிப்ரவரி இரண்டாம் வாரத்தில் போராட்டத்தைத் துவங்கினார்கள். மாயவரத்தைச் சேர்ந்த மாணவர் சாரங்கபாணியும் தற்கொலை செய்துகொள்ள, தற்கொலை செய்துகொண்டோரின் எண்ணிக்கை ஆறைத் தொட்டது. ஆனால், இப்போது சமூக விரோதிகளும், கிரிமினல் குற்றவாளிகளும் போராட்டத்தைக் கைப்பற்ற, தண்டவாளங்கள் அகற்றப்பட்டன; ரயில்கள் நிறுத்தப்பட்டன; பேருந்துகள் எரிக்கப்பட்டன. தந்திக் கம்பங்கள் அறுக்கப்பட்டன. திருப்பூரில் இரண்டு காவல்துறை அதிகாரிகள் உயிரோடு கொளுத்தப்பட்டனர். பிப்ரவரி 10 அன்று, இருபத்தோரு பேர் இறந்ததாகவும், அறுபது பேர் கலவரத்தில் காயமுற்றதாகவும் 'டைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. கலவரத்தை, 'மொழி பிரச்னையில் மாணவ சமுதாயம் தன் நிஜமான பயத்தையும், கவலையையும் வெளியிட்டது' என்று எழுதினார் ஹார்ட்கிரேவ். ஆனால், எல்லோரும் அப்படி நினைக்கவில்லை. ஜெயகாந்தனின் கருத்து, காங்கிரஸின் எண்ணத்தைப் பிரதிபலித்தது: "திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாசிஸப் போக்கு வெடித்து இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியாகி இருக்கிறது; அவ்வளவுதான்."

டெல்லியில் உள்துறை அமைச்சர் நந்தா, போராட்டக்காரர்களை எதிர்த்து உறுதியாக நின்ற பக்தவத்சலத்தைப் பாராட்டினார். மாநிலங்களவையில் பேசிய அண்ணாவோ, பக்தவத்சலத்தின் அணுகுமுறையை "இரக்கமற்றது" என்றார். "உண்மையாகவே திரு.பக்தவத்சலம் பாறை போல் நின்றார். ஆடாமல் அசையாமல், எந்தவித உணர்வும் இல்லாமல், கல் மாதிரி இருந்தார்; அவரைச் சுற்றி இருந்தவர்கள் அழுதுகொண்டும், கூக்குரல் எழுப்பிக்கொண்டும், கணவனை இழந்தவர்களும், மகன்களை இழந்தவர்களும் கதறி அழுதுகொண்டும் இருந்தபோது, அவர் பாறையாகவே இருந்தார்" என்றார்.

மேலும், இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களோடு இந்தி பேசாதவர்கள் ஒருபோதும் போட்டியிட்டு வெல்லமுடியாது என்று சுட்டிக்காட்டினார் அண்ணா. அவர் மேலும் சொன்னார்:

இந்தி பேசும் பகுதி மக்களின் குழந்தைகள் தங்கள் பெற்றோரிடமிருந்து இந்தி செய்யுள்களையும் பாடல்களையும் கற்று மனப்பாடம் செய்துவிடுவார்கள். நீங்கள் இந்தியை ஆயிரம் வழிகளில் கற்கிறீர்கள் - உங்கள் வயல்களில், தொழிற்சாலைகளில், வீடுகளில், குடிசைகளில், ஒவ்வொரு தொழிலிலும், வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும், வழிவழியாக நீங்கள் பெற்றதை நாங்கள் கற்கவேண்டும் என்கிறீர்கள். குறையுள்ளவர்களிடையே போட்டி வைக்கவேண்டும் என்கிறீர்கள். ரோமானியர்கள்தான் அப்படிப்பட்ட சமமற்ற போட்டி வைத்தார்கள். நீங்கள் அறிந்த மொழியை, நாங்கள் கற்றுக்கொண்டு உங்களோடு ஏன் போட்டியிடச் சொல்கிறீர்கள்? அங்கேதான் இருக்கிறது அநீதி. அந்த அநீதியை, பெரும்பாலான இந்தி ஆதரவாளர்கள் அமைதியாகச் சிந்தித்துப் பார்க்கமாட்டார்கள். எனவே, நாம் நீதியோடு, நியாயமாக, நட்போடு, எல்லாவற்றுக்கும் மேலாக ஜனநாயக உணர்வோடு நடந்துகொள்வோம்!

"இயற்கையான வழியில் இந்தியாவுக்கு ஒரு பொது மொழி கிடைக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்: காலப்போக்கில், அரசின் ஆதரவு ஏதும் இல்லாமல், மக்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டதாக அது இருக்கவேண்டும்!" என்றார் அண்ணா.

மொழி குறித்து அண்ணா, சராசரி அறிவுக்கும் நேர்மை உணர்வுக்கும் வேண்டுகோள் வைத்தார்: "வெறும் ஒருமைப்பாடுதான் உங்களுக்குத் தேவையா? இந்தியா முழுவதும் ஒரேமாதிரி அனைவரும் இந்தி பேசுபவராக இருக்கவேண்டும் என்பதற்காக ஒரே ஒரு பொது மொழி என்ற புல்டோசரைப் பயன்படுத்த விரும்புகிறீர்களா? இந்தியே இந்தியா முழுவதும் இருக்கவேண்டும் என்று நீங்கள் குறிவைத்தால், அதை நீங்கள் அடையப்போவதில்லை. வந்தது வரட்டும்!" என்றார்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர், 2004-ல், மறைந்த வெளியுறவுத் துறை அமைச்சர் தினேஷ் சிங் ஒரு பத்திரிகையாளரிடம், "இந்தி வென்றிருக்கும், தமிழ்நாடு இல்லையென்றால்" என்று வெறுப்போடு கூறினாராம். அவர் 'தமிழ்நாடு' என்பதற்குப் பதிலாக தி.மு.க. என்றே கூறியிருந்திருக்கலாம். 'டைம்ஸ்' இதழ், அரசின் கொள்கையை தி.மு.க. 'திரித்து'விட்டதாக குறை கூறியது. மேலும், 'தி.மு.க. போன்ற திட்டமிட்ட, தனக்கே உதவும் கும்பலின் நடத்தையால்தான் தென்னாட்டின் அச்சம் எல்லாம் மிகைப்படுத்தப்பட்டது' என

எழுதியிருந்தது. வெளியே பேசியது போலவே, மாநிலங்களவையிலும் அண்ணா வன்முறையைக் கண்டித்தார்: "நாங்கள் ஒரு வேண்டுகோள்கூட வைக்கவில்லை. ஒரு தலையங்கம்கூட எழுதவில்லை. ஒரு கட்டுரைகூட - போராட்டத்தை வரவேற்றோ, உற்சாகப்படுத்தியோ எழுதவில்லை" என்றார். மாணவர்களின் கட்டுப்பாட்டுக்குள் போராட்டம் இனியும் இல்லை என்று தெரிந்தவுடன், அதுவரை அறிக்கை வெளியிட்டால் தி.மு.க. பற்றிய அவதூறை ஒப்புக்கொள்வதாக ஆகிவிடும் என்று நம்பிய அண்ணா இப்போது மாணவர்களுக்கு போராட்டத்தைக் கைவிடுமாறு அறிக்கைவிடுத்தார். ஆனால், காலம் கடந்துவிட்டிருந்தது. 'இந்தி பேசும் வடக்கின் நோக்கங்கள், மற்றும் பண்டைய இன உணர்வு அதற்குப் போடும் தூபம் எல்லாம், ஏற்கெனவே இரு துருவங்களாக இருந்த வடக்கு - தெற்கு அரசியலை, தெற்கே மேலும் அவநம்பிக்கை சூழ வைத்தது' என்று 'டைம்ஸ்' பத்திரிகைஎழுதியது.

மத்திய அரசின் உறுதி சிதைந்தது

உணர்வுகளும், சினமும் பொங்கிய இந்த விஷயத்தில் வெகு அலட்சியமாக இருந்த பக்தவத்சலம்கூட,"நிரந்தர இருமொழிக் கொள்கையை கடைப்பிடிக்குமாறு" கூறத் தொடங்கினார். சில தென்னாட்டு அரசியல் தலைவர்கள்தான் தாம் பதவிக்கு வரக் காரணமாக இருந்தபோதும், மொழி விஷயத்தில் பிரதமர் சாஸ்திரி எந்தச் சலுகையையும் காண்பிக்க விரும்பவில்லை. ஆனால், அவருக்கு வேறு வழி இருக்கவில்லை. அப்போது செய்தி - ஒலிபரப்புத் துறை அமைச்சராக இருந்த இந்திரா காந்தி சென்னை வந்தபோது, சாஸ்திரி சமரசத்துக்கு ஆயத்தமாக இருப்பதை குறிப்பால் உணர்த்தினார். டெல்லி திரும்பியதும் இந்திரா காந்தி, அமைச்சரவையில் தமிழ் மக்களின் கொதிப்பை எடுத்துரைத்தார்.

1965 பிப்ரவரி 11 அன்று மூத்த தலைவர்கள் சி.சுப்பிரமணியமும், ஓ.வி.அளகேசனும், ஆங்கிலமே தொடரவேண்டும் என்ற சட்டரீதியான உறுதிமொழியைக் கோரி, அளித்த ராஜினாமா கடிதங்கள், இறுதியில் சாஸ்திரியின் உறுதியைக் குலைத்தன. தொடக்கத்தில் சாஸ்திரி அயர்ந்து போய்விடவில்லை. ராஜினாமாக்களை குடியரசுத் தலைவர் ஏற்க, அவர் பரிந்துரை செய்தார். ஆனால், தெலுங்குக்காரரான குடியரசுத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் - சாஸ்திரியிடம், "இந்தியாவிலிருந்து நீங்கள் தமிழ்நாட்டை இழக்க விரும்புகிறீர்களா? அப்படி இல்லை என்றால், உங்கள் பரிந்துரையைத் திரும்பப் பெற்றுக்கொண்டு விடுங்கள்" என்றார். ராஜினாமா அன்று சாஸ்திரி வானொலியில் பேசுகையில், நடந்துவிட்ட துன்பகரமான நிகழ்ச்சிகள் குறித்து

தாம் ஆழ்ந்த கவலையும் அதிர்ச்சியும் அடைந்ததாகக் கூறினார். சாவு எண்ணிக்கை அப்போது அதிகாரபூர்வமாக அறுபதை எட்டியிருந்தது.

தம்முடைய வானொலி உரையில், பிரதமர் நேரு இந்தி பேசாதோருக்கு அளித்த ஆங்கிலம் காலவரையறையின்றிப் பயன்படுத்தப்படும் என்ற உறுதிமொழியை மீண்டும் வலியுறுத்திக் கூறினார் சாஸ்திரி:

> காலவரையறை இன்றி... நான் ஆங்கிலத்தையே இணைமொழியாக வைக்கப் போகிறேன்... ஏனென்றால், இந்தி பேசாத பகுதி மக்கள் தாங்கள் முன்னேறுவதற்கான வாய்ப்புகள் அடைபட்டுப் போகும் என்று எண்ண நான் இடம்கொடுக்க விரும்பவில்லை... மக்கள் எவ்வளவு காலம் வேண்டுமோ அவ்வளவு காலத்துக்கு, (ஆங்கிலத்தை) ஒரு மாற்று மொழியாக வைத்திருக்க விரும்புகிறேன். ஆங்கிலத்தை இணைப்பு மொழியாக வைத்திருக்கும் முடிவை நான் இந்தி பேசும் மக்களிடம் விடாமல், இந்தி பேசாத மக்களிடம் விடப்போகிறேன்.

தமிழர்களின் கவலைகளை சரியாக உணர்ந்தும், இந்தி கட்டாயமானால் தங்கள் வாய்ப்புகள் அரசுப் பணிகளில் பெரிதும் பாதிக்கப்படும் என்று இந்தி பேசாத பகுதி இளைஞர்கள் அஞ்சுவதையும் தனது பேச்சில் குறிப்பிட்டிருந்தார் பிரதமர். அரசுப் பணிகளுக்கு இந்தி கட்டாயமாக்கப்படாது என்றும், முன்போலவே அரசுப் பணிகளுக்கான தேர்வுகளில் ஆங்கிலமும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் பிரதமர் சாஸ்திரி தெளிவாக்கினார்.

1965, பிப்ரவரி 24-ல், காங்கிரஸ் செயற்குழு, ஒருபடி மேலே போய், எல்லா முக்கிய மாநில மொழிகளாலுமே தேர்வுகள் எழுதலாம் என்று பரிந்துரை செய்தது. மும்மொழித் திட்டத்தைச் சரியாக நடைமுறைப்படுத்தவில்லை என்றும் வருத்தம் தெரிவித்தது. ஆகஸ்ட் 1961-லேயே முதலமைச்சர்கள் மாநாட்டில் மும்மொழித் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. இந்தத் திட்டத்தில், தாய்மொழி, இன்னோர் இந்திய மொழி - குறிப்பாக, வடக்கே இருப்பவர்களுக்குத் தென்னிந்திய மொழிகளில் ஒன்று - தவிர ஆங்கிலம் என்றும், தென்னிந்தியர் தங்கள் தாய்மொழியுடன் இந்தியையும் ஆங்கிலத்தையும் கற்கலாம் என்றும் யோசனை கூறப்பட்டது. வடக்கே, மாணவ - மாணவியர் சம்ஸ்கிருதத்தைத் தங்கள் இரண்டாம் மொழியாகத் தேர்ந்தெடுத்திருந்தனர்.

இந்தி பேசாத மாநிலங்கள் ஒரிசா, மேற்கு வங்கம், மகாராஷ்டிராவில் தாய்மொழியையும், ஆங்கிலத்தையும், இந்தியையும் கற்றனர். எப்படியிருப்பினும், இந்தி பேசும் பகுதிகளில், தென்னிந்திய மொழியைத் தேர்ந்தெடுப்பார் யாரும் இருக்கவில்லை. காங்கிரஸ் கட்சியின் செயற்குழு எடுத்த மிக முக்கிய நடவடிக்கை, 1963 ஆட்சிமொழிச் சட்டத்தில் நேருவின் வாக்குறுதி சேர்க்கப்பட வேண்டும் என்பதுதான். காங்கிரஸின் இந்த முயற்சிகள், நியாயமாக இந்தி பேசாத மக்களை, குறிப்பாகத் தமிழர்களை, மகிழ்ச்சியடையச் செய்திருக்க வேண்டும். ஆனால், அவை மிகத் தாமதமாகவும், தேவைக்கு குறைவாகவும் இருந்ததால், தமிழ்நாட்டில் காங்கிரஸைப் பழைய நிலைக்கு எடுத்துச்செல்ல அவை உதவவில்லை.

சிங்கப்பூர் – மலேசியாவுக்கு அண்ணா வருகை

1965 இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்குப் பின்னர், சென்னை மாநிலத்தைத் தாண்டி இந்தியா முழுவதும் அண்ணாவின் மீது கவனம் விழுந்திருந்தது. அண்ணா பேசிய கூட்டங்களுக்கு ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வந்து குவிந்தனர். 'எங்கேயாவது, எப்போதாவது, அண்ணாவின் பார்வை எங்கள் மீது படும். ஒரு மெல்லிய புன்னகையை உதிர்ப்பார். அதுபோதும். ஜென்ம சாபல்யம் அடைந்தாற்போல ஒரு மகிழ்ச்சி!' என்று எழுதியிருக்கிறார் அப்போது மாணவராக இருந்த 'தினமணி' ஆசிரியர் கே.வைத்தியநாதன்.

அண்ணா இப்போது இந்தியா முழுவதும் நன்றாக அறியப்பட்டவர் ஆனார். தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் அவர் ஆராதிக்கப்பட்டார். 1965, கோடையில் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வெற்றிகரமாக அமைந்த அவருடைய முதல் வெளிநாட்டுப் பயணம் அதற்குச் சான்று. 1965, ஜூலை 16 அன்று இரா.செழியனுடன் அண்ணா சிங்கப்பூருக்குப் பயணமானார். மலேசிய தி.மு.க.வும் பிறரும் அங்குள்ள தமிழர்களின் சிறப்பான வாழ்க்கையைக் காண அவருக்கு அழைப்பு விடுத்திருந்தார்கள். மகளைத் திருமணம் செய்துகொடுத்த பின், அவள் எப்படிப் புகுந்த வீட்டில் இருக்கிறாள் என்பதைக் காணச்செல்லும் தந்தையின் நிலையில் தாம் இருந்ததாகச் சொன்னார் அண்ணா! இந்தியாவை விட்டுக் கிளம்புமுன், "என் பயணம் பார்க்கவும், கேட்கவும், அனுபவிக்கவும், விவாதிக்கவும் மட்டுமே; கசப்பு உணர்வை உண்டாக்க அல்ல; அது என் குணமல்ல" என்று கூறிவிட்டு, தொடர்ந்து, "நான் உள்நாட்டு அரசியலை அங்கு பேசமாட்டேன். எதை எங்கே பேசுவது என்ற கலாசாரமும் நாகரிகமும் எனக்குத் தெரியும். அப்படிப் பேசுவது பொருத்தமற்றது என்ற பொறுப்பை உணர்ந்தவன் நான்!" என்றார் அண்ணா.

சுதந்திரம் பெற மூன்று வாரங்கள் இருந்த சிங்கப்பூர் நகரின் ஜாலான் பெசார் அரங்கத்தில் சுமார் 30 ஆயிரம் பேர் அண்ணாவை வரவேற்றனர். இதற்குமுன்னர் அங்கே நேருவுக்கு மட்டுமே அப்படிப்பட்ட மக்கள் கூட்டம் வந்ததாக பிரதமர் லீக்வான் யூ தம் வரவேற்பில் குறிப்பிட்டார்.

முதலில் ஆங்கிலத்தில் பேசிவிட்டுப் பின்னர் தமிழில் தொடர்ந்தார் அண்ணா. "எந்த நாட்டை வாழத் தேர்ந்தெடுக் கிறார்களோ அந்த நாட்டுக்கு எதிராகச் செயல்படுபவர்கள் தங்கள் கலாசாரத்துக்கும், நாகரிகத்துக்கும் துரோகம் இழைக்கிறார்கள்" எனக் கூறிவிட்டு, சீன ஆக்கிரமிப்பின்போது இந்தியாவுக்கு தார்மீக மற்றும் பொருளாதார ஆதரவை அளித்ததற்காக மலேசிய அரசைப் பாராட்டினார்:

> இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்று பாடியவர்கள் தமிழர்கள். தமிழர்களான நீங்கள், மலேசியர்களைப் போல வாழவேண்டும். உங்கள் தாய்நாட்டுக்குத் திரும்பும் எண்ணத்தைக் கைவிட வேண்டும்.
>
> நீங்கள் மலேசியத் தமிழர்கள்; இங்கே வாழ முடிவு செய்திருக்கிறீர்கள். இந்த நாட்டைப் பாழாக்கி விடாதீர்கள். யாரையும் கெடுப்பது தமிழ்க் கலாசாரம் அல்ல...
>
> தாராளமாகக் குடியுரிமை வழங்கியுள்ள இந்த அரசுக்கு என் நன்றி...
>
> என்னை விமானநிலையத்தில் வரவேற்க வந்தவர்கள் ஆனந்தக் கண்ணீர் வடித்தார்கள். இந்த மகத்தான, அன்பான, பிரமாண்டமான வரவேற்பு என்னால் மறக்கமுடியாதது.
>
> அன்பின் சின்னமாக நீங்கள் இருப்பீர்களென்று நான் எதிர்பார்த்தேன். ஆனால், இந்த அளவுக்கு இல்லை... நான் இங்கே கலாசார தூதனாகத்தான் வந்திருக்கிறேன், அரசியல்வாதியல்ல...
>
> எங்கள் தமிழ்நாட்டில் நாங்கள் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றாலும், அமைச்சர் ராஜரத்தினம் எங்களை இந்தியாவின் பிரதிநிதிகளாக வரவேற்பதாகக் குறிப்பிட்டார். என்னுடைய நாடும் இந்தப் பெரிய மனப்பான்மையைப் பின்பற்றவேண்டும் என விரும்புகிறேன். அவருக்கு என் நன்றி.



சுயமரியாதை திருமணத்தில் அண்ணா, கி.வீரமணி, பெரியார்

ஜூலை 17 அன்று மலேசிய திராவிடர் கழகம் அண்ணாவுக்கு இரவு விருந்தளித்தனர். உணவைத் தொடாமல் விருந்தினர் எல்லோரும் தன்னையே எப்போதும் பார்த்துக்கொண்டு இருந்ததைக் கண்ட அண்ணா, இதற்குமுன் இப்படி ஓர் அனுபவம் பெற்றதில்லை என்றார். ஆனால், முருகன் கோயில் இருந்த சுங்குரும்பை என்ற இடத்தில் பொறுமை காக்க இயலாத கூட்டம் அண்ணா மீது விழுந்ததில் அவர் வேட்டி கிழிந்தே போயிற்று. "எனக்கு இருப்பது ஒரே உடல். உங்கள் பாசம் என்னை உருக்குகிறது. ஆனால், நீங்கள் என் மீது வைத்திருக்கும் அன்பைக் காட்டுவதில் கட்டுப்பாடு தேவை" என்றார் அண்ணா. அவர் மலேசியத் தமிழர்களை கட்டடக்கலை வல்லுநர்களாகவும், தொழிலதிபர் களாகவும் காண விரும்பினார். பெரும்பாலானவர்கள் அந்த நாட்டின் ரப்பர் தோட்டத் தொழிலாளர்களே.

செரம்பான் என்னும் இடத்தில், தமிழர்களை மலேசியாவின் ஓர் அங்கமாகப் பார்ப்பதாகக் கூறினார்: "மேலாடையாக, நெற்றிக் குங்குமமாக, வயல் வரப்பாக, வீட்டின் வாயிலாக மலேசியத் தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எண்ணிக்கையில் மூன்றாவதாக இருந்தாலும், அவர்களுடைய உரிமைகளும், அந்தஸ்தும் மாறவேண்டும். வெற்றிலை-பாக்கு மட்டுமே உதட்டைச் சிவப்பாக்கிவிடாது. கொஞ்சம் சுண்ணாம்பும் தேவை. மலேசியத் தமிழர்கள் அந்தச் சுண்ணாம்பு போன்றவர்கள்".

அடுத்தடுத்த நிகழ்ச்சி ஏற்பாடுகளின் அலைச்சலால் அவருக்கு

உடல்நலம் குன்றி, ஜூலை 27, 28 இரண்டு நாள் நிகழ்ச்சிகளும் ரத்து செய்யப்பட்டன. சிங்கப்பூருக்குத் திரும்பியபிறகு, செம்பவாங்கில் ஒரு கூட்டத்தில் பேசுகையில், அண்ணா பழைய மூடநம்பிக்கைகளையும், தீய பழக்கங்களையும் சாடினார். அறிவுத்தேடலே மனிதகுலத்தின் அறிவுப் பெருக்கத்துக்கு வழி எனப் புகழ்ந்தார். பின்னர், கூட்டத்தினரைப் பார்த்து தமிழர்கள் கண்டுபிடித்தது என்ன என்று கேள்வி எழுப்பினார். கடிகாரம், ரேடியோ, விமானம், டெலிவிஷன் எல்லாமே மற்றவர்களால் கண்டுபிடிக்கப்பட்டவை. தமிழர்கள் எதையும் கண்டுபிடித்து விட்டதாகக் கூறமுடியாது. பிறர் கொடுத்தவற்றை அனுபவிக்கும் கடனாளிகளாகத் தமிழர்கள் வாழ்வதாகச் சொன்னார் அண்ணா. "இந்த உலகத்துக்கு நாம் என்ன திருப்பித் தந்திருக்கிறோம் என்று நம்மை நாமே கேட்டுக்கொள்ளவேண்டும். அப்போதுதான் நாம் வளரமுடியும்" என்றார்.

ஆகஸ்ட் முதல் தேதி அண்ணா சிங்கப்பூரிலிருந்து புறப்பட்டார். தாய்லாந்து, கம்போடியா, ஹாங்காங் மற்றும் காமகுரா (ஜப்பான்) ஆகிய நாடுகளுக்குப் போய்விட்டு, 1965, ஆகஸ்ட் 15 அன்று டெல்லி திரும்பி, ஆகஸ்ட் 21-ம் தேதி சென்னைக்கு வந்தார். மறுநாள் மெரினா கடற்கரைக்கு அண்ணா ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். எம்.ஜி.ஆர். தன் வாகனத்தில் வர, அதை அவர் திரைப்பட நிறுவனத்தினர் படமாக்கினார்கள். தெற்காசிய நாடுகளிடமிருந்து இந்தியா நிறைய கற்கவேண்டும் என்ற அண்ணா, அவர்களின் இடைவிடா உழைப்பையும் அதற்குத் தகுந்த வளர்ச்சியையும் நம்பிக்கையையும் சுட்டிக்காட்டினார். மலேசியாவுக்கு வந்தபிறகு காமராஜர் முதலமைச்சர் ஆனதுபோல, தானும் முதல்வர் ஆவேன் என்று மலேசியத் தமிழர்கள் தெரிவித்த நம்பிக்கையை அண்ணா வெளியிட்டார். அப்படிப்பட்ட உணர்வுகளில் தமக்கு நம்பிக்கை இல்லாவிட்டாலும், அந்த நினைப்பே அவர் நெஞ்சைத் தொட்டது என்றார். இரண்டு வருடங்களுக்குப் பின்னர் அந்த எண்ணம் நிறைவேறப்போவதை அவர் அப்போது அறிந்திருக்கவில்லை.

21

ஆட்சியை நோக்கி!



இடமும் வலமும் அணி சேர்த்து

லால்பகதூர் சாஸ்திரிக்குப் பிறகு, 1965-ல் இந்திரா காந்தி பிரதமர் ஆனார். ஸ்தாபன காங்கிரஸ் என்றும் இந்திரா காங்கிரஸ் என்றும் கட்சி இரண்டாகச் செயல்பட எத்தனித்ததும் நீண்ட கால ஆட்சி சுகமும் ஊழலும், சென்னை உட்பட பல மாநிலங்களில் காங்கிரஸின் பலத்தைக் குறைத்திருந்தன. தி.மு.க. தனது தேர்தல் வாய்ப்புகளைக் கண்டறிய ஓர் ஆய்வுக் குழுவைத் தமிழகமெங்கும் அனுப்பியிருந்தது. "ஆய்வுக் குழுவினர் நாடெங்கும் கண்டறிந்த சேதிகளை இரவெல்லாம் கூறினர். கேட்டு இன்புற்றேன். இருநூற்றுச் சொச்சம் தொகுதிகளிலும் நாம் வேட்பாளர் பெற்றிடுவது மட்டுமல்ல நம் திட்டம். மற்ற கட்சியினருடன் கலந்து உரையாடி, கணக்கெடுத்து, காங்கிரஸ் ஆட்சியினை வீழ்த்துவதற்கு ஏற்ற முறையான தொகுதி உடன்பாடுகளைக் காண வேண்டும்" என்றார் அண்ணா.

காங்கிரஸை வீழ்த்த வியூகம் அமைத்த அண்ணா, "கொள்கை அடிப்படையில் அல்லாமல், பொது ஒத்துழைப்பு என்ற அடிப்படையில் கூட்டணிக் கட்சிகளோடு தொகுதிகளைப் பகிர்ந்துகொள்ளப் போவதாகவும், இதன் அடிப்படையில் கொள்கையால் மாறுபட்ட கட்சிகள் ஒரே கூட்டணியில் அங்கம் வகிக்க முடியும்" என்றும் கூறினார். தொடர்ந்து, "காங்கிரஸ் எதிர்ப்பு என்ற பொதுவான அம்சம் மட்டுமே காங்கிரஸ் வெற்றியைத் தடுத்து நிறுத்த உதவும் என்று வலியுறுத்தினார் அண்ணா. மேலும், "தி.மு.க. சுதந்திரா கட்சியோடு உடன்பாடு செய்து கொண்டாலும், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட்டு கட்சி, தனக்குச் செல்வாக்குள்ள தொகுதிகளில், காங்கிரஸ் - சுதந்திரா ஆகிய இரண்டு கட்சிகளுக்கு எதிராகத் தன் வேட்பாளரை நிறுத்தலாம்" என்றார். இந்த சமரச உடன்பாடு, பி.ராமமூர்த்தியின் சி.பி.எம்-மை தி.மு.க. கூட்டணிக்குள் கொண்டுவர உதவியது. "சி.பி.ஐ. (வலதுசாரி) முதலில் தி.மு.க.வோடு எந்தத் தேர்தல் உடன்பாடும் செய்துகொள்ள வரவில்லை. ஆனால் தேர்தல் நெருங்க நெருங்க அவர்களும் தி.மு.க.வோடும், இடதுசாரி (சி.பி.எம்) கம்யூனிஸ்ட்டுகளோடும் தேர்தல் உடன்பாட்டுக்கு இசைந்தார்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறார் ராமமூர்த்தி. ஆனால், அண்ணாவின் இந்த அரசியல் ராஜதந்திரமும், வழிமுறையும் விமரிசனத்துக்கு ஆளானது. தி.மு.க.வின் வளர்ச்சியின் போக்கைக் குறித்து, ஜெயகாந்தன் எழுதினார்:

> இந்தப் பதினைந்தாண்டுக் காலத்தில், நாகரிக ஜனநாயக அரசியலுக்குப் புறம்பான எல்லா வழிகளையும் கையாண்டு, எல்லா பேரங்களிலும் எல்லாருடனும் ஈடுபட்டு, எல்லாவிதமான சமூகக் கோழைத்தனங்களுக்கும் ஆட்பட்டு, தனது 'உயிர்' லட்சியத்தையும் உதறிய பிறகு, தனது தலைமையில் எந்தவிதக் குறைந்தபட்சத் திட்டமும் இல்லாமல், காங்கிரஸை அடித்துவிட்டுக் கோட்டைக்குள் நுழைந்துவிட இது சந்தர்ப்பம் என்று நிற்கிறபோது, இந்த கம்யூனிஸ்ட்டுகள் இந்தக் கூட்டணியில் எப்படி சேரலாம்? திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரஸின் பிரதான எதிரியாக முன்னால் நின்றுகொண்டு, தனக்குப் பின்னால் ராஜாஜியையும், ராமமூர்த்தியையும், ம.பொ.சியையும் அவர்களது கட்சிகளையும் அணி திரட்டிக் கொண்டு தோள் தட்டி நிற்கிற கொடுமையைப் பார்த்து மனம் பதைக்காமலிருக்க என்னால் முடியவில்லை.

அரசியல் கிரகங்கள் சாதகமான இடத்தில் இருந்தபோதும், உணவுப் பிரச்னையில் காங்கிரஸ் செய்த குழப்பமும் தி.மு.க. கூட்டணிக்குப் பெரிதும் உதவியது. அதன் விளைவாக 'ரூபாய்க்கு மூன்றுபடி (அரிசி) லட்சியம்; ஆனால் ஒருபடி நிச்சயம்' என்ற தி.மு.க.வின் வாக்குறுதி எங்கும் பரவியது. மேலும், காங்கிரஸ் சோஷலிஸத்தை மிகவும் நையாண்டி செய்தார் அண்ணா: "நாங்கள் சோஷலிஸம் கொண்டுவரப் போகிறோம் என்று அறிவிக்கிறார்கள். குள்ளர்களை ஒழிக்கப்போகிறேன் என்று நான் பேசினால் எப்படி இருக்கும்?"

'எவ்வளவு குறைகளோடு தற்போது ஆட்சி செலுத்தியபோதும் அந்த காங்கிரஸ் மகாசபையை எதிர்த்து, ஒரு பாரம்பரியமும் இல்லாத - பாரம்பரிய ஆராய்ச்சியில் இறங்கினால், அரசியல் ரீதியாகப் பிற்போக்குப் பாரம்பரியமும், சமூக ரீதியாகப் பொறுக்கிப் பாரம்பரியமும், கலாசார ரீதியாக சீரழிவுப் பாரம்பரியமும் உடைய ஒரு கூட்டம், ஜனங்களைக் கவர்ந்துவிட்டோம் என்ற இறுமாப்பில் எல்லாவிதமான பெருமைகளையும் சவாலுக்கிழுத்தால், அது ஜனநாயகத்தின் சக்தியாகிவிடுமா?' என்று ஜெயகாந்தன் தி.மு.க.வின் ஏளனத்தை எண்ணி வேதனைப்பட்டார்.

மிகக் கடுமையான விமரிசனம் என்றாலும், ஜெயகாந்தன் சொன்னதில் முற்றாக உண்மை இல்லாமலில்லை. மாநகரங்களிலும் சிறிய நகரங்களிலும் கட்சிக்கு, கீழ்மட்டத்திலிருந்தும் 'லம்பன்' கூட்டத்திலிருந்துமே மிகுந்த ஆதரவு கிடைத்திருந்தது. தவிர, எல்லா 'தம்பி'களுமே அண்ணாவின் நிதானத்தையும், பண்பாட்டையும் பெற்றிருக்கவில்லை. அண்ணாவே காலப்போக்கில் கனிந்து வந்திருந்தார். அண்ணாவின் அதிர்ஷ்டம், தி.மு.க. கூட்டணியில் 89-வயது ராஜாஜி அங்கம் வகித்தது, அந்தக் கூட்டணிக்கு தனிப் பெருமையையும், நம்பகத்தன்மையையும் அளித்தது.

மூதறிஞர் ராஜாஜி, 1962 தேர்தலின்போது, "நான் தொடர்ந்து பணிபுரிவேன். அடுத்த பொதுத் தேர்தலுக்கு (காங்கிரஸுக்கு) வலுவான எதிர்ப்பை உண்டாக்கிவிடுவேன்" என்று சொல்லியிருந்தார். சொன்னபடியே செய்தும் காட்டினார். எனினும், அண்ணா - ராஜாஜி உறவைக் கண்டு பிராமணர் அல்லாதார் அனைவரும் துள்ளிக் குதித்துவிடவில்லை. குன்றக்குடி அடிகளார், "ராஜாஜி அவர்களுடைய கூட்டு, தமிழினத்துக்கு நலம் தருமா?" என்று தன் சந்தேகத்தைக் கேட்டார். "நானும் நீங்களும் கொஞ்ச நாளைக்கு இருக்கத்தான் போகிறோம்! உண்மையில் என்ன நடைபெறுகிறது என்பதை அப்போது காணலாமே!" என்று பதிலுரைத்திருந்தார் அண்ணா.

விருகம்பாக்கம் (சென்னை) தேர்தல் மாநாடு

1966 டிசம்பர் 29-ல் சென்னை விருகம்பாக்கத்தில் நடந்த தி.மு.க.வின் நான்கு நாள் மாநாடு கூட்டணிக்கு கட்டியங் கூறுவதாக இருந்தது. பிற்பகல் 3.30 மணிக்குத் தொடங்கிய ஊர்வலம் இரவு 9.30 மணிக்குத்தான் மாநாட்டுப் பந்தலை அடைய முடிந்தது. கூட்டத்தினரின் அன்பைக் கண்டு நெகிழ்ந்த மூதறிஞர் ராஜாஜி, "எனது வாழ்நாளில், எனது கட்சியை அல்லது கூட்டத்தைச் சேராத மக்கள் என்னிடம் இவ்வளவு பற்று வைத்திருப்பதை நான் பார்த்ததே கிடையாது. அதை நான் இப்போது என் கண் முன்னால் காண்கிறேன். தி.மு.க. தம்பிகளுக்கும் அவர்களது பேரன்மார்களுக்கும் எனது மனப்பூர்வமான ஆசி" என்றார். முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் இஸ்மாயில் சாஹிப், 'அடுத்த முதலமைச்சர்' என்று அண்ணாவை வாழ்த்தினார். தி.மு.க. பொருளாளர் கலைஞர் பதினோரு லட்சம் ரூபாயைத் தேர்தல் நிதியாக அண்ணாவிடம் அளித்து, தி.மு.க. வரலாற்றில் சாதனை பதித்தார். 'முதல் முறையாக' என்று கூறத்தக்க இன்னொரு நிகழ்ச்சியும் நடந்தது. இம்முறை எம்.ஜி.ஆர். தி.மு.க. சார்பாக பரங்கிமலைத் தொகுதி வேட்பாளராக ஆகியிருந்தார். தம்மிடம் கூச்சமும் தயக்கமும் நிறைந்த எம்.ஜி.ஆர்., கூட்டங்களில் பேசும்போது முற்றிலும் வேறு மனிதராக இருந்தார் என்ற அண்ணா, "எம்.ஜி.ஆர். பேசும்போது, தொண்டர்கள் தேன் குடித்ததுபோல் மயங்கிப் போனார்கள்" என்றார்.

விருகம்பாக்கத்தில் கூட்டத்தினர் எம்.ஜி.ஆரைக் கண்டு மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்தார்கள். எம்.ஜி.ஆர். தம் பேச்சில், "நாம் எல்லோரும் முயற்சி செய்து கட்டாயமாக காங்கிரஸ் அரசாங்கத்தைப் பதவியிலிருந்து இறக்க வேண்டும்" என்று கூட்டத்தினரைக் கேட்டுக் கொண்டார். தனது ஒரு படத்துக்கான சம்பளத்தை தேர்தல் நிதியாகக் கொடுப்பதாகவும் எம்.ஜி.ஆர். அறிவித்தார். எம்.ஜி.ஆரின் செல்வாக்குக்கு விலை ஏதுமில்லை என்று அண்ணாவுக்குத் தெரியும். "தம்பி ராமச்சந்திரன் ஒரு படத்துக்குப் பெறுகின்ற ஊதியத்தைத் தேர்தல் நிதியாக அளிப்பதாகச் சொன்னார். அது எனக்கு வேண்டாம். ஒரு படத்தில் நடிக்கின்ற நேரத்தை எனக்குக் கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன். அவருடைய முகத்தைத் தமிழ்நாடெங்கும் காட்டியே பல லட்சம் வாக்குகளை என்னால் பெற முடியும்" என்றார்.

முற்றிலும் எதிர்பாராத வகையில் எம்.ஜி.ஆர். என்ற சக்தி தி.மு.க.வுக்குப் பயன்பட நேரிடும் என்று யாரும் அப்போது

அறிந்திருக்கவில்லை. முதல் சுற்றுப் பிரசாரத்தில் எம்.ஜி.ஆர். பல கூட்டங்களில் பேசி இருந்தார். சென்னை திரும்பிய எம்.ஜி.ஆரை, தனிப்பட்ட விரோதம் காரணமாக எம்.ஆர்.ராதா, சினிமாவில் சுடுவது போலவே அவரது காதுக்குக் கீழே சுட்டுவிட்டார். குண்டடி பட்டு மருத்துவமனையில் இருந்த எம்.ஜி.ஆர். மீது மிகுந்த பரிவு உண்டாகியிருந்தது. குண்டடி பட்ட எம்.ஜி.ஆர். தனது மருத்துவமனைக் கட்டிலில் இருந்துகொண்டே வோட்டுக் கேட்பது போன்ற சுவரொட்டிகள் தமிழ்நாடு முழுக்க ஒட்டப்பட்டன. தினசரிகளில் எம்.ஜி.ஆர். வேண்டுகோள் விடுத்தார். "நான் உங்கள் வீடுகளுக்கு வரவேண்டும் என்றிருந்தேன். வந்திருக்க வேண்டும். ஆனால் வர இயலாமல் போய்விட்டது. நான் இப்போது உங்கள் இதயத்தைக் கேட்கிறேன்". எம்.ஜி.ஆர். பக்கம் வீசிய அனுதாப அலை, தி.மு.க.வின் வெற்றிக்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்தது.

பிரசாரத்துக்கு முன்பிருந்தே திமு.க.வின் தேர்தல் அறிக்கை, கட்சியின் நம்பிக்கையைப் பிரதிபலித்தது. 'இந்திய - வெளியுலக அரசியல் வட்டாரங்களில், இம்முறை தி.மு.கழகம் தோழமைக் கட்சிகளுடன் நேசத் தொடர்பு கொள்வதன் மூலம் ஆட்சிப் பொறுப்பை ஏற்கத்தக்க நிலைபெறும் என்று குறிப்பிடப்படுவது நாடறிந்ததாகும். இந்தப் புதிய நிலைமையைக் கழகம் எண்ணிப் பார்த்து எழுச்சியும், அதே சமயம் அடக்க உணர்ச்சியும் கொண்ட நிலையில், பொதுமக்களை அணுகத் தீர்மானித்திருக்கிறது' என்று சொன்னது அறிக்கை.

'மொழி, வரலாறு ஆகியவற்றில் தொடர்புடைய தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய நான்கு மாநிலங்களிலும், மேலும் அதிகமான நேசத்தொடர்பு கொண்டு பணியாற்றிட, கழகம் விரும்புகிறது. 'இந்தியாவுக்குள் திராவிடம்' என்ற இந்தத் திட்டம், திராவிட மொழி, பண்பாடு ஆகியவற்றின் தனித் தன்மைகளைப் பாதுகாத்திடவும், அவற்றின் சிறப்பியல்புகளை இந்தியாவின் பிற பகுதி மக்கள் போற்றி வரவேற்று ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கும் தேவைப்படுகிறது என்பதனைக் கழகம் வலியுறுத்துகிறது' என்று மேலும் தன்னம்பிக்கையாக அறிக்கை பேசியது. இருந்தபோதும் அண்ணாவுக்கு மட்டும் முழு நம்பிக்கை ஏற்பட்டுவிடவில்லை. கட்சி என்ற வகையிலும், இயக்கம் என்ற முறையிலும் அவருக்கு காங்கிரஸ் மீது மிகுந்த மரியாதை இருந்தது. வெற்றியின் வாசம் காற்றில் தெரிந்தபோதும், காங்கிரஸ் ஒரு பலமான எதிரி என்பதை அவர் உணர்ந்திருந்தார். அவர் நினைத்தது சரியாகப் போயிற்று. தனித்து நின்று போட்டியிட்ட காங்கிரஸுக்கு 41.52 சதவிகித வோட்டுகள் கிடைத்திருந்தன

(தி.மு.க. கூட்டணிக்கு 40.82%); காங்கிரஸ் வென்ற இடங்கள் ஐம்பது. திமு.க. 234 சட்டமன்றத் தொகுதிகளில் 173 இடங்களிலும் 39 நாடாளுமன்றத் தொகுதிகளில் 25 இடங்களிலும் போட்டியிட்டது. மீதியைக் கூட்டணிக் கட்சிகளுக்கு விட்டுக் கொடுத்திருந்தது. அண்ணா தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து போட்டியிட்டார். அவருடைய உதவியாளர் பி.கே.சாமிநாதன், '1967-ம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் தமிழக ஆட்சியைப் பிடிக்கும் என்று எண்ணியிருந்தால், அண்ணா அவர்கள் தென்சென்னை நாடாளுமன்றத் தேர்தலுக்கு நின்றிருக்க மாட்டார்கள்' என்று எழுதியிருக்கிறார்.

தேர்தல் பிரசாரம் சில வேளைகளில் மட்ட ரகமாகவே இருந்தது. "நான் காங்கிரஸை தி.மு.க. என்ற செருப்பைக் கொண்டு அடிப்பேன்" என்றார் மூதறிஞர் ராஜாஜி. "பிராமணர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு வோட்டுப் போடுவது பாவம் அல்ல. பூணூலைக் கையில் பிடித்தபடி நான் சொல்வேன்: நீங்கள் தி.மு.க.வுக்குத்தான் வோட்டுப் போடவேண்டும்!" என்றும் வற்புறுத்தினார். ஒரு விபத்தில் அடிபட்டு படுக்கையிலிருந்த காமராஜரோ மிகுந்த நம்பிக்கையோடு, "நான் படுத்துக்கொண்டே ஜெயிப்பேன்" என்றார். தி.மு.க.வை லேசாக எடுத்துக்கொண்ட காங்கிரஸ், அதைச் சிறுமைப்படுத்தியது. அதுவே தி.மு.க.வின் பலமாக அமைந்தது என்று பின்னர் குறிப்பிட்டார் முதலமைச்சராக மாறியிருந்த அண்ணா. இருபதாண்டு கால காங்கிரஸ் ஆட்சியின் குறைபாடுகளைப் பட்டியலிட்ட தி.மு.க. தனது பிரசாரத்தில் மக்களுக்கு மாற்றம் வேண்டும் என்றது. இதற்குப் பதிலளித்த ஒரு காங்கிரஸ் பேச்சாளர் தரம் தாழ்ந்து, "அண்ணாவுக்கு மணமாகி 20 ஆண்டுகள் ஆகிவிட்டன. அவருக்கு ஒரு குழந்தைகூட இல்லை. அப்படியானால் அவர் மனைவி இன்னொரு கணவரைத் தேடிக் கொள்ளலாமா?" என்றார்.

ஆனால் மக்கள் மாற்றத்துக்குத் தயாராகவே இருந்தனர். அவர்களின் எதிர்பார்ப்பு அதிகமாக வளர்ந்திருந்தது. "என்னிடமிருந்து உணவு கிடைக்குமா என்று வியந்தார்கள். ஆனால், உங்களிடமிருந்து பாலும் தேனும் பெருக்கெடுத்து ஓடும் என்று எதிர்ப்பார்த்தார்கள்" என்றார் முதலமைச்சராக மாறியிருந்த அண்ணா. பி.சி.கணேசன் - 'காங்கிரஸின் தோல்விக்கு, ஊழலும் ஓர் அம்சமாக இருந்தது' என்கிறார்:

> முன்பிருந்த பெருந்தலைவர் காமராஜரின் ஆட்சி, தமிழகத்தின் பொற்கால ஆட்சி என்று அழைக்கப் பட்டாலும், மாவட்டந்தோறும் காங்கிரஸ் தலைவர்களாக விளங்கியவர்கள், மக்கள் ஆதரவைக்

கொஞ்சம் கொஞ்சமாக இழந்த நிலையில் இருந்தனர். பெருந்தலைவர் காமராஜர் மக்களின் அமோக ஆதரவு பெற்ற தலைவராக விளங்கினாலும் தந்தை சேர்த்து வைத்த சொத்தை ஊதாரிப் பிள்ளைகள் விரயம் செய்வதைப் போல, கீழ்நிலையில் இருந்த சில காங்கிரஸ் தலைவர்கள் காமராஜருடைய புகழைச் சேதப்படுத்துகின்ற காரியங்களை மட்டும்தான் செய்துகொண்டிருந்தனர்.

வெற்றியில் காண்பித்த பெருந்தன்மை

தேசிய அளவிலும் காங்கிரஸ் குதறப்பட்டிருந்தது. ஆறு மாநிலங்களில் தோல்வியடைந்து, ராஜஸ்தான் தவிர, இந்தி பேசும் மாநிலங்கள் அனைத்தையும் அது இழந்திருந்தது. மொத்தத்தில் 78 இடங்களைப் பறிகொடுத்து, நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையான இடங்களுக்கு மேல் இருபத்து மூன்றே இடங்களை காங்கிரஸ் கூடுதலாகப் பெற்றிருந்தது. மாறாக, தமிழ்நாட்டில் போட்டியிட்ட 25 நாடாளுமன்றத் தொகுதிகளையும் வென்று, 234 உறுப்பினர்கள் கொண்ட சட்டசபையில் 173 இடங்களில் போட்டியிட்டு 138 இடங்களை தி.மு.க. பிடித்திருந்தது. தமிழகத்தில், காங்கிரஸ் வெறும் மூன்று நாடாளுமன்றத் தொகுதிகளையும், ஐம்பதே சட்டமன்றத் தொகுதிகளையும் வென்றிருந்தது. காமராஜர் அவருடைய சொந்த ஊரான விருதுநகரில் 28 வயது மாணவர் தலைவர் பி.சீனிவாசனிடம் தோற்றார். வானொலியில் செய்தியைக் கேட்ட அண்ணா, தன் அருகிலிருந்த கருணானந்தத்திடம், "என்னய்யா இது! உண்மையைத்தான் சொல்றானா? அப்படின்னா காமராஜர் தோல்வியா? சேச்சே! இது நடக்கக்கூடாதே! அவரு தோற்கலாமா? நாம அவரைத் தோற்கடிப்பதா?" என்றார். "காமராஜர் தோற்கக்கூடாத நேரத்தில் தோற்றிருக்கிறார். இன்னொரு தமிழன் அவர் இருந்த இடத்துக்கு வருவதற்கு ஆயிரம் ஆண்டுகள் ஆகும்" என தி.மு.க. வெற்றியில் மிதந்து கொண்டிருந்த க.ராசாராமிடம் கோபமாக கூறினார். நாடாளுமன்றத் தொகுதியில் சி.சுப்பிரமணியம் தோல்வி எனத் தெரிந்ததும், மீண்டும் வருந்தினார் அண்ணா: "அய்யோ! தமிழர் ஒருவர் அமைச்சரவையில் இடம் பெறுவது போயிற்றே!" என இரங்கினார். காங்கிரஸ் எதிர்ப்புப் புயலில் மாநில அமைச்சர்கள், முதலமைச்சர் பக்தவத்சலம், ஒரு மத்திய கேபினட் அமைச்சர், இரண்டு துணை அமைச்சர்கள் சிக்கித் தோல்வியடைந்திருந்தார்கள். பெரியாரோ தி.மு.க.வின் வெற்றியை 'கொடுமை' என்றார்.

அண்ணா முகத்திலோ தி.மு.க.வின் வெற்றியினால் தெரியவேண்டிய மகிழ்ச்சியைவிடத் துயரமே தெரிந்தது. அவரது முகம் வாட்டமுற்று இருந்ததை குறிப்பிட்டிருக்கிறார் மகன் பரிமளம். "நூறு வருடப் பின்னணியுள்ள காங்கிரஸையே மக்கள் தூக்கியெறிந்து விட்டார்கள். நமக்கு 15 வருடப் பின்னணிதான். எவ்வளவு பெரிய பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது பார். மக்கள் என் மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் பார்!" என்று மாய்ந்துபோனார் அண்ணா.

நான் நீண்ட நாள் இருந்தால் இந்த அரசாங்கம் என்னிடம் வரும்! என்று 1957-லேயே அண்ணா கூறியிருந்தபோதும், அது 1972-க்கு முன் வருமென்று அவர் எதிர்பார்க்கவில்லை. 1967, ஜூலை 15 அன்று சட்டமன்றத்தில் தி.மு.க.வுக்குக் கிடைத்த வெற்றியைக் கண்டு மற்றவர்களைவிட தான்தான் மிகுந்த வியப்பு அடைவதாகவும், தம்மிடம் அதனால் அடக்க உணர்ச்சி மேலோங்கி இருப்பதாகவும் கூறினார்.

சென்னை மெரினா கடற்கரை வெற்றி விழாக் கொண்டாட்டத்தில், கட்சியினரைப் பார்த்து அடக்கமே உருவான அண்ணா, "மிகப் பெரிய சாதனைகள் புரிந்த காங்கிரஸ் கட்சி ஒரு கணத்தில் இப்படி ஒரு பெரிய சரிவைச் சந்திக்க வேண்டுமானால், ஆட்சியை நடத்த நம்மைத் தேர்ந்தெடுத்திருக்கிறபோது, நாம் எவ்வளவு கவனமாக நம்மை நடத்திச் செல்ல வேண்டும்!" என்றார்.

அண்ணா அவர் சொன்னபடியே நடந்து காட்டினார். பெரும்பான்மையான அவர் தம்பிகளைப் பற்றியும், தங்கைளைப் பற்றியும் அப்படிச் சொல்லிவிட முடியாது. ஆனால் அண்ணா, நாடாளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டது கொஞ்சம் குழப்பமும் சலசலப்பும் ஏற்படுத்தியிருந்தது. சிலர் நாவலர் நெடுஞ்செழியன் முதலமைச்சர் பொறுப்பை ஏற்கவேண்டும் என்றும், அண்ணா டெல்லி நாடாளுமன்றத்துக்குச் செல்ல வேண்டும் என்றும் எண்ணினர். கட்சியின் மூத்த தலைவர்கள் அண்ணாவிடம் குழப்பத்தைத் தீர்த்துப் பிரச்னையை முடிவுக்குக் கொண்டுவரச் சொன்னதையடுத்து, சில மணி நேரத்துக்குள்ளேயே, பத்திரிகையாளர் கூட்டத்தைக் கூட்டி, தாமே தி.மு.க. சட்டமன்றத் தலைவர் (முதல்வர்) பொறுப்பை ஏற்பதாகக் கூறி, எல்லா ஊகங்களையும், எதிர்பார்ப்புகளையும் முடிவுக்குக் கொண்டுவந்தார். 'தேர்தல் முடிவுகள் வெளிவந்து கொண்டிருந்த அந்தச் சமயத்தில் மதுரையில் இருந்த நான், அண்ணாதுரைக்குத் தந்தி அனுப்பியிருந்தேன். அதில் சட்டமன்றத்தில் தனித்தே மெஜாரிட்டி பெற்றுள்ளதால் தனித்தே மந்திரிசபையையும் அமைப்பதுதான் பொருத்தம், நல்லது என்று கூறியிருந்தேன்' என்று பி.ராமமூர்த்தி



அண்ணா, உஜ்ஜல் சிங்

எழுதியிருக்கிறார். தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் 1967, மார்ச் 1 அன்று அண்ணாவை தமிழக சட்டமன்ற தி.மு.க. தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள்.

அரசியல் தந்தையுடன் சந்திப்பு

முன்னதாக 1967, பிப்ரவரி 23 அன்று, ஓர் ஆரோக்கியமான முன்னுதாரணமாக, தி.மு.க.வின் வெற்றிக்கு வடிவமைத்த ராஜாஜியைச் சந்தித்தார் அண்ணா. சட்டமன்ற தி.மு.க. தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின், முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலத்தையும், சட்ட மேலவைத் தலைவர் மாணிக்கவேல் நாயக்கரையும், எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் ஏ.லட்சுமணசாமி முதலியாரையும் அண்ணா சந்தித்தார். அடுத்த நாள் ஆளுநர் உஜ்ஜல் சிங் அவர்களைச் சந்தித்து தம் அமைச்சரவை குறித்து விவாதித்தார். எனினும், இவை அனைத்தைக் காட்டிலும் மிகவும் முக்கியமான சந்திப்பு இன்னும் நிகழவிருந்தது - பெரியாருடனான சந்திப்பே அது.

அண்ணா தம் அரசியல் தந்தையைச் சந்திக்க திருச்சி சென்றார். "ராஜாஜி வருத்தப்படுவாரே!" என்றார் ஒருவர். "சென்னை வந்த பின்பு பார்க்கக்கூடாதா திருச்சிக்குச் சென்று பார்க்க என்ன அவசரம்?" என்றார் வேறொருவர். "என்னை இந்த நாட்டுக்கு அறிமுகப்படுத்தியவரே அவர்தான். முதலமைச்சரானதும் அவரை

நான் பார்க்காவிட்டால், அது மனிதப் பண்பே ஆகாது" என்று அண்ணா சொல்லிவிட்டதாகக் கருணானந்தம் பதிவு செய்திருக்கிறார். பதினெட்டு வருடப் பிளவுக்குப் பின் மகனுக்கும் தந்தைக்கும் இடையே நடந்த சந்திப்பு மிகவும் உணர்ச்சிகரமாகத்தான் இருந்தது. "என்னைக் கூச்சப்பட வைத்துவிட்டீர்கள்!" என்று பெரியார் தழுதழுத்த குரலில் கூறினார். பின்னர் அந்தச் சந்திப்பைப் பற்றி, "அண்ணா மாப்பிள்ளை போல வந்தார். நான் வெட்கப்பட்ட மணப்பெண் மாதிரி தலையைக் குனிந்து கொண்டிருந்தேன்" என்றார் பெரியார். 1967 மார்ச் 6-ம் தேதி, பெரியார் ஓர் அறிக்கையை வெளியிட்டார்: "உண்மையாகச் சொல்கிறேன். காமராஜரைத் தவிர்த்து, காங்கிரஸில் இருக்கும் எவரையும் விட தி.மு.க.வின் தலைவர்கள் தரத்தில் இருக்கும் எல்லாரிடமும் எனக்குக் கவர்ச்சி இருக்கிறது. நான் அவர்களை (ரிசர்வேஷன்) மீதி இல்லாமல் எவ்வளவு கண்டித்துக் கடுமையான, குறைவான வார்த்தைகளைப் பயன்படுத்திய காலத்திலும் தி.மு.க. தலைவர்களில் ஒருவர்கூட என்னைக் கடிந்தோ, குறை கூறியோ, எந்தவிதமான குற்றஞ் சாட்டியோ, தரக்குறைவாகவோ ஒரு வார்த்தைகூடச் சொன்னது கிடையாது" என்றார் பெரியார். பதிலுக்கு, உண்மைச் சீடனாக, அண்ணா தன் அமைச்சரவையைப் பெரியாருக்குக் காணிக்கையாக்கினார்.

எம்.ஜி.ஆரின் ஒப்புதல்

சுடப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த எம்.ஜி.ஆரிடம் இரா.செழியனை அனுப்பினார் அண்ணா. ஏன்? எம்.ஜி.ஆர் சொல்கிறார்: "ஒருநாள் நாவலரின் அன்பு இளவல் இரா. செழியன் அவர்கள், என்னை மருத்துவமனையில் காண வந்தார். என் உடல்நிலை பற்றி எல்லாம் விசாரித்துவிட்டுத் தன்னிடமிருந்த ஒரு காகிதக் குறிப்பை எடுத்து என்னிடம் காண்பித்தார். 'என்ன இது?' என்றேன். 'இந்தக் குறிப்பில் அமைச்சர்களின் பெயர்களும் அவர்களுக்குத் தரப்படவிருக்கும் இலாக்கா பெயர்களும் அடங்கியிருக்கின்றன' என்றார். நான் இரா. செழியன் அவர்களிடம் கேட்டேன்: 'என்னிடம் ஏன் காண்பிக்கிறீர்கள்?' என்று. 'அண்ணா அவர்கள் உங்களிடம் இதைக் காண்பிக்கச் சொன்னார்' என்று அவர் சொன்னார். 'நான் கனவில்கூடக் கற்பனை செய்ய முடியாத ஒன்று. அதிர்ச்சியே அடைந்தேன் என்றால்கூட மிகையாகாது."

ஆனால் அதில் ஒருவருடைய பெயர் அமைச்சராகக் குறிப்பிடப்பட்டிருந்ததைப் பார்த்ததும், இரா.செழியனிடம் எம்.ஜி.ஆர். ஆத்திரத்தோடு சொன்னார். பேசவே முடியாதிருந்த



அண்ணா, எம்.ஜி.ஆர்

அந்த நேரத்தில் 'கத்திவிட்டேன்' என்கிறார் எம்.ஜி.ஆர்., "சமீப காலம் வரையில் திமு.கழகத்துக்கும், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் எதிரான கருத்துகளைப் பரப்பிக்கொண்டு இருந்தவர்களில் ஒருவருக்கு அமைச்சர் பதவியா? கழகத் தொண்டர்களின் உள்ளத்தில் பெரும் எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொண்டிருந்த ஒருவருக்குப் போய் அமைச்சர் பதவி கொடுப்பதா? இது என்ன நியாயம்?". எம்.ஜி.ஆர். குறிப்பிட்டது 'தினத்தந்தி' பத்திரிகை அதிபர்; பாரிஸ்டர் படிப்புப் படித்த சி.பா.ஆதித்தனாரை.

ஆதித்தனார் தம்முடைய 'நாம் தமிழர்' இயக்கத்தைக் கலைத்துவிட்டு, தி.மு.க. வேட்பாளராக 1967 தேர்தலில் போட்டியிட்டார். தேர்தல் சமயத்தில் அவருடைய 'தினத்தந்தி' நாளேடு முக்கியமான பங்காற்றியது; எனவே அண்ணா அவருடைய பங்களிப்பை அங்கீகரிக்க விரும்பினார். ஆனால் அப்படிச் செய்வதை எம்.ஜி.ஆர். தடுப்பார் என்றே அண்ணா அறிந்திருந்தார். குறிப்பாக 'தினத்தந்தி' எம்.ஜி.ஆருக்கு விரோதமாகவே இருந்துவந்தது; எதிர்பார்த்த மாதிரியே எம்.ஜி.ஆரும் நடந்து கொண்டார். "லஞ்சம் வாங்குவதற்கு நல்ல வாய்ப்புள்ள இலாகா என்று கேள்விப் பட்டிருக்கிறேன். எனவே இதை வேறு யாரிடமும் இப்போது கொடுப்பது கூடாது. நாவலருக்கே இந்த இலாகாவையும் சேர்த்துக் கொடுக்கலாம்" என்று ஆதித்தனாரிடம் செல்லவிருந்த தொழிலாளர் நலத்துறையை நாவலரிடம் கொடுக்கச் சொன்னார் எம்.ஜி.ஆர்.

ஆதித்தனாருக்கு எம்.ஜி.ஆர். சொன்னது போலவே அமைச்சர் பதவி கொடுக்கப்படவில்லை. ஆனாலும், அவருக்கு சபாநாயகர் பதவியைத் தந்திருந்தார் அண்ணா. அதற்குச் சில காரணங்களையும் அண்ணா சொன்னதாக இரா.செழியன் சொன்னார். 'தொழில்துறையில் லஞ்சம் வாங்குவதற்கு நல்ல வாய்ப்புள்ளது' என்று எம்.ஜி.ஆர். சொன்னது சுவாரஸ்யமானது. பொது வாழ்க்கையில் சீர்குலைவு அப்போதே தொடங்கியிருந்தது. நாட்செல்ல நாட்செல்ல அது ஓர் இயல்பாகவே மாறிப்போனது.

1967 மார்ச் 4 அன்று அண்ணா தன் அமைச்சரவைப் பட்டியலை ஆளுநர் உஜ்ஜல் சிங்கிடம் அளித்தார். பட்டியலில் இரண்டாம் இடம் வகித்த நாவலர் நெடுஞ்செழியனுக்கு கல்வித்துறை தரப்பட்டிருந்தது. கலைஞருக்குப் பொதுப்பணித்துறையும், மதியழகனுக்கு உணவுத்துறையும், சத்தியவாணி முத்துவுக்கு ஆதிதிராவிடர் நலத் துறையும், ஏ.கோவிந்தசாமிக்கு வேளாண் துறையும், எஸ்.மாதவனுக்குச் சட்டத் துறையும், சாதிக் பாஷாவுக்கு சுகாதாரத் துறையும், எஸ்.முத்துசாமிக்கு உள்ளாட்சித் துறையும் அளிக்கப்பட்டிருந்தன. அமைச்சரவையில் 32 வயதுக்காரர்தான் மிக இளையவர். மீதி எல்லோரும் 48 வயதுக்குக் கீழே. அண்ணாவுக்கு அப்போது வயது ஐம்பத்தெட்டு.

நாவலர் கட்சியிலும், அரசிலும் இரண்டாவது இடத்தில் இருந்தாலும், கலைஞரின் பேரவாவுக்கும் (ambition), திறமைக்கும் ஈடுகொடுக்க முடியவில்லை. 1961-க்கு முன்னர் நடந்ததுபோலவே, கட்சியில் கலைஞரின் வளர்ச்சிக்கு எதிரான அணியின் தலைவராக கே.ஏ.மதியழகன் தோன்றினார். வெற்றி மிதப்பில் கட்சி இருக்க, இந்தப் பிரச்னை அண்ணாவின் காலத்தைக் கடந்தே வெடித்தது.

அண்ணாவும் அவர் அமைச்சரவையினரும் 1967 மார்ச் 6 அன்று ராஜாஜி ஹாலில் உளமாறப் பதவி ஏற்றனர். அண்ணா அவர்களையெல்லாம் அவரவர் அறைகளில் அமர வைத்துவிட்டு, தன்னுடைய அறைக்குச் சென்றார்.

அண்ணாவால் முந்தைய இரவு முழுக்க உறங்க முடியவில்லை. அதுபற்றி அவர் இப்படி விவரித்திருந்தார்:

> அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்து நாம் அரசுப் பொறுப்பை ஏற்றது மார்ச் 6-ம் நாளில்தான்... மார்ச் 5-ம் நாள் இரவு முழுவதும் எனக்குத் தூக்கம் வரவில்லை. விடியும் வரை கொட்டு கொட்டென்று விழித்துக் கொண்டே இருந்தேன். அப்போது என் கண்களுக்குக் குடிசைப் பகுதிகளே தென்பட்டன.

சோற்றுக்காக அலைபவரின் முகங்களும் - ரேஷன் கடையிலே கால் கடுக்க நிற்பவர்களின் முகங்களுமே என் கண்களுக்குத் தென்பட்டன. இவற்றுக்கெல்லாம் பரிகாரம் எப்படித் தேடமுடியும்? என்று சிந்தித்துக் கொண்டே இருந்தேன். தூக்கம் வரவில்லை.

அதுவரை வானம்பாடியைப் போல சுற்றிக் கொண்டே, பாடிக்கொண்டு இருந்தேன். என் இசை பிடிக்கிறதோ... இல்லையோ... என்று கவலைப்படாமல் நான் சுற்றிக்கொண்டே வந்தேன். 6-ம் தேதிக்குப் பிறகு கூட்டுப் பறவைகளாக நாங்கள் ஆகிவிட்டோம்.

எவ்வளவு உண்மை! பதவியினால் சாதிக்க முடியாதவை ஏராளம் என்ற தெளிவோடு, முன்பு எதெல்லாம் 'இது வழக்கம்தானே' என்று நினைத்திருந்தாரோ அவை எல்லாம் புதிய பொறுப்புக்கு வந்த பிறகு, அவரிடமிருந்து விலகிப் போய்விட்டிருந்தன. பாரம் நிறைந்த புதிய பொறுப்புகள் அவரை உடனே சோர்ந்து போகச் செய்துவிட்டன. 'எனக்கு என்னவோ இந்த மந்திரிப் பதவியில் 20 நாட்களிலேயே சலிப்பு ஏற்பட்டுவிட்டது. சந்தோஷமில்லாத சிரிப்பு. தொடர்பே இல்லாத சிநேகிதம். சுவையே இல்லாத உரையாடல்கள். இப்படிப்பட்ட மந்திரி வாழ்க்கையில் எப்படித்தான் 20 வருடமாக இருந்தார்களோ தெரியவில்லை!' என்று பதவி என்ற சுமை இல்லாத பழைய நாட்களை நினைத்துப் பார்த்து எழுதினார் அண்ணா.

அந்த வசந்தம்

ஆறு மாதங்களுக்குப் பிறகு, தன் அரசியல் தந்தையின் 89-வது பிறந்த நாளுக்கு வாழ்த்துத் தெரிவித்த அண்ணா, பெரியாருடன் கழித்த நாட்களை வசந்தமான தினங்களாக வர்ணித்திருந்தார். அவருடைய வார்த்தைகளிலேயே படிப்போம்:

எனக்கென்று ஒரு 'வசந்த காலம்' இருந்தது. நீண்ட நாள்களுக்குப் பிறகு, ஆண்டுகள் பலவற்றுக்குப் பிறகு அந்த வசந்த காலத்தை நினைவிலே கொண்டு இன்றைய கவலை மிக்க நாட்களிலே எழமுடியாத புன்னகையைத் தருவித்துக் கொள்கிறேன். பெரியாருக்கு அந்த 'வசந்த காலமும்' தெரியும். இன்று பொறுப்பேற்றுக் கொண்டிருப்பதால் எழுந்துள்ள கவலையும் நன்கு புரியும். 'வசந்த காலம்' என்றேனே, அந்த நாட்களில் நான் கல்லூரியிலிருந்து வெளியேறி, அவருடன் 'காடு மேடு' பல சுற்றி வந்த நிலை. அந்தக் காடு மேடுகளில் நான் அவருடன் தொண்டாற்றியபோது,

வண்ண வண்ணப் பூக்கள் குலுங்கி மகிழ்வளித்ததைக் கண்டேன். நறுமணம் எங்கும் பரவிடக் கண்டேன்.

அப்போது 'கலவரம் எழாமல்' ஒரு பொதுக்கூட்டத்தை ஒழுங்காக நடத்தி முடித்திட முடிந்தால் போதும், பெரிய வெற்றி என்றே பெருமிதம் தோன்றும். புறப்படும் முன்னர் 'தலைபோகும், தாடி போகும், தடி போகும், உயிர் போகும்' என்ற மிரட்டல் கடிதங்களைப் படித்திட வேண்டிய நிலை.

'அண்ணாதுரை, இதைப் பார்த்தாயா?' என்று ஒரு கடிதத்தை வீசுவார்.

'ஆமாமய்யா' என்ற பொருளற்ற ஒரு பதில் தருவேன். 'வருகிறாயா?' என்று என்னைக் கேட்கமாட்டார், வருவேன் என்பது அவருக்குத் தெரியுமாதலால்! செல்வோம். பெரியாரின் பேருரை நிகழ்த்தப்படும். வந்தவர்களில் உருட்டல், மிரட்டல் கடிதம் எழுதியவர் இருந்திருப்பின், அடுத்த கூட்டத்துக்கு அவர் அய்யாவுக்காக 'மாலை' வாங்கிக் கொண்டுதான் வருவார். அத்தகைய தெளிவுரை பெற்றுப் பெற்று, தமிழரில் பலர், பலப்பலர் திருந்தினர் என்பது மட்டுமின்றி, தமிழகத்திலேயே ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டிருக்கிறது.

ஒருவர் புறப்பட்டு ஓயாது உழைத்து உள்ளத்தைத் திறந்து பேசி, எதற்கும் அஞ்சாது பணியாற்றி, ஒரு பெரிய சமூகத்தை விழிப்பும் எழுச்சியும் கொள்ளச் செய்வதில் வெற்றி பெற்ற வரலாறு இங்கன்றி வேறெங்கும் இருந்ததில்லை. அந்த வரலாறு தொடங்கப்பட்டபோது நான் சிறுவன். அந்த வரலாற்றிலே புகழேடுகள் புதிது புதிதாக இணைக்கப்பட்ட நாட்களிலே ஒரு பகுதியில் நான் அவருடன் சேர்ந்து பணியாற்றியிருக்கிறேன். பெரியாருடன் இணைந்து பணியாற்றியவர்கள் மிகப் பலர். அவருடன் மற்றைய பலரைவிட இடைவிடாது இருந்திருக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தவன் நான். இன்னும் நினைவிலே கொண்டு வரும்போது இனிமை பெறுகிறேன். எத்தனை எத்தனையோ கருத்துகளை உரையாடலின் மூலம் தந்திருக்கின்றார். 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்' என்பதனை நான் கற்றுணரும் வாய்ப்பும் தந்தார். பொதுத்

தொண்டாற்றுவதில் ஓர் ஆர்வமும், அகமகிழ்வும் மனநிறைவும் பெற்றிடச் செய்தார்.

கோபத்துடன் அவர் பலரிடம் பேசிடக் கண்டிருக்கிறேன். கடிந்துரைக்கக் கேட்டிருக்கிறேன். 'உன்னை எனக்குத் தெரியும், போ!' என்று உரத்த குரலில் கூறியதைக் கேட்டிருக்கிறேன். ஒருநாள்கூட அவர் என்னிடம் அவ்விதம் நடந்துகொண்டதில்லை. எப்போதும் ஒரு கனிவு எனக்கென்று தனியாக வைத்திருப்பார். என்னை தனது 'குடும்பத்தில் பிறவாப் பிள்ளை' எனக் கொண்டிருந்தார்.

நான் கண்டதும் கொண்டதும் அந்த ஒரே தலைவரைத்தான்.

இப்போது நான் உள்ள வயதில் அவர் இருந்தார் - நான் அவருடன் இணைந்தபோது- ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு! அதற்குமுன் முப்பது ஆண்டுகள் அவர் பணியாற்றி வந்திருக்கிறார். இந்த ஆண்டுகள் தமிழரின் வரலாற்றிலே மிக முக்கியமான ஆண்டுகள்.

'திடுக்கிட வைக்கிறாரே! திகைப்பாக இருக்கிறதே! எரிச்சல் ஊட்டுகிறாரே! ஏதேதோ சொல்கிறாரே!' என்று கூறியும் - 'விட்டு வைக்கக் கூடாது! ஒழித்துக் கட்டியாக வேண்டும்! நானே தீர்த்துக் கட்டுகிறேன்!' என்று மிரட்டியும் தமிழகத்துள்ளாரில் பலர் பேசினர், ஏசினர், பகைத்தனர், எதிர்த்தனர், ஏளனம் செய்தனர், மறுப்பு உரைத்தனர். ஆனால் அவர் பேச்சைக் கேட்ட வண்ணம் இருந்தனர். மூலையில் நின்றாகிலும், மறைந்திருந்தாகிலும்! அந்தப் பேச்சு ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நடந்தபடி இருந்தது. எதிர்த்தவர்கள், ஏளனம் புரிந்தவர்கள், ஏனோதானோ என்று இருந்தவர்கள், தத்தமது நிலை தன்னாலே மாறிடக் கண்டனர். கொதித்தவர்கள் அடங்கினர். மிரட்டினோர் பணிந்தனர். அலட்சியம் செய்தோர் அக்கறை காட்டினர். அவருடைய பேச்சா? அது தங்கு தடையின்றி வேகம் குறையாமல் பாய்ந்தோடி வந்தது. மக்களைத் துளைத்துக் கொண்டு, கற்களை வளம்பெறச் செய்து கொண்டு, 'ஓசை நயத்துடன், ஒய்யார நடையுடன்! அங்கே பேசுகிறார், இங்கே பேசுகிறார், அதைக் குறித்துப் பேசுகிறார்,

இது குறித்துப் பேசுகிறார்' என்று தமிழகம் இந்த ஐம்பது ஆண்டுகளாகக் கூறி வருகிறது.

'மனத்திற்பட்டதை எடுத்துச் சொல்வேன் எது நேரிடினும்' என்ற உரிமைப்போரே அவருடைய வாழ்வு முழுவதும். அதிலே அவர் கண்ட வெற்றி மிகப் பெரியது. அதனால்தான் பெரியாரின் மகத்தான பணியை ஒரு தனிமனிதனின் பணியாக, அல்லாமல், ஒரு சகாப்தமாக விவரிக்கிறார்கள்.

தீமையைக் கண்டவுடன், பலரும் தடுக்கவோ, அதன் தாக்குதலிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ளவோ, நேரான வழியில் செல்லவோ தான் விரும்புவார்கள். சவால் விட வேண்டும் என்ற எண்ணம் எளிதில் எழுவதில்லை. எங்கெல்லாம் தீமையைப் பார்த்தாரோ, அதன் பிரமாண்டம் எப்படி இருந்தாலும், அதன் வடிவம், அதன் ஆதரவு எப்படி இருந்தாலும், அவர் அதை எதிர்த்துப் போராடத் தயங்கியதில்லை. அவர் பல போர்முனைகளைப் பார்த்திருக்கிறார். பல வெற்றிகளைப் பெற்றிருக்கிறார். அவர் ஆரம்பித்து வைத்த போராட்டம் இன்றும் தொடர்கிறது. அவருக்கு எண்பத்தொன்பது வயதாகிறது என்றாலும் அவர் இன்றும் போர்க்களத்தில் இருக்கிறார். அந்தப் போரில், அவருடன் ஒரு காலத்தில் இருந்ததைத்தான் நான் 'வசந்த காலம்' எனக் குறிப்பிட்டேன்.

அவர் நம்முடன் பல்லாண்டுகள், நமக்காக, தமிழர்களின் நல்வாழ்வுக்காக, வாழவேண்டும். பல்லாண்டுகளாக இருந்து வரும் தீமைகளை ஒழிப்பதில் அவர் சேவை நமக்குத் தொடர்ந்து கிடைக்க வேண்டும்.

ஈ.வெ.ரா.வுடனான அந்த வசந்த காலத்துக்குப் பிறகு, கடுமையான பதினெட்டு ஆண்டுக்கால அரசியல் 'கோடை' காலத்தையடுத்து, அண்ணாவின் பதவிக்காலம், இலைகளை இழந்த மரங்கள் நிறைந்த இலையுதிர்காலம் போலாகியிருந்தது. முதலமைச்சராக அண்ணா தனது கலாசார தேசியத் திட்டத்தின் ஒரு பகுதியை சாதிக்க முடிந்தது. ஆனால், தன்னால் அதிக வேலை வாய்ப்புகள் உண்டாக்க முடியாததையும் வறுமையைத் துடைக்க முடியாததையும், அதிகத் தொழிற்சாலைகள் அமைக்க இயலாததையும், குறிப்பாக லஞ்சத்தைத் தடுக்க முடியாததையும் கண்டு பெருத்த ஏமாற்றமடைந்தார் அண்ணா. அவரை இயற்கை அணைத்துக் கொண்டது.

22

முதலமைச்சர் அண்ணா



அண்ணாவின் கூட்டுறவுக் கூட்டமைப்பு

இரண்டு ஆண்டுகளுக்குக்கூட (1967 மார்ச் 6 முதல் 1969 பிப்ரவரி 2 வரை) அண்ணா முதலமைச்சராக இருக்கவில்லை. அதிலும் கடைசி எட்டு மாதங்கள், நோய் முற்றிப்போன நிலையில், தனது மருத்துவர்களின் ஆலோசனைக்கு எதிராக, விடாப்பிடியாக அவர் பணியாற்றினார். அண்ணாவின் குறுகிய ஆட்சிக்காலத்தை எடைபோடுவது நியாயமில்லை என்பதோடு அது சாத்தியமும் இல்லை. இருந்தாலும், மாநிலத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்து அவர் நிர்வாகத்தை நடத்தியதிலிருந்து சில முக்கிய அம்சங்களைக் காணலாம்.

இந்தியாவின் அரசியலில், ஒன்றுபட்ட இந்தியாவுக்குள் மாநிலக் கோரிக்கைகளை ஜனநாயக ரீதியாக, அச்சமின்றி வெளியிட மாநிலக் கட்சிகள் ஒரு வடிகாலாக இருக்கமுடியும் என்பதை அண்ணாவின் தி.மு.க. முதன்முதலாக

எடுத்துக்காட்டியது. மொழிவழிக் கலாசார தேசியத்தை அடையாளம் கண்டு வெளிப்படுத்தி, அதற்கு இடமளித்தது, சிக்கலான பல இன - பல மதங்களைக் கொண்ட இந்திய நாட்டுக்கு அண்ணாவின் மகத்தான பங்களிப்பு. மாநில கோரிக்கைகளை, மத்திய அரசுடன் மோதாமலும், கொள்கைகளை சமரசம் செய்துகொள்ளாமலும், வலியுறுத்தி வந்த அவர் திறமை, நம்பிக்கைக்கும், புத்திசாலித்தனத்துக்கும் எடுத்துக்காட்டு. 'டெல்லியிலிருந்து பார்க்கையில் அடக்கமிக்க, மிதமான தலைவராக, ராஜதந்திரி போல தம் கட்சியின் பிரிவினை லட்சியத்தைக் கையாள்கிறவர் மாதிரி அண்ணா தெரிந்தார்' என 'டைம்ஸ்' இதழ் எழுதியது.

"மாநிலங்களுக்குச் சாதகமான வகையில் அரசியல் சட்டத்தில் மறுபார்வை தேவை" என்றார் அண்ணா. மேலும், "இந்தியர்கள் சமூக அளவில் இணைந்து, பொருளாதார ரீதியாகத் தன்னிறைவு பெற்று, கூட்டமைப்பு விஷயம் எது, மாநில விஷயம் எது என்று பிரித்துக்கொண்டு செயல்பட்டால், இந்தியா சர்வதேச அரங்கில் தன் பங்கை ஆற்றமுடியும்" என்றார். மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட விஷயங்களில் மத்திய அரசினர் தேவையற்றுத் தாங்களும் பங்குபெறுவதை அண்ணா குறை கூறினார். ஒருமுறை, பாதுகாப்புத் துறை தவிர மற்ற எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்துவிட்டு, மாநிலங்களுக்கு ஒப்படைத்துவிட வேண்டும் என்று தைரியமாக வாதிட்டார்.

இந்தியாவின் அரசியல், பொருளாதாரப் பாதுகாப்பு ஒரு வசதியான நிலையை எட்டும்வரை, ஏறக்குறைய இதுபோன்ற அவருடைய எண்ணம் பல நூற்றாண்டுகளுக்கு இல்லாவிடினும், பல ஆண்டுகளுக்கு, கனவாகவே இருக்கும். ஆனால், அவருடைய தம்பிகளும், தங்கைகளும் பலகீனமான காங்கிரஸாலும், பலமிழந்த மத்திய அரசாலும் நிறையப் பயனடைந்தார்கள். கூட்டணி அரசுகளும், அதன் விளைவாக 90-களிலும், புத்தாயிரத்தின் முதல் பத்தாண்டுகளில் ஏற்பட்ட அரசியல் கூட்டமைப்பும், 'வடக்கு வழங்குகிறது - தெற்கு வாழ்கிறது' என்ற புதுமொழியை உருவாக்கின.

அதேபோல, கல்லூரி புதுமுக வகுப்பு வரை மாதச் சம்பளம் ரூ.1500-க்கு மேற்படாது பெறும் பெற்றோரின் குழந்தைகளுக்குச் சாதி வேறுபாடு இன்றி இலவசக் கல்வியை அறிவித்ததில் அண்ணா தன் பரந்த மனதைக் காண்பித்தார். "தூற்றப்பட்ட நாங்கள் வகுப்புகளைக் கவனிக்காமல், ஏழ்மையை மட்டும் கவனித்து, எல்லா வகுப்பாரையும் கவனித்து, வருவாய் 1500 ரூபாய் உள்ளவர்களுக்கு இலவசக் கல்வி என்று சொன்னோர்மே தவிர,

இதை எங்களிடத்திலிருந்து யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். வகுப்புவாதிகள் என்று தூற்றிய காரணத்தால் இதை எதிர்பார்த்திருக்க முடியாது. இதுதான் புதுமை. இதுதான் புரட்சி" என்றார்.

முக்கியமாக, தமிழ் பெருமைக்கும், கௌரவத்துக்கும் கண்ணியத்துக்கும் அவர் வைத்திருந்த உயர்ந்த அளவுகோல், பின்பற்றக் கடினமானதாக இருந்தது. அவருடைய தம்பிகளும், தங்கைகளும் அவருடைய சுயநலமின்மையையும், நேர்மையையும், அடக்கத்தையும் அவரிடமிருந்து கற்காமல், லஞ்சத்திலும், ஊழலிலும் சிக்கிக் குற்றம்சாட்டப்பட்டார்கள். இந்தப் பண்புகள், பின்னர் அவருடைய நெருங்கிய மற்றும் கவர்ச்சி மிக்க தலைவர்களிடம் இல்லாமல் போனது; அண்ணாவின் திறமைக்குக் களங்கம் விளைவித்தது.

உணவுப் பிரச்னையை அண்ணா திறமையாகச் சமாளித்தார். சேலம் உருக்காலை, தூத்துக்குடி துறைமுகத் திட்டங்களை விரைவுபடுத்தினார். மெட்ராஸ் ஸ்டேட் என்று இருந்ததைத் தமிழ்நாடு என மாற்றினார். சுயமரியாதைத் திருமணங்களை அங்கீகரிக்க முற்போக்கான சட்டமியற்றினார். இந்தி கட்டாய பாடத்தை அரசுப் பள்ளிகளிலிருந்து தைரியமாக நீக்கினார். அவர் ஆட்சிக்காலம் தமிழருக்குப் பெருமை தேடித் தந்து, அவர்களின் அரசியல் அதிகாரம் மறுமலர்ச்சி பெறவும் சாதாரண மக்கள் கவனம் பெறவும் வழி செய்தது. 1967 நவம்பர் 18 அன்று அண்ணாமலை பல்கலைக்கழக மாணவரிடையே பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்தும்போது, அண்ணா தன் வளர்ச்சியை இவ்வாறு வர்ணித்தார்: "இது சாமானியர்களின் சகாப்தம். இது குறித்து எத்தகையவர்கள் - எத்தகைய கருத்து வேறுபாடு - மாறுபாடு கொண்டிருந்தாலும், சாமானியர்களின், ஏழை எளியவர்களின் எண்ணங்கள் ஈடேற்றப்பட்டுத் தீரும் நேரம் இது என்பதை மறந்திடவே முடியாது. 'ஏழை சொல் அம்பலம் ஏறும் காலம்' என்பதும் சரியே!"

அறிஞர் இங்கர்சாலின் மேற்கோள் ஒன்றைச் சொல்லி அதை மாணவர்கள் தங்கள் லட்சியமாகக் கொள்ளவேண்டும் என்றார்:

நாம் வாழ்ந்திடும் ஊரும் உலகும்
எப்படியிருத்தல் வேண்டும் என்றிடின் -
மெய்யது தளர்ந்து கையது ஏந்திப்
பிச்சை கேட்டு இரந்திடும் மாந்தர்,
இரக்கமென்ற ஒரு பொருளிலாப்

பேராசைக் கல்லாய்ச் சமைந்த
கஞ்சனின் உருட்டு விழியும்
மருட்டிடும் பார்வையும்,
கடுந்தேவைப் பாட்டின்
ஓயா ஓலம்; உளமதை
உலுக்கிடும் புலம்பல்,
களைதனை இழந்த குற்ற நெஞ்சின்
வெளிறிய வதனம்,
பொய்தனை யுரைத்துக்
கறைமிகப் படிந்து
கன்றிய உதடுகள்,
இகழ்ச்சிக் கொடுமையில்
இன்பங் கண்டிடும்
குரூரக் கண்கள்.
இவையாவையும் இல்லாதொழிந்த
ஊரில், உலகில் -
நோயும் நொடியும் பற்றிடா
உள்ளமும் உடலும், உருவும் திருவும்
இரண்டறக் கலந்த இல்லற வாழ்வின்
வடிவும் வழக்கும் மக்கள்தம் வாழ்வினில்
மெத்தவும் பொருந்திடின் -
மாந்தர்தம் வாழ்நாள் நீண்டிடும்;
அச்சம் அகன்றிடும்; களிப்பு ஊறிடும்.
அன்பு செழித்திடும் ஊரில், உலகில்
என்பது உறுதி!
மனிதனின் மாண்பும் மீண்டிடும்
ஊரில், உலகில்!

'தமிழர்கள் வயிறார உண்ண வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிக்கப்பட வேண்டும். எங்கு நோக்கினும் தொழிற்சாலைகள் இருத்தல் வேண்டும். நான் இதைச் செய்ய வேண்டும்!' என்பதே அவருடைய லட்சியமாக இருந்தது.



அண்ணாமலைப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் அண்ணா...

ஆரம்பமாகிறது ஆட்சி

"முதலமைச்சர் அலுவலர்களைப் பார்த்து, இந்தப் பதவிக்கு நான் புதிதாக வந்துள்ளேன். உங்கள் நீண்டகால அனுபவத்தை இழக்க நான் விரும்பவில்லை. நீங்கள் விரும்பினால் தொடர்ந்து இங்கேயே என்னிடம் பணியாற்றலாம்" என்றார் அண்ணா. அருகிலிருந்த ஒருவர், "இவர் காமராஜரிடம் பணியாற்றியவர். காங்கிரஸ் மனப்பான்மையுள்ளவர்" என்று கூறினார். அதை ஒதுக்கித் தள்ளினார் அண்ணா.5 - 6 முதலமைச்சர்களிடம் பணியாற்றிய பி.வி.கிருஷ்ணய்யாவை, தன் அந்தரங்கச் செயலராக வைத்துக்கொள்ள விரும்பினார். ஆனால், கிருஷ்ணய்யா மறுத்துவிட்டார். காமராஜ், பக்தவத்சலம், அண்ணா ஆகிய மூவரிடமும் பணியாற்றிய பொ.க.சாமிநாதன், 'அண்ணா அவர்களை 'சார்... சார்...' என்று கூப்பிட்டு வந்த எங்களை, ஒருமாத காலத்துக்குள் 'அண்ணா' என்று கூப்பிடும் அளவுக்கு அவரது அன்பால் எங்களை மாற்றிவிட்டார்!' என்று எழுதியிருக்கிறார்.

காங்கிரஸ் அமைச்சர்கள் பலர் பெரிய கார்களை உபயோகித்து வந்தது போல அல்லாமல், அனைத்து அமைச்சர்களும் அம்பாசிடர் காரில்தான் செல்லவேண்டும் என்று அண்ணா உத்தரவிட்டு அதற்காக கார்களும் வாங்கப்பட்டன. காங்கிரஸ் ஆட்சியில் அமைச்சர்கள் வாங்கி வந்த சம்பளத்தில் பாதியைத்தான்

வாங்குவோம் என்று தேர்தலில் பிரசாரம் செய்தது போல, பாதியை வாங்க உத்தரவிட்டார் அண்ணா. தனது நுங்கம்பாக்கம் அவென்யூ சாலை வீட்டில் வசித்தார் அண்ணா. அவருக்குப் பின்னர் வந்த தம்பி, தங்கைகளைப் போல அல்லாமல், அவர் எளிமையான வாழ்க்கை நடத்தினார். 'அண்ணா அவர்களின் நிலையை உணர்ந்து, அவர் வெளியூர்களுக்குச் சுற்றுப் பயணம் சென்றால், அதற்கு டி.ஏ., டீ.ஏ, போன்றவற்றைப் போடுவதன் மூலம் கொஞ்சம் பணம் கிடைக்கும். பின்னர் வெளியூர்களில் கலந்துகொள்ளும் கட்சிக் கூட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ.100/- தரவேண்டும் என்று கேட்டு, அதன்மூலம் கொஞ்சம் பணம் கிடைக்கும். இப்படி எல்லாம்தான் அண்ணாவின் குடும்பம் சமாளிக்க முடிந்தது. சென்னை தேனாம்பேட்டையில் பாலாஜி ஏஜென்ஸி என்னும் பெட்ரோல் பங்கில்தான் அண்ணா அவர்களின் காருக்கு பெட்ரோல் போடுவது வழக்கம். அதற்கு ஒழுங்காகப் பணம் கொடுக்க முடியாத நிலையில், அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்து கொண்டு, குடும்பம் நடத்தினார் என்றால் யாராவது நம்புவார்களா?' என்று எழுதியிருக்கிறார் சாமிநாதன்.

அண்ணா பார்வையாளர்கள் சீட்டுகளை அடுக்கும்போது, மாற்றுக் கட்சியினரின் சீட்டுகளை மேலே வைத்தும், தன் கட்சிக்காரர்களின் சீட்டைக் கீழே வைத்தும், மிகவும் வேண்டியவர்களின் சீட்டை அதற்குக் கீழேயும் வைப்பது வழக்கம். ஒருநாள் அவருடைய நெருங்கிய பள்ளிப் பருவ நண்பர் சி.வி.ராஜகோபால் வந்திருந்தார். அவரிடமும் சீட்டு வாங்கி அண்ணாவிடம் கொடுத்தபிறகும், ஒரு மணி நேரமாகப் பார்த்துக்கொண்டிருந்த சி.வி.ராஜகோபாலுக்குப் பொறுக்க முடியவில்லை. ஒரே கோபம். கடைசியில் அவருடைய தருணம் வந்தபோது, அவர் உள்ளே அனுப்பப்பட்டார். "நான்தான் மாற்றுக் கட்சியினரை முதலில் கூப்பிட்டேன். பின்னர் நம் கட்சியைச் சார்ந்தவர்களைக் கூப்பிட்டேன். காரணம் மாற்றுக் கட்சியினர் நம்மை முதலில் கூப்பிட்டாரே என்று மகிழ்ச்சியடைவார்கள். நம் கட்சியினர் எனக்காகச் சிறிது நேரம் பொறுத்துக்கொள்வார்கள். அந்த வகையிலே நீ எனக்கு மிகவும் வேண்டியவன் என்பதால் கடைசியில் கூப்பிட்டேன். சாமிநாதன் மேல் என்ன தப்பு?" என்றார் அண்ணா. மேலும், "காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஆளுங்கட்சியினர் குறுக்கீட்டால் அரசு எவ்வாறு துன்புற்றதோ அதுபோன்ற துன்புறும் நிலை - இப்போதும் - கூடாது" என்றார் அண்ணா. அண்ணா ஆட்சிக்கு வந்தவுடன் மூதறிஞர் ராஜாஜி, "அதிகார வளாகங்களில் கட்சிக்காரர்களின் கூட்டம் சேராமல் பார்த்துக்கொள்ளுங்கள்!" என்று அறிவுரை கூறியிருந்தார்.

நல்ல தூய்மையான நிர்வாகத்துக்கு அடிப்படையான இந்த வழக்கத்தை அண்ணா ஏற்றுக்கொண்டார். 'இதற்குமேல் தி.மு.க.விடம் நான் எதையும் எதிர்பார்க்கவில்லை' என்று எழுதினார் ராஜாஜி.

"மிகப்பெரிய காங்கிரஸ் தலைவர் ஒருவர் (டி.டி.கிருஷ்ணமாச்சாரி) நான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் நாடு, நகரங்களில் பெண்களே வெளியே வரமுடியாது, உலவ முடியாது" என்று கூறியதை நினைவுகூர்ந்தார் அண்ணா. தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பு ஏற்பதற்குள், உள்ள இடைக்காலத்தில், 'காபந்து சர்க்கார்' நடத்திக்கொண்டிருந்த முன்னாள் முதல்வர் பக்தவத்சலனார், இந்தி எதிர்ப்பு சம்பந்தப்பட்ட முக்கியமான ஃபைல்கள் சிலவற்றை எரிப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார். ' 'தமிழ்நாட்டில் ஆட்சி மாறப்போகிறது. நான் (கலைஞர்) மந்திரியாவேன். அப்போது இந்த போலீஸ் அதிகாரிகளைப் பார்த்துக்கொள்கிறேன்' என்று பத்திரிகைகளில் படித்ததாகவும், ஆகவேதான் இந்தி - எதிர்ப்பு ஃபைல்களை, முக்கியமாக என் சம்பந்தப்பட்ட ஃபைல்களை, எரிக்க அவர் உத்தரவு போட்டதாகவும் கருத்துத் தெரிவித்திருந்தார்' என்று கலைஞர் எழுதியிருக்கிறார். இந்த அச்சங்களுக்கு அடிப்படை ஏதும் இருக்கவில்லை. இதற்கு உதாரணமாக, அண்ணாவே அந்த நிகழ்ச்சியைச் சொன்னார். "இந்தி - எதிர்ப்புப் போராட்டம் தீவிரமாக நடந்துகொண்டிருந்த சமயத்தில், உயர் போலீஸ் அதிகாரி ஒருவர் திடீரென்று ஒருநாள் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களிடம் தொலைபேசி மூலம் பேசினார். என்ன கேட்டார் என்றால்,'உங்கள் அண்ணாதுரை தூக்குப்போட்டுக்கொண்டானாமே, உண்மையா?' என்று கேட்டார். இவர் பதறிப்போய் 'இல்லை இல்லை..!' என்று சொன்னதற்கு, 'இல்லை, 'ஆள் க்ளோஸ் ஆகிவிட்டான்' என்று சொல்கிறார்கள். விசாரித்துப் பாருங்கள்!' என்று சொல்லி தொலைபேசியை வைத்துவிட்டார்" என்ற அண்ணா தொடர்ந்தார். "அந்த அதிகாரி, இப்போது என்னுடைய பார்வையில்தான் இருக்கிறார். பார்வையில் இருப்பது மட்டுமல்ல. அவர் உத்தியோகத்துக்கு ஒரு துளி பங்கமும் வராதபடி அவர் இந்த உத்தியோகத்தில் வைத்துக் கொண்டிருக்கப்படுகிறார். எதற்குச் சொல்கிறேன் என்றால், நீங்கள் பத்து - இருபது ஆண்டுகளுக்குப் பிறகு கஷ்டப்பட்டுப் பெற்றுக்கொண்டிருக்கிற மரபை, நாங்கள் துவக்கத்திலேயே பெற்றிருக்கிறோம்" என்றார் அண்ணா. "என்னைப் பொறுத்தவரை பகையற்று, கட்சி உணர்ச்சியற்று, கட்சி மாச்சரியமற்று, இங்கே இருக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன். அந்தப் பண்பு தமிழ்நாட்டுக்கு

எத்தனை காலம் தேவையோ அத்தனை காலம் என்னை வைத்திருங்கள்!" என்றார் அண்ணா. சட்டமன்றத்தில் தமது லட்சியத்தின்படியே வாழ்ந்தார் அவர்.

முன் அனுபவம் இல்லாதபோதும், முதலமைச்சராக அண்ணா சட்டமன்றத்தில் செயலாற்றியது அவருடைய நம்பிக்கையைக் காண்பித்ததோடு, எதையும் விரல் நுனியில் அவர் வைத்திருந்ததையும் காட்டியது. ஆனால், சில வேளைகளில் கோபமுற்றவராகவும், முன்ஜாக்கிரதை உணர்வுள்ளவராகவும் தெரிந்தார் அண்ணா. அண்ணாவிடம் மூன்று அம்சங்கள் முன்னுரிமை பெற்றவையாக இருந்தன: அவை அரிசி, நிதித் தட்டுப்பாடு, மத்திய - மாநில உறவு. பக்தவத்சலத்தின் நிர்வாகம் ஒரு வார அரிசியே இருப்பில் வைத்துவிட்டுப் போயிருந்தாலும், நிலைமை மிக மோசமாக இருந்தபோதும், 'ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி' திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியபோது, பிற்காலத்தில் அவருடைய தம்பிகளும், தங்கைகளும் 'இலவச' கலாசாரத்தைக் கொண்டுவர முன்னுதாரணமாக தாம் இருக்கப்போகிறோம் என்பதை அறிந்திருக்க மாட்டார். எனினும், அவர் ஒன்றும் புகழ்ச்சிக்கு ஆசைப்பட்டு அப்படிச் செய்யவில்லை. உதாரணமாக, மக்களிடையே வரவேற்பைப் பெறும் எனத் தெரிந்தும், நகர நில வரியை அவர் நீக்க விரும்பவில்லை. "தம் கட்சியின் கொள்கை, சொத்து உள்ளவர்களிடம் வரி வசூலிப்பதுதான்" என்றார்.

1967, மே 15 அன்று ஒரு ரூபாய்க்கு ஒருபடி அரிசி திட்டம் கோவையிலும், சென்னை நகரிலும், அறிமுகப்படுத்தப்பட்டது. அரசுக்கு இதனால் 5 கோடி இழப்பு ஏற்பட்டாலும், 31 லட்சம் மக்கள் பயன் பெற்றனர். மேலும், அரிசி கடத்தலைத் தடுப்பதற்காக அண்ணா தமிழ்நாட்டின் எல்லைகளை அடைத்துவிட்டார். அறுவடையில் ஐந்தில் ஒரு பங்கையே கொள்முதல் செய்துவந்த அவரது நிர்வாகம், அடுத்த அறுவடை காலத்துக்குள் ஐந்து லட்சம் டன் அரிசியைக் கொள்முதல் செய்திருந்தது. பொது விநியோகத்துக்காக சென்னையை இரு பகுதிகளாகப் பிரித்ததும், ரேஷன் கடைகளில் இருந்து வந்த நீண்ட க்யூ மறைந்தது.

அவர் ஓர் உதாரண முதலமைச்சராக வாழ்ந்து காட்டினார். முதலமைச்சராக, தன் தாயார் பங்காரு அம்மாளைப் பார்த்துவர அண்ணா தனிப்பட்ட முறையில் காஞ்சிபுரத்துக்குச் சென்றார். சென்னைக்குத் திரும்பி வருகையில், அவருடைய கார் ஸ்ரீபெரும்புதூர் சோதனைச் சாவடியில் நிறுத்தப்பட்டது; அரிசி கடத்தலைத் தடுக்க அண்ணாவே இட்டிருந்த ஆணைப்படி, ஆய்வாளர்கள் முதலைமைச்சர் என்பதால் சோதனை செய்யத்

தயங்கியபோதும், அண்ணா தம் கார் ஓட்டுநரிடம் டிக்கியைத் திறந்து பார்க்கச் சாவியைக் கொடுக்கச் சொன்னார். அண்ணாவின் பெருந்தன்மைக்கும், நேர்மைக்கும், சுயநலமின்மைக்கும் இப்படி நூற்றுக்கணக்கான நிகழ்ச்சிகளைச் சொல்லலாம். ரூபாய்க்கு மூன்றுபடி அரிசி என்பது லட்சியமாக இருந்தாலும், ஒரு ரூபாய்க்கு ஒருபடி அரிசியாகி, பின்னர், நடைமுறைக்கு ஏற்றதாக இல்லாதுபோகவே, அந்தத் திட்டம் அமைதியாக கைவிடப்பட்டது. "மாநில சர்க்கார் உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதற்குக் கேட்டாலும், அதற்கு மத்திய சர்க்கார் உதவ வேண்டுமென்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, அப்படிக் கேட்பதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. நியாயம் இருக்கிறது. நாம் அரிசி சாப்பிடுகிறவர்களாக இல்லாமல், கோதுமை சாப்பிடுகிறவர்களாக இருந்தால் 10 கோடி ரூபாயாவது நமக்குக் கிடைத்திருக்கும்" என்று மைய அரசின் மீது குறைபட்டார் அண்ணா. ஆனால், 'டைம்ஸ்' இதழ், அண்ணாவின் கோரிக்கையை 'நிதி நிர்வாகப் பொறுப்பின்மை' என்று வர்ணித்திருந்தது. "கடனுக்குச் செலுத்தவேண்டிய 16 கோடி ரூபாய் வட்டித் தொகையை, இந்தத் தடவை தள்ளிக் கொடுக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரின் நிதியமைச்சரைக் கேட்டுக்கொண்டேன். நம்முடைய நண்பர்கள் மாரடோரியம் என்று அவசரப்படுத்துகிறார்கள். நாங்கள் கட்டவேண்டிய வட்டியை இந்த வருஷத்துக்குத் தள்ளிக்கொடுங்கள் - ஒத்திவையுங்கள் என்றுதான் கேட்டோம். நம்முடைய நண்பர்கள் எல்லாம் சரியாகப் பரிசீலிக்காமல், கடனைத் தள்ளிவிடு என்கிறாரே என்று சொன்னார்கள். மொரார்ஜி தேசாயே இந்த அளவுக்குப் போகவில்லை. அவர் தயக்கத்தோடு பேசினார். நீங்கள் நம்புகிறீர்களோ இல்லையோ, அவர்கள் என்னுடைய கோரிக்கைக்கு இணங்கிவருகிற நிலைகூட ஏற்பட்டது. ஆனால், இது நடக்கவில்லை" என்றார் அண்ணா. ஆனால், அண்ணா வரம்பு மீறிச் செலவழித்துவிட்டு, மத்திய அரசின் மீது பழியைப் போட்டார்.

ஊழல் எனும் உபாதை

ஆரம்பத்திலிருந்தே அண்ணாவின் நிர்வாகம் நடைமுறைச் சிக்கல்களில் தவித்துக்கொண்டிருந்தது. அண்ணாவின் மறைவுக்குப்பின் இரண்டு ஆண்டுகள் கழித்து, 1971-ல் ஜெயகாந்தன் இப்படி எழுதினார். 'நாம் இன்றைக்குப் பார்க்கும் ஊழல் மற்றும் அடக்குமுறையின் அளவை, தி.மு.க. ஆட்சிக்கு வந்த சில மாதங்களிலேயே எட்டிவிட்டது.' கலைஞர், எம்.ஜி.ஆர். இருவரது அமைச்சரவையிலும் அமைச்சராக இருந்த எஸ்.ராமச்சந்திரன், 'அண்ணா தூய்மையான நிர்வாகம் அளிக்க முயற்சிகள் எடுத்தார்.

ஆனால், அவரைச் சுற்றி இருந்த சிலர் லஞ்ச ஊழலில் ஈடுபட்டிருந்தது குறித்து மிகுந்த வருத்தப்பட்டார். தொழில்கள் தொடங்கவும், பஸ் வழித்தடங்களுக்கு உரிமம் வழங்குவதிலும், அவருடைய அமைச்சர்கள் சிலரும் கட்சியின் முன்னணித் தலைவர்களும் பணம் வாங்கத் தொடங்கியிருந்தனர். சில முக்கிய அமைச்சர்கள் அரசுத் துறைகளைத் தங்கள் ஊழல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தினர். அண்ணா மிகுந்த வேதனைக்கு உள்ளானார் என்றாலும், அவர்களைத் திருத்த முடியவில்லை. அதே நேரத்தில், நிர்வாகத்துக்குக் கெட்டபெயர் வந்துவிடுமோ என்று அஞ்சினார்' என்று அப்போதிருந்ததை எழுதியிருக்கிறார் எஸ்.ராமச்சந்திரன்.

மனமுடைந்துபோன அண்ணா, நாவலரிடமும் ராமச்சந்திரனிடமும், ஒரு பெரிய பிரச்னை குறித்து தான் டெல்லியுடன் போராடியபிறகு, பதவியை விட்டுவிடப் போவதாகக் கூறினாராம். அப்படித்தான் கட்சியைக் காப்பாற்றமுடியும் என்று நம்பினார். பி.ராமமூர்த்தி பதிவு செய்திருக்கிறபடி, அண்ணாவின் முற்றிய நோய், நல்லவேளையாக அவரை கட்சி மேலும் பாழாகிப் போவதைப் பார்க்கவிடாமல் தடுத்தது. 1968-ல் அண்ணாவுக்கு அறுவைசிகிச்சை முடிந்து காஞ்சிபுரத்தில் அவர் தங்கியிருந்தபோது, ஹிமாசலப் பிரதேசத்திலுள்ள மணாலியில் உள்ள சுந்தர்நகர் எனும் இடத்தில் தன் நண்பரின் மூலம், ஓய்வு எடுத்துக்கொள்ள வசதி செய்து தருவதாக பி.ராமமூர்த்தி கூறினார். 'சில நாட்களுக்குப் பிறகு, இந்த ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, நான் அண்ணாவைச் சந்தித்தபோது, அவர் நுங்கம்பாக்கத்திலுள்ள தன் வீட்டிலேயே வசித்து வந்தார். ஓய்வு எடுத்துக்கொள்ளும் யோசனையை அவர் கைவிட்டுவிட்டதாகத் தெரிவித்தார். அவர் கூறிய காரணம் என்னை திடுக்கிடச் செய்தது' என்று எழுதியிருக்கிறார் ராமமூர்த்தி. மேலும், அண்ணா கூறியதை அப்படியே தந்திருக்கிறார்: 'என்னுடைய கட்சி நான் விரும்பியதற்கு முன்பே ஆட்சிக்கு வந்துவிட்டது. நான் இன்னும் சில காலத்துக்குப் பிறகுதான் ஆட்சிக்கு வரும் என்று எதிர்பார்த்தேன். என்னுடைய கட்சியில் லஞ்ச ஊழல் பரவிவிட்டது. நோய்வாய்ப்பட்டு இருக்கும் இதே நிலையில், இதைச் சீர்படுத்தும் நிலையில் நான் இல்லை. எனவே, பணியாற்றிக்கொண்டே உயிர் நீத்துவிடுவது என்று தீர்மானித்து விட்டேன்' என்று கூறியதை வேதனையோடு கேட்டேன்.' அண்ணாவின் மனநிலையை கண்ணதாசனின் சொற்கள் உறுதி செய்கின்றன: 'மறுநாள் மாலையே அண்ணா அடையாறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இருப்பதாகச் செய்தி வந்திருந்தது... அண்ணா மரணத்தை நெருங்குகிறார்

என்பது அவனுக்கு (கண்ணதாசனுக்கு) திடமாகத் தெரிந்தது. அவனைவிட வேறு ஒருவருக்கு அது மிக உறுதியாகத் தெரிந்தது (கலைஞருக்கு). அவருக்கு டெலிபோன் செய்து, 'என்ன இப்படி விட்டுவிட்டீர்களே?' என்று கேட்டான் அவன் (கண்ணதாசன்). 'என்ன செய்வது? யார் சொன்னாலும் அவர் ஏற்றுக்கொள்வதில்லை!' என்று பதில் சொன்னார் அவர் (கலைஞர்)' என்று எழுதியிருந்தார் கண்ணதாசன்.

அண்ணா நிர்வாகத்தின் சில முக்கிய அம்சங்கள்

'ஜமீன் ஒழிப்புச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குப் பட்டா வழங்க வேண்டும் என்ற சட்ட மசோதாவை எதிர்க்கட்சியில் அமர்ந்து தி.மு.க. முன்மொழிந்திருந்தது. சட்ட அமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், அந்த மசோதாவின் கருத்துகளை அரசு உத்தரவு மூலம் நிறைவேற்ற அண்ணா அனுமதி அளித்தார். எண்ணற்ற விவசாயிகளுக்கு நிலப்பட்டா வழங்க வாய்ப்பு கிடைத்தது' என்ற அன்றைய சட்ட அமைச்சர் செ.மாதவன், 'மூதறிஞர் ராஜாஜியை நேரில் சந்தித்து, தஞ்சை மாவட்ட விவசாயிகளின் கோரிக்கையைச் சட்டமாக்குவது பற்றி கலந்து பேசச் சொன்னார் அண்ணா. நான் மட்டும் மூதறிஞர் வீட்டுக்குச் சென்று பேசிவந்தேன்' என்று எழுதியிருக்கிறார். முக்கியமாக, நில உச்சவரம்புச் சட்டத்தை அமல்படுத்தி, உச்சவரம்பை 30-லிருந்து 15 'ஸ்டாண்டர்ட் ஏக்கராக'க் குறைக்க விரும்பினார் அண்ணா. அண்ணா தொடங்கிவைத்த இந்த நடைமுறையைப் பின்பற்றி, 1970-ல் கலைஞர் கருணாநிதியின் ஆட்சியில் 1,78,880 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 1,36,236 நிலமற்ற விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

1967 ஜூலையில், சேலம் உருக்காலைத் திட்டத்தையும், தூத்துக்குடி துறைமுகத்தையும் வலியுறுத்தும் வகையில், அண்ணாவின் நிர்வாகம் 'எழுச்சி நாள்' எடுத்தது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில்கூட, மத்திய அரசு இவற்றைச் சேர்க்காதது தொடர்பால், மாநில அரசின் ஏமாற்றத்தை வெளிக்காட்ட-ஒரு துணிச்சலான செயலாக இது அமைந்தது. இதைப் பற்றிச் சட்டமன்றத்தில், "கனம் வெங்கட்ராமன் அவர்கள் சேலம் எஃகு ஆலைக்காக எடுத்துக்கொண்ட முயற்சியில் ஏதாவது குறை இருந்ததா? இருக்கிறதா? காட்டிய ஆதாரங்கள் தவறானதா? நேஷனல் டெவலப்மென்ட் கவுன்சிலில் பேசுகிற நேரத்தில், இவர்கள் எதிர்த்துச் சொன்ன வாதத்தில், சமாளிக்க முடியாமல் வந்தாரா? அப்படியிருந்தால் ஏன் நமக்கு சேலம் இரும்பாலை வரவில்லை? நாம் இன்னோர் இடத்தில் கேட்டுப் பெறுவது என்ற

நிலை - அவல நிலை இருப்பதால், அதைப் பெறமுடியவில்லை என்பதைத் தவிர, நியாயமில்லை என்பதினாலா வரவில்லை?" என்று அண்ணா பேசினார்.

திராவிட இயக்கத்தின் சில லட்சியங்களை அடைய, அண்ணா மாநில அரசுக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தினார். 1967 ஜூலை 18 அன்று, இந்து திருமண (தமிழ்நாடு திருத்த) மசோதாவை சுயமரியாதைத் திருமணங்களுக்குச் சட்டரீதியான அங்கீகாரம் அளிக்க அவர் கொண்டு வந்தார். "இதை நாங்கள் மிகச் சாதாரண சீர்திருத்தம் என்று கருதவில்லை. எத்தனையோ ஆண்டுகளாக எங்கள் உள்ளத்திலே உறங்கிக் கொண்டிருந்து, எத்தனையோ இரவுகள், எத்தனையோ பகல்கள், இப்படி ஒரு சட்டத்தை உருவாக்க முடியுமா, முடியுமா என்று எண்ணிக் கொண்டிருந்த எங்கள் எண்ணத்துக்கு மதிப்பு அளிப்பீர்களானால், இந்த விதமான திருமண முறையில், பல்லாயிரக்கணக்காகத் திருமணம் செய்துகொண்டு இருப்பவர்களுக்கெல்லாம், இந்தச் செய்தி, பாரதியாருடைய கவிதைப்படி, அவர்களுடைய காதில் செந்தேனாகப் பாயும். ஒரு லட்சியத்துக்காக ஆரம்பிக்கப்பட்ட அரசியல் கட்சியின் பயனை இன்று நான் பெற்றுவிட்டேன். இனி நான் இறந்தாலும் எனக்குக் கவலை இல்லை" என்றார். இது போதாதென்று, அவருடைய ஆட்சி வேறு சாதியில் திருமணம் செய்துகொள்வதை ஊக்குவிக்க, தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கங்கள் அளித்தது.

கல்வித் துறைக்கு, முந்தைய காங்கிரஸ் அரசாங்கத்தைவிட ரூ.7 கோடி கூடுதலாக ஒதுக்கியது அண்ணாவின் நிர்வாகம். "சர்க்கார் உதவியின்றி, வானத்தை மட்டுமே நம்பி வாழும் உழவர்களுக்குப் புன்செய் நிலத்துக்கு வரியில்லை. அதேநேரத்தில், நிலத்தை வைத்துக்கொண்டு தேவைக்கு அதிகமாகச் சம்பாதித்து லாபம் அடைபவர்களுக்கு - போட்டால் தாங்கக் கூடியவர்களுக்கு வரி போட்டிருக்கிறோம்" என்றார் அண்ணா. ஏரி - குளங்களைத் தூர் வாரி ஆழப்படுத்தவும், பாசனக் கிணறுகளைப் பாதுகாக்கவும் அண்ணாவின் அரசு 11 கோடி ரூபாய் ஒதுக்கியது. பஸ் போக்குவரத்து தேசியமயமாக்கப்பட்டது. பஸ் முதலாளிகள் காங்கிரஸ்காரர்கள். ஆக, அரசியல் ரீதியாகவும், கொள்கை ரீதியாகவும் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தினார் அண்ணா. பஸ் கட்டணத்தைக் குறைத்தார். " 'இது ஒரு பெரிய காரியமா?' என்று அவர்கள் சொல்லலாம். நான் முதலிலேயே சொன்னேன்; நாங்கள் சின்னவர்கள், சாமானியர்கள் என்று எங்களுக்குத் தோன்றுவதால், சாமானியமானவர்களுக்குத்தான், அதற்கேற்றாற் போல நாங்கள் செய்யமுடியும் என்று சொன்னேன்... நாட்டிலே 100-க்கு 80 பேர்

கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு ஒரு கவளச் சோறு கிடைக்காமல் இருக்கிறதே, அவர்களுக்கு என்ன செய்யலாம் என்பதில்தான் எங்கள் நினைப்பு சென்று கொண்டிருக்கிறது... நாங்கள் புதிய நிலைக்கு வந்தோமே தவிர, நாங்கள் இருந்த நிலையை மாற்றிக்கொள்ளவே இல்லை!" என்றார் அண்ணா.

அண்ணாவின் நிர்வாகம் ஜூலை 1967-ல் முதல், எதிர்பாராத ஒரு சவாலைச் சந்தித்தது. தென்சென்னை குடிசைப் பகுதிகளில் ஜூலை முதல் தேதி, மர்மமான முறையில், குடிசைகள் தீப்பிடித்து எரிந்துபோயின. சென்னையில் சுமார் 600 குடிசைப் பகுதிகளில் தீப்பிடித்ததால், நிறைய ஊகங்கள் உலாவரத் தொடங்கின. "அரசியல் காரணங்களுக்காகச் செய்யப்பட்டு இருக்கலாம் என்று யூகிப்பதற்கு இடம் இருக்கக் கூடும்... எந்த ஓர் அரசியல் கட்சியும் - காங்கிரஸ் கட்சி உட்பட திட்டமிட்டுச் செய்த காரியமல்ல" என்றார் அண்ணா. "இப்போதிருக்கிற குடிசைகளைத் தவிர, இனி புதிதாகக் குடிசைகள் சென்னை நகரத்தில் வருவதற்கு நாங்கள் இடம் தரமாட்டோம். பொதுமக்களிடத்தில் இதுபற்றி எடுத்துச் சொல்லி - புதிய குடிசைகள் வராதபடி பார்த்துக்கொள்வோம் என்ற உறுதியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நேற்றைய தினம் நடந்த எல்லாக் கட்சித் தலைவர்களும் அடங்கிய குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு இருக்கிறது" என அறிவித்தார் அண்ணா. ஆனால், துரதிர்ஷ்டவசமாக அதற்குப்பிறகு இந்த ஒப்பந்தம் மீறப்பட்டே வந்திருக்கிறது. முதலமைச்சர் நிவாரண நிதிக்கு ரூ.101 முதல் ரூ.30 ஆயிரம் வரை தனியாரிடமிருந்தும் நிறுவனங்களிலிருந்தும் நன்கொடைகள் வந்து குவிந்தபோது அண்ணா நெகிழ்ந்துபோனார். "இந்தத் தொகைகளைப் படிப்பதிலே எனக்குச் சிறிது தடுமாற்றம் ஏற்படுவதை உணர்கிறேன். இவ்வளவு பெரிய தொகைகளைப் பார்த்ததும் இல்லை; பழகியதும் இல்லை. எனவே தயக்கமும் தடுமாற்றமும் ஏற்படுகின்றன" என்றவர், "பணத்தைக் கொண்டு போதுமான அளவுக்கு வீடுகள் கட்டுவதற்கு இடம் இல்லாததால்தான் இந்த அளவோடு இருக்கிறோமே தவிர, பணத்தை எடுத்துக்கொண்டால் ஐயாயிரம் வீடுகள் கட்டக்கூட வசதி இருக்கிறது" என்றார் அண்ணா, சுமார் 40 லட்ச ரூபாய் திரட்டப்பட்டு, கிட்டத்தட்ட 3 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு இருந்த நிலையில்.

ஆட்சிக்கு வந்து எட்டு மாதங்களுக்குப் பின்னரும், அண்ணாவின் புகழ் அப்படியேதான் இருந்தது. 1967 நவம்பர் 7 அன்று, அண்ணா ராஜினாமா செய்ததால் நடைபெற்ற தென்சென்னை நாடாளுமன்ற இடைத்தேர்தலில், கலைஞரின் மருமகன் முப்பத்தைந்து வயது முரசொலி மாறன் நின்றபோது, பெரியார் முதல்முறையாக தி.மு.க.

வேட்பாளர் ஒருவருக்காக பிரசாரம் செய்தார். தி.மு.க. சார்பில் நின்ற மாறன் வெற்றி பெற்றார். மாறன் பிறகு மத்திய வர்த்தக அமைச்சராகி, உலக வர்த்தக அமைப்பின் தோஹா சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் இந்தியாவின் முகமாகச் சிறந்த முறையில் அறியப்பட்டார்.

இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு

அண்ணாவின் ஆட்சிக்காலகத்தில் நடந்த இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு, தமிழர்களிடையே தமிழ் மொழி எழுச்சியை உண்டாக்க வாய்ப்பை ஏற்படுத்தியது. முதல் உலகத் தமிழ் மாநாடு மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் 1966-ம் ஆண்டு ஏப்ரல் 16 முதல் 23 வரை நடந்தது. மலேசியப் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்து வந்த, இலங்கையைச் சேர்ந்த அருட்தந்தை சேவியர் எஸ்.தனிநாயக அடிகள், மாநாடு நடைபெற பெரிதும் காரணமாக இருந்தார். பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் துவங்கிவைத்த அந்த மாநாட்டில், இருபது நாடுகளிலிருந்து கல்வியாளர்கள் வந்து கலந்துகொண்டனர். அப்போது முதல்வர் பக்தவத்சலம், இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை சென்னையில், 1968-ல் நடத்த முன்வந்தார். எனவே, இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு, உலகத் தமிழ் ஆய்வுக் கழகத்தின் ஆதரவு பெற்று தமிழ்நாடு அரசாங்கம் சார்பில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1968 ஜனவரி 3 முதல் 10-ம் தேதி வரை நடைபெற்றது.

மாநாடு நடைபெறும்போது தமிழ் தேசியம் பேசுவோர் பதவியில் இருந்தது மிகப் பொருத்தமாக இருந்தது; அது தமிழ்க் கலாசாரம், அரசியல் அதிகாரத்தின் புதிய பரிணாமங்களை வெளிச்சமிட்டுக் காட்டியது. திராவிட இயக்கத்துக்குப் பிடித்தமான, மக்களைத் திரட்டிச் செயல்படுவதில் முதல்வர் அண்ணா முன்னின்றார். உலகத் தமிழ் மாநாடு ஒன்றை இணையாக நடத்தினார். 1968, ஜனவரி 1 அன்று அண்ணாவின் சிலையை, மவுன்ட் ரோடில் முன்னாள் நீதிக் கட்சித் தலைவர் சர். ஏ.ராமசாமி முதலியார் திறந்து வைத்தார். இதுவே பின்னர் 'அண்ணா சாலை'யாகியது. தி.மு.க. பதவிக்கு வந்தபிறகு, அண்ணாவின் மறைவுக்குப் பின்னர், அவர்களின் வாழ்நாளிலேயே ஒருவருக்குச் சிலை வைக்கும் கலாசாரம் தோன்றியது. இது உகந்ததல்ல எனத் தோன்றினால், 1950-களிலேயே சென்னை மாநகராட்சியிலிருந்த காங்கிரஸார், நகரில் காமராஜருக்குச் சிலை வைத்ததே இதன் தொடக்கம் என்பதை குறிப்பிட்டு ஆகவேண்டும். ஆனால், சிலை தயாராவதற்குள் சென்னை மாநகராட்சி, காங்கிரஸார் கையிலிருந்து தி.மு.க.வுக்குப் போய்விட்டது! ஆனால், காங்கிரஸின் விருப்பத்தை

தி.மு.க. நிறைவேற்ற முன்வர, பிரதமர் நேரு, காமராஜரின் சிலையைத் திறந்துவைத்தார்.

ஜனவரி 2-ம் தேதி திருவள்ளுவர், அவ்வையார், கண்ணகி, கம்பன், பெஸ்கி பாதிரியார் (வீரமாமுனிவர்), ஜி.யு.போப், ராபர்ட் கால்டுவெல், வ.உ.சிதம்பரனார், பாரதியார், பாரதிதாசன் சிலைகள் மெரினாவில் திறந்து வைக்கப்பட்டன. ஜனவரி 3-ம் நாள் ராஜாஜி கலைப் பொருட்காட்சியைத் திறந்துவைத்தார். அன்று பிற்பகல், தமிழ் கலாசாரம், பாரம்பரியம், இலக்கியம், கலை ஆகியவற்றைக் கூறும் ஓவியக் காட்சிகள் அலங்கார ஊர்திகளாக வலம் வந்தன. பல்வேறு பள்ளிகளில் இருந்து மாணவ - மாணவியர் கலந்துகொண்டனர். மாநாடு நடக்கும் இடத்துக்கும் ஊர்வலம் சென்றடைய சுமார் நாலரை மணி நேரம் ஆனது. அன்று மாலை மெரினா கடற்கரையில் நடந்த பொதுக்கூட்டம் இவற்றுக்கு இணைப்பாக இருந்தது. நிகழ்ச்சி, எம்.எம்.தண்டபாணி தேசிகரின் வாழ்த்துப் பாடலுடன் துவங்கியது. காமராஜர் வரவேற்புரை ஆற்றினார். குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர் உசேனின் துவக்க உரையைத் தொடர்ந்து, அண்ணா தலைமை உரை நிகழ்த்தினார். எம்.ஜி.ஆர்., நாவலர் நெடுஞ்செழியன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். 'யுனெஸ்கோ' உயர் அதிகாரி டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யாவும், இலங்கை அமைச்சர் திருச்செல்வமும் வாழ்த்துரை வழங்கினர். ஆளுநர் உஜ்ஜல் சிங் அவர்கள் மாநாட்டு விழா மலரை வெளியிட்டார்.

ஆறு நாட்கள் நடந்த ஆய்வுக் கூட்டங்களில் மொழி அறிஞர்கள் நாற்பது நாடுகளிலிருந்து வந்து பங்கு கொண்டனர். அறிஞர்கள் தங்கள் ஆய்வுக் கட்டுரைகளைப் படித்துவிட்டு அடுத்த அமர்வுக்குத் தயாராகும் இடைவேளையில், ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் கிராமப்புற, கலாசார, கலை நிகழ்ச்சிகளை கண்டுகளிக்க வழி செய்யப்பட்டிருந்தது. "இருபது லட்சம் மக்களும் திரண்டு நின்று கூர்ந்து நோக்கிடும் அளவுக்குப் பெருமை சேர்த்துக் கொடுத்தவை தீவுத்திடல் 'பூம்புகா'ரில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சிகள்" எனக் குறிப்பிட்டிருக்கிறார் கலைஞர். மொத்தத்தில் தமிழ் தேசிய கலாசார உணர்வும் பெருமையும் பொங்கி வழிந்தது.

ஆனால், மாநாடு துவங்குமுன் ஒரு பிரச்னை தலைதூக்கியது. மாநாட்டையொட்டி வெளியிடப்பட இருந்த தபால் தலையில் இந்தி எழுத்துகள் இருக்கவே, அண்ணா அதை வெளியிட மறுத்துவிட்டிருந்தார். இதுகுறித்து, ஜெயகாந்தன் இவ்வாறு எழுதினார்: 'உலகத் தமிழ் மாநாடு என்பதன் பெயரால் தி.மு.கழக ஆட்சியின் மகத்தான முதல் ஊழல் நடைபெற்றபோது, தமிழர்களின்

மொழி உணர்ச்சி வெறியைத் தூண்டிவிடுவதற்காக, திரு.அண்ணாதுரை ஒரு ஸ்டண்ட் அடித்தார். அதாவது, உலகத் தமிழ் மாநாட்டை முன்னிட்டு வெளியிடுகிற தபால் தலையிலும் இந்தி மொழிக்கு இடமா? என்று அண்ணாதுரை கேட்டார்... பின்னர், தபால் தந்தி இலாகாவின் அமைச்சராக இருந்த திரு. ராம்சுபாக் சிங், அண்ணாதுரையின் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்குச் சரியான பதிலடியாக, அந்தத் தபால் தலை அச்சடிப்பதற்கு முன்னால் அதன் ஒரிஜனலை அண்ணாதுரைக்கு அனுப்பி, அவர் அங்கீகரித்ததையும், ஆதாரத்தோடு வெளியிட்டார். அண்ணாதுரை மன்னிப்பு ஏதும் அதற்காகக் கேட்கவில்லை. அவ்விதமான பெருந்தன்மைகளை அவர்களிடம் நாம் எதிர்பார்ப்பதற்கு இல்லை.' ஆனால், ஜெயகாந்தன் கூறியது தவறு. " 'நீங்கள் என்ன அனுப்பினீர்களோ அதைத்தான் போட்டோம்' என்கிறார்கள். நாங்கள் அனுப்பியதில் இந்தி வாசகமே கிடையாது. ஆங்கிலத்தில் வாசகம் அனுப்பப்பட்டு இருந்தது. இந்த இரண்டு தவறுகளுக்கும் நான் பொறுப்பாளி அல்ல. என்னுடைய ஒப்புதலுக்கு அது வரவில்லை. பத்திரிகைகளிலே வெளிவந்தது என்னுடைய கவனத்துக்கு வந்திருக்கும் என்று பூவராகன் அவர்கள் தன்னுடைய மந்திரி அனுபவத்தைச் சொன்னார்கள். ஒவ்வொருநாளும் பார்ப்பதில்லை... உலகத் தமிழ் மாநாடு நடைபெறுகின்ற காலத்திலே, தமிழ்மொழி விஷயத்திலே கட்டுக்கடங்காத ஆர்வம் கொந்தளிக்கும் சமயத்திலே, மாணவர்கள் இந்தி திணிக்கப்படுகிறது என்று கூறிக்கொண்டிருக்கும் அந்த நேரத்திலே, இந்த விழா நடத்துவது நல்லதல்ல என்ற முறையிலேதான் அது நிறுத்தப்பட்டது. அதிகாரிகள் நிலையில் நடந்த தவறுக்கு 'ரெக்ரெட்' தெரிவிப்பதிலே எனக்குக் கூச்சம் கிடையாது!" என்று அண்ணா நடந்தவற்றை சொன்னார்.

இருமொழிக் கொள்கை

தமிழ் உணர்வுகளை உச்சத்துக்குக் கொண்டு சென்ற உலகத் தமிழ் மாநாட்டுக்கு முத்தாய்ப்புப் போல, ஆட்சிமொழிச் சட்டம் 1963-க்குத் திருத்தம் வந்து சேர்ந்தது. 'இந்தியை ஆட்சிமொழியாக ஏற்காத எல்லா மாநில சட்டமன்றங்களும் ஆங்கில மொழியைப் பயன்படுத்தாமல் விட்டுவிடுவது பற்றிய தீர்மானத்தை ஆராய்ந்தும், அப்படிப் பயன்படுத்தாமல் விட்டுவிடுவதற்கும் நாடாளுமன்ற இரு அவையும் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றன என்று திருத்தம் வலியுறுத்தியது.

இந்தச் சட்டம், இந்தி பேசாத சட்டமன்றங்களுக்கு மறுப்புத் தெரிவிக்கும் உரிமையை அளித்ததால், இந்தி பேசாதவர்களுக்கு



அண்ணா, முரசொலி மாறன் உள்ளிட்டோர்...

மகிழ்ச்சியையே அளித்தது. இருந்தபோதும், இந்தி ஆதரவாளர்களின் வாயை அடைக்க, ஆட்சிமொழியாக இந்தி படிப்படியாகப் பயன்படுத்தப்படும் என்ற தீர்மானத்தையும் அதேசமயத்தில் மைய அரசு கொண்டு வந்தது, இந்தி திணிப்பு எதிர்ப்பாளர்களுக்குக் கசந்தது. திருத்தத்துக்கு வோட்டு எடுக்கும்போது, இந்தி ஆதரவுக் குழுவினர் வெளிநடப்புச் செய்ய, ஆங்கில - ஆதரவுக் குழு தீர்மானத்தையே எதிர்த்து வெளிநடப்புச் செய்தது. "இந்தத் தீர்மானம், இந்தச் சட்டம் கொடுப்பதைப் பறித்துக்கொள்வதாக இருக்கிறது" என்று கருத்துத் தெரிவித்தார் அண்ணா. "அது நிறைவேற்றப்படாத நாளில், அப்போது அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த திரு.காமராஜ் அவர்கள் பெங்களூரிலிருந்து, தெளிவாகப் பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கை கொடுத்தார்கள். இந்தத் தீர்மானம் சரியல்ல, இந்தத் திருத்தத்தோடு

நிறைவேற்றக் கூடாது என்று அவர்கள் அறிக்கை கொடுத்தார்கள்" என்று கூறினார் அண்ணா.

எனினும், 1968, ஜனவரி 8 அன்று ஆட்சிமொழித் திருத்த மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதலோடு சட்டமாயிற்று. தீர்மானம் அரங்கேறியிருந்தது. "இந்த விசித்திரத்தால் ஒரு குறிப்பிடத்தக்க பகுதி மக்கள் திருப்தி அடைவார்கள். இது தி.மு.கழகத்தையும் மாணவர்களையும் திருப்திப்படுத்தாது" என்றார் அண்ணா. இந்திய மொழிகளுக்குள்ளேயே மிக முக்கியமான இடத்தை அளிக்கத்தக்க வகையில் இந்தி ஆதரவாளர்கள் செயல்பட்டு வெற்றி பெற்றுவிட்டார்கள் என்பதைத் தீர்மானம் தெள்ளத் தெளிவாக்கியது. அரசுத் தேர்வுகளில், இந்தி பேசுபவர் தம் தாய்மொழியில் தேர்வு எழுதலாம். இந்தி பேசாதவரோ, தன் தாய்மொழியில் எழுதாமல் அந்நிய மொழியான ஆங்கிலத்தில் மட்டுமே எழுதலாம். கொதிப்படைந்த மாணவர்கள் மறியலில் ஈடுபட்டு, தி.மு.க. அரசு உடனே இதை எதிர்த்துச் செயல்படவேண்டி, வன்முறையில் இறங்கினார்கள். தி.மு.க.வுக்கு இது தர்மசங்கடமாகப் போயிற்று. 'தி.மு.கழக மாய்மாலத் திரைகளைக் கிழித்துக்கொண்டு முதலில் வெளிவந்தது மாணவர்களின் கூட்டம். 'அண்ணாதுரை இமேஜ்' கலகலத்துச் சரியத் தொடங்கியது' என்று மொழி குறித்து அண்ணாவின் நேர்மையைப் புறக்கணித்து காட்டமாக எழுதினார் ஜெயகாந்தன். என்றாலும், அண்ணாவின் நிர்வாகம், மாணவர்களின் வன்முறைகளுக்குப் பின் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தது. முதலமைச்சர் அண்ணா, "இதை எல்லாம் பற்றிப் படிக்கிறபோது என்னால் தாங்கவே முடியவில்லை" என்றார். அதன்பிறகு நோய்வாய்ப்பட்டார். 'பெருமளவு மாணவர்கள் காங்கிரஸையோ, தி.மு.க.வையோ சாராதவர்கள் என்பதுடன், மூத்தவர்கள் தங்கள் அக்கறையைச் சரியாகக் காண்பிக்கவில்லை, அதனால்தான் கலவரம் வெடித்தது' என்று தன்னையே நொந்தும் கொண்டார்.

அவருடைய அமைச்சரவை சகாக்கள், அவரை மாணவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து, வன்முறையை நிறுத்துமாறு கேட்டுக்கொண்டபோது, "இப்போது மாணவர்களால் சேதப்படுத்தப்படும் பேருந்துகளையோ, கொளுத்தப்படும் ரயில் பெட்டிகளையோ நாம் மீண்டும் விலை கொடுத்து வாங்கிவிட முடியும். ஆனால், இழந்துவிட்ட மாணவர்களின் உயிரை நம்மால் மீட்டுத்தர முடியுமா? எனவே அவசரப்பட்டு, அவர்களது உணர்ச்சிகளை அடக்க நாம் முயற்சி செய்யக் கூடாது. மேலும் இந்தி எதிர்ப்பு உணர்ச்சி மதிக்கப்பட வேண்டிய ஒன்று" என்று

பதிலுரைத்தார் அண்ணா. "நான் எண்ணிக்கொண்டு இருப்பதெல்லாம், பொருள் நட்டத்தைவிட, உயிர் நட்டத்தைக் கூடுமான வரையில் தவிர்க்க வேண்டும் என்பதுதான். அதைத்தான் என்னுடைய சுபாவமாக வைத்திருக்கிறேன். இந்த அரசினுடைய கொள்கையாக வைத்திருக்கிறேன்" என்றும் அறிவித்தார்.

மாணவர்கள் என்னவோ விட்டுக்கொடுக்கும் மனநிலையில் இல்லை; அண்ணா ஐந்து இரவுகள் அவர்களோடு பேச வேண்டியிருந்தது. அண்ணா அரசின் மொழிக் கொள்கையையும் அவருடைய திட்டங்களையும் கேள்விக்குரியதாக்கி, அவர்கள் அண்ணாவிடம் விளக்கம் கோரினார்கள். இறுதியில் அவருடைய அரசு, தனது கடைசி துருப்புச் சீட்டைக் கையில் எடுத்தது. 1968 ஜனவரி 23 அன்று சிறப்பு அமர்வு ஒன்றில், இந்தி மொழியை முற்றிலுமாகப் பள்ளிப் பாடதிட்டத்திலிருந்து நீக்கியும், தேசிய மாணவர் படை(என்.சி.சி)யின் ஆணை மொழிகளை விலக்கியும், சட்டமன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. 'பின் அதற்கு மத்திய அரசு ஒப்புதல் மறுக்குமானால், என்.சி.சி.யையே கலைத்துவிடுவோம்' என்றது தீர்மானம். 'அரசியல் அமைப்புச் சட்டம் 17-வது பிரிவை நீக்கவேண்டும் என்று கோரியது புரட்சிகரமானது' என்ற அண்ணா, தி.மு.க-வின் பேராசிரியர் அன்பழகன் 1958 மார்ச் 11 அன்றே 'ஆங்கிலத்தைத் தொடர்ந்து, காலவரையறை எதுவுமின்றி, வைத்துக்கொள்ள வேண்டுமென்று' தனிநபர் மசோதா ஒன்று கொண்டுவந்திருந்ததைக் குறிப்பிட்டார். அது வாக்கெடுப்புக்கு விடப்பட்டு, 14 பேர் அதை ஆதரித்தும், 121 பேர் எதிர்த்தும் வாக்களித்தார்கள். எனவே, "இருமொழிக் கொள்கை புதிது அல்ல" என்றார் அண்ணா. 1958, மார்ச் 11 அன்று மேலும் ஒரு தீர்மானத்தை, இந்த முறை எம்.பி.சுப்பிரமணியம் கொண்டுவந்திருந்தார். 'இந்தி பேசாத பகுதிகளில் பயிலும் மாணவர்கள் மூன்று மொழிகளைப் படிக்க வற்புறுத்தப்பட மாட்டார்கள்' என்பதே அது. அதுவும் தோற்றபின்னர், 1965, ஆகஸ்ட் 5-ல் அரசுப் பதவி தேர்வுகளில் தமிழும் ஒன்றாக இருக்கவேண்டும் என்று தி.மு.க. ஒரு தீர்மானம் கொண்டுவந்தது. அதற்கு ஆதரவு 34. எதிர்ப்பு 77. எனவே, அதுவும் தோற்றது. டெல்லியிலிருந்து ஒரு மூத்த அதிகாரி, என்.சி.சி. ஆணை மொழி பற்றிய முடிவை அண்ணா திரும்பப் பெருமாறு கேட்டுக்கொள்ள வந்தார். "என்.சி.சி. தமிழ்நாட்டில் இயங்கவேண்டும் என்றால், ஒரே ஒரு வழிதான் உள்ளது" என்று அண்ணா கூறியபோது, "அது என்ன?" என்று வியந்தவரிடம், "என்னை நீக்கிவிடுங்கள்!" என்றார் அண்ணா.

திருத்தத்தின் மீது அண்ணா பேசும்போது, "மாணவர்கள் யார்? அவர்கள் நம் ரத்தத்தின் ரத்தம். அவர்கள் நம் குடும்பத்துப்

பிள்ளைகள். அவர்கள் நம் எதிர்காலத்தின் உருவங்கள்! (குண்டடிப்பட்டு பலரின் ரத்த தானத்தால் பிழைத்த எம்.ஜி.ஆர்., அதன்பின்னர் பேச்சை 'ரத்தத்தின் ரத்தமே' என்று தொடங்கி பேசினார்.) அவர்கள் ஒன்றை விரும்புகிறார்கள் என்றால், என்னால் நிறைவேற்றிக் கொடுக்கக்கூடிய அளவுக்கு நான் நிறைவேற்றிக் கொடுக்க முடியும் என்பதை மெய்ப்பித்துக் காட்டவேண்டியது ஜனநாயகக் கடமை என்று கருதுகிறேன்" என்றார். நியாயத்தை உணர்ந்து மத்திய அரசு நடந்துகொள்ள இது உதவும் என தாம் நம்பியே, இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருவதாகக் கூறினார். அண்ணாவின் செயல் தனியானதாகவும் இதற்குமுன் நடக்காத ஒன்றாகவும் இருக்கவே, மத்திய அரசு அவரது ஆட்சியைக் கலைத்துவிடும் என்ற வதந்தி உலா வரத் தொடங்கியது. "தமிழக அரசு கவிழ்க்கப்பட்டுவிட்டால், மத்திய அரசு 100 அல்லது 150 நாட்களில் கவிழ்ந்துவிடும் நிலைமை ஏற்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை. இப்போதே மத்திய அரசு வலுவில்லாமல் இருந்துகொண்டிருப்பது அவர்களுக்கே தெரியும். இந்த நிலையில், 'மத்திய அரசைக் கவிழ்க்க வேண்டும்' என்று நினைப்பவர்களுடன் நாங்களும் ஒத்துழைத்தால் நிலைமை என்னவாகும்?" என்று எச்சரித்தார் அண்ணா.

மேலும், இந்திய அரசாங்கத்தின் மொழிக் கொள்கை பிரிவினைக்கு வழி கோலும் என்றும், தாம் இனிமேலும் பிரிவினைக்கு ஆதரவாக இருக்கப்போவதில்லை என்றும் அறிவித்தார்:

> இந்திய அரசு மேற்கொள்கிற மொழிக் கொள்கை நாட்டுப் பிரிவினைக்கு வழிகோலும் என்பதை எடுத்துக் காட்டிக்கொண்டு இருக்கிறேனே தவிர, நான் இந்தப் பிரிவினையை ஆதரிப்பதாக இருந்தால், அது வரலாற்றுப் புத்தகத்தில் அச்சேறும்படி ஒரே வரியில் செய்யலாம். நான் இந்த மாமன்றத்தைக் கூட்டி, 'இன்று முதல் தமிழகம் தனி நாடாக ஆகிறது. தமிழ் வாழ்க' என்று சொல்லிவிட்டு வெளியேறலாம். அதிலிருந்து நான் அரசியல் வாழ்க்கையிலிருந்து அப்புறப்படுத்தப்படலாம். பொது வாழ்க்கையிலிருந்தும் வெளியேற்றப்படலாம். ஆனால், சரித்திரத்தில் என் பெயர் இடம்பெற்றுவிடும். ஆனால், அப்படிப்பட்ட கட்டத்தில் நாம் இல்லை... நான் பிரிவினை பிரசாரம் செய்த நேரத்தில் அது மக்கள் செவியில் விழக்கூடாது என்று நீங்கள் பலமான எதிர்பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தீர்கள். நான் பிரிவினையைப் பற்றி

விளக்கிக்கொண்டிருந்த நேரத்தில், நாளுக்கு நாள் எங்களுக்கு ஆதரவு பெருகிவந்தது. அதன் காரணமாக இந்தியப் பேரரசு இந்திய அரசியல் சட்டத்தையே திருத்தம் செய்தது. ஆனால், அறிவுபூர்வமான முறையில் மக்களை உங்கள் பக்கம் இழுக்கத் தவறிவிட்டீர்கள்!

'தொடர்பு மொழி' என்ற பிரச்னையில், "பொதுமக்களிடையே தொடர்பு என்கிறீர்களே, அது என்ன பொருளில்? புரியவில்லையே. 100-க்கு எத்தனை பேர் இங்கே திண்டாடுகிறார்கள்? எந்தத் தவிப்பு ஏற்பட்டு அவர்கள் யாரிடத்திலே மனு போட்டார்கள்? ஏதோ இங்கிருந்து அணி அணியாக அங்கே வருவதைப் போலவும், அவர்கள் எல்லாம் தொடர்பு மொழி இல்லாத காரணத்தால் திகைத்துக்கொண்டு இருக்கிறார்கள் என்ற முறையிலே கற்பனை செய்துகொண்டு இருக்கிறார்களே தவிர, வேறு ஒன்றும் இல்லை" என்று விளக்கினார். இன்னொரு சமயம், சட்டமன்றத்தில் பேசுகையில், "சுவிட்சர்லாந்திலே 5 மொழிகள் ஆட்சிமொழிகளாக இருக்கின்றன. இந்த ஐந்து மொழிகளில் எந்த மொழியையும் இணைப்பு மொழி என்று அவர்கள் வைத்திருக்கவில்லை. தென்னாப்பிரிக்காவில் 3 மொழிகள் ஆட்சிமொழிகள். ஆனால், இணைப்பு மொழி என்று அவர்கள் எதையும் ஏற்றுக்கொள்ளவில்லை" என்று சுட்டிக்காட்டினார். "நாம் இருக்கிற இடம் ஒரு நாடுதானா என்று நான் கேட்டவுடன், இவன் நாட்டுப் பிரிவினையைப் பற்றிச் சொல்கிறான் என்று யாரும் அச்சப்படத் தேவையில்லை. நாம் ஒரு நாட்டு உணர்ச்சிக்கு நம்மைப் பக்குவப்படுத்திக் கொண்டு வருகிறோம். ஆனால், ஒரு நாட்டு உணர்ச்சியை நாம் இன்னமும் பெற்றுவிடவில்லை" என்று பேசினார் அண்ணா. "இப்போது இருக்கிற ஒருமைப்பாடு ஏறக்குறைய நாமெல்லாம் ஒன்று அல்லவா என்ற அளவிலே இருக்கிறதே தவிர, நாம் அனைவரும் ஒன்று என்று உணரத்தக்க அளவுக்கு இன்னமும் பக்குவம் பெறவில்லை... இப்போதுகூட, வடக்கேயுள்ள பெருந்தலைவர்கள் பெயரால், தமிழகத்தில் மட்டுமல்ல, தென்னாட்டு மாநிலங்களிலே பூங்காக்களைப் பார்க்கிறோம், சதுக்கங்களைப் பார்க்கிறோம். அங்காடிகளைப் பார்க்கிறோம். படிப்பகங்களைப் பார்க்கிறோம். ஆனால், தென்னாட்டுப் பெரியவர்களின் பெயராலே வடக்கே ஒரு சதுக்கத்துக்குப் பெயர், ஓர் அங்காடிக்குப் பெயர் இல்லை என்பதைப் பார்க்கிறோம்" என்று சுட்டிக்காட்டினார் அண்ணா.

"இன்றைய தினம், 'இந்திப் பாடம் இனி இல்லை' என்று நான் தீர்மானத்தைப் படித்தபோது அதிலே எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை

என்னால்தான் உணர்ந்துகொள்ள முடியுமே தவிர, அதற்காகக் கஷ்டப்படாதவர்களால் உணர்ந்துகொள்ள முடியாது" என்று அண்ணா தெரிவித்தார். "எங்கள் கழகத்தின் தீர்மானம் - அப்போது தேசிய மொழிகள் பதினான்காக இருந்தன - இந்தியாவின் தேசிய மொழிகள் அத்தனையும் ஆட்சிமொழியாக ஆக்கப்பட வேண்டும். அப்படி ஆக்கப்படுகிற காலம் வரையில், ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சிமொழியாக நீடிக்கவேண்டும் என்பது எங்கள் கழகத்தின் திட்டம். அது நிறைவேறுகிற வரையில், நாங்கள் முழுத் திருப்தி அடைவோம் என்று சொல்வதற்கில்லை" என்றார். "இப்போது வந்திருக்கிற சட்டம், அது எனக்கு எப்படிப்படுகிறது என்றால், மழை பெய்கிறபோது குடை கிடைக்காவிட்டாலும் மேல் துணியை வைத்துக்கொண்டு பிடித்துக்கொள்வது போல, உடனடியாக இந்தி வந்துவிடாமல், ஆங்கிலத்தை வைத்துத் தடுக்கிறோம்" என்று கூறினார். "இந்திய அரசு இந்திக்கு மட்டும் சலுகை காட்டுகிற அந்தத் திட்டத்தை மாற்றி, எல்லா மொழிகளுக்கும் சம அந்தஸ்து கொடுத்து, எல்லா மொழிகளின் வளர்ச்சிக்கும் உரிய சலுகைகளைக் கொடுத்து வளரச் செய்வார்களானால், நாம் அந்த நிலைக்கு வரமுடியும். அதுவரை இந்த மொழிச் சட்டம் இந்தி வரும் வேகத்தைத் தடுக்கிறது. அதுவரையில் நாட்டு மக்களுக்கு ஓர் ஆதாயம் இருக்கிறது" என்றார் விளக்கமாக.

இதற்கு நாற்பதாண்டுகளுக்குப் பிறகு, இந்தி பேசாத தென்பகுதியில் இந்தி மெதுவாக ஏற்கப்பட்டுவருவது தெளிவாகிறது. இந்தி மொழி பற்றிய ஆணைகளும், இந்தி வெறியர்களின் உத்வேகமும் செய்யமுடியாததை இந்தித் திரைப்படங்களும், தொலைக்காட்சித் தொடர்களும் வெற்றிகரமாகச் செய்து வருகின்றன. இந்தித் திரைப்படங்களும், இந்திப் பாடல்களும் பரவியதன் காரணமாக, இந்தி பேசாதவர்களும்கூட சில இந்தி வார்த்தைகளைப் பயன்படுத்தும் நிலை இன்றைக்கு வந்துவிட்டது. இந்தி பேசப்படும் பகுதிகளில் வேலைக்கும், வர்த்தகத்துக்கும் முனைபவர்கள், இந்தியை நிச்சயம் படிக்கிறார்கள். அது அப்படித்தான் இருக்கவேண்டும். மாநில மொழிகளில் அரசுப் பணிக்கான தேர்வுகள் எழுதுவதால், முன்பு அஞ்சியது போல, தரமோ, செயல்பாடோ ஒன்றும் குறைந்து போய்விடவில்லை. அண்ணா மொழிப் பிரச்னைக்கு இயற்கையான ஒரு தீர்வு காண விரும்பினார். இப்போது பார்க்கையில் அவர் அதில் வெற்றியே பெற்றார் என்று கூறவேண்டும். நல்ல வேளையாக, இன்றைக்கு அவரும் அவருடைய தம்பிகளும் காரணமாக, இந்தியனாக ஒருவர் இருப்பதற்கு, 'இந்தி'யனாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை!

23

'தமிழ்நாடு' ஆகிறது மெட்ராஸ் ஸ்டேட்



ஜவுளி ஆலைகள் மூடல்

இருமொழிக் கொள்கை, மாணவர்களின் கலவரத்தை முடிவுக்குக் கொண்டுவந்தது. மொழிப் பிரச்னை தீர்ந்துவிட்டாலும், அரசு நிர்வாகம் ஜவுளி ஆலைகள் மூடல் என்ற அடுத்த பெரிய பிரச்னையை எதிர்கொள்ள நேர்ந்தது. அண்ணா ஆட்சியேற்றபோது நலிந்த நாலு ஆலைகள் மூடப்பட்டிருந்தன. "மூடப்பட்ட ஆலைகள் சம்பந்தமாக விசாரணை கமிட்டி அமைக்கப்பட்ட போது 21 மில்களாக இருந்தன. இப்போது மேலும் 6 மில்கள் மூடப்பட்டிருக்கின்றன" என்று சட்டசபையில், உறுப்பினர் பேசுமளவுக்கு நிலைமை இருந்தது. மற்ற தொழிற்சாலைகளும், ஆலைகளும்கூட கதவடைப்பால் பாதிக்கப்பட்டன. சென்னையின் தின இதழான 'தி ஹிந்து' கதவடைப்பால் வெளிவராமல் நின்றிருந்தது. நிலையான தொழிலாளர் கொள்கை இல்லாததாலேயே தொழிற்துறையில் அதிருப்தி நிலவி வருவதாக காங்கிரஸ் கூறியது.

ஜவுளி ஆலைகள் பிரச்னையை அண்ணா மனிதாபிமானத்தோடும், புத்திசாலித்தனத்தோடும் அணுகினார். மத்திய அரசிடமிருந்து நிவாரணம் கோரியிருந்த அவர், முதலாளிகளிடம் ஆலைகளைத் தொடர்ந்து நடத்தச் சொன்னார். மூடப்பட்டிருக்கிற ஆலைகள் மறுபடியும் திறக்கப்படுவதற்கு முழு முயற்சி எடுத்துக்கொள்வது; சில ஆலைகள் திறக்கமுடியாமல் போனால், வேலை இழந்தவர்களுக்கு - திறந்திருக்கிற வேறு ஆலைகளில் மாற்று வேலை கொடுக்க முயற்சி எடுத்துக்கொள்வது; திறந்திருக்கிற ஆலைகளில் வேலை கொடுக்க முடியாமல் போனால், வேறு ஏதாகிலும் தொழிலில் அவர்களை ஈடுபடுத்துவது என்று தீர்வுக்கு முனைந்தார். வேறு எதிலும் ஈடுபடுத்த முடியவில்லை என்றால், அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு ஆலை முதலாளிகள், ஆலைத் தொழிலாளர்கள், பொதுமக்கள், அரசு அனைவரும் சேர்ந்து நிதி திரட்டுவது என்று ஓர் ஒப்பந்தம் உருவாயிற்று. அண்ணாவின் நிர்வாகம், மாதம் ரூ.100 இடைக்கால நிவாரணமாக இரண்டு மாதங்களுக்கு வழங்கியது. "இந்த ஏற்பாட்டை அன்றிருந்த தொழிலமைச்சரும், தொழிலாளர் நல அமைச்சருமான மாதவன் எதிர்த்தார் என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. இளகிய மனமுடைய அண்ணாதுரை, ராமமூர்த்தியிடம் ஏமாந்து இந்த ஏற்பாட்டுக்கு இசைந்துவிட்டார் என்றும், மாநில சர்க்கார் இவ்வளவு நிவாரணத் தொகையைக் கொடுக்கும் பாரத்தை எப்படி, எவ்வளவு காலம் ஏற்கமுடியும் என்பதே அவருடைய வாதம்" என அண்ணாவின் பெருநோக்கைப் பதிவு செய்திருக்கிறார் ராமமூர்த்தி. பொருளாதார நிபுணர் டாக்டர் லோகநாதனை தலைவராகக் கொண்ட குழு பரிந்துரைத்தபடி வங்கிகள் கடன் கொடுக்க அரசு 'கேரண்டி' தர, ஒன்றரைக் கோடி ரூபாய் அளவுக்கு ஆலைகளுக்குப் பண உதவியும் தரப்பட்டது. "வங்கிகளிடம் கடன் பெற்ற மில்களில் சில மில்லின் நிர்வாகங்கள் பணத்தையும் ஏப்பம்விட்டு, மில்களையும் மூடிவிட்டுச் சென்றுவிட்டன" என்றும் வேதனையோடு கூறியிருக்கிறார்.

நிவாரண நடவடிக்கைகள் பலனளிக்காமல் போய், பிரச்னை தீவிரமடைய, நலிந்த ஆலைகளை மத்திய அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அண்ணா யோசனைத் தெரிவித்தார். இது தொடர்பாக மத்திய அமைச்சர் தினேஷ் சிங்கிடம் பேச்சுவார்த்தை நடத்திய போதெல்லாம், கம்யூனிஸ்ட்டு தலைவர்கள் ராமமூர்த்தி, எம்.கல்யாணசுந்தரத்தை உடன் அழைத்துப் போனார் அண்ணா. " 'நாங்கள் இப்படிப்பட்ட ஆலைகள் சரியான முறையில் இயங்கத் தனி மசோதா கொண்டு வந்திருக்கிறோம்' என்றார் அமைச்சர்", என அண்ணா கூறினார். எனினும், "மத்திய அரசுக்கு இதில்

குறுக்கிடுவதற்கு உரிமை இருக்கிறது. அவர்களுக்குத்தான் வலிமை இருக்கிறது. அவர்களுக்குத்தான் பொறுப்பு இருக்கிறது" என்ற அண்ணா, "எங்களுடைய பொறுமையான எண்ணத்தின் காரணமாக எல்லாவற்றையும் தீர்த்துவைக்க முடியும் என்பதில் முழு நம்பிக்கை கொண்டவனாக இருக்கிறேன். அந்த நம்பிக்கையோடுதான் கோவை ஆலைப் பிரச்னையையும் அணுகி வருகிறேன். அதற்கு மட்டும் மத்திய அரசு புதிதாக விதித்திருக்கும் எக்ஸைஸ் வரி விகிதத்தில் ஓரளவு தாராள மனப்பான்மையைக் காட்டியிருந்தால், நாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சியோடு சேர்த்து மத்திய சர்க்காரும் அந்த முயற்சியில் ஈடுபட்டு அதற்கு இணங்கியிருந்தால், அந்தப் பிரச்னை வெகுவிரைவில் தீர்க்கப்பட்டிருக்கும்" என்றும், "இந்த ஆலைப் பிரச்னையைப் பொறுத்தவரையில், மாநில அரசு எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிக்குத் தகுந்த அளவுக்கு மத்திய அரசின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன்" என்றும் மத்திய அரசை குறை கூறினார். இரண்டு பக்கத்தையும் அண்ணா நிர்வாகம் திருப்தி செய்ய முயன்றதில், பிரச்னையை மேலும் குழப்பிவிட்டது என்ற அபிப்ராயமும் இருக்கத்தான் செய்தது. மேலும், முடிவெடுப்பதில் அண்ணா தடுமாறுகிறார் என்றும் சிலருக்குப் பட்டது. அண்ணாவைப் பற்றி இது ஒன்றும் புதிய குற்றச்சாட்டல்லவே? எனினும் அண்ணா நிர்வாகத்தினுடைய தொழிலாளர் கொள்கையைப் பற்றிய பி.ராமமூர்த்தியின் கணிப்பே மிகச் சரியானது: "திரு. அண்ணாதுரை முதலமைச்சராக இருந்த காலத்தில் கேரளா, மேற்கு வங்க அரசுகள் போல இல்லாவிடினும், ஒரு பரந்த ஜனநாயகவாதியாகவே பணியாற்றினார். அவரிடம் பல தொழிலாளர்கள், விவசாயிகள் பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக நான் எடுத்துச் சென்றிருக்கிறேன். அவர் ஓரளவு தொழிலாளர்களுக்கு நியாயம் வழங்கக்கூடிய வகையில்தான் நடந்துகொண்டிருக்கிறார். தன்னுடைய கட்சி தொழிற்சங்க இயக்கத்தில் ஈடுபட வேண்டாம் என்றும், அந்த இயக்கத்தை கம்யூனிஸ்ட்டுகளிடமே விட்டு வைக்குமாறும் கேட்டுக்கொண்டார்."

பொதுவாகவே அண்ணா ஏழை - எளியவர்களை ஆதரித்தார். புதுமையையும் அறிவியலையும் ஆதரிக்கும் முற்போக்காளராக இருந்தாலும், சில தருணங்களில் அவர் பழைமைவாதியாக இருக்க விரும்பினார். உதாரணமாக, "வேலைவாய்ப்பைத் தேடி அலை அலையாகத் தொழிலாளர்கள் அலைந்துகொண்டிருக்கிற நாட்டில், இந்தக் கட்டத்தில், கம்ப்யூட்டர் தேவையில்லை என்பதுதான் இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்பிருந்தே, நான் சார்ந்திருக்கும்

கழகத்தின் கருத்தாகும்" என்றார். இன்றைய கம்ப்யூட்டர் யுகத்தில் அவர் பழைமைவாதியாகத் தோன்றினாலும், அந்த அணுகுமுறையின் பின்னால் இருந்த சிந்தனை அவரை மனிதாபிமானியாகக் காட்டியது. அதேபோல், ஒரு லட்சிய உணர்வுடன், அவர் மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்தினார். 'குடிப்பவனுக்கும் குடிகாரனுக்கும் உள்ள வேறுபாட்டை மக்கள் புரிந்துகொள்ளாதவரை, மதுவிலக்கு நீக்கப்படமாட்டாது' என்றார். அவருக்குப் பின்னர் வந்த தம்பிகளும், தங்கைகளும் ஆகட்டும், குடிமக்களாகட்டும் அவர் அளவுக்கு லட்சிய பிடிப்போடு இல்லை.

அண்ணன்

முதலமைச்சரான பின்னும் ஆயிரக்கணக்கான தனது தம்பி - தங்கைகளின் குடும்பங்களுக்கு தலைவனாகவே அண்ணா தொடர்ந்தார். அவரால் மட்டுமே அண்ணனாக முடியும் என அவர்கள் நம்பினர். இதை எம்.ஜி.ஆர். விவரிக்கும் நிகழ்ச்சியிலிருந்து அறியலாம். அப்போது அவர் சிறுசேமிப்புத்துறை துணை இயக்குநராக, அமைச்சருக்குரிய அந்தஸ்த்துடன் இருந்தார்:

> பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்த போது சிறுசேமிப்பு விஷயமாகப் பார்க்க ஒருமுறை சென்றிருந்தேன். அன்று அவருக்கு உடல்நலம் சரியில்லை. ஏறத்தாழ 3 - 4 நாட்களாக உறக்கமின்றி கோப்புகளைப் பார்த்துச் சோர்வுற்றிருந்தார்கள். அதோடுதான் என்னை அழைத்திருந்தார்கள், சிறுசேமிப்பைப் பற்றிப் பேச. நான் அவரைப் பார்த்தும் வேதனையோடு கேட்டேன்: 'ஓய்வு எடுத்துக்கொள்ளக் கூடாதா? இரண்டு மூன்று நாட்களாவது ஓய்வு எடுத்துப் பிறகு வேலைகளைக் கவனிக்கக் கூடாதா?' அவருக்கே உள்ள தனித்தன்மை வாய்ந்த சிரிப்போடு பதில் சொன்னார்கள்: 'என்ன செய்றது? முதலமைச்சர் என்கிற முறையில் தமிழகம் முழுவதிலுமுள்ள பிரச்னைகளையும் கவனிக்கணும். அதே நேரத்தில், கட்சிக்காரன் என்ற நிலையில் கட்சிப் பிரச்னைகளையும் தோழர்களின் தனிப்பட்ட பிரச்னைகளையும் கவனித்தாக வேண்டும். உங்களுக்குத் தெரியுது, நேரில் என் நிலையைப் பார்க்கறீங்க. இருநூறு மைல்களுக்கப்பாலிருந்து வந்த ஒரு தோழரை நான் எப்படிக் கவனிக்காமலிருக்க இயலும்? கட்சிப் பொதுச்செயலாளர் என்ற முறையில் மட்டுமா இப்போது என்னை வந்து பார்க்கிறார்கள்? அவர்களுக்குப் பொது வாழ்விலும், தனிப்பட்ட

வாழ்விலும் ஏற்படுகின்ற அனைத்துத் தொல்லைகளுக்கும் என்னிடமிருந்து பாதுகாப்பு எதிர்பார்க்கிறார்கள். இதை எப்படி ஒதுக்கிவிட இயலும்?' 'இதோ பாருங்கள்...' என்று ஒரு கடிதத்தைக் காண்பித்தார்கள். அது கட்சித் தோழர் ஒருவரால் எழுதப்பட்டதாகும். அந்தத் தோழருக்கும் அவருடைய வாழ்க்கைத் துணைவிக்கும் மனத்தாங்கல். அதைத் தீர்த்துவைக்க வேண்டும். அதைப் படித்ததும் அவரைப் பார்த்தேன். அதிகமாகச் சிரித்தவாறே சொன்னார்: 'நான் தலைமைச் செயலகத்துக்கு மாணவர்கள் சம்பந்தப்பட்ட பிரச்னைகளைக் கவனிக்க உடன் செல்ல வேண்டும். ஆனால் இந்தக் கடிதத்தை இங்கிருந்தேதான் அனுப்பியிருக்கிறார். நான் அவருடைய பார்வையில் படாமல் வெளியே போக இயலாது'.

'ஏன் அண்ணா, நமது தலைவர்கள் யாரிடமாவது இப்படிப்பட்ட பிரச்னைகளைக் கவனிக்குமாறு சொல்லக் கூடாதா?' என்று கேட்டேன். 'நமது தலைவர்கள் நிச்சயம் கவனிப்பார்கள். உதவியும் செய்வார்கள். ஆனால் அந்தத் தோழரின் மனம் ஒப்ப வேண்டுமே? 'அண்ணா கவனித்திருந்தால் சரியாகி யிருக்கும். அவர்தான் என்னைக் கவனிக்கவில்லையே' என்று வேதனைப்படுவாரே! அதற்கென்ன செய்வது?' என்றார். 'இப்ப என்னண்ணா செய்யப் போறீங்க?' என்று கேட்டேன். 'அவரையும் கீழே போய் ஆறுதல் சொல்லி, சமாதானப் படுத்திட்டுத்தான் போகணும்...' அனுதாபத்தோடு அவரைப் பார்த்தேன். மீண்டும் சிரித்தவாறே துண்டைத் தோளில் போட்டுக் கொண்டு புறப்பட்டார். கீழே போனோம்.

அந்த நண்பர் தனது வாழ்க்கைத் துணைவியோடு காத்திருந்தார். அண்ணா அவர்களைப் பார்த்ததும், வேகமாக முன்வந்தார். அண்ணா சிரித்தவாறே, 'என்னய்யா... நலமா... எங்கே அவங்க?' என்றதும் அந்த அம்மையார் முன்வந்தார்கள். 'அடடே! ஜோடியாவே வந்துட்டீங்களே! இனிமே என்ன பிரச்னை? தனித்தனியா வராமெ சேர்ந்தாப்போலே வந்த பிறகு நான் என்ன பேசப் போறேன்! நீங்களே பேசிக்கிட்டுத்தானே ஒண்ணா வந்திருக்கீங்க! சரி, நல்ல மாதிரியா முடிஞ்சுதில்லே... பின்னே என்ன...? வீட்டிலே மாமனார் - மாமியார் எல்லோரும்

நல்லாருக்காங்களா?' இந்தக் கேள்வியை இருவரிடமும் கேட்டார். அண்ணாவின் பக்குவம் நிறைந்த கேள்வி என்னைச் சிந்திக்கச் செய்தது. இரு பெற்றோர்களின் நலனைப் பற்றியும் அக்கறையோடு பதில் சொல்வார்களானால், அதிலிருந்தே நாம் யூகித்துக் கொள்வோம், அந்த இரு குடும்பத்தாருக்குள் எந்த வேறுபாடும் இல்லை என்பதை.

அண்ணாவின் குறும்புத்தனமான சிரிப்புக் கலந்த பேச்சு அந்தத் தம்பதியையும் சிரிக்க வைத்துவிட்டது.

அந்த அம்மாள் வெட்கத்துடன் தலை குனிந்தார்கள். கணவரிடம் கேட்டார், 'என்னைக்கு ஊருக்குப் போறீங்க?'

'அண்ணாவைப் பார்க்கணும்னு வந்தோம். அண்ணா சொன்னாப் புறப்பட்டுடுவோம்...'

'சரி ரொம்ப நாள் இங்கேயே தங்கி வீணா பணத்தை செலவழிக்காதீங்க. சென்னையை இவங்க விரும்பினா சுத்திக் காண்பிச்சிட்டு சீக்கிரமா ஊருக்குப் போய்க் கடிதம் போடுங்க' என்று சொல்லிவிட்டு, மற்ற பலருக்கும் ஒவ்வொரு விதமாகப் பதில் சொல்லியவாறே புறப்பட்டுப் போனார்கள்.

பேருந்து ஊழியர் – மாணவர் மோதல்

1968-ல் அண்ணாவின் நிர்வாகம் தன் அடுத்த, எதிர்பாராத பெரும் சவாலான அரசு போக்குவரத்துத்துறை தொழிலாளர்களுக்கும் - மாணவர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலைச் சந்திக்க நேர்ந்தது. 1968 மார்ச் 26 அன்று, அரசுப் பேருந்தில் பயணம் செய்த சட்டக் கல்லூரி மாணவர்களுக்கும் - நடத்துனர், ஓட்டுநருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டதால், சட்டக்கல்லூரி விடுதிக்குள் பேருந்தைத் தள்ளிச் சென்று மாணவர்கள் வைத்துக் கொண்டனர். ஒரு நடத்துனரும் ஓட்டுநரும் தாக்குதலுக்கு ஆளாகி, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதை அறிந்த பேருந்து ஓட்டுநர்களும் நடத்துனர்களும் பேருந்துகளை ஆங்காங்கு விட்டுவிட்டு, தாக்குதலை விசாரிக்க வேண்டுமென்று ஊர்வலம் சென்றனர். மீண்டும் மாணவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் கைகலப்பு ஏற்பட்டது.

தாக்குதலுக்கு ஆளான தொழிலாளர்களில் ஒருவர், மருத்துவமனையில் இறந்துவிட சட்டக்கல்லூரி மாணவர் விடுதிக்கு அருகில் தொழிலாளர்கள் திரண்டு விட்டனர். ஐ.ஜி.யும், கமிஷனரும் அமைதியை நிலைநாட்ட முயன்றும், நிமிடத்துக்கு

நிமிடம் நிலைமை மோசமாகிக்கொண்டு வந்தது. விடியற்காலை 3 மணி அளவில், கலைஞரும், அமைச்சர்கள் முத்துசாமியும், கோவிந்தசாமியும் அங்கு சென்று, "விசாரணை நடத்தப்படும், நீதி நிலைநாட்டப்படும், குற்றம் இழைத்தவர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என்று தொழிலாளர்களிடம் கூறியும், தொழிலாளர்கள் கலைந்து செல்ல மறுத்ததுடன் தாக்கிய மாணவர்களை உடனடியாகத் தண்டிக்கவேண்டும் என்று வலியுறுத்தினர். இதற்கு இடையில் இடதுசாரி கம்யூனிஸ்ட்டு கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் கோதண்டராமனும் கோவிந்தராஜனும் முதலமைச்சர் கேட்டுக்கொண்டதற்காக தொழிலாளர்களைக் கலைந்து செல்லும்படி சொல்ல, அவர்களின் வேண்டுகோளை தொழிலாளர்கள் ஏற்கவில்லை. ஆகவே இந்த சம்பவம் குறித்து நீதி விசாரணை நடத்த அரசு முடிவு செய்தது.

சட்டக்கல்லூரி விடுதிக்கு வெளியே குழுமியிருந்த 2,000 - 3,000 பேர் கொண்ட கும்பல் மீது போலீஸார் தடியடி நடத்த வேண்டியிருந்தது. எனினும் மருத்துவக் கல்லூரி விடுதியில் ஒரு கும்பல் புகுந்து தாக்குதல் நடத்தியது. சென்னை, அச்சத்தின் பிடியில் இருப்பதை அண்ணாவே ஒப்புக்கொண்டார். எனினும் "இந்த விசாரணையின் மூலம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை சரியாக எடுக்கவில்லை என்று நிரூபிக்கப்படுமானால், இந்த அரசு பரிகாரம் தேடுவதற்குமுன், மக்களிடம் மன்னிப்புக் கேட்பதற்கு சிறிதும் தயங்காது" என்று, தான் எடுத்திருந்த நடவடிக்கைகளின் மேலிருந்த நம்பிக்கையால் அண்ணா அறிவித்தார்.

இதற்கிடையில் எதிர்க்கட்சியினர் சிலர் அண்ணாவின் ராஜினாமாவைக் கோர, "நாங்கள் ஆளும்போது நீங்கள் ராஜினாமா செய்யச் சொன்னீர்களே, அதனாலே இப்போது நாங்கள் சொல்கிறோம்" என்றார்கள். "நாங்கள் அப்போது கொஞ்சம் அனுபவம் இல்லாததால் அப்படிச் சொல்லியிருக்கலாம். இருபது வருடம் ஆட்சியிலே இருந்து அனுபவம் பெற்றவர்கள், நீங்களும் அதையே பின்பற்ற வேண்டும் என்று ஒன்றும் இல்லை" என வாதிட்டார் அண்ணா. அதுபோலவே "ஒரு தவறான கருத்து நாட்டில் பரவும் நிலை ஏற்பட்டிருக்கிறது. மாணவர்கள் மீது எனக்கு ஏதோ அருவருப்பு, பகை ஏற்பட்டு, அவர்கள் தாக்கப்பட்டதைப் பார்த்துக்கொண்டிருந்தேன் என்றும், எங்கள் சார்பில் போலீஸ் பார்த்துக்கொண்டிருந்தது என்றும் சென்னை நகரத்திலும், வெளியிலும் பேசப்படுகிறது. அதைக் கேட்பதற்கு நான் மிகுந்த வேதனைப்படுகிறேன்" என்றும் தெரிவித்தார். "மாணவர்கள் என் விஷயத்தில் அருவருப்போ, ஐய்யப்பாடோ, வெறுப்போ கொள்வதை நான் வாழ்க்கையில் பெரிய களங்கமாகக்

கொள்வேன். முப்பந்தைந்து ஆண்டுகளாக அவர்களுடைய நல்லெண்ணத்தையும், அன்பையும் பெற்றுக்கொண்டு வந்திருப்பவன் நான். கேவலம், என்னுடைய அறிவீனத்தின் காரணமாக அவர்களுடைய நல்லுணர்ச்சியை இழந்துவிட்டேன் என்றோ, அன்பை இழந்துவிட்டேன் என்றோ நீங்கள் கருதினால், அது தவறு என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்" என்ற அண்ணா, "ராஜாராம் நாயுடு (காங்கிரஸ்) முன்னால் பேசும்போது, முதலமைச்சருக்குக் கொஞ்சம் இளகிய மனது, கொஞ்சம் இளகிய மனதென்ன, ரொம்பவும் இளகிய மனது என்று சொல்லியிருக்கிறார்கள். அது ஒரு குற்றமானால் நான் அந்தக் குற்றத்தை ஏற்றுக்கொள்கிறேன். அவர்கள் எடுத்துச் சொல்வதிலிருந்து அரசு கண்டிப்பாக நடந்துகொள்ள வேண்டுமென்பதில் நான் தவறிழைக்கமாட்டேன்" என்று உறுதியளித்தார். "ஒன்பது இடத்தில் துப்பாக்கி பிரயோகமா? ஐந்து மாதம் ஆகவில்லை அதற்குள் இத்தனை சாவுகளா? என்று செய்திகள் வருகின்றன. எதிர்காலம் இல்லை என்பதற்காகக் கண்டிப்பாக இருக்கத் தவறுகிறோம் என்று எண்ணிக்கொண்டு உறுப்பினர்கள் சொன்னார்கள். அப்படி எதுவுமில்லை" என்று அண்ணா தெளிவுபடுத்தினார்.

மத்திய – மாநில உறவுகள்

இது போலவே, தனது தமிழின உணர்வு, மாநில உரிமைகள் பற்றிய அழுத்தமான நம்பிக்கை ஒருபக்கம் இருந்தபோதும், இந்தியா இலங்கை சம்பந்தப்பட்ட பிரச்னைகளில் அண்ணா அரசியல் முதிர்ச்சியைக் காண்பித்தார். "இதுகுறித்து அறிக்கை ஒன்று இந்திய அரசுக்கு அனுப்பப்படுகிறது. இரு நாடுகளின் நலன் கருதி இதை மேற்கொண்டு இங்கு விவாதிக்காமல் இருப்பது நல்லது" என்று சட்டமன்றத்தில் நாசுக்காக பதிலளித்தார்.

மத்திய அரசிடம் அதிகாரங்கள் குவிந்து கிடக்கின்றன என அண்ணா கருதினார். மார்ச் 21, 1967-ல் இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும்போது,

> நேற்றைய செய்தித்தாளில் 7 கோடி ரூபாய்க்குத் துண்டு விழுகிற நமது மாநில பட்ஜெட் பற்றிய செய்தி வெளியாகியிருக்கிறபோது, அதன் மறு பக்கத்திலேயே மத்திய சர்க்கார் நிதி மந்திரி 350 கோடி ரூபாய்க்குத் துண்டு விழும் பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்கும் செய்தியும் வந்திருக்கிறது. ஆகையால், இந்தத் துண்டுக்கும் இன்றைக்கு எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய நீங்கள் (காங்கிரஸ்) தான் காரணம். மாநிலங்களுக்கு வழங்கப்படும்

> மத்திய உதவியை வெட்டுவதன் மூலம், மத்திய வரவு - செலவுத் திட்டத்தில் பற்றாக்குறை நிதி நிலையைக் குறைந்த அளவில் வைத்திருக்க முற்படுவதும், நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப வேலைத் திட்டங்களை மாற்றியமைக்க வேண்டிய கடினமான பணி முழுவதையும் மாநிலங்கள் மீதே சுமத்துவதும் சரியல்ல.

என்றும் "மாநில அரசாங்கங்களின் நிதி வசதிகள், மத்திய அரசாங்க நிதி வசதிகள் உட்பட, நாட்டின் நிதி வசதிகளை மத்திய அரசாங்கமும் திட்ட கமிஷனும் மொத்தமாக எடுத்துக்கொண்டு, அவற்றின் முழுப் பலன்களையும் அடையும் வண்ணம், மத்திய திட்டத்துக்கும் மாநில திட்டத்துக்கும் இடையே அவற்றை மேலும் நியாயமாக எவ்வாறு பகிர்ந்தளிக்க முடியும் என்பதை ஆராய வேண்டும்" என்றும் அவர் கேட்டுக்கொண்டார். "திட்டத்தின் கட்டுக்கோப்புக்குள், உண்மை நிலையை அடிப்படையாகக் கொண்டு, மாநிலங்களுக்கு அதிகமாக நிதி வசதிகளை வழங்குவதன் மூலமாகவே, மாநில அரசாங்கங்கள் ரிசர்வ் வங்கியிலிருந்து அதிகக் கடன் வாங்கும் சிக்கலுக்குத் தீர்வு காணமுடியும்" என்ற யோசனையை முன்வைத்தார்.

ஒரு முதலமைச்சராக, மத்திய - மாநில உறவுகளில் அவர் தொடர்ந்து ஒரே நிலையை வகித்தார். அமைச்சர்களின் சொத்து விவரங்களைத் தெரிவிக்க வேண்டியது குறித்து, மத்திய அரசு ஓர் ஒழுங்குமுறையை (கோட் ஆஃப் காண்டக்ட்) வகுத்தது. முதலமைச்சர் மீது புகார் வந்தால், முதலமைச்சரையும் மற்ற அமைச்சர்களையும் சேர்த்து, இந்திய பிரதம மந்திரியும், உள்துறை மந்திரியும் விசாரித்து கண்காணித்துக்கொள்ள வேண்டும் என்றது விதி. "இது ஃபெடரல் ஸ்ட்ரக்சருக்கே - கூட்டாட்சி சமத்துவ தத்துவத்துக்கே - மாறானது என்று நாங்கள் கருதுகிறோம்" என்று அண்ணா அந்த விதியை மறுதலித்தார்.

தான் முன்பு கேட்ட திராவிட நாட்டைத்தான் போராடிப் பெற, சுற்றி வளைத்துக் கொண்டிருப்பதாகச் சொன்ன குற்றச்சாட்டை அண்ணா "அது தவறு" என்று மறுத்தார். திராவிடநாட்டுக்கான காரணங்கள் இன்னும் அப்படியேதான் உள்ளன என்றார்:

> நான் திராவிட நாடு கோரிக்கையை விட்டுவிட்டேன். ஆனால் திராவிட நாடு கேட்பதற்கு என்னென்ன காரணங்கள் இருந்தனவோ, அவற்றில் ஒன்றைக்கூட விட்டுவிடவில்லை. அதில் ஒளிவு மறைவு இல்லை. அதைச் சொல்லிக் கொள்வதற்கும் வெட்கப்படுவதற்கும்

ஒன்றும் இல்லை. திராவிட நாடு என்று தனியாக இருந்தால் நாம் தொழில் வளர்ச்சி பெறமுடியும் என்று சொன்னோம். திராவிட நாடு வேண்டுமென்று கேட்டதற்குக் காரணமே, இங்கே தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டும். பிராந்திய சமநிலை ஏற்படுவதற்குப் புதுப்புதுத் தொழில்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதுதான். அதை நாங்கள் விட்டுவிடவில்லை. மத்திய சர்க்காரிடம் அதிகாரங்கள் குவியலாக இருக்கக்கூடாது என்பதற்காகக் கேட்டோம்; அதை விட்டுவிடவில்லை. மாநில சர்க்கார் பல அதிகாரங்களை பல துறைகளிலும் பெற வேண்டும் என்பதற்காகக் கேட்டோம். அதை விட்டுவிடவில்லை. அடுத்து, மொழி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக திராவிட நாடு கேட்டோம்; அதை விட்டுவிடவில்லை. மாநில சர்க்கார் பல அதிகாரங்களைப் பல துறைகளிலும் பெற வேண்டும் என்பதற்காகக் கேட்டோம். அதை நாங்கள் விட்டுவிடவில்லை. பண்பாடு காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகக் கேட்டோம். அதை நாங்கள் விட்டுவிடவில்லை. ஆகவே, திராவிட நாடு நாங்கள் கேட்டதற்கான காரணங்களில் ஒன்றைக்கூட விட்டுவிடவில்லை. அதற்குக் காரணம் என்ன வென்றால், அவை நியாயமான காரணங்கள். மனமார்ந்து ஏற்றுக்கொண்ட காரணங்கள். நாங்கள் திராவிட நாட்டை விட்டுவிட்டோம். 'திராவிட நாட்டைத்தான் விட்டுவிட்டீர்களே, ஏன் இந்தியை எதிர்க்கிறீர்கள்?' என்று கேட்டால் ஒப்புக்கொள்ள முடியுமா? இந்த எதிர்ப்பை விட்டுவிட மாட்டோம். 'திராவிட நாட்டை விட்டுவிட்டதால், எங்களுக்கு சேலம் இரும்பாலை வேண்டாம், ஜாம்ஷெட்பூரிலேயே வையுங்கள்' என்று சொல்லிவிடுவோமா? நிச்சயமாகச் சொல்ல மாட்டோம். 'தூத்துக்குடி வேண்டாம். இன்னொரு காண்ட்லா கட்டுங்கள்' என்று சொல்வோமா? நிச்சயமாகச் சொல்ல மாட்டோம். திராவிட நாடு கிடைத்தால் என்ன என்ன பெறுவோமோ அவை ஒவ்வொன்றையும் இந்திய யூனியனின் உள்ளே இருந்தே பெறலாம், பெற வேண்டும், பெற முடியும் என்ற நம்பிக்கையிலேதான் இருக்கிறோமே தவிர, திராவிட நாட்டுக்கான

காரணங்கள் ஒன்றையும் நாங்கள் விட்டுவிடவில்லை.

1968, ஜூலை 28 அன்று சென்னையில் ம.பொ.சி.யின் தமிழரசுக் கழகம் நடத்திய மாநில சுயாட்சி மாநாட்டில் நிகழ்த்திய உரையில்,

> மாநில சுயாட்சி வேண்டும் என்று நாம் கேட்கிறபோது, இப்படிப் பேசுவது மத்திய அரசைக் குலைப்பதாகும்; நாட்டுக்குப் பெருத்த ஆபத்து வரும் என்று கூறுகின்றனர். மக்களின் சுக - துக்கத்தோடு பின்னிப் பிணைந்திருப்பது மாநில அரசுதானே தவிர, மத்திய அரசு அல்ல. மாநில அரசினர்தான் மக்களின் குறைகளை நேருக்கு நேர் சந்திக்க வேண்டியவர்கள். மத்திய அரசின் வலிவு அச்சத்தைத் தர, கலக்கத்தைத் தர என்றால், நமது கூட்டுச் சக்தியின் மூலம், நம்மில் ஒவ்வொருவருடைய வலுவையும் கொண்டு அந்த அக்ரம வலிவைச் சிறுச் சிறுகக் குறைப்பதுதான் எங்கள் கடமையாக இருக்கும். மத்திய அரசு பலமாக இருந்தது குப்த சாம்ராஜ்யத்தில். மொகலாய சாம்ராஜ்யத்தில். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில்! ஆனால் இன்று அந்த சாம்ராஜ்யங்கள் எங்கே? நாட்டுப் பாதுகாப்பு தவிர, மற்ற அதிகாரங்கள் அனைத்தையும் பற்றி சிந்திப்போம். மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரங்களை மாநிலங்கள் எடுத்துக் கொள்ளட்டும். பின்னர் மாநிலங்கள் விரும்பித் தருகின்ற அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக் கொள்ளட்டும்.

இதுவே அண்ணாவின் மகோன்னத கூட்டாட்சித் தத்துவம்: சொல்லிலும் செயலிலும், மாநிலத்தின் முன்னுரிமைகளிலும் உரிமைகளிலும் மத்திய அரசு கை வைப்பதை அவர் இறுதிவரை கடுமையாக எதிர்த்தார்.

சட்டமன்றத்தில் பேசுகையில், "நாங்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு சிலவற்றை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று எழுதியிருக்கிறோம். நமக்கே முழுக்க முழுக்க உரிமையாக இருக்கிற பல இலாக்காக்களில் அவர்கள் ஈடுபடுகிறார்கள். மத்திய சர்க்காருடைய மேற்பார்வையில், நம்முடைய மாநிலத்தில் எருமை வளர்க்கப் பண்ணை வைக்கப் போகிறார்கள். அதற்காக நான்கு நாட்களாக இடம் பார்க்கிறேன். இவர்கள் மேற்பார்வையில் எருமைப் பண்ணை. நம்மிடம் அந்த அளவுக்குக்கூட நம்பிக்கை இல்லை. எருமைகளை வளர்க்கும் பணத்தை மட்டும் நம்மிடம் கொடுக்கக் கூடாதா? நம்மிடம் அருமையான இன்ஜினீயரிங்

கல்லூரி இருக்கிறது. நாம் வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி, தரமான ஆசிரியருக்கு 500 ரூபாய் சம்பளம் கொடுத்து 'இரு' என்று இருக்கும்போது, அவர்கள் கல்லூரிகளில் 1200 ரூபாய் சம்பளம் என்றவுடன், இவர்களுக்குக் கோபம் வருகிறது. இதற்குத்தான் பயன்படுகிறதே தவிர, எதற்கு இந்த இரட்டிப்பு வேலை? இதையெல்லாம் குறைத்தால், நிச்சயமாக மாநிலத்துக்குப் பங்கிடும் தொகை அதிகமாகும்" என்று வாதம் செய்தார். "இன்னும் கொஞ்சநாளில், அவர்கள் செய்யலாம் என்று கருதினால், இங்கே ஒரு தொழில் அமைச்சர் இருக்கிறார்; மேலும் ராஜ்யங்களின் மத்திய தொழில் அமைச்சர் என்று ஒருவரை ஏற்படுத்தி இங்கே அமரச் செய்வார்கள். இதையெல்லாம் புத்திசாலித்தனமாகச் செய்கிறார்கள் என்று அர்த்தம் இல்லை" என்று கேலியாகப் பேசினார் அண்ணா. "ஒவ்வொரு துறைக்கும் கவனித்தால், மத்திய சர்க்கார் பக்கத்துக்குப் பக்கம் வந்து நிற்பதன் பொருள் என்ன? அதில் கிடைக்கும் பலன் என்ன? அதனால் நமக்கு வரக்கூடிய வாய்ப்பு என்ன?" என்ற கேள்விகளை முன் வைத்தார்.

1968-ல் அண்ணா அமெரிக்காவுக்குச் சென்றிருந்தபோது, "கல்வி ஒரு மாநில விஷயம். டெல்லிக்கு அதில் உரிமை ஏதும் கிடையாது" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினார். 1976-ம் ஆண்டு முதலே கல்வி பொதுப் பட்டியலுக்குச் சென்றுவிட்டது. இதை மத்திய - மாநில உறவுகள் பற்றிய ஆய்வு செய்த சர்க்காரியா கமிஷன் அப்படியே இருக்க விட்டுவிட்டபோதும், மத்திய அரசு பொதுப் பட்டியலில் அதிக ஆளுமை செய்வதைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றது குறிப்பிடத்தக்கது. 1968, மே மாதத்தில் அண்ணா அப்படி ஓர் ஆய்வு கமிஷனைக் கோரியிருந்தார். "கல்வி என்பது மாநில அரசுக்குச் சொந்தமானது. அதிலே எந்தவிதமான மாறுதலும் செய்ய இந்த அரசுக்கு உரிமை இருக்கிறது. அப்படிச் செய்கிற நேரத்தில் மத்திய அரசு குறுக்கிடக்கூடாது என்பது மட்டுமல்ல, இந்தத் துறையிலே கூட அடிக்கடி அவர்கள் ஆல் இண்டியா சர்வீஸ், ஆல் இண்டியா எஜுகேஷனல் சர்வீஸ், ஆல் இண்டியா இன்ஜினீயரிங் சர்வீஸ், ஆல் இண்டியா மெடிக்கல் சர்வீஸ், ஆல் இண்டியா ஃபாரஸ்ட் சர்வீஸ் என்று வந்த நேரத்திலெல்லாம், முன்பு இருந்த காங்கிரஸ் அரசு அவற்றை ஏற்றுக் கொண்டிருக்கிறது. நாங்கள் வந்தபிறகு அப்படிப்பட்ட ஆல் இண்டியா சர்வீஸ்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்திருக்கிறோம். ஆகையால் இந்த மாநில அரசின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்பதில் நாங்கள் மிகத் தீவிரமாக இருக்கிறோம்" என்று விளக்கினார். தனது அமெரிக்க பயணத்தின்போது அண்ணா சொன்னார்:

டெல்லி, ஐந்தாண்டுத் திட்டங்களை அகில இந்தியாவுக்குமாகத் தீட்டித் தருகிறது. அதைவிட மொத்தப் பணத்தை எல்லா மாநிலங்களுக்குமாக ஒரு கணக்குப்படி பங்கிட்டுக் கொடுத்தால், நமக்கு வேண்டியதை நாம் விரைவில் செய்ய முடியும்.

மாநிலங்களுக்கு இருக்கும் தடைகளை இந்திரா காந்தி உணராமல் இல்லை. ஆனால் அவர் ஒன்றும் செய்ய முடிவதில்லை. ஏனெனில், அப்படி ஓர் அரசியல் அமைப்பு நாட்டில் புழக்கத்தில் இருக்கிறது. அதை மாற்ற வேண்டும்.

பாருங்கள், சென்னையில் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோதே, சேலத்துக்கு ஓர் உருக்காலை கேட்டார்கள். டெல்லி அரசாங்கம் பணமில்லை என்று தட்டிக் கழித்தது. பின் சென்னை அரசாங்கம் 'நாங்களே பணம் போட்டுத் தொடங்கிக் கொள்கிறோம். லைசன்ஸ் மட்டும் தாருங்கள்' என்றார்கள். பதிலில்லை. நாங்கள் வந்த பின்னும் அதுபற்றி விரிவாக எழுதினோம். டெல்லியிலிருந்து பதிலில்லை. கடந்த நான்கு ஆண்டுகளாக அந்த ஃபைல்கள் டெல்லியில் தூங்குகின்றன.

சென்னைக்குத் 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டல்

1967 ஜூலை மாதம், ஆட்சிக்கட்டிலேறிய சில மாதங்களிலேயே, 'தமிழ்நாடு அரசு - தலைமைச் செயலகம்' என்ற நியான் ஒளியில் பெயர்ப்பலகை, தமிழில் அமைத்தது. சமஸ்கிருதத்திலிருந்த 'சத்யமேவ ஜயதே'வுக்குப் பதில் 'வாய்மையே வெல்லும்' என்று தமிழில் வடித்து அரசு தனது தமிழ்ப்பற்றை வெளிப்படுத்தியது.

அண்ணாவின் இதயத்துக்குப் பிடித்த இன்னொன்றும் அதே மாதம் நிறைவேற்றப்பட்டது. ஜூலை 18 அன்று, தனது நீண்டநாள் கனவான மதராஸ் ஸ்டேட் என்பதை தமிழ்நாடு என்று பெயரிடும் தீர்மானம் ஒன்றை அவரது அரசு கொணர்ந்தது. "இந்த அவையிலே இன்றைய தினம் உறுப்பினர்களாக இருக்கின்ற ஒவ்வொருவருடைய வாழ்நாளிலும் மிகுந்த மகிழ்ச்சியையும், நல்ல எழுச்சியையும் தரத்தக்க ஒரு திருநாள் ஆகும்" என்று குறிப்பிட்டார் அண்ணா. அவர் 'தமிழ்நாடு' என்று மூன்று முறை சொன்னதும், உறுப்பினர்கள் 'வாழ்க' என மும்முறை வாழ்த்தொலி எழுப்பினார்கள். அந்தத் தருணம் உணர்ச்சிகரமானதாக இருந்தது. " 'தமிழ்நாடு' என்ற இந்தப் பெயர் நமக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக, விருதுநகரைச் சார்ந்த சங்கரலிங்க நாடார் என்ற முதியவர் பல

நாட்கள் உண்ணாவிரதம் இருந்து, அணு அணுவாகத் தம்முடைய உயிரைச் சிதைத்துக்கொண்டு இறந்துவிட்டார்கள்" என்று பெயர் மாற்றத்துக்காக நடந்த தியாகத்தை அண்ணா நினைவுகூர்ந்தார். "மதிப்பு மிக்க திரு. ம.பொ.சி அவர்கள் இதிலே மிகுந்த மன எழுச்சி பெற்றது இயற்கையாகும்" என்று ம.பொ.சி.யின் பங்களிப்பையும் பெருந்தன்மையுடன் பதிவு செய்தார். 1961 ஜனவரி 30 அன்று, சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர் பி.சின்னதுரை 'மெட்ராஸ் ஸ்டேட்' என்பதைத் 'தமிழ்நாடு' என்று மாற்ற ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அப்போது ம.பொ.சி-யும் அவரது தமிழரசுக் கட்சி உறுப்பினர்களும் சட்டமன்றத்துக்கு வெளியே நின்றுகொண்டு, அதற்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டினர். வேண்டுபவர்களைச் சந்திக்க மறுத்து, முதலமைச்சர் விவாதத்தை பிப்ரவரி வரை ஒத்திவைத்தார். அண்ணா இந்த ஒத்திவைப்பைத் தந்திரம் என்று கூறியதும், தி.மு.க.வும், எதிர்க்கட்சியினர் அனைவரும் வெளிநடப்புச் செய்ததோடு, மூன்று நாட்களுக்குத் தொடர்ந்து, சட்டமன்றத்தைப் புறக்கணித்தனர். அந்தப் போராட்டத்தின் பலனால் காமராஜரின் அரசு, 'மெட்ராஸ் ஸ்டேட்' என்பதைத் 'தமிழ்நாடு' என்று, நிர்வாகக் கடிதப் போக்குவரத்தில் குறிப்பிட ஒப்புக்கொண்டது.

காலப்போக்கில் காங்கிரஸின் நிலைமை கனிந்து மென்மையாகி, சட்டமன்றத்தின் தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற உதவியது. பல காரணங்களின் அடிப்படையில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்த கட்சியிடம் எப்பேர்ப்பட்ட மாற்றம்! தி.மு.க.வுக்கும், பெயர் மாற்றம் அவர்களது உறுதிக்கும், லட்சியத்துக்கும் ஓர் அடையாளமாக அமைந்தது. 1957-ல் சட்டமன்றத்தில் தி.மு.க. அடியெடுத்து வைத்தபோதே அதன் முதல் தீர்மானம், மெட்ராஸ் ஸ்டேட் என்பது தமிழ்நாடு எனப் பெயர் மாற்றப்பட வேண்டும் என்பதாகத்தான் இருந்தது. 1957 மே 7 அன்று தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, 42 பேரே ஆதரவாக இருந்தனர். எதிர்ப்பாக 127 வாக்குகள் கிடைக்க, தீர்மானம் தோல்வியுற்றது. " 'தமிழ்நாடு' என்று நம் தாயகத்துக்குப் பெயர் சூட்டவேண்டும் என்றுகூட அல்ல, அதுபற்றி கவர்னர் உரையில் குறிப்பிடாததற்கு வருத்தம் தெரிவித்தால் போதும் என்று கொண்டுவந்த தீர்மானத்துக்குக்கூட காங்கிரஸ் கட்சியினர், தமக்கிருந்த பலத்தின் எண்ணிக்கையில் இறுமாந்து, துரோகத்தனமாக நடந்துகொண்டனர்", எனப் பதிவு செய்திருக்கிறார் கலைஞர். 1964, ஜூலை 23-ல் தி.மு.க. உறுப்பினர் இராம.அரங்கண்ணல் இதுபற்றிய தீர்மானம் ஒன்றைக் கொண்டு வர, அப்போதும் அதை காங்கிரஸ் தோற்கடித்தது. ''தமிழ்நாடு' என்று பெயரை மாற்றிவிட்டால் சோறு வருமா? வீடு கிடைக்குமா?' என்றெல்லாம்கூட எகத்தாளமாகக்

கேட்டனர். கழகத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசிய அமைச்சர் வெங்கட்ராமனோ, 'தமிழ்நாடு என்று சொன்னால் வெளி உலகில் இருப்பவர்களுக்கு எப்படித் தெரியும்? மெட்ராஸ் என்றால்தானே புரியும்? அதுமட்டுமல்ல. மெட்ராஸ் என்று சொன்னால்தான் சர்வதேச அரங்கத்தில், கேட்கும்போது பெருமையாக இருக்கிறது!' என்று பேசியதைப் பதிவு செய்திருக்கிறார் கலைஞர்.

"தமிழ்நாடு என்று பெயர் இருந்தால் வெளிநாடுகளில் உள்ளவர்கள் அறிந்துகொள்ள மாட்டார்கள் என்பது மட்டுமல்ல, நம்முடைய தொழில் அமைச்சராக முன்பு இருந்த திரு.வெங்கட்ராமன் அவர்கள், ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் இடையே செய்து கொள்ளக்கூடிய ஒப்பந்தம் எல்லாம் திருத்தி எழுதவேண்டிவரும். அதனால் சிக்கல்கள் நாடுகளுக்கெல்லாம் விளையும் என்றெல்லாம் சொன்னார்கள். மதிப்பிற்குரிய நண்பர் பாலசுப்பிரமணியம் எடுத்துச் சொன்னபடி, கோல்ட் கோஸ்ட் என்பது 'கனா' ஆகிவிட்டது. அதனால் எந்தவிதமான சர்வதேச சிக்கல்களும் ஏற்பட்டு விடவில்லை" என்றார் அண்ணா. அப்போது தி.மு.க.வும், சுதந்திராவும் சட்டமன்றத்திலிருந்து காங்கிரஸுக்கு எதிர்ப்பாக வெளிநடப்பு செய்தன.

தொடக்கத்திலிருந்தே பெயர் மாற்றத்துக்கு கம்யூனிஸ்ட்டுகள் ஆதரவாக இருந்தனர். மாநிலங்களவை கம்யூனிஸ்ட்டு உறுப்பினர் பூபேஷ் குப்தா, தி.மு.க-வை ஒரு படி தாண்டி தனிநபர் தீர்மானம் ஒன்றைப் பெயர் மாற்றத்துக்காக மாநிலங்களவையில் கொண்டு வந்தார். மெட்ராஸ் ஸ்டேட் என்பதைத் தமிழ்நாடு என மாற்ற, தி.மு.க. மேற்கொண்ட கடுமையான போராட்டத்தின் வரலாற்றை, பூபேஷ் குப்தாவின் தீர்மானத்தின்போது நடந்த விவாதங்கள் வெளிப்படுத்துகின்றன. அண்ணா அப்போது கூறினார்: "துணைத் தலைவர் அவர்களே, என் நண்பர் திரு. பூபேஷ் குப்தாவுடன் நான் அபூர்வமாகத்தான் இசைந்துபோவேன். ஆனால் இன்று மனதார, முழுதாக, உள்ளபடிக்கே அவருக்கு ஆதரவு தெரிவிக்கிறேன்" என்றார். அவருடைய வருத்தமெல்லாம் திரு.பூபேஷ் குப்தா தி.மு.க.வை முந்திக்கொண்டு தீர்மானத்தைக் கொண்டுவந்து விட்டாரே என்பதுதான். "இந்தப் பிரச்னை தமிழ்நாட்டில் வெகு காலமாக இருந்து வருகிறது என்பதை இந்த மன்றத்தில் கூற விரும்புகிறேன்" என்ற அண்ணா, தீர்மானம் குப்தாவின் விளம்பர ஸ்டன்ட் என்று சிலர் விமரிசித்தபோது, "விளம்பரத்துக்காக அப்படிச் செய்வதில் தவறில்லை. தீர்மானம் தோற்கடிக்கப்பட்டாலும், பூபேஷ் குப்தா தமிழ்நாட்டுக்கு வரும்போது, தமிழர்களை எந்தச் சங்கடமும் இல்லாமல் பார்த்து, 'நான் உங்களுக்காக கோரிக்கை வைத்தேன். ஆளும்கட்சிதான் உங்களைக் கைவிட்டது' என்று

சொல்லிக்கொள்ளலாம்" என்றார் அண்ணா. ஆக, குப்தாவின் வலையில், நீங்கள் உங்களை அறியாமலே மாட்டிக்கொண்டீர்கள் என்று காங்கிரஸ் கட்சியினரை ஏளனம் செய்தார் அண்ணா.

காங்கிரஸின் எதிர்ப்பு, கடுமையான, அச்சத்தாலும், அறியாமையாலும் எழுந்திருந்தது. தமிழில் 'நாடு' என்ற சொல் 'நிலம்' அல்லது 'தேசம்' என்றும் பொருள் தரும். காங்கிரஸுக்கு இது அச்சமூட்டும் சொல். "தமிழ்நாடு என்பது நமது நாடா அல்லது இந்தியா நமது நாடா? எப்படி இதையும் நமது நாடு, அதையும் நமது நாடு என்று சொல்வது?" என்று முன்பு பிரிவினை வாதம் பேசிய தி.மு.க.விடம் பக்தவத்சலம் கேள்வி எழுப்பினார். அந்தப் பெயர் தமிழரல்லாதவர்களைச் சேர்க்காதோ என்ற பயமும் இருந்தது; மாநில காங்கிரஸ் உட்பட எல்லா அரசியல் கட்சிகளும் தங்கள் கட்சியின் பெயருக்கு முன் 'தமிழ்நாடு' என்றே குறிப்பிட்டிருந்ததால், இந்த அச்சங்கள் எடுபடாமல் போயின.

காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு வேறு சில சங்கடங்களும் இருந்தன. "சுமார் ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை ஒன்றுபட்ட தமிழ்நாடு என்று இருந்ததில்லை. பாண்டிய நாடு, சேர நாடு, சோழ நாடு என்றுதான் இருந்தது. வரலாற்று ரீதியாக நியாயப்படுத்த முடியாதபோது, எதற்காகப் புதிதாக ஒரு பெயரை உருவாக்க முனைகிறீர்கள்?" என்று மாநிலங்களவையில் கேள்வி எழுப்பினார் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் டி.எஸ்.பட்டாபிராமன். அவரின் அறியாமையையும், காங்கிரஸின் தமிழ் குறித்த ஆர்வமின்மையையும், அண்ணாவின் பதில் வெளிக்கொண்டு வந்தது:

> இந்த மன்றத்துக்கும், இந்த உறுப்பினருக்கும் தெளிவுபடுத்த, தமிழ்நாடு என்ற சொற்கள் இருக்கும் சில நூல்களைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்...
>
> பரிபாடல், பதிற்றுப்பத்து, தவிர இன்னும் பிரபலமானவை சிலப்பதிகாரம், மணிமேகலை. இவை எல்லாம் 1000 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட தமிழ்க் காப்பியங்கள். பரிபாடலில், வருகிற 'தண்டமிழ் வெளி தமிழ்நாட்டு அகமெல்லாம்' என்ற வாக்கியத்துக்கு, மூன்று பகுதிகளும் இனிமையான தமிழ் சூழ்ந்த தமிழ்நாடு என்று பொருள். 1800 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட பதிற்றுப்பத்தில், 'இமிழ்கடல் வெளி தமிழகம்' என்று எழுதப்பட்டு இருக்கிறது. அதாவது, கடலை எல்லையாகக் கொண்ட தமிழ்நாடு. சிலப்பதிகாரத்தில், 'தென்தமிழ் நந்நாடு' எனக் கூறப்பட்டிருக்கிறது. இதன் பொருள் நல்ல

தமிழ்நாடு. மணிமேகலையில், 'சம்புத்தீவினில் தமிழக மருங்கில்' என வருகிறது. தமிழ்நாடு, சம்புத்தீவு என அழைக்கப்படுகிறது என்பதே இதன் பொருள்.

இன்னும் புகழ்பெற்ற உதாரணங்கள் தேவை என மதிப்புக்குரிய உறுப்பினர்கள் விரும்பினால், கம்பனும் சேக்கிழாரும் கண்டிப்பாகத் தங்கள் கவிதைகளில் பயன்படுத்தியிருப்பதைக் காணலாம். இதற்குப் பின்னரே சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்ற மூன்று ராஜ்யங்கள் வந்தன. தமிழ்க் காப்பியங்களில் தமிழ்நாடு என்று இருக்கிறது. இந்தக் காப்பியங்களில் கருத்து வளத்துக்கு ஒன்றும் பஞ்சம் இல்லை.

இது மதிப்புக்குரிய நண்பர் நினைவையும், நேரத்தையும் தமிழ்க் காப்பியங்களுக்காகச் செலவிடவில்லை என்பதையே காட்டுகிறது.

பெயர் மாற்றத்துக்கு எதிரான நிலைக்கு, மக்கள் ஆதரவு நிறைய இருப்பதாக காங்கிரஸ் நம்பியது. "இந்தப் புனிதமான ஒரே பிரச்னையில் தமிழ் மக்களை நாம் சந்திப்போம். உங்களால் 51 சதவிகித மக்களை உங்களுக்கு ஆதரவாகக் காண்பிக்கும்பட்சத்தில், நான் உங்களுக்குத் தலைவணங்கத் தயாராக இருக்கிறேன்" என்று டி.எஸ்.பட்டாபிராமனுக்கு சவால் விடுத்தார் அண்ணா.

இருந்தாலும் பலருக்கு இந்தத் தேவை புரிபடாததாகவே இருந்தது. "போகட்டும். தமிழ்நாடு என்று பெயரிடுவதால் உங்களுக்கு என்ன லாபம்?" என்று வினா எழுப்பிய என்.எம்.லிங்கம் என்பவருக்கு அண்ணா பதிலளித்தார்:

எனக்கென்ன லாபம்? பார்லிமென்ட்டை 'லோக்சபா' என்று பெயர் மாற்றியதில் என்ன லாபம் அடைந்தீர்கள்?

கவுன்சில் ஆஃப் ஸ்டேட்ஸ் என்பதை ராஜ்யசபா என்று மாற்றியதில் உங்களுக்கு என்ன லாபம்? பிரசிடெண்டை ராஷ்ட்ரபதி என்று அழைப்பதில் நீங்கள் என்ன லாபம் கண்டீர்கள்? அதனால்தான் நான் சொல்கிறேன், உங்களுக்கு என்ன நஷ்டம்?...

என்ன லாபம் என்று ஒரு கேள்வியை எழுப்பினார்கள். உணர்வுபூர்வமாக திருப்தி ஏற்படுகிறது எங்களுக்கு. லட்சக்கணக்கான மக்களின் நெஞ்சங்களில் தொன்மையான பெயரைப் பழக்கத்துக்குக் கொண்டு

வந்தோம் என்ற திருப்தி எங்களுக்கு ஏற்படுகிறது.

இந்தச் சிறிய பெயர் மாற்றத்துக்கு அது போதுமான ஈடு தருகிறதே, போதாதா? எனவே இதுகுறித்த எல்லா வாதங்களும் பொடிப்பொடியாகின்றன.

ஜி.ராஜகோபாலன் என்ற உறுப்பினர், சங்கரலிங்க நாடார் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த பிறகும், காங்கிரஸ் தேர்தலில் வென்று வருவதைச் சுட்டிக் காட்டியபோது, அண்ணா, "சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தும் நீங்கள் மாறவில்லை என்றால், உங்கள் மனிதாபிமானம் எப்படிப்பட்டது என்று தெரிகிறது" என்றார் காட்டமாக. "காங்கிரஸ் வெற்றி என்றும் நிரந்தரமானது" என்று டி.எஸ்.பட்டாபிராமன் அடித்துச் சொன்னபோது, "அப்படியானால் அது நாட்டுக்கும் மக்களுக்கும் கேடுதான். அவ்வளவுதான் என்னால் கூற முடியும்!" என்றார் அண்ணா.

"மெட்ராஸ் என்றால் உங்களுக்கு ஏன் அரிக்கிறது? அது உலகம் முழுக்கப் புகழ் பெற்றிருக்கிறதே?" என என்.எம்.அன்வர் கேட்டதற்கு, "என்னுடைய அரிப்பெல்லாம் மெட்ராஸ் என்பதை ஒரு மாநிலத்துக்குப் பயன்படுத்தினால், நீங்கள் மாநிலத்தை அதன் தலைநகருடன் போட்டுக் குழப்புகிறீர்கள். தமிழ்நாடு என்ற பெயரைத் தான் நீங்கள் மாநிலத்துக்குக் கொடுத்தாக வேண்டும். மாநிலத்தின் பெயருக்கும், மாநிலத் தலைநகருக்கும் வேறுபாடு இருக்க வேண்டும். எனவே நான் இந்தத் தீர்மானத்தை முழு மனத்தோடு அவைக்குக் கொண்டு வந்து, முன்மொழிகிறேன்" என்றார்.

ஆனாலும் மெட்ராஸ் என்பது உலகம் முழுக்க அறிந்த பெயராக இருந்ததை மறுப்பதற்கில்லை. 'தமிழ்நாடு' இனிமேல்தான் அந்தப் பெயரையும் புகழையும் பெற வேண்டும். உண்மையில், காங்கிரஸ் உறுப்பினர் பி.ஜி.கருத்திருமன், இந்தச் சங்கடத்தைச் சமாளிக்க 'தமிழ்நாடு - மெட்ராஸ் ஸ்டேட்' என்ற சமரச யோசனை ஒன்றைக் கூறினார். இறுதியில் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்படவே, தங்களை எல்லாம் தமிழ்நாடுதான் இணைத்தது என்று கூறி, காலம்தான் இந்த மாற்றத்தைக் கொணர்ந்தது என்றார் அண்ணா.

1969, ஜனவரி 14-ல் மெட்ராஸ் ஸ்டேட், அதிகாரபூர்வமாக, 'தமிழ்நாடு' ஆயிற்று. பத்தாண்டுகளாகக் கோரிக்கை வைத்தும் விவாதித்தும், பல நூற்றாண்டுகளாக இலக்கிய ரீதியாகவும், கலாசார ரீதியாகவுமாக இருந்த 'தமிழ்நாடு' அண்ணாவின் முயற்சியால், அரசியல் ரீதியாகவும் உண்மையாயிற்று.

24

புகழுடன் நிறைவு



அமெரிக்காவில் அண்ணா

1968, ஏப்ரல் 15 அன்று அண்ணா அமெரிக்காவில் உள்ள யேல் பல்கலைக்கழகத்துக்கு 'சப் (CHUBB) ஃபெலோஷிப்'பில் சென்றார். யெலிஹு யேல் 1687 முதல் 1692 வரை சென்னை ஆளுநராக இருந்தவர். 1718-ல், வணிகரான யெலிஹு யேல் ஒன்பது மூட்டை சரக்குகளை விற்ற பணத்தையும், 417 புத்தகங்களையும், முதலாம் ஜார்ஜ் மன்னரின் ஓவியத்தையும் யேல் பள்ளிக்கூடத்துக்கு வழங்கியபோது, அந்தப் பள்ளி யேல் கல்லூரி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. திமோதி ட்வைட் கல்லூரியின் சப் ஃபெலோஷிப், அரசு நிர்வாகத்திலும், கலாசார மற்றும் பொதுமக்கள் சேவைத் துறையிலும் ஆர்வமுள்ள யேல் மாணவர்களை ஊக்குவித்து, அவர்களுக்கு உதவியும் அளிக்கப்படுவது. ஒவ்வோர் ஆண்டும் சிறப்புமிக்க நான்கு பேரை யேலுக்கு வரவழைத்து, மாணவர்களுடன்

நெருங்கிப் பழகவும், தொடர்புகொள்ளவும், சொற்பொழிவுகள் நிகழ்த்தவும் வாய்ப்பு ஏற்படுத்தியது இந்த ஃபெலோஷிப். இந்த கௌரவம் பெற்ற முன்னாள் 'சப் ஃபெலோஸ்' என அழைக்கப்படுபவர்கள் பட்டியலில், ரொனால்டு ரீகன், ரால் அல்ஃபோன்ஸி, ஜிம்மி கார்ட்டர் முதலான அதிபர்களும், கிளமன்ட் அட்லீ, மாரியோ ஸோர்ஸ் முதலிய பிரதமர்களும், டோனி மாரிசன், கார்லோஸ் ஃப்யூன்டஸ் போன்ற எழுத்தாளர்களும், மிக்கேய்ல் பேரிஷ்னிகோவ் போன்ற நடன வடிவமைப்பாளர்களும், ஹாரி பெலஃபான்டே போன்ற பாடகர்களும் அடங்குவர்.

அமெரிக்க தூதராக இந்தியாவில் பணியாற்றிய செஸ்டர் பௌல்ஸ், அண்ணா அமெரிக்கா செல்லத் திட்டம் உருவாக்கினார். க.ராசாராம் கூற்றுப்படி, அண்ணாவின் பேச்சுத் திறன் பௌல்ஸைக் கவர்ந்திருந்தது. செல்வாக்கு மிகுந்த, மக்களிடையே புகழ்பெற்றிருந்த தலைவரான அண்ணாவை அமெரிக்காவுக்கு வந்து, கண்டு செல்ல அமெரிக்கர்கள் அழைத்ததில் ஆச்சரியமில்லை. அண்ணாவை நேருவுக்குப் பிறகு தோன்றிய மிகச்சில கவர்ச்சியான தலைவர்களில் ஒருவராகவும், தன் கொள்கைகளுக்கு மக்கள் ஆதரவைத் திரட்டுவதில் தேர்ந்தவராகவும், யேல் பல்கலைக்கழகப் பத்திரிகைச் செய்திக்குறிப்பு வர்ணித்திருந்தது. அண்ணா ஒருபுறம் அமெரிக்காவின் ஜனநாயகத்தையும், அதன் விஞ்ஞான முன்னேற்றத்தையும் பாராட்டுபவராக இருந்தாலும், இன்னொருபுறம், அந்த நாட்டின் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், வியட்நாமில் தலையீடு போன்றவற்றை ஏற்காதவராகவும் தவித்தார்.

முன்னதாக, 1968 மார்ச் 28 அன்று, "அமெரிக்காவுக்குப் போகப் போகிறேன் என்று சொன்னவுடனே, நம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வேறு வழியில் எண்ணிக்கொண்டு அவனவன் அரிசிக்கு அலைகிறான், தண்ணீர் இல்லாமல் அலைகிறான். உழவுத் தொழிலில் கஷ்டமிருக்கிறது, இப்போது என்ன அமெரிக்காவில் வேலை என்று கேட்டாலும் கேட்கலாமோ என்ற கூச்ச உணர்ச்சிகூட இருந்தது" என்று சட்டமன்றத்தில் அறிவித்தார் அண்ணா. போகிற வழியில், வாடிகன் நகரில் போப் ஆண்டவரைத் தனியாகச் சந்தித்தார் அண்ணா.

எம்.எஸ்.உதயமூர்த்தி, அண்ணா அமெரிக்காவுக்கு வந்ததை 'அமெரிக்காவில் அண்ணாதுரை' என்று அழகாக எழுதியிருக்கிறார். "அண்ணா' என்ற சொல் ஒரு மந்திர வார்த்தை' என்கிறார் ஒரு தமிழர், அருகிலுள்ள வெள்ளைக்காரரிடம். 'நான் நம்புகிறேன்' என்கிறார் வெள்ளைக்காரர்' என்று அமெரிக்க விமானநிலையத்தில்



'தமிழ்நாடு' என்ற பெயர் மாற்றத்தை சட்டசபையில் அறிவித்தார் அண்ணா.

அண்ணாவை வரவேற்க காத்திருக்கையில் தாம் கேட்டதைப் பதிவு செய்திருக்கிறார். அவசரமாக, விமானநிலையத்தில் தங்கள் அலுவல்களைப் பார்க்கப் போகிற அந்நியர்கள்கூட, ஒரு கணம் நிற்கிறார்கள். "என்ன இங்கே கூட்டம்? இந்தியாவின் பெரிய மனிதரோ?" என்று கேட்பவர்களிடம், "ஆம், நேருவின் பேச்சுக்கு அடுத்தபடியாகப் பெரும் கூட்டங்களை ஈர்க்கும் தென்னிந்தியாவின் தலைவர்!" என்று பதிலளித்தார் உதயமூர்த்தி. அண்ணாவின் அமெரிக்க விஜயம் பற்றிய எதிர்பார்ப்பை இப்படி பதிவு செய்திருக்கிறார் டாக்டர் உதயமூர்த்தி.

> 'அண்ணாதுரை அண்ணாதுரை' என்ற வார்த்தைகள் ஏப்ரல் முதல் தேதியிலிருந்தே அமெரிக்காவில் தமிழர்கள் இருக்குமிடமெல்லாம் எதிரொலித்தது. கலிஃபோர்னியாவிலிருந்து நியூயார்க் வரை, டெக்ஸாஸிலிருந்து மில்வாக்கி வரை, தமிழர்களில் பலர் ஒருவருக்கொருவர் போன் மூலம் கூப்பிட்டுக்கொண்டு இருந்தார்கள். அமெரிக்கத் தமிழர்களிடையே ஏதோ 'தங்களின் மிக நெருங்கிய சொந்தக்காரர் ஒருவர் வருகிறார்' என்பது போன்ற உணர்ச்சி இருந்ததில் அதிசயம் ஏதுமில்லை. 'இதுவரை சுமார் நூறு போன் கால்கள் வந்துவிட்டன. இது மாதிரி எப்போதும் வந்ததில்லை' என்றார் நியூயார்க்கில் உள்ள இந்தியாவின் ஐக்கிய நாட்டு தூதரகத்தைச் சேர்ந்த ஒருவர்.

நியூயார்க்கில், ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் ஊதாண்ட்டை அண்ணா சந்தித்தார். துணைப் பொதுச் செயலாளர், சென்னையைச் சேர்ந்த சி.வி.நரசிம்மன், அண்ணா ஊதாண்ட்டைப் பார்க்கும்போது அவருடன் சென்றார்.

சி.வி.நரசிம்மன் அவர் வகித்த பதவியாலும், உயரத்தாலும், 'உலகின் மிக உயர்ந்த தமிழர்' என்ற பெயர் பெற்றிருந்தார். "அந்த ஐக்கிய நாடுகள் மன்றத்தினுடைய பெருஞ்செயலாளர் ஊதாண்ட் அவர்களோடு பேசிக்கொண்டு இருந்தபோது அவரிடம் நான் சொன்னேன், 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற அடிப்படையில், நீங்கள் எல்லாம் நம்முடைய ஊர்தான். எல்லோரும் நம்முடைய மக்கள்தான் என்பதை விளக்குகின்ற வகையில், இங்கே பல்வேறு நாடுகளின் கொடிகளைப் பறக்க விட்டிருக்கிறீர்கள்" என்று அவரிடம் சொன்னதாகக் கூறினார். அண்ணாவை கௌரவிக்கும் வண்ணம் சி.வி.நரசிம்மன் ஒருசில ஐ.நா. உயர் அதிகாரிகளுக்கும் வெளிநாட்டுத் தூதர்களுக்கும் ஒரு காக்டெயில் பார்ட்டி அளித்தார். அங்கு அண்ணா கேட்டது 'டொமேட்டோ ஜூஸ்'. அன்று மாலை இந்தியா ஹவுஸில், அண்ணாவைப் பார்க்க விரும்பும் இந்தியர்கள் அனைவருக்குமாக இந்திய தூதர் ஜி.பார்த்தசாரதி பெரிய வரவேற்பு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். 'அண்ணாதுரையுடன் சேர்ந்து நிற்கவும், பேசவும் ஆசைப்படும் இத்தகைய கூட்டத்தை இந்தியா ஹவுஸ் இதுவரை கண்டதில்லை' என்றார் ஒரு வடக்கத்திக்காரர் என்ற உதயமூர்த்தி மேலும் எழுதுகிறார்:

> 'மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறீர்களே, தொழிலுக்கும் கல்விக்கும் அல்லவா முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்! அப்போதல்லவா நாடு முன்னேறும்?' என்று அண்ணாவைக் கேட்டார் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருக்கும் டாக்டர் செட்டி. 'ராஜாஜியும் அதைத்தான் கூறினார். மொழிப் பிரச்னைக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்கள் ஆரம்பித்து விட்டார்கள். நாங்கள் அதைச் சமாளிக்கிறோம். இது அவர்கள் துவங்கியது' என்று பதிலளித்தார் அண்ணா.
>
> அண்ணாவின் அருகில் வசதியான இடத்தைப் பிடித்து உட்கார்ந்துகொண்ட கண்ணாடிக்காரர், 'மொழிப் பிரச்னை உள்நாட்டுப் போரில் முடியுமோ என அஞ்சுகிறேன்' என்றார். 'இத்தாலியில் வடக்கு வளமாகவும், தெற்கு ஏழ்மையிலும் இருக்கிறது. செல்வம் கொழிக்கும் அமெரிக்காவில்கூட, ஏழ்மையும்,

இன வேறுபாடும் கொண்ட நீக்ரோ வாழும் பகுதிகள் இருக்கின்றன. இந்தப் பிரச்னைகள் - வேறுபாடுகள் - உள்நாட்டுப் போரையா கொண்டுவந்து விட்டன? பிரச்னையிலிருந்து நழுவப் பார்ப்பவர்கள் உள்நாட்டுப் போர் வந்துவிடும் என்று பயமுறுத்தி, பிரச்னையிலிருந்து தப்பிக்கப் பார்க்கிறார்களோ என்றுதான் நான் அஞ்சுகிறேன்' என்றார் அண்ணா. 'உங்கள் கொள்கையால் இந்திய ஒற்றுமை பாதிக்கப்படுகிறதே?' என்றார் ஒருவர் கவலை தொனிக்க... அண்ணா அதற்கு பதில் அளித்தார்:

நாங்கள் பிரிவினைக் கொள்கையை நிச்சயமாகக் கைவிட்டு விட்டோம். நான் ராஜ்யசபையில் அதுபற்றிப் பேசியபோது, ராஜ்ய சபை உறுப்பினர்கள் என்னை வானளாவப் புகழ்ந்தார்கள். 'இனி எல்லோரும் ஒற்றுமையாகச் சேர்ந்து வாழ்வோம்' என்றார்கள். நான், 'மலபாரில் ஜன நெருக்கம் மிகமிக அதிகமாக இருக்கிறது. மக்கள் வாழ, பயிர் செய்ய இடமில்லாது இருக்கிறார்கள். ஆகவே, ஒரு கோடி மக்களை பீகாருக்கோ ராஜஸ்தானுக்கோ குடியேற்றுவோம். என்ன சொல்கிறீர்கள்?' என்றேன். 'அது பெரிய அபாயமான புதிய பிரச்னைகளைக் கொண்டுவரும்' என்றார். நீங்கள் ஒற்றுமையைப் பற்றிப் பேசுகிறீர்கள், ஏதோ நாங்கள் குறுக்கே நிற்பது போல. அஸ்ஸாமிலே, 'அஸ்ஸாம் - அஸ்ஸாமியருக்கே. இந்தியர்களே வெளியேறுங்கள்' என்று போர்டு போட்டுக் கிளர்ச்சி நடந்தது.

'ஏன் காங்கிரஸ் தோற்றது?' என்ற கேள்விக்கு அண்ணா பதில் அளிக்கையில், "நீண்ட நாட்களாகப் பதவியில் இருந்ததால்" என்று கூறிவிட்டு உடனே, "எந்தக் கட்சியும் அதிகமாகப் போனால், பத்து ஆண்டுகளுக்கு மேல் பதவியில் இருக்கக் கூடாது... பதவியில் இருக்க இருக்க, அதிகார போதை ஏறிவிடுகிறது. நான் அதைத்தான் கடவுளை தினம் வேண்டிக்கொள்கிறேன்; அதிகார போதை என் மண்டையில் ஏறாமல் இருக்க வேண்டுமென" என்றார் என்று எழுதுகிறார் உதயமூர்த்தி.

யேலில் கேள்விகள் குறிப்பிட்டுக் கேட்கப்பட்டன. "டெல்லியில் தி.மு.க. சேர்ந்த கூட்டு மந்திரி சபை அமைக்கும் நாளை நீங்கள் எதிர்பார்க்கவில்லையா?" என்ற கேள்விக்கு, "ஆசையூட்டும் எண்ணம். அடைவதோ நெடுந்தொலைவில்" என்றார். "நீங்கள் திராவிட நாடு பிரிவினை வேண்டுமென்று கேட்டு காங்கிரஸை

எதிர்க்கவில்லையா?" என்று கேட்கப்பட்டபோது, "ஏன், செயின்ட் பால்கூடத்தான் ஒருசமயம் இயேசு கிறிஸ்துவை எதிர்த்தார்!" என்று தனது புலமையையும், சாதுர்யத்தையும் ஒருங்கே காண்பித்தார் அண்ணா.

மாணவர்களும் மாணவிகளும் அவரை விடேன், தொடேன் என்று கேள்வி கேட்டு நெருக்கிய விஷயம், "ஏன் பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டீர்கள்?" என்பதுதான். "சீனாவுடனும் பாகிஸ்தானுடனும் போர் மூண்டபோது, தனித்து வாழ்வது அபாயம் எனக் கைவிட்டோம்!" என்றார் அண்ணா. "அபாயம் காரணமாகத்தானே கைவிட்டீர்கள்? அந்த அபாயம் இல்லாவிட்டால் உங்கள் நிலை என்ன? சமயோசிதமாகக் கைவிட்டீர்களா? நிரந்தரமா?" என்று கேட்கப்பட்டபோது, "என் பழைய ஆசைகளைக் கிளறாதீர்கள். நான் அவற்றால் இழுத்துச் செல்லப்பட மறுக்கிறேன்!" என்றார் பெருத்த சிரிப்புக்கிடையே. "சாதி பற்றிய மனோபாவம் மாற, கலப்பு மணங்களை ஆதரிக்கிறோம். கலப்பு மணம் செய்பவர்களுக்குத் தங்கமெடல் தருகிறோம். சாதி பற்றிய மனோபாவம் எவ்வளவோ மாறிவிட்டது" என்றார் அண்ணா, மிகுந்த நம்பிக்கை தொனிக்க.

"டெல்லியில் காங்கிரஸ் அரசாங்கமும், சென்னையில் எதிர்க்கட்சி அரசாங்கமும் இருப்பதை நீங்கள் வரவேற்கிறீர்களா?" என்ற கேள்விக்கு, அண்ணா "இந்திரா காந்தி திறமையாக நிர்வாகம் செய்துவருகிறார். மொழி விஷயத்தில்தான் சிறிது அவசர முடிவை எடுத்துவிட்டார். டெல்லியில் அரசாங்கப் பொறுப்பை ஏற்கும் அளவுக்கு மற்ற எதிர்க்கட்சிகள் வளரவில்லை. இந்த நிலையில் நாட்டின் எதிர்காலத்தைப் பொறுத்தவரை, மீண்டும் காங்கிரஸ் ஆட்சி வருவதையே விரும்புவேன்!" என பதிலளித்தார்.

காங்கிரஸ் பற்றிய கேள்விகளுக்குப் பெருந்தன்மையுடன் பதில் கூறிய அண்ணா, அயல்நாட்டுக் கொள்கை குறித்த கேள்விகளுக்கு, "அது டெல்லி விஷயம். அதில் மாநில அரசாங்கத்துக்கு ஏதும் உரிமை இல்லை. எனினும் இந்திய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையுடன் பொதுவாக எங்களுக்கு உடன்பாடு உண்டு" என்று அழகுடனும், அடக்கத்துடனும் கூறினார்.

கனெக்டிக்கெட் - நியூஹேவனிலிருந்து அண்ணா அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டன் டி.சி.க்கு ரயிலில் பயணமானார். அங்கே சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்த்துவிட்டு, வரவேற்பு நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டார். ஒரு வரவேற்பின்போது, "ஒருகாலத்தில் சிறைச்சாலையில் இருந்துவிட்டு, இப்போது முதலமைச்சராக இருப்பது எப்படி இருக்கிறது?" என்ற கேள்விக்கு

"ரொம்ப மந்தமாக (வெரி டல்) இருக்கிறது!" என்றார் அண்ணா. அப்போது அங்கே இருந்த 'தி ஹிந்து' ராம், பின்னர் பல வருடங்களுக்குப் பிறகு எழுத்தாளர் வாசந்தியிடம், "அவரை ஏன் இப்படிக் கொண்டாடுகிறார்கள் என்று இப்போது உங்களுக்குப் புரிந்திருக்கும்!" என்று அண்ணாவின் காரிஸ்மாவுக்கு காரணம் சொன்னார். 'சென்னைக்கான திட்டங்கள் பற்றிக் கூறியபோது, அமெரிக்க விஜயத்தின் எதிரொலியை அவர் கருத்துகளில் காண முடிந்தது' என்று எழுதிய எம்.எஸ்.உதயமூர்த்தி, அண்ணா கூறிய பதிலை இவ்வாறு தந்திருக்கிறார்:

> ஊருக்குச் சென்றதும் நம் நாட்டிலுள்ள படித்தவர்களை விவசாயத்திலும், பால் பண்ணையிலும், கோழி - ஆடு வளர்ப்புத் துறையிலும் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்ளப் போகிறேன். சென்னையைச் சுற்றிக் கடல் இருக்கிறது. ஆகவே, கடல் சம்பந்தமான தொழில்களைத் தொடங்கப் போகிறோம். விஞ்ஞானமுறையில் மீனவர்களுக்கு மீன் பிடிக்கும் முறையைக் கற்றுத்தரப் போகிறோம். உணவைப் பாதுகாக்க பல இடங்களில் குளிர்சாதன அறைகள் கட்டப்போகிறோம். தூத்துக்குடி துறைமுகத்தை அபிவிருத்தி செய்யப் போகிறோம்.' 'தமிழகத்தில் இன்னும் பல துறைகளில் பல காரியங்கள் செய்ய வேண்டியிருக்கிறதே' என்று குறிப்பிட்டு அண்ணாதுரையின் முகத்தை ஆதுரத்தோடு நோக்கினார் ஒருவர். கண்கள் எங்கோ நோக்க, 'ஓர் ஆயிரம் கோடி ரூபாய் இருந்தால் எல்லாவற்றையும் உடனே செய்துவிடலாம்!' என்கிறார் அண்ணா. அவர் முகத்தில் ஒரு மென் சிரிப்பு மலர்கிறது.

ஆபிரகாம் லிங்கன் படுகொலை செய்யப்பட்ட லிங்கன் தியேட்டரைப் பார்வையிட்ட அண்ணா, அமெரிக்காவிலிருந்து புறப்பட்டார். அமெரிக்கா அவரை எவ்வளவு கவர்ந்திருந்தது என்பதை அவர் புறப்படுமுன் நிகழ்த்திய உரை காண்பித்தது. "அமெரிக்காவின் சாதனை என்னை மிகவும் கவர்ந்தது. நாம் நமது மனித வளத்தை மேம்படுத்த வேண்டும். நம்முடைய தேவைகளுக்கு நாம் அமெரிக்க முறைகளைக் கையாள வேண்டும். எங்கள் முயற்சியில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நாம் அமெரிக்கர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும்" என்றார் அண்ணா. அமெரிக்கர்கள் இதைத்தான் அவரிடம் எதிர்பார்த்தார்கள் என்றால், அவர்கள் அதை உண்மையிலேயே சாதித்து விட்டார்கள்.

டெல்லியில் ஒரு மாநாட்டில் அண்ணா கலந்துகொள்ள வேண்டியிருந்ததால், அண்ணாவின் பயணம் குறைக்கப்பட்டது. அவர் டோக்கியோ, சிங்கப்பூர் வழியாகச் சென்னை வந்தடைந்தார். வரும் வழியில் ஜப்பானிய வெளியுறவுத் துறை அமைச்சரைச் சந்தித்தார். அவர் மொழி மற்றும் பிற பிரச்னைகள் குறித்து எழுப்பிய கேள்விகளுக்கு, ''நாங்கள் அவற்றுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அவற்றை சமாளித்துவிடுவோம்!'' என்றார்.

தன் மாநிலத்தின் நலனையும், கூடவே நாட்டின் நலனையும் ஒரே சமயத்தில் துடிப்போடு முன்வைக்கும் முதலமைச்சராக அண்ணா தெரிந்தார். அண்ணா இந்தியா திரும்பும்போது, நவம்பர் 1968-ல் அவரது தி.மு.க. சென்னை மாநகராட்சித் தேர்தல்களில் தோற்றிருந்தது. தி.மு.க.வின் மாநகராட்சி நிர்வாகம் திருப்தி அளிப்பதாக இருக்கவில்லை. நடுநிலையான வாக்காளர்கள் நிர்வாக முறை குறித்து மிகவும் அதிருப்தியடைந்து இருந்தார்கள்.

'அண்ணாவின் லட்சியங்களுக்கு எதிராக இருப்பவர் யார்? தாம் விரும்பும் இடத்துக்குத் தமிழகத்தை அழைத்துச் செல்வதில் அண்ணாவுக்குக் குறுக்கே நிற்பது எது?' என்ற கேள்வியை எழுப்பிய உதயமூர்த்தி, 'ஒரே வார்த்தையில் பதில் கூறுவோமானால் அவருடைய 'இதயம்' என்றுதான் கூறவேண்டும். அண்ணாவுக்கு மிகப்பெரிய இதயம் அமைந்திருக்கிறது!' என்று முடித்திருந்தார், 'அதனால்தான் பஸ் தொழிலாளர் - மாணவர் சண்டை என்று சென்னையில் ஏற்பட்ட நிகழ்ச்சி, அவர் கண்ணீர்விடக் காரணமாக இருந்தது. அதனால், கடிய வேண்டிய இடங்களில் கடிய முடியவில்லை; கண்டிக்க வேண்டிய இடங்களில் கண் கலங்குகிறார்' என்று எழுதியிருக்கிறார் உதயமூர்த்தி.

> அன்று பழைமையைப் பரிகசித்தவர், இன்று பழைமைக்குப் பாலங்கட்டுகிறார். பழைமையைப் பகைத்துக்கொள்ள விரும்பாத நிலை! பெரிய இதயம்! வயோதிக மனப்பான்மையை அன்று சாடிய அவர், இன்று நம் கல்விக்கூடங்களில் நிலவும் வயோதிக மனப்பான்மையையும் தேக்கத்தையும் கண்டும் காணாமல் இருக்க முயல்கிறார்! மடங்கள் பற்றி அன்று புரட்சிக் கருத்துகள் தெரிவித்த அண்ணா, இன்று மடங்கள் மாறிவிட்டன என்று கூறுகிறார். போப்பாண்டவரைச் சந்தித்து வாழ்த்துக் கோருகிறார்; சிந்திக்க வைக்கிறார் என்று கூறுகிறோம். ஆனால், செயலாற்றுவதில் எவ்வளவு வலிமை, திறமை அவருக்கு உண்டு என்பது தெரியவில்லை. ஆண்டு

ஒன்றுக்கு மேல் உருண்டோடிவிட்டது.

- என்று மிக அழகாக அண்ணாவை வரைந்து காட்டினார் உதயமூர்த்தி.

நம்பிக்கையில்லாதத் தீர்மானம்

தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்று பதினெட்டு மாதங்களுக்குப் பின், 1968 ஆகஸ்ட் 23 அன்று, எதிர்க்கட்சித் தலைவர் பி.ஜி.கருத்திருமன் அண்ணாவின் அரசை எதிர்த்து நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தார். அதில் திட்டவட்டமான தொழிலாளர் நலக் கொள்கை இல்லாதது, வேலையின்மை, தொழில் வளர்ச்சி குன்றிப் போனது, தொழிலாளர் போராட்டங்கள் உட்பட 11 அம்சங்களைப் பட்டியலிட்டிருந்தார். "15 வருஷ காங்கிரஸ் ஆட்சியில் இரண்டாவது வரிசையில் இருந்த தமிழகம், இன்றைக்கு 10-வது, 11-வது இடத்துக்குப் போய்விட்டது. இதற்குக் காரணம் இப்போது இருக்கும் இவர்கள் சர்க்காருடைய இன்டஸ்ட்ரியல் பாலிஸிதான். இன்டஸ்ட்ரியல் பாலிஸி சரியாகக் கிடையாது. தொழிலாளர்கள், கூலித் தொழிலாளர்கள் நலன்களைக் காப்பதாகச் சொல்கிறார்களே தவிர, பூரணமாகச் செய்வது கிடையாது" என்று குறை கூறினார் கருத்திருமன். "ஆகவே, திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் செயலற்ற சர்க்கார், திறமையற்ற சர்க்கார், நேர்மையற்ற சர்க்கார் என்கிற குற்றச்சாட்டு களைக் கூறுகிறேன்" என்று உரையை நிறைவு செய்தார்.

"திறன் இல்லாத சர்க்கார் எப்படி நேர்மையற்ற சர்க்காராக இருக்க முடியும்? செயலற்ற சர்க்கார் என்றால், எப்படி திறமையற்ற சர்க்காராக இருக்க முடியும்?" என்று அண்ணா பதிலுக்கு கேட்டார். அண்ணாவின் பதில் என்னவோ, அவருடைய வாதத் திறமையைக் காண்பித்தாலும், நிலைமை கிட்டத்தட்ட கருத்திருமன் வர்ணித்தது போலத்தான் இருந்தது. நிர்வாகத்தில் லஞ்சம் நுழைந்திருந்தது. உட்கட்சிப் பூசல்கள் வெட்ட வெளிச்சத்துக்கு வந்தன. பதவிக்குக் குறிவைத்து சிக்கல்கள் எழுந்தன. காய்களை நகர்த்துகிற தன்னுடைய திறமையாலும், உழைப்பாலும், பேரவாவினாலும், கலைஞர் கட்சியிலும், ஆட்சியிலும் இரண்டாம் இடத்துக்கு வந்திருந்தார். 1968 ஜூனில், திருச்சியில், தன்னுடைய 'காமராஜர் திட்டத்தை' அறிமுகம் செய்து, அவரும், நாவலர் நெடுஞ்செழியன், க.மதியழகன் மற்றும் சத்தியவாணி முத்து ஆகிய மூத்த தலைவர்கள், அரசுப் பதவியை விட்டு, கட்சிப் பணியாற்ற முன்வர வேண்டும் என்று யோசனை கூறினார். அவருக்கு எதிராக இருந்த மதியழகன், நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டு கட்சிக்குள்ளே இருந்த பூசலை வெளியே கொண்டுவந்தார்.

பிரச்னை மோசமாகிற வரை, அண்ணா எந்த நடவடிக்கையும் எடுக்காமல் சும்மா இருந்தார். பின்னர், இது தேவையற்றது என்று குறை கூறினார். வேறொரு தொடர்பில் உதயமூர்த்தி எழுதியது இங்கு பொருந்துகிறது: 'பல பிரச்னைகளைக் குறித்து ஏன் என்பதற்கு அண்ணா அழகாக விளக்கம் தருகிறார். ஆனால், 'அதற்கு என்ன செய்வது?' என்பது பற்றி அவர் ஏன் அதிகம் பேசுவதில்லை என்பது நமக்குப் புரியாத புதிராகவே இருக்கிறது. பேசிப் பேசியே, மேடைப் பேச்சாளராக விஷயங்களை விளக்கியே வளர்ந்துவிட்ட பழக்கமா? அல்லது பதவிக்குப் புதிது என்பதால் ஏற்படும் இயற்கையான தயக்கமா? அல்லது பிரச்னைகளை அவர் அணுகும் விதமே அப்படித்தானா?'

இருந்தாலும் அண்ணா காங்கிரஸாரின் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மிகத் தைரியமாக எதிர்கொண்டார். "1966 - 67-ல் மாநிலத்தில் மின்சாரத் துறையில் ஹைடென்ஷன் கனெக்ஷன் 40 தொழில்களுக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், 67 - 68-ல் 44 தொழில்களுக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது. அடுத்து, லோ-டென்ஷன் கனெக்ஷனைப் பொறுத்தவரையில் 66 - 67-ல் 4253 சிறுதொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டது. அதுவே, 67 - 68-ல் 4437 சிறுதொழில்களுக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது. இது தொழில் வளர்ச்சி அடைந்திருப்பதற்கு ஆதாரமா, இல்லை என்பதற்கு ஆதாரமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். 66 - 67-ல் மொத்தம் செலவான மின்சார யூனிட்டுகள் 1773 மில்லியன் யூனிட். 67 - 68-ல் இது 1915 மில்லியன் யூனிட்டுகள் என்பதை கவனத்தில் கொண்டால், தொழில் வளரவில்லை என்று சொல்வது எந்த வகையிலும் பொருத்தமானது அல்ல" என்று புள்ளிவிவரங்களை அள்ளி வீசி, பதிலளித்தார் அண்ணா.

"586 என்றுதான் இலக்கு வைத்திருந்தாலும் 749 சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. 10 ஆயிரம் என்றுதான் நாம் இலக்கு வைத்திருந்தாலும், 14,266 என்ற அளவுக்கு ஆழ்கிணறுகள் தோண்டப்பட்டன. 2000 ஃபில்ட்டர் பாயின்ட் என்று இலக்கு வைத்திருந்தாலும், திறமையாகப் பணியாற்றியதால் 2488 தோண்ட முடிந்தது. டிராக்டர்கள் 200-க்குப் பதில் 294 தரப்பட்டன. பேருந்துகளை தேசிய மயமாக்குகின்ற திட்டத்தின் அடிப்படையில் 532 புதிய பேருந்துகள் இன்றைய தினம் விடப்பட்டு இருக்கின்றன" என்றார். உலகத் தமிழ் மாநாட்டின் மூலம் கிடைத்த பணத்தில் 9 லட்ச ரூபாய் திருக்குறள் ஆராய்ச்சிக்காக ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆறு லட்சம் ரூபாய்க்கு மேல் கையிருப்பு இருக்கிறது என்று வரவு - செலவுகள் ஆடிட்டர் அத்தாட்சி பெற்றே நடத்தப்பட்டதாக

விவாதித்தார் அண்ணா. "நிர்வாகத்தில் தலையிட வேண்டாம் என்று என் கட்சிக்காரர்களுக்கு நான் அறிக்கை அனுப்பியிருக்கிறேன். அதுபோல் எதிர்க்கட்சியினர் ஆட்சியின்போது அப்படி ஏதும் அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்களா?" என்று நிர்வாகத்தில் கட்சிக்காரர்களின் குறுக்கீட்டுக்கு சப்பைக்கட்டு கட்டினார் அண்ணா. அரசு அலுவலகங்களிலிருந்து கடவுளர் படங்களை நீக்க அரசு இட்ட ஆணையைப் பற்றிக் குறிப்பிட்ட கருத்திருமனின் கேள்விக்கு, தாம் விநாயக சதுர்த்திக்காக அரசு விடுமுறை அறிவித்திருப்பதைச் சுட்டிக்காட்டினார் அண்ணா.

தாங்கள் மதச்சார்பற்றவர்கள் என்றும், மதத்துக்கு எதிரி அல்ல என்றும் கூறிய அண்ணா, "ஒரு 5 வருஷம், 10 வருஷம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்து உத்தரவிடுவதன் மூலம் ஆத்திகத்தை மாற்றி நாத்திகத்தை ஏற்படுத்த முடியும், அல்லது நாத்திகத்தை மாற்றி ஆத்திகத்தை ஏற்படுத்த முடியும் என்ற மனப்பிராந்தியும் எங்களுக்கு இல்லை. மக்களுடைய மத நம்பிக்கையில் எந்த வகையிலேயும் குறுக்கிட முடியவில்லை, விரும்பவும் இல்லை" என்று இதயசுத்தியுடன் பதிலளித்தார். அதுபோலவே ராஜாஜி அளவுக்கு தாம் லட்சியவாதி அல்ல என்பதைக் கூறிய அண்ணா, அதனால்தான் தம்மால் குதிரைப் பந்தயத்தை ஒழிக்க இயலவில்லை எனவும் ஒப்புக் கொண்டார். "இந்த லாட்டரி சீட்டுகூட தவறான காரியத்துக்காக அல்ல. சர்க்கார் ஏற்றிருக்கின்ற நல்ல காரியங்களுக்கு இதைப் பயன்படுத்தலாம் என்பதற்காகத்தான்" என்றார். விவாதத்தின்போது, காங்கிரஸ் உறுப்பினர் கே.விநாயகம், "நீங்கள் ஆட்சி செய்யுங்கள்; அல்லது தயவு செய்து ஒதுங்கிவிடுங்கள்" என்றபோது, சரியான நேரம் வருகிறபோது நிச்சயம் ஒதுங்கிவிடுவதாகத் தெரிவித்தார் அண்ணா. இது விரைவிலேயே, எதிர்பாராத வகையில் வரும் என்று யாரும் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

ஆவேசமாக பதில்கள் அளித்தபோதும், தான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியவில்லை என்பதை அண்ணா உணர்ந்திருந்தார். "மக்களுக்கு நாம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டால், பதவியில் தொடராமல் ஆட்சியிலிருந்து விலக, சட்டப்படி என்ன செய்யலாம் என்பதைச் சட்ட நிபுணர்களோடு கலந்து பேசி, கருத்துகளைக் கூறுமாறு உத்தரவிட்டார் அண்ணா" என்று அவரது சட்ட அமைச்சர் செ.மாதவன் கூறியிருக்கிறார். மாதவன் பதறிப் போனாலும், இயற்கை அண்ணாவின் கோரிக்கைக்குச் செவிசாய்த்து விட்டது!

அண்ணாவுக்கு வந்த புற்றுநோய்

1968 செப்டம்பரில் அண்ணாமலை பல்கலைக்கழகத்தினர் அண்ணாவுக்கு 'டாக்டர்' பட்டம் வழங்கப் போவதாக அறிவித்திருந்தனர். ஆனால், அதன் மகிழ்ச்சி நீடிக்கவில்லை. முதன் முதலில் வயிற்று வலிதான் அண்ணாவை வந்து வாட்டியது. பரிசோதனையில் அண்ணாவுக்குப் புற்றுநோய்க்கான அடையாளம் இருப்பதாகத் தெரிந்தது. செப்டம்பர் 10-ம் தேதி அண்ணா மருத்துவ சிகிச்சைக்காக, அமெரிக்காவுக்குப் புறப்பட்டார். அவருடைய அரசியல் 'தந்தை', தன் 'மகனை' வழியனுப்ப விமானநிலையம் வந்திருந்தார். 1961 ஆகஸ்டிலேயே அண்ணாவுக்கு கழுத்தின் பின்புறத்தில் சிறு அளவுக்கு சதை உருண்டு காணப்பட்டது. அது மெல்ல மெல்ல வளர்ந்தும் வந்தது. அதைக் கண்ட நண்பர்கள் கவலை தெரிவித்தனர். டாக்டர் ரத்தினவேல் சுப்பிரமணியத்திடம் ஒருநாள் சென்று காட்டினார். "கேன்சர் என்கிறார்களே, அந்த விதமாக இருந்து தொலைக்குமோ என்ற கவலை. 'அது அல்ல' என்றார் டாக்டர். மனதுக்கு ஒரு நிம்மதி வந்தது. ஆனால், உருண்டை கரையவில்லை. வளர்ந்தபடியே இருந்தது" என்று அண்ணா குறிப்பிட்டிருக்கிறார். ஆறு வருடங்களுக்கு முன்பே புற்றுநோய் பற்றி அண்ணா கவலை கொண்டதை எண்ணாமல் இருக்க முடியவில்லை. 'அண்ணாவின் மரணத்தை சிலர் ஆவலோடு எதிர்பார்த்தார்கள்' என்று, கண்ணதாசன் எழுதினார். 'தமக்கு வந்துள்ள நோய்க்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்துபவர் பலர் கட்சியிலேயே இருக்கிறார்கள் என்பது அவருக்குத் தெரியாதா? ஆனால், உண்மையிலேயே ரத்தக் கண்ணீர் வடித்தவர்கள் பலர்' என்று அண்ணா சேகரித்து வைத்திருந்த அன்பையும், அவர் வழியைப் பின்பற்றாதோரையும் பற்றி எழுதினார் கண்ணதாசன். 'அவர் யாரும் தம்மைப் பார்க்காமல் இருப்பதையே விரும்பினார்' என்றும் குறிப்பிட்டிருக்கிறார் கவிஞர். அண்ணா வளர்த்த குடும்பப் பாசம் அனைவரிடமும் சென்று பதியவில்லை.

'பம்பாய் வரை சென்று வழி அனுப்பியவர்களில் எம்.ஜி.ஆரும் ஒருவர். பம்பாய் செல்லும் விமானத்தில் என்னைக் கண்டதும் அண்ணா அவர்களும் திகைத்தார்' என்று எழுதியிருக்கிறார் எம்.ஜி.ஆர். 'புறப்படும்நேரம் நெருங்கியதும் அண்ணா அவர்கள் இரா.செழியன் அவர்களிடம் 'நாம் வாங்கிய ஆங்கிலப் புத்தகங்கள் எங்கே?' என்று கேட்க, செழியன் அவர்களும் அந்தப் புத்தகங்களைக் கொடுத்தார். அவற்றில் ஒரு புத்தகத்தின் (இர்விங் ஸ்டோன் எழுதிய, 'அட்வர்சரி இன் தி ஹவுஸ்') அட்டையைக் கிழித்து, என்னை அழைத்து அண்ணா அவர்கள், 'இதை வைத்துக்

கொள்ளுங்கள்' என்றார்கள். அண்ணா அவர்கள் எதற்காக அதை என்னிடம் கொடுத்தார்கள் என்று பலமுறை எண்ணிப் பார்த்தேன். பதில் கிடைக்கவில்லை' என்று எம்.ஜி.ஆர். எழுதியிருக்கிறார்.

நியூயார்க் மெமோரியல் மருத்துவமனையில், டாக்டர் தியோடர் மில்லர் செப்டம்பர் 11-ம் தேதி அறுவை சிகிச்சை செய்தார். செப்டம்பர் 21 அன்று, ஐ.நா. பொதுச் சபை ஆண்டு கூட்டத்தில் கலந்துகொள்ள வந்த பிரதமர் இந்திரா காந்தி, அண்ணாவை வந்து பார்த்தார். பத்து நாட்கள் கழித்து மருத்துவமனையிலிருந்து வெளிவந்த அண்ணா ஜி.பார்த்தசாரதியின் இல்லத்தில் தங்கினார். கலைஞர், எம்.ஜி.ஆர். மற்றும் சி.பா.ஆதித்தனார் தொடர்ந்து அண்ணாவின் உடல் முன்னேற்றத்தைக் குறித்துத் தொலைபேசியில் விசாரித்தவாறு இருந்தனர்.

டாக்டர் மில்லர் அண்ணாவிடம் நடைப்பயிற்சி செய்யுமாறு யோசனை கூறியிருந்தார். க.ராசாராமும் அண்ணாவும் 30 - 40 கி.மீ. பயணம் செய்து அங்குள்ள பூங்காவில் நடந்துவிட்டுத் திரும்புவார்கள். ஒருநாள் அண்ணா, நடக்கப் புறப்படுவதற்கு முன் ஷூ அணிய முயன்று கொண்டிருந்தார். அவருக்கு உதவ, அவர் மனைவி அங்கே இருக்கவில்லை. ராசாராம் உடனே குனிந்து, ஷூ லேசைக் கட்டிவிட்டபோது, அவர் தலையில் சூடாக ஒரு துளி கண்ணீர் அண்ணாவின் கண்ணிலிருந்து விழுந்தது. அண்ணா அழுவதைக் கண்ட ராசாராம் பதற்றமடைந்துபோய், "என்ன அண்ணா, இது?" என்றார். "உனக்கு என்ன செய்திருக்கிறேன் பார்! பெரிய குடும்பத்திலிருந்து வந்த உன்னை இப்படிக் குனியவைத்து விட்டேனே!" என்றார் அண்ணா, நெகிழ்ச்சியுடன். அவரை சமாதானப்படுத்த சற்று நேரம் ஆயிற்று ராசாராமுக்கு. (மரியாதைக்காக அடுத்தவர் கால்களைத் தொடுவதைத் தவிர, தமிழர்கள் அந்தமாதிரி செயலைக் குறைத்தே மதிப்பிடுவார்கள்.)

அக்டோபர் 10 அன்று, அண்ணா தன் தலைவர் பெரியாருக்குக் கடிதம் எழுதினார்: 'தங்கள் பிறந்தநாள் மலர் கட்டுரை ஒன்றில், மனச்சோர்வுடன் துறவியாகி விடுவேனோ என்னவோ என்று எழுதியிருந்ததைக் கண்டு மிகவும் கவலை கொண்டேன். தங்கள் பணி, மகத்தான விழிப்பு உணர்ச்சியை சமூகத்தில் கொடுத்திருக்கிறது. புதியதோர் பாதை மக்களுக்குக் கிடைத்திருக்கிறது. நான் அறிந்தவரையில், இத்தனை மகத்தான வெற்றி, வேறு எந்த சமூக சீர்திருத்தவாதிக்கும் கிடைத்ததில்லை. அதுவும் நமது நாட்டில். ஆகவே, சலிப்போ, கவலையோ துளியும் தாங்கள் கொள்ளத் தேவையில்லை.'

நவம்பர் 6 அன்று, சென்னை திரும்பிய அண்ணாவுக்கு உணர்ச்சிப்பெருக்கான வரவேற்பு காத்திருந்தது. லட்சக்கணக்கான மக்கள் தங்கள் தலைவனைக் காணக் குழுமியிருந்தனர். அவர் குளிர்சாதன வசதி கொண்ட அறையில் இருப்பது நல்லது என்று மருத்துவர்கள் கூறியதால், க்ரீன்வேஸ் சாலையில் வேளாண் துறையமைச்சர் அ.கோவிந்தசாமியின் இல்லமாயிருந்த 'அன்பு' எனும் பங்களா ஏற்பாடு செய்யப்பட்டு தயாராக இருந்தது. ஒருநாள் பிற்பகல், அந்த இல்லத்துக்கு தன் குடும்பத்தோடு சென்ற அண்ணா, அங்குள்ள ஏற்பாடுகளை எல்லாம் பார்த்துவிட்டு, என்ன நினைத்தாரோ தெரியவில்லை, வந்த வேகத்திலேயே 'நம் வீட்டுக்குப் போகலாம்' என்று கூறிவிட்டார். அதன்படி தம் வீட்டுக்கே திரும்பி வந்தும்விட்டார். அவை சொகுசான வசதிகள் என அண்ணா எண்ணியிருக்கக் கூடும். அவர் உடல்நிலை மேலும் மோசமடைந்தது. ஆனால், அதைவிட மோசமாக, டிசம்பரில், அவருடைய நிர்வாகத்துக்கு ஒரு கறும்புள்ளி போல ஒரு நிகழ்ச்சி நடந்தது.

கீழ்வெண்மணி

கிறிஸ்துமஸ் தினத்தன்று அந்தக் கொடுமை நிகழ்ந்தது. ஆதி திராவிடப் பெண்கள், குழந்தைகள் என நாற்பத்து நான்கு விவசாய கூலித் தொழிலாளர்கள், கீழ்வெண்மணியில் குடிசையில் வைத்துக் கொளுத்தப்பட்டனர். கூலித் தகராறு காரணமாக நிகழ்ந்த இந்த அசம்பாவிதத்தை தன்னுடைய ஆட்சியில் ஏற்பட்ட அழிக்கமுடியாத கறையாக அண்ணா கருதினார். "தஞ்சைப் பகுதியில் நடைபெறுகிற விவசாய பிரச்னையில், மிராசுதார்களுக்கும், சாகுபடியாளர்களுக்கும் இடையே கூலியில் சச்சரவு ஏற்பட்டால், அதை இரவோடு இரவாகத் தீர்த்து வைக்க நாங்கள் காத்துக்கொண்டு இருக்கிறோம்" என்று அண்ணா ஏற்கெனவே சட்டமன்றத்தில் அறிவித்திருந்தார். "ஆனால், குறிப்பிட்ட மிராசுதார் வீட்டு வாயிற்படியில் நின்று, பெண்கள் மாரடித்துக்கொண்டு அழுவது விரும்பத்தக்கது அல்ல. தொழிலாளர் தலைவர்களுக்கே இதைச் சொல்கிறேன். அப்போது நடைபெற்று வந்த வேலை நிறுத்தங்களுக்கும், இப்போது நடைபெறும் வேலை நிறுத்தங்களுக்கும் நிச்சயமாக மாறுதல் இருக்கிறது. அவர்களுக்கு எரிச்சலூட்டும், ஆத்திரமூட்டும் முறையில், தாறுமாறான முறையில் ஏசுவதால் தொழிலதிபர்களை இன்னும் சற்றுப் பிடிவாதமான போக்குக்குத்தான் அது கொண்டு செல்கிறது. எனவே, அவற்றையெல்லாம் திருத்தி அமைத்துக்கொள்ள வேண்டும் என்று தொழிற்சங்கத் தலைவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்" என்றும் அந்தத் தருணத்தில் சொல்லியிருந்தார்.



இந்திராகாந்தி, அண்ணா

'இந்தச் சம்பவத்தைப் பற்றிய செய்தி தொலைபேசி மூலம் எனக்குத் தெரிவிக்கப்பட்டவுடன், எர்ணாகுளத்திலிருந்து வெண்மணிக்கு கார் மூலம் நான் விரைந்தோடினேன். சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்று, மக்களைச் சந்தித்த பிறகு, திரு. அண்ணாதுரையை நேரில் சந்தித்தேன். அவருடைய கண்கள் கலங்கியிருந்தன. தான் முதலமைச்சராக இருந்த சமயத்தில் இப்படிப்பட்ட கோர சம்பவம் நடந்துவிட்டதே என்று வருத்தப்பட்டார்' என்று பி.ராமமூர்த்தி அண்ணாவின் மனநிலையைப் பதிவு செய்திருக்கிறார்.

''நீதி விசாரணை வேண்டாம். இந்தப் படுகொலைக்குக் காரணமானவர்களைக் கண்டுபிடித்து, அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து துரிதமாக தண்டனை வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதுதான் முக்கியம்" என்று ராமமூர்த்தி அளித்த யோசனையை ஏற்றுச் செயல்பட்டார் அண்ணா.

"உடனடியாக வழக்குப் பதிவு செய்து, இந்தக் கொடுமை புரிந்தவர்களுக்கு நீதிமன்றத்தின் மூலம் தண்டனை வழங்குவதுதான் சரியானது என்று என்னை ஓர் அறிக்கை விடுமாறு கோரினார். நானும் அவர் வீட்டிலேயே எழுதிக் கொடுத்தேன். அவ்வாறு நான் எழுதிக் கொடுத்ததன் ஆதாரத்தில், நீதிபதியைக் கொண்டு விசாரணை என்ற யோசனையை திரு. அண்ணாதுரை கைவிட்டார்" என்று கூறுகிறார் ராமமூர்த்தி. தி.மு.க. ஆட்சியில் புரட்சிகரமான நில உரிமை குறித்த மாறுதல்கள் வரும் என்று விவசாய தலைவர்கள்

எதிர்பார்த்ததாக ஆராய்ச்சியாளர் அலுவாலியா குறிப்பிடுகிறார். ஆனால், அண்ணாவோ நிதானப் போக்கைக் கையாண்டார். கிராமப் பொருளாதாரத்தில் காங்கிரஸ் சீர்திருத்தம் செய்ததன் பலனை ஆய்வு செய்ய விரும்பினார். சுதந்திரா கட்சியினரின் ஆதரவைக் கருதியே நில உச்சவரம்புகளை அவர் மாற்ற விரும்பவில்லை எனக் கூறுகிறார் அலுவாலியா. முன்பே பார்த்தபடி, அண்ணாவின் நிர்வாகம் தொடங்கிவைத்த நடைமுறை 1970-ல்தான் முடிவடைந்தது.

பிற மகிழ்ச்சிகரமான நிகழ்வுகள்

டிசம்பர் 2-ம் நாள், தன் மருத்துவர்களின் ஆலோசனையையும் மீறி, தமிழ்நாடு எனப் பெயரிடும் கொண்டாட்டங்களில் பங்கு கொண்டார் அண்ணா. " 'தமிழ்நாடு' பெயர் மாற்ற மகிழ்ச்சி விழா நடைபெறும் இன்றைய தினம் நான் பேசுவதாலேயே இந்த உடலுக்கு ஊறு நேருமென்றால், இந்த உடல் இருந்தே பயனில்லை" என்று கூறினார் அண்ணா. "எந்த நோக்கத்துக்காக நான் ஓர் அரசியல் கட்சியைத் தோற்றுவித்து இதுகாறும் பாடுபட்டு வந்தேனோ அதன் பலனை இன்று நான் பெற்றுவிட்டேன்" என்றும் அறிவித்தார்.

டிசம்பர் 15-ம் தேதி, சிவாஜி கணேசனின் 125-வது திரைப்படம் 'உயர்ந்த மனிதன்' வெளியாயிற்று. அண்ணா மறைவதற்கு சில நாட்கள் முன்பு, படத் தயாரிப்பாளர் சுந்தர்லால் நஹாதா வந்து, சிவாஜி கணேசனைப் பாராட்டும் அந்த விழாவுக்கு அழைத்துச் செல்ல வந்தார். அப்போது கோழிக்குஞ்சு போல தன் படுக்கையில் சுருண்டு கிடந்தார் அண்ணா. தயக்கத்துடன் அரங்கண்ணல் அவரை நெருங்கி அவர் காலைத் தொட, அண்ணா எழுந்துகொண்டார். அரங்கண்ணலிடம், "நேரமாச்சா?' என்று கேட்டுக்கொண்டே சட்டையை அணிந்து, கண்ணாடியையும் போட்டுக்கொண்டார். அரங்கண்ணல் அழுகையோடு, "இந்தக் கோலத்தில் நீங்கள் போக வேண்டாமே'' என்று கேட்டுக்கொண்டதற்கு. "இல்லை, இல்லை! கணேசனை எல்லாரும் பாராட்டிப் பேசுவார்கள். அதைக் கேட்டுவிட்டுத் திரும்பிவிடலாம்..." என்றார் அண்ணா. அந்த விழாவில் கணேசனைப் புகழ்ந்து அண்ணா நாற்பத்தைந்து நிமிடங்கள் பேசினார்: " 'பராசக்தி' வந்ததால்தான் சிவாஜி கணேசன் புகழடைந்தார் என்று கூறினார்கள். அது சரியல்ல. 'பராசக்தி' வராமலிருந்தாலும் சிறிது காலத்துக்குப் பின் அவர் கண்டிப்பாகப் புகழ்பெற்றிருப்பார்... அமெரிக்காவை கொலம்பஸ் கண்டுபிடிக்காமல் இருந்தால் அமெரிக்கா கிடைத்திருக்காதா என்ன? அதுபோல்தான், சிவாஜி



அண்ணாவுக்கு இறுதி மரியாதை

கணேசனும்" என்றார். "அரும்பாக இருக்கும்போதே அது மலராகும் என அறிந்தவன் நான். ஆகவே, எல்லோரையும் விட நான் மகிழ்ச்சி அடைகிறேன்'' என்றார் அண்ணா. காரில் திரும்பும்போது, "ஒரு பெரிய நிம்மதி, அரங்கண்ணல்! கணேசனும் இன்னைக்குத்தான் மனசைத் திறந்து பேசினான். நானும் மனதார அவனைப் பாராட்ட இன்றுதான் சந்தர்ப்பம் கிடைத்தது'' என்றார். அண்ணாவின் மறைவையும், தன் தாயின் மறைவையும் தன் வாழ்க்கையின் இருபெரும் சோக நிகழ்ச்சிகளாக சிவாஜி கணேசன் குறிப்பிட்டதில் வியப்பேதும் இல்லை.

அவரது இதயம் போலவே அவரது பெருந்தன்மையும், ஜனநாயக அணுகுமுறையும் நிகரற்றவையாக இருந்தன. காமராஜர் நாகர்கோவில் நாடாளுமன்றத் தொகுதிக்கு 1969 ஜனவரி 8 இடைத்தேர்தலில் போட்டியிட்டார். அவரை எதிர்த்து டாக்டர் மத்தியாஸ், தி.மு.க., சுதந்திரா கட்சிகளின் ஆதரவுடன் போட்டியிட்டார்.

''மத்தியாஸ் சுயேச்சையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் நாடாளுமன்றத்தில் சுதந்திரா கட்சியோடுதான் இருக்கப் போகிறார். எனவே அவர் சுயேச்சையாக நின்றாலும் நாங்கள் ஆதரிக்க முடியாது என்று திரு.கருணாநிதியிடம் கூறிவிட்டேன். அந்தத் தொகுதியில் எங்கள் கட்சியின் சார்பில் தோழர் எம்.எம்.அலியை

நாங்கள் நிறுத்தினோம்" என்று குறிப்பிட்டிருக்கிறார் பி.ராமமூர்த்தி. தி.மு.க. கூட்டணி, அதன் தாங்கக்கூடிய சுமையையும் தாண்டி அமைந்திருந்ததை, சுதந்திராவின் மத்தியாஸுக்கு இடதுசாரிகளிடம் பலனில்லாது ஆதரவு தேடியது காண்பித்தது.

'கழகம் போட்டியிட வேண்டும். இல்லை என்றால் சுதந்திரா கட்சி மத்தியாஸை ஆதரிக்க வேண்டும் - இந்த இரண்டையுமே அறிஞர் அண்ணா ஆதரிக்கவில்லை' என்று எழுதியிருக்கிறார் கண்ணதாசன். 'நீங்கள் சற்று ஒதுங்கியிருங்கள். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று கருணாநிதி அவரிடம் சொல்லிவிட்டு நாகர்கோவில் படையெடுப்புக்கு ஆயத்தமானார்' என்று கவிஞர் எழுதியிருக்கிறார்.

> காமராஜர் அவர்கள் கன்னியாகுமரியில் நாடாளுமன்ற உறுப்பினர் தேர்தலுக்கு நின்றார். அவரை எப்படியும் தோற்கடித்தே தீர வேண்டுமென்று நாட்டிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அத்தனை உறுப்பினர்களும் ஒன்றுபட்டு அதற்காகப் பாடுபட்டபோது, அந்தக் கழகத்தின் தலைவராக விளங்கிய அண்ணா அவர்களின் உள்ளம் மட்டும், எப்படியும் காமராஜர் வெற்றி பெற்றே ஆகவேண்டும். அவர் வெற்றி பெற்றால் தமிழ்நாட்டுக்கு அவர் மூலம் பல நல்ல பலன்கள் கிடைக்கும் என்று வாயாரச் சொல்லியதை நான் கேட்டிருக்கிறேன். அதற்கான சில செயல்கள் செய்ததையும் கண்ணால் பார்த்திருக்கிறேன்.

- என்று பதிவு செய்திருக்கிறார் அவருடைய உதவியாளர் சாமிநாதன்.

அண்ணா காமராஜரை எதிர்த்து பிரசாரம் செய்ய மறுத்தார் என்றாலும், இறுதியில் ஒரு பிரசார படத்துக்கு சம்மதிக்க வேண்டியதாயிற்று. இருந்தாலும் காமராஜர் வெற்றிபெற வேண்டும் என அண்ணா விரும்புவதாக வதந்தி பரவிற்று. காமராஜர் மூன்று லட்சத்துக்கும் அதிகமான வாக்குகள் பெற்று வெற்றிபெற்றார். இது அவரும், காங்கிரஸும் மீண்டும் தலையெடுக்க உதவும் என்ற நம்பிக்கையை உண்டாக்கியது.

1969 ஜனவரியில், 'முன்பு போல பணியைச் செய்ய முடியாதவனாக்கப்பட்டு, முடியவில்லையே என்ற ஏக்கத்தால் தாக்கப்பட்டு, சூழ்நிலையின் கைதியாக்கப்பட்டுக் கிடக்கிறேன்' என்று தம்பிக்கு எழுதினார் அண்ணா. 'வேலை! வேலை! ஓயாத வேலை! உடலும் உள்ளமும் அலுத்துப் போகும் அளவுக்கு

கடமையை நிறைவேற்றிக் கொண்டிருக்கவே காலம் போதவில்லை. களிப்புப் பெற்றிட, உன்னிடம் உரையாடிட நேரத்தைக் கண்டறிவதே மிகச் சங்கடமாகிவிட்டது' என்று தனது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஏழைகளிடம் அவருக்கு இருந்த கரிசனம், தம்மால் அவர்களுக்கு அதிகம் உதவ முடியவில்லையே என்பதைக் காட்டிற்று. "தம்பி, வறுமை வாட்டுகிறது. இல்லை என்று கூறவில்லை. எண்ணிடும் திட்டங்களை நிறைவேற்றிட வசதிகள் கிட்டவில்லை. அதனை மறைத்துப் பயனில்லை. வளம் கொழித்திட வழிதேடியபடிதான் இருந்து வருகிறோம். இன்னும் பொழுது புலரவில்லை. இவ்வளவும் உண்மை!" என்று தனது பொங்கல் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார் அண்ணா.

1969 ஜனவரி 14, பொங்கல் தினம் அண்ணாவுக்குக் கூடுதல் மகிழ்ச்சியை அளித்தது; அன்றுதான் அவர் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் சிலையைத் திறந்து வைத்தார்.

> அவருடைய சிலை திறப்பு விழா நடக்கின்ற இந்தநேரத்தில் அவரோடு நெருங்கிப் பழகிய என் போன்றோர்களுக்கு ஆயிரத்தெட்டு எண்ணங்கள், நெஞ்சத்திலே அலைமோதத்தான் செய்யும். அவற்றை எல்லாம் எடுத்து விளக்கிக் கொண்டிருப்பதற்கு நேரமில்லை. என்னுடைய உடல்நிலை அதற்குத் தகுந்ததாகவும் இல்லை. ஆனால் நெஞ்சத்திலே எண்ணி எண்ணி, இன்றல்ல - என்றென்றும் நாம் மட்டுமல்ல, நாட்டு மக்கள் அனைவரும் போற்றிப் பாராட்டத் தக்க தலைசிறந்த தமிழ் மகனாக வாழ்ந்தவர் நம்முடைய கலைவாணர். சிலையினை, மகிழ்ச்சியோடும் பெருமிதத்தோடும் திறந்து வைக்கிறேன்.

- என்று உரை நிகழ்த்தினார். அதுவே அண்ணாவின் கடைசி பொது நிகழ்ச்சி.

நலந்தானா?

1969 ஜனவரியில், 'காஞ்சி' பொங்கல் சிறப்பிதழில் அண்ணா, 'என் பேரப்பெண் கண்மணி மழலை மொழியில் பாடுகிறாள்: 'நலம்தானா? நலம்தானா? உடலும் உள்ளமும் நலம்தானா?' என எழுதினார்.

'தில்லானா மோகனாம்பாளி'ல் கண்ணதாசன் எழுதிய புகழ்பெற்ற பாடலைத்தான் கண்மணி பாடினாள். கதாநாயகி

(பத்மினி) கதாநாயகனை(சிவாஜி கணேசன்) விசாரிப்பதாக அமைந்த பாடல் அது. 'எனக்கென்னவோ அந்தப் பாட்டைக் கேட்கும்போதெல்லாம் என் தம்பிகள், தங்கைகள், நாட்டின் நல்லோர் அனைவருமே என்னை நலந்தானா என்று கேட்பது போலவே தோன்றுகிறது. கடந்த ஓராண்டாகவே இந்தக் கேள்வி கிளம்பியபடி இருந்தது' என்று எழுதினார் அண்ணா.

காலம் எத்தனை அரிதானது என்பதைத் தம்பிகளுக்கு விளக்கி, அவர்களைத்தான் தன் சாதனைகளுக்கு நம்பியிருப்பதாக எழுதியிருக்கிறார்:

> ஒரு நிமிடம்கூட வீணாக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். காலம் அத்துணை மதிப்பு வாய்ந்தது. கடமை உணர்ந்த நீ, காலத்தையே கனியச் செய்திடும் ஆற்றல் பெற்ற நீ, தமிழக அரசியலையே மாற்றி அமைத்த நீ, உன் கடமையைச் செய்வதிலே கண்ணுங் கருத்துமாக இருப்பாய் என்பதை நான் அறிவேன். எனினும் அண்ணன் என்ற உரிமையுடன் உனக்கு அந்தக் கடமையை நினைவுபடுத்துவது எனக்கொரு மகிழ்ச்சி தந்திடுவது போல, உனக்கும் மகிழ்ச்சி தந்திடும் என்பதிலே ஐயப்பாடு இல்லை. என்னைப் பொறுத்த மட்டிலே, தம்பி, நலிவைத் தாங்கிக் கொண்டபடி என்னால் இயன்றதைச் செய்து கொண்டு வருகிறேன்.

அண்ணா புத்தகங்களைப் பெரிதும் சார்ந்திருந்தார். 'அடையாறு புற்றுநோய் ஆஸ்பத்திரிக்குப் போகப் பத்து நாட்கள் முன்னதாகக்கூட ஆர்தர் கோஸ்லர் என்ற முன்னாள் கம்யூனிஸ்ட்டு ஆசிரியர் எழுதிய புத்தகத்தைப் பற்றித்தான் விவாதித்துக் கொண்டு இருந்தோம். 'நடுப்பகலில் இரவு' என்று அந்த ஆசிரியர் எழுதிய நூலைப் பற்றி தன் அபிப்ராயங்களைக் கூறிக் கொண்டிருந்தார். அவர் படுக்கையறையில் இருந்த பத்துப் பதினைந்து புத்தகங்களில், 'சாத்தானின் துயரம்' என்ற மேரி கரோலி எழுதிய நாவல் இருந்தது. உடனே நான் அந்த வாரம் படித்த 'வோர்ம்வுட்' என்ற மேரி கரோலியின் நாவலைப் பற்றிக் கூறினேன். அந்தக் கதையை விரிவாகச் சொல்லச் சொல்லிக் கேட்டார் அண்ணா' எனத் 'தென்னகம்' கட்டுரையாளர் ஒருவர் எழுதியிருக்கிறார்.

ஜனவரி 20-ம் தேதி காலை 10 மணி அளவில், அண்ணா கழிவறையில் மயங்கி விழுந்துவிட்டார். 'அண்ணாவின் தலைமாட்டிலேயே பதவிக்கு ஆள்சேர்க்கும் படலம் நடந்தது' என்று கண்ணதாசன் எழுதினார். "கட்சியின் நம்பர் ஒண்ணு

அண்ணா; இரண்டு நெடுஞ்செழியன் என்றுதானே தலைவர் வரிசை இருந்தது! அண்ணா மரணம் அடைந்துவிட்டால், அதை முறியடிப்பதெனத் தீவிர முயற்சிகள் நடந்தன" என்கிறார் கவிஞர். நாவலரிடம் கலைஞரின் கவர்ச்சி இருக்கவில்லை. அவர் கட்சியில் வளர்ந்த விதம், அவருக்குத் தொண்டர்கள் இல்லாமல் செய்துவிட்டது. இருந்தாலும் அவருடைய அலட்டிக்கொள்ளாத பண்பையும் அவருக்கிருந்த நல்ல பெயரையும் ஒதுக்கிவிடுவது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. 'தெரிந்தோ தெரியாமலோ, திரு.எம்.ஜி.ஆர். அவர்களும் கருணாநிதியை ஆதரித்துவிட்டார். நெடுஞ்செழியனைப் புறக்கணித்துவிட்டு, கருணாநிதியைப் பதவியில் அமர்த்துவது அதனால் சுலபமாகிவிட்டது' என்று பதிவு செய்திருக்கிறார் கண்ணதாசன். எம்.ஜி.ஆர். 'கிங் மேக்கர்' ஆகியிருந்தார். பிறகு பத்தே வருடங்களில், 1977-ல் அவரே அந்தப் பதவியில் போய் உட்கார்ந்தார்.

"இந்தியன் எக்ஸ்பிரஸ் ராம்நாத் கோயங்கா இல்லம் நோக்கிப் புறப்பட்டேன். அவர் உடனடியாக டாக்டர் மில்லருடன் தொடர்பு கொண்டார். டாக்டர் மில்லர் அவரது மனைவி, உதவிக்கு ஒரு டாக்டர். அவரது மனைவி என நான்கு பேரை விமானத்தில் முதல் வகுப்பில் வர டிக்கெட்டுகளை வாங்கிக் கொண்டு வந்து சேர்ந்தேன். ஜனவரி 29, 1969 அன்று அவர்கள் வந்தார்கள்" என ராசாராம் பதிவு செய்திருக்கிறார்.

"டாக்டர், நாளைக்கே அறுவை சிகிச்சை செய்யப்போகிறீர்களா?" என்று கேட்டார் அண்ணா. "ஆம்" என்றார் டாக்டர் மில்லர். "நாளை மறுநாள் செய்து கொள்கிறேன்" என்றார் அண்ணா. "ஏதாவது நாள் பார்க்கிறீர்களா?" என்று கேட்டார் டாக்டர்.

'இல்லையில்லை. ஒரு புத்தகத்தை (மேரி கரோலியின் 'த மாஸ்டர் கிறிஸ்ட்டியன்') படித்துக் கொண்டிருக்கிறேன். அதை நாளைக்குள் முடித்துவிடுவேன். பின்னர் நான் இறந்தாலும் கவலையில்லை' என்றார் அண்ணா' என்று எழுதியிருக்கிறார் ராசாராம்.

அண்ணாவின் வாக்கு உண்மையாயிற்று. அறுவை சிகிச்சை பலன் அளிக்காது போயிற்று. ஒருவாரம் கழித்து, பிப்ரவரி 3, 1969-ல் பிற்பகல் 12.20-க்கு அண்ணா காலமானார். 'திரு.அண்ணாதுரையின் மரணம் நாலுகோடி தமிழர்களுக்குப் பெருத்த அடியாக விழுந்தது. தமிழக அரசியல் செல்வாக்குக்கும் பண்பாட்டுக்கும் மறுமலர்ச்சி தோன்ற ஓர் அடையாளமாக அவர் திகழ்ந்தார்' என்று 'டைம்ஸ்' இதழ் எழுதியிருந்தது.

அவர் வாழ்க்கையே செய்தி

தமிழர்களையும் அண்ணாவின் தம்பிகளையும் துக்கம் சூழ்ந்து கொண்டது. துயரம் தோய்ந்த அவருடைய அகால மரணம், அவரைக் கிட்டத்தட்ட கடவுள் நிலைக்கு உயர்த்தி, அவருடைய மரண ஊர்வலத்துக்கு லட்சக்கணக்கான மக்களைக் கொண்டு வந்து சேர்த்தது. மனதை உருக்கும் கவிதை அஞ்சலியில் கலைஞர் 'தாயகத்தில் மொழிப்புரட்சி தோன்றுவதற்கு... எங்களண்ணன் களம் புகுந்தான் காஞ்சி பூண்டு' என்றும், 'சென்றமையக் குடில் இல்லை என்ற ஏழையர்க்கு உதவியவர்' என்றும், 'கற்கண்டே, தேன் பாகே! திருக்குறளே' என்றும், 'தலைவர் என்பார், தத்துவ மேதை என்பார், நடிகர் என்பார், நாடக வேந்தர் என்பார், சொல்லாற்றல் சுவை மிக்க எழுத்தாற்றல் பெற்றார் என்பார், மனிதரென்பார், மாணிக்கமென்பார், மாநிலத்து அமைச்சரென்பார், அன்னை என்பார், அருமொழிக் காவலர் என்பார், அரசியல்வாதி என்பார் - அத்தனையும் சொல்வதற்கு நேரமற்றோர் நெஞ்சத்து அன்பாலே 'அண்ணா' என்ற ஒரு சொல்லால் அழைக்கட்டும் என்றே அவர் அன்னை பெயரும் தந்தார்' என்று அழகுற புகழஞ்சலி படைத்திருந்தார்.

மக்களை மயக்கி வைத்திருந்த மகத்தான ஒரு தலைவருக்கு கலைஞர் எழுதிய கவிதை மனத்தை நெகிழச் செய்வதாக இருந்து வருகிறது. இது பின்னர் கிராமபோன் தட்டாக வெளிவந்து, திராவிட இயக்கத்தின் வரலாறு பாடும் பதிவாகிப்போய்விட்டது. அதேபோல், மரண ஊர்வலத்தில், கலங்கிப்போன எம்.ஜி.ஆர். வழக்கமான தொப்பியை அணியாமல் உடல் தாங்கிய வண்டியில் சோகமே உருவாக உட்கார்ந்து வந்த காட்சியும் அமைந்துவிட்டது. தன் இரங்கல் செய்தியில், "அவர் அரசியலில் நாகரிகத்தை, நேர்மையை, நல்லெண்ணத்தை, ஜனநாயத்தை, உயர் பண்புகளைக் கலந்தார். அவர் ஓர் உண்மையான ஜனநாயகவாதி. நல்ல இதயத்தால் தூண்டிவிடப்படுபவர் அரசியல்வாதியாவது இயற்கை. ஆனால் அண்ணாவிடம் தெய்விகத் தன்மை குடிகொண்டிருந்தது. அவருடைய அன்பு, அரவணைப்பு, பாசம் எல்லாம் அவருடைய தம்பிகளாக, தங்கைகளாக அவரிடம் சேர்ந்துகொள்ள வைத்தது என்பதை மறக்கவோ, மறைக்கவோ முடியாது" என்று குறிப்பிட்டார் எம்.ஜி.ஆர்.

காங்கிரஸ்காரரும், 'தினமணி' ஆசிரியருமான ஏ.என்.சிவராமன், தலையங்கத்தில், 'அண்ணாவின் லட்சியங்களிலிருந்து மாறுபடுவோர் கூட, அவருடைய நேர்மையையும், பண்பையும் குறைகான முடியாது' என்று எழுதியிருந்தார்.

'நம்நாடு' இதழில் முத்து என்பவர் எழுதிய அஞ்சலி, அண்ணாவையும் அவர் அரசியலையும் அறிந்தவர்களுக்கு அடையாளமாக இருந்தது. 'ஒவ்வொருவருமே அறிஞர் அண்ணாவை உச்சமாகப் புகழ்ந்தார்கள். இப்போது சொல்ல வார்த்தைகளே இல்லை! யாரும் அறியாத சில வார்த்தைகள் மட்டும் எனக்குக் கிடைத்தால் நான் எவ்வளவு மகிழ்ச்சி அடைவேன்! யாரும் இதுவரை பயன்படுத்தாத, புதிய வார்த்தைகள் கிடைத்தால் நான் ஓர் அதிர்ஷ்டசாலி!' என்று எழுதியிருந்தார் முத்து.

இந்தச் சரிதத்தை முடித்து வைக்க, அண்ணாவின் தலைவர் - அரசியல் தந்தை - பெரியார் அவர்களுடைய வார்த்தைகளே பொருத்தமாக இருக்கும்.

> தமிழ்நாடும், தமிழர் சமுதாயமும் அண்ணா ஆட்சியில் எவ்வளவோ அதிசயமான முன்னேற்றங்கள் அடையக் காத்திருந்தது.
>
> அவர் செய்த அரும்பெரும் காரியங்களில் முக்கியமானது, 'சுயமரியாதைத் திருமணச் செல்லுபடி சட்டம்' ஆகும். இதில் கடவுளுக்கோ, மதத்துக்கோ, சாஸ்திரத்துக்கோ இடமில்லை. இது தமிழ்நாட்டுக்கு மாத்திரமல்லாமல் உலகத்துக்கே மாபெரும் துணிச்சலான காரியம் என்று கருதப்பட்டது.
>
> மற்றும், 'இந்தி மொழி தமிழ்நாட்டுக்குக் கட்டாயம் என்பது ஒப்புக்கொள்ள முடியாது' என்று சட்டசபை மூலமே தீர்மானம் செய்ததானது. தனது பதவி பறிபோனாலும் சரியென்ற துணிவு கொண்ட காரியமாகும். இவைதவிர, உத்தியோகங்களில், பதவிகளில் தமிழர்களின் உரிமையைப் பாதுகாத்ததாகும்...
>
> அண்ணாவின் குணம், மிக மிக தாட்சண்ய சுபாவமுடையது என்றுதான் சொல்ல வேண்டும். யாரையும் கடிந்து பேசமாட்டார். தன்னால் முடியாத காரியமாக இருந்தாலும் முடியாது என்று சொல்ல மிகவும் தயங்குவார்.
>
> இப்படிப்பட்ட ஒரு நிலையில் ஏற்பட்ட அண்ணாவின் முடிவு, இந்த நாட்டில் மற்ற எவருக்கும் எளிதில் கிடைக்கமுடியாத உயர்தர முடிவேயாகும்.
>
> *(விடுதலை: 3.2.1969)*

இணைப்பு - 1

இமயவர்மன் எனப்படும் செங்குட்டுவன் ஆட்சி பீடம் ஏறியது கி.பி.90-ம் ஆண்டுகளில். மகத நாட்டுடன் நேசமாக இருந்த செங்குட்டுவன், கங்கைக்கு தான் இரண்டாம் முறை வந்தது, தமிழ் வரலாற்றிலும் இலக்கியத்திலும் இடம்பெற்று, தமிழ் தேசியத்தை ஒரு கலக்குக் கலக்கும் என அறிந்திருக்கமாட்டான். 'சிலப்பதிகாரத்தின்படி, மலைமேல் செங்குட்டுவன் உலா வந்துகொண்டிருந்தபோது, கண்ணகி பற்றி மலைவாழ் மக்கள் கூறுகிறார்கள். மன்னரின் அரசவைப் புலவர் சாத்தன், பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் அரண்மனையில் பணிபுரிந்த கோவலன், ராணியாரின் கால் கொலுசைக் களவாடிவிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு அநீதியாகத் தண்டிக்கப்பட்டதால், கண்ணகி மதுரை நகரையே அழித்த கதையைச் சொல்கிறார். கோவலனின் அறியாமையை கண்ணகி நிரூபித்தவுடன், மன்னன் நெடுஞ்செழியன் மனம் வருந்தி அப்போதே உயிர் துறக்கிறான். கண்ணகி தன் இடக் கொங்கையைத் திருகி வீசி மதுரை நகரையே அழிக்க, மதுரை மீனாட்சியின் வேண்டுகோளுக்கு இசைந்து, தீயைப் பரவாமல் நிறுத்துகிறாள். அவள் மலைப்பகுதியில் துயரத்தோடு துடித்து வாழ்ந்ததை மலைவாழ் மக்கள் கண்டனர். அவளுடைய மரணத்துக்குப் பின், கண்ணகி தன் கணவன் கோவலனை சொர்க்கத்தில் அடைகிறாள்.

மன்னரும் அவர் மனைவி வெண்மாளும் இந்தக் கதையைக் கேட்டு நெகிழ்ந்துவிட, வெண்மாள், கண்ணகியின் சிலையைப் பொதிகை மலையிலிருந்து எடுத்து வந்த கல்லால் உருவாக்கி, காவேரியிலோ, கங்கையிலோ புனித நீராட்டிக் கொண்டு வர விரும்புகிறாள். தன் பரம்பரைப் போர் வீரர்களின் பிரதிநிதியாக எண்ணும் செங்குட்டுவன், இமயத்துக்குச் செல்ல விரும்பி, தன் ஆணையை அரசவையினருக்குத் தெரிவிக்கிறான்.

ஆனால், யாத்திரிகர்களிடமிருந்து, வடக்கேயிருந்த இளவரசர்கள் தமிழ் மன்னர்களை இகழ்ந்ததாக அறிந்து, மன்னன் செங்குட்டுவன், அவர்களுக்குப் பாடம் புகட்ட, இமயத்திலிருந்து கல்லைச் சுமக்க வைக்கிறேன் எனச் சூளுரைக்கிறான். இகழ்ந்தது வேறு யாரையோ என்பதையும் கேட்க மறுத்து விடுகிறான். (பிற தமிழ் மன்னர்களோ

வடநாட்டு இளவரசர்களை சேரன் நடத்திய விதம் குறித்துக் குறை கூறினர்) தன்னுடைய போர்வாளையும், குடையையும் வடக்குநோக்கி எடுத்து வரச் சொன்னான் மன்னன். விஷ்ணு கோயிலில் படையுடன் கும்பிட்டு, வடக்கு நோக்கிப் பயணமானான் செங்குட்டுவன். முதலில் தங்கியது ஒரிசாவிலுள்ள மலைப் பகுதியான பாலாஸோரில். அங்கிருந்து கடல் மூலமாக கங்கைக் கரையை அடையப் பயணம் தொடங்கினான். ஒரிசாவின் கிழக்குத்தொடர்ச்சி மலைப் பகுதியில், கேத நாட்டு மன்னனின் தூதன் செங்குட்டுவனைச் சந்தித்து, 10,000 குதிரைகளும், ஆயிரம் பாதுகாவலர்களும் 20,000 பண்டகப் பெட்டிகளும் தந்து, இமயத்திலிருந்து சிலைக்கான கல் கொண்டுவர உதவ முன்வந்தான்.

கங்கையைக் கடக்க கப்பலைக் கேட்ட செங்குட்டுவன், பாலகுமாரனின் மகன்கள் கனக - விஜயன் இருவர் மீதும் பழி தீர்த்துக் கொள்ளவே தான் இந்த யாத்திரையை மேற்கொண்டதாக விவரிக்கிறான். வட - கரையில் செங்குட்டுவனை மகதநாட்டு மன்னன் சடகர்ணனே வரவேற்கிறான். எதிரிகளுடன் அவன் போரிட, உத்தரா, விசித்ரா, ருத்ரா, பைரவ, சித்ரசிங்க, தானுத்ரா மற்றும் ஸ்வேதா ஆகிய கூட்டணிப் படையினர் உதவுகின்றனர். இறுதியில் இளவரசர்கள் கனக - விஜயன் தவிர இன்னும் பலரும் சிறை பிடிக்கப்பட்டனர். இளவரசர்கள் ஆண்டிகளைப் போல் வேடமணிந்து, செங்குட்டுவனின் அமைச்சர் வில்லவன் கோதையுடன் இமாலயத்துக்கு அனுப்பப்படுகின்றனர். பின்னர் இரு அரசகுமாரர்களையும் பிற தமிழ் மன்னர்களான பாண்டிய, சோழரிடம் கொண்டுபோய் நிறுத்தியபோது, அவர்கள் அரசகுமாரர்களுக்குச் செய்த அவமரியாதையைக் கண்டனம் செய்தனர். பின்னர் செங்குட்டுவன் வேத பிராமணர்களின் யோசனைப்படி கண்ணகியின் ஆன்மா சாந்தியடைய அசுவமேத யாகம் செய்கிறான். கண்ணகியின் கோயிலுக்குக் குடமுழுக்குச் செய்கிறான். இலங்கை மன்னன் கஜேந்திரபாஹு இந்த நிகழ்ச்சியில் பங்கு கொண்டான்.

இணைப்பு - 2

ஜின்னாவுக்கு ஈ.வெ.ரா-வின் கடிதம்

ஈரோடு,

ஆகஸ்ட் 9, 1944

என் அன்புள்ள ஜின்னா,

(பாகிஸ்தான்) முட்டுக்கட்டைகளுக்கு திரு.ராஜகோபால ஆசாரியாரின் தீர்வுக்கான நடவடிக்கைகளையும், நீங்கள் ஆகஸ்ட் மத்தியில் திரும்புகையில், பம்பாயில் உங்கள் இல்லத்தில் திரு.காந்தியை வரவேற்க விரும்பும் செய்தியையும் கவனமாகப் பார்த்து வருகிறேன். அரசியல் வட்டாரங்களில் இது மிகவும் வரவேற்கப்படுகிறது. எனக்கு முழு நம்பிக்கை இல்லாவிட்டாலும், இந்து - முஸ்லிம் பிரச்னைகளை- குறிப்பாக க்ரிப்ஸ் அவர்களின் யோசனைப்படி நமது எதிர் அணியினர் தீர்க்க முன் வருவதாக சில அறிகுறிகள் தென்படுகின்றன.

வார்த்தைகளைத் திரித்துப் பேசுவதில் காங்கிரஸார் கைதேர்ந்தவர்கள், சித்து உணர்வைத் தருவார்கள் என்பதை நான் சொல்ல வேண்டாம். அவர்கள் எதை வேண்டுமானாலும் சொல்லி, அவர்கள் நினைக்கிற பொருளையும், அவர்கள் விரும்புகிற பாணியில் சொல்லுவார்கள். நாம் அவர்களை நம்பி இல்லா விட்டாலும் நாம் பேச்சு வார்த்தைகளின்போது விழிப்பாகவும் கவனமாகவும் இருக்கவேண்டும் என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

பொதுத் தேர்தல்கள், இந்துக்கள் - முஸ்லிம்கள் மற்றும் ஆரியர் - திராவிடர் என்ற முறையில் நம் இருவருக்குமே மிகவும் தொல்லை தரும் என்பது தெளிவு. சென்னையிலும், டெல்லியிலும் நாம் பாகிஸ்தான் மற்றும் திராவிடஸ்தான் குறித்து விவாதித்ததையும், நீங்கள் இரண்டு விஷயங்களையும் எடுத்துக்கொண்டு பேச வாக்குறுதி அளித்ததையும் உங்களுக்கு நினைவுபடுத்துவதற்கு மன்னிக்க வேண்டுகிறேன். இங்கே தென்னிந்தியாவில், இந்தப் பிரச்னைகளை நான் ஒன்றாகவே கருதி, என்னால் முடிந்தவரை அவற்றைத் தீர்க்க முயன்றிருக்கிறேன்.

நாடுகளின் பிற பகுதிகளுக்கு சுதந்திரம் கிடைக்கும் வரை, பாகிஸ்தானும் இல்லை, முஸ்லிம்களுக்கு இந்தியாவில் விடுதலையும் இல்லை என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

அன்புடன்

ஈ.வெ.ராமசாமி

ஈ.வெ.ரா-வுக்கு ஜின்னாவின் பதில்

பம்பாய்,
ஆகஸ்ட் 17, 1944

அன்புள்ள திரு.ராமசாமி,

உங்கள் ஆகஸ்ட் 9-ம் தேதி கடிதம் கிடைத்தது. நன்றி. எனக்கு எப்போதுமே, 90 சதவிகித பிராமணர் - அல்லாதவர் நிறைந்த சென்னை மக்கள் மீது மிகுந்த அனுதாபம் உண்டு. அவர்கள் தங்கள் திராவிடஸ்தானை நிறுவ விரும்பினால், உங்கள் மக்கள்தான் முழுக்க முழுக்க முடிவு செய்ய வேண்டும். இதற்கு மேல் நான் ஏதும் கூற முடியாது. உங்கள் சார்பாகப் பேசவும் முடியாது.

சென்னைக்கு நான் ஒரு தடவைக்கு மேல் வந்தபோதே நிலைமையை நான் உங்களுக்கும் உங்கள் தோழர்களுக்கும் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். உங்கள் பகுதி மக்கள் உண்மையிலேயே திராவிடஸ்தானை விரும்பினால், அதில் அவர்கள்தான் உறுதியாக இருக்க வேண்டும்.

நான் இந்திய முஸ்லிம்களுக்காக மட்டுமே பேச முடியும் என்ற என் நிலைமையைப் புரிந்துகொள்வீர்கள் என நம்புகிறேன். ஆனால், நான் ஏதாவது கூற வாய்ப்பு ஏற்பட்டால், எந்தப் பகுதி மக்களுடையவும் நியாயமான, நேர்மையான கோரிக்கையை குறிப்பாகத் தென்னிந்திய பிராமணர் - அல்லாதாரின் கோரிக்கையை, ஆதரிப்பேன் என்ற உறுதிமொழியை அளிக்கிறேன்.

அன்புள்ள
ஜின்னா

உதவிய நூல்கள்

1. விடுதலை நாளேடுகள்
   - 26.10.48, 15.05.49, 18.06.49, 19.06.49, 27.06.49, 28.06.49, 06.07.49, 07.07.49.
2. குடி அரசு இதழ்
   - 16.07.49
3. தென்றல் இதழ்
   - 21.01.61.
4. அண்ணாவுடன் 62 நாட்கள் - ப.உ.சண்முகம்
   - முல்லை அச்சகம், 1962.
5. Periyar's 86th Birthday Souvenir
   - Viduthalai, Chennai, 1964.
6. Kamaraj: A Study - V.K.Narasimhan
   - Manaktlas, Bombay 1967.
7. Ram, Mohan : Hindi Against India, The Meaning of DMK
   - Rachna Prakashan, New Delhi ,1968.
8. அமெரிக்காவில் அண்ணாதுரை - எம்.எஸ்.உதயமூர்த்தி
   - ஆனந்த விகடன் கட்டுரைகள்,1968.
9. Baldev Raj Nayar - National Communication and Language Policy in India, New York.
   - Frederick A.Praeger, 1969.
10. மண்ணிலிருந்து - டி.கே.சீனிவாசன்
    - தென்னகம், 1969.
11. விகடன் இதழ் அண்ணா நினைவு மலர்
    - 30.3.69
12. Anna - The Tempest and the Sea - Ahluwalia Sagar
    - Young Asia Publications, New Delhi, 1969.
13. தென்னகம் - அண்ணா சிறப்பிதழ்
    - 1970.
14. அண்ணாவின் கதை - நவீனன்
    - தினமணி கதிர், 1970.
15. தமிழ்ப் பேரொளி
    - திருநெல்வேலி சைவ சித்தாந்த நூல் பதிப்புக்கழகம், 1970.
16. ஓர் இலக்கியவாதியின் அரசியல் அனுபவங்கள்- ஜெயகாந்தன்
    - மீனாட்சி புத்தக நிலையம், 1974.

17. அறிஞர் அண்ணாவின் நாடகங்கள் - ஓர் ஆராய்ச்சி - இரா.ஜனார்த்தனம்
- நங்கூரம் பதிப்பகம், 1974.

18. தி.மு.க. வெள்ளி விழா மலர்
- தி.மு. கழகம், 1975.

19. Anna Speaks: At the Rajya Sabha 1962-66 - S.Ramachandran,
- Orient Longman, Bombay,1975.

20. Washbrook, David: The Emergence of Provincial Politics, The Madras Presidency 1870-1920 .
- Cambridge University Press, 1976.

21. Barnett, Marguerite Ross - The Politics of Cultural Nationalism in South India,
- Princeton University Press, 1976.

22. Zaidi A.M. Evolution of Muslim Political Thought in India In the Demand for Pakistan
- S.Chand & Co, New Delhi, 1978.

23. Language Movements In India - E. Annamalai
- Central Institute of Indian Languages, Mysore, 1979.

24. Tamil Renaissance and Dravidian Nationalism - Arooran K.Nambi
- Koodal Publishers, Madurai, 1980.

25. அண்ணா எனும் இலக்கியவாதி - பி.சி.கணேசன்
- மாதவி பதிப்பகம், 1980.

26. அண்ணாவோடு வாழ்ந்த அந்தச் சிறைவாசம் - நாவலர் நெடுஞ்செழியன்
- பாரி நிலையம், 1981.

27. பேரறிஞர் அண்ணா பவளவிழா மலர்
- அ.இ.அ.தி.மு.க. வெளியீடு, 1984.

27. ராசாராம் - 60
- மோனா பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1986.

29. மலேசியாவில் அண்ணா - மா.செங்குட்டுவன்
- பூவழகி பதிப்பகம், 1986.

30. எனது நாடக வாழ்க்கை - டி.கே.சண்முகம்
- வானதி பதிப்பகம், 1986.

31. P.Ramamurthy - The Freedom Struggle and The Dravidian Movement
- Orient Longman, Chennai, 1987.

32. விடுதலைப்போரும் திராவிட இயக்கமும் - ஆரிய மாயையா, திராவிட மாயையா? - பி.ராமமூர்த்தி
- பழனியப்பா பிரதர்ஸ், 1987.

33. இராம.அரங்கண்ணலின் 'நினைவுகள்'
- நக்கீரன் பதிப்பகம், 1988.

34. மூன்று முதல்வர்களுடன் - பொ.க.சாமிநாதன்
- அண்ணா பதிப்பகம், 1990.

35. திராவிடர் இயக்கமும் திரைப்பட உலகமும் -
கே.திருநாவுக்கரசு
- மணிவாசகர் பதிப்பகம், 1990.

36. Zvelabil, Kamil V. Dravidian Linguistics: An Introduction
- Institute of Linguistics of Culture, Pondicherry, 1990.

37. Richman, Paula: E.V.Ramasamy's Reading of the Ramayana: In many Ramayanas: The Diversity of a Narrative Tradition in South India.
- University of California Press, 1991.

38. Saraswati,S. Towards Self Respect: Periyar EVR on a New World,
- Institute of South Indian Studies, Chennai, 1994.

39. ஒரு சாமானியனின் நினைவுகள் - க.ராசாராம்
- தமிழ் வளர்ச்சி மன்றம், 1994.

40. திராவிடம் பாடிய திரைப்படங்கள் - அறந்தை நாராயணன்
- நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1994.

41. என் வாழ்வின் நினைவுகள்(திருப்புமுனை) -
சி.சுப்பிரமணியம்
- நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1994.

42. என் வாழ்வின் நினைவுகள் (பசுமைப் புரட்சி) -
சி.சுப்பிரமணியம்
- நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1994.

43. தி.மு.க. பிரச்னைகளும் பிளவுகளும், மறுமலர்ச்சியை நோக்கி-
கே.திருநாவுக்கரசு
- நக்கீரன் பதிப்பகம், 1994.

44. திராவிட இயக்க வரலாறு முதல் தொகுதி -
இரா. நெடுஞ்செழியன்
- நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளை, 1996.

45. அண்ணா - தன் வரலாறு
- பாரதி பதிப்பகம், 1997.

46. Pillai V.Kanagasabhai - The Tamils Eighteen hundred years ago,
- Asian Educational Services, Madras, 1997.

47. Ramaswamy, Sumathi: Passions of The Tongue: Language Devotion in Tamil India, 1891-1970
- Munshiram Manoharlal Publishers, Delhi, 1998.

48. Ramasamy, E.V., Ramayana: A True Reading
- Dravidar Kazhagam Publications, 1998.

49. ஆய்ய மாயை
- பாரதி பதிப்பகம், சென்னை, 1998.

50. தி.மு.க. வரலாறு - டி.எம்.பார்த்தசாரதி
- பாரதி பதிப்பகம், 1998.

51. திராவிட இயக்க வேர்கள் - கே.திருநாவுக்கரசு
- நக்கீரன் பதிப்பகம், 1999.

52. நெஞ்சுக்கு நீதி - கலைஞர் மு.கருணாநிதி
- திருமகள் நிலையம், 2000

53. பேரறிஞர் அண்ணா பேசுகிறார் - தொகுதி 1, 2
- தமிழரசி நூலகம், 2000.

54. மனவாசம் - கண்ணதாசன்
- வானதி பதிப்பகம், 2000.

55. வனவாசம் - கண்ணதாசன்
- வானதி பதிப்பகம், 2000.

56. அண்ணாவின் சட்டசபைச் சொற்பொழிவுகள் - 1, 2
- பாரதி பதிப்பகம், 2000.

57. பேரறிஞர் அண்ணா சந்தித்த அடக்குமுறைகள் - 2 தொகுதிகள் - எம்.பாட்டழகன்
- மீனா கோபால் பதிப்பகம், சென்னை, 2000.

58. எனது வாழ்க்கை அனுபவங்கள் - ஏவி. மெய்யப்ப செட்டியார், ஏவி.எம்.டிரஸ்ட்
- சென்னை, 2000.

59. பெருந்தலைவர் காமராஜர் - அரு.சங்கர்
- மணிவாசகர் பதிப்பகம், 2000.

60. பேரறிஞர் அண்ணா பேசுகிறார் - 3 பகுதிகள்
- தமிழரசி நூலகம், 2000.

61. நடிகமணி டி.வி.நாராயணசாமி - வி.சுந்தரம்
- சேகர் பதிப்பகம், 2000.

62. EVK Sampath Speaks at Parliament
- Anbu Pathippagam, Chennai, 2000.

63. சினிமா - நிஜமும், நிழலும் - ஆரூர்தாஸ்
- அருந்ததி நிலையம், 2001.

64. கம்யூனிஸ இயக்கமும், தமிழக அரசியலும் - பி.சி.கணேசன்
- அருந்ததி நிலையம், 2001.

65. பேரறிஞர் அண்ணாவின் கட்டுரைகள் - 1, 2
- பூம்புகார் பதிப்பகம், 2001.

66. பேரறிஞர் அண்ணாவின் பேருரைகள்
(ம.நடராஜன் தொகுப்பு) 4 பகுதிகள்
- தமிழரசி பதிப்பகம், 2001.

67. அறிஞர் அண்ணாவின் கட்டுரைகள்
- பூம்புகார் பதிப்பகம், 2001.

68. பேரறிஞர் அண்ணாவின் சிறுகதைத் தொகுதி
- பூம்புகார் பதிப்பகம், 2001.

69. சாமி சிதம்பரனார் - தமிழர் தலைவர்
- பெரியார் சுயமரியாதை பிரசார வெளியீடு, 2001.

70. எனது சுயசரிதை - சிவாஜி கணேசன்
- சிவாஜி பிரபு அறக்கட்டளை, 2002.

71. தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள் - 1 முதல் 7 தொகுதிகள்
- பூம்புகார் பதிப்பகம், 2002.

72. தமிழ் சினிமாவின் கதை - அறந்தை நாராயணன்
- நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2002.

73. G.U.Pope - The Naladiar or Four Hundred Quatrains in Tamil ,
- Asian Educational Service, Delhi, 2002.

74. The Thiruvasagam or Sacred Litterance of the Tamil Poet, Saint and Sage Manikkavasagar
- Asian Educational Service, Delhi, 2002.

75. தந்தை பெரியார்: திராவிடர் - ஆரியர் உண்மை,
- பெரியார் சுயமரியாதை பிரசார நிறுவன வெளியீடு, 2002.

76. பேரறிஞர் அண்ணாவின் மறக்கமுடியாத நிகழ்ச்சிகள் - ஆலந்தூர் கோ.மோகனரங்கம்
- மீனா கோபால் பதிப்பகம், 2002.

77. நான் ஏன் பிறந்தேன் - எம்.ஜி.ஆர்.
- ராஜராஜன் பதிப்பகம், 2003.

78. முதல்வர் பேரறிஞர் அண்ணாவின் சட்டமன்ற உரைகள்
- பூம்புகார் பதிப்பகம், 2003.

79. அமெரிக்கர்கள் பார்வையில் முதல்வர் அண்ணா, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். - எம்.எஸ்.உதயமூர்த்தி
- வித்வான் பதிப்பகம், 2003.

80. துக்ளக் இதழ் - கட்டுரைகள் - பி.சி.கணேசன்
- துக்ளக், 2003.

81. மாமனிதர் மதியழகன் - கே.எம்.செல்வராஜ்
- கணியூர் பதிப்பகம், 2004.

82. தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள் - 10 தொகுதிகள்
- தமிழரசி பதிப்பகம், 2005.

83. அண்ணா - சில நினைவுகள் - கவிஞர் கருணானந்தம்
- பூவழகி பதிப்பகம், 2005.

84. அண்ணாமலைப் பேருரை - அறிஞர் அண்ணா
- பூம்புகார் பதிப்பகம், 2005.

85. பேரறிஞர் அண்ணாவின் சொற்பொழிவுகள் - 1,2
- பூம்புகார் பதிப்பகம், 2005.

86. ஆர்.எம்.வி. ஒரு தொண்டர் - ராணிமைந்தன்
- ராஜராஜன் பதிப்பகம், சென்னை, 2005.

87. தந்தை பெரியார் 127-வது பிறந்த நாள் மலர்,
- விடுதலை, 2005.

88. பேரறிஞர் அண்ணாவின் பெருவாழ்வு - அ.மறைமலையான்
- வானதி பதிப்பகம், 2005.

89. Rodriques Valerian: The Communist Parties In India, In India's Political Parties: Reading in Indian Government and Politics
- Sage Publications, New Delhi, 2006.

90. எம்.ஜி.ஆர். நடிகர், முதல்வரானது எப்படி?
- வசந்தம் வெளியீட்டகம், மதுரை, 2006.

91. Vasanthi - Cutouts, Caste of Cine Stars - The World of Tamil Politics,
- Penguin, New Delhi, 2006.

92. அண்ணா ஆட்சியைப் பிடித்தது எப்படி? - அருணன்
- வசந்தம் வெளியீட்டகம், மதுரை, 2007.

93. காந்தி ராமசாமியும் பெரியார் ராமசாமியும் - ப.திருமாவேலன்
- தென்திசை வெளியீடு, சென்னை, 2007.

94. சரிந்த சாம்ராஜ்யம் - அண்ணா
- மணிவாசகர் பதிப்பகம், 2007.

95. அறிஞர் அண்ணாவின் கட்டுரைகள், இன்ஸ்டிடியூட் ஆஃப் ஏஷ்யன் ஸ்டடீஸ்
- சென்னை, 2007.

96. நமது கீதை
- மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2007.

97. உலகத் தலைவர் பெரியார் - கி.வீரமணி
- திராவிடர் கழகம், 2007.

98. தி.மு.க. பிறந்தது எப்படி?
- வசந்தம் வெளியீட்டகம், மதுரை, 2007.

99. Identity and Multilinguality: The Case of India by Agnihotri, Rama; In Language Policy, Culture and Identity in Asian Contexts
- Edited by Amity B.M.Tsui and James W.Tollefson, International Christian University, Tokyo, 2007.

100. அண்ணா ஆட்சியைப் பிடித்த வரலாறு - அருணன்
- வசந்தம் வெளியீட்டகம், மதுரை, 2008.

101. பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா சிறப்பு மலர்
- ம.இ.கா. வெளியீடு, 2008.

102. ஆட்சி மன்றங்களில் பேரறிஞர் அண்ணாவின் விவாத மேன்மை - 2 தொகுதிகள் - ஜே-ஸ்ரீசந்திரன்.
- தமிழ் நிலையம், சென்னை, 2008.

103. எம்.ஜி.ஆர். ஒரு சகாப்தம் - கே.பி.ராமகிருஷ்ணன்
- விகடன் பிரசுரம், 2008.

104. சிவாஜி வென்ற சினிமா ராஜ்யம் - ஆரூர்தாஸ்
- விகடன் பிரசுரம், 2009.

105. பெரியார் - அஜயன் பாலா
- விகடன் பிரசுரம், 2009.

106. பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். - கே.ரவீந்தர்
- விஜயா பதிப்பகம், 2009.

107. எல்லாம் அறிந்த எம்.ஜி.ஆர். - எஸ்.விஜயன்
- விகடன் பிரசுரம், 2009.

108. தினமணி - அண்ணா நூற்றாண்டு மலர் - 2009

109. மீரா கட்டுரைகள் (அண்ணாவின் திரை உரையாடல்கள்)

110. பேரறிஞர் அண்ணாவின் பேருரைகள் 3 - 4 தொகுதிகள்

111. South Indian Celebrities - K.M. Balasubramaniam
- http://archive.org/stream/southindianceleb035362mbp.

அட்டைப்படம் - நன்றி:

செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை,
தமிழ்நாடு அரசு.

Printed Books

இரா.கண்ணன்



சென்னையில் 1962-ல் பிறந்தவர். சென்னை - புதுக் கல்லூரியிலும், சென்னை சட்டக் கல்லூரியிலும், ஜார்ஜியா பல்கலைக்கழகத்திலும் கல்வி பயின்றவர். டஃப்ட்ஸ் பல்கலைக் கழகத்தின் ஃப்ளெச்சர் ஸ்கூல் ஆஃப் லா அண்ட் டிப்ளமசியில் டாக்டர் பட்டம் பெற்றவர்.

வழக்கறிஞராகப் பணிபுரிந்திருக்கிறார். சிறிது காலம் சென்னை சட்டக் கல்லூரியில் கல்வி கற்பித்திருக்கிறார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் குழுவில் ஒருவராக, சர்வதேச அமைப்புகள் பற்றி கற்பித்திருக்கிறார்.

சைப்ரஸ் நாட்டு குடியியல் விவகாரத் தலைவர் பணி உட்பட, ஐக்கிய நாடுகள் சபையில் பல துறைகளில் பணியாற்றியிருக்கிறார். தற்போது, ஐக்கிய நாடுகள் சபையின் சார்பில், அரசியல் துறை அதிகாரியாக ஆப்கானிஸ்தானில் பணியாற்றி வருகிறார்.

மனைவியின் பெயர்: உஷா.
இந்தத் தம்பதிக்கு இரண்டு குழந்தைகள்.



அண்ணா

இந்த வாழ்க்கை சரிதம், நவீன இந்தியாவின் கவர்ச்சிகரமான தலைவராக, திராவிட இயக்கத்தில் வலிமை மிக்கவராக, தி.மு.க-வின் நிறுவனராக பரிமளித்த அண்ணாவின் பன்முகங்களைப் படம்பிடித்துக் காட்டுகிறது. தவிர, எல்லோராலும் போற்றப்பட்ட பேச்சாளராகவும் எழுத்தாளராகவும், அவர் கொண்டிருந்த ஆற்றலைப் பதிவு செய்கிறது.

* * *

திராவிட இயக்கத்தைச் சூழ்ந்திருந்த சர்ச்சைகளையும் இந்த நூல் அலசுகிறது. பெரியாரிடம் அவர் கொண்டிருந்த சிக்கலான உறவை ஆய்வு செய்கிறது. 1949-ல் தி.மு.க.வை தோற்றுவித்தது, 1961-ல் ஈ.வெ.கி.சம்பத்துடன் பிளவுபட்டுப் பிரிந்தது... இப்படி அநேக சம்பவங்கள் இந்த நூலில் விளக்கப்பட்டுள்ளன.

* * *

அண்ணா குறித்து கண்ணதாசன், ஜெயகாந்தன், பி.ராமமூர்த்தி போன்றவர்களின் பார்வையும், ராஜாஜி, காமராஜ், கருணாநிதி, எம்.ஜி.ஆர். போன்ற பிரபல தலைவர்களின் நினைவலைகளும் இந்த நூலில் இடம் பெறுகின்றன.

விகடன் பிரசுரம்

ANNA

₹ 175

ISBN 978-81-8476-319-5

9 788184 763195